2896

T.N.L.A. Debates
Official Report

Vol XVI NO 3 & 4

23, 24, January 1986

V211,31 N86
N86.16.3&4;1
136443

Issued: 17-9-1986 வெளியீடு: 17-9-198

# தமிழ்நாடு

## சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, ஜனவரி 23, 1986–தொகுதி **XVI எண். 3**

**Thursday the January 23, 1986,—Volume XVI No.3**


சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.

**Legislative Assembly, Secretariat, Fort St. George,**

**Madras**-6000 009

[விலை ரூ 3.00 காசுகள்] [Price Rs. 3.00 Pai

136443
500 008.

## உள்ளடக்கம்

**23— 1—1986**

பக்கங்கள்.

1. வினாக்கள்—விடைகள் :
உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. .. 319-351

2. தகவல் கோரல் :

(அ) கருநாடக மாநிலத்திலிருந்து தமிழகத்திற்குரிய காவிரி நீரைப் பெறுவது குறித்து. 351-354

(ஆ) பஞ்சாயத்துத் தேர்தல்கள் குறித்து .. 358-360

3. அறிவிப்புகள் :

(அ) 1985-86-ம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகள், 1979-80-ம் ஆண்டிற்கான மிகச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அளித்தல் (ஆ. செ.) 354

(ஆ) கோவை, பாரதியார் பல்கலைக் கழக ஆட்சிக் குழு—உறுப்பினர்கள் தேர்தல். 354-355

(இ) ஏழாவது சட்டமன்றத்தில் கொடுக்கப் பெற்ற உரிமைப் பிரச்சினை குறித்து. 356-361 355-356

4. அறிக்கை அளித்தல் :
(அ) அரசு உறுதிமொழிக் குழு .. .. 368

உள்ளாட்சித் துறை அமைச்சரின் திருத்த அறிக்கை.

5. கவன ஈர்ப்புகள் :

(அ) சேலம் உருக்காலையைச் சுற்றியுள்ள புறம்போக்கு நிலங்களை நிலமற்றோருக்கு ஒப்படை செய்வது குறித்து. 361-363

(ஆ) கரும்புக்குரிய விலையை அரசு நிர்ணயிப்பது குறித்து. 363-368

6. அரசினர் சட்ட முன்வடிவுகள் :

(அ) சென்னை குதிரைப் பந்தய சங்கம் (நிறுவனத்தை கையகப்படுத்துதலும் உரிமை மாற்றம் செய்தலும்) சட்ட முன்வடிவு 1986. 368-371

| | பக்கங்கள் |
|---|---|
| (ஆ) வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனிவகை முறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு. 1986 | 371-374 |
| 7. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்-(தொடர்ச்சி). | 374-419 |
| திரு. கி. மனோகரன் | |
| திரு. என். எஸ். வி. சித்தன் | 374-394 |
| மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் | 394-414 |
| 8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 414-449 |
| .. | 449-450 |


# தமிழ்நாடு சட்ட மன்றப்பேரவை.

**1986, சனவரி 23, வியாழக்கிழமை.**

**தை 10, குரோதன— திருவள்ளுவர் ஆண்டு 2017**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்ற பேரவை மண்டபத்தில் காலை 9—00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

> ''இன்சொல் இனிதுஈன்றல் காண்பான் எவன்கொலோ
> வன்சொல் வழங்குவது.''

இனிய சொற்கள் இன்பம் பயத்தலைக் காண்கின்றவன், அவற்றுக்கு மாறான வன்சொற்களை வழங்குவது என்ன பயன்?

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### கல்பாக்கம் அணுமின் நிலயம்.

*98—(*வினா எண். 2411)* திரு. கு. சுப்பராயன் மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கல்பாக்கம் அணுமின்நிலையம் உற்பத்தி துவங்கும்போது எவ்வளவு மின்சாரம் கிடைக்கும்

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** 235 மெகாவாட் திறன் கொண்ட கல்பாக்கம் அணுமின் நிலைய முதல் பிரிவு 23—7—1983 அன்று முதல் உற்பத்தி செய்யத் தொடங்கியது. அணுமின் நிலையத்திற்குத்தேவையான மின்சாரம் போக எஞ்சிய மின்சாரம் தமிழகத்திற்கு கிடைக்கிறது.

**திரு. கு. சுப்பராயன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதைய கல்பாக்க அணுமின்நிலைய உற்பத்தியை மேலும் உயர்த்துவதற்கு கருத்துக்கள் அரசிடம் உண்டா? கல்பாக்கம் அணுமின்நிலையத்தில் உற்பத்தி செய்யப்படுகிற மின்சாரத்திற்கு ஒரு யூனிட்டுக்கு தமிழ்நாடு அரசு என்ன செலவழிக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே: கல்பாக்கம் மின்சாரத்திற்கு யூனிட்டுக்கு 42.01 காசு என்ற விதத்தில் நாம் பெறுகிறோம். அங்கே ஏதேனும் விரிவாக்கத் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா என்றால் அது பற்றி இந்திய அரசுதான் முடிவெடுக்க வேண்டும். அணுசக்தித் துறை முழுக்க முழுகக இந்திய அரசின் பொறுப்பில் உள்ளது.

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே கல்பாக்கம் அணுமின் நிலைய உற்பத்தியில் அடிக்கடி இயந்திரக் கோளாறுகளின் காரணமாகத் தடை ஏற்படுவது பற்றி பரவலாக தமிழ்நாட்டில் அதிருப்தி நிலவுகிறது. அத்தகைய இயந்திர கோளாறுகள்- ஏற்படாத வகையில் மாநில அரசு ஏதேனும் நட வடிக்கை எடுக்க முன் வந்துள்ளதா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர் களே, தவறான கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பரப்பி விட வேண்டாம். முதல் இயந்திரம் நன்றாகத்தான் வேலை செய்கிறது, இரண்டாவது இயந்திரம் இன்னும் வணிக ரீதியில் உற்பத்தி செய்கின்ற அளவுக்கு வரவில்லை, எந்த இயந்திரமும் ஆரம்ப காலத்தில் சில சிக்கல்களுக்கு, 'டீத்திங் ட்ரபிள்' என்று சொல்வார்களே அதற்குள்ளாகிறது, ஆகவே, எங்கேயும் தமிழ் நாட்டில் பரவலாக அதிருப்தி இருப்பதாக எனக்குத் தகவல் இல்லை.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய மின் திட்டத்திலிருந்து மாநிலங்களுக்கு மின்சாரத்தை பகிர்ந்து அளிக்கின்றபோது, முந்தைய ஆண்டி னுடைய மின் துய்ப்பு மத்திய அரசினுடைய திட்ட நிதி உத வியைப் பெறுகின்ற அந்த அடிப்படையிலே பகிர்ந்து அளிக்கப படுகிறது. இதன் காரணமாக, பற்றாக்குறை மாநிலமான தமிழகம் பாதிக்கப் படுகிறது, ஆகவே, மின் திட்டத்தில் முதலீடு செய்வதை அடிப்படையாகக் கொள்ளாமல், அதற்குரிய வகையில் கல்பாக்கத்திலேயே பெறுகின்ற முழு மின்சாரத்தை தமிழகத் திற்கு பெறுவதற்காக அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர் களே, இதில் இரண்டு பிரச்சினைகள், கல்பாக்கம் அணுமின் நிலையத்தைப் பொறுத்த வரையில், மத்திய அரசு மின் உற் பத்தித் திட்டங்களை மேற்கொள்ளுவதற்கு முன்பாக, அதாவது 1976 ஆம் ஆண்டிற்கு முன்பு, தமிழகத்தினுடைய மின் பற்றாக் குறையை நிறைவு செய்ய வேண்டும் என்கின்ற வகையிலே தான் இந்தத் திட்டம் 1960 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது. அதனால், அதன் முழு உற்பத்தியும் நமக்கு வேண்டும் என்று இந்திய அரசிடம் வேண்டுகோள் நாம் விடுத்தோம். அதை இந்திய அரசு பரிசீலனை செய்து, அதிலே முக்கால் பங்கு நமக்கு, மீதி கால் பங்கு அண்டை மாநிலங்களுக்குத் தந்து இருக்கிறார்கள். 1976ஆம் ஆண்டுக்குப் பிறகு நேஷனல் தெர்மல் பவர் கார்ப்பரேஷன், நேஷனல் ஹைட்ரோ-எலெக்டிரிக் கார்ப்பரேஷன் ஆகிய இரண்டு நிறுவனங்களை மத்திய அரசு அமைத்து, மின் உற்பத்தியைத் துவக்கி இருக்கிறார்கள். அதை அந்தந்தப் பிராந்தியங்களில் பகிர்ந்து தருகிற போது, அந்தந்த மாநிலங்களின் உண்மையான



பற்றாக்குறைக்கேற்ப வழங்க வேண்டும் என்று வற்புறுத்தி வரு கிறோம். ஆனால் அவர்கள் ஏற்கனவே பயன்படுத்திய மின்சா-ரத்தின் அளவு, மத்திய அரசினுடைய திட்ட உதவியை எந்த விகிதத்தில் வழங்குகிறார்களோ, அந்த விகிதத்தில் இவற்றைத் தருவதனால் குறிப்பாக தமிழகத்திற்கு அதனாலே பெரும் தீமை ஏற்பட்டு வருகிறது.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் உற் பத்தி ஆகும் மின்சாரத்தை அண்டை மாநிலங்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று ஏதாவது நிபந்தனை உள்ளதா? அப்படியானால், அதனுடைய விகிதாச்சாரம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர் களே, அப்படிக் கொடுப்பது நியாயம் அல்ல என்பதுதான் தமிழக அரசினுடைய உறுதியான கொள்கை. இருந்தாலும், மத்திய அரசின் முடிவுப்படி, 470 மெகாவாட்டில், முக்கால் பங்கு தமிழ் நாட்டுக்கு, ஆந்திரத்திற்கு 40 மெகாவாட், கர்நாடகத்திற்கு 30 மெகாவாட், கேரளத்திற்கு 25 மெகாவாட்' பாண்டிக்கு 5 மெகா வாட், இந்திய அரசினுடைய கையில், அன்-அலொகேடட்-ஆக இருப்பது 20 மெகாவாட்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்பாக்கத்திலிருந்து தயாரிக்கப்படுகின்ற மின்சாரம் பிற மாநிலங்களுக்கு விநியோகம் செய்யப்படுவது போல், ராமகுண்டத்தில் தயாரிக்கப்படுகின்ற மின்சாரம் நமக்கு வந்து கொண்டிருக்கிறது. இதுபோன்று ஒரு மாநிலத்திலிருந்து மற்ற மாநிலங்களுக்கு மாற்றிக் கொடுப்பது தேசிய அளவிலே கொள்கையாக இருந்தாலும்கூட, இவ்வாறு மாற்றிக் கொடுப் பதிலே ஏற்படுகின்ற '' டிரான்ஸ்மிஷனல் லாசை '' கருத்தில் கொண்டு, அந்தந்த மாநிலத்திலே உற்பத்தியாகின்ற மின்சாரத்தை அந்தந்த மாநிலத்திற்கு வழங்க மத்திய அரசுக்கு மாநில அரசு ஏதாவது ஆலோசனை கூறியிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இத்தகைய ஒரு யோசனையை திட்டக்குழுவின் கவனத்திற்கு நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம். ஒரு மாநிலத்தினுடைய மின் தேவை, மின் உற்பத்தி இவற்றைக் கணக்கில் எடுத்து பற்றாக்குறையைச் சமாளிப்பதற்கு ஏற்ற வகையில் திட்டமிட வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம். பிராந்திய அளவில், ரீஜினல் அளவில் இத்தகைய சிக்கல்கள் வருகின்றன.

திரு. செ. செம்மலை : தலைவர் அவர்களே, கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் இயந்திரங்களைக் குளிர வைக்க கடல் நீரைப் பயன்படுத்துகிறபோது ஜெல்லி என்ற ஒரு வகை மீன்களால் ஏற்படுகின்ற தொந்தரவின் காரணமாக இயந்திரங்கள் அடிக்கடி பழுதுபடக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அதைத் தடுப்பதற்காக என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இத்தகைய குறைபாடுகள் உண்டு. இதைத் தவிர்ப்பதற்கு வேண்டிய டிரீட்மெண்டை அந்த அணுமின் நிலையம் மேற்கொண்டு வருகிறது. நமக்கு என்று இருப்பது. குளிர வைப்பதோ அல்லது மற்றவைகளுக்கோ கடல் நீர்தான். வேறு வழி இல்லை. அதை வைத்துத்தான் திட்டம் உருவாக்க வேண்டும்.

திரு. க. நரசிம்மபல்லவன் : தலைவர் அவர்களே, அதிகம் செலவாகக் கூடிய அணு மின் நிலையங்களைத் தவிர்த்து, குறைந்த செலவில் கடல் அலைகளிலிருந்தோ அல்லது சூரிய ஒளியிலிருந்தோ அல்லது வேறு வகையிலோ மின்சாரத்தைத் தயாரித்து நிலைமையைச் சமாளிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, வேறு வகையில் பெறுகின்ற மின்சாரத்தின் விலைதான் அதிகம். அணு மின்சாரத்தின் விலை அவ்வளவு அதிகம் இல்லை. அதனால் தான் அணு மின் உற்பத்தியை நாம் வரவேற்கிறோம்.

**மின் வாரியம் திரட்டியுள்ள கடன்கள்.**

99—( *வினா எண் 2820) திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின் வாரியம் 1983–84 ஆம் ஆண்டில் பொது மக்களிடமிருந்து கடன் எழுப்பி உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) 1983–84 ஆம் வருடம் மூன்று தவணைகளில் மொத்தம் ரூ. 47,57,50,000 (நாற்பத்தி ஏழு கோடியே ஐம்பத்தி ஏழு லட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபாய்) பொதுமக்களிடம் பெறப்பட்டுள்ளது.



திரு. ப. ந. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள், ரூ. 47,57,50,000 பொது மக்களிடமிருந்து கடனாக மின் வாரியத்திற்குப் பெறப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அதற்கு அரசு, மின் வாரியம் கொடுக்கின்ற வட்டி விகிதம் என்ன ? எத்தனை ஆண்டுகளில் அந்தக் கடனை திருப்பிக் கொடுக்க வேண்டும் ? இதுவரை பொது மக்களிடமிருந்து மொத்தமாக மின் வாரியம் எவ்வளவு கடன் வாங்கியிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, வட்டி விகிதம் 9 சதவீதத்திலிருந்து 11 சதவீதம் வரை. எத்தனை ஆண்டுகள் என்பது ஒவ்வொரு திட்டத்தைப் பொறுத்திருக்கிறது. பொதுமக்களிடமிருந்து வாங்குகிறோம் என்று இதிலே போட்டிருந்தாலும், பாங்குகளிடமிருந்துதான் இந்தப் பணம் பெறப்படுகிறது. இது பொது மக்களிடம் போய் யாரும் வாங்குவது என்பது பொருள் அல்ல. மின் வாரியம் இதுவரையில் பல்வேறு நிறுவனங்களின் மூலம், அரசு எல்.ஐ.சி., ஆர்.ஐ.சி. போன்ற பல்வேறு நிறுவனங்களின் மூலம் பெற்றிருக்கின்ற கடன் ரூ. 2,046 கோடி.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மின் வாரியத்தில் ஒவ்வொரு ஆண்டும் பல கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுவதாக ஆண்டு அறிக்கை சொல்லிக் கொண்டிருக்கிறது. ஆகவே தொடர்ந்து ஏற்படும் அந்த நட்டத்தை ஈடுகட்டும் வகையில், அணுகு முறைகளாக, வேறு என்னென்ன நடவடிக்கைகளை மின் வாரியம் எடுத்திருக்கிறது என்பதை அறிவிக்க முடியுமா ?

(முற்பகல் 9.10)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்வாரியத்திலே ஏற்பட்டு வருகிற இழப்பு என்பது நாம் மேற்கொண்டு இருக்கிற கொள்கை முடிவுகளினால் வருகிற இழப்பாகும். குறிப்பாக சிறு விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்குதல், குடிசைகளுக்கு ஒரு விளக்குத் திட்டம், விவசாயிகளுக்கு குறைந்த கட்டண விகிதத்தில் மின்சாரம் வழங்குதல் ஆகிய அரசின் கொள்கை முடிவுகளுக்கு ஏற்ப வழங்கப்படுகிறபோது இழப்பீடு என்பது தவிர்க்க முடியாத ஒன்று. கிராமப்புறப் பொருளாதார மேம்பாட்டிற்கு இது தேவை என்ற அடிப்படையில் அத்தகைய இழப்பிற்கு ஏதேனும் ஒரு வகையில் இந்திய அரசு பங்குபெறவேண்டுமென்று நாம் வற்புறுத்தி வருகிறோம். மின்வாரியத்திற்கு ஏற்படுகிற இழப்பு என்பது விவசாயிகளுக்குப் போய்ச் சேருகிற பலன் என்ற வகையில் பயன்படுகிறது. கிராமப் பொருளாதார மேம்பாட்டுக்காக மாநில அரசுகள் மட்டுமே அந்தச் சுமையை மேற்கொள்ள முடியாது, ஆகவே மத்திய அரசும் அதிலே பங்குகொள்ள வேண்டும். மின் வாரியத்திலே கடந்த ஆண்டிலே 145 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டது, இந்த ஆண்டு 160 கோடி ரூபாய்க்கு இழப்பு இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

[1986 சனவரி 23

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, பொதுமக்களிடமிருந்து இப்படி மின்வாரியம் கடன் வாங்குவதைத் தவிர்ப்பதற்கு மின்வாரியம் அரசிடமிருந்தே ஒரு கணிசமான தொகையைப் பெற்று இழப்பைச் சரிக்கட்டும் யோசனை ஏதாவது வைத்திருக்கிறார்களா ? இதைத்தவிர மால்கோ போன்ற நிறுவனங்கள் கோடிக்கணக்கான ரூபாய்கள் மின்வாரியத்திற்குக் கொடுக்க வேண்டிய பாக்கிகளை வைத்திருக் கின்றன என்று சொல்கிறார்கள். அவைகளை வசூலித்து அந்தக் கடனை அடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, நவீனப் பொருளாதாரத்தில் கடன் வாங்குவதில் தவறில்லை. கடன் வாங்குவதும் அதைத் திரும்பத் தருவதும் இன்றைக்கு கடைப்பிடிக்கப்பட்டு வருகிற ஒரு முறை. அரசாங்கத்திடமிருந்து கடன் வாங்கவேண்டுமென்றால் அரசாங் கமே அதற்கு எங்கே போகும் என்று சிந்திக்க வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம். மின் கட்டணப் பாக்கிகளைப் பொறுத்த வரையிலே தனிக் கேள்வி போட்டால் விவரம் தரலாம்.

கிராமப்புற வீடுகளுக்கு மின் விளக்குகள்.

100—(* வினா எண். 2291) திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குடிசைகளுக்கு மின் விளக்கு அளிக்கும் திட்டத்தை அரசின் மானியத் தொகையிலும், கிராமப்புற வீட்டு வசதி கழகத்தா லும் கட்டித்தரப்படக்கூடிய வீடுகளுக்கு நீட்டித்தருவதற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: இல்லை.

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடைய புரட்சித் திட்டமானது குடிசைகளுக்கு மின் விளக்குத் திட்டம். தமிழக சிறு விவசாயிகளுக்கு எல்லாம் மின் கட்டணத்தில் அதிகமான சலுகைகளை வழங்கிக் கொண்டு வருகிற நம்முடைய புரட்சித் தலைவர் அரசு, ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு வைத்துக்கொண்டிருக்கிற சாதாரண விவசாயத் தொழிலாளர்களுக்கும் அந்தச் சலுகையைக் கொடுத்து மானி யம் கொடுத்து மின் கட்டணத்தை வசூலிக்காமல் இருப்பதற்கு மேற்கொண்ட நடவடிக்கை என்ன? அதற்காக ஆகக் கூடிய தொகையும் மிகவும் அதிகமாக இருக்காது என்ற காரணத்தால் அதை யோசித்து அவர்களுக்கு அரசு சலுகை அளிக்குமா?



1986 சனவரி 23]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, குடிசைக்கு ஒரு விளக்குத் திட்டத் தின் கீழ் நாம் இப்போதும் இலவசமாக மின்சாரம் வழங்கிக் கொண்டிருக்கிறோம். ஆரம்பத்திலே ஒரு 10 ரூபாய் அவர்கள் கட்ட வேண்டுமென்ற முறையிலே—மின்சார வாரியம் 200 ரூபாய் செலவழிக்கிறது என்றால் அதிலே அவர்களும் பங்கு பெற வேண்டும் என்ற முறையிலே 10 ரூபாய் அவர்கள் கட்ட வேண்டும் என்ற முறையிலே— திட்டம் உள்ளது. எனவே, இலவச மின்சாரம் அதற்கு வழங்குவது என்பது இப்போதே நடைமுறையில் உள்ளது.

திரு க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி இலவச மின்சாரம் குடிசை களுக்கு வழங்குகிறபோது, என்.ஆர்.இ.பி. தேசிய கிராமப் புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்படுகிற வீடு களுக்கும் ஆர். எல்.இ.ஜி.பி. கிராமப்புற நிலமற்றோர் வேலை வாய்ப்புத் திட்டம் என்ற திட்டத்தின் கீழ் கட்டப்படுகிற வீடுகளுக்கும் அந்தச் சலுகையை விஸ்தரிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, திட்டத்தைப் பொறுத்தது அல்ல அது. கல் வீடுகள் என்று போய்விடுவோமேயானால் அது அரசாங்கத்திலிருந்து உதவி பெற்றுக் கட்டிக்கொண்டாலும் சரி, சொந்தமாகக் கட்டிக்கொண்டாலும் சரி, எல்லோருக்கும் வழங்க வேண்டிய நிலை வந்துவிடும். உண்மையிலே பரம ஏழைகளாக இருக்கிறவர்களுக்கு உதவிட வேண்டுமென்ற முறையிலேதான் மண்சுவர் வைத்து கட்டப்பட்ட ஓலைக் குடி சைகளிலே இருக்கிறவர்களுக்குக் கொடுக்கக்கூடிய திட்டம்தான் செயல்படுத்தப்படுகிறது. கல் வீடு வைத்து இருக்கிறார்கள் என்றால் அதுவே அவர்களுக்கு கிடைத்திருக்கிற தனியான சிறப்பு வசதியாகும். ஆகவே குடிசைகளுக்குத்தான் நாம் இலவசமாக மின்சாரத்தை வழங்கி வருகிறோம்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிற போது கல்வீடுகளுக்குக்கொடுக்க இயலாது என்று சொன்னார்கள். நான் கேட்டுக் கொள்வது அரசாங்கத்தின் மூலமாகக் கட்டிக் கொடுக்கப்படுகிற வீடுகளுக்கு—ஏழைய எளிய விவ சாயத் தொழிலாளர்களுக்கு அவை கட்டிக்கொடுக்கப்படு கின்றன, அந்த அடிப்படையிலே தற்போது இல்லாவிட்டாலும் எதிர்காலத்திலாவது தமிழக அரசு—வருகிற ஆண்டிலே 10 லட்சம் வீடுகள் கட்டிக்கொடுப்பதாக அறிவிக்கப்பட்டிருக் கிறது. இப்படிப்பட்ட காலங்களில் இந்த ஒற்றை விளக்கு முறையை விசேஷமான திட்டத்தின் மூலமாக எதிர்காலத் லேயாவது அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மண் குடிசையிலே உள்ள ஏழைகளைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு எந்த நன்மையும் கிடைப்பதில்லை. கல் வீடு என் கிறபொழுது குறைந்தபட்சம் அந்த வீடாவது அந்த ஏழை களுக்குக் கிடைக்கிறது. இந்த இரண்டு பேர்களையும் பார்க் கின்றபொழுது, மண் குடிசைகளிலே இருப்பவர்களுக்கு மின் சாரத்தைத் தருகிறோம். மண் குடிசைகளிலே உள்ளவர்களுக் கெல்லாம் கொடுத்து முடிந்த பிறகு—இப்பொழுது ஏழு இலட் சம் குடிசைகளுக்குக் கொடுத்து இருக்கிறோம்—இதெல்லாம் முடிந்த பிறகு, தேவைப்பட்டால் உரிய நேரத்தில் அரசு பரி சீலிக்கும்.

தெரு விளக்குகளுக்கு வோல்டேஜ் ஸ்டபிலைஸர்.

101—(*வினா எண். 2947) திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள தெரு விளக்குகள் பியூஸ் போகாமலிருக்க '' Volt·ge St·biliser'' பொருத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மொத்தம் உள்ள 26 மின்சார திட்டங்களில் 11 மின்சாரத் திட்டங்களில் இச் சாதனங்கள் பரிசோதனை முறையில் பொருத்தப்பட்டுள்ளன.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலை வரவர்களே, இப்பொழுது தெரு விளக்குகளில் பீஸ் போவதற்குக் காரணம், மின்சாரம் ஏற்றத்தாழ்வாக வருவதால் என்றும், மேலும் பொருத்தப்படும் பல்புகள் அவ்வளவு தரமானதாக இல்லையென்றும் குற்றச்சாட்டு இருக்கிறது. துறையைப் பொறுத்தவரையில் குறைந்த விலை சொல்கின்ற கம்பெனி யிலே, லோ டெண்டரை ஏற்றுக்கொள்கின்ற நடைமுறை இருந்து வருகிறது. இந்த முறையை மாற்றி, அவற்றின் தரத் தையும் கண்காணித்து, தரமான பல்புகளுக்குக் கூடுதல் விலை என்றாலும் கூட அந்த பல்புகளை வாங்குவதற்கு வாரியம் முடிவெடுக்குமா? கேராளவில் ''தெர்மிஸ்டர்'' என்ற கருவியை ஒவ்வொரு தெரு விளக்குக்கும் பொருத்தியிருக்கிறார்கள். அதற்கு ஒன்றரை ரூபாய்தான் செலவாகிறது. இப்படி ஒன்றரை ரூபாய் செலவில் பொருத்தப்படும் இந்தக் கருவியினால், பரீட் சார்த்தமாகப் பார்த்ததில், 95 சதவீதம் பீஸ் போவது தவிர்க் கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதைப்பற்றியும் நம் முடைய மாநில அதிகாரிகள் பரிசீலனை செய்வதற்கு நட வடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேர வைத் தலைவரவர்களே, இந்த நல்ல யோசனை மின்வாரியத்தின் பரிசீலனைக்கு அனுப்பப்படும்.



திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னை மாநகராட்சியில் உள்ள அனைத் துப் பகுதிகளிலேயும் விளக்குகள் முறையாக எரிவதில்லை. அப்படி எரியாமலேயே மாநகராட்சி மாதாமாதம் உரிய பில் தொகையைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். இந்த முரண் பாடு ஏன் என்பதை எங்களாலே புரிந்து கொள்ள இயல வில்லை. ஆகவே, அதைக் கண்காணித்து நடவடிக்கை எடுப் பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இதிலே இருக்கின்ற ஒரு முரண்பாடு, இந்தக் கேள்வியை என்னிடம் கேட்பதுதான்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்கின்ற நேரத்திலே, 11 மின்சாரத் திட்டங்களில் இந்த வோல்டேஜ் ஸ்டெபிலைசர் பொருத்துகின்ற முறை பின்பற்றப் படுவதாகச் சொன்னார்கள். அப்படி பரீட்சார்த்தமாக நாம் ஏற்பாடு செய்திருக்கின்ற இந்தத் திட்டத்தின் மூலமாக அரசுக்குக் கிடைத்திருக்கின்ற பயன் என்ன? இந்த வோல்டேஜ் ஸ்டெபிலைசரைப் பொருத்துவது பயன் அளிப்பதாக இருந்தால் எஞ்சியுள்ள ஏனைய திட்டங்களுக்கும் இதை விரிவு படுத்துவதற்கு அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ஒரு கருவிக்கு 300 ரூபாய் செலவாகிறது. இது ஓரளவுக்குத் திருப்திகரமான வகையில் இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கி றார்கள். ஓவர் வால்டேஜ் வருவதை இது தடுக்கிறது. இதைப் பற்றிப் போகப் போகப் பார்த்துத்தான் இதனுடைய பயனைப் பற்றியும், இதனை மற்ற இடங்களுக்கும் விஸ்தரிப்பதற்கு நாம் செய்யும் செலவு பயனுள்ள செலவாக இருக்குமா என்பதை பற்றியும் முடிவெடுக்க வேண்டும்.

திரு. மா. மணிமாறன் : தலைவரவர்களே, தெரு விளக்கு களைப் பொறுத்தவரையில் விளக்கு, சோக், ஸ்டார்ட்டர் போன்றவைகள் சாதாரணமாகச் செய்யப்படக் கூடிய பொருள் கள்தான். இவைகளைக் கொட்டேஷன் மூலம் வாங்குவதனால் தான் தரம் குறைந்து காணப்படுகிறது. விளக்குகளை மாற்றிப் போட்டால் கூட பெரும்பாலானவை மூன்று நாட்கள் எரிகின்றன, பிறகு பீசாகி விடுகின்றன. எனவே, இப்படிப்பட்ட சாதாரண உதிரிப் பாகங்களான, பல்புகள், சோக்குகள், ஸ்டார்ட டர்கள் போன்ற பொருட்களை அரசாங்கமே தயாரிப்பதற்கு மின் துறை ஒரு தொழிற்சாலையை உருவாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, தரமான பொருட்களை வாங்குவதற்கு முயற்சியை மேற்கொள்ள வேண்டுமே தவிர, நாமே அவற்றை எல்லாம் உற்பத்தி செய்ய வேண்டுமென்று போனால், மின் வாரியம் தன்னுடைய வேலைகளை விட்டு விட்டு மற்ற வேலைகளுக்குப் போவதைப் போல ஆகிவிடும். ஆகவே, அப்படிப்பட்ட உத்தேசம் எதுவும் அரசினிடத்தில் இல்லை.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற வேலைகளில் கவனம் செலுத்தினால் மின் துறை தன்னுடைய வேலையில் கவனம் செலுத்த முடியாது என்ற கருத்தை மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். இப்பொழுது தெரு விளக்குகளைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 90 சதவீதம் மாற்றப்பட்டிருக்கிறதே தவிர அவைகள் சரிவர எரிவதில்லை. தெரு விளக்குகள் முழுவதையும் எரிய வைக்கின்ற பொறுப்பை ஏற்கின்ற வகையில் மின் துறை உரிய முயற்சிகளை எடுத்துக்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அண்மையிலே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாடு கூட்டப்பட்டு, இத்தகைய முடிவு எடுக்கப்பட்டு, தெரு விளக்குகள் குறைந்தது 85 சதவீதத்திலிருந்து 90 சதவீதம் வரையில் எல்லா இடங்களிலும் எரிய மின் வாரியம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

கட்டளைக் கோம்பை காடுகள்.

102—(*வினா எண் 2016) திரு. இரா. முத்தையா : மாண்புமிகு சுற்றுலா மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், சாப்டூர் மலைப் பகுதியைச் சேர்ந்த கட்டளைக் கோம்பை காடுகள் அழிக்கப்பட்டுவிட்டதால் அங்கு மீண்டும் மரங்கள் உற்பத்தி செய்ய என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

(ஆ) அங்கு குமரிக் காடுகளாக விவசாயிகளுக்கு குறிப்பிட்ட காலத்திற்கு ஒப்படைக்கும் திட்டம் உண்டா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மறு உற்பத்திக் காடுகள் வளர்க்கப்படுகின்றன.

(ஆ) இல்லை.





(முற்பகல் 9-20).

திரு. இரா. முத்தையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதி, ஏற்கனவே நல்ல வனப் பகுதியாக இருந்து, மரங்கள் கூப்புகள் என்ற பெயரில் வெட்டப்பட்டதற்குப் பின்னால், அந்தப் பகுதி பிறருடைய ஆக்கிரமிப்புக்கு ஆளாகிற அளவுக்கு இருக்கிறது. எனவே, அந்தப் பகுதியை வளமான வனப் பகுதியாக ஆக்குகிற பரிசீலனையை மீண்டும் அரசு செய்து, அங்கே நல்ல வனப் பகுதி உண்டாக்குகிற ஏற்பாட்டை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இது போன்று மலை மேல் உள்ள காடுகளில் கூப்புகள் என்ற பெயரால் முன்னாலே, மரங்கள் வெட்டப்பட்டு விறகாகவும், வேறு மரங்களாகவும் பயன்பட்ட காரணங்களாலும் பல பகுதிகள் ஜமீந்தார் ஆட்சிக்குள்ளே இருந்தபொழுது, பாதுகாப்பற்ற முறையிலே வெட்டப்படுவதற்கு அனுமதிக்கப்பட்ட காரணத்தினாலேயும் அந்தப் பகுதியிலே மரங்கள் அழிக்கப்பட்டு இருக்கின்றன. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு மலை மீது இருக்கிற காடுகளில் விறகுக்காகவோ, மரங்களுக்காகவோ, கூப்புகளை வெட்டுவது கூடாது என்று கொஞ்சங் கொஞ்சமாகக் குறைக்கப்பட்டு, இப்பொழுது முழுமையாக தடைப்படுத்தப்பட்டு இருக்கிறது. மறு உற்பத்திக் காடுகள் திட்டத்தின் கீழ், சாத்தூர் பகுதியில் 24 ஹெக்டேரிலும், உசிலம்பட்டி பகுதியில் சுமார் 90 ஹெக்டேரிலும் மரங்கள் நடப்பட்டு இருக்கின்றன. தொடர்ந்து மறு உற்பத்திக் காடுகள் திட்டத்தின் கீழ் மரங்கள் நடப்பட்டு வருகின்றன, பாதுகாப்பு முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன.

திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தூர் வட்டத்திலே காடுகள் அழிக்கப்பட்டதாக இந்தக் கேள்வியிலே குறிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது அது சாத்தூர் ஜமீனாக இருக்கும்போது அழிக்கப்பட்டதாகவும் சரியான உத்திரவு இல்லாமல் செய்யப்பட்டதாகவும் சொல்கிறார்கள். அப்படி என்றால் சமூக விரோதிகள் புகுந்து அந்தக் காடுகள் அழிக்கப்பட்டதாக அறிகிறேன். அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ? அது நான் பிறந்த பகுதியாக இருக்கிற காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்களை விளக்கம் சொல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இது நடந்து பல ஆண்டுகளாகி விட்டன. ஆகவே, அப்பொழுது என்ன நடவடிக்கைகள் எடுத்தார்கள் என்பதற்கு சாட்சியாகத்தான் அழிக்கப்பட்ட காடுகள் இருக்கின்றன. ஆகவே அதைப் பற்றி ஆராய்வதிலே பலன் இல்லை.

## வனத்துறை தற்காலிக ஊழியர்கள்.

103.—(*வினா எண் 3421)—திரு. பாப்பா சுப்பிரமணியன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தஞ்சை மாவட்டத்தில் புதிய காடுகள் வளர்ப்புத் திட்டத் தில் வனத் துறையில் தினக் கூலிகளாக சுமார் 7 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரியும் தற்காலிக ஊழியர்களை நிரந்தரப் பணியாளர் களாக நியமிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை. காரணம் தினக் கூலிகள் தற்காலிக ஊழி யர்களாகமாட்டார்கள்.

திரு பாப்பா சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர் களே, தற்போது தினக் கூலிகளாகப் பணியாற்றி வருகின்ற அந்த ஊழியர்களுக்கு ரூ. 8 அளவிலே சம்பளம் தரப்படுகிறது. ஆனால், அரசாங்கம் தஞ்சை மாவட்டத்தில், அதுவும் குறிப்பாக, கிழக்குத் தஞ்சையில் விவசாய தினக் கூலிகளுக்கு சுமார் ரூ. 12 அளவில் சம்பளம் தர நிர்ணயித்திருக்கிறது. எனவே, அவர்கள் தற் காலிக தினக் கூலிகளாக இருந்தாலும், சம்பளத்தை ரூ. 12 என உயர்த்தித் தரும் நோக்கம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலை வர் அவர்களே, என்ன கூலி தரப்படுகிறது என்கிற விவரம் என்னிடத்திலே இல்லை. விவசாயக் கூலிகளுக்கு நிர்ணயிக் கப்பட்டிருக்கிற அந்தக் கூலி என்பது, மற்ற வேலைகளுக்கும் பொருந்துமா என்று தெரியவில்லை. ஆகவே, மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் தெரிவிக்கிற கருத்தின்மீது விவரங்கள் பெறப் பட்டு, சட்டப்படி, தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும்.

திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே காடு வளர்ப்புத் திட்டத்திலே ஈடு பட்டிருக்கிற தொழிலாளர்கள் செய்கிற பணி, கிட்டத்தட்ட விவசாயப் பணியைப் போன்ற பணியாகும். ஆகவே, காடு வளர்ப்புத் திட்டத்திலே பணியாற்றுகின்ற தொழிலையும் விவ சாயப் பணியாகக் கருதி அந்தச் சம்பளத்தை உயர்த்திக் கொடுக் கும் நோக்கம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, இதைத்தான், நான் முன்னே பதிலில் சொல்லியிருக்கிறேன் ; இது பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று என்று. விவசாயக் கூலிகளும் மரங்கள் வளர்க்கிறபோது சாதா பண வேலைகளில் ஈடுபடுத்தப்படுகிற கூலிகளும் ஒன்றா என்பது பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று.



## கோட்டைத்தெரு அகதீஸ்வரர் கோவிலில் திருமண மண்டபம்

104.—(*வினா எண் 3493) திரு. துரை கோவிந்தராசன்: மாண்புமிகு சுற்றுலா மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒரத்தநாடு ஒன்றியம், கோட்டைத் தெரு அகஸ்தீஸ் வரர் கோயிலில் திருமண மண்டபம் கட்ட பல ஆண்டுகளுக்கு முன்பு அடிக்கல் நாட்டப்பெற்று இன்றுவரை கட்டப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம், எனில், எப்பொழுது கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ) இத் திருக்கோயிலில் திருப்பணிகள் செய்வதற்கு 17–1–1971-ல் கல்நாட்டு விழா நடத்தப்பட்டுள்ளது. திருப்பணிக்கு கல்நாட்டு விழா நடத்தப்பட்டதற்கு மேல், திருப்பணி வேலைகள் செய்ய எந்த விதமான நடவடிக்கையும் திருக்கோயில் நிர்வாகத் தினரால் மேற் கொள்ளப்படவில்லை. திருப்பணி வேலைகள் ஏதும் செய்யப்படவும் இல்லை. இக் கோயிலில் திருமண மண்டபம் கட்டுதல் குறித்து விவரங்கள் ஏதும் இல்லை. அதற் காக நிதி வசதியும் இக் கோயிலில் இல்லை.

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோட்டைத் தெரு அகஸ்தீஸ்வரர் கோவிலில் திருமண மண்டபம் கட்ட பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால் அமைசசர் அவர்களால் கல் நடப்பட்டு உள்ளது. பதி மூன்று ஊராட்சி மன்றங்கள் உள்ளடக்கிய மையப்பகுதியில் இது இருப்பதாலும், ஆண்டு ஒன்றுக்கு 500-க்கு மேற்பட்ட திரு மணங்கள் நடைபெறுகிற ஒரு மிகப் பெரிய ஆலயமாக இது இருப்பதாலும், ஆண்டுதோறும் திருமணமானவர்களும் திருமண மாகாதவர்களும் அந்த ஆலயத்தில் விழா நடைபெறுகிற காலங் களில் வந்து எல்லோரும் புதுமையாக ஒருவரையொருவர் சந்தித்துக் கொள்ளவும், திருமணமானவர்கள் உறவு முறையில் பாசத்தை தெரிவித்துக் கொள்ளவும், மணமாகாத ஆண்களும் பெண்களும் ஒருவரை ஒருவர் காணவும் முடிகிறது, இவ்வாலய திருவிழாக் காலங்களில். நூற்றுக்கணக்கான திருமணங்கள் நடைபெறுகிற வளாகத்தில் இருக்கிற கட்டடங்கள் பழுதடைந் திருக்கிற காரணத்தால் அதை மீண்டும் நல்லமுறையில் அந்தப் பகுதி மக்களின் குறையைப் போகத்தக்க அளவிற்கு அந்தத் திருமண மண்டபம் கட்டி முடிக்கப்படுமா என அறிய விரும்பு கிறேன்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆலயத்தினுடைய ஆண்டு வருமானம் ரூ. 1,016 என்று விவரம் தரப்பட்டிருக்கிறது. ஆகவே ஆயிரம் ரூபாய் ஆண்டு வருமானம் உள்ள ஒரு ஆலயத்தின் சார்பில் திருமண மண்டபம் கட்டுவது இயலாது என்பது

தெரியும். ஆனால் ஒரு பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு
கோவூர் நாட்டார்கள் முயற்சி எடுத்து அன்றையதினம் இருந்த
அறநிலையத் துறை அமைச்சர் இதற்கு அடிக்கல் நாட்டியிருக்
கிறார்கள். ஆனால் அடிக்கல் நாட்டினார்களே தவிர,
அதற்குப் பிறகு எந்தவிதமான முயற்சியும் மேற்கொள்ளப்
பட்டதாகத் தெரியவில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவர்
அவர்கள் இன்று ஒரு திட்டத்தை அறிவித்து அது நடைமுறைப்
படுத்தப்பட்டு வருகிறது. திருமண மண்டபங்கள் எங்கெல்
லாம் முடியுமோ அங்கெல்லாம் —வசதியற்ற திருக்கோயில்
களாக இருந்தாலும் வசதியுள்ள திருக்கோவில்களிலிருந்து
நிதி மாற்றம் செய்து அந்தத் திருமண மண்டபங்களை சமுதா
யத் தேவையாகக் கருதி கட்டி முடித்துத் தரலாம் என்று ஆணை
பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
முயற்சி எடுத்து ஒரு புது திருப்பணிக் குழு அமைத்து அரசாங்
கத்திற்கு தெரிவிப்பார்களேயானால் இந்தத் திருமண மண்ட
பத்தை வேறு கோயில்களினுடைய நிதியிலிருந்து எடுத்து
விரைவிலே கட்டி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன்.

வேதநாத சுவாமிகள் கோயில் தங்கும் விடுதி.

**105**—(* வினா எண் 3857) திரு. துரை அன்பரசன்:
மாண்புமிகு சுற்றுலா மற்றும் அறநிலையத்துறை அமைச்சர்
கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லிக்குப்பம் தொகுதியில் அருள்மிகு தேவநாத சுவாமிகள்
ஆலயம் உள்ள திருவந்திபுரத்தில் தங்கும் விடுதிகள் கட்ட அரசு
முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: திருவந்திபுரம் அருள்
மிகு தேவநாத சுவாமி திருக்கோயிலுக்கு தங்கும் விடுதி ஏற்
கெனவே கட்டப்பட்டுள்ளது. தற்போது மலைமீது தங்கும் விடுதி
கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

காட்பாடி வெடிமருந்து தொழிற்சாலை.

**106**—(* வினா எண் 1775) திரு. கோ. இரகுபதி:
மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்
களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்பாடியில் வெடி மருந்து தொழிற்சாலை எப்போது
செயல்படும்?

(ஆ) அந்தத் தொகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பில்
முன்னுரிமை கொடுக்கும் திட்டமுள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) வெடி மருந்து
தொழிற்சாலையில் சோதனை உற்பத்தி அக்டோபர் 1985-ல்
தொடங்கி டிசம்பர் 1985-ல் முடிந்தது. வணிக அளவிலான
உற்பத்தி பிப்ரவரி 1986-ல் தொடங்கும் என எதிர்பார்க்கப்
படுகிறது.

(ஆ) ஆம்.



திரு. கோ. இரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, காட்பாடி வெடி மருந்துத் தொழிற்சாலையில்
சோதனை உற்பத்தி 1985-ல் முடிந்ததாக மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் சொன்னார்கள். சமீபத்தில் நமது இதய தெய்வம்
புரட்சித் தலைவர் அவர்களால் அது திறக்கப்படும் என்ற செய்தி
வெளியே தெரிய வருகிறது. அவ்வாறு நமது இதய தெய்வம்
புரட்சித் தலைவர் அவர்கள் அதைத் திறக்க ஏதாவது ஏற்பாடு
உண்டா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள்
திறக்க இருப்பது உண்மை. ஆனால் இன்னும் தேதி நிச்சயமாக
வில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. இரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, அந்த காட்பாடியில் உள்ள வெடி மருந்துத் தொழிற்
சாலையில் அந்தப் பகுதி மக்களுக்கு, அங்குள்ள படித்த நண்பர்
களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று அந்தப் பகுதி
மக்கள் கோரிக்கை அனுப்பியிருக்கிறார்கள். அதற்கு வேலை
வாய்ப்புத் துறையும் பரிந்துரை செய்திருப்பதாகக் கேள்விப்
படுகிறேன். அதில் 'கன்ஸாலிடேட்டட் பே' என்ற முறையில்
குறைந்தபட்ச சம்பளமாகயிருப்பதால் அந்தப் பகுதியில் உள்ள
மக்களுக்கு அந்த வாய்ப்பை நல்கினால் அங்கு குடியிருக்கிற படித்த
நண்பர்களுக்கு ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைக்கும். ஆகவே எனது
கோரிக்கையை ஏற்று அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்
களா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-30).

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, அந்தத் தொழிற்சாலையில் அந்தப் பகுதி
யில் உள்ள மக்களுக்கு முன்னுரிமை தருகின்ற வகையில், வட
ஆற்காடு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து ஆட்கள்
பட்டியல் கேட்டு, அந்த வட்டாரத்திலுள்ள பெரும்பாலான மக்
களுக்கு வேலை தரப்பட்டிருக்கிறது; தந்து வருகிறது. அதிலே
அதிக வேலை வாய்ப்பு கொடுப்பதற்கு இல்லை. ஏனென்று
கேட்டால், அது மெக்கனைஸ்டாக இருப்பதால்தான். இருக்
கிற வேலை வாய்ப்புகளில், அந்த வட்டாரத்திலுள்ள மக்
களுக்கு முன்னுரிமை தரப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, அந்த வெடி மருந்து தொழிற்சாலையினுடைய
மொத்த முதலீடு எவ்வளவு? டெக்னிகல் போஸ்டுகளுக்கு உரிய
முறையில் வேலைவாய்ப்பு தந்தாலும், தினக் கூலி போன்ற
வேலைகளுக்கு, அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்கு அந்தத்
தொழிற்சாலையில் கட்டாயம் வேலை வாய்ப்புத் தரவேண்டும்
என்று அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மொத்த திட்ட மதிப்பீடு ரூ. 23.50
கோடி. அதிலே இதுவரையில் அங்குள்ள மக்களுக்கு அன்றாட

கூலி வேலைகளுக்கெல்லாம் வாய்ப்புத்தந்து, அவர்கள்தான் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்பாடி வெடி மருந்து தொழிற்சாலை யில் என்ன மாதிரியான வெடிமருந்து தயாரிக்கப்படுகின்றது? அங்கே போலீஸ் மற்றும் இராணுவம் போன்றவற்றிற்கு உப யோகப்படும் வெடிமருந்து தயாரிக்கப்படுகின்றதா? அல்லது பொதுமக்களுக்கு அன்றாடம் உபயோகப்படக்கூடிய கிணறு கள் தோண்டுவதற்கு உபயோகப்படும் டைனமைட் போன்ற வெடி மருந்துகள் தயாரிக்கப்படுகின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராணுவத்திற்குத் தேவையான வெடி மருந்து அங்கே தயாரிக்கப்படவில்லை. கிணறுகள், சுரங்க வேலைக்குப் பயன்படுத்தப்படும் டைனமைட் போன்ற வெடி மருந்து அங்கே தயாரிக்கப்படுகின்றது.

### தஞ்சை மாவட்டத்தில் புதிய தொழிற்சாலை

107— (*வினா எண். 2880) திரு. ப. ந. இராமச்சந்திரன் மற்றும் திரு. க. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) இந்த ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் புதிய தொழிற் சாலைகள் அமைக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம்.

(ஆ) தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறையில் கூட்டுறவுத் துறையில் சர்க்கரை ஆலை ஒன்று பன்னிரண்டு கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு வருகிறது. இது 1986 ஜூலை மாதத் தில் செயல்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறையில் கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைந்து செயல்பட இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்காக அமைச்சர் அவர் களுக்கும், அரசுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். சென்ற ஆண்டு, தஞ்சை மாவட்ட, பட்டுக்கோட்டைத் தொகுதியில் 10 கோடி அளவில் தென்னை, அதன் சார்பான பொருள் களை உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலையை உருவாக்க, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அரசுக்கு ஒரு திட்டத்தை



அனுப்பியுள்ளதாக அறிகிறேன். இதுகுறித்து அரசு பரிசீலித்து ஒரு நல்ல மேல்நடவடிக்கையை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சர்க்கரை ஆலையைப் பற்றிய கேள்வி. மாண்புமிகு உறுப்பினர் இதற்கு தனிக் கேள்வியாகப் போடவும்.

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 85 ஆம் ஆண்டிலே தஞ்சை மாவட்டத் தில் மயிலாடுதுறையில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையை நிறுவி வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள் தஞ்சை மாவட்டத்திலே உள்ள ஆலைகள் எல்லாம் சர்க். கரை ஆலைகள், அரிசி ஆலைகளாக இருக்கின்ற காரணத் தினால், அவைகள் விவசாய சம்பந்தப்பட்டதாகத்தான் இருக்கின் றன. ஆகவே, இன்னும் நல்ல பொருள்களை உற்பத்திச் செய் யக்கூடிய இரும்பு ஆலையை அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாய சம்பந்தமான பொருள் களை உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலைகளை அங்கே உருவாக்கினால் தான் அது இலாபகரமாக இருக்கும்; நன் றாக இருக்கும். அங்கே கல்லே கிடையாது. இரும்புக்கு எங்கே போவது?

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பட்டுக்கோட்டைத் தொகு திக்கு அருகில் மூன்றாண்டுகளுக்கு முன்னால் அரசு நிபுணர் களை அனுப்பி, அதிகாரிகளும் வந்து, கரும்புத் தொழிற்சாலை அமைத்திட அங்கிருக்கிற கோயில் நிலத்தை ஆர்ஜிதம் செய்ய சர்வே செய்தார்கள். அந்தச் செயற் குறிப்பு அரசிடம் இருக் கிறதா? அப்படியென்றால், அரசு அதன்மீது என்ன நட வடிக்கை எடுத்திருக்கிறது? பட்டுக்கோட்டைத் தொகுதி மக்களுக்கு புரட்சித் தலைவர் அரசு ஒரு சர்க்கரை ஆலையை அங்கே உருவாக்கித் தருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, நாம் தற்போது 30 சர்க்கரை ஆலைகளுக்கு விண்ணப்பித்திருக் கிறோம். அவற்றிற்குக் கிடைக்கும் விவரம் இன்னும் தெரிய வில்லை. அந்த விவரம் தெரிந்த பிறகு பட்டுக்கோட்டையில் சர்க்கரை ஆலை நிறுவ முடியுமா, முடியாதா என்று ஆராய லாம்.

திரு. செ. ஆறுமுகம் : [1986 சனவரி 23
தொழில்துறை அமைச்சர் அவர்கள் தலைவரவர்களே, மாண்புமிகு
மேலும் சர்க்கரை ஆலைகளை தெரிவிக்கும்போது மேலும்
கூறுகளைத்தெரிவித்தார்கள். சர்க்கரை நிறுவுவதற்கான சாத்தியக்
கொண்டே போனால் நெல் பயிர் செய்யும் ஆலைகளை அமைத்துக்
அதனால் அரிசி விலை ஏறும். இது நிலங்கள் குறையும்.
செய்யுமா? குறித்தும் அரசு பரிசீலனை

மாண்புமிகு திரு. க. இராசாராம் :
சர்க்கரை ஆலையின் தலைவரவர்களே, ஒரு
இருக்கும். அதற்குக் உற்பத்தித்திறன் 1,680 டன்னாக
நிலம்தான் கரும்பு உற்பத்தி செய்ய 10,000 ஏக்கர்
களுக்கு தேவை. கரும்பு பயிடுரிகிற நிலத்தில் விவசாயி
களுக்கு நல்ல இலாபம் வருகிறது. சுமார் 50,000 பேர்
பத்தி வேலைவாய்ப்பு கிடைக்கிறது. தற்போது நெல் உற்
படுவதினால் நன்றாக இருக்கிறது. சர்க்கரை ஆலைகள் தொடங்கப்
நெல் உற்பத்தி பாதிக்காது குறையாது.

திரு. க. பாலசுப்பிரமணியன் :
அமைச்சர் அவர்கள் தலைவரவர்களே, மாண்புமிகு
இரும்புத் தொழிற்சாலை இரும்பு இல்லாத இடத்திலே எப்படி
கள். அங்கே சர்க்கரை அமைக்க முடியும் என்று கேட்டார்
களும் அதிகமாக ஆலைகள் இருக்கின்றன; அரிசி ஆலை
இருப்பதால் மூலப்பொருளான இருக்கின்றன. நெல் உற்பத்தி அதிகமாக
கிறது. சர்க்கரை வைக்கோல் அதிகமாகக் கிடைக்
அதிகமாகக் கிடைக்கிறது. ஆலைகளிலிருந்து கரும்புச் சக்கையும்
ஆகிய இரண்டையும் இந்தக் கரும்புச் சக்கை, வைக்கோல்
அங்கே இந்தப் மூலப்பொருள்கள் சேர்த்து ஒரு காகித ஆலை அமைத்தால்
வாய்ப்பு இருக்கும். வீணாகாமல் காப்பாற்றப்பட
உத்தேசம் இருக்கிறதா ஆகவே, அங்கே காகித ஆலை அமைக்கும்
என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் :
காகித ஆலை அமைக்க தலைவரவர்களே,
இன்னும் 5, 6 சர்க்கரை வேண்டுமென்பது நல்ல ஆலோசனை.
அவற்றிலிருந்து ஆலைகள் அங்கே வந்த பின்னால்
பொருளாகக் கிடைக்கும் கரும்புச் சக்கையை மூலப்
ஏற்படும். கொண்டு காகித ஆலை தொடங்கும் வாய்ப்பு
அதுவரை காத்திருக்க வேண்டும்.

குமரி மாவட்டத்தில் ஆற்றில் மணல் எடுக்க அனுமதி.

108—*(வினா எண். 3437) திரு. எஸ். என். இராமசாமி :
மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்
களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆற்றில் மணல்
எடுக்க அனுமதி பெறவேண்டும் என அரசு ஆணை பிறப்பித்
துள்ளதா?



(ஆ) இதனை மாற்றி ஏலம் விடும் முறை அமுலுக்குக் கொண்டு வரப்படுமா?

(இ) நெல்லை மாவட்டத்தில் இருந்து மணல் கொண்டு வர பொது அனுமதி வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) தமிழ்நாடு சிறு கனிம விதிகளின்படி ஆற்றில் மணல் எடுக்க அனுமதி பெற வேண்டும்.

(ஆ) சிறுவகைக் கனிமங்களை ஏலத்தில் விடும் முறை அரசின் பல முறைகளில் ஒன்றாக ஏற்கனவே பல மாவட்டங்களில் பின்பற்றப்படுகிறது. இம்முறை கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் பொருந்தும்.

(இ) பொது அனுமதி வழங்குவதற்கு வழிமுறைகள் இல்லை.

திரு. எப். எம். இராசரத்தினம் : தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆறுகளில் மணல் எடுக்கப்படுவதினால் சில ஆறுகளின் கரைகள் உடைந்து, அதனால் வெள்ளச் சேதம் ஏற்படுகிறது. எனவே, அப்படிப் பட்ட இடங்களில் மணல் எடுக்கக்கூடாத பகுதி என்று தடை விதிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, இந்த மணல் எடுப்பதை எதிர்த்து பல எம். எல்.ஏக்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எந்த இடத்தில் மணல் எடுக்க முடியுமோ அங்கே மட்டும் தான் அனுமதிக்கப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் சில ஆறுகள் தான் இருக்கின்றன. அவற்றின் அகலம் குறைவாக இருக்கிறது.

மேலும் அந்த ஆறுகளிலிருந்து மணலை எடுக்க வேண்டுமென்றால் தண்ணீரில் மூழ்கிதான் எடுக்க முடியும். ஆகவே, கரை உடைந்து போகின்ற அபாயம் இருப்பதால் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நெல்லை மாவட்டத்திலிருந்துதான் மணலைக் கொண்டு போகும் சூழ்நிலை இருக்கிறது.

திரு. மா. சுந்தரதாஸ் : தலைவரவர்களே கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஆறுகளிலிருந்து மணல் எடுப்பதினால் ஆற்றின் கரைகள் உடைந்து, பல்வேறு பிரச்சனைகள் வந்துகொண்டிருக்கின்றன. ஆகையால் அரசே நேரடியாகத் தலையிட்டு, கலெக்டர், தாசில்தார்கள் மூலம் ஏலம் போட்டு மணலை விற்கும் திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, எப்போதுமே ஏலம் போட்டு விற்பதுதான் பொதுவான நடைமுறை. கன்னியாகுமரி மாவட்டத்தில் பாதிப்பு ஏற்படுவதாக இருந்தால், அதனைத் தவிர்க்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கும்.

கோத்தகிரி பகுதியில் எலக்ட்ரானிக் தொழிற்சாலை.

109—(வினா எண் 3598) திரு. கே. உக்கி : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்— கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி பகுதியில் வெளிநாட்டு உதவியுடன் எலக்ட்ரானிக் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கும் உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. இராசாராம் : (அ) உள்ளது.

(ஆ) நீலகிரி மாவட்டத்தில், கோத்தகிரி தாலுக்கா, கொடநாடு பகுதியில் ஒரு பொறியியல் நகரம் அமைப்பதற்கான திட்டத்திற்கு அரசு நிர்வாக ஒப்புதலை அளித்துள்ளது. அமெரிக்காவில் வசிக்கும் இந்தியரான டாக்டர் இராஜகோபால் என்பவர் இண்டஸ் டெக்னாலஜீஸ் லிமிடெட் என்ற நிறுவனத்தை ஏற்படுத்தி அதன் மூலம் பொறியியல் நகரம் அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார். இதற்குத் தேவையான இசைவு கடிதத்தை மத்திய அரசு ஏற்கனவே வழங்கியுள்ளது.

(முற்பகல் 9-40)

திரு. கே. கல்லன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போன ஆண்டு இந்த அவையிலே 6 மாதங்களுக்குள் இப்படிப்பட்ட தொழிற்சாலை ஒன்று தொடங்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால் ஒரு வருட காலம் ஆகியும் இன்னும் அதற்கான நிலத்தைக்கூட ஒப்படைக்கவில்லை என்று எனக்குச் செய்தி கிடைக்கிறது. எனவே அதைத் துரிதப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்தை சிப்காட் மூலமாக அவர்களுக்கு அளித்தாகிவிட்டது. அவர்கள் குன்னூரில் தற்போது தங்கிக் கொண்டு மேற்கொண்டு வேலைகளை செய்து வருகிறார்கள்.



கொளப்பலூர் செங்கப்பள்ளி கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

110—*(வினா எண். 1799) டாக்டர் அ. பொன்னுசாமி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி ஆற்றிலிருந்து கொளப்பலூர், குன்னத்தூர், செங்கப்பள்ளி, ஊத்துக்குளி மற்றும் சுற்றுப்புற கிராமங்களுக்கு தண்ணீர் கொண்டுவரும் கூட்டுக் குடிநீர் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்போது துவங்கும்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) மற்றும் (ஆ) இத்திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயார் செய்யப்பட்டு வருகிறது. திட்டம் தயாரித்தபின் முறையான ஒப்புதல் பெற்று செயலாக்கத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

டாக்டர் அ. பொன்னுசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, குன்னத்தூர், செங்கப்பள்ளி, ஊத்துக்குளிபோன்ற பகுதிகள் மிகவும் வறண்ட பகுதியாக இருப்பதாலும், நிலத்தடி நீர் நாளுக்கு நாள் கீழ் நோக்கிச் சென்று கொண்டே இருப்பதாலும், பல இலட்சம் ரூபாய் செலவு செய்தும் வெட்டிய கிணறுகள் வறண்டு கொண்டிருப்பதாலும், போர் போட்டாலும் போதுமான தண்ணீர் வரவில்லை என்பதாலும், அந்தப் பகுதி மக்களைப் பொறுத்தவரையில், இந்த ஒரே ஒரு திட்டத்தைத் தவிர வேறு எவ்வளவு செலவு செய்தாலும் தண்ணீர் கிடைக்காது என்பதாலும் இப்படிப்பட்ட நிலைமைகளை எல்லாம் கருத்தில் கொண்டு உரிய நேரத்தில் இந்தத் திட்டத்தை ஆய்வு செய்து அமல் நடத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, அதையெல்லாம் எண்ணிப்பார்த்துத்தான் இத்தகைய திட்டத்திற்கான ஏற்பாட்டை நாம் செய்திருக்கிறோம். எவ்வளவு விரைவில் இதை முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக முடிக்க அரசு ஆவன செய்யும்.

## கொருக்குப் பேட்டையில் குடிநீர் வழங்கல்.

*111—*(வினா எண். 2040)* திரு. எஸ். வேணுகோபால் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் அமைந்துள்ள கொருக்குப்பேட்டைப் பகுதியில் குடிநீர் பற்றாக் குறையைப் போக்க மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை யாவை ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : கொருக்குப்பேட் டையில் அதிக அளவு குடிசைப் பகுதிகள் உள்ளன. இங்கு அதிக அளவு மக்கட் தொகை இருப்பதாலும், குழாய்கள் மூலம் போதிய அளவு குடிநீர் கிடைக்காததாலும் சென்னைக் குடிநீர் வாரியம் கீழ்க்கண்ட வசதிகளைச் செய்துள்ளது :—

| | எண்ணிக்கை. |
|---|---|
| 1. லாரிகள் மூலம் தினந்தோறும் நிரப்பப் படும் நீர்த்தொட்டிகள். | 80 |
| 2. நீர்வரும் பொதுக்குழாய்கள் .. .. | 52 |
| 3. குழாய் கிணறுகள் .. .. .. | 4 |
| 4. இந்தியா மார்க் 2 பம்புகள் .. | 5 |

மேலும் இப்பகுதியில் குடிநீர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்காக குழாயில் இரவில் வரும் நீரைச் சேமித்து மீண்டும் பம்பு செய்வதற்கான திட்டமொன்று 3.23 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டம் முடிவடைந் தால் இப்பகுதியில் நீர் வழங்கு நிலைமை நன்கு சீர்படும்.

திரு. எஸ். வேணுகோபால் : பேரவைத் தலைவர் அவர் களே, இராதாகிருஷ்ணன் நகரில் உள்ள கொருக்குப்பேட்டையில் நேத்தாஜி நகர், மூப்பனார் நகர், நெடுஞ்செழியன் நகர், அண்ணா நகர் போன்ற பல பகுதிகளில் தண்ணீர் கிடைப்பதே இல்லை. டேங்கில் தண்ணீர் ஊற்றுவதே இல்லை. லாரிகள் ரிப்பேர் போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன. அதுமட்டுமல்ல. மேல் நிலைத் தொட்டி கட்டி தண்ணீர் ஊற்றினால் வசதியாக இருக் கும். அந்த வகையில் மேல்நிலைத் தொட்டி கட்டுவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, மேல்நிலைத் தொட்டி கட்டுகின்ற அளவில் அந்தப் பகுதியில் வசதி இல்லை. அத்தகைய நிலையில் அங்கே கீழ் நிலைத் தொட்டி அமைத்து அதன் மூலமாக தண்ணீர் கொடுக்க ஒரு திட்டம் ஏற்பாட்டில் இருக்கிறது.



திரு. எஸ். வேணுகோபால்: பேரவைத் தலைவர் அவர்களே, கீழ் நிலைத் தொட்டி கட்டுவது என்பது கடந்த ஆண்டு கொடுக்கப் பட்ட திட்டம். இது வரையிலும் அது கட்டி முடிக்கப்படாத நிலைமையில், வேலையே ஆரம்பிக்கப்படாமல் இருப்பது பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவாளர்களா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து பேரவைத் தலைவர் அவர் களே, அமைச்சர் அறியமாட்டார். எனவே, இனிமேல் அதுபற்றி உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பரிதி இளம் வழுதி: பேரவைத் தலைவர் அவர்களே' கொருக்குப்பேட்டைப் பகுதியில் வருகின்ற கழிவுநீரை அகற்றுவது யார் என்பதே புரியவில்லை. எம்.எம். டி. ஏ. அகற்றுவதா அல்லது குடிசை மாற்று வாரியம் அகற்றுவதா அல்லது மாநகராட்சி அதிகாரிகள் அகற்றுவதா என்பதே பெரிய பிரச்சினையாக ஆகி இருக்கின்றது. எனவே, அரசு இதற்கு ஒரு புது விதியினை உரு வாக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, அதைப் பற்றி அரசினிடத்திலே ஒன்றும் குழப்பம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடத்தில் தான் அத்தகைய குழப்பம் இருப்பதுபோல் தெரிகிறது. கழிவு நீரைப் பொறுத்தவரையில் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரியம் அந்தப் பணியினை மேற்கொள்கிறது. ஆனால், மழை நீர் தேங்கினால் மாநகராட்சி அதை அகற்று கின்ற பணியினைச் செய்கிறது.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர்ப் பிரச்சினை என்பது ஒரு பொதுப் பிரச்சினையாகும். மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை இது. சென்ற ஆண்டில் தர்மபுரி மாவட்டத்தில் குடிநீர்ப் பிரச்சினை ஏராளமாக இருந்தது. மூலக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லை என்றாலும்கூட இது ஒரு பொதுப்பிரச்சினை. ஆகவே, சொல்கிறேன். முதலமைச் சர் அவர்களை அணுகி, அந்தப் பகுதி மக்களின் குடிநீர்ப் பிரச் சினையைப் போக்க வேண்டும் என்ற வகையில் என்னுடைய தொகுதியாகிய மொரப்பூர் தொகுதியில் 130 கிணறுகளை ஆழப் படுத்தி ஒரு தீர்வு கண்டார்கள். ஆனால்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்விக்குத் தொடர் பில்லாத கேள்வியாக இருப்பதால் இதுபற்றிய விவரம் அறிய தனிக் கேள்வி போட வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்: இது உங்களுடைய பிரச்சினை. அல்ல, என்னுடைய பிரச்னை அல்ல; பொதுப் பிரச்சினை இதை அமைச்சர் அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

சென்ற ஆண்டு அவ்வாறு செய்ததற்கு பேமெண்ட் செய் யாமல் இருக்கிறதே, அது அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறதா ? அதை விரைவிலே வழங்க அரசு நட வடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர் களே, கான்டிராக்டர்களுக்கு பணம் வழங்குவதற்கு சில நிபந் தனைகள் இருக்கின்றன. அந்த நிபந்தனைகளின்படி தான் பணம் வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர் கள் தெரிவித்து இருக்கிற கருத்தின் அடிப்படையில் அப்படி வழங்கப்படாமல் இருந்தால் அது பற்றி அரசு ஆய்ந்து முடிவு செய்யும்.

புதுக்கோட்டை மாவட்ட ஒன்றியங்களில் கூட்டுக்
குடிநீர்த் திட்டம்.

112—(*வினா எண் 3707) திரு. த. புஷ்பராசு : மாண்பு மிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி, அரி மளம், திருமயம் ஆகிய மூன்று ஒன்றியங்களிலும் கூட்டுக் குடி நீர் திட்டம் அமுல்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) இது போன்று திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. த. புஷ்பராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, தமிழ்நாட்டில் பிற மாவட்டங்களிலே வெள்ள நிவாரணப் பணிகள் நடந்துக் கொண்டிருக்கிற இந்த நேரத்திலே, புதுக் கோட்டை மாவட்டத்திலே மட்டும், எங்களுடைய தூரதிருஷ் டமோ என்னவோ தெரியவில்லை, வறட்சிப்பணி வேலைகளைத் தொடங்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதுவும் புதுக் கோட்டை மாவட்டத்திலேயே திருமயம் தொகுதி என்பது மிகவும் வறட்சியாக இருக்கக்கூடிய தொகுதி என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்கள்,





அண்மையிலே மாண்புமிகு அமைச்சர்கள் என்னுடைய தொகு தியிலே சுற்றுப்பயணம் வந்தபோது, பொதுவாக மக்களால் கேட் கப்பட்ட கேள்விகளில் குடிதண்ணீரைப் பற்றித்தான் அதிகமாக இருந்தது. ஆகவே, 3 ஒன்றியங்களைக் கொண்ட திருமயம் தொகுதியில் ஒரு தொகுதியிலே கூட, கூட்டுக் குடிநீர் திட்டம் அறிவிக்கப்படவில்லை என்பதை நினைக்கிற போது கஷ்டமாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் தொகுதி மக்களுடைய வறட்சி நிலைமையைப் போக்க குடிதண்ணீராவது கொடுக்க வேண்டும் என்று நல்ல எண்ணத்திலே அந்தத் திட் டத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு தலை வர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியில் உள்ள 3 ஒன்றியங்களில் 110 குடியிருப்புகளில் குடிதண்ணீர் பிரச்சினை தீர்க்கப்பட்டு, திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. வகை 6 லிருந்து மாற்றம் செய்யப்பட்ட 249 குடியிருப்புகளில், 1984 இறுதி முதல் பணி துவங்கப்பட்டு 70 குடியிருப்புகளில் குடி தண்ணீர் வழங்கப்பட்டிருக்கிறது. எஞ்சிய குடியிருப்புகளுக்கும் குடிதண்ணீர் வழங்க அடுத்த நிதியாண்டில் ஆவன செய்யப் படும்.

கைத்தறி நெசவாளர்களுக்கு நியாய விலையில் நூல்
வழங்கல்.

113—(*வினா எண் 1000) திரு. செ. செம்மலை, திரு. இரா. தாமரைக்கனி மற்றும் திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு ஆயத்தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெசவாளர்களுக்கு கைத்தறிக்கான நூல்களை நியாய மான விலையில் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும் ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : (அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் இயங்கிவரும் 17 கூட்டுறவு நூற்பாலைகள், தமிழ்நாடு மாநில நெசவாளர்கள் கூட்டுறவு சங்க (கோ-ஆப் டெக்ஸ்) நூல் கிடங்குகள் மூலம் சகாய விலையில் கூட்டுறவு துறையில் உள்ள நெசவாளர்களுக்கு நூல் வழங்கி வருகின்றன.

தனியார் துறையில் உள்ள நெசவாளர்களுக்கு நூல் தேவைப் படும்போது தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் மூலம் வழங்கப்படுகிறது. இதைத் தவிர, நூல் பற்றாக்குறை ஏற்படும்

காலங்களில் தனியார் துறை ஆலைகளிலிருந்தும், தேசிய துணி
நூல் கழக ஆலைகளிலிருந்துப் நெசவாளர்களுக்கு நியாய
விலையில் நூல் வழங்கப்படுகிறது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, கூட்டுறவு நூற்பு ஆலைகளில் கைத்தறிகளுக்கு பயன்
படுத்தப்படும் நூல்கள் குறைவாகவே தயாரிக்கப்படுவதாகவும்,
அதேசமயத்தில் தனியார்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற மில்
களிலே தயாரிக்கப்படுகின்ற துணிகளுக்கு தேவையான நூல்
களைத்தான் அதிகமாகத் தயாரிப்பதாகவும், அதனால்தான்
கைத்தறிகளுக்கு தேவையான நூல்களை கூட்டுறவு நூற்பு
ஆலையினால் வழங்கமுடியவில்லை என்றும் சொல்லப்படுகிறதே,
அது உண்மையா ? அப்படி இருக்குமானால் கூட்டுறவு நூற்பு
ஆலைகளில் கைத்தறி ஆலைகளுக்கு தேவையான தரம் உள்ள
நூல்களையே அதிகமாகத் தயாரிக்க அமைச்சர் அவர்கள் நட
வடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறையில்
கூட்டுறவு நூற்பாலையில் நெசவாளர்களுக்குத் தேவையான
எல்லாவிதமான நூல்களும் தயாரிக்கப்படுகிறது. தேவைக்கு
அதிகமாகவே தயாரிக்கப்படுகிறது. ஆகவே, தயாரிக்கவில்லை
அல்லது கிடைக்கவில்லை என்று சொல்வது சரியான விவரம்
இல்லை.

திரு. கைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, கூட்டுறவு நூற்பு ஆலைகளின் வாயிலாக இன்னும்
அதிக அளவில் நூல்கள் வழங்க மூலப் பொருளான பஞ்சுக்கு
மைய அரசு நிர்ணயித்துள்ள தொகையை குறைக்க வேண்டும்
அல்லது நியாயமான விலைக்கு தரவேண்டும் என்ற
கோரிக்கையை மைய அரசிடம் மாநில அரசு பரிந்துரை
செய்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9.50)

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, தனியார் நூற்பு ஆலைகளும், கூட்டுறவு
நூற்பு ஆலைகளும், அவர்கள் உற்பத்தி செய்கிற நூல்களில்,
கைத்தறி நெசவாளர்களுக்கு குறைந்தது 50 சதவீதம் உற்பத்தி
செய்ய வேண்டும் என்று மத்திய சர்க்கார் ஆணையிட்டிருக்
கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டில் உள்ள நூற்பு ஆலைகள்
75 சதவீதம் அளவுக்கு உற்பத்தி செய்து, சொல்லியதை விட
அதிகமாக ஆணையை நிறைவேற்றி
வருகிறார்கள்.



அந்த நூற்பாலைகளில் உள்ள நூல் விலையேற்றத்திற்கு காரணம்
பஞ்சு விலை தான். பஞ்சை மத்திய அரசு நியாயமான விலையில்
தமிழ்நாட்டிற்கு கொடுக்கமுன்வந்தால், நியாயமான விலையில்
நூலை நெசவாளர்களுக்கு கொடுக்க நம்மால் முடியும்.

கைத்தறி பற்றிய கணக்கெடுப்பு.

114—(*வினா எண் 4586) மாண்புமிகு திரு. வேடசந்தூர்
வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):
மாண்புமிகு ஆயத்தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை
அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநிலத்தில் (Handloom Census) எடுக்கப்படு
வதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) கைத்தறி கணக்கெடுப்பு குறித்து கோரிக்கை அரசுக்கு
சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை செயல்படுத்த ஆகும்
செலவுத் தொகை ரூ. 10 லட்சத்தை மானியமாக அளிக்கும்படி
மத்திய அரசிடம் தமிழக அரசு கேட்டுள்ளது.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்
(பேரவைத் துணைத் தலைவர் ): தலைவர் அவர்களே, இந்த
கைத்தறி சென்சஸ் சரியாக இல்லாத காரணத்தால் நெசவாளர்
களுக்கு எவ்வளவு நூல் தேவைப்படுகிறது. எத்தனை தறிகள்,
விசைத்தறிகள் இருக்கின்றன என்ற விவரங்கள் இல்லாமல்
இருக்கின்றன. அதேசமயம் சிலநேரங்களில் பொதுமக்கள் விரும்பு
கிற ரகங்களும் உற்பத்தி செய்யப்படாமல் இருக்கிறது. ஆகவே
எத்தனை தறிகள், விசைத்தறிகள் இருக்கின்றன போன்ற விவரங்
கள் இந்த சென்சசில் எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே,
ஏற்கனவே மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் அரசு, தமிழ்
நாட்டில் கூட்டுறவுத் துறையில் எத்தனை நெசவாளர்கள்
கைத்தறி நெசவில் இருக்கிறார்கள், அவர்களுக்கு தேவையான
நூல் எவ்வளவு, அவர்களுக்கு தினம் எவ்வளவு அளவு நூல்
கொடுக்கப்படுகிறது, மாதம் அவர்கள் எவ்வளவு சம்பளம் பெறு
கிறார்கள் என்ற விவரங்கள் அடங்கிய குறிப்புகள் ஒரு பாஸ்

போர்ட் சைஸ் போட்டோவுடன் எடுக்கப்பட்டு முடிந்திருக்கிறது. மத்திய அரசு மேலும் நடவடிக்கை யெடுத்து இந்தியா பூராவும் இருக்கிற நெசவாளர்களுடைய சென்சசை எடுக்க வேண்டும். காரணம் கடந்த 1971–72 ஆம் ஆண்டில் தான் சென்சஸ் எடுத் திருக்கிறார்கள். ஆகவே நெசவாளர்களுடைய சென்சஸ் எடுக்க வேண்டுமென்ற ஆணையின் மீது தமிழ்நாடு அரசு இந்த ஆண்டு ஜனவரி மாதம் ஒரு மாதிரி கணக்கையெடுக்க துவங்கியிருக்கிறது. அதற்காக தேவைப்படும் தொகையை மத்திய அரசிடம் தமிழக அரசு கேட்டிருக்கிறது.

## புதிய தொழிற்பேட்டைகள்.

115—(*வினா எண் 1579) திரு. சைதை சா. துரைசாமி மற்றும் திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் புதிதாக தொழிற்பேட்டைகள் அமைக் கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : (அ) ஆம். (ஆ) தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தைப் (சிட்கோ) பொறுத்தவரை புதிதாக தொழிற்பேட்டைகள் எதுவும் அமைப் பதற்கான செயற்குறிப்பு பரிசீலனையில் இல்லை. ஆனால் தமிழ் நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) மூலம் 11 தொழில் இணையங்களை ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் நிறுவுவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

திரு. சைதை சா. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் 'சிப்காட்' மூலமாக 11 தொழில் இணையங்கள் நிறுவப்படுமென்று தெரிவித்திருக்கிறார்கள். அந்த 11 இடங் கள் எவை என்று அறிய விரும்புகிறேன். அவைகளில் இப்போது எத்தனை இடங்களில் பணிகள் துவங்கப்படிருக் கின்றன என்ற விவரத்தையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : தலைவர் அவர்களே, சிப்காட்டைப் பொறுத்தவரையில் 11 மாவட்டங் களில் 11 தொழில் இணையங்களை ஏழாவது ஐந் தாண்டுத் திட்டக் காலத்தில் நிறுவுவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மதுரை, தஞ்சாவூர், மேற்கு இராமநாத புரம், திருச்சிராப்பள்ளி, பெரியார், சேலம், கோயம் புத்தூர், கன்னியாகுமரி, நீலகிரி, தர்மபுரி, வட ஆற்காடு ஆகிய 11 மாவட்டங்களில் 11 காம்பிளக்ஸ் ஏற்படுத்துவதற்கு அரசு அனுமதித்துள்ளது. முதலாவதாக மதுரை மாவட்டம்



நிலக்கோட்டை வட்டம், குலசேகரன்கோட்டை கிராமத்தில் தொழில் இணையம் நிறுவுவதற்கு நிலங்களை கையகப் படுத்த சிப்காட் நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. சைதை சா. துரைசாமி : தலைவர் அவர்களே, ஏற்கனவே இயங்கிக் கொண்டிருக்கின்ற தொழில் பேட்டை களில் காலியாக இருக்கிற இடத்தை பயன்படுத்தி தொழில் கூடங்கள் அமைக்கிற முயற்சியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா? அல்லது அந்த காலியாக இருக்கிற இடத்தை வேறு எந்தப் பணிக்கு பயன்படுத்த அரசு உத்தேசித்துள்ளது என்பதனையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் சிட்கோ நிறுவனத்தைப் பொறுத்தவரையில் 2,052 பெரிய தொழில் கூடங்களைக் கட்டி முடித்திருக்கிறது. அதில் ஏறக்குறைய 2,028 ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. அம்பத்தூர் போன்ற பல்வேறு தொழில் பேட்டைகளில், எஞ்சியுள்ள நிலங்களில் சுமார் 148 தொழில் கூடங்களை கட்டுவதற்கு சிட்கோ திட்டமிட்டு, அதில் இதுவரையில் 132 தொழில் கூடங்களைக் கட்டி முடித்திருக்கிறது. 16 தொழில் கூடங்களை விரைவாக கட்டி முடிக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே 11 தொழில் பேட்டை களை அமைக்க இருப்பதாகஅமைச்சர் அவர்கள் சொன்னார் கள். அதிலே தர்மபுரி மாவட்டம் சேர்ந்திருக்கிறதா? தர்மபுரி மாவட்டம் பின்தங்கிய மாவட்டம். தர்மபுரி மாவட்டத்திற்கு முதன்மை இடம் கொடுத்து, கூடிய சீக்கிரத்தில் தொழில் பேட்டை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : தலைவர் அவர்களே, 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் 11 தொழில் இணையங்களை உருவாக்கவேண்டும் என்று சிப்காட் முடிவு எடுத்திருக்கிறது. அதிலே எந்தெந்தப் பகுதிகளை விரைவாக எடுத்துக்கொள்வதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கிறதோ, அந்த வரிசைப்படி எடுக்கப்பட்டு வருகின்றன. தர்மபுரி 10-வது இடத்தில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் ஆயிரம் ஏக்கர் நிலப் பரப்பிலே வரக்கூடிய அந்த தொழில்பேட்டையானது கடந்த 1980 ஆம் ஆண்டு, ஆத்தூர் பகுதி, செம்பட்டி அருகிலே இடத்தைப் பார்த்து, 80 சதவீதம் அங்கே தண்ணீர் இருக்கிறது என்று சொல்லி, அதற்கான அதிகாரிகள் நியமிக்கப்பட்டு, அவர்கள் எல்லாம் இரண்டு ஆண்டுக் காலம் இருந்தார்கள். அதன்பிறகு, தண்ணீர் போதவில்லை என்று சொல்லி, இடத்தை மாற்றியிருக்கிறார்கள். வரவேற்கிறேன். இந்த குலசேகரன் கோட்டைப் பகுதியிலே 1986–87 ஆம் ஆண்டுக்குள்ளாவது இந்த திட்டத்தைக் கொண்டு வருவதற்கு வழிவகை செய்யப்படுமா? மறுபடியும் இதிலே காலதாமதம் செய்து, வேறு இடத்திற்கு மாற்றுவதற்கான நிலைமைகள் உருவாகுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : தலைவர் அவர்களே, சிப்காட் நிறுவனத்தைப் பொறுத்தமட்டில், முதல் பணியாக, மதுரை மாவட்டத்தில் நிலக்கோட்டை வட்டத்தில் குலசேகரன் கோட்டையில் விரைவாக தொழில் பேட்டை தொடங்கவேண்டும் என்ற எண்ணத்தோடு விரைவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் அவர்கள், மாநிலத்தில் மொத்தம் 11 இடங்களில் தொழில்பேட்டை அமைப்பதாகச் சொன்னார்கள். அதிலே இறுதியாகச் சொல்லும்போது, மேற்கு ராமநாதபுரம் என்று சொன்னார்கள். அந்தப் பெயர் கிடையாது. பெருந் தலைவர் காமராஜர் மாவட்டம் என்று மாற்றி ஒரு வருடத் திற்கு மேலாகிறது. இருந்தும் காமராஜர் மாவட்டம் என்று சொல்லாமல், ராமநாதபுரம் மாவட்டம் என்று அறிவித்து இருக்கிறார்கள். இது தவறு. மேலும் அந்தத் தொழில் பேட்டை எங்கு வர இருக்கிறது, அது எப்போது வர இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கப் படும்.

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 11 மாவட்டங் களிலே தொழில் பேட்டை அமைப்பது பற்றிக் குறிப்பிட்டார் கள். குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில், ஒரத்தநாடு, பேராவூரணி ஆகிய 2 வட்டத்தில், சப்சிடி பெற்று. தொழில் துவங்க வசதி ஏற்படுத்தித் தந்தும், இதுவரையிலும்



எந்தத் தொழிலும் தொடங்கப்படவில்லை. எனவே அந்த இரண்டு பகுதிகளில் தொழில் பேட்டை அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : தலைவர் அவர்களே, இதுபற்றிய குறிப்பு என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.

116—(* வினா எண் 2164) திருமதி பி. லட்சுமி : மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவிநாசி தாலுக்காவில் தொழில்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் கட்டுமானப் பணிகள் எப்போது துவங்கும்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ) கோவை மாவட்டம் அவிநாசி தாலுக்காவில் ஒரு தொழிற்பேட்டை (Industrial Estates) ஏற்படுத்துவதற்கு பூர்வாங்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

திருமதி பி. லட்சுமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழில் பேட்டையால், எத்தனை தொழிலாளர்கள் பயன் பெறுவார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : பேரவைத் தலைவர் அவர்களே, சிட்கோ மூலமாக இப்போது தான் அவிநாசி வட்டம் செய்யூர் கிராமத்தில், சர்வே எண்கள் 154, 159, 164 ஆகிய புலன்களில் உள்ள சுமார் 17.25 ஏக்கர் பட்டா நிலத்தை கையகப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இதுசம்பந்தமான செயற்குறிப்பு அரசிடத்தில் உள்ளது.

(முற்பகல் 10.00).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப் பெறுகிறது.

## பட்டுப்பூச்சி வளர்ப்பு

117—(*வினா எண் 3255) திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1984–85-ஆம் ஆண்டில் பட்டுப்பூச்சி வளர்த்து பட்டு தயாரிக்கும் தொழிற்சாலைகள் எந்தெந்த மாவட்டங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(ஆ) அதனால் வேலைவாய்ப்பு பெற்றுள்ளவர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

மாண்புமிகு திரு. ஆனூர். பு. கோ ஜகதீசன் : (அ) பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்பவர்களே பட்டுப்பூச்சி வளர்ப்பவர்களாவார்கள். 1984–85-ம் ஆண்டில் தருமபுரி, சேலம், வடஆற்காடு, செங்கல்பட்டு, தென்ஆற்காடு, ஆகிய மாவட்டங்களில் 5,020 ஏக்கர் பரப்பளவில் இம்மா நிலத்தில் முசுக்கொட்டைச் செடி நடவுக்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

(ஆ) இதனால் கிராமப்புறங்களில் சுமார் 25,100 நபர்கள் வேலைவாய்ப்புப் பெற வழிவகை செய்யப்பட்டது.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு தயாரிக்கும் பட்டு ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு உற்பத்தி ஆகிறது அதன் மதிப்பு எவ்வளவு என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர். பு. கோ. ஜகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் 6 இலட்சம் கிலோ இன்றைக்கு பட்டு உற்பத்தி ஆகிறது.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே பட்டு தயாரிக்கின்ற தொழிலையும், ஜரிகைத் தயாரிக்கும் தொழிலையும் ஒன்றாக இணைத்து அதற்கு என்று ஒரு வாரியம் அமைப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர். பு. கோ. ஜகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றி தனியாக வினா எழுப்பினால் பதில் அளிக்கப்படும்.

டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்திலேயும் இப்படிப்பட்ட பட்டுப் பூச்சி வளர்ப்பு முசுக்கொட்டைச் செடி வளர்ப்புத் திட்டத்தினை விரிவாக்கம் செய்கின்ற எண்ணம் அரசிடம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாவட்டத்திலும் சுமார் 200 ஏக்கர் நிலத்தில் முசுக்கொட்டைச் செடி வளர்ப்பதற்கு அரசு ஏற்பாடு செய்துள்ளது.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் எத்தனை ஏக்கர் நிலத்தில் பட்டுப் பூச்சி தயாரிக்கப்பட உள்ளது ? மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் என்னுடைய தொகுதியில் பட்டு பூச்சி வளர்ப்பு உற்பத்தி செய்வதற்காக அங்கே ஒரு தொழிற்பேட்டை அமைத்து வருகிறார்கள். அது கால தாமதம் ஆகிறது. அந்தத் தொழிற்பேட்டையை உடனடியாக அமைத்து அந்தப் பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பை அளிக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. கி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டு நூற்புத் தொழிற்சாலையில் இதுவரையில் பணி தொடங்கப்பட்டு இன்னும் முடியாத தொழிற்சாலைகள் தமிழகத்தில் எத்தனை இருக்கின்றன ? அவைகளை விரைவாக முடிக்க ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் பணிகளை முடிக்க விரைவான ஏற்பாடுகளை அரசு செய்து வருகிறது.

திரு. த. புஷ்பராஜ : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் பட்டுப் பூச்சி வளர்ப்பதற்கும் முசுக்கொட்டைச் செடி வளர்ப்பதற்கும் நல்ல சீதோஷ்ண நிலை சிறப்பாக அமைந்து இருக்கிறது. நல்ல முறையில் பட்டுப் பூச்சியை வளர்த்து வருகிறார்கள். ஆகவே புதுக்கோட்டை மாவட்டத்தில் பட்டுத் தயாரிக்கும் தொழிற்சாலையை ஆரம்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் இந்த ஆண்டில் சுமார் 200 ஏக்கர் நிலத்தில் புதிதாக முசுக்கொட்டைச் செடி நடவு செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. அதன் மூலம் கிடைக்கின்ற பட்டிலிருந்து சிறு சிறு உற்பத்தி நிலையங்களை ஏற்படுத்துவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது.

[1986 சனவரி 23

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் திருவோணம் ஒன்றியம் சென்னியம் விடுதி அருகிலும் கும்பகோணம் தாலுக் காவிலும் பெரும்பாலும் பட்டு வளர்க்கப்படுகிறது. அங்கு ஒரு தொழிற்சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலும் புதிதாக முசுக்கொட்டைச் செடி நடவுக்கு தயார் செய்யப்பட்டு வருகிறது. தேவையான அளவுக்கு நூல் எடுப்பதற்கு முறுக்கு ஏற்றுவதற்கு தனித்தனியாக சிறு சிறு உற்பத்தி நிலையங்களை ஏற்படுத்துவதற்கு அரசு முயற்சி எடுத்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

## 2. தகவல் கோரல்.

### (அ) கருநாடக மாநிலத்திலிருந்து தமிழகத்திற்குரிய காவிரி நீரைப் பெறுவது குறித்து

திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான விஷயம் குறித்து நான் மாநில அரசின் தகவலைப் பெற விரும்புகிறேன். இன்றைய தினம் பத்திரிகைச் செய்தியில் கர்நாடக மாநிலத்தின் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் அந்த சட்டமன்ற மேலவையில் பேசும்போது தமிழ்நாட்டுக்கு தண்ணீர் விட முடியாது என்று திட்டவட்டமான முறையில் அறிவிக்கும் நிலை இருக்கிறது. ஆகவே, மாநில அரசு மத்திய அரசை நிர்பந்தித்து காவேரி பிரச்சினை தீர்வதற்குண்டான உடனடி நடவடிக்கையை மேற் கொள்ளுமா ? அதேபோல் 1974 ஆம் ஆண்டு முடிவு பெற்ற ஒப்பந்தம் ..........( குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. மணிமாறன் இதுபற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத் திருக்கிறார். இதனோடு அதற்கும் சேர்த்தே பதில் சொல்வதாக இருந்தால் அமைச்சர் சொல்லி விடலாம். (குறுக்கீடு) ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்வது என்றால் இரண்டு நாள் ஆகும். உடனே வேண்டும் என்பதற்காகத் தான் இப்போதே பதில் சொல்லி விடலாம் என்று சொன்னேன். (குறுக்கீடு).



1986 சனவரி 23]

* மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் ஜீவாதார உரிமை களில் ஒன்று தான் காவிரியில் தண்ணீர் பெறுவது என்பது. அதுதான் தமிழக அரசின் நிலை ஆகும். 1974 ஆம் ஆண்டோடு காவிரி ஒப்பந்தம் காலாவதியாகிவிட்டது என்பது கர்நாடக அரசின் நிலையாக இருந்தாலும், தமிழக அரசு அதை எந்தக் காலத்திலும் ஏற்றுக் கொள்ளவில்லை. அந்த ஒப்பந்தம் காலா வதியாகவும் முடியாது. காலத்திற்கேற்ப, சந்தர்ப்பத்திற்கேற்ப இரு அரசுகளால் பேசப்பட்டு, புதுப்பிக்கப்பட வேண்டிய ஒப்பந் தம் என்பது தான் தமிழக அரசின் நிலையாக இருக்கின்றது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். வழக்கமாக, தஞ்சை மாவட்டத்தில், குறுவை சம்பா, தாளடி பயிர்கள் பயிரிடப் படுவதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். வழக்க மாக வரக்கூடிய தண்ணீரின் வரத்து இவ்வாண்டு இல்லாத காரணத்தினாலும், மேட்டூர் அணையில் தண்ணீர் இருப்பு மிகவும் குறைவாக இருந்த காரணத்தினாலும், ஒவ்வொரு ஆண்டும் விடக்கூடிய தண்ணீர் விடமுடியாத சூழ்நிலையில், காலம் கடந்து தண்ணீர் திறந்து விடப்பட்டதன் காரணமாகவும், குறுவைப் பயிருக்குத் தண்ணீர் தேவையாக இருந்தது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள்.

அதற்காக, தமிழக அரசு கர்நாடக மாநிலத்திடம் பேச்சு வார்த்தை நடத்தி 5 டி.எம்.சி. தண்ணீரை, அந்தக் கால கட்டத்தில் பெற்றது என்பதையும், மிகத் திறமையான நில நீர் நிர்வாகத்தின் காரணமாக அந்தப் பயிர்கள் பாதுகாக்கப் பட்டன என்பதையும், தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்த உறுப்பினர்களும், மற்றவர்களும் அறிவார்கள். இந்தச் சூழ் நிலையில், மறுபடியும் அடுத்த சம்பா பயிரைக் காப்பாற்று வதற்காக— சம்பா பயிர் என்பது மற்ற இரண்டு பயிர்களை விட நீண்ட கால பயிர் ஆகும்— அந்தப் பயிர்களைக் காப்பாற்று வதற்காக தண்ணீரைக் கோரி, மறுபடியும் தமிழக அரசு கோரிக்கை வைத்த நேரத்தில் கர்நாடக மாநிலம் 5 டி.எம். சி. தண்ணீரைத் தந்தது.

அந்த 5 டி..எம். சி. தண்ணீரோடு நிலைமைகள் சரியாகும் என்று கருதினோம். ஆனால் நிலைமைகள் சரியாகவில்லை. இயற்கை பொய்த்ததன்காரணமாக, நமக்குமிகவும் கடுமையான கால கட்டத்தில் தண்ணீர் தேவைப்பட்டது. 'மறுபடியும்., மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய முழு ஒத்துழைப்போடு, ஆதரவோடு மாண்புமிகு பாரதப் பிரதமர் உட்பட, அத்தனை பேரிடமும், மாண்புமிகு முதல்வர் அவர்களின் சார்பில் மாண்புமிகு நிதிஅமைச்சர் அவர்களும், நாலும், நேரில் சென்று பேச்சுவார்த் தைகள் நடத்தினோம்;

அதற்குப் பிறகு, கர்நாடகத்திலே இருக்கக்கூடிய சபினி நீர்த் தேக்கத்திலே இருக்கக் கூடிய தண்ணீர், அவர்கள் மின் உற்பத்தி செய்து, அப்படி மின் உற்பத்தி செய்த பிறகு, அந்தத் தண்ணீரை தமிழகத்திற்குவிடக் கூடிய நிலையில் அந்தத் திட்டம் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்திலிருந்து நேரடியாக 5 டி.எம். சி. தண்ணீரைத் தருவதாகவும், அவ்வாறு தண்ணீர் தருகின்ற நேரத்தில் தங்களுக்கு ஏற்படுகின்ற மின் உற்பத்தி இழப்பினைத் தமிழகம் ஈடுகட்ட வேண்டும் என்பதை யும் கர்நாடக அரசு சொல்லி, அதனைத் தமிழகம் ஏற்றுக் கொண்டு, 5 டி.எம். சி. தண்ணீரைப் பெற்று, அதற்குரிய மின்சார உற்பத்தி இழப்பை ஈடுகட்டக்கூடிய வகையில் நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

5 டி.எம். சி. தண்ணீரைப் பெற்று அந்த சம்பா பயிரையும் ஓரளவுக்குக் காப்பாற்றி, இன்னும் சற்று தண்ணீர் இருந்தால் போதுமானதாக இருக்கும் என்று கோரிக்கை வைத்தோம். அந்த நேரத்தில் சற்றுக் கூட அதை ஏற்றுக் கொள்ள முடியாது என்ற எண்ணத்தில் கர்நாடக அரசு நேரடியாகச் சொல்லவும் இல்லை. பத்திரிகைகள் வாயிலாகச் சொல்லவும் இல்லை. பரிவோடு பரிசீலிக்கப்படும் என்று தான் மாண்புமிகு கர்நாடக முதல்வர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். காலப் போக் இல் மறுபடியும் கோரிக்கை வைத்து வற்புறுத்த வேண்டிய நேரத்தில், மழை வந்து நம்மைக் காப்பாற்றியது. மழை ஓரளவிற்கு இருந்தாலும் உடனடியாகத் தண்ணீர் தேவை என்ற நிலையில் தான் பெய்திருந்தாலும், நாம் மறுபடி நீர்வேண்டுமென கோரிக்கைகளை வைத்துக்கொண்டு தான் இருக்கிறோம். திரும்பத் திரும்ப கோரிக்கைகளை வைத்துக் கொண்டு தான் இருக்கிறோம்.

(முற்பகல் 10.10)

ஆனால் கர்நாடக மாநிலத்திலே இருக்கக் கூடிய சட்டப் பேரவையிலும், மேலவையிலும் இந்தப் பிரச்சினை எழுப்பப்பட்ட நேரத்தில், பதில் கூறியபோது, கர்நாடக மாநில பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களால இத்தகைய இங்கே எடுத்து சொல்லப்பட்ட பதில் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே எடுந்துச் சொல்ல விரும்புகிறேன். இருந்தாலும், கூட, நிச்சயமாக குறைந்தபட்சம், இன்னும் 5 டி.எம்.சி. தண்ணீர் இருக்குமானால், தஞ்சை மாவட்டத்திலுள்ள விவசாயப் பயிர் களை பாதுகாக்க முடியும் என்ற உண்மையான நிலைமை வாதிக்கப்படுகிறது. இன்னும் சொல்லப்போனால், நீர் பெறுவது என்பது கருணையின் அடிப்படையிலோ, அல்லது மனிதாபி மானத்தின் அடிப்படையிலோ பெறக் கூடிய ஒன்று என்று மட்டும் நாம் கருதிவிட முடியாது. ஏனென்றால்



ஒப்பந்தம் காலாவதி ஆகிவிடவில்லை. ஒப்பந்தம் இருக்கிறது. ஒப்பந்தத்தின் மீது பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டு வருகிறது. ஒப்பந்தம் உயிரோடு இருப்பதாக ஏற்கப்படுமானால் சரியான முறையில் அமல்படுத்தப்பட்டிருக்குமானால், பெற வேண்டிய தண்ணீரை நாம் பெறாமல் இருக்க முடியாது. அங்கு இருக்கின்ற அரசினுடைய பேச்சை நாம் கேட்டு, கோரிக்கையாக வைக்க வேண்டிய நிலைமை நிச்சயமாக அமைந் திருக்காது. காவிரியில் நாம் நம்முடைய உரிமையைத் தான் கேட்கிறோம். அந்த அரசு இந்தப் பிரச்சினைய இவ்வாறாக புரிந்துகொள்ளக் கூடிய அளவிற்கு, இந்த அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதையும், குறைந்த பட்சம் அந்தப் பயிர்களை இந்த ஆண்டு காப்பாற்றுவதற்காகவாவது 5 டி.எம்.சி. தண்ணீரைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு தீவிரமாக மேற்கொள்ளும் என்பதையும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஒப்பந்தத்தின் மீது மேற்கொண்டு உரிய பேச்சு வார்த்தை களை நடத்தி, நடவடிக்கைகளை மேற்கொள்ள மாண்புமிகு முதல்வர் அவர்கள் தீவிரமாக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். அதை நிச்சயமாக இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை நான் உறுதியாக சொல்லி, இந்த வாய்ப்பை எனக்கு வழங்கியதற்காக நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

## 3. அறிவிப்புகள்

### (அ) 1985-86 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகள், 1979—80 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அளித்தல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1985—86 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகள் அறிக்கையைப் [பேரவைக்கு அளிப்பதற்கு ஆளுநர் அவர்கள் 1986 ஆம் ஆண்டு, சனவரி திங்கள் 24 ஆம் நாள் வெள்ளிக் கிழமையைக் குறித்திருக்கிறார்கள்.

1979—80 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவைக்கு அளிப்பதற்கு ஆளுநர் அவர்கள் 1986 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 24 ஆம் நாள் வெள்ளிக் கிழமையைக் குறித்துள்ளார்கள்.

### (ஆ) கோவை. பாரதியார் பல்கலைக் கழக ஆட்சிக் குழு உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கோவை, பாரதியார் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவிற்கு (Senate) ஏழாவது சட்டமன்றப் பேரவையின். சார்பில் தேர்ந்தெடுக்கப்பெற்ற திருவாளர்கள் திருப்பூர் இரா.மணிமாறனு

மற்றும் கே. கல்லன் ஆகியோரின் பதவிக் காலம், 15–11–1984 அன்று ஏழாவது சட்டமன்றப் பேரவை கலைக்கப் பட்டதின் காரணமாக முடிவுற்றதால், அப்பல்கலைக் கழகம் தனது ஆட்சிக் குழுவில் 20–11–1986 வரை பணியாற்ற இப் பேரவை உறுப்பினர்களிலிருந்து இருவரை தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு கோரியுள்ளது. இரு உறுப்பினர்களைத் தீர்மானம் முன்மொழிவதன் மூலம் தேர்ந்தெடுக்கப் பெற வேண்டும்.

இதற்கான தீர்மானங்கள் 24–1–1986 முற்பகல் 11–00 மணிக்குள் செயலாளரிடம் கொடுக்கப்பட வேண்டும்.

### 4. அறிக்கை அளித்தல்
### உள்ளாட்சித்துறை அமைச்சரின் திருத்த அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 112 இன் கீழ் சட்டமன்றப் பேரவைக்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கை அளிப்பார்கள்.

* மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. எப். எம். இராசரத்தினம் அவர்கள் தன்னுடைய உடுக்குறியிட்ட வினா எண் 2870 இல் கீழ்க்கண்ட வினாவினை எழுப்பினார் :

(அ) குமரி மாவட்டத்தில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் (NREP), ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் (IRDP), நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் (RLEGP) ஆகியவைகளுக்கு 1984–85 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகை எவ்வளவு ?

(ஆ) நடப்பு ஆண்டுக்கு இதை அதிகப்படுத்தும் உத்தேசம் உள்ளதா ?

இவ் வினாவிற்கான துணை வினாக்களுக்கு 15–7–1985 அன்று விடையளிக்கும்பொழுது கீழ்க்காணும் பதிலும் என்னால் அளிக்கப்பட்டது.

'' தலைவர் அவர்களே, நகராட்சிகளுக்கு இந்தத் திட்டங்கள் பொருந்தாது. நகராட்சிகளுக்கு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ்தான் பணம் ஒதுக்கப்படும். இத் திட்டங்களின்கீழ் பேரூராட்சிகளுக்கு 10 சதவீதம் பணம் ஒதுக்கலாம் என்று இந்த ஆண்டு முடிவு செய்யப்பட்டிருக்கிறது,'' என்று விடையளிக்கப்பட்டது.

மேற்கண்ட பதிலுக்குப் பதிலாக கீழ்க்கண்ட திருத்திய பதிலை அளிக்க விரும்புகிறேன் :



'' தலைவர் அவர்களே, நகராட்சிகளுக்கு இந்தத் திட்டங்கள் பொருந்தாது. நகராட்சிகளுக்கு தன்னிறைவுத் திட்டத்தின் கீழ்தான் பணம் ஒதுக்கப்படும். இத் திட்டங்களின் கீழ் பேரூராட்சிகளுக்கு 15 சதவீதம் பணம் ஒதுக்கலாமென்று இந்த ஆண்டு முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு பணம் ஒதுக்கிய பிறகு அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.''

### 3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (இ) ஏழாவது சட்டமன்றத்தில் கொடுக்கப் பெற்ற உரிமை பிரச்சினை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 11–1–1986 அன்று அவையில் திரு. ரகுமான்கான் ஓர் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பிய போது, மாண்புமிகு முதல்வர் அவர்கள் மீது ஏழாவது சட்டமன்றத்தில் கொடுக்கப் பெற்ற ஒரு உரிமைப் பிரச்சினை உள்ளதாகக் குறிப்பிட்டார்கள். அம்மாதிரியான உரிமைப் பிரச்சினை எதுவும் ஏழாவது சட்டமன்றம் கலைக்கப்பட்ட போது நிலுவையில் இல்லை என்பதை அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, நான் அந்த உரிமைப் பிரச்சினையை உங்களிடத்திலே கொடுத்து கையெழுத்து வாங்கி வைத்து இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதுவும் இப்போது நிலுவையில் இல்லை. (Nothing is pending. Nothing was referred to the committee).
(குறுக்கீடு) நோட்டீஸ் கொடுத்துள்ளேன் என்றால் அசெம்பிளி புரோரோக் ஆகும்போது நோட்டீஸ்கள் எல்லாம் ஆட்டோமெடிக்காக லேப்ஸ் ஆகிவிடுகின்றன.

திரு. அ. ரகுமான்கான் : அப்படியானால் இப்போது கொடுக்கலாமா ? ஹைகோர்ட் தீர்ப்பு அப்படித்தானே இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்போது 25 வருடங்களாக உள்ளதை எல்லாம் இப்போது எடுத்துக் கொள்ள முடியுமா ? வேண்டுமானால் இதுபற்றி என் அறையில் வந்து கேளுங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : இங்கேயே கேட்கிறேன், அவைக்கும் தெரியட்டும் (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அன்றைக்கு வேறு ஒரு பிரச்சினை குறித்து பாயின்ட் ஆப் ஆர்டர் என்று கிளப்பினீர்கள். வாய்ப்புக் கொடுத்தேன். அப்போது சம்பந்தமில்லாத இதைச்

சொல்லிவிட்டுப் போய்விட்டீர்கள், பத்திரிகையிலேயும் போட்டு விட்டார்கள். (குறுக்கீடு). உண்மையான நிலை என்ன என்பதைத்தான் இப்போது நான் குறிப்பிட்டேன். (குறுக்கீடு) அதற்காக 1969 ஆம் ஆண்டிலிருந்து எடுத்தால் சௌந்தரபாண்டியன் விவகாரம் எல்லாம் எடுக்க வேண்டியிருக்கும். அவை எல்லாம் லேப்ஸ் ஆகிவிட்டன; லாப்ஸ் ஆகியவற்றை எல்லாம் எடுத்தால் சபையிலே இந்த வேலையைத்தான் பார்க்க வேண்டியிருக்கும்.

திரு. அ. ரகுமான்கான் : ஹைகோர்ட்டிலே தீர்ப்புக் கொடுத்து இருக்கிறார்களே......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சபை முடிந்து விட்டால் எல்லா நோட்டீஸ்களும் லேப்ஸ் ஆகிவிடும் என்று விதிகளிலே இருக்கிறது. O p orogation of the Assembly all nctices lapse. ஆகவே அமருங்கள். சிலவற்றை அவையிலே எழுப்புகிறார்கள் இங்கேயே டிஸ்அலோ பண்ணிவிடுகிறேன். அத்துடன் முடிகிறது. நோட்டீஸ் கொடுக்கப்பட்டு இருக்கிற நிலையில் உள்ளவையெல்லாம் சட்டசபை முடிந்தால் லேப்ஸ் ஆகிவிடும் என்று விதி இருக்கிறது. திரு. குழந்தைவேலு பிரச்சினை பிரிப்பரேஷன் ஆப் ரிப்போர்ட் ஸ்டேஜிலே இருந்தது. உங்கள் உறுப்பினர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். அமைச்சர் திரு. இராகவானந்தம் திரு. அழகர்சாமி மீது உரிமைப் பிரச்சினை கொடுத்தார். அது பெண்டிங்காக இருக்கிறது. என்குயரி நடந்து பெண்டிங்காக இருக்கிறது. இதிலே நோட்டீஸ் லேப்ஸ் ஆகிவிட்டது. (குறுக்கீடு).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நம்முடைய பேரவையைப் பொறுத்தவரையில் ஜீரோ ஹவர் என்பது கிடையாது. நேற்றைய தினம் திரு. ரகுமான் அவர்கள் எழுப்பிய ஒரு கேள்விக்கு நான் தகவல் அறிந்து பதில் அளிப்பதாகச் சொன்னேன். உச்ச நீதிமன்றத்திலே திரு. வெங்கடாசலம் பிள்ளையால் பஞ்சாயத்துத் தேர்தல் முன்னிட்டு செய்யப்பட்ட மேல் முறையீடு எண் 2485/82, 30–10–1985 அன்று வாபஸ் பெறப்பட்டு விட்டது. நம்முடைய அரசு அந்தச் சட்டத்தை ரிப்பீல் செய்ததை அங்கே அறிவித்ததன் காரணமாக அது வாபஸ் பெறப்பட்டது. இப்போது சுப்ரீம் கோர்ட்டிலே அந்த வழக்கு இல்லை.

திரு. அ. ரகுமான்கான் : சார் ஒரு முக்கியமான பிரச்சினை. சுப்ரீம் கோர்ட்டில் அந்தக் கேஸ் வாபசாகி விட்டதால் இட ஒதுக்கீடு......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்றைக்கு பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பினீர்கள். இன்றைக்கு அதற்குப் பதில் அளிக்கப்பட்டு விட்டது. அத்தோடு அந்த பிரச்சினையை முடித்துக் கொள்ளலாம்.



6. தகவல் கோரல் தொடர்ச்சி

(ஆ) பஞ்சாயத்துத் தேர்தல்கள் குறித்து.

திரு. என். எஸ். வி. சித்தன்: ஒரே ஒரு விளக்கம் பஞ்சாயத்துத் தேர்தல் சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கை அளிப்பதாகச் சொன்னார்கள்.

(முற்பகல் 10.20)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த நிலைமையை விளக்கிச் சொல்வது என்னுடைய கடமை என்று கருதி, இந்த அவையின் நேரத்தை எடுத்துக் கொள்வதற்குத் தாங்கள் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏற்கனவே 18 சதவீதம் ஆதி திராவிடர்களுக்கு என்றும், 15 சதவீதம் பெண்களுக்கு என்றும் இட ஒதுக்கீடு செய்வது என்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஒரு சட்டத்தை நிறைவேற்றினார்கள். அந்தச் சட்டமானது சென்னை உயர்நீதி மன்றத்திலே முதலிலே தடை விதிக்கப்பட்டு, விவாதிக்கப்பட்டு அது செல்லும் என்று தீர்ப்பு வழங்கப்பட்டது. அதன் பிறகு உச்ச நீதிமன்றத்திற்குப் போய் ஒருவர் வழக்கைத் தாக்கல் செய்தார். உச்ச நீதி மன்றத்தில், வழக்கைத் தாக்கல் செய்ததை யொட்டி, சென்னை உயர் நீதிமன்றத்தில், உச்ச நீதிமன்றத்தில் வழக்கிருக்கின்ற காரணத்தால் அது முடிகின்ற வரையில் இந்தத் தேர்தலை நடத்தக் கூடாது என்று சொல்லி இடைக் காலத் தடை ரிட் பெட்டிஷன் போட்டு வாங்கி வைத்திருந்தார்கள். இதன் பிறகு தேர்தல் நடத்துவது என்று அரசு முடிவெடுத்தது. அப்படி முடிவு செய்ததற்குப் பிறகு ஏற்கனவே செய்த அந்த ரிசர்வேஷன் சட்டத்தை ரிப்பீல் செய்து விட்டு, பழைய சட்டப்படி தேர்தலை நடத்துவது என்று நாம் முடிவு செய்து சட்டமன்றத்தில் சட்டத்தை நிறைவேற்றினோம். அப்படி நிறைவேற்றியதற்குப் பிறகு, நாம் சட்டத்தை நிறைவேற்றி விட்டோம், அந்த ரிசர்வேஷன் சட்டம் இப்பொழுது அமலில் இல்லை என்பதை டெல்லியிலுள்ள தமிழக அரசினுடைய, நம் அரசாங்கத்தின் பிரதிநிதியாக இருக்கின்ற வழக்கறிஞருக்குத் தெரிவிக்கப்பட்டு, அந்த வழக்கு அங்கே வந்தபொழுது, ஏற்கனவே இந்தச் சட்டத்தை நாம் ரிப்பீல் செய்து விட்டோம் என்று சொன்னவுடனே இந்த மனுவைப் போட்டவர்கள் தங்களுடைய வழக்கைத் திரும்பப் பெறுகிறோம், அரசாங்கம் இந்தச் சட்டத்தை வலியுறுத்தாமல் திரும்பப் பெற்றுவிட்ட காரணத்தால் தாங்கள் திரும்பப் பெறுவதாகச் சொல்லி திரும்பப் பெற்று விட்டார்கள். அதன் பிறகு நாம் தேர்தலை நடத்துவதற்கு ஆயத்தமாக இருக்கிறோம்.

இப்பொழுது மீண்டும் அந்த சதவீதத்தை வைத்துக்கொண்டு, அந்த சதவீதத்தின்படி ஒதுக்கீடு செய்யலாமா என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்டதாக பத்திரிகையிலே நான் படித்தேன். அது உண்மையாகவும் இருக்கும் என்று நான் நம்புகிறேன். உண்மையில்லாவிட்டால், அப்படி அவர் சொன்னால் நான் திருத்திக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

(குறுக்கீடு). உண்மை என்றுதான் மாண்புமிகு உறுப்பினர் திரு
ரகுமான்கான் அவர்கள் சொல்கிறார்கள். இப்பொழுது மீண்டும்
தேர்தலை 18 சதவீதம், 15 சதவீதம் என்று நாம் ஒதுக்கீடு
செய்வது என்று சொன்னால், இந்தத் தேர்தலைத் தள்ளி வைப்ப
தற்காகச் செய்யப்படுகின்ற தந்திரமாக அது இருக்குமே
தவிர, தேர்தல் நடத்துவதற்குண்டான ஒரு உதவியாக இருக்கு
மென்று நான் நம்பவில்லை. (குறுக்கீடு) பத்திரிகையில் படித்த
செய்திக்கும், கேள்விப்பட்ட செய்திக்கும்தான் நான் பதில்
சொல்கிறேன். இதிலே மோட்டிவேஷன் எதுவும் கிடையாது.
அந்த எண்ணத்தில் சொல்லவில்லை. ஆனால் இப்பொழுது
18 சதவீதம், 15 சதவீதம் என்று சொன்னால் மீண்டும் இப்
பொழுது போடப்பட்டிருக்கின்ற சட்டத்தைத் திரும்பப் பெற்று,
மீண்டும் அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றி,
மீண்டும் அந்தச் சட்டப்படி தேர்தலை நடத்துகிறோம் என்று
நோட்டிபிகேஷன் போடுவது என்று சொன்னால், நிச்சயமாக
அதற்கு ஆறேழு, அல்லதுஎட்டு ஒன்பது மாதங்கள் ஆகும். இந்தத்
தேர்தலைத் தள்ளி வைப்பதற்குத் தான் அந்த முறை பயன்
படுமே தவிர, உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டுமென்று
விரும்புகின்றவர்கள், இந்த யோசனையையே சொல்லியிருக்கக்
கூடாது. இந்த அவையிலே இந்தப் பிரச்சினையையே கிளப்பி
யிருக்கவே கூடாது, அப்படிக் கிளப்பியது சரியல்ல என்றுதான்
நான் கருதுகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : ஒரு தன்னிலை விளக்கம் சொல்ல
விரும்புகிறேன்.

Mr. SPEAKER : There shall be no discus ion on such a statement
made by a Minister. Let us follow some rules.

திரு. அ. ரகுமான்கான் : நான் கேட்பது பழைய சட்டப்
படி தேர்தலா அல்லது புதிய சட்டப்படி தேர்தலா என்றுதான்.
(கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இந்த உள்ளாட்சி மன்றத் தேர்தலை
நடத்துவதைப் பொறுத்து இருக்கிற விளைவுகளை, நிலை
மைகளைப் பற்றி (குறுக்கீடு) மாண்புமிகு உள்ளாட்சித் துறை
அமைச்சர் அவர்கள் தெளிவாக விளக்கி இருக்கிறார்கள். ஏற்
கனவே, பழைய சட்டம் இருந்தது. அதற்குப் புது சட்டம்
கொண்டு வந்தோம். புது சட்டத்தை எதிர்த்து வழக்கு தொடுத்
தார்கள். உயர்நீதிமன்றம் நாம் இயற்றிய சட்டம் செல்லுபடி
யாகும் என்று சொல்லிவிட்டார்கள். அதற்குப் பிறகு அதை
எதிர்த்து சுப்ரீம் கோர்ட் போனார்கள். அதற்குப் பிறகு புதிய
சட்டத்தை நாம் மாற்றி, பழைய சட்டத்தின் அடிப்படையில்
தேர்தலை விரைவாக நடத்த வேண்டும், காலதாமதம் ஏற்படுத்
தக் கூடாது என்ற அடிப்படையில் இங்கே கொண்டு வந்து நிறை



வேற்றினோம். அப்படிச் சட்டம் நிறைவேற்றியதற்குப் பிறகு,
புதிய சட்டத்தை மாற்றியாகிவிட்டது, பழைய சட்டத்தை நடை
முறைப்படுத்துவோம் என்ற குறிப்பையும் உச்ச நீதிமன்றத்திற்கு
அனுப்பிவிட்டோம். அனுப்பியதற்குப் பிறகு, பழைய சட்டப்
படிதான் தேர்தல் நடத்த வேண்டும், புதிய சட்டப்படி தேர்தல்
நடத்தக் கூடாது என்பதால், வழக்கைத் தொடுத்தவர்கள், அந்த
வழக்கை வாபஸ் வாங்கிக் கொண்டார்கள். இப்பொழுது சட்ட
மாக இருப்பது பழைய சட்டம். புதிய சட்டத்தை நீக்கியாகி
விட்டது. புதிய சட்டத்தை இந்த அவை நீக்கிவிட்டு, பழைய
சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரவேண்டுமென்று சில பல
திருத்தங்களோடு கொண்டு வரப்பட்டது. இப்பொழுது நடை
பெற இருக்கிற தேர்தல் அந்தச் சட்டத்தின்படிதான்—பழைய
சட்டப்படிதான் நடைபெறும்.

திரு. அ. ரகுமான்கான் : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய அனுமதி
பெறாமல் யார் பேசினாலும் அவைக் குறிப்பில் ஏறாது.
(குறுக்கீடுகள்.)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, பிப்ரவரி 23 ஆம் தேதி தேர்தல்
நடைபெற வேண்டுமென்பதுதான் இந்த அரசினுடைய நோக்
கம் ; அந்த வழியில்தான் நடைபெறும். (குறுக்கீடுகள்).
மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் தெளிவு
பட எடுத்துச் சொல்லியுள்ளார்கள். (குறுக்கீடுகள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நமக்கு ஜீரோ அவர்
என்பதே கிடையாது. இருந்தாலும் முக்கிய பிரச்சினைகள் என்
றால், முன் வரிசையில் உள்ள கட்சித் தலைவர்கள் கேட்பதற்கு
அனுமதிப்பது தான் மரபாக உள்ளது. இன்றைக்கு இதோடு
போதும். திடீர், திடீரென்று ஒவ்வொருவரும் ஒவ்வொரு பிரச்
சினை பற்றி எழுப்ப முற்பட வேண்டாம். (குறுக்கீடு.)

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : அர்பன்லாண்ட்
டாக்சுக்கு ஒரு அமென்ட்மெண்ட் கொடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி ஒரு சட்டப்
பிரச்னைபற்றி, ஜீரோ அவரில் எழுப்பினால், யார் பதில் சொல்ல
முடியும்? என் அறைக்கு வந்து சொல்லுங்கள். முறையாக
இருந்தால், அதை எப்படி எழுப்புவது என்பது பற்றி பரிசீலிக்க
லாம்.

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்றப்பெற்றது.

## 5. கவன ஈர்ப்புகள்

### (அ) சேலம் உருக்காலையைச் சுற்றியுள்ள புறம்போக்கு நிலங்களை நிலமற்றோருக்கு ஒப்படை செய்வது குறித்து.

(முற்பகல் 10.30)

ரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, '' சேலம் உருக்காலைத் திட்டத்தின்கீழ் நிலம் ஆர்
ஜிதம் செய்யப்பட்டபோது விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டும்,
ஓமலூர் வட்டத்திலுள்ள அழகுசமுத்திரம், கருக்கல்வாடி, தெச
விளக்கு ஆகிய கிராமங்களிலுள்ள ஆதி திராவிட மக்களுக்கு
வீட்டு மனைப்பட்டா மறுக்கப்படுவதால் அவர்களுக்கு ஏற்பட்
டுள்ள பாதிப்பு குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம்
வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்கு
கொண்டுவருகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம்
ஓமலூர் வட்டம், சேலம் உருக்காலைத் திட்டத்திற்காக நிலம்
கையகப்படுத்த உத்தேசித்துள்ள அழகு சமுத்திரம், கருக்கல்
வாடி, தெசவிளக்கு ஆகிய மூன்று கிராமங்களிலும், மற்றும்
சேலம் உருக்காலைத் திட்டத்திலிருந்து 5 கல் சுற்றளவிலுள்ள 43
கிராமங்களிலும், அரசு புறம்போக்கு நிலங்களை ஒப்படை
செய்வதற்கு அரசாணை (நிலை) எண். 1300, வருவாய், நாள்
26–6–1969-இல் தடை விதிக்கப்பட்டிருந்தது. ஆனால், அரசா
ணை (நிலை) எண். 1200, வருவாய், நாள் 7–7–1983–இல், சேலம்
உருக்காலைத் திட்டத்திலிருந்து ஐந்து கல் சுற்றளவிலுள்ள மேற்
குறிப்பிட்ட 43 கிராமங்களில் அரசு புறம்போக்கு நிலங்கள்
ஒப்படை செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை ஆணை
நீக்கப்பட்டதோடு, மேற்படி நிலங்களை சில நிபந்தனைகளுக்கு
உட்படுத்தி நில ஒப்படை செய்யுமாறு ஆணைப் பிறப்பிக்கப்
பட்டுள்ளது. ஆனால், நிலம் கையகப்படுத்த உத்தேசித்துள்ள
அழகு சமுத்திரம், கருக்கல்வாடி, தெசவிளக்கு ஆகிய மூன்று
கிராமங்களிலும் புறம்போக்கு நிலங்களை ஒப்படை செய்
வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையாணை இன்னும் நீக்கம் செய்
யப்படாததாலும், சேலம் உருக்காலைத் திட்டத்திற்கு நிலம் கை
யகப்படுத்துவதற்கு அறிவிக்கை செய்துள்ள 55 கிராமங்களில்
இம்மூன்று கிராமங்களும் அடங்குவதாலும், மேற்படி கிராமங்
களிலுள்ள தகுதிவாய்ந்த நிலமற்ற ஏழைகளுக்கு (ஆதி திராவிட
மக்கள் உட்பட) வீட்டுமனை மற்றும் நில ஒப்படை வழங்க
இயலவில்லை.





திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மொத்தம் 43 கிராமங்களுக்கு அந்தத்
தடை நீக்கப்பட்டுள்ளதாக மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்
தன்னுடைய பதிலிலே தெரிவித்தார்கள். சேலம் உருக்காலைத்
திட்டத்தைப் பொறுத்தவரை, ஏற்கெனவே கையகப்படுத்தப்பட்ட
நிலத்தையே முழுமையாக இன்னும் பயன்படுத்தாத சூழ்நிலை
இருந்து வருகிறது. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் மேலும்
நிலத்தை தடை என்ற பெயரால் முடக்கி வைத்திருப்பது சரி
யல்ல. காரணம் இந்த மூன்று கிராமங்களைப் பொறுத்தவரை
யில் ஏழை எளிய மக்கள், விவசாயக் கூலிகள், ஆதி திராவிட
மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு வீட்டுமனைப்
பட்டா கொடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிற காரணத்தால்,
மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் சேலம் ஸ்டீல் அதாரிட்டி
யோடு தொடர்பு கொண்டு, இந்த மூன்று கிராமங்களுக்கும்
இருக்கிற தடையை நீக்க முயற்சி மேற்கொள்வார்களா என்று
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத்
தலைவரவர்களே, இன்னும் 55 கிராமங்களில் இந்த தடை இருந்து
வருகிறது. அந்த 55 கிராமங்களில் இந்த மூன்று கிராமங்களும்
சேர்ந்துள்ளன. சேலம் உருக்காலைத் திட்டத்தை மேலும் விரிவு
படுத்த அந்தப் பகுதியிலுள்ள நிலம் தேவைப்படுகிறது என்று
சொல்லி, அந்த இடம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்.
சேலம் உருக்காலை நிறுவனம் அந்த இடம் தேவையில்லை என்று
சொன்னால் நாம் அந்த இடத்தை மற்றவர்களுக்கு ஒப்படை
செய்யலாம். ஆகவே, அவர்களுடைய கருத்தை அறிந்துதான்
இதைச் செய்ய வேண்டியிருக்கிறது. அந்தக் கிராமங்களிலுள்ள
மக்கள் சேலம் உருக்காலை நிறுவனத்தோடு தொடர்பு கொண்டு;
அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் அவர்களைத்
தொடர்பு கொண்டு, அந்த நிறுவனத்திற்குத் தேவையில்லை
என்று சொன்னால், நம்முடைய கைக்கு அந்த நிலம் வந்த
பின்னால், அந்தக் கிராம மக்களுக்கு ஒப்படை செய்ய முயற்சி
செய்யலாம்.

திரு. செ. செம்மலை : துணைத் தலைவர் அவர்களே, இப்
போது என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.இ.ஜி.பி. போன்ற திட்டங்களின்
கீழ் வீடுகள் கட்டிக்கொடுக்கப்படுகின்றன. இந்த மூன்று கிரா
மங்களைப் பொறுத்த வரையில் தடை இருக்கின்ற காரணத்தால்
வீட்டுமனைப் பட்டாவும் வழங்க முடியவில்லை ; வீடு
கட்டிக்கொடுக்கவும் வழியில்லை. எனவே, தடையை முழுமை
யாக நீக்குவதற்கு சிறிது தாமதம் ஏற்படுவதாக இருந்தாலும்
இந்தத் தடையைப் பொறுத்தவரையில் அந்த மக்கள் ஏற்கெனவே
குடிசைகள் கட்டி குடியிருக்கின்ற அடிமனைக்காவது பட்டா
வழங்க, விதிமுறைகள் ஏதாவது தடையாக இருந்தால், அந்த
விதிகளைத் தளர்த்தி, பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்
படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, சேலம் உருக்காலை நிறுவனத்
தினர் இந்த இடம் வேண்டும் என்று கேட்டு இருந்ததன்
காரணத்தால் புறம்போக்கு நிலங்களை ஒப்படை செய்வதற்குத்
தடை விதிக்கவேண்டும் என்று கேட்டதன் காரணத்தால் தான்
அவ்வாறு முடிவெடுக்கப்பட்டது. அவர்கள் அந்த நிலம் தேவை
யில்லை என்று சொல்கிற சூழ்நிலை ஏற்பட்டால்தான் அதுவே
நாம் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கக்கூடும். தற்காலிகமாக
சிலபல நிலைமைகளில் அந்த நிலங்களை நாம் ஒப்படை செய்து
விட்டால் பிறகு மறுபடியும் எதிர்காலத்தில் அவர்கள் பாதிக்கப்
படும் சூழ்நிலை ஏற்பட்டால், அந்த கிராம மக்கள் பெரும் தொல்
லைக்கு ஆளாவார்கள். ஆகவேதான் நிலைமைகளைச் சீர்
படுத்தி அது சுதந்திரமாக இயங்குகிறது என்ற சூழ்நிலை ஏற்படு
மானால், அப்படி ஏற்படுவதற்கான வழிவகை இருந்தால், நிலம்
ஒப்படை செய்யப்படுகின்ற முயற்சியில் நாம் ஈடுபடலாம்.

(ஆ) கரும்புக்குரிய விலையை அரசு நிர்ணயிப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள்
கு. ரமணி, வி. பி. சிந்தன், ஜே. ஹேமச்சந்திரன், கோ. வீரய்யன்,
எம். செல்லமுத்து, கு. சுப்பராயன், பொ. உத்திராபதி, மா.
மணிமாறன், டி. தீர்த்தகிரி கவுண்டர், ஆர். தியாகராசன், ந.
சிவஞானம், பரிதி இளம்வழுதி, ஜி. ஆனந்தகிருஷ்ணா, ஆர்.
ரெங்கசாமி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத்
தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு
வேளாண்மைத்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக்கொண்டு
வருவார்.

திரு. கோ. வீரய்யன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்
களே, " கரும்புக்கு உரிய விலை கிடைக்காததினால் விவசாயிகள்
கரும்பு வெட்டுவதை நிறுத்தி இருப்பதால் ஏற்பட்டிருக்கும்
நிலைமை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த
நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின்
கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மைய அரசு 1985–86-ஆம் பருவத்திற்கு 8.5
சத விகிதம் சர்க்கரை கட்டுமானமும் அதற்கு கீழும் உள்ள கரும்
பிற்கு அடிப்படை விலை டன் ஒன்றுக்கு ரூ. 165 என்றும்,
1986–87ஆம் பருவத்திற்கு ரூ. 170 என்றும் அறிவித்துள்ளது.
இந்த விலையை சர்க்கரை ஆலைகள் விவசாயிகளுக்கு கொடுக்க
ஏதுவாக வெளி சர்க்கரை விலையை கிலோ ஒன்றுக்கு ரூ. 4.40–
லிருந்து ரூ. 4.80 ஆக உயர்த்தியுள்ளது. மேலும் வெளி மார்க்கெட்
சர்க்கரை விற்பனை கோட்டாவை 35 சதவிகிதத்திலிருந்து 45
சதவீதமாக மைய அரசு உயர்த்தியுள்ளது.



2. மைய அரசு நிர்ணயித்துள்ள விலைக்கு மேல் கொடுக்க
இயலாது என்றும், மாநில அரசு கூடுதலாக விலை நிர்ணயிப்பதாக
இருப்பின், ரூ. 175-க்கு மேல் நிர்ணயிக்கக்கூடாது என்றும், தென்
இந்திய சர்க்கரை ஆலைகள் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.
இருப்பினும் மாநில அரசு கரும்பு விவசாயிகளின் நலன் கருதி
1985–86 ஆம் பருவத்திற்கு டன் ஒன்றுக்கு ரூ. 185 வீதம் கொடுக்
குமாறு சர்க்கரை ஆலைகளைக் கேட்டுக்கொண்டுள்ளது. சென்ற
ஆண்டு மாநில அரசு அறிவித்த விலையை எதிர்த்து தனியார்
சர்க்கரை ஆலைகள் உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்
துள்ளன. அதிக விலை அறிவித்தால், அரசுதான் அதை மானியமாக
வழங்கவேண்டிவரும். அரசின் நிதிநிலைமைக்கு அது ஒவ்வாத
சூழ்நிலை உள்ளது.

3. அரசு அறிவித்த விலை போதாது என்று கரும்பு விவசாயி
கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அரசு அதை பரிசீலித்து
வருகிறது.

திரு. கோ. வீரய்யன் : பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்
டார்கள் சென்ற ஆண்டு 140 ரூபாய் என்று மத்தியப் பேரரசு
அறிவித்து இருந்தது. இந்த ஆண்டில் 165 ரூபாய் என்று விலை
அறிவித்து இருக்கின்றது தென்னிந்திய சர்க்கரை ஆலை முதலாளி
கள் சர்க்கரைக்கு மத்திய அரசு அறிவித்த விலைக்கு மேல்
கொடுக்க இயலாது என்று கூறிவிட்டதாக அமைச்சர் அவர்கள்
பதிலில் குறிப்பிட்டார்கள். ஆனால் சென்ற ஆண்டில் 185 ரூபாய்
என்று தமிழகத்தில் அரசு அறிவித்து, ஆலை முதலாளிகளைக்
கொடுக்கச் செய்தது. ஆனால் இந்த ஆண்டு கன்ட்ரோல் சர்க்கரை
விலை உயர்த்தப்பட்டும் வெளி மார்க்கட் விலை உயர்த்தப்பட்டும்
அதே 185 ரூபாய்தான் என்று அரசு நிர்ணயித்துள்ளது. அப்படி
அறிவித்திருந்தாலும், தென்னிந்திய சர்க்கரை ஆலை முதலாளி
கள் கொடுப்பதற்கு மறுத்து வழக்கு தொடர்ந்துள்ளதாகவும்
குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

அண்டை மாநிலங்களான கர்நாடகா மாநிலத்தில் 210
ரூபாய் என்றும், ஆந்திராவில் 240 ரூபாய் என்றும் அறிவிக்கப்
பட்டு இருக்கின்றது. எனவே தமிழகத்தில் மட்டும் 185 ரூபாய்
என்று அறிவிக்கப்பட்டிருப்பது போதுமானதல்ல. அது கட்டுப்
படியாகாது. சர்க்கரையின் விலை உயர்த்தப்பட்டதற்குப் பிறகு
உரிய அளவுக்கு விவசாயிகளுக்கும் உயர்த்தவில்லை என்றால்
சரியாக இருக்காது.......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் கேள்வியைச் சுருக்கமாகக் கேட்க வேண்டும்.

திரு. கோ. வீரய்யன் : பேரவைத் துணைத்தலைவர் அவர்
களே, இப்படிப்பட்ட சூழ்நிலையில் கரும்பே வெட்டுவதில்லை
என்று, குறிப்பாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்

கழகத்தைச் சேர்ந்த அருமை நண்பர் திரு. அரூர்முத்து அவர்கள் தலைமையில் இயங்குகின்ற கரும்பு விவசாயிகள் சங்கம் 5—1—1986 அன்று, கரும்பு வெட்டுவதில்லை என்று அறிவித்திருக்கிறார்கள். இப்படி பல இடங்களில் கரும்பை வெட்டி சர்க்கரை ஆலைக்கு அனுப்புவது நிறுத்தப்பட்டிருக்கின்றது. இதன்விளைவாகச் சில சிரமங்கள் ஏற்பட்டிருக்கின்றன. குறிப்பாக ....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தயவுசெய்து கேள்வியைச் சுருக்கமாகக் கேட்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கோ. வீரய்யன் : பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, நான் கேள்விதான் கேட்கிறேன். நேற்றையதினம் எனக்கு வந்த தந்தியின்படி 43 விவசாயிகள் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். வடபாதி மங்கலம் ஆறுமுகம் சர்க்கரை ஆலையைச் சேர்ந்த 27 விவசாயிகள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். எனவே உடனடியாக கைதுசெய்யப்பட்ட அந்த விவசாயிகளை விடுதலை செய்து அவர்கள் மீது போடப்பட்டிருக்கின்ற வழக்கினை வாபஸ் பெற்று, சர்க்கரை ஆலை நிர்வாகத்தினர் கோர்ட்டுக்குப் போவதைத் தவிர்க்கக்கூடிய முறையில் ஆலை நிர்வாகிகள் சர்க்கரை விலையினை விரைவில் நிர்ணயிக்கின்ற அளவுக்கு விவசாயிகளையும் அழைத்து வைத்து பேசுகின்ற வகையில் ஒரு முத்தரப்பு பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காண வேண்டும். விலையை அறிவிக்காவிட்டால் கூட ஒரு முத்தரப்பு பேச்சுவார்த்தைக்கான தேதியை அறிவிக்க....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் கேள்வியைச் சுருக்கமாகக் கேட்க வேண்டும். நீண்ட விளக்கம் தேவையில்லை.

(முற்பகல் 10.40)

திரு. கோ. வீரய்யன் : துணைத் தலைவர் அவர்களே, முத்தரப்பு பேச்சு வார்த்தை நடத்துவதற்கான தேதியை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, முத்தரப்பு பேச்சு வார்த்தைகளில் எந்தெந்த கருத்துக்களைச் சொல்ல வேண்டுமோ அந்தக் கருத்துக்களையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கேயே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்த அரசைப் பொறுத்த வரையில் ஆலை முதலாளிகள் சொல்லக்கூடிய கருத்தைப் பற்றிக் கருதவில்லை. விவசாயிகளுடைய நிலையைக் கருத்தில் கொண்டுதான் உரிய விலை கொடுக்க வேண்டும் என்று ஏற்பாடு செய்துக்கொண்டிருக்கிறோம். அந்த அளவில்தான் அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,





திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் விவசாயிகள் கரும்புக்கு குவிண்டாலுக்கு 300 ரூபாய் கேட்டு போராடி வருகிறார்கள். ஆனால் மற்ற மாநிலங்களில், உத்திரப்பிரதேசத்தில் 265, மகாராஷ்டிராவில் 255, கர்நாடகத்தில் 240, ஆந்திராவில் 280 என்று இப்படி மற்ற மாநிலங்களில் கரும்புக்கு விவசாயிகளுக்கு விலை உயர்த்திக் கொடுத்திருக்கும்போது, தமிழ்நாட்டில் ஏன் கொடுக்கக்கூடாது? தமிழக விவசாயிகளும் அதே அளவில் தானே உற்பத்திச் செலவை செய்கிறார்கள். நான் கேட்டுக் கொள்வது எல்லாம், இப்படி போராடக் கூடிய அளவுக்கு ஏன் நிலைமையை தள்ளி போடுகிறீர்கள்? நேற்றைக்கு முன் தினம் கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இது குறித்து இனிப்பாக செய்தி வழங்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் ஒன்றும் சொல்லவில்லை. அதற்கிடையில் தஞ்சை மாவட்டத்தில் உள்ள அண்ணா சர்க்கரை ஆலை விவசாயிகளையும், வடபாதிமங்கலம் ஆறுமுகம் சர்க்கரை ஆலை விவசாயிகளையும் குண்டர்களின் சட்டத்தின் கீழ் 7 (ஏ) 1(ஏ) பிரிவில் கைது செய்திருக்கிறார்கள்.

ஆகவே, விவசாயிகளையும் ஆலை முதலாளிகளையும் கூட்டி அரசு ஒரு முத்தரப்பு மாநாடு நடத்தி இதற்கு ஒரு முடிவு காண வேண்டும். மற்ற மாநிலங்களில் உள்ள அளவுக்கு கொடுக்காவிட்டாலும் கூட, தமிழகத்தில் உள்ள விவசாயிகள் கேட்கும் தொகையில் அவர்கள் பிரச்சினையை தீர்க்கக் கூடிய அளவிற்காவது விலை வைத்துக் கொடுக்க துரிதமாக முத்தரப்பு மாநாடு நடத்துவதற்கான தேதியினை அறிவிப்பார்களா, அத்தோடு அந்த விவசாயிகளையும் விடுதலை செய்ய அமைச்சர் அவர்கள் அறிவிப்புச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, விவசாய பெருமக்கள் தெரிவிக்க வேண்டிய கருத்துக்களை அரசிடத்திலே தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல அரூர் முத்து அவர்களும் எங்களிடத்திலே தெரிவித்திருக்கிறார்கள். அவர், முதலமைச்சர் அவர்களையும் இது குறித்து சந்தித்து பேச இருக்கிறார்கள். விவசாய பெருமக்களின் கருத்து என்ன என்பதை நாம் தெளிவாக புரிந்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்களும் அவர்களுடைய கருத்துக்களை இங்கே தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். தென்னிந்திய ஆலைகளின் சங்கத்தின் சார்பாகவும் சொல்ல வேண்டிய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள்.

ஆக, ஒரு முத்தரப்பு மாநாடு நடத்தினால் அதன் மூலம் என்ன பயன் பெறமுடியுமோ, அந்த பயனை, அந்தக் கருத்துக்களை அரசு அறிந்திருக்கிறது. இனி முடிவு எடுக்க வேண்டிய நடவடிக்கைதான் இருக்கிறது. அது அரசின் கையிலேதான் இருக்கிறது. அந்த வகையிலேதான் அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. எப்பொழுதுமே விவசாயிகளை தண்டிக்க வேண்டும், அவர்களை வாட்டமுறச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் இந்த அரசுக்கு எந்தக் காலத்திலும் இருந்தது இல்லை, அது பற்றிய உரிய நடவடிக்கையையும் அரசு எடுக்கும்.

திரு. மா. மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, கரும்பு விவசாயிகளைப் பொறுத்தவரையில் இந்திய துணைக் கண்டத்தில் இருக்கிற, மற்ற மாநிலங்களைவிட தமிழகத்தில் தான் விலை குறைவாக இருக்கிறது என்ற காரணத்தால், அதிக விலை தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். கோரிக்கை வைத்திருக்கிறார்கள் ; விவாதித்துக் கொண்டிருக்கி றார்கள். என்றாலும் கூட, பேச்சு வார்த்தைகள்தான் நடந்து கொண்டிருக்கிறதே தவிர, பரிகாரம் காணவில்லை. அமைச்சர் அவர்கள் பற்றோடும், பாசத்தோடும், கனிவோடும் 'கவனிக் கப்படும்' என்று சொல்லுகிறார்கள். ஆனால், கவனிக்கப்படுவ தில்லை. இனிமேலாவது தனியாருடைய கூட்டுறவு சங்கங்களை காரணம் காட்டாமல், பொருளாதார ரீதியாக பெரிதும் துன் பப்படும் விவசாயிகளின் கஷ்டத்தை போக்க, அப்படி அரசு சொல் லுகின்ற விலைக்கு கட்டுப்படியாகாது என்று சொல்லும் தனி யார் ஆலைகளை, அரசே எடுத்து தேசிய மயமாக்கியாவது இந் தப் பிரச்னையை தீர்க்க முன் வருவார்களா ? அத்தோடு பாதிக் கப்பட்ட விவசாயிகளை, விடுதலை செய்யவும், விலை குறித்து அவர்களுக்கு ஒரு பரிகாரம் காணவும் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, கனிவோடும் பாசத்தோடும் சொல்வதோடு மட்டும் நின்று விடவில்லை. கடந்த ஆண்டு மத்திய அரசு அறிவித்ததை விட அதிகமாக விலை வைத்து கொடுத்து, விவசாய பெருமக்களே எதிர்பார்த்திருக்க் முடியாத வகையில் விலை கொடுத்திருக்கி றோம். இந்த ஆண்டும் அவ்வாறே அளிக்கப்பட வேண்டும் என்று அரசு விரும்புகிறது என்ற இனிப்பான செய்தியை மட்டும் தெரி வித்துக் கொள்கிறேன். அது எவ்வளவு என்பதை அரசு முடிவு செய்யும்.

திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஒரு டன் கரும்பு உற்பத்திக்கு ஆகின்ற செலவு கிட்டத்தட்ட 175 ரூபாய்க்கு வருகிறது. 8.5 டன் கொண்ட கரும்புக்கு ஒரு மூட்டை சர்க்கரை என்றால் அந்த ஒரு மூட்டை சர்க்கரையின் விலை 520 ரூபாய்க்கு வருகிறது. மேற்கொண் டும், மொலாசஸ் போன்ற அதன் கழிவு பொருள்களி லிருந்தும் லாபம் கிடைக்கும். அந்த நிலையில் பார்க்கிற போது 700 ரூபாய் ஒரு மூட்டைக்கு வருகிறது. எங்களுக்கு அதில் பாதியையாவது உற்பத்திச் செலவாகக் கொடுக்கலாம். அதைக் கொடுப்பதற்கு அரசு முயற்சி எடுக்க வேண்டும். இப்போது சில விவசாயிகள் கரும்பு வெட்டியிருக்கிறார்கள். ஒரு சிலர் வெட்டக் கூடாது என்று தடுக்கிறார்கள். ஆலை முத லாளிகள் சொல்லும் போது, இதற்கு நாங்கள் பொறுப்பாளி இல்லை. அரசு விலையை அறிவிக்காமல் இருக்கிறது. அரசு விலையை அறிவித்து விட்டால் அவர்கள் சொல்கிற விலையைக் கொடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். ஆகவே, இந்தப் பிரச்னைக்கு அரசு தான் காரணம் என்று மக்கள் நினைப்பதற்கு வாய்ப்பு இருப்பதால்



அரசு விலையை உடனடியாக அறிவிக்க வேண்டும். கரும்பு விவ சாயிகள் அதிக பணம் செலவழித்து கரும்பை உற்பத்தி செய் கிறார்கள். 520 ரூபாயில் பாதியையாவது அதாவது 250 ரூபா யையாவது நீங்கள் கொடுக்கலாம். மீதியிருப்பதை ஆலை முத லாளிகளும், அரசும் பங்குபிரித்துக் கொள்ளலாம். மொலாசஸ் என்று வருகிறபோது அதில் கிடைக்கிற கிட்டத்தட்ட 300 கோடி ரூபாயை அரசாங்கம் எடுத்துக் கொள்ளட்டும். போன வருடம் ட்ரான்ஸ்போர்ட் சார்ஜ் கொடுத்தீர்கள். இந்த வருடம் அந்த சார்ஜும் கொடுக்கப்படவில்லை. அதைப்போல போனஸ் குறித்தும் சொல்லவில்லை. ஆகவே, விவசாயிகளுக்கு 250 ரூபா யாவது கொடுக்க வேண்டும். அப்படி கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, அரசு நிர்ணயிக்கிற விலையை நாங்கள் கொடுத்து விடுகிறோம். அரசு குறைத்து நிர்ணயிக்கிறார்கள் என்று ஆலை அதிபர்கள் சொல்லுவதாக உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிறார் கள். அரசு நிர்ணயிக்கக்கூடிய விலையை, அல்லது அரசு விரும் பக்கூடிய விலையை அவர்கள் கொடுப்பதாக ஒப்புக்கொண்டால் நிச்சயமாக பிரச்னை வராது. அரசு அதிலே மிக்க மகிழ்ச்சி அடையும். ஆனால் பல தனியார் ஆலைகள் நீதிமன்றங்களுக்கு செல்கிற அளவிற்கு நிலைமைகள் ஏற்பட்டதால்தான் இதிலே சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. இந்த விலையை மத்திய அரசு நிர்ண யிக்கிறது. சர்க்கரையின் விலைவாசியைப் பொறுத்த வரையில் அது மாநில அரசினுடைய கட்டுப்பாட்டில் இல்லை. ஆகவே, இருக்கிற நிலைமைகளை எல்லாம் கணக்கிலே கொண்டுதான் நாங்கள் நல்ல முடிவை செய்யவிருக்கிறோம்.

4. அறிக்கை அளித்தல்—(தொடர்ச்சி).

(ஆ) அரசு உறுதிமொழிக் குழு.

திரு. சு. பாலன் : துணைத் தலைவர் அவர்களே, அரசு உறுதி மொழிக் குழுவின் முதலாவது (எட்டாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை இந்த அவைக்கு அளிக்கிறேன்.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) சென்னை குதிரைப் பந்தயச் சங்கம் (நிறுவனத்தை கையகப் படுத்துதலும் உரிமை மாற்றம் செய்தலும்) சட்ட முன் வடிவு 1986.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

"1986 ஆம் ஆண்டு சென்னை குதிரைப் பந்தயச் சங்கம் (நிறுவனத்தை கையகப்படுத்துதலும் உரிமை மாற்றம் செய்த லும்) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாட்டுடைமை ஆக்குவதை எதிர்ப்பது ஒரு நாணய மான அரசியல் கட்சிக்கு ஏற்றதல்ல. ஆனால், நாட்டுடைமை யாக எதை ஆக்குகிறீர்கள் என்றால் ஒரு நச்சுத் தொழிலை நாட்டுடைமையாக ஆக்குகிறீர்கள். நல்ல தொழிலை எல்லாம் விட்டுவிட்டு இந்த நச்சுத் தொழிலை, சமுதாயத்திலே ஒரு பிரி வினரை பிச்சைக்காரர்களாக, ஓட்டாண்டிகளாக ஆக்குகிற தொழிலைத்தான் நாட்டுடைமை ஆக்குகிறீர்கள். ஆகவேதான் எங்களுடைய ஆட்சிக் காலத்தில் கலைஞர் அவர்கள் இந்த ரேசையே ஒழித்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அறிமுக நிலையில் விரிவாகப் பேச முடியாது. ஆய்வு நிலையில் விரிவாகப் பேசலாம். இப்போது நமது சட்டமன்ற விதிகளிலும், பாராளுமன்றத்திலும் இருக்கிற முறைப்படி Whether the introduction of the Bill is Ultra Vires and unconstitutional என்பதைத் தான் அறிமுக நிலையில் சொல்ல முடியும். ஆகவே, சுருக்கமாக முடித்து விடுங்கள்.

(முற்பகல் 10.50)

திரு. ப. பொன்னுரங்கம் : எனவே, கலைஞர் ஆட்சிக் காலத்தில் சட்ட முன்வடிவு கொண்டுவரப்பட்டு, அதை எதிர்த்து போடப்பட்ட வழக்கு இன்னும் உச்ச நீதிமன்றத்திலே இருக் கிறது. ஆனாலும், ரேஸ் இப்போது ஓடிக்கொண்டு இருக்கிறது. நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்றால் அவன் செய்தால் என்ன, அதை நாங்கள் செய்கிறோம் என்று நீங்கள் அதை எடுக்க சட் டத்தைக் கொண்டு வருகிறீர்கள். இப்படி அதை எடுப்பதற்கு பதிலாக, அதை ஒழிப்பதற்கு சட்டத்தைக் கொண்டு வந்தால், நிச்சயமாக அதை, நாங்கள், எங்களுடைய கட்சியின் சார்பாக ஆதரிக்க வாய்ப்பிருக்கும். ஆனால், துரதிருஷ்டவசமாக இப்படி நேசனலைஸ் பண்ணுவதை எதிர்க்க வேண்டிய ஒரு நிர்ப்பந் தத்திற்கு எங்களை ஆளாக்கியிருக்கிறீர்கள். எனவே, இந்தச் சட்ட முன்வடிவை நாங்கள் எதிர்க்கிறோம்.

*திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தினுடைய ஆப்ஜெக்ட்டை நாங்கள் எதிர்க்கவில்லை. குதிரைப் பந்தயச் சங்கத்தை நேசனலைஸ் பண்ணுவதை நாங்கள் ஆட்சேபிக்கவில்லை. ஆனாலும், இந்தச் சட்டத்தை, துரதிருஷ்டவசமாக ஏற்றுக் கொள்வதற்கு முடியாத ஒரு நிலைமை இருக்கிறது. காரணம், செக்சன் 12, சப்-செக்ஷன் 2 "Notwithstanding anything contained in the Industrial disputes Act, 1947 or in any other law for the time being in force the transfer of the services of any officer or other persons employed in the undertaking of the club to the Government or the Government company shall not entitle such officer or other employee to any compensation under this Act or any other law for the time being in force and no such claim shall be entertained by any court, tribunal or other authority".



என்று இருக்கிறது. இது கடுமையாக தொழிலாளர்களைப் பாதிக் கக்கூடிய ஒரு சட்டம். இந்தச் சட்டத்தின் கீழே அவர்களுக்கு உரிமையில்லை என்று சொல்வதை எங்களால் ஏற்றுக் கொள்ள முடியாது. இன்றைக்கு நாட்டிலே நடப்பிலே இருக்கக்கூடிய நிலைமைகளில், தொழிலாளர்களுக்கு சாதகமாக சட்டப்படி காம்பன்சேஷன் கிடைப்பதற்கு உரிமையில்லை என்று சொல்வது நல்லதல்ல. இது தொழிலாளர் விரோத கொள்கை. இதனால், தொழிலாளர் விரோத அரசு என்று கூட ஒரு எண்ணம் ஏற்படுவதற்கு இது உதவிகரமாக இருக்கும். ஆகவே, அப்படி இருக்கக்கூடிய ஒரு ஷரத்தை நீங்கள் இன்டரட் பூஸ் பண்ணாமல், இதை மாற்றி, புதுச் சட்டத்தைக் கொண்டு வந்தால், அதை நாங்கள் ஆதரிக்கிறோம். அந்த நோக்கத்தை ஏற்றுக் கொண்டு வரக்கூடிய தொழிலாளர்களுக்கும், ஊழியர் களுக்கும் பாதிப்பு இல்லாத முறையில் சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டு, இந்தச் சட்டத்தைக் கொண்டுவருவதை நான் எதிர்க்கிறேன்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை குதிரைப் பந்தயச் சங்கத்தில் உட்பூசல் இருக்கிறது. அது முறையாக இயங்கவில்லை என்று சொல்லி, அதைக் கையகப்படுத்தப் போகிறோம் என்று அறிவித் திருக்கிறார்கள். அதைக் காரணம் காட்டி, நீங்கள் இந்த குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதற்கு சட்டத்தைக் கொண்டு வந்திருந்தால், அதை நாங்கள் வரவேற்று இருப்போம். ஆனால், அரசாங்கம், மக்கள் நன்மைக்கு விரோதமாக இருக்கக்கூடிய குதிரைப் பந்தயச் சங்கத்தை எடுத்துக் கொள்வது என்பது மிகவும் வேடிக்கையாக இருக்கிறது. இதற்கு முன்பே லாட்டரிச் சீட்டை நடத்திக்கொண்டு இருக்கிறீர்கள். தற்போது சாராயக் கடைகளை எடுத்துக்கொண்டீர்கள். நீங்கள் செய்கின்ற வியாபாரம் மக்கள் நல்வாழ்விற்காக இருந்தால் நன்றாக இருந்திருக்கும். ஆகையினாலே இந்தச் சட்டத்தை ஆரம்ப நிலையிலே எதிர்க்கிறோம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பிய பிரச்சினைகளுக்கு ஆய்வு நேரத்திலே நான் பதில் அளிக்கிறேன். எனவே, இந்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : "1986 ஆம் ஆண்டு சென்னை குதிரைப் பந்தயச் சங்கம் (நிறுவனத்தை கையகப்படுத்துதலும் உரிமை மாற்றம் செய்தலும்) சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற் றப்பட்டு, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனிவகை முறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

" 1986 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனிவகை முறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் ".

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் சட்டத்தைக் கொண்டு வந்து அதில் உள்ள அதிகாரிகளுக்கு மேலும் 1 ஆண்டுக்கு பதவிக் காலத்தை நீட்டிக்கிறீர்கள். மார்க்கெட்டிங் கமிட்டிகள் இப்பொழுதே சரியாகச் செயல்படவில்லை. மேலும், கண்டிப்பான முறையிலே லெவி வசூல் அதிகமாக செய்கிறார்கள். அதோடு பல சோதனைச் சாவடிகளில், வணிகச் சாவடிகளில், அபராதம் விதிக்கிறார்கள். இந்த அளவிற்கு இருப்பதற்குக் காரணம், தனி அதிகாரிகள் கட்டுப்பாட்டில் இருப்பதுதான். எனவே, அதிகாரிகளை நீக்கி விட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் இருந்தால், இம் மாதிரியான நிலைமைகள் இருக்காது. எனவே, ஒரு ஆண்டு என்று கொண்டு வராமல், 3 மாத காலத்திற்கு மட்டும் என்று கொண்டு வந்து, உடனடியாகத் தேர்தலை நடத்த வேண் டும் என்றும் மக்கள் பிரதிநிதிகள் கையிலே இதைக் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். எனவே, இந்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்வதை நான் எதிர்க்கிறேன்.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சட்டமுன்வடிவின் தலைப்பிலே திருத்த சட்ட முன்வடிவு என்று கொடுக்கப்பட்டு இருக்கிறது. இது மேலும் திருத்துவதற்கு என்று கொண்டுவரப்பட்ட சட்டமுன் வடிவு. இப்படி 1978 ஆம் ஆண்டிலிருந்து இப்போது 1986 ஆம் ஆண்டு வரைக்கும் 8 ஆண்டுகளாக ஒவ்வொரு ஆண்டும் நீட்டிப்புக்கு என்று திருத்தச் சட்டமுன்வடிவை கொண்டு வருகிறீர்கள். சென்ற ஆண்டு நான் பேசும்போது சொன்னேன்.





அமைச்சர் அவர்கள் வேலை குறைவதற்கும், அவையின் நேரம் மிச்சமாவதற்கும் ஒரே நேரத்தில் 10 ஆண்டுகளுக்கு நீட்டிப்பு வேண்டும் என்று ஒரு திருத்த சட்டமுன்வடிவை கொண்டு வாருங் கள் என்று சொன்னேன். இதனால் அவையின் நேரமும் மிச்ச மாகும், அமைச்சரின் வேலையும் மிச்சமாகும். இந்த ஆண்டு அந்த காலம் முடிவதற்குள் தேர்தலை நடத்தி விடுவோம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் மீண்டும் ஒரு ஆண்டுக்கு நீட்டித்து கொண்டு வந்து இருக்கக்கூடிய முறை என்பது அந்த விவசாயிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்கள் இல்லாததால் எந்த அளவுக்கு அவர்களுடைய விளைப் பொருட்கள் விற்பதற்கு பாதிப்பு ஏற்பட்டு இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும் உணர்வார்கள். எனவே, இதை மேலும் நீட்டிக்காமல் உடனடியாக தேர்தலை நடத்தவேண்டும். இந்த வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகளுக்கு உடனே தேர்தலை நடத்தவேண்டும் என்று வற்புறுத்தி இந்த சட்டமுன்வடிவை துவக்கத்திலேயே நான் எதிர்க்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எல்லாவற்றிற்கும் நியாயமான 'டெமா கிரட்டிக் செட் அப்' வரவேண்டும், 'எலக்ட்டடு பாடி' வர வேண்டும் என்பதற்காகத்தான் இந்தக் கால நீட்டிப்பு வேண்டாம் என்று எதிர்த்துப் பேசுகிறோம்.

நான் எதிர்ப்பதற்கு இன்னொரு காரணம் என்ன என்றால், அமைச்சர் காளிமுத்துஅவர்கள் கொஞ்சம்சுறுசுறுப்பானவர். இதில் ஏன் இவ்வளவு டிலே செய்கிறார் என்று தெரியவில்லை. இதில் ஒரு வருடம் நீட்டிப்புக்கேட்பதற்கு ரீசன் என்ன சொல்கிறார்கள் என்றால் மத்திய அரசிலிருந்து இது சம்பந்தமாக மாடல் பில் வந்து இருக்கிறது என்றும் அந்த பில்லுக்கு என்ன பெயர் என்றால் "a model Agricultural produce markets bill drawn by the working group constituted by the Government of India......" அங்கிருந்து இப்படி ஒரு மாடல் பில்லை அனுப்பியிருக்கிறார்கள். இதை இப்படி அனுப்ப வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசிலிருந்து அவர்கள் அனுப்பியது போன மாதம் அல்ல; 2 மாதத்திற்கு முன்னால் அல்ல. அப்படி இருந்தால் கூட பரவா யில்லை, 1984 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அனுப்பியிருக்கிறார் கள். சுறுசுறுப்பான அமைச்சர் இதை வைத்துக்கொண்டு ஏற் கனவே ஒரு வருடத்தை கடத்தி விட்டார். இன்னும் ஒரு வருடம் இப்போது கேட்கிறார். நீங்கள் என்ன அந்த மாடல் பில்லிலிருந்து எழுத்துக்களை பொறுக்கி பொறுக்கி போடவேண்டுமா? அதிலி ருந்து எழுத்துக்களை எடுப்பது ரொம்ப கஷ்டமா? அந்த பில்லி லிருந்து இன்கார்ப்பரேட் செய்வதற்கு வருட கணக்கு ஆகுமா?

இல்லை 5 வருடம் ஆகுமா? இந்த பிரியடே முடியுமா ? ஆக சொல்லப்பட்ட ரீசன் முறையான ரீசன் அல்ல, சரியான ரீசன் அல்ல, ஒரு பில்லைப் பார்த்து இன்கார்ப்பரேட் செய்வதற்கு ஒரு வருடம் வேண்டும் 2 வருடங்கள் வேண்டும் என்று சொல்லுவது முறையா ? சரியா ? ஆக இதை எதிர்க்கிறேன்.

திரு, பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வந்து இருக்கும் இந்தச் சட்ட முன்வடிவில் மேலும் ஒரு ஆண்டு காலத்திற்கு இந்த தனி அதிகாரிகள் காலத்தை நீட்டிப்பதற்காக கேட்டு இருக்கிறார்கள். ஆனால் ஒவ்வொரு துறையிலேயும் அதிகாரிகளின் காலத்தை நீட்டிப்பதற்கு அவசர சட்டமுன்வடிகளை பிறப்பிப்பதும் பிறகு சட்டமன்றத்தில் சட்டமுன்வடிவுகளை பாஸ் செய்து கொடுப்பதும் தொடர்ச்சியாக ஒரு தொடர் கதையாக வந்துகொண்டு இருக்கிறது. ஆகவே, அமைச்சர் அவர்களிடம் சொல்லிக்கொள்வது எல்லாம், தேர்ந்து எடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லாததால் இந்த வேளாண் விளைபொருள் சந்தைகளில் ஏற்படக்கூடிய பிரச்சினைகள் குறித்து அமைச்சருக்கு நிறைய புகார்கள் வந்து இருக்கின்றன. நானே பல புகார்கள் இது சம்பந்தமாக சொல்லியிருக்கிறேன். ஆனால் எந்த நோக்கத்திற்காக, நல்ல காரியத்திற்காக, ஒரு அவசர சட்டத்தை கொண்டு வருகிறோமோ, அந்த நோக்கம் நிறைவேறாமல் விவசாயிகளுக்கு பலன் அளிக்காமல் போகக்கூடிய நிலை இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு ஆண்டு என்பதை குறைத்து 3 மாதத்திற்கு என்று அறிவித்து, உடனடியாக தேர்தலுக்கான தேதியை அறிவிக்கவேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீரய்யன் அவர்கள் இங்கே தெரிவித்ததைப் போல அவையின் நேரத்தை மிச்சப்படுத்துகின்ற வகையில் இதை ஆய்வின்போது விரிவாக பேச முடியும் என்பதால் இச்சட்டமுன்வடிவை இப்போது அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி :

'' 1986 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனிவகை முறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.





மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(முற்பகல் 11.00)

### 7. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் விவாதம்-தொடர்ச்சி.

திரு. இ. மனோகரன்: சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் இந்த அவையில் படித்த அறிக்கையின்மீது சுமார் 6 நாட்களாக என்று நான் கருதுகிறேன், விவாதங்கள் நடத்தப்பட்டு, இன்று அதனது இறுதிக்கட்டத்தை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறது.

ஆளுநர் உரையைப் பற்றி நான், அவர் உரையாற்றிய அன்றைக்கோ அல்லது மறுநாளோ எடுத்துச் சொன்ன கருத்துக்களை சில மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே விமர்சனம் செய்தார்கள். அவர்களது அந்த உரிமையை நான் மதிக்கின்றேன். ஆனால் நான் சொல்ல விரும்புகின்ற கருத்துக்களை, எடுத்துச் சொல்கின்ற வாய்ப்பினை மறுக்கின்ற உரிமை உங்களுக்கு இல்லை என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இங்கே நான் வந்தவுடன், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் ஒரு பிரச்சினையைக் கிளப்பினார்கள். அதற்கு நமது உள்ளாட்சித் துறை அமைச்சர் பதில் சொல்கிறபோது, உள்நோக்கம் கற்பிக்கின்ற வகையில் சொல்லியதாக, ரகுமான்கான் எடுத்துச் சொன்னார். ஏதோ திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தேர்தலை நடத்துவதற்கு இஷ்டம் இல்லாததைப் போலவும், அந்தத் தேர்தலைத் தள்ளிப் போட அது விரும்புவதைப் போலவும் உணர்வு ஏற்படுகின்ற வகையில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், எனது இனிய நண்பர் ப.உ.ச. அவர்கள் பேசினார். நான் அப்போதே ப.உ.ச. அவர்களிடம் சொன்னேன். எந்த விதமான உள்நோக்கமும், எனக்கோ, எனது அரசுக்கோ இல்லை என்று சொல்லிவிடுங்கள்; பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வையுங்கள் என்று கேட்டேன்.

அவர் எழுந்தார். என்ன காரணத்தினாலோ, பிறகு உட்கார்ந்து விட்டார். நான் இந்த அவைக்குத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, இந்தத் தேர்தலை விரும்புகின்ற கட்சி தி.மு.க. என்பதையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக வேட்பாளர் பட்டியல்கள், இரண்டு பட்டியல்கள் வெளியிடப்பட்டு விட்டன என்பதையும், அதன் அடிப்படை

யில், திராவிட முன்னேற்றக் கழகம், ஜனநாயக நிறுவனத்தின் அடிப்படை என்று கருதப்படுகிற பஞ்சாயத்துத் தேர்தலை நடத்துவதற்கு எவ்வளவு அக்கறையோடு இருக்கிறது என்பதையும் எண்ணிப் பார்த்திட அவை உறுப்பினர்களை இந்தச் சந்தர்ப்பத்தில் மெத்தப் பணிவன்போடு நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

பஞ்சாயத்துத் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பதில் யாருக்கும் அபிப்பிராயபேதம் இருக்க நியாயம் இல்லை. எனக்கு இருக்கிற வேதனை எல்லாம், ஒத்திப் போட்டுக் கொண்டே போகிறீர்களே, நியாயம்தானா? கடைசியாக அது ப.உ.ச. அவர்களின் தலையிலேதான் விடிய வேண்டுமா என்ற வருத்தம் தான் எனக்கு இருக்கிறதே தவிர, மற்றபடி, நான் மாண்புமிகு அமைச்சர் ப.உ.ச. அவர்களைக் குறை சொல்லவோ, குற்றம் சாட்டவோ விரும்பவில்லை.

ஒருவரையொருவர் புரிந்து கொண்டால், உணர்ந்து கொண்டால், பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காணமுடியும் என்ற நம்பிக்கை படைத்தவன் நான். அந்த நம்பிக்கையின் அடிப்படையில் தான் நாம் இங்கே பேசிக் கொண்டிருக்கிறோம்.

ஆளுநர் உரையில், இங்கே நேற்றைக்கோ, முந்தா நாளோ, ஒரு மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல, -'ஒன்றுமே இல்லை என்று நான் சொல்லவில்லை'. அவர் சொன்னதைத் தான் சொல்கிறேன். —ஆனால் நாங்கள் எதிர்பார்த்தவைகள் இதிலே இல்லை என்ற கருத்துப்பட அவர் பேசியதை நான் முழுமையாக வரவேற்கின்றேன்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால்—நேரத்தின் அருமை கருதி, நான் சுருக்கமாகவே சொல்லி விடுகிறேன்— கடந்த 25 ஆண்டுக் காலமாக பேசப்பட்டுவந்த—இந்த அவைக்கும் தெரியும், நாட்டு மக்களுக்கும் தெரியும் என்று நான் நம்புகிறேன் சேது சமுத்திரத் திட்டம் என்ன ஆயிற்று என்ற கேள்வியை இந்த மன்றத்தில் நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வெள்ளைக்காரன் ஆண்ட காலத்திலேகூட அந்தத் திட்டம் ஆய்விலே இருந்தது. அதற்குப் பிறகு காங்கிரஸ் கட்சி, ஆட்சி கட்சியாக வந்ததற்குப் பிறகு, காலம் சென்ற டாக்டர் ராமசாமி முதலியார் அவர்களின் தலைமையில் அமைந்த குழு "சேது சமுத்திரத் திட்டம் மிக மிகத் தேவையான ஒன்று, ஃபீசிபிலிட்டி இருக்கிறது" என்ற கருத்தையும் அவர் தெரிவித்தது, அதை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளலாம் என்ற கருத்தையும் அவர்கள் வெளியிட்டார்கள்.



ஆனால், 25 ஆண்டுகளுக்குப் பிறகும், 30 ஆண்டுகளுக்குப் பிறகும் இதைப் பற்றி நாடாளுமன்றத்திலே பிரச்சினைகள் கிளப்பப்படும் போதெல்லாம், கப்பல் துறையை தனது கையகத்திலே வைத்துக் கொண்டிருக்கிற அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, இது விவரம் தெரிந்தவர்களின் கையில், திறமையானவர்களின் கையில், நிபுணர்களின் பொறுப்பில் விடப்பட்டிருக்கிறது என்றும், அவர்கள் அறிக்கை அளித்ததற்குப் பிறகு, இது பற்றிய முடிவை உரிய நேரத்தில் இந்த அரசு அறிவிக்கும் என்றும் சொன்ன அமைச்சர் அவர்களைத்தான் நான் நாடாளுமன்றத்திலே பார்த்தேன்.

இன்றைக்கும் அமைச்சராக இருக்கின்ற மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய பன்சிலால் அவர்களிடம் இந்தப் பிரச்சினையைப் பற்றிக் கேட்ட போது அவர் சொன்னார், இது நிபுணர் குழுவின் ஆய்விலே இருக்கிறது என்பதைத் தெரிவித்து இருக்கிறார். ராமசாமி முதலியார் அவர்கள் அறிக்கை சமர்ப்பித்த நேரத்தில் இதற்கு ஆகின்ற செலவு எவ்வளவு என்பதை அவர் தெரிவித்தார்.

ஏறத்தாழ 30-லிருந்து 35 கோடி ரூபாயாகும் என்று தெரிவித்தார். ஆனால் இன்றைக்கு விலைவாசிகள் விஷம்போல் ஏறிவிட்ட காரணத்தினால் ஏறத்தாழ 180 கோடி ரூபாய் என்ற அளவுக்கு அச்சம் தருகின்ற அறிக்கைகள் வந்து கொண்டிருக்கின்றன. அந்த அடிப்படையில் இந்தத் திட்டத்தை விட்டு விடப் போகிறார்களா? மாநில அரசு அதைப்பற்றி வற்புறுத்தியிருக்கிறதா? சென்னையிலிருந்து தூத்துக்குடிக்குச் செல்வதாக இருந்தாலும் சரி—நமக்கு நீண்ட கடற்கரைப் பகுதிகள் இருக்கின்றன—அல்லது சென்னையிலிருந்து புறப்படுகிற கப்பல் வேறு நாடுகளுக்குச் சென்றாலும் சரி இலங்கையைச் சுற்றிச் சுற்றித்தான் செல்ல வேண்டுமென்ற துர்ப்பாக்கிய நிலையை அவை உறுப்பினர்கள் அறிவார்கள் என்று நம்புகிறேன். அதனால் ஏற்படுகின்ற விளைவுகளை நான் சுருக்கி விளக்குகிறேன். காலதாமதம் என்பது ஒன்று. அதிகமான பணச் செலவு மற்றொன்று, இன்னொன்றையும் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைய அரசியல் சூழ்நிலையில் இராமேஸ்வரம் கடல் பகுதியை ஆழப்படுத்தி, அகலப்படுத்தி சேது சமுத்திரத் திட்டம் தூத்துக்குடித் திட்டத்தோடு பிணைக்கப்பட்டிருக்கிற காரணத்தினால் அது நமக்குப் பாதுகாப்பாகவும் இருக்கும் என்பதை நான் இந்திய இளைய பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வளவு ஒரு நல்ல திட்டத்தை பெரிய ஒரு திட்டத்தை, தேவையான திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று தட்டிக் கேட்க முடியாமல் நீங்கள் இருக்கிறீர்களா? தட்டிக் கேட்டதற்குப் பிறகும் மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்யாததற்குக் காரணம் ஒரு வேளை, அரசியல் பின்னணி ஏதாவது இருக்கக் கூடுமா என்று எனக்குத் தெரியவில்லை. பதில் பேசுகின்ற போது நாவலர் அவர்கள் சொல்

வார்கள் என்று நம்புகிறேன். இதிலே என்னை விட அதிகமாகப்
பேசிப் பேசிப் பழக்கப்பட்டவர் சேது சமுத்திரத் திட்டம் எங்கே
எங்கே என்று கேட்டவர் இங்கே உட்கார்ந்திருக்கின்ற நாவலர்
பெருமகனார் என்பதை நாடு நன்கறியும். ஆகவே அதை அவர்
கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

ஆளுநர் உரையில் இடம் பெறாமல் போவதற்கு என்ன
காரணம் என்று கேட்கிற உரிமை எனக்கு இல்லை என்று கருது
கிறீர்களா? ஒரு கட்சிப் பிரச்சினை இது என்று எண்ணு
கிறீர்களா? தமிழகத்தின் ஒட்டு மொத்தமான பிரச்சினை இது.
தமிழகத்திற்கு மட்டுமல்லாமல் இந்தியத் துணைக் கண்டத்திற்கும்
சேர்ந்த பிரச்சினை ஆயிற்றே. இந்தப் பிரச்சினையில்
அக்கறை காட்ட வேண்டிய பொறுப்பு மாநில அரசுக்கும
மத்திய அரசுக்கும் உண்டு. அதைச் சொல்லாமல் விட்டுவிட்
டீர்களே என்ன காரணம்? அதைப் பற்றி ஆளுநர் அவர்கள்
தம்முடைய அறிக்கையில் தெரிவிக்கவில்லை. அறிக்
கையை அவர் படித்தாரா அல்லது அவர் எழுதிச் சொன்னாரா,
அது வேறு விஷயம். அவர்கள் இந்த அரசின் கொள்கையை
எதிரொலிக்கிறார்களா? இந்த அரசின் கொள்கைகளை அவர்கள்
பிரதிபலிக்க வேண்டுமா வேண்டாமா என்ற கேள்விக்கு
நாவலர் அவர்கள் பதில் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக்
கொள்கிறேன்.

(முற்பகல் 11.10)

இரண்டாவதாக மிக முக்கியமான ஒன்று விடப்பட்டிருப்
பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். நாவலர் அவர்கள்
பதில் சொல்லும்போது இதற்கும் பதில் சொல்வார்கள் என்று
நம்புகிறேன். இந்தச் சட்டசபையிலே நிறைவேற்றப்பட்ட சில
மசோதாக்கள குடியரசுத் தலைவரின் கையொப்பத்தைப்
பெறுவதற்காக இன்னும் இராஷ்டிரபதி பவனிலே கை பிசைந்து
காவலாளியைப் போலக் காத்துக் கொண்டிருக்கின்ற காட்சி
யைத்தான் நீங்களும், நானும் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.
எனக்குக் கிடைத்த தகவலை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.
மேற்கு வங்கத்தைப் பொறுத்த வரையில் 12 மசோதாக்கள்
கையெழுத்துக்காகக் காத்துக் கிடக்கின்றன. தமிழகத்தைப்
பொறுத்தவரையில் பத்து மசோதாக்கள் கையெழுத்துக்காகக்
காத்துக் கிடக்கின்றன; கர்நாடகத்தைப் பொறுத்த வரையில்
ஐந்து மசோதாக்கள் காத்துக் கிடக்கின்றன. ஒன்றை நான்
ஏற்றுக் கொள்கிறேன். இந்த நிலைமைக்கு ஆளாகியிருப்பது
காங்கிரஸ் அல்லாத அமைச்சரவைகள் மட்டும் தானா என்றால்
இல்லை. காங்கிரஸ் கட்சி ஆளும் மாநிலங்களிலும் இதுதான்
நிலைமை என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.



குடியரசுத் தலைவரின் அங்கீகாரத்திற்காக அனுப்புகிறீர்
களே, எதற்காக? அதிலே இருக்கின்ற சட்டப் பிரச்சினையைப்
பற்றிக் கொஞ்சம் தெரிந்துக் கொள்வது நல்லது என்பதற்காகச்
சொல்ல விரும்புகிறேன். இரண்டு காரணங்களுக்காக அது
அனுப்பப்படலாம். அந்த இரண்டு விஷயங்கள் எவை என்றால்,
நீதிமன்றங்கள் அல்லது உச்ச நீதிமன்றம் ஆகிய இவைகளுக்குப்
பாதிப்பு ஏற்படும் வகையில் அல்லது களங்கம் ஏற்படும் வகையில்
ஏதாவது ஒன்று நிறைவேற்றப் படுமானால், அரசியல் சாசனத்
தின்படி பொதுப் பட்டியலில் உள்ள விஷயங்கள் சம்பந்தப்பட்
டிருந்தால் அல்லது அரசியல் சாசனப்படி உயர் நீதிமன்றத்
திற்கு உள்ள நிலைமைகளுக்கு அபாயம் உண்டாகும் வகையில்,
அதன் அதிகாரத்தைப் பாதிப்பதாக இருப்பதாக கவர்னர்
கருதினால்தான் அந்த மசோதாவை இராஷ்டிரபதியின் ஒப்பு
தலுக்கு மாநில கவர்னர் அனுப்ப வேண்டுமென்பது விதியே
தவிர, முறையே தவிர, சட்டமே தவிர, ஷரத்தே தவிர மற்ற
வைகள் இல்லை என்பதை நான் இந்த மாமன்றத்திற்குத் திட்ட
வட்டமாக, தெளிவாகத் தெரிவிக்க விரும்புகிறேன். எனக்குத்
தெரிய வேண்டுமென்று நான் விரும்புவது, அந்த பத்து மசோ
தாக்கள் எவையெவை? அவைகள் முக்கியத்துவம் பெற்ற
மசோதாக்கள்தானா? இன்னும் சொல்லப் போனால், தூங்கிக்
கிடக்கின்ற அந்த மசோதாக்களில் சில மசோதாக்களுக்கு
எட்டு வயது; சில மசோதாக்களுக்கு ஐந்து வயது. ஆண்டாண்
டுக்காலமாகத் தேங்கிக் கிடக்கிறதே அவைகளைப் பற்றி
ஏதாவது ஆளுநர்சொன்னாரா? மீதியிலே ஆளுநர் கையெழுத்துப்
போடலாம் என்று இருக்கும்பொழுது எல்லா மசோதாக்
களையும் குடியரசுத் தலைவருக்கு அனுப்புகிறீர்களே, இதே
வாய்ப்பு டெல்லி நாடாளுமன்றத்திற்கும் உண்டா என்று
தெரிந்துக்கொள்ள விரும்புகிறேன். இது ஆளுநர் உரையில்
இல்லை.

மற்றொன்றையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். சுத்த
மாக இந்த ஆளுநர் உரையில் இந்திப் பிரச்சினையைப் பற்றி
எதுவுமே குறிக்கப்படவில்லை. ஏன் இந்திப் பிரச்சினையைப்
பற்றித் தயக்கம் காட்டுகிறீர்கள் என்பது எனக்குப் புரியவில்லை.
பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் பிரதம அமைச்சராக
இருந்த நேரத்திலேயிருந்து, லால்பகதூர் சாஸ்திரி காலத்திலே
யிருந்து, இன்னும் சொல்லப் போனால், மொரார்ஜிதேசாய்
காலத்திலேயிருந்து, அதற்குப் பிறகு வந்த இந்திராகாந்தி அம்
மையார் காலத்திலேயிருந்து தொடர்ந்து இந்தி பேசாத
மக்களுக்கு வழங்கப்பட்ட நேருவின் வாக்குறுதியை உங்கள்
அனுமதியைப் பெற்று நான் படிக்க விரும்புகிறேன்.

"English shall continue for indefinite period. English should
continue as associate language and alternate language and this
place should not be changed. There should be no change in the
above position, as the people in the non-speaking areas are quite
limited. The decision for the change over should thus be left to
the non-Hindi speaking people and not to the Hindi speaking people

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தியத் துணைக் கண்டத்து
லிங்கன் என்று பாராட்டப்படும் அளவில் ஜனநாயகத்தில்
ஆழமான நம்பிக்கையுடைய நம்முடைய மதிப்பிற்குரிய பண்டித
ஜவஹர்லால் நேரு அவர்கள வாக்குறுதி அளித்ததை நான்
படித்துக் காட்டினேன். நான் கேட்க விரும்புகிறேன். யாராவது
ஒருவர் நீதிமன்றத்திற்குள் செல்கிறார் என்று வையுங்கள்.
இந்திதான் இந்த நாட்டின் லிங்க் லாங்குவேஜ், ஆட்சிமொழியாக
இருக்க வேண்டுமென்று ஒரு வழக்கைப் போட்டு, அந்த வழக்கை
விசாரிக்கின்ற நீதிபதி, சட்டத்திற்கு புறம்பாக இது இருக்
கிறதா என்று கேட்க, வழக்காடச் சென்றவர், ''இல்லை
யில்லை, எங்களது நேரு பெருமகனார் அந்த வாக்குறுதியைத்
தந்துவிட்டார்'' என்று சொன்னால், நான் கேட்க விரும்பு
கிறேன், நீதிபதி அதை ஏற்றுக்கொண்டு முடிவு கூறுவார்
என்று நீங்கள் நம்புகிறீர்களா? இங்கே முன்னால் உட்கார்ந்
திருக்கின்ற ஆட்சித் தரப்பைச் சேர்ந்த எனதருமை நண்பர்
களும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நண்பர்களும்,
இன்னும் சொல்லப்போனால் காங்கிரஸ் கட்சியிலே நிரம்ப
நண்பர்களும் இருக்கிறார்கள். அதிலேயும் எனக்கு ரொம்பப்
பிடித்தமான ஒன்று, மாண்புமிகு உறுப்பினர், தீர்த்தகிரி
கவுண்டர் அவர்களே எழுந்து நின்று, நான் இந்த ஆட்சியின்
இரு மொழிக் கொள்கையை ஆதரிக்கிறேன் என்று பேசியதாக
நான் பத்திரிகையிலே பார்த்தேன். வாழ்க அந்தப் பெரியவர்;
வளர்க அவரது புகழ். அவரை இளைஞர்கள் பின்பற்றட்டும்
அந்தக் கட்சியில் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்
கொள்கிறேன்.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, எனது மரியாதைக்குரிய நாஞ்சி
லார் அவர்கள் நான் இருமொழிக் கொள்கையை ஆதரிப்பதாகப்
பேசினார்கள். ஆளுங்கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் இந்தி
மறைமுகமாக, தமிழ் நாட்டிலே திணிக்கப்படுகிறது என்று பேசி
னார்கள். நாங்கள் இந்தி இங்கு திணிக்கப்பட வேண்டுமென்பதை
ஆதரிக்கவில்லை, தமிழுக்கு ஆதரவு கொடுக்கிறோம், மும்
மொழிக் கொள்கையை நாங்கள் வலியுறுத்துகிறோம் என்பது
தான் என்னுடைய கட்சியின் சார்பாக, என்னுடைய கருத்தே
ஒழிய இரு மொழிக் கொள்கை என்னுடைய கருத்தல்ல என்பதை
அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. கி. மனோகரன் : ஒருவேளை பத்திரிகையிலே வந்த
செய்தி தவறாக இருக்கக்கூடும். ஏனென்றால், பெரியவர்
அவர்கள் நிச்சயமாக உண்மைக்கு மாறாகப் பேசமாட்டார்கள்
என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. ஆனால், அதை ஒட்டிப்
பேசிய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக
மாண்புமிகு உறுப்பினர் சமரசம் அவர்கள் பேசும்பொழுது,
அந்த ஏற்றுக் கொண்டதற்காக, அந்தப் பெரியவரைப் பாராட்டி



யதாக நான் குறிப்பேட்டிலே பார்த்தேன். சமரசம் உண்மைக்கு
மாறாக பேசுபவர் என்று நான் எந்தக் காலத்திலும் ஏற்றுக்
கொள்ளமாட்டேன். பழைய நண்பர், பாசமுள்ள நண்பர்,
இன்னும் அந்தப் பாசத்தை என்னிடம் பொழிந்து கொண்டுதான்
இருக்கிறார். ஆகவே, உங்களிலே யார் உண்மையைப் பேசுகிறீர்கள்
என்று எனக்குத் தெரியவில்லை. அதை நான் தெரிந்துகொள்ள
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் பாசமுள்ள
நண்பர் என்று சொல்கிற காரணத்தாலேயே, அவர் பாதை தவறி
விடுவார் என்று அல்லது அவருக்கு ஆபத்துக் காத்திருக்கிறது
என்று சித்தன் கருதவேண்டிய அவசியம் இல்லை என்று நான்
அவருக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : சமரசம் பெயர் சொல்லி
சமரசம் செய்கிறாரா, சண்டை மூட்டி விடுகிறாரா? (சிரிப்பு).

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, அன்றையதினம் இந்தி பல்வேறு வகையிலேயும்
திணிக்கப்படுகிறது என்று நான் சொன்னபொழுது இங்கே
பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நாங்கள் இந்தி
திணிக்கப்படுவதை எதிர்க்கிறோம். ஆகவே, இந்தி திணிக்கப்
படுவதை ஆதரிப்பதாகக் கருதவேண்டாம் என்று தான் சொன்
னாரே தவிர, மும்மொழித் திட்டத்தைப் பற்றி அன்றைய தினம்
சொல்லவில்லை. ஆனால், இன்றையதினம் மாண்புமிகு நாஞ்சி
லார் அவர்கள் பேசுகின்ற பேச்சுக்குப் பதில் சொல்கின்ற வகை
யில், அவர் புதிய கருத்தைச் சொல்கிறாரே தவிர, அன்றைய
தினம் அவர் இருமொழிக் கொள்கையைத் தான் சொன்னார்,
மும்மொழிக் கொள்கையைச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : குறிப்பேடு
களைப் பார்த்து முடிவு பண்ணிக் கொள்ளுங்கள். இரண்டு
பேர் சொன்னதையும் இருக்கின்றன.

திரு. கி. மனோகரன் : துணைத் தலைவர் அவர்களே,
கட்டப்பட்டுக் கொண்டிருக்கிற பாசம் மிக்க பாலம் வெகு
விரைவாக முடியும் தருவாயில் இருப்பதைப் போன்ற உணர்வை
நான் இங்கே பார்க்கிறேன் என்பதை மெத்த மகிழ்ச்சியோடு
தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு).

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : துணைத் தலைவர்
அவர்களே, கட்டப்பட்டிருக்கிற பாலத்தை உடைப்பதாகக் கருத
வேண்டாம். நான் மாண்புமிகு நாஞ்சில் மனோகரன் அவர்
களிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புவது, மொழிக் கொள்கை
யிலே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்,
திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரஸ் கட்சிகள் சேர்ந்
திருக்கின்றன என்று சொன்னார்கள். எனக்கு வந்த சந்தேகம்.
அவர்களோடு இணைந்திருக்கிற கம்யூனிஸ்ட் கட்சி, ஜனதா கட்சி

முஸ்லீம் லீக் எல்லாம் மொழிக் கொள்கையில் இணைவதை விட்டு விட்டார்களே, அந்தப் பாலம் உடைந்து விட்டதா என்பதைத் தான் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். (சிரிப்பு).

திரு. கி. மனோகரன்: அந்தப் பொறுப்பை ப.உ.ச.வுக்கே நான் விட்டு விடுகிறேன். (சிரிப்பு). ஏனென்றால், அவர் பி.டபிள்யூ.டி. யிலே அமைச்சராக இருந்தவர். பாலம் எப்பொழுது உடையும், பாலம் எப்பொழுது கட்டப்படும் என்பது அவருக்குத்தான் தெரியும். ஆகவே, நான் அதிலே அதிகமாக ஈடுபட விரும்பவில்லை.

இவ்வளவு வாக்குறுதிக்குப் பிறகும்—நான் வேதனையோடு தெரிவிக்கின்றேன். இந்தி திணிக்கப்படுகின்ற முயற்சி இன்னும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதைத் தயவுசெய்து மறந்துவிடக் கூடாது.

இதோ, நவம்பர் திங்கள் 25 ஆம் நாள் இந்து பத்திரிகையிலே வெளியான செய்தி 'All autonomous bodies and societies getting grants and other financial aid from the Central Government to the extent of 50 percent and above are hereafter requested to follow the Official Language policy of the Centre and use Hindi in their day-to-day work.

தமிழகத்திலே பெரும் குரல் கிளம்பியதற்குப் பிறகு, ஆர்ப்பாட்ட போர்ப்படை, பீடுகொண்ட அடலேறுகள் போராடியதற்குப் பிறகு, மேலே இருக்கிற நமது பிரதம அமைச்சர் அவர்கள் ஓரளவுக்குக் கீழே இறங்கி வந்து அதை வாபஸ் வாங்கி கொள்கிறேன் என்று தெரிவித்தார்.

(முற்பகல் 11.20.)

ஆனால் மறந்துவிடக்கூடாது என்பதற்காக நினைவூட்ட வேண்டுமென்ற ஒரே நோக்கத்தோடு தெரிவிக்க விரும்புகிறேன். இந்த அறிவிப்பு வித்ட்ராயல் ஆன அடுத்த மாதம் இன்னொரு அறிவிப்பு வந்தது. அந்த அறிவிப்பை வெளியிட்டவர் யார் என்றால் 'ஃபுட் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா'. அதிலே தெரிவித்திருக்கிறார்கள். இந்தி ஒர்க்ஷாப் ஒன்று உருவாக்கப்பட்டிருப்பதாகவும் அதில் பணியாற்றுகின்ற அத்தனை பேர்களும் 'நோட்டிங்ஸ் அண்ட் டிராப்டிங்ஸ்' இந்தியில் வெளியிடுவதற்குக் கற்றுக்கொள்ள வேண்டுமென்றும் கற்றுக்கொள்ளுகின்ற பொறுப்பு அவர்களைச் சேர்ந்தது என்றும் அறிக்கை விட்டிருக்கிறார்கள்.

நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அது ஒரு பக்கத்தில் 'அட்டானமஸ் பாடி'. அதிலே இருப்பவர்கள் இந்தி கற்றுக் கொள்ள வேண்டும் என்ற உத்தரவை வாபஸ் பெற்ற பிறகு,



இரண்டாவதாக இப்படி ஒரு அறிவிப்பு வந்திருக்கிறதே, இது
நியாயம்தானா, முறைதானா என்று நான் அறிந்து கொள்ள
விரும்புகிறேன். இந்த அரசு இதுபற்றி என்ன கருதுகிறது
என்றும் நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

இதுகூட ஆச்சரியம் அல்ல. 12—1—1986-ல் ஒருவர் பேசி
யிருக்கிறார். இந்தி ஒன்றே நாட்டின் இணைப்பு மொழியாக
இருக்க முடியும் என்று பார்லிமெண்டில் அதிகாரப்பூர்வ மொழி
கள் கமிட்டித் தலைவர் டாக்டர் ருத்திரபிரசாத் சிங், எம்.பி.
குறிப்பிட்டார். அதிகாரப்பூர்வ மொழிகள் சட்டத்தை
அமல்படுத்துவது குறித்து தமிழ்நாடு மற்றும் பாண்டிச்
சேரியில் கமிட்டி உறுப்பினர்கள் ஆய்வுரை செய்ய பயணம் மேற்
கொண்டார்கள் என்றும் அந்தக் கமிட்டியின் அறிக்கை இராஷ்டிர
பதி ஜெயில்சிங் அவர்களிடம் அளிக்கப்படும் என்றும் குறிப்பிட்டி
ருக்கிறார்கள். ஆக, இந்தி ஒன்றுதான் அதிகாரபூர்வமான
இணைப்பு மொழியாக இருக்கும் என்ற கருத்தை அவர் வலி
யுறுத்திச் சென்றிருக்கிறார். அதற்கு எந்தவிதமான எதிர்ப்
பும் இந்த அரசிடமிருந்து கிளம்பியதாக எனக்கு நினைவு இல்லை.
ஆளுநர் உரைக்குப் பிறகு அவர் இப்படி பேசியிருப்பதால் ஒரு
வேளை இந்தக் கருத்து ஆளுநர் உரையில் இடம் பெறவில்லையோ
என்று நான் கருதுகிறேன். ஆனால் ஆரம்பமே முழுக் கோணல்
என்ற காரணத்தால் அதைத் தொடர்ந்து வருகின்ற அத்தனை
யும் இப்படி வந்துகொண்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்
காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மன்றத்திற்கு இன்னொன்றையும் தெரிவிக்க விரும்பு
கிறேன். மனித எண்ணங்கள் பற்றிச் சொல்கிறேன். 'Man is
prepared to go to hell but he refuses to go to Heaven by compulsion'

மனித இயல்பு இது. அவன் இஷ்டப்படி நரகத்திற்கு வேண்டு
மானாலும் செல்லுவானே தவிர அவனை வற்புறுத்தி நீ
சொர்க்கத்திற்குப் போ என்றால் போகமாட்டான். இது
'ஹியூமன் சைக்காலஜி' என்று ஒருவர் சொன்னதை நான் அவை
உறுப்பினர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்தாற்போல் நம்மை கவர்ந்து இழுக்கின்ற அளவுக்கு
அல்லது நாமெல்லாம் ஏமார்ந்து போவோம் என்று நம்பியோ
என்னவோ தெரியவில்லை; அரசியல் சட்டத்தில் 8-வது அட்ட
வணையில் இருக்கிற அத்தனை மொழிகளையும் நீங்கள் ஆட்சி
மொழியாக ஆக்க வேண்டும் என்பதற்கு போர்க் குரல் கொடுங்
கள்; ஏன் ஆங்கிலத்தை மட்டும் நீங்கள் இறுகப் பற்றிக்
கொண்டிருக்கிறீர்கள் என்ற கேள்வியை கேட்டுவிட்டு அந்தக்
கணத்திலே கொஞ்சம் வெட்கத்தைக்கூட விட்டுவிட்டு எங்களி
டத்திலே சொன்னார். காலஞ்சென்ற அந்தப்பெரியவரின்பெயரை
இங்கே நான் சொல்ல விரும்பவில்லை. மனோகரா, நீ இந்தி
கற்றுக்கொண்டால் இந்தியைத் தாய்மொழியாகக் கொண்
ருக்கிற என்னைவிட நீ அற்புதமாக இந்தியில் பேச முடியும்

என்று சொன்னார். அந்தக் கேட்டவுடன், நான் உருகி
நெஞ்சம் நெக்குருகி, ஆமாம், ஆமாம், நீங்கள் சொல்வது சரி
தான் என்று நான் சொல்வேன் என்று நினைத்து அந்தப் பெரிய
வர் ...பேசியிருக்கக்கூடும். மறந்துவிடாதீர்கள். ஆங்கி
லத்தை அகற்றினால் அந்த இடத்திலே ஏறி உட்காரப்போகிற
ஒரே மொழி இந்தி மொழியாகத்தான் இருக்கும் என்பதை
எழுதி வைத்துக்கொள்ளுங்கள் என்று இந்தச் சந்தர்ப்பத்
தில் தெரிவித்துக்கொள்கிறேன். நாம் ஏமாந்துவிடக்
கூடாது; மக்கள் நம்பிக்கையை நாம் மாசுபடுத்திவிடக்
கூடாது. அவர்களுடைய உள்ளத்திலே ஆயிரம் ஆயிரம் ஆசை
கள் அலைமோதிக் கொண்டிருக்கின்றன. தங்கள் மொழி
வளரவேண்டுமென்று விரும்புகிற அதே நேரத்தில் ஆங்கில
அறிவு பெருக வேண்டுமென்றும் விரும்புகிறார்கள். ஏதோ
ஆங்கில மோகத்தால் நான் பேசுகிறேன் என்று தயவுசெய்து
யாரும் கருதிவிட தேவையில்லை. ஆங்கிலம் தேவை என்ற
கருத்து இன்றைக்கு உலகெங்கிலும் பரவி இருக்கிறது. உலக
நாடுகளிலுள்ள அத்தனை குழந்தைகளும் ஆங்கிலத்தை கற்
றுத் தீர வேண்டுமென்று விரும்புகிறார்கள், வரவேற்கிறார்கள்.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். 40 சத
வீதத்திற்கு மேற்பட்ட ரஷ்ய நாட்டு மக்கள் ஆங்கிலத்தைக்
கற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஜப்பானியர் கற்றுக்கொண்டி
ருக்கிறார்கள். பல ஐரோப்பிய நாடுகளில் ஆங்கிலம் கற்றுக்
கொண்டு இருக்கிறார்கள். சபாநாயகர் கூட அண்மையில்
உலகம் சுற்றும் வாலிபனாகச் சென்று வந்தார்கள். அவர்
பலபேரைச் சந்தித்து இருக்கக்கூடும். அவர் இந்தி மொழி
யில் பேசவில்லை. அவர் வந்ததற்குப் பிறகு அவரது
ஆற்றல் பெருகி இருப்பதை நான் கவனிக்கிறேன். அவர் ஆங்கி
லத்தில்தான் உரையாற்றினார். அவர் நல்ல வழக்கறிஞர்.
சட்ட நுணுக்கங்களை எல்லாம் ஆங்கிலத்தில் கேட்டுத்
தெரிந்துகொண்டார். அந்தக் காரணத்தாலேதான் ஆங்கி
லத்தை ஆதரிக்கிறோம்.

அதுமட்டுமல்ல, ஆங்கிலம் ஒரு குறிப்பிட்ட மக்களுக்குத்
தாய்மொழி என்பதை ஏற்றுக்கொள்ள நான் மறுக்கிறேன்.
அதனை யூ. கே. யிலே வாழ்கின்ற மக்களின் தாய்மொழி
என்றோ, அமெரிக்காவில் இருக்கின்ற மக்களின் தாய்மொழி
என்றோ நான் கருதவில்லை. ஆங்கில மொழியைப் பற்றித்
தெரிந்தவர்களுக்குத் தெரியும். அதிலே லத்தீன் உண்டு;
அதிலே ஃப்ரெஞ்ச் மொழி உண்டு; அதிலே இத்தாலியன்
மொழி உண்டு; அதிலே ஸ்பானிஷ் மொழி உண்டு; அதிலே
கிரேக்க மொழி உண்டு. இன்னும் சொல்லப்போனால் அதிலே
தமிழ் மொழி உண்டு; உருது உண்டு. டிக்ஷனரியைப் புரட்
டிப் பார்ப்பவர்களுக்கு அது தெரியும். கும்பகோணம் என்ற



வார்த்தை ஆக்ஸ்போர்ட் டிக்ஷனரியில் இருக்கிறது. வேறு
பதத்தில் அதைப் பயன்படுத்துவதற்காக அங்கே அவர்கள் பயன்
படுத்தினார்கள். அது அந்த டிக்ஷனரியில் இருக்கிறது.

பல மொழிகளில் உள்ள வார்த்தைகளும், சொல்லாழங்க
ளும், கருத்தாழங்களும் பெற்று வளர்ந்துவிட்ட நிலைமை
யில் இருக்கிற ஆங்கிலம் ஒரு குறிப்பிட்ட மக்களின்
தாய்மொழி என்று எண்ணப்பட, அவ்வாறு ஒத்துக்
கொண்டிட நான் தயாராக இல்லை என்பதைத் தெரி
விட்டதோடு இன்னொன்றையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.
நாங்கள் எல்லாம் நாடாளுமன்றத்தில் இருந்த காலத்தில் திரு.
ஃப்ராங்க் ஆண்டனி ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார்.
அவர் ஆங்கிலோ இந்திய சமுதாயத்தின் ஏக பிரதிநிதியாக
இருப்பவர். ஆக்ஸ்ப்போர்ட் பல்கலைக் கழகத்தில் படித்தவர்.
அவர் சொன்னார் ஒரு தீர்மானத்தின் மூலம். நான் அதைக்
குறிப்பேட்டிலே தான் பார்த்தேன். அவர் பேசியது 1957-ல்.
அவர் சொன்னார், ஆங்கிலோ இண்டியன் கம்யூனிட்டி என்று
ஒன்று இருக்கிறது; எனவே எங்களைக் காப்பாற்ற வேண்டும்;
ஏனென்றால் அந்தக் கம்யூனிட்டியின் அந்தச் சமுதாயத்தின்
தாய்மொழி ஆங்கிலம்; எனவே அந்த ஆங்கிலத்தை நீங்கள்
8-வது ஷெட்யூலில் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொண்ட
போது நல்ல உள்ளம் படைத்த பண்டித நேரு அவர்கள் சொன்
னார்கள், "ஃப்ராங்க் ஆண்டனி அவர்களுடைய கருத்தோடு
நான் ஒன்றி நிற்கிறேன். ஆனால் காலம் கொஞ்சம் கனியட்டும்
அதுவரை காத்திருங்கள்" என்று சொன்னார்கள். அவ்வாறு
சொல்லி விட்டு நேரு அவர்கள் சொன்னார்கள் ஆங்கிலோ இந்
தியச் சமுதாயம் ஒன் ஆப் தி நேஷனலிட்டிஸ் இன் இண்டியா
அதாவது இந்தியாவில் இருக்கிற பல இனங்களில் அதுவும்
ஒன்று; அந்த இனம் பேசுகிற மொழிதான் ஆங்கிலம்; ஆகவே
8-வது ஷெட்யூலில் அதைச் சேர்ப்பதில் ஆட்சேபணை இல்லை;
பொருத்திருங்கள் என்று கேட்டுக் கொண்டார்கள்.

அது மட்டுமல்ல. நான் ஒன்றை உங்களுக்குத் தெரிவிக்க
விரும்புகிறேன். அவ்வாறு சொல்லிவிட்டு பண்டித நேரு அவர்
கள் சொன்னார்கள், இந்தக் கருத்துக்கள் எனக்கு உடன்
பாடானவைதான் என்பது ஃப்ராங்க் ஆண்டனி அவர்களுக்குத்
தெரியும் என்று இவ்வாறு சொன்னதற்கும் பிறகு மறுநாள்
பத்திரிக்கையிலே ஒரு கட்டுரையைப் பார்த்தேன். 8-வது ஷெட்
யூலில் ஆங்கிலத்தை இணையுங்கள் என்று அவர் கேட்டுக்
கொண்டார். அதற்குப் பதில் சொல்லப்பட்டது எப்படி என்
றால் அந்த ஆங்கிலத்தை இந்தியாவிலே பேசுகின்ற மக்களின்
ஜனத்தொகை எத்தனை சதவீதம் என்றால் இரண்டு கூட
இராது; எனவே அதை எப்படி சேர்ப்பது என்று கேட்டார்கள்.
நாவலர் அவர்களுக்குத் தெரியும்... அந்த 8-வது அட்டவணை
யில் சமஸ்கிருத மொழி இடம் பெற்று இருக்கிறது என்பதைத்
தயவு செய்து மறந்து விடக்கூடாது. அந்த மொழியைப்

பேசுகின்ற மக்களின் எண்ணிக்கை எவ்வளவு என்றால் நான் ஆதாரத்தோடு தெரிவிக்க விரும்புகிறேன், 555 பேர்கள் தான் அதைப் பேசுகிறார்கள். இப்படி 555 பேர் பேசுகின்ற மொழி அதிலே இடம் பெறலாம். அதுவும் அன்னியமொழிதான் நமக்கு, ஆனால் ஆங்கிலம் இடம் பெறக்கூடாது என்று வாதிடு வது நியாயமற்றது என்பதைச் சுட்டிக்காட்ட நான் விரும்பு கிறேன்.

அதனால் தான் நான் தெரிவிக்க விரும்புகிறேன். ஆளுநர் உரையில் இது பற்றி எந்த விதமான பேச்சோ அல்லது நாளைக்கு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறோம் என்ற கொள்கை விளக்கமோ இல்லை என்பதை மறந்து விடக் கூடாது. இந்த நேரத்தில் ஆங்கிலத்தின் அவசியம் பற்றி தலை சிறந்த நீதிபதி ஒருவர் தெரிவித்த கருத்தை இந்த மன்றத்தின் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். அந்தப் புத்தகத்தின் பெயர். "Conflicts in the Indian Polity".

அதை எழுதியவர் திரு. கே. சுப்பாராவ் அவர்கள் அவர் முன்னாள் உச்ச நீதிமன்றத்தின் சீஃப் ஜஸ்டிஸாக இருந்தவர். அவர் சொல்கிறார்.

The English language is one of the greatest languages of the world It is a language of precision of thought and expression. It has a Vocibulary of technical pefection. It is a language of science,technology, medicine ,law, literature, politics, economics and commerce It is a repository of the words intellectual effot. It is the official language of the Commonwealth and America. It is a subjects in the curiculum of Universities in many great cooperatives. It is a language of international debates and dialogues, It has an acknowledged international status.

(முற்பகல் 11-30)

இப்படிப்பட்ட ஒரு மொழியை இழந்து விட வேண்டும் என்று யார் வாதாடினாலும், நான் மனப்பூர்வமாக இங்கேயிருக்கிற அவை உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அதற்கு நாம் எந்தக் காரணத்தைக் கொண்டும் உடன்படக் கூடாது. உடன்பட்டால் நம் உரிமைகள் பறிபோகும் என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.





அதற்கு அடுத்தாற் போல நான் இந்த அவையில் கவனத் திற்குக் கொண்டு வர வேண்டும் என்று விரும்புவது, மிக முக்கிய மான ஒரு பிரச்சினை, சர்க்காரியா கமிஷனைப் பற்றிய பிரச்சினை. சர்காரியா கமிஷனிடம், ஒரு நபர் கமிஷனிடம், ஆட்சித் தரப்பிலே அறிக்கை ஒன்று தரப்பட்டது. அதை ஏன் இந்த அவையில் வைக்கக் கூடாது. அது என்ன அபாயகர மான அறிக்கையா ? இராணுவ இரகசியங்கள் பொருந்திய அறிக்கையா என்று கூட கேட்டோம். இன்னும் சொல்லப் போனால் பெரியவர் தீர்த்தகிரி கவுண்டர் அவர்களே கூட கேட்டார்கள். நமது எதிர் கட்சித் தலைவர் திரு. சுப்பிர மணியம் அவர்கள் கூட கேட்டார்கள். இது ஒன்றும் இராணுவ அறிக்கையில்லையே, அதை ஏன் அவையில் வைக்கக் கூடாது என்று கேட்டார்கள். கேட்டபோது எனது நினைவு சரியாக இருக்குமானால், அப்போது அதற்கு பதில் கூறிப் பேசிய, மாண்புமிகு மின் துறை அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன் அவர்கள் "மேற்சொண்டு இன்னும் சில விவரங்களை அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அந்த விவரங்களையெல்லாம் முழுமை யாக அளித்ததற்குப் பிறகு வைப்போம்' என்று சொன்னபோது எப்பொழுதுமே விழிப்போடு, காரியங்களை செய்து கொண்டிருக்கிற விழிப்போடு, பணியாற்றுகிற, மாண்புமிகு திரு. ப.உ.ச. அவர்கள் எழுந்து. "வைக்க வேண்டிய தேவை பட்டால் வைக்கப்படும்'' என்று பேசினார்கள்.

நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சர்க்காரியா என்ன பேசினார்? கமிஷனிடத்திலே இந்த மாநில அரசு சமர்ப்பித்த அறிக்கையைப் பற்றி என்ன சொல்லியிருக் கிறார் என்றால் Thiru Sarkaria said that the Commission had useful discussions with the State Government and others in Madras. Many important issues relating to Centre - State relations have been raised and these would be analysed and studied in detail. .. வார்த்தைகளை கவனிக்க வேண்டுகிறேன். 'in detail by the Commission', he said' என்று சொல்லிவிட்டு அடுத்தாற்போல் சொல்கிறார். Thiru Sarkaria praised the Tamil Nadu Government for its detailed and exhaustive reply to the Commission's Questionnaire.

தமிழக சர்க்கார் அளித்த அந்த வரைவு அறிக்கையைப் பற்றி அதன் ஆழத்தைப் பற்றி, அழுத்தத்தைப் பற்றி எல்லாம் சொல்லி எல்லாமே அதில் இருக்கிறது என்பதை சிறப்பாக புகழ்ந்துரைத்து நமது நீதிபதி சர்க்காரியா அவர்கள் சொல்லிவிட்டு அடுத்தாற் போல் சொல்லுகிறார்.

- I think very few States have done like that'' .
He said after a pause....

கொஞ்ச கண நேர காலத்திற்குப் பிறகு அவர் சொன்னார்.

"Perhaps no state has answered the questionnaire in this manner as Tamil Nadu has done'

தமிழகத்தில் தந்திருப்பதைப் போல எந்த மாநில அரசும் தர வில்லை என்ற கருத்தை அழுத்தந்திருத்தமாக அவர் சொல்லி யதற்குப் பிறகு, விரிவாகவும் தெளிவாகவும் அறிக்கை தந்திருக்கி றார்கள் என்று அவரே சொன்னதற்குப் பிறகு, டீடெய்ல்டாக தந்திருக்கிறார்கள். என்று சொல்லியதற்குப் பிறகு, அதிலே வேறு எதுவுமே தரவேண்டிய அவசியமே இல்லை என்று எண்ணத் தக்க வகையில் அவர் கருத்தை சொல்லியதற்குப் பிறகு, சபையை திசை திருப்புவதற்காக, மின் துறை அமைச்சர் அவ்வாறு சொல்லி யிருப்பார் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அந்தச் சந்தர்ப்பத்தி லேயிருந்து அந்த நேரத்திலேயேயிருந்து தன்னை காப்பாற்றி கொள்வதற்காக அவர் சொல்லியிருக்கக்கூடுமோ என்ற எண்ண தான் எனக்கு இருக்கிறதே தவிர, நான் அவரை வேண்டு மென்றே செய்தார் என்று சொல்லவில்லை....

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சர்க்காரியா கமிஷனிடம் சிறப் பாக, விரிவான, விளக்கமான அறிக்கை தரப்பட்டது என்பதை சர்க்காரியா அவர்களே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்த அறிக்கையை நாங்கள் தருகிற போதே, அது விரிவாக இருக்கிறது என்றும், வேறு பல மாநிலங்களில் கொடுத்ததை விட சிறப்பாக வும், ஆழமாகவும் இருக்கிறது என்றும் எடுத்துச் சொன்னார்கள்.

மொழிப் பிரச்சினை குறித்தும், மத்திய மாநில உறவுகள் பற்றியும் நீண்டகாலமாக பல்வேறு கருத்துக்களை நாம் அழுத்தந்திருத்தமாக வலியுறுத்தி வருகிற காரணத்தினாலும், அது பற்றி ஆய்ந்து அறிந்த ராஜமன்னார் அறிக்கை, ராம்பிரசாத் ராவ் அறிக்கை போன்ற அறிக்கைகளையெல்லாம் வைத்து தெளிவாக திட்டமாக எடுத்துச் சொன்ன காரணத்தினால் அந்தக் குழுவின் முன் சாட்சியம் அளிக்கிறபோது அந்தக் கருத்தை அவர் என்னிடத்திலேயே எடுத்துச் சொன்னார்கள். மிகவும் விரிவாகவும், விளக்கமாகவும் இருக்கிறது. மேலும் சில விவரங் கள் வேண்டு மென்று அந்தக் கூட்டத்திலே அவர்கள் கேட்டிருக் கிறார்கள். அந்த விவரங்களைத் தயாரித்து அனுப்புகிற நிலையில் தமிழக அரசு இருக்கிறது. அநேகமாக அனுப்பி இருக்கு மென்று கருதுகிறேன். அதையும் சேர்த்து அந்த அறிக்கையை வைத்தால் ஒன்றும் தவறில்லை. இதில் ஒன்றும் இரகசியம் இல்லை. இது வெளிப்படையான ஒன்று தான். இன்னமும் சொல்லப்போனால்



மக்களுக்கு தெரிய வேண்டு மென்ற எண்ணமும் இந்த அரசுக்கு உண்டு. இது இந்த அவையில் வைக்கப்படும். இரண்டும் சேர்த்து வந்ததற்குப் பின் மொழி பெயர்த்ததற்குப் பிறகு அவையிலே வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இ. மனோகரன் : துணைத் தலைவர் அவர்களே பதில் சொல்லி, சமாளிப்பதிலே நாவலர் வல்லவர் என்று நாட்டிற்குத் தெரிந்த ஒன்று. இவ்வளவு தெளிவாக சர்க்காரியா சொன்ன தற்குப் பிறகு, இனிமேல் தெரிந்து கொள்ள ஒன்றுமே இல்லை. டீட்டெய்ல்ட் அண்ட் எக்சாசிட்டிவ் ரிப்போர்ட்' என்று சொன்ன தற்குப் பிறகு, எந்த மாநில அரசும் இப்படிப்பட்ட அறிக்கையை தரவில்லை என்று அழுத்திச் சொன்னதற்குப் பிறகு, சொல் கிறார் அவர்கள் விளக்கம் கேட்டிருக்கிறார்கள். அதை அரசு அனுப்பி இருக்கக் கூடும் என்று அவருக்கே தெரியவில்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, முதலில் அறிக்கையைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். அந்தக் குழுவிலே இருப்பவர்கள் சாட்சியம் அளிக்கின்ற போது விவரங்களைக் கேட்டார்கள். அதையெல் லாம் குறித்துக் கொண்டு, பதில் அனுப்புகிறோம் என்று சொல்லியிருக்கிறோம். அந்த விவரங்களையும் சேர்த்து அறிக்கை இங்கே வைக்கப்படும். எக்சாஸ்ட்டிவ்' என்றால் இனிமேல் சொல்வதற்கு ஒன்றுமேயில்லை என்று பொருளல்ல ஆகவே அவர்கள் கேட்ட விவரங்களை அனுப்புவதால் நமக்கும் தெளிவு பயக்கும், அவர்களுக்கும் தெளிவு பயக்கும். ஆகவே அந்த விவரங்களும் சேர்த்து இந்த அறிக்கையோடு வைக்கப்படும். அந்த விபரம் தேவையில்லை, இப்போது இருக்கிற அறிக்கையை வைத்தால் போதுமானது என்று அவையினர் கருதுவார்களானால் அதை மொழி பெயர்த்து வைத்து விடலாம். ஆனால் இந்த விவரங்களையும் சேர்த்து வைப்பது நல்லது என்ற முறையிலே தான் இதையும் மொழி பெயர்த்து வைக்கவிருக்கிறோம். ஆகவே அது வைக்கப்படும். என்று தெளிவாகச் சொல்கிறேன்.

திரு இ. மனோகரன் : துணைத் தலைவர் அவர்களே, நாவலர் அவர்கள் இவ்வளவு தெளிவாகச் சொன்னதற்குப் பிறகு 'டீடெய்ல்ட் அண்ட் எக்சாஸ்ட்டிவ் ரிப்ளை' தந்ததற்குப் பிறகு அவரிடம் நான் வேறு எதைச் சொல்வேன் என்று எனக்குப் புரியவில்லை. நான் அவரைப் பார்த்து கேட்கிறேன். அரசு சமர்ப்பித்துள்ள ரிப்போர்ட்டை பற்றி தெரிந்து கொள்ள வேண்டு மென்று துடிப்பு நாட்டிற்கு இருக்கிறது. அந்த நாடிப் துடிப்பு உங்களுக்கு புரியும், உங்களுக்கு கேட்கும் என்று நான் நம்பு கிறேன். இந்திப் பிரச்னையில் நீங்கள் என்ன சொன்னீர்கள்? ஸ்டேட் அட்டானமி பிரச்சினையில் சென்டர் ஸ்டேட் ரிலேஷன் பொறுத்த வரையில் பினான்ஷியல் ரிலேஷன் பொறுத்த வரையில்

நீங்கள் சர்க்காரியாவிடம் என்ன சொன்னீர்கள்? நாவலர் அவர்கள் பதிலிலே சொல்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன். அதனால் ஒன்றும் குடி மூழ்கிவிடாது. மிகச் சாதாரணமாக சொல்ல வேண்டியது தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நாங்கள் அளித்த ரிப்போர்ட்டை 'பப்ளிக் டாகுமெண்டாக' நாங்கள் தந்திருக்கிறோம். அந்த தைரியம் இந்த அரசிற்கு இல்லையென்று நான் வாதாடவில்லை. ஏதோஒன்று அவர்களை தடுத்து நிறுத்துகிறதோ என்று எனக்கு புரியவில்லை ஆனால் நாவலர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். அறிக்கை இந்த அவைக்கு வைக்கப்படுமென்று தெரிவித்தார்கள். நான் அவர்களைக் கேட்டுக் கொள்வது ஒன்றே ஒன்று. எங்களுக்கு முதலில் 'டீட்டெய்ல்ட் அண்டு எக்சாஸ்ட்டிவ் ரிப்போர்ட்டை வைத்துவிடுங்கள் அதற்குப் பிறகு நீங்கள் இரண்டாவதாக அனுப்புகிற சப்ளிமெண்டரி இருக்கிறதே, அதை இன்னொரு கட்டத்தில் இந்த அவையில் வைத்து விடுங்கள். முதலில் உங்களை நாங்கள் தெரிந்து கொள்கிறோம். இன்னும் சொல்லப்போனால் உங்களை முதலில் இந்த நாட்டு மக்கள் தெரிந்து கொள்ளட்டும். நாவலர் அவர்கள் அவ்வளவு சுலபத்தில் வளைந்து கொடுக்கக் கூடியவர் அல்ல என்பது எனக்குத் தெரியும். அவர் வாதாடுவார். ஆனால் அவரது கரங்கள் ஒருவேளை கட்டப் பட்டிருக்கிறதோ என்ற சந்தேகம் கூட எனக்கு இல்லை. கட்டப்படாது.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மொழிப் பிரச்சினையைப் பேசிவிட்டு நாவலர் கரங்கள் ஏதோ கட்டப்பட்டிருப்பது போல பேசிக் கொண்டிருப்பதுதவறான கருத்து பத்திரிகையில் வந்துவிடுமென்று அஞ்சியே நான் இந்தப் பதிலைச் சொல்ல விரும்புகிறேன். எதற்குமே சந்தேகப்படாத, யாரையுமே சந்தேகப்படாத என் அருமை நண்பர் நாஞ்சில் மனோகரன் அவர்களை நான் சந்தேகப் பட மாட்டேன். நான் சந்தேகப்படுவதாக இல்லை. ஆனால் மொழிப் பிரச்னையில் அவரும் எங்களைச் சந்தேகப்படக் கூடாது என்பதற்காகத் தான் சொல்கிறேன். இதனை மிகத் தெளிவாக தெரிவித்துக் கொள்கிறேன். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இந்தி மொழி எதிர்ப்பில் யாருக்கும் பின்வாங்கியதில்லை என்று உறுதியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எந்தக் காரணத்தைக் முன்னிட்டும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் மொழிப் பிரச்னையில் விட்டுக் கொடுக்க மாட்டோம்.

(முற்பகல் 11–40.)

பேரறிஞர் அண்ணா அவர்கள் வகுத்த மொழிக் கொள்கையை இறுதி வரையில் காப்போம். பதவி முக்கியம் என்று நினைக்க மாட்டோம். மொழிக் கொள்கையே எங்களுக்கு முக்கியம். அண்ணா அவர்களுடைய லட்சியமே இந்தக் கழகத்திற்கு முக்கியம்.





திரு. கி. மனோகரன்: அத்தோடு ப. உ. ச. அவர்கள் ஒன்றைக் கூட சேர்த்துக் கொள்ளலாம், அண்ணா நாமம் வாழ்க என்று. நான் கட்டப்பட்ட கரங்கள், அதற்குச் சொந்தக்காரர் என்றெல்லாம் சொல்லவில்லை.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: துணைத் தலைவர் அவர்களே, நண்பர் நாஞ்சில் மனோகரன் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். நாங்கள் அண்ணா நாமம் வாழ்க என்று சொல்கிறோம். தயவு செய்து மனோகரன் அவர்கள் அதையே சொல்லவேண்டும். வேறு நாமத்தை சொல்லிவிட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன் (கரகோஷம்).

திரு. கி. மனோகரன்: இந்தக் கரகோஷத்தைக் கேட்கிற போது நான் எவ்வளவு மகிழ்ச்சிப் படுகிறேன் தெரியுமா? அண்ணா அவர்களுடைய பெயரைச் சொல்லிக்கொண்டே, அவர்களுடைய கொள்கையை நிறைவேற்றாமல் இருக்கின்ற ஒரு அரசு, என்னைப் பார்த்து, நீ அண்ணா நாமம் வாழ்க என்று சொல்கிற அளவுக்கு நான் ஆகிவிட்டேனே என்பதற்காக, மதிப்பிற்குரிய சண்முகம் அவர்களிடம் என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: துணைத் தலைவர் அவர்களே, அண்ணாவின் கொள்கையை நாம் விட்டுவிட்டோம் என்று சொல்கிறார்கள். எந்தக் கொள்கையை விட்டுவிட்டோம் என்பதைப் பற்றி பேசுவதாக இருந்தால் அதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். எந்தக் கொள்கையையும் அண்ணா தி. மு. கழகம் விட்டுக் கொடுக்கவில்லை என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கி. மனோகரன்: மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, அண்ணா அவர்களின் கொள்கையை, மொழிக் கொள்கையை உயிர் போனாலும் காப்போம், பதவி எங்களுக்கு பெரிதல்ல, என்று சொன்ன, சண்முகம் அவர்களின் உள்ள உணர்வை, இதயத் தூய்மையை நான் தலைதாழ்த்தி வரவேற்கிறேன். இப்போது எனக்கு நினைவிலே வருகிறது. பல பேர்கள் மறந்திருக்கக்கூடும் என்பதற்காக நினைவூட்ட விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் தனக்கு இருந்த வேதனை காரணமாக, திணிக்கிறார்களே இந்த மொழியை, வேண்டாம் என்று சொன்னதற்குப் பிறகும் என்ற வேகத்தோடு அப்போது பிரதம அமைச்சராக இருந்த திருமதி இந்திராகாந்தி அம்மையாரைச் சந்திப்பதற்கு முன்பு. இனிமேல், இங்கே என். சி. சி. தேவையில்லை ஏன் என்றால், என். சி. சி. யில் கட்டளைச் சொற்கள், இந்தியிலே பயன்படுத்தப்படுகின்றன என்று கருத்து தெரிவித்த நேரத்திலே அப்படித் தெரிவித்ததோடு மட்டுமல்லாமல், டெல்லிக்குச் சென்று, அம்மையார் அவர்களோடு பேசிக்கொண்டிருக்கின்ற நேரத்திலே அம்மையார் அவர்கள் சொன்னார்கள்.

"Mr. Annadorai, after all we are using five Hindi words, Can't you accept them"

128—393—10

அதற்கு அண்ணா அவர்கள் பதில் சொன்னார்கள், அவர்களுக்கே உரிய பாணியிலே, "Madam, after all only five words, can't you give them up?" என்று 5 வார்த்தைகள் தானே பயன்படுத்து கிறார்கள், இந்தியில் அதை நீங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடாதா? என்று அன்னை இந்திரா கேட்டபோது, 5 வார்த்தைகளைத் தானே நீங்கள் பயன்படுத்துகிறீர்கள், அதை விட்டுவிடக்கூடாதா என்று கேட்ட, பாரம்பரியத்திற்குச் சொந்தக்காரர்கள்தான் அங்கே இருப்பவர்களும், இங்கே திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருப்பவர்களும் என்பதை இந்த நல்ல சந்தர்ப்பத்திலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதற்குப் பிறகு, இந்தச் சர்க்காரியா அறிக்கையை பற்றி நாவலர் அவர்கள் விளக்குவார்கள் என்று நான் எதிர்பார்க் கிறேன், அல்லது அந்த அறிக்கையை சீக்கிரம் கொண்டு வரு வார்கள் என்ற எனது திட்டவட்டமான கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

"அபாலிசன் ஆப் கவர்னர்ஷிப்" எந்தக் காரணத்தைக் கொண்டும் கவர்னர் போஸ்ட் இருக்கக்கூடாது. அது தேவை யற்ற ஒன்று. இதை அடிக்கடி பேசி வந்தவர் நாவலர். பேசி வந்தவன் நான். இந்தக் கருத்துக்களுக்கு வடிவம் சமைத்தவர் டாக்டர் கலைஞர். ப. உ. ச. அவர்களுக்கே தெரியும். ஆகவே, இந்த கவர்னர் போஸ்டை எடுக்கவேண்டும் என்று நாங்கள் விரும்புவது, தனிப்பட்ட மனிதரிடம் இருக்கிற தகராறு....

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஒரு சின்ன திருத்தம். தயவு செய்து மன்னிக்க வேண்டும். குறுக்கிடுவதற்காக, கவர்னர் பதவி தேவையில்லை என்று சொன்னது, அவருடைய கட்சித் தலைவர் என்று அவருடைய பெயரைச் சொன்னார். கவர்னர் பதவி தேவையில்லை என்று முதலிலே சொன்னவர், பேரறிஞர் அண்ணா அவர்கள். அப்போது 1957-லேயிருந்து, 1962 வரை, 15 பேராக இருந்த சட்டமன்ற உறுப்பினர்கள், கவர்னர் உரைக்குக்கூட வராமல் இருந்தோம் என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள்தான் முதலிலே சொன்னார்கள்.

திரு. கி. மனோகரன்: அவர்கள் பழைய நிலைமைகளை எல்லாம் சொல்கிறார்கள். மகிழ்ச்சியோடு நான் வரவேற்கிறேன். ஆகவே நீங்கள் இந்தப் பிரச்சனையில் உறுதியாக இருப்பீர்கள் என்றும், நான் ப. உ. ச. அவர்களின் வார்த்தைகளை அடிப் படையாக எடுத்துக் கொண்டு, அதை நம்பி, பத்திரிகை நிருபர்கள் என்னைக் கேட்டால், "Abolition of Governor's post. That is our philosophy" என்று ப. உ. ச. அவர்கள் அவையில் உறுதி அளிக்க



இருக்கிறார் என்றும் அது அரசாங்கத்தின் உறுதிமொழி என்றும் நான் தெரிவிப்பேன் என்பதை அவரது அனுமதியோடு தெரிவிக்க விரும்புகிறேன்.

ஏன் அது தேவையில்லை என்று நாங்கள் பல காரணங்களைச் சொல்லியிருக்கிறோம். தனிப்பட்ட மனிதர் மீது இருக்கின்ற குரோத உணர்ச்சி அல்ல, அது popularly elected democratic government—ஐ சில பேர்களை வீழ்த்துவதற்கு துணையாக இருக்கிறார்களே என்பதற்காக அல்ல, அதுவும் ஒரு காரணமாக கூட இருக்கக்கூடும். தேவை அற்ற பண விரயம் அதன் மூலம் ஏற்படுகிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இத்தோடு என்பேச்சை முடித்துக்கொள்கிறேன். இந்த அவை அதை ஏற்றுக்கொள்ளும் என்ற நம்பிக்கையில் சொல்ல விரும்புகிறேன். முதலமைச்சராக இருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் எவ்வளவோ எனக்குப் வேண்டியவராக இருந்தார், திரு சண்முகம் அவர் களுக்கும் வேண்டியவராக இருந்தார், இருக்கிறார். எனக்கு இப்போதும் இருக்கிறார். பாசம் இருக்கத்தான் செய்யும். அது வேறு விஷயம். ஆனால் நான் உங்களுக்குத் தெரிவிக்க விரும்பு கிறேன். இந்தப் பக்கத்திலே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு முதல் வரும், அந்த பக்கத்திலே ஒரு நாமினேட்டடு பர்சனும் இருந் தால் இந்த இரண்டு பேரில் யாரை தேர்ந்தெடுப்பீர்கள் என்றால் 'எலக்ட்டடு பர்சன்தான் எனக்கு முக்கியமே தவிர not nominated person" என்பதை இந்த சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிப்பட்டவர்கள் அடக்க ஒடுக்கமாக பேசுவது நல்லது. கண்ட கண்ட இடங்களில் சென்று கண்ட கண்டபடி பேசுவது ஆளுநருக்கு நல்லது அல்ல என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

Dr. K. SOURIRAJAN: Mr. Speaker sir, nominated person is also nominated by an elected person.

திரு. கி. மனோகரன்: எலக்ட்டடு பர்சன் அவரால் தேர்ந் தெடுக்கப்படுகிறார் என்று நண்பர் சௌரிராஜன் அவர்கள் சொல்கிறார்கள். ஏதாவது சொல்லவேண்டும் என்பதற்காக அவர் சொல்கிறார். நான் தெரிவிப்பது அது அல்ல. எலக்ட்டடு பர்சன் இங்கே இருக்கிற முதல்வர். இங்கே இருக்கிற முதல்வரைச் சொல்லவில்லை. முதல்வர் ஒரு பக்கத்தில் இன்னொரு பக்கத் தில் நாமினேட்டடு பர்சன் இந்த இரண்டு பேர்களில் நீங்கள் யாரை தேர்ந்து எடுப்பீர்கள் என்றால் அந்த நாமினேட்டடு பர்சனை தேர்ந்தெடுப்பதே ஒரு தேர்ந்தெடுக்கப்பட்டவர் அல்லவா என்பது அல்ல என்னுடைய பிரச்சினை. எனது பிரச்சினை எல்லாம் இங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சர் இங்கே நாமினேட்டடு செய்யப்பட்ட ஒரு மேதகு ஆளுநர் இந்த 2 பேர்களில் அதிகார வரம்பு யாருக்கு அதிகம் என்றால்

நிச்சயமாக நான் தெரிவிக்க விரும்புகிறேன் முதலமைச்சருக்குத்
தான். முதலமைச்சரின் அதிகாரத்தை கேள்வி கேட்டுக்கொண்டு
ஒரு கவர்னர் தன் பதவியை செம்மையாக தொடங்கமுடியும்
என்று நான் நம்பவில்லை, தொடர முடியும் என்று நான் நம்ப
வில்லை. இந்த உணர்வை நாம் பெற்று ஆக வேண்டும், நான்
எந்த முதலமைச்சரையும் கலந்து பேச வேண்டிய அவசியம்
இல்லை. எனக்கு அரசியல் சட்டத்தில் அதிகாரங்கள் வரையறுக்
கப்பட்டு இருக்கின்றன, என்று தெரிவிப்பார்களானால் அந்த
அரசியல் சட்டத்தில் வரையறுக்கப்பட்ட அதிகாரங்களின்
நோக்குகள், போக்குகள் எல்லாம் உங்களுக்கும் தெரியும் எந்த
எந்த சந்தர்ப்பத்தில அவைகள் எப்படி வளைந்து கொடுக்கின்றன
என்றும் உங்களுக்குத் தெரியும்.

உதாரணத்திற்குச் சொல்கிறேன், இந்தியன் கான்ஸ்ட்டி
டியுஷனை நீங்கள் எடுத்துக்கொண்டாலும் சரி, 'largely un-writ.en'
என்று சொல்லப்படுகிற ஆங்கில நாட்டு அரசியல் சட்டத்தை
நீங்கள் எடுத்துக் கொண்டாலும் சரி அதிகாரம் யாருக்கு அதிகம்
என்று எழுதி இருக்கும் என்றால் மறந்து விடாதீர்கள் 'கிங்'
என்று இருக்கும். அதற்கு தலைவர், அல்லது தலைவி அல்லது
கிங் என்று இருக்கும். எல்லாவற்றிற்கும் மொத்த அதிகாரம்
படைத்த சர்வகலா வல்லவனாக அந்த நாட்டு மன்னன் அல்லது
மகாராணி இருப்பார்கள். ஆனால் நடைமுறையில் இந்தியா
துணைக்கண்டம் ஆனாலும் சரி, காமன்வெல்த் நாடுகள் எது
வானாலும் சரி நீங்கள் எடுத்துக் கொண்டால் நடைமுறையில்
பிரதமர் தான் அதிக அதிகாரம் படைத்தவராக இருக்கமுடியுமே
தவிர குடியரசு தலைவர் அல்ல என்பதை இந்த சந்தர்ப்பத்தில்
நான் தெரிவிக்க கடமைப்பட்டு இருக்கிறேன். அந்த அடிப்படை
யில் தான் நான் இந்தக் கருத்தை சொல்கிறேன். Abolition of
Governorship is a must. It is an outdated, outmoded concept.
இதை வைத்துக்கொண்டு வேறு எதுவும் சொல்வதற்கு இல்லை.

கடைசியில் அவர் படித்த அந்த அறிக்கையில் ஒரு பளப்
பளப்பான உள்ள கிளர்ச்சியை ஊட்டுகின்ற ஒரு கருத்தை மட்டும்
தெரிவித்து விடைபெறுகிறேன்.

(முற்பகல் 11.50)

''வீடில்லாதாருக்கு வீட்டு வசதிக்கு வகை செய்யும் பெரிய
தொரு திட்டமொன்றை அடுத்த நிதி ஆண்டில் செயற்படுத்த
அரசு கருதுகிறது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்
கொள்கிறேன்'' கவர்னர் பேசுகிறார். ''போதிய வீட்டு வசதி
யின்றி அல்லலுறும் ஆதி திராவிடர்கள், பழங்குடி மக்கள்,
நரிக்குறவர் ஆகியோருக்காக 5 இலட்சம் வீடுகள் கட்டப்படும்.
அதை போன்று வறுமைக் கோட்டிற்குக் கீழே அவதியுறும் ஏனைய
குடும்பங்களுக்கும் 5 இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும்.
இந்த நலிந்த பிரிவினர்களுக்கு வீட்டு வசதியை அளிக்க வேண்டு



மென்ற பாராட்டத்தக்க நோக்கத்தை மூன்றாண்டுகளில் முப்பது
இலட்சம் மக்களுக்கு குடியிருப்புகள் கட்டி முடித்து விட வேண்டு
மென்பதுதான் இத் திட்டத்தின் உறுதியான நோக்கமாகும்''
என்று தெரிவிக்கப்பட்டது.

நான் வேறு எதையும் சொல்லவில்லை. If wishes are horses
பாதி சொல்லிவிட்டேன். மீதியை நீங்கள் முடியுங்கள் என்று
சொல்லி அமைகிறேன், வணக்கம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவையி
னுடைய துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்
கள் இந்த மாமன்றத்திற்கு அளித்துள்ள உரையின் மீது நடை
பெறுகின்ற இந்த விவாதத்திலே கலந்து கொண்டு இந்திய தேசிய
காங்கிரஸ் கட்சியின் சார்பிலே ,இதுவரை பேசிய உறுப்பினர்
களின் கருத்துக்களோடு என்னுடைய கருத்துக்களையும் இணைத்
துக் கொண்டு நிறைவுரையாக என்னுடைய கருத்துக்களை இந்த
அவை முன்னாலே வைக்க விரும்புகிறேன்.

மேதகு ஆளுநர் உரையின் மீது எனக்கு முன்னாலே பேசிய
திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அவை துணைத் தலை
வர் அவர்கள், முதியவர் - நான் முதியவர் என்று சொல்கிற
நேரத்திலே, என்னை விட அனுபவத்திலே முதியவர் என்று
சொல்கிறேன். கோபித்துக் கொள்ள வேண்டாம். அனுபவத்
திலே முதியவர்—(குறுக்கீடு)— பக்குவமானவர் என்று சொல்கிற
எண்ணத்திலே எனக்குப் பரிச்சயம் கிடையாது. நாடாளுமன்றத்
திலே பணியாற்றி இருக்கிறார்கள். இதே அவையிலே இரண்டா
வது இடத்திலே, ஆளுங்கட்சி வரிசையிலே இருந்து பணியாற்றி
இருக்கிறார்கள். இன்றைக்கு எதிர் வரிசையிலே, திராவிட
முன்னேற்றக் கழகத்தினுடைய துணைத் தலைவராகப் பணியாற்றி
கொண்டிருக்கிறார்கள்— அவருடைய உரையை, எப்போது பேசி
னாலும் நான் மெத்த கவனத்தோடு கேட்பது வழக்கம்.

அவர் இன்றைய உரையினுடைய இறுதிக் கட்டத்திலே, நிறை
வுரையாக மேதகு ஆளுநர் அவர்களைப் பற்றி ஒரு கருத்தை
வெகு அழுத்தமாக, வெகு தெளிவாகச் சொல்லி அமர்ந்திருக்
கிறார்கள். எனக்கிருக்கின்ற ஆதங்கம் எல்லாம், இதே கருத்
தினை, இவ்வளவு வலிவான கருத்தினை அவர்கள் ஆட்சிக் கட்சி
யிலே, இரண்டாவது வரிசையிலே இருந்திருக்கிற போது, சொல்லி
இருப்பார்களானால், அந்தக் கருத்து, அந்த மதிப்புக்கும், அப்
போது அவர்கள் ஏற்றுக் கொண்டு இருந்த பதவிக்கும் ஏற்றதாக
இருந்திருக்கும். ஏனோ, அந்த வாய்ப்பை அன்றைக்கு நழுவ
விட்டுவிட்டு, இன்றைக்கு பேசி இருக்கிறார். என்ன செய்வது ?
பின்னால் தான் ஞானோதயம் ஏற்படுகிறது.

[1986 சனவரி 23

திரு. இ. மனோகரன் : நான் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோதும், சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றிய போதும் மட்டும் அல்ல, இரண்டாவது இடத்தில், அவை முன்னவராகவும், நிதியமைச்சராகவும் இருந்த நேரத்திலேயும் பேசுகிற கூட்டங்களில் எல்லாம் திட்டவட்டமாக இந்தக் கருத்துக்களை பரப்பிட நான் தவறவில்லை, என்பதை மாண்புமிகு உறுப்பினர் எனது அருமை நண்பர் சித்தன் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட ஒரு வலுவான கருத்தினை அன்றைக்கு அவர்கள் அந்த வரிசையிலே இருந்து பேசியதாக எனக்கு நினைவில்லை. ஆனாலும் கூட, அவர் ஒரு நல்ல பாராளுமன்ற சம்பிரதாயவாதி என்கின்ற காரணத்தினாலே, அவர் சொல்கிற அந்தக் கருத்திலே எனக்கு ஏற்பு இல்லாவிட்டாலும், ஏற்றுக் கொள்கிறேன். மேதகு ஆளுநர் உரையிலே பல அம்சங்களை என்னாலே பார்க்க முடிகிறது.

இந்திய நாட்டினுடைய பிரதமராக பல்லாண்டுக் காலம் வாழ்ந்து, இந்த நாட்டினுடைய ஒற்றுமைக்காக, ஒருமைப்பாட்டிற்காக, நலத்திற்காக, வளத்திற்காக, எதிர்கால சந்ததியின் முன்னேற்றத்திற்காக, இறுதி மூச்சு வரை பாடுபட்டு, தன்னுடைய இறுதிச் சொட்டு இரத்தத்தையும் இந்த மண்ணுக்கே அர்ப்பணித்து, இறந்தும், இறவாது புகழோடு இருந்து கொண்டிருக்கிற அன்னை இந்திரா காந்தி அவர்களுடைய இருபது அம்ச திட்டத்தை நம்முடைய தமிழக அரசு நல்ல முறையில் செயல்படுத்தி, இந்தியா முழுமைக்கும் எடுத்துக் கொண்டால், முதன்மையான இடத்தைப் பெற்றிருக்கிறது என்ற செய்தியைப் பார்க்கும் போது என்னுடைய வாழ்த்துக்களை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதே நேரத்தில், எங்கள் வரிசையிலே இருந்து பேசிய மாண்புமிகு சகோதரி பொன்னம்மாள் அவர்கள் சொன்னதைப் போல, இந்த இருபது அம்சத் திட்டத்தை நிறைவேற்றுகின்ற நேரத்திலே காணப்படுகின்ற குறைகளை எல்லாம் களைந்து, இன்னும் நல்ல முறையில் இருபது அம்சத் திட்டம் கொண்டு வரப்படுமானால், வறுமைக் கோட்டின் அடித்தளத்தில் இருக்கிற, சமுதாயத்தின் அடித்தளத்திலே இருக்கிற ஏழை எளிய மக்களுக்கு இன்னும் அது பலனுள்ளதான திட்டமாக அமையும் என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். இருபது அம்சத் திட்டத்தை முதன்மைப்படுத்துவதிலே என்றைக்குமே தமிழக அரசு முதன்மையாக இருக்க வேண்டும்; எங்களுடைய பாராட்டைப் பெற வேண்டும் என்ற ஆசையையும், ஆதங்கத்தையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



1986 சனவரி 23] [திரு. என். எஸ். வி. சித்தன்]

அடுத்தபடியாக இந்த உரையிலே, சில பல இடங்களில் மத்திய அரசை பாராட்டியும், இந்தியாவினுடைய இளைய பிரதமராக, மேன்மைக்குரிய ராஜீவ் காந்தி அவர்கள் வந்திருப்பதற்கு நன்றி தெரிவித்தும், அவர்கள் வருகை தந்ததற்கும் நன்றியைத் தெரிவித்திருப்பதைப் பார்த்து நான் மகிழ்ச்சியடைகிறேன்.

உதாரணமாக வெள்ள நிவாரணப் பணிகளுக்காக ரூ. 66.81 கோடி அளித்ததற்காகவும், இலங்கைப் பிரச்சினையில் இந்தியப் பேரரசு எடுத்துக் கொண்ட முடிவிற்கு வரவேற்பு தெரிவித்தும், தமிழகத்திற்கு அரிசி தேவைப்படுகிறது என்று சொன்னபோதெல்லாம் கொடுத்துக்கொண்டிருக்கிற மத்திய அரசு 1985 நவம்பர், டிசம்பர் மாதங்களில் 50 ஆயிரம் டன் அரிசி கொடுத்தது என்று நல்லெண்ண சமிக்ஞையை தெரிவித்து, வரவேற்றதை எண்ணி இந்த அரசை நான் மனந்திறந்து பாராட்டுகிறேன்.

மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் இடையே ஏற்பட்ட இந்த இணக்கமான உறவு நீடிக்கும் என்று நம்புகிறேன். நீடிக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

மேதகு ஆளுநர் உரையின் 22-வது பக்கத்தில் ''ஒரு சாதாரணக் குடிமகனின் அடிப்படைத் தேவைகள், நமது மாநிலத் தொழில் உற்பத்தியிலிருந்தே நிறைவு செய்யப்படும் நிலை உருவாக வேண்டும்'' என்ற கருத்தைத் தெளிவு படுத்தியிருக்கிறார்கள். ஆளுநரின் இந்தக் கூற்றை, இந்த அரசின் கருத்தாக, கூற்றாக நான் எடுத்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த நோக்கம் நல்ல நோக்கம். நல்ல இலட்சியம். இந்த இலட்சியத்தை ஓர் ஆண்டிற்குள்ளாக, அல்லது ஐந்து ஆண்டுகளுக்குள்ளாக நிறைவேற்றுவோம் என்று நான் சொல்ல மாட்டேன். நம்பவும் மாட்டேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஆனால் இந்தத் திட்டங்களை நிறைவேற்றும் பாதையிலே இந்த அரசு அடி எடுத்துச் செல்கிறதா என்ற வினாவினை இந்த நேரத்தில் என்னால் எழுப்பாமல் இருக்க முடியவில்லை. ஆளுநருடைய உரையின் நான்காவது பக்கத்திலே இலங்கை தமிழர் பிரச்சினையைப் பற்றி மைய அரசு எடுத்துள்ள முடிவைப் பற்றி, நிலையினைப் பற்றி அதனுடைய அழுத்தமான நம்பிக்கையையும், ஆதரவையும் தெரிவித்திருக்கிறது. இந்த வேளையிலே மிக முக்கியமான பிரச்சினையில் என்னுடைய கவலையைக் குறிப்பிடுவது மெத்த பொருத்தமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அது தமிழகத்தினுடைய பிரச்சினையாக மட்டும் அல்லாது, இந்தியத்

திருநாட்டினுடைய பிரச்சினையாக தெரிவித்துக்கொண்டு, எதிர் கால சந்ததியினருடைய வாழ்வையும், தமிழகத்தினுடைய பத்திரத்தையும் உத்தேசித்து, அதைச் சுட்டிக்காட்டுவது பொருத்தமாக இருக்குமென்று நான் விரும்புகிறேன். நம் முடைய தாய்த் திருநாட்டிற்கு எல்லையிலே இருக்கின்ற நாடாக எப்போதும் கொக்கரித்துக் கொண்டிருக்கும் நாடாக பாகிஸ்தான் இருந்துகொண்டிருக்கிறது. பாகிஸ்தானால் நம்முடைய தாய்த் திருநாட்டிற்கு ஆபத்து வரவேண்டு மானால், அது பஞ்சாப் மூலமாக வரவேண்டும் அல்லது காஷ் மீர் மூலமாக வரவேண்டும் என்று எண்ணுகிற வேளையிலே இந்த இரண்டு மாநிலங்களால் மட்டுமல்ல, தமிழகத்தினால் கூட வந்து விடுமோ என்ற அச்ச உணர்வை, கவலையை என்னால் இந்த நேரத்திலே தெரிவிக்க வேண்டிய நிலை வந்திருக்கிறது. இந்தியாவினுடைய தமிழகத்தினுடைய சவாலாக இந்தப் பிரச்சினை இருந்துகொண்டிருப்பதாக நான் கருதுகிறேன். பாகிஸ்தான் அரசு, பக்கத்திலே இருக்கின்ற இலங்கைத் தீவிற்கு பெருத்த அளவிலே இராணுவ தளவாடங்களை வழங்கிக்கொண் டிருக்கிறது என்பதை இலங்கையில் இருக்கிற தமிழ்த் தலைவர்கள் மட்டுமல்ல, பல நாட்களாக பலரும் சொல்லிவந்திருக்கிறார் கள். நான் எண்ணிப் பார்க்கிறேன். கடந்த ஆண்டு பாகிஸ் தான் அதிபர், இலங்கை அதிபர் ஜெயவர்த்தனே பாகிஸ்தா னுக்குப் போய் வந்ததற்குப் பின்னர், மரியாதை நிமித்தமாக சென்றிருந்தபோது, அவருடைய 3 நாட்கள் சுற்றுப்பயணத்தை 5 நாட்களாக அதிகரித்து, இலங்கைத் தீவில் தங்கியிருந்திருக்கி னார்கள். அவர் தங்கியிருந்த நேரத்திலே ஒரு பொதுக் கூட்டத் திலே பேசுகின்ற நேரத்தில், இலங்கையில் இருக்கின்ற தமிழ் பேசும் முஸ்லீம்கள், தமிழ் பேசுகின்ற ஏனைய மக்களோடு இணைந்து இருக்கக் கூடாது, ஜெயவர்த்தனே அரசுக்குத் துணை யாக இருக்க வேண்டுமென்ற கருத்தினை அன்றைக்குச் சொன் னார்கள்.

அதுமட்டுமல்ல, பாகிஸ்தானின் நடவடிக்கையும், தமிழக அர சோடு இலங்கை அரசு கொண்டிருக்கிற தொடர்புகளையும் பார்க்கின்ற நேரத்தில், அண்மையில், 2, 3 நாட்களுக்கு முன் பாக, இந்து பத்திரிக்கையிலே வந்திருக்கிற ஒரு செய்தியை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டுவது மெத்த பொருத்தமாக இருக்குமென்று நான் கருதுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் அனுமதியோடு நான் அதை இங்கே படிக்கவிரும்புகிறேன்.

(நண்பகல் 12–00.)

'The Sri lank n President responded frankly to questions about the Pakistani, Isræ'i and mercenary inputs into the military situation in Sri Lank saying he was after all fighting a war; I must do something. I can't sit on my bed and say come take over the country to the Sri lankan Tamil Militants.



என்று சொல்லிவிட்டு மேலும் சொல்கிறார்,

in response to a specific question, he revealed; Pakistan is training our people. We have sent a large number of our people.... officers .... Oh yes— started and come back. I'm not hiding that. I must do som thing That is done quite openly. And if we want arms, we buy from them or buy them in the open market.

இது முக்கியமான கருத்து.

We have sent a large number of our people .. .. Officers .. Oh yes—started and come back.

என்று மெத்த தெளிவுபட இலங்கையினுடைய அதிபர் ஜெய வர்த்தனா பேட்டி கொடுத்துக்கொண்டிருக்கிறார். நான் இதைப் படித்ததைப் போலவே இந்த மாமன்றத்திலே உள்ள ஏனைய உறுப்பினர்களும் படித்து இருப்பார்கள் என்று கருது கிறேன். தமிழகத்திற்கு ஸ்ரீலங்காவிலிருந்து ஆபத்து வரலாம் என்ற அச்ச உணர்வை வெளியிடுகின்ற நேரத்திலே தமிழகத்தின் கிழக்குக் கடற்கரைப் பகுதியைப் பலப்படுத்த வேண்டிய அவசி யத்தை நான் வலியுறுத்த விரும்புகிறேன். நமக்கு மகிழ்ச்சி தரக்கூடிய, ஆறுதல் அளிக்கக்கூடிய செய்தியாக இந்தியப் பேர ரசு உச்சிப்புளியில் இராணுவ தளவாடங்கள் என்ற முறையிலே கப்பல் படை தளவாடத்தையும் கடற்படை தளவாடத்தையும் ஆரம்பிக்க இருக்கிறார்கள் என்ற செய்தி ஆறுதலாக இருக்கிறது. அதே நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத் துணைத் தலைவர் திரு. நாஞ்சிலார் அவர்கள் சொன்னது போல் சேதுசமுத் திரத்திட்டம் நீண்டநெடுநாட்களாக அமல்படுத்தப்படவில்லை..

திரு. பொ. உத்திராபதி : தலைவர் அவர்களே, பாகிஸ் தான் மூலமாக ஸ்ரீலங்காவிலிருந்து தமிழகத்திற்கு ஆபத்து வரும் என்ற அச்சத்தைத் தெரிவித்தார்கள். அது உண்மை தான். பாகிஸ்தானுக்கு ஆயுதம் கொடுத்து அதன் மூலம் ஸ்ரீலங்காவுக்கு ஆயுதம் கொடுப்பதன் மூலமாக இந்தியாவிற்கும் தமிழகத்திற்கும் ஆபத்து ஏற்படுத்துகிறது என்று சொல்லப்படு றதே, அது அமெரிக்கா மூலம்தான் வரும் என்று சொல்லப்படு கிறதே அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து என்ன?

திரு. என். எஸ். வி. சித்தன் : நான் இப்படியெல்லாம் பேசி உங்கள் வலையிலே சிக்கமாட்டேன். நிறைய நான் பேச வேண்டியிருக்கிறது. ஆகவே சேதுசமுத்திரத் திட்டத்தை விரை வாக அமல்படுத்த வேண்டும். அதற்கு 150 கோடி ரூபாய் ஆகும் என்று சொன்னார்கள். காங்கிரஸ் கட்சி பதவியிலே இருந்தபோது இதை நிறைவேற்றியிருக்கக் கூடாதா என்று எதிர்க்கட்சி வரிசையிலே உள்ளவர்கள் வினா எழுப்படலாம். நாங்கள் நீண்ட நெடுநாட்களாக வலியுறுத்திக் கொண்டு

வருகிறோம். பொருளாதார ரீதியில் வயபிளாக இல்லை என்று
காரணம் சொல்லப்பட்டு விட்டாலும் இன்றைக்கு அது
ஆய்விலே இருக்கிறது. தள்ளிவிடப்படவில்லை. எனவே
அதை விரைவாக அமல்படுத்த வேண்டுமென்பதை நாங்களும்
உங்களோடு சேர்ந்து அதிம்ல துணையாக இருக்கிறோம்.

தி.மு.க. துணைத் தலைவர் அவர்கள் ஏன் மத்திய அரசை
இந்த அரசு தட்டிக் கேட்கவில்லை என்று வீராவேசமாகச் சொன்
னார்கள். நான் அவர்களுக்கும் சொல்லிக் கொள்கிறேன். நீங்
களும் ஆட்சியிலே இருந்தபோது எப்படி தட்டிக் கேட்டீர்களோ,
அதே போன்றுதான் இன்றும் அ.இ.அ.தி.மு.க. கேட்டுக் கொண்
டிருக்கிறது, தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்
படும் என்பதைச் சொல்லி உங்கள் குரலோடு நாங்களும் குரல்
கொடுக்கிறோம். இதிலே கட்சி பேதம் கிடையாது. தமிழகத்
திற்கு நலத்தை, வளத்தை சேர்க்கின்ற நிலையிலே உங்கள் குரலை
எழுப்புகிறபோது நாங்கள் எங்கள் குரலையும் கொடுக்கத்தயாராக
இருக்கிறோம். அதைப்போலவே திரு. நாஞ்சிலார் அவர்கள்
ஒன்றைச் சொல்லாமல் விட்டுவிட்டார் என்று நினைக்கிறேன்.
சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரையுள்ள கடற்கரை
சாலையை பந்தோபஸ்து கருதி மத்திய அரசு எடுத்துக் கொள்ள
வேண்டும். அப்படி எடுத்துக் கொண்டால் பொருளாதாரத்
துறையிலும் பாதுகாப்புத் துறையிலும் இந்தியத் திருநாட்டிற்கும்
தமிழகத்திற்கும் அது நல்லதாக அமையும். ஆகவே, அதை
மைய அரசு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

தி.மு.க. துணைத் தலைவர் அவர்கள் மிகத் திறமையாக
எந்தப் பகுதிகள் ஆளுநர் உரையிலே குறிப்பிடப்படவில்லையோ
அவைகளைப் பற்றி பேசினார்கள். அதிலே எனக்குக் கருத்து
வேறுபாடு கிடையாது. அது அவர்களுடைய முறை. அதே
நேரத்திலே அவர்கள் இந்திப் பிரச்சினையை வைத்துக்கொண்டு,
அதை சாக்காக வைத்துக் கொண்டு இந்த மன்றத்திலே உள்ள
ஆட்சிக் கட்சிக்கும் பிரதான எதிர் கட்சியாகிய இந்திய தேசியக்
காங்கிரஸ் கட்சிக்கும் விரிசல் ஏற்படும், பூசல் ஏற்படும் என்ற
எண்ணத்திலே ஏற்கனவே சொன்ன வாதங்களையே இப்போதும்
சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட விரிசல் நிச்சயமாக
வராது என்று நம்புகிறேன். இந்திப் பிரச்சினையைப் பொறுத்த
வரையிலே எங்களுடைய கட்சி உறுப்பினர் திரு. தீர்த்தகிரி
அவர்கள் சொன்னது போல எப்படி அவர்களுக்கு இருமொழிக்
கொள்கை இருக்கிறதோ அதைப் போல எங்கள் கட்சிக்கு மும்
மொழிக் கொள்கை இருக்கிறது. அதேபோல் இந்தி திணிக்கப்படக்
கூடாது என்பதிலே நீங்களும் நாங்களும் ஒற்றுமையாக இருக்
கிறோம். எப்படி உங்களுக்கு இந்தி தெரியாதோ அப்படியே
எங்களுக்கும் இந்தி தெரியாது. ஆனால் எதிர்கால சந்ததியின
ரின் வேலை வாய்ப்பு நிலைமைகளைப் பற்றி நாம் எண்ணிப்
பார்க்க வேண்டும். இங்கேயுள்ள மாணவர்கள், குழந்தைகள்



இந்தி படிப்பதற்கான வாய்ப்பினை நாம் மறுக்கக்கூடாது.
அதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். ஏனென்
றால், சிவில் சர்வீஸ்கள் என்று சொல்லப்படுகின்ற ஐ.ஏ.எஸ்.,
ஐ.பி.எஸ்., போன்றவைகளில் தமிழர்கள் எத்தனையாவது இடத்
தில் இருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.
ஆகவே, இந்தியைப் படிக்க வேண்டுமென்று விரும்புகின்றவர்
களுக்கு அந்த வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்ற
வேண்டுகோளை நான் வைக்க விரும்புகிறேன்.

மேதகு ஆளுநர் அவர்களின் உரையிலே, சமூக, பொருளாதார
நோக்கங்களுக்கு வழி காணப்படக் கூடிய திட்டங்கள் ஏதுமில்லை
என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். இதை நான் குறிப்
பிடுகின்ற நேரத்திலே, ஆட்சிக் கட்சியிலே இருக்கின்றவர்கள்,
''ஏன், சமூக மேம்பாட்டுக்காகத்தானே ஆண்டு ஒன்றுக்கு பத்து
இலட்சம் வீடுகள் வீதம் மூன்று ஆண்டுகளில் முப்பது இலட்சம்
வீடுகள் கட்டிக் கொடுக்கின்ற திட்டத்தை நாங்கள் அறிவித்திருக்
கிறோம்; அரிசன மக்கள், பழங்குடி மக்கள், நரிக்குறவர்
ஆகியோருக்காக ஆண்டு ஒன்றுக்கு 5 இலட்சம் வீடுகளும், வறுமை
கோட்டிற்குக் கீழே அவதியுறும் மக்களுக்காக ஆண்டு ஒன்றுக்கு
5 இலட்சம் வீடுகளும் என்று மூன்றாண்டுகளில் முப்பது இலட்சம்
வீடுகளைக் கட்டிக் கொடுக்கின்ற நல்ல செய்தியை அறிவித்திருக்
கிறோம்'' என்று சொல்லுவார்கள். சமுதாயத்தின் அடித்தளத்
தில் இருக்கின்றவர்களுக்கு, அதிலும் குறிப்பாக தாழ்த்தப்பட்ட
வர்களுக்கு இலவசமாக வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் பெருந்
தலைவர் காமராஜ் அவர்கள் ஆட்சியிலே இருந்த காங்கிரஸ் ஆட்சிக்
காலத்திலே—தமிழகத்தின் பொற்காலம் என்று நாங்கள் எண்ணிக்
கொண்டிருக்கின்ற அந்த நேரத்திலேயே தொடங்கப்பட்ட
திட்டம் ஆகும். அந்தத் திட்டத்தை இந்த அரசும் தொடர்வதைக்
குறித்து நாங்கள் மகிழ்ச்சி அடைகின்றோம். அதை நாங்கள்
பாராட்டுகிறோம்.

ஆனால், அதே நேரத்தில் ஒரு வினாவை—எங்கள் கட்சியைச்
சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பிய ஒரு வினாவை
என்னால் எழுப்பாமல் இருக்க முடியவில்லை. தமிழக அரசில்
பல்வேறு வாரியங்கள் இருக்கின்றன. அந்த வாரியங்களின் மூல
மாக வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. ஆனால், அறிவித்
திருக்கின்ற இந்தத் திட்டப்படி, மூன்றாண்டுகளில் முப்பது
இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட வேண்டுமென்றால்;
நான் எண்ணிப் பார்க்கிறேன். 1983-84 ஆம் ஆண்டில் விழுப்
புரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்குகின்ற அரிசன
வீட்டு வசதி வாரியம் ஒரு புள்ளி விவரத்தைக் கொடுத்திருக்
கிறது. ஒரு வீடாக எடுத்துக் கொள்ளாவிட்டாலும், குடியிருப்
பாக எடுத்துக் கொண்டு, ஒரு குடியிருப்புக்கு 6,500 ரூபாய்
செலவாகிறது என்று கொடுத்திருக்கிறார்கள். அந்த விதத்திலே
பார்த்தால்—இன்றைக்கு விலைவாசி உயர்ந்திருப்பதையும் கணக்
கில் எடுத்துக் கொண்டு பார்த்தால் இம்மாதிரி குடியிருப்புகளைக்
கட்டுவதற்கு 9,000 ரூபாயாவது ஒரு வீட்டிற்குக் குறைந்தபட்சம்

ஆகும், அதற்கும் அதிகமாகக் கூட ஆகலாம். ஆகவே, மூன்
றாண்டுகளில் கட்டுவது என்றால் ஏறத்தாழ 900 கோடி ரூபாய்
ஆண்டுக்கு என்று எடுத்துக் கொண்டாலும், மூன்றாண்டுகளுக்கு
1,700 கோடி ரூபாய் 3,000 கோடி ரூபாய் வரையில் நம்முடைய
அரசுக்குச் செலவு ஏற்பட இருப்பதால் இந்தச் செலவைத் தமிழக
அரசு எப்படித் தாங்கப் போகிறது என்பதைத்தான் அறிய
விரும்புகிறேன். அதே நேரத்தில் நான் நிதிநிலையைப் பற்றி
மட்டும் சொல்லவில்லை. அரசாங்கத்தில் அதற்குப் போதுமான
ஆட்கள் இருக்கிறார்களா, அதற்குப் போதுமான அதிகாரிகள்
இருக்கிறார்களா, அதற்குத் தேவையான கட்டுமானப் பொருட்
களை நம்மால் சேகரிக்க முடியுமா என்ற சந்தேகத்தைப் பற்றி
யெல்லாம் எழுப்ப வேண்டியிருக்கிறது. ஏதோ ஆளும் கட்சிக்
காரர்கள் சொல்லுகின்ற திட்டம் இது என்பதால் அதை
எதிர்க்க வேண்டுமென்பதற்காக நாங்கள் இதைச் சொல்ல
வில்லை. இது எப்படிச் சாத்தியமாகும் என்ற வினாவைத்தான்
என்னாலே எழுப்ப முடிகிறது. இதுகுறித்து மாண்புமிகு அவை
முன்னவர் அவர்கள் பதில்சொல்லும்பொழுது சொல்வார்கள் என்று
எதிர்பார்க்கிறேன். வீடு கட்டிக்கொடுக்க வேண்டுமென்ற நோக்கம்
நல்ல நோக்கம்தான். அந்த இலட்சியம் நல்ல இலட்சியம்தான்.
ஆனால் அதை எப்படி நிறைவேற்றப் போகிறீர்கள் என்றுதான்
கேட்க விரும்புகிறேன்.

பாரதத்தின் இளம் பிரதமர் மேன்மைக்குரிய இராஜீவ்
காந்தி அவர்கள், ஐந்தாண்டுக் காலத்திலே 15,000 கோடி
மதிப்பீட்டிலே வீடுகளைக் கட்டிக் கொடுக்கின்ற ஒரு திட்டத்தை
அண்மையில் அறிவித்திருக்கிறார்கள். இது அந்த அறிவிப்போடு
இணைந்த திட்டமா அல்லது அதுவல்லாமல் தமிழக அரசின்
ார்பில் நடத்தப்படும் திட்டமா என்பதையும் மாண்புமிகு அவை
முன்னவரவர்கள் பதில் சொல்லும் நேரத்தில் சொல்ல வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாகவே நம்முடைய அரசினுடைய அண்மைக்கால
நடவடிக்கைகளைப் பார்க்கின்ற நேரத்திலே நம்முடைய இந்தியா
வின் இளைய பிரதமர் மேன்மைக்குரிய இராஜீவ் காந்தி அவர்கள்
தமிழகத்தின் முதலமைச்சர்மீது தனியானதொரு பாசத்தை
வைத்திருக்கிறார்கள். மரியாதையை வைத்திருக்கிறார்கள்.
நம்முடைய தமிழகத்தின் முதலமைச்சர் அவர்களுக்குத் தேசிய
பார்வை இருப்பதாக வெளிப்படையாகவே சொல்லியிருக்கிறார்
கள். அது பத்திரிகையிலேயும் வந்திருக்கிறது. உறவு இப்படி
யிருக்க நிலைமை இப்படியிருக்க, இந்த அமைச்சரவையிலே உள்ள
சில சில அமைச்சர்கள் மத்திய அரசிற்கு எதிரான கருத்துக்களை
இன்னும் சொல்லப்போனால், முதலமைச்சருக்கு ஒவ்வாத கருத்
துக்களைக் கூட வெளிப்படையாகவே தெரிவிக்கின்ற நிலை
மையை என்னாலே புரிந்து கொள்ள முடியவில்லை. அவர்கள்
அப்படிப் பேசுகின்ற நேரத்திலே மாண்புமிகு முதலமைச்சரவர்
களின் ஒப்புதலோடு அப்படிப் பேசுகிறார்களா அல்லது ஒப்புதல்
இல்லாமல் பேசுகிறார்களா என்று கேட்க விரும்புகிறேன். நான்





எண்ணிப் பார்க்கிறேன். தமிழகத்தின் முதல்வராகப் பெருந்
தலைவர் காமராஜ் அவர்கள் இருந்த நேரத்திலே, எந்தத் திட்ட
மானாலும், எந்தக் குறிக்கோளாக இருந்தாலும், எந்த இலட்சிய
மாக இருந்தாலும் காங்கிரஸ் பேரியக்கத்திற்கு அப்போது தடு
மாற்றம் இருந்தது இல்லை. அப்பொழுதெல்லாம் முதலமைச்சர்
ஒன்றை நினைக்கிறார் என்றால், ஒன்றைத் சொல்கிறார் என்றால்
அது எல்லோருக்குமே ஒரே ரீதியில், ஒரே எண்ணத்தில்தான் இருக்
கும். ஆனால் இப்போது இப்படி சுருதி பேதமான உரைகள் வரு
கின்றனவே அதற்குக் காரணம் என்னவென்றுதான் அறிய விரும்பு
கிறேன்.

(பிற்பகல் 12.10)

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, அமைச்சர்கள், மத்திய அரசைப் பற்றி
சொன்ன கருத்து—ஒரு முறை நமது இந்தியத் துணைக் கண்ட
பிரதமர் அவர்கள் ஒரு பத்திரிகைக்கு பேட்டி கொடுத்திருக்
கிறார்கள்—டெல்லி நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்
களைவிட, எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள்தான்
அதிகமாக அமைச்சர்களைப் பற்றி குறை சொல்கிறார்கள். அது
நாட்டு நலனுக்காக, என்று. அந்த அடிப்படையில் அமைச்சர்
களைப் பற்றி ஆளுங்கட்சி உறுப்பினர்கள் தமிழக அரசினுடைய
நல்ல காரியங்களுக்காக, சில நல்ல கருத்துக்களைச் சொல்லி
யிருக்கிறார்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தமிழக அரசுக்கு, உடன்
பாடான, நல்ல கருத்துக்களை, முன்னேற்றமான கருத்துக்களைச்
சொன்னால் நாங்களும் வரவேற்கிறோம்.

மது விலக்குக் கொள்கையைப் பொறுத்த அளவிலே, எங்கள்
வரிசையிலே இருக்கிற உறுப்பினர்கள் பலமுறை சொல்லியிருக்கி
றோம். பன்னி, பன்னிச் சொல்லியிருக்கிறோம், அது எங்களுடைய
ஜீவாதார இலட்சியம். அது எங்களுடைய இலட்சியம் மட்டு
மல்ல, இன்றைக்கு ஆட்சிக் கட்சியாக இருக்கிற அனைத்திந்திய
அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், தலைவராக ஏற்றுக்
கொண்டிருக்கிற அமரர் அண்ணாவினுடைய இலட்சியமாகும்.
நான் எண்ணிப் பார்த்தேன்; 1967 ஆம் ஆண்டு இந்தச்
சட்டமன்றத்திலே நான் இருந்த நேரத்திலே, அமரர் அண்ணா
அவர்கள் பேசியதை எண்ணிப் பார்க்கிறேன். எந்தக் காரணத்தை
கொண்டும், தமிழகத்தில், மது விலக்கை நான் ரத்து செய்ய மாட்
டேன். அப்படி ரத்து செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்படுமானால்,
மது என்றால் என்ன என்று தெரியாத ஒரு தலைமுறைக்கு—அவர்
கள் பிள்ளைகளுடைய பெயரைச் சொன்னார்கள்—என்ன என்று
கற்றுக் கொடுக்கிற நிலை வந்தால், நான் பதவியைப் பெரிதாக
எண்ணமாட்டேன். துண்டு எடுத்து தோளில் போட்டுக் கொண்டு
போய்விடுவேன் என்று சொன்ன வாசகங்கள் இன்னும் என் காது
களில் ரீங்காரம் இட்டுக் கொண்டிருக்கிறது. அதனாலே, இந்த
மது விலக்குக் கொள்கையைப் பொறுத்த வரையில், எங்கள்

கட்சியில் மாண்புமிகு உறுப்பினர்கள் பலமுறை சொன்ன கருத்தை நான் மீண்டும் வலியுறுத்துகிறேன். அரசாங்கம் ஈட்டுகின்ற வருவாய் பாவகாரியமான வருவாயாக இருக்க கூடாது. 'சின்ஃபுல் ரெவின்யூ'—ஒரு தலைமுறையை, ஒரு சமுதாயத்தைக் கருத்துக் குருடர்களாக, அறிவை மழுக்கி, இன்று அதன் மூலமாக வருவாய் பெறுவது என்பது ஒரு நல்ல இலட்சியமுள்ள சர்க்காருக்கு உகந்த ஒன்று அல்ல என்று நான் சொல்கின்ற நேரத்திலே, நீங்கள் ஆளுகின்ற மாநிலங்களில் அதை அமுல் செய்துவிட்டு, பின்னாலே இதைச் செய்யலாம் என்று சொன்ன அமைச்சர்களை, மாண்புமிகு உறுப்பினர்களை நான் பார்க்கிறேன். ஏனைய மாநிலங்களில் ஏற்கனவே கள்ளுக் கடைகள் திறந்து இருக்கிறார்கள். ஆனால் நாம் மூடிய கடைகளைத் திறந்திருக்கிறோம். ஆகவேதான் மீண்டும், மீண்டும் உங்களுடைய வாதத்தை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. மதுவிலக்கை அமுல்படுத்த வேண்டுமென்பதில் தெளிவாக, தீர்க்கமாக இருக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே வலியுறுத்துகிறேன்.

அடுத்த படியாக, இங்கே அண்மையில் ஒரு அறிவிப்பை நான் பார்த்தேன். நம்முடைய செய்தி மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு செய்தியினை வெளியிட்டார்கள். இனிமேல் நாள் ஒன்றுக்கு 5 சினிமா காட்சிகள் நடத்தப்படும் என்று அவர்கள் செய்தி வெளியிட்டதாக நான் பார்த்தேன். பார்த்து வேதனைப்பட்டேன். இன்றைக்கு இளைய சமுதாயத்தினுடைய கவனம் வேறு, வேறு திசைகளில் செல்கின்ற நேரத்திலே, 4 காட்சிகள் என்பதை அதிகப்படுத்தி, 5 காட்சிகளாக்க வேண்டியது அவசியம் தானா? அவர்களுடைய கவனங்கள், வேறு, வேறு, வழியிலே போய் விடுமே, ஆகையினாலே, அவர்கள் அதை மறுபரிசிலனை செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதைவிட கேடான வருத்தமான ஒரு செய்தியினை, நான் சில நாட்களுக்கு முன்னாலே, இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே பார்த்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய அனுமதியோடு நான் படிக்கிறேன். இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே, நவம்பர் 28 ஆம் தேதி அன்று அந்தச் செய்தி வந்திருக்கிறது. The Tamil N du Government has introduced a permit system in the State to possess opium for personal consumption by individuals onegrounds of health. The District Collectors have been empowered issue these permits.

Introduced under the Tamil Nadu Narcotic Drugs rules, the system came into force on November 14. (நவம்பர் 14 ஆம் தேதியே அமுலுக்கு வந்திருக்கிறது. செய்தி நவம்பர் 28 ஆம் தேதி வந்திருக்கிறது)



Any Addict desiring to possess and consume opium on medical advice should register himself with the Collector.

The Collector will make enquiries through the Police Commissioner in the case of Madras City and the Superintendents of Police in other districts to satisfy for themselves that the applicant is not less than 21 years of age on the date of application, that the applicant is a permanent resident of the State, that the health of the applicant will be seriously affected if he is not permitted to consume opium and the applicant is not likely to misuse this facility.

Every personal permit issued will be valid from the date of issue to March 31 of the succeeding year.

Every applicant should subject himself to medical examination. The medical authority should take into consideration the age, general health, medical history, and the period of habituation to taking opium and any other matter as it deems fit. என்ற ஒரு செய்தியினைப் பார்த்தேன்.

அந்தச் செய்தியைப் பார்க்கும்போது தீயைத் தொட்டது போன்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது. இளைய சமுதாயத்தினர் எத்தனையோ வழிகளில் இன்றைக்குப் பாழ்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை எண்ணிப்பார்க்கும் போது இப்படிப்பட்ட ஒரு தவறான கருத்து தேவைதானா?

இப்படித்தான் இந்த மாநிலத்திலே மதுவிலக்கை தளர்த்துகின்றபோது இந்த அரசு முதல் கட்டமாக மது அருந்த பெர்மிட் கொடுக்கிறோம் என்று சொல்லி, தளர்த்தியது. இப்போது நிலைமை என்ன? இன்றைக்கு தெருவெல்லாம் மதுகடைகள் என்ற நிலைக்கு வந்துவிட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பெர்மிட் சிஸ்டம் இன்ட்ரொடியூஸ் செய்யப்பட்டது மதுவிலக்கு இருந்த நேரத்திலேயே இருந்தது. ஏதோ புதிதாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டுவந்ததைப்போல் சொல்கிறார்கள். அது சரியில்லை. ஏற்கனவே இருந்த காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயே இருந்தது.

திரு. என். எஸ். வி. சித்தன்: எனக்கு இருக்கின்ற கவலை எல்லாம் மெல்ல, மெல்ல வந்து பின்னால் முழுமையாக வந்து விடக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். காங்கிரஸ் காலத்திலே இருந்தாலும் நீங்கள் அதை நிறுத்தி விடலாம் சமுதாய நலன் கருதி. இதனுடைய பயன் நாளை அல்லது நாளை மறு நாள் தெரியாது. ஆனால் கொஞ்சம் கொஞ்சமாக வளரும் தலைமுறை குறுகிக்கொண்டிருக்கிறது. டாக்டர்கள், எஞ்சினியர்கள், மேதைகளாக வருகின்றவர்கள் சீரழிந்து போகின்ற நிலைமை இருக்கிறது என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். சமுதாய நலன் கருதி நீங்கள் இதை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1986 சனவரி 2

அடுத்தபடியாக, இந்த மாமன்றத்திலே நான் இதற்கு மு னாலே பேசும்போது குதிரைப்பந்தயம் பற்றி பேசியிருக்கிறேன். குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதுதான் எங்கள் கட்சியின் வேலை. அதிலிருந்து நாங்கள் மாறுபடவில்லை. அதை அரசு எடுத்து நடத்துவதற்கான எண்ணம் இருக்கிறது. அதற்கான மசோதா ஒன்று வந்திருக்கிறது. இப்போதைக்கு அது நியாயம் என்று நினைத்தாலும் குதிரைப்பந்தயத்தை முழுமையாக ஒழிக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய கருத்து. குதிரைப் பந்தயத்தினால் சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கிற மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். எனவே இது ஒழிக்கப்பட வேண்டும். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இதிலிருந்து கொஞ்சம் கூடவழுவிவிடக்கூடாது.

அடுத்தபடியாக, அரசு நிர்வாகத்தில் இருக்கிற சில குறை பாடுகளை நான் தெரிவித்துதான் ஆக வேண்டும். நான் எதிர் வரிசையில் இருக்கிற காரணத்தால் இந்தக் குறைபாடுகளை கட் டாயமாக எடுத்துச் சொல்லித்தான் ஆகவேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. கழிந்த தேர்தலிலே உங்களோடு நாங்களும் ஒன்றாக இருந்தோம், தோழமை கொண்டு இருந்தோம் என்ற உணர்வோடு, நல்லெண்ணத்தோடு மக்கள் நலன் கருதி கூற விரும்புகிறேன். பல கோப்புகள் பைசல் செய்யப்படாமல் முடங் கிக் கிடக்கின்றன என்பதற்கு பல சான்றுகள் இருக்கின்றன. பல ஆண்டுக் காலமாக இந்த கோப்புகள் கையெழுத்தாகாமல் இருக் கின்றன. அதனால் வருவாய் இழப்பு ஏற்படுகிறது. 8, 9 ஆண்டுகளாகக்கூட பல கோப்புகள் கையெழுத்து ஆகாமல் இருப்ப தாகச் சொல்கிறார்கள். அதுபற்றிய விவரங்களை வேண்டு மானால் தனியாகக் கொடுக்கிறேன். நான் முதலமைச்சர் அவர் கள்மீது குற்றம் சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்ல வில்லை ; அப்படி எண்ண வேண்டாம். அவர்கள் சார்பாக அடுத்த அமைச்சர் பொறுப்பேற்றுக்கொண்டு விரைந்து நடவடிக்கை எடுக்கலாம். கோப்புகள் கையெழுத்து ஆகாத காரணத்தால் தமிழ்நாட்டிற்கு பல்வேறு கஷ்டங்கள் ஏற்படுகின் றன.

அடுத்தபடியாக, இலங்கைப் பிரச்சனையைப் பொறுத்தவரை யில் மத்திய அரசு எடுத்துக்கொண்டிருக்கிற நடவடிக்கையை தமிழக அரசு வரவேற்கிறது. நம்மைப் பொறுத்தவரையில் கட்சி வேறுபாடோ வேறு எந்தவிதமான நோக்கமோ இதிலே இல்லை. இலங்கைவாழ் தமிழர் பிரச்சனை சுமுகமாகத் தீர்க்கப்பட வேண் டும். அங்கே வாழும் தமிழர்களுக்கு எல்லா உரிமைகளும் வழங் கப்பட வேண்டும். கஷ்டப்படும் அந்த மக்களுக்கு நல்ல எதிர் காலம் தோன்றும் என்று நம்புகிறோம்.

அதே நேரத்தில் தமிழ்நாட்டுக்கு ஏராளமானவர்கள் அகதி களாக வந்திருக்கிறார்கள். அகதிகளாக வருகிறபோது இன்னொரு வியாயத்தையும் நாம் எண்ணிப் பார்க்காமல் இருக்க முடிய வில்லை. இன்றைக்கு வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டு



1986 சனவரி 23] [திரு. என். எஸ். வி. சித்தன்]

வருகிறது. பொதுவாக வாக்காளர் பட்டியல் தயாரிக்கின்ற போது வாக்காளர்களுடைய பெயர், பெற்றோர் பெயர், தொழில், வயது ஆகிய விவரங்கள் தான் எடுக்கப்படுகின்றனவே தவிர, அவர்கள் எங்கிருந்து வந்தார்கள் என்ற விவரத்தை எடுக்க வில்லை. இப்படி வருகின்றபோது இலங்கையிலிருந்து வந்தவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக உரிமை பெற்று, இறுதியில் இன்னொரு அஸ்ஸாமாக தமிழகம் உருவாகிவிடக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். அரசாங்கம் அதனை கவனித்துக்கொள்ள வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த மன்றத்தில் பல்வேறு காலகட்டத்தில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சிக்கும் அண்ணா திராவிட முன் னேற்றக் கழகத்திற்கும் அவ்வப்போது சிறு சிறு மோதல்கள் என்று சொல்லமாட்டேன், கருத்து வேறுபாடு வந்திருக்கிறது. அதற்குக் காரணம் தமிழ்நாட்டிலே தொழில்களை ஆரம்பிப் பதில், போதுமான நிதி ஒதுக்கீடு செய்வதில், மத்திய அரசு அவ் வளவு அக்கறை காட்டவில்லை என்ற மாநில அரசின் கருத்து தான். அவை முன்னவர் அவர்கள் இடையிலே குறுக்கிட்டு பேசும் போது டெல்லிக்கு அருகிலே இருக்கிற உத்தரப் பிரதேசம், பீகார் போன்று சுற்றியிருக்கிற மாநிலங்களுக்கு தொழில் வளர்ச் சிக்கு வாய்ப்பு அதிகமாக இருக்கிறது ; ஆனால் அந்த வாய்ப்பு தமிழ்நாட்டிற்கு இல்லை என்று சொன்னார்கள்.

(பிற்பகல் 12.20).

நான் இந்த நேரத்தில் ஒன்று சொல்ல விரும்புகிறேன். 7-வது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு உறுதி செய்யப்பட்ட நேரத்தில் தமிழகத்திற்கு 4,700 கோடி ரூபாய் என்றுதான் திட் டக் கமிஷன் உறுதி செய்தது. அது போதாது அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஆட்சிக் கட்சியில் இருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன் னேற்றக் கழகம் சொல்வது போலவே இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியும் அந்தக் கருத்தில் இணைகிறது. டெல்லிக்குச் சென் றிருந்தபோது கூட இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும், சட்டமன்ற உறுப்பினர் களும் அங்கே கூடிப் பேசி விவாதித்து முடிவெடுத்து இந்தியப் பிரதமர் அவர்களைச் சந்தித்து 4,700 கோடி ரூபாய் என்பது எங்களுக்குப் போதாது ; அது பல வளர்ச்சித் திட்டங்களுக்குத் துணையாக இருக்காது. எனவே அதனை அதிகமாக ஆக்கவேண்டும் என்று வலியுறுத்தினார்கள் தமிழகத்தின் சார்பில்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட உடல் நிலையையும் கூடப் பொருட்படுத்தாது டெல்லிக்குச் சென்று பிரதமர் அவர்களைச் சந்தித்த காரணத்தால்தான் ஆயிரம்கோடி ரூபாய் அதிகமாகக் கிடைத்தது என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே தமிழகத்திற்குத் தொழில்

வேண்டுமென்றாலும் சரி, தமிழகத்திற்கு அதிகமாக நிதி வேண்டு
மென்றாலும் சரி, உங்களோடு சேர்ந்து குரல் கொடுக்க நாங்கள்
தயாராக இருக்கிறோம். உங்களை விட அதிகமான அளவில்
குரல் கொடுக்கிறோம் என்று சொன்னால் உங்களுக்குக்
கொஞ்சம் கோபம் வரலாம். எனவேதான் உங்களோடு
சேர்ந்து குரல் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்று சொல்
லிக்கொள்கிறேன். அப்படி டெல்லியில் கூடியிருந்தபோது கரூர்-
திண்டுக்கல் அகல இரயில்பாதைத் திட்டத்திற்கு அதிகமாக நிதி
ஒதுக்கீடு செய்யவேண்டும் என்றும் சேலம் உருக்காலைத் திட்டத்
திற்கு அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றும் கேட்
டோம். (மணியடிக்கப்பெற்றது) சேலம் இரும்பாலைத் திட்டத்
திற்கு அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றும், நெய்
வேலி பழுப்பு நிலக்கரி அடுத்த சுரங்கத்தை வெட்.டும் பணி
துவங்கப்படவேண்டும் என்றும், தமிழக அரசுக்குத் துணையாக
நாங்கள் குரல் கொடுத்திருக்கிறோம்.

எனவே தமிழகத்தினுடைய எதிர்காலத்தைப் பொறுத்த வரை
யில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உங்களுக்குத் துணையாக
இருக்கின்றது என்பதை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்.
மத்திய அரசைப் பொறுத்தவரையில் தமிழக அரசு போராடித்
தான் பெறவேண்டும் என்ற அவசியம் இல்லை; பேசியே,
வாதாடியே பெற்றுவிடக்கூடிய சூழ்நிலை உருவாகி இருக்கின்றது.

தமிழகத்தின் தொழில் நிலைமை பற்றிச் சொன்னார்கள்.
இந்தியப் பேரரசின் இணை அமைச்சராக இருக்கின்ற திரு.
அருணாச்சலம் அவர்கள் ஒரு கருத்துச் சொன்னதாக மாண்புமிகு
உறுப்பினர் திரு. புஷ்பராஜ் அவர்கள் பேசும்போது சொன்னார்
கள். தொழில் தொடங்குவதைப் பொறுத்த வரையில் மத்திய
அரசு அக்கறை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று சொன்னார்கள்.
மத்திய அரசைப் பொறுத்தவரையில் லெட்டர் ஆஃப் இன்டென்ட்
அதாவது இசைவு கொடுப்பதில் வேறு எந்த மாநிலத்தையும் விட
தமிழகத்திற்குத்தான் அதிகமாகக் கொடுத்திருக்கிறோம், ஆனால்
அவற்றை ஆரம்பிக்க வேண்டிய பொறுப்பு தமிழக அரசுக்கு
இருக்கிறது. Bull is in your Court. புதிதாகத் தொழில் தொடங்க
வேண்டுமென்றால் அதற்கு இடம் கொடுப்பது ; பணம் கடன்
கொடுப்பது ; மின்சாரம் கொடுப்பது, நிதியுதவி கொடுப்பது
போன்ற பிரச்சினைகளைப் பொறுத்தவரையில் தமிழக அரசு
அதிக அக்கறை எடுத்துக்கொள்ளவேண்டும். அதைவிட்டுவிட்டு
தமிழக அரசு மத்திய அரசையே குறை சொல்லிக் கொண்
டிருந்தால் எங்களாலும் அப்படிச் சொல்ல முடியும் என்று மாண்பு
மிகு உறுப்பினர் திரு. அன்பழகன் அவர்கள் சொன்னார்கள்.
ஏன் டெல்லியையே எப்போதும் சொல்கிறீர்கள், உத்தரபிர
தேச மாநிலத்தையே காட்டுகிறீர்கள், அப்படி என்றால் எங்
களாலும் சொல்ல முடியும், தமிழ்நாடு மாநிலம் முழுமைக்கும்
செய்ய வேண்டிய பணிகள் இருக்கும்போது, தமிழ்நாடு முழு
வதையும் வளர்க்கவேண்டிய நிலைமை இருக்கும் போது ஏன்
சென்னையைச் சுற்றி இருக்கின்ற இடங்கள் மட்டுமே வளர்



கின்றன, தென்கோடியில் இருக்கின்ற கன்னியாகுமரி மாவட்டம்,
மது[illegible] மாவட்டம் போன்றவை புறக்கணிக்கப்படுகின்றன, வளர
வில்லை என்று எங்களாலும் சொல்ல முடியும் என்று சொன்
னார்கள்.

தமிழகத்தினைப் பொறுத்தவரையில் புதிதாகத் தொழில்
தொடங்குவதில் மத்திய அரசுடன் நெருக்கமான உறவு வைத்துக்
கொள்ள வேண்டும். அதன் மூலமாக தொழில்களை அதிக
மாகக் கொண்டுவர உரிய முயற்சிகளை எடுக்க வேண்டும்;
அந்த நிலை வரவேண்டும் என்று நான் சொல்ல விரும்பு
கிறேன்.

மீனவர்கள் பிரச்சினையைப் பொறுத்தவரையில் ஒரு
கருத்தை நான் சொல்லித்தான் ஆக வேண்டி இருக்கிறது. தமிழக
அரசின் சட்டத்துறை புகழ்வாய்ந்த துறையாக இருந்து
கொண்டிருக்கிறது. ஆனால் அந்த சட்டத்துறை இன்றைக்கு
மீனவர்கள் . பிரச்சினையைப் பொறுத்தவரையில் எடுத்
துள்ள நடவடிக்கைகளைப் பொறுத்த வரையில் உரிய நேரத்தில்
அரசுக்கு ஆலோசனைகளை வழங்கியதா என்ற கேள்வியை நான்
எழுப்ப விரும்புகிறேன். மீனவர்கள் பிரச்சினையைப்
பொறுத்தவரையில் அந்த வழக்கு உச்ச நீதிமன்றத்திற்குச்
சென்று, உச்ச நீதிமன்றம், எந்த இடத்தில் கட்டுமரங்கள் அகற்
றப்பட்டதோ அந்த இடத்தில் மீண்டும் அவற்றைக் கொண்டு
வந்து வைக்க வேண்டும் என்றும், அவற்றைத் திருப்பி வழங்கிட
வேண்டும் என்றும், பொதுத்துறை அதிகாரிகளின் முன்னிலை
யிலேயே அது கொண்டுவரப்பட வேண்டும் என்றும் சொல்லி
இருக்கின்றது. இந்த அரசு அதற்கான ஒரு காலக்கெடு
வைக் கொடுத்து, ஒரு வாய்ப்பு கொடுத்து அந்த வகையில்
இந்தப் பிரச்சினையை அணுகி இருக்கவேண்டுமே தவிர, இப்படி
அவசர கோலமாக முடிவு எடுத்த காரணத்தால் தமிழக
அரசுக்கு எத்தகையதொரு தலைகுனிவு ஏற்பட்டிருக்கின்றது
என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அரசுக்குத் தலைகுனிவு
என்பதோடு மட்டுமல்ல; துப்பாக்கிப் பிரயோகம் வரை சென்று
அதன் காரணத்தால் 7 மீனவர்கள் உயிரிழந்து இருக்கிறார்கள்.

உயிரிழந்த மீனவர்கள் பிரச்சினையைப் பொறுத்தவரையில்
நிதியுதவி கொடுப்பதில் கூட இன்னும் கொஞ்சம் அதிமாகக்
கொடுக்க வேண்டும் என்ற ஒரு குறை இருக்கின்றது. அரசாங்
கம் அதைப் பரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் கேட்டு
கொள்கிறேன்.

அடுத்தபடியாக கரும்பின் விலை பற்றி இந்தப் பகுதியிலே
பேசுகிறபோது நாங்கள் எடுத்துச் சொல்லி இருக்கிறோம்.
நம்முடைய இந்த அரசின் மாண்புமிகு வேளாண்மைத்துறை
அமைச்சர் அவர்கள் இரண்டு, மூன்று தடவை நாங்கள் கேட்
டுக் கொண்டிருந்தபோதெல்லாம் இந்த அரசு விரைவில் அறி
விக்கும், விரைவில் அறிவிக்கும் என்று சொன்னார்கள். அப்படி
விரைவு என்பதற்கு என்ன கணக்கு என்பது தெரியவில்லை

அது அரசியல்வாதியின் விரைவு என்ற கணக்கா, அல்லது
ஆராய்ச்சியாளரின் விரைவு என்ற கணக்கா அல்லது ஆளும்
கட்சிக்காரர்களின் கணக்கா என்பது தெரியவில்லை. ஏன்
இந்த முடிவு எடுப்பதில் இவ்வளவு காலதாமதம் ஏற்படுகிறது
என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

1984–85 ஆம் ஆண்டிலே 8.5. சதவீதம் ரெக்கவரிக்கு
மத்திய அரசாங்கம் 140 ரூபாய் ஒரு டன்னுக்கு விலை நிர்ணயம்
செய்தார்கள். மாநில அரசு 150 ரூபாய் டன்னுக்கு விலை
நிர்ணயம் செய்ததோடு 10 ரூ. சப்சிடியும் சேர்த்து கொடுத்
தார்கள். அது மத்திய அரசாங்கம் கொடுத்த விலைக்கு சப்
போர்ட்டிங் பிரைஸ் தான். 1985–86 ஆம் ஆண்டிற்கு மத்திய
அரசு 140 என்று விலையை உயர்த்தி 165 ஆக கொடுத்திருந்
தார்கள். ஆனால் மாநில அரசு அப்போது 185 ரூபாய்தான்
விலை நிர்ணயம் செய்தார்கள். இன்னும் சொல்லப்போனால்
சென்ற ஆண்டு விவசாயிகளுக்கு சப்சிடி சேர்த்து 195 ரூபாய்
கிடைத்தது, ஆனால் இந்த ஆண்டு அரசாங்கத்தின் விலை
நிர்ணயப்படி 185 மட்டும் தான் கிடைத்தது. அந்த 10
ரூபாய் கூட குறைவாக கிடைத்திருக்கிறது. ஏனென்று என்
னால் புரிந்துக் கொள்ள முடியவில்லை.

அது மட்டும் அல்ல, சென்ற ஆண்டு வெளி மார்க்கெட்டிலே,
லெவி பிரைஸ் சர்க்கரைக்கு 4.40 ஆக ஒரு கிலோவிற்கு இருந்தது
இந்த ஆண்டு 4.80 ஆக அதை உயர்த்தி அரசாங்கம் அறிவித்
திருக்கிறது. அதேபோல மத்திய அரசாங்கமும் அந்த கரும்
பின் கொள்அளவிலே 61 சதவீதம் என்று வைத்திருந்ததை,
58 சதவீதமாக குறைத்திருக்கிறார்கள். ஆக இவைகளின்
மூலமாக சர்க்கரை ஆலைகளுக்கு கொள்ளை லாபம் வர
இருக்கிறது. அப்படி இருக்கிற காலத்தில் சர்க்கரை ஆலை
முதலாளிகளுக்கே அதிகமான லாபம் வரக்கூடிய நேரத்தில்,
இரவெல்லாம் வயற்காட்டில் பாடுபடும் விவசாயிக்கு ஏன்
அதிகமான விலை வைத்து நிர்ணயம் செய்யக்கூடாது.

25 ஆலைகளைப் பற்றித்தான் அமைச்சர் அவர்கள் சொல்
லுகிறார்கள். நான் 2 1/2 லட்சம் விவசாயிகளின் சார்பாக
கேட்கிறேன். சென்ற ஆண்டு இங்கே இருக்கிற ஆலைகளுக்கு
ஒருகோடிக்கு மேலாக லாபம் வந்திருக்கிறது. 1984–85-லே
நம்முடைய நாட்டிலே சீனி உற்பத்தி 85லட்சம் டன்னாக
இருந்தது. ஆனால் 1985–86–லே அது 61 லட்சம் டன்னாகக்
குறைந்து விட்டது. இப்படி உற்பத்தி குறைந்தால் நம்முடைய
நாட்டினுடைய தேவைக்கு வெளி நாட்டிலிருந்து இறக்குமதி
செய்ய வேண்டிய தேவை ஏற்படும் என்ற காரணத்தினால்தான்
மத்திய அரசாங்கம் கரும்புக்கான விலையை உயர்த்தி இருக்
கிறது. அதே நல்ல எண்ணத்தோடு மாநில அரசாங்கமும்
உயர்த்திக் கொடுக்க வேண்டும்.



நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் தியாகராஜன் அவர்
களும் தீர்த்தகிரி கவுண்டர் அவர்களும் டன் ஒன்றுக்கு 250
ரூபாயாவது கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்
திருக்கிறார்கள். நானும் இந்த அரசாங்கத்தை வலியுறுத்திக்
கேட்டுக் கொள்கிறேன். முடிந்தால் ரூ. 250 இல்லையென்றால்
குறைந்தபட்சம் 225 ரூபாயாவது கொடுக்க வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் ஒன்றை சொல்லிக்
கொள்கிறேன். இப்படி விலையை அதிகரித்து நிர்ணயம் செய்
வதன் காரணத்தினாலே இந்த அரசுக்கு ஒரு காசு கூட கை
யிழப்பு கிடையாது .அதுதான் முக்கியம். இப்படி ஒரு காசு
கூட உங்களுக்கு இழப்பு இல்லாத நேரத்தில் சர்க்கரை ஆலை
களுக்கு இன்னும் அதிக லாபம் சம்பாதித்துக் கொடுக்கும்
வகையில், ஏன் இதை தள்ளிப் போடுகிறீர்கள்?

நான் இன்னும் கூட சொல்லுவேன், ஒரு ஏக்கர் கரும்பை
உற்பத்தி செய்தால் அரசுக்கு வருவாயாக, வரியாக, எக்ஸைஸ்
வரியாக-இன்னும் மொலாஸஸ் வரி வேறு-20 ஆயிரம் ரூபாய்
வரையில் வருகிற நேரத்தில் அரசாங்கம் விலையை அதிகரித்
துக் கொடுத்தால்தான், கரும்பு விவசாயிகளுக்கு இன்னும்
அதிகமான கரும்பை உற்பத்தி செய்ய ஆர்வம் கிடைக்கும்
என்பதைக் கருத்திலே கொண்டு, அந்த விலை உயர்வு
அறிவிப்பை காலம் தாழ்த்தாமல் இந்தக் கூட்டத் தொடரிலேயே
அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஆளுநர் உரையிலே வெள்ளச் சேதம் பற்றிக்
குறிப்பிடப்பட்டிருக்கிறது. இங்கே கூட பல உறுப்பினர்கள்,
அந்த வெள்ள நிவாரண வேலைகளில் ஏற்பட்ட குறைபாடு
களைப் பற்றிச் சொன்னார்கள். என்னிடத்திலே கூட அது
குறித்து நிறைய விவரம் இருக்கிறது. நேரம் இல்லாத கார
ணத்தினால் நான் விளக்கமாக அவைகளைச் சொல்ல விரும்ப
வில்லை. அதிலே இன்னும் செலவிட வேண்டியிருக்கிறது.
ஒரு பகுதிதான் நிவாரண வேலைகளில் ஆரம்பக் கட்டங்
களுக்காக செலவிடப்பட்டிருக்கிறது. இன்னும் செலவிட
இருப்பதை குறைபாடுகள் இல்லாமல் பார்த்துக் கொள்ள
வேண்டும்.

2, 3 நாட்களுக்கு மேலாக எந்தவித உதவியும் இல்லாது
ஆகார வசதி கூட இல்லாது நிருபர்களே சிக்கித் தவித்த சோக
கதை என்னிடத்திலே இருக்கிறது. அது போன்று பல கதைகள்
இருக்கின்றன. எனினும், இனி இதற்காக செலவிட இருக்கும்
பணத்தை எந்தவித குறைப்பாட்டிற்கும் இடம் இல்லாமல்
செலவிட ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன்.

ஆளுநர் உரையிலே வெள்ளம் பற்றிச் சொல்லியிருக்
கள். ஆனால் வறட்சி பற்றி ஏன் சொல்லவில்லை 3 ஆம், பக்கத்
திலே ''தமிழ்நாட்டில் கடும் வறட்சியோ பெரும் வெள்ளமோ
ஏற்படாத ஆண்டே இல்லையெனச் சொல்வது மிகையா

காது'' என்று சொல்லியிருக்கிறார்கள். 9 ஆம் பக்கத்திலே 'பாதகமான பருவ நிலை காரணமாக இவ்வாண்டில் உணவு உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டது'' என்று சொல்கிறார்கள். அதற்கு முன்னால் 8 ஆம் பக்கத்திலே ''தமிழ்நாட்டில் தென் மேற்குப் பருவ மழை பொய்த்ததன் காரணமாக மேட்டூர் நீர்த்தேக்கத்தில் மிகக் குறைந்த அளவில் தண்ணீர் இருந்தது. இருந்தாலும் நஞ்சைப் பகுதியில் முறைப் பாசனத்திற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன'' என்றுதான் சொல்லியிருக்கிறார்களே, தவிர, அந்த வறட்சியினுடைய கடுமையைப் பற்றி, கொடுமையைப் பற்றி இந்த அரசு ஏன் சரியாக எண்ணிப் பார்க்கவில்லை?

இங்கே பல மாவட்டங்களில், மதுரை மாவட்டம், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம், தர்மபுரி மாவட்டம், புதுக்கோட்டை மாவட்டம், பெரியார் மாவட்டம் என்று பல இடங்களில், தென் பகுதியிலே இருக்கிற மாவட்டங்களில் வறட்சியின் காரணமாக பாதிக்கப்பட்டிருக்கிற காரணத்தாலே, மக்கள் அங்கேயிருந்து வெளியேறிச் செல்ல வேண்டிய அபாயம் இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் இப்படி வறட்சி ஏற்பட்டு குடிதண்ணீருக்காக மக்கள் சொல்ல முடியாத அல்லல் படுகிற காரணத்தால் அதைப்பற்றி ஒன்றிரண்டு பாராக்களை சேர்த்துச் சொல்லி, அதற்காக என்ன நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறீர்கள் என்றும் சேர்த்து சொல்லி, 23 24 பக்கம் இருக்கும் இந்த உரையை, இன்னும் 2 பக்கம் சேர்த்து போட்டிருந்தால் எங்களுடைய ஆதங்கம் தீர்ந்திருக்குமே. (குறுக்கீடு) எங்களுக்குச் சற்று ஆறுதலாகவும் இருந்திருக்குமே. ஆனால் சொல்லவில்லையே. இந்த அரசாங்கம் அப்படிச் சொல்லாததன் காரணமாக, வறட்சியைப் பற்றி, அதன் கொடுமையைப் பற்றி, சரியாக மதிப்பிடவில்லையா என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன். அது மட்டும் அல்ல; போன ஆண்டு நாங்கள் கோரிக்கை வைத்தோம்.

(பிற்பகல் 12.30)

அதுமட்டுமல்லாமல் ஒவ்வொரு ஆண்டும் நாம் கோரிக்கை வைக்கிறோம். மாண்புமிகு முன்னவர் அவர்கள் என்ன சொல்வார்கள் தெரியுமா? மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து நாங்கள் விவரங்கள் கேட்டிருக்கிறோம். மாவட்டங்களிலிருந்து விவரங்கள் வந்தவுடனே வறட்சிக்கான அறிவிப்பு வருமென்று வழக்கமான பதில் வரும். இன்றைக்கும் அதையே சொல்வார்கள். இதிலே என்ன பிரச்சினை என்றால் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கிராம நல அதிகாரிகளிடம் அறிக்கை கேட்டு பெறுவதற்கு முன்பாகவே வரி வசூல் முடிந்து விடுகிறது. அதற்குப் பின்னால் வரி வஜா செய்தால் என்ன? செய்யாவிட்டால் என்ன? வறட்சியால் மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு மட்டுமல்ல, 2, 3 ஆண்டுகளாகவே





அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறதால் வரி வஜாவை உடனடியாக அறிவிக்க வேண்டும். கடன் வசூலை ஒத்திவைக்க வேண்டும். முடிந்தால் கடன் வசூலை ரத்து செய்ய வேண்டும். வேண்டுமானால் அமைச்சர் அவர்கள் ஒரு குழுவாக வந்து மாவட்டங்களைப் பார்ப்பார்களானால், வறட்சியின் கொடுமையை அவர்கள் உணர்வார்கள். வறட்சி நிவாரணப் பணிகளை போர்க்கால அடிப்படையில் செய்ய வேண்டும். பாதிக் கப்பட்ட மக்கள் வாழ்வில் வளம் காண்கிற வகையில் நடவடிக்கை களை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக வெள்ளம் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். வெள்ளம் வருகிறபோது வெள்ள நீர் பெருமளவில் கடலில் போய் விழுகிறது. வெள்ள நீரைத் தேக்கி பயன்படுத்திக் கொள்ள ஒரு மாஸ்டர் பிளானைப் போட வேண்டும். இன்றைக்கே பதில் சொல்ல வேண்டுமென்று சொல்லவில்லை. இது குறித்து எண்ணிப் பார்த்து, தொலை நோக்கோடு இந்த வெள்ள நீரை கடலில் கலக்காமல் தேக்கி வைத்து பயன்படுத்த ஆய்வு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக நம்முடைய ஆளுநர் உரையிலே ஆறாம் பக்கத்தில் பள்ளிக் கட்டிடங்கள் பற்றி சொல்லி இருக்கிறார்கள். 1985–86 ஆம் ஆண்டில் 1½ கோடி ரூபாய் பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறதென்று சொல்லி இருக்கிறார்கள். 1½ கோடி ரூபாய் என்பது யானைப் பசிக்கு சோளப் பொரியாக, கடலில் கரைத்த பெருங்காயமாக இருக்கிறது. தமிழ் நாட்டிலே எத்தனை பள்ளிக் கூடங்கள் இருக்கின்றன? மேல் நிலைப் பள்ளிகள் மட்டும் 1,541; அது தவிர உயர்நிலைப் பள்ளிகள், மற்ற பள்ளிகள் இருக்கின்றன. பல பள்ளிகளுக்கு கட்டிடங்களே இல்லாமல் இருக்கிறது. அப்படி இருந்தால் ஆசிரியர்கள் எப்படி பாடம் போதிக்க முடியும்? மாணவர்கள் எப்படி படிப்பில் கவனம் செலுத்துவார்கள்? ஆகவே ஒதுக்கியிருக்கும் 1½ கோடி ரூபாய் என்பது மிக மிகக் குறைவானது. பள்ளிக் கூடங்களுக்கு கட்டிடங்கள் கட்டுவதற்காக ஒரு தன்னிறைவுத் திட்டமே கூட அரசு கொண்டு வரலாம். 4, 5 ஆண்டுக் காலத்திலே தமிழ் நாட்டிலே இருக்கிற எல்லா பள்ளிக் கூடங்களுக்கும் கட்டிடம் கட்டுகிற அளவிற்கு ஒரு தன்னிறைவுத்திட்டம் கொண்டு வரப்படுமானால் நாங்கள் அதனை வரவேற்கிறோம். ஆகவே அது தமிழகத்தின் எதிர்கால சந்ததிகளின் வாழ்விற்கும், நலத்திற்கும் உகந்ததாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இதனை எண்ணிப் பார்த்து தாராளமாக நிதி ஒதுக்கிக் கொடுத்து பள்ளிக் கூடங்களுக்கு கட்டிடம் கட்டுகிற முயற்சியைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இது குறித்து ஒரே ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். சேலம் மாவட்டம் ஆத்தூரில் ஆரியபாளையம் என்ற ஊர் இருக்கிறது. அங்கே புதியதாக பள்ளிக்கூடம் கட்டுவதற்கு அரசாங்கம் உத்திரவு கொடுத்துள்ளது. சென்ற ஆண்டில் 85 பள்ளிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்று அறிக்கையில் இருக்கிற காரணத்தால் இதனைச் சொல்கிறேன். ஆரிய பாளையத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிற பள்ளி 6, 7, 8 வகுப்புகளை கொண்டது. அதில் மொத்தம் 250 மாணவர்கள் சேர்ந்திருக்கிறார்கள். ஆனால் ஒரே ஒரு தலைமையாசிரியர் தான் அங்கே இருக்கிறார்கள். ஆசிரியர்களே கிடையாது. வேலையில்லாத தமிழாசிரியர் ஒருவர் அங்கே போய் இனாமாக பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டு இருக்கிறார். இப்படி இருந்தால் அந்த மாணவர்களின் எதிர் காலம் எப்படி இருக்குமென்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். பள்ளிக்கூடத்தை திறந்து விட்டால் மட்டும் போதாது. மாணவர்கள் நல்ல முறையில் கற்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக சத்துணவுத் திட்டத்தைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். இரண்டு நாட்களுக்கு முன்பு மாண்புமிகு சத்துணவுத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். இந்தத் திட்டத்தில் இருக்கிற தவறுகளை, குறைகளை களைவதற்கு மாதர்கள் அடங்கிய ஒரு குழுவை நியமிக்க இருப்பதாகவும், திட்டம் இன்னும் நல்ல முறையில் நடைபெறுவதற்காக அந்தத் துறையையே ஒரு தனி இலாக்காவாக இயக்கலாமா என்று யோசித்து கொண்டிருக்கிறோம் என்றும் தெரிவித்தார்கள். இதில் நான் ஒரு கருத்தினை ஆலோசனையாகத் தெரிவிக்க விரும்புகிறேன். தமிழகத்தில் ஆலயங்களின் நிலங்கள் பல்லாயிரக் கணக்கான ஏக்கர்கள் இருக்கின்றன. அந்த நிலங்களிலிருந்து ஒழுங்காக குத்தகை வருவதில்லை. அவை பலருடைய கைகளில் இருக்கிற காரணத்தால் பல கோவில்களில் விளக்கேற்றக் கூட முடியாத அளவிற்கு நிலைமை இருக்கிறது. அந்த நிலங்களை அரசாங்கம் ஏற்று சத்துணவுத் திட்டத்தின் பண்ணைகளாக அவைகளை மாற்றினால், சத்துணவுத் திட்டத்திற்குத் தேவையான உணவுப் பொருளையும் உற்பத்தி செய்யலாம், அதிலிருந்து கிடைக்கிற வருமானத்தை வைத்து கோவில்களில் உரிய நேரத்தில் பூஜைகள் நடைபெறுவதற்கும் செய்யலாம். ஆகவே அரசாங்கம் இந்தக் கோரிக்கையை பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் சிந்தன் அவர்கள் நேற்று பேசுகின்ற போது, மூடப்பட்ட ஆலைகளைப் பற்றி சொல்லி, அவைகளைத் தமிழகத்திலே திறக்க வேண்டும், அதற்காக அரசாங்கம் முனைப்பான நடவடிக்கைகளிலே ஈடுபட வேண்டும் என்று சொன்னார்கள்.





சென்னையிலே நவமணி என்று ஒரு பத்திரிகை 1969 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. 1976-லே மூடப்பட்டது. 1977 ஆம் ஆண்டு இந்த நவமணி லிக்குடேட் செய்யப்பட்டது. ஆனால் இன்று வரையில் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கப்படவில்லை. கிராஜுவிட்டி வழங்கப்படவில்லை. கணக்கு தீர்க்கப்படவில்லை என்று நான் கேள்விப்படுகிறேன். அந்த பத்திரிகை அலுவலகத்திலே வேலை செய்த 10 பேர்கள் கூட இறந்து போய்விட்டார்கள் என்று நான் கேள்விப்படுகிறேன். 1976-லே அந்தப் பத்திரிகையிலே பணிபுரிந்தவர்களுக்கு, 10 ஆண்டுகளுக்குப் பிறகும் கூட, சம்பளம் கொடுக்க வில்லை என்றால், இது எவ்வளவு வேதனையான சம்பவம் என்பதை நீங்கள் சற்று எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த நவமணி பத்திரிகை இருந்த இடத்தை, இன்றைக்கு ஸ்டேட் மார்க்கெட்டிங் கார்ப்பரேசன், சாராய வாரியத்திற்கு, அதை வாடகைக்கு விட்டிருக்கிறார்கள். லிக்குடேட் செய்யப்பட்ட கட்டிடத்தை எப்படி வாடகைக்கு விடலாம். ஒன்று அதை விற்று விட வேண்டும். எனவே இந்த அரசாங்கம் தாய்மை உணர்வோடு, அல்லலுறுகின்ற அந்தத் தொழிலாளர்களின் சம்பள பாக்கியை கொடுப்பதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டு, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவித்து முன்மொழியப்பட்டு இருக்கிற தீர்மானத்தின் மீது 54 உறுப்பினர்கள் பேசி இருக்கிறார்கள். பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக அரசின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் செயலாற்றல் திறமைகளைப் பாராட்டியும், அரசின் பல்வேறு சாதனைகளைப் பற்றியும், எடுத்திருக்கிற பணிகளை வரவேற்றும், தீட்டப்பட்டுள்ள திட்டங்களை ஆதரித்தும், உரை நிகழ்த்திய உறுப்பினர்கள் அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாட்டின் நலன் கருதியும், மக்களுடைய நலன் கருதியும், நல்ல எண்ணத்தோடும், நேர்மைப் பண்போடும், ஆக்க உணர்வோடும், கருத்துக்களை எடுத்து வைத்த உறுப்பினர்களுக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆளுநர் உரையைப் பொறுத்து, பல்வேறு கருத்துக்கள் இங்கே வழங்கப்பட்டு இருக்கின்றன. ஆளுநர் உரையிலே, நடப்பு ஆண்டில் ஏற்பட்ட சாதனைகள் பற்றியும், வரும் ஆண்டில் ஏற்படும் பணிகள், நிறைவேற்றப்படும் திட்டங்கள் பற்றியும், சுருக்கமாகக் கோடிட்டுக் காட்டப்பட்டு இருக்கிறது. அந்த வகையிலே தான் தொழில் வளர்ச்சி பற்றியும் மின்சார உற்பத்தி மேம்பாடு பற்றியும், 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் மேம்பாடு

பற்றியும், குடும்ப நலத் திட்டம் பற்றியும், வெள்ளத் துயர் தடுப்பு பணிகள் பற்றியும், இலங்கை வாழ் தமிழர்கள் பிரச்சனை பற்றியும், வளர்ச்சிப் பணிகள் பற்றியும், கல்விப் பணிகள் பற்றியும், ஊரக வளர்ச்சித் திட்டங்கள் பற்றியும், உணவுப் பொருள் உற்பத்தி, மற்றும் அதனுடைய நிலைமைகள் பற்றியும், உணவுப் பொருள், வினியோகத்தினுடைய தன்மைகள் பற்றியும், குடிநீர்ப் பிரச்சனையைப் பற்றியும், குழந்தைகள் நல மேம்பாடு பற்றியும், ஆதி திராவிடர்களுடைய ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம் பற்றியும், ஆசிரியர்கள், அரசுப் பணியாளர்கள், ஊதிய உயர்வு, சலுகைகள் மற்ற தன்மைகள் பற்றியும், தொழில் வளர்ச்சி பற்றியும், கைத்தறித் துறைக்கு ஆக்கம் தருவது பற்றியும், பொருளாதார வளர்ச்சியைப் பற்றியும், சிறு தொழில் வளர்ச்சி பற்றியும், நலிந்த பிரிவினருக்கு வீட்டு வசதி பற்றியும், உள்ளாட்சி மன்றங்களுக்கு தேர்தல் நடத்துவது பற்றியும், நெல்லை, வட ஆற்காடு மாவட்டங்களை இரண்டாகப் பிரிப்பது பற்றியும், பலமுனை வரியாக இருப்பதை ஒருமுனை வரியாக ஆக்க முயற்சித்தல் பற்றியும், ஆக இவ்வளவும் சொல்லப்பட்டு இருந்தும், இதிலே எதுவுமே சொல்லவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சில பேர்கள் எடுத்துச் சொல்லியிருப்பதும், மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய துணைத் தலைவர் நாஞ்சிலார் அவர்கள் பேசுகின்றபோது, இதிலே எதிர்பார்த்தது இல்லை என்று சொல்வதற்கும், ஆக ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. ஒவ்வொருவரும் அவரவர்களுடைய கட்சிக் கொள்கைக்கு ஏற்ப, நிலைமைகளுக்கு ஏற்ப, ஏராளமாக எதிர்பார்ப்பார்கள். எதிர்பார்க்கின்ற அத்தனையும் ஆளும் கட்சியினுடைய உரையில் இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாதது தான். ஆனால் எதிர்பார்த்தது இல்லை என்று எடுத்துச் சொல்வதற்குரிய தன்மைகள் உண்டு. ஆனால் எதுவும் இல்லை என்று சொல்லிவிட்டு, குறை கூறியிருப்பது தான் உள்ளபடியே வியப்புக்கு உரியதாகவும், விந்தையிலும் விந்தையாக இருக்கிறது. இந்த கவர்னர் உரையிலே எதுவுமே இல்லை என்று சொல்லிவிட்டு, அவர்கள் எல்லாவற்றையும் சொல்லத்தான் செய்தார்கள். ஆகவே அவர்களுடைய இயல்புக்கு ஏற்ப தங்களுக்குத் தோன்றிய கருத்துக்களை எல்லாம் சொன்னார்கள்.

பல உறுப்பினர்கள் பல கருத்துக்களைச் சொன்னாலும் ஒரு உறுப்பினர் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்று கருதிச் சொன்னாரோ என்னவோ, இதிலே உப்பும் இல்லை, சப்பும் இல்லை என்று சொன்னார். ஆகவே இந்த ஆளுநர் உரை என்பது, நீங்கள் எல்லாம் படித்துப் பார்த்து, சிந்தித்து, செயலாற்றுவதற்குத் தேவையான கருத்துக்களை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இருக்கிறோமே தவிர, இதைச் சுவைத்துப் பார்க்க வேண்டும் என்று நாங்கள் சொல்லவில்லை.



அதற்கு அடுத்ததாக சொல்லும்போது இதில் பாயசம் இல்லாமல் பழம் கஞ்சியாகத்தான் இருக்கிறது என்று ஒரு மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார். உள்ளபடியே பார்க்கின்றபோது பாயசத்தைவிட பழம் கஞ்சி தான் உடம்புக்கு மிகவும் நல்லது என்பதும் கஞ்சி வளம் உண்டாக்கும் என்பதையும் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-40)

மாண்புமிகு உறுப்பினர் இராமநாதன் அவர்கள் கடைசியில் முடிக்கும் போதுகூட இது ஏட்டு சுரக்காய், இது கறிக்கு உதவாது என்று சொன்னார். ஏட்டிலே சுரக்காய்கள் இருக்கும். சுரக்காய் பற்றிய விவரங்கள் அது கறிக்கு ஆகும் என்று எண்ணுவது தான் தவறு. ஆனால் நாட்டுக்கு ஆகின்ற சுரக்காய்கள் எப்படி விளைவிக்கலாம், எப்படி எப்படி பெருக்கலாம், என்பனபோன்ற வழிவகைகளை கூறுகிற சுரக்காய் தான் ஏட்டில் வரும். இந்த ஏட்டில் உள்ள சுரக்காய்களின் அடிப்படையில் தான் நாட்டில் உள்ள சுரக்காய்கள் கறிக்கு உதவுவது போல் இது உற்பத்தியை ஆக்கிக் கொள்ள உதவும். அப்படிப்பட்ட திட்டங்கள் பற்றி நாம் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். தங்கள் தங்கள் தொகுதிக்கு ஆக வேண்டிய பணி எப்படி இருக்கவேண்டும் என்பதற்கான காரண காரிய விளக்கங்களை எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு தி. மு. க. துணைத் தலைவர் நாஞ்சிலார் அவர்கள் பேசும்போது பல சிறப்புக்குரிய கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அந்தக் கருத்துக்களில் பெரும்பாலான கருத்துக்கள் ஆளும் கட்சிக்கு உடன்பட்ட ஒத்து வருகின்ற கருத்துக்களே தவிர மாறுபாடான கருத்து அல்ல என்பதை இந்த வாய்ப்பில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

உதாரணமாக சேது சமுத்திரத் திட்டத்தைப் பற்றி அவர்கள் வலியுறுத்தினார்கள். ஏன் இந்த ஆளுநர் உரையில் அது சேர்க்கப்படவில்லை என்றார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த அவையில் முதல்வராக இருந்து உரை ஆற்றுகின்ற காலத்திலிருந்து ஒவ்வொரு ஆளுநர் உரையிலேயும், வரவு செலவுத் திட்ட உரையிலேயும் கூட தொடர்ந்து சேது சமுத்திரத் திட்டத்தை வற்புறுத்திக் கொண்டு தான் வருகிறோம். இந்த ஆட்சி வந்ததற்கு பிறகும் பல சமயங்களில் வற்புறுத்தி வந்து கொண்டு இருக்கிறோம். இந்த உரையில் சொல்லப்படவில்லை என்பதற்காக அந்த கருத்துவிடப்பட்டது என்பது பொருள் ஆகாது. ஆக சொல்லப்படவில்லை என்றாலும் வலியுறுத்திக்

கொண்டு வருகிற நிலையில் தான் இந்த அரசு இருக்கிறது
என்பதையும் அவர்கள் சேது சமுத்திரத் திட்டத்தைப் பற்றி
விரிவாக எடுத்துச் சொன்ன கருத்துக்கள் அத்தனையும் ஒத்துக்
கொள்ளக்கூடிய கருத்துக்கள் தான். ஆனால் இந்த மன்றத்தின்
மூலமாக வற்புறுத்துவதன் மூலம் அதற்கு ஆக்க நிலை ஏற்பட
வேண்டும் என்று எல்லோரும் கருதுகிறார்கள். அதில் மாறு
பட்ட கருத்து எந்த கட்சிக்கும் இருக்க நியாயம் இல்லை
என்பதை நான் நன்றாக உணர்கிறேன்.

அவர்கள் எடுத்துச் சொன்னது போல சர் ஏ. ராமசாமி
முதலியார் அவர்கள் அறிக்கையின் அடிப்படையில் அந்த திட்
டத்தை நிறைவேற்றுவதன் மூலம் நாட்டுக்கு பல்வேறு நன்மை
கள் ஏற்படும் என்று எடுத்துச் சொன்னார்கள். அப்போது
குறைந்த செலவில் ஆகியிருக்கவேண்டிய இந்தத் திட்டம் இப்
போது 10 மடங்கு, 15 மடங்கு அதிகம் செலவு செய்தால் தான்
ஆகும் என்ற சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே, சேது
சமுத்திரத் திட்டம் கொண்டு வருவதன் மூலமாக அவர்கள்
எடுத்துச் சொன்னது போல் தூத்துக்குடி துறைமுக திட்டத்
தோடு இணைக்கிறபோது இந்த நாட்டுக்கும் வருமானம் ஏற்
படும், போக்குவரத்திலுடைய நாட்களும் குறையும், அதனால்
ஏற்படும் செலவும் குறையும். போக்குவரத்தால் பண்டங்
களுக்கு ஏற்றப்படுகின்ற விலைவாசியும் மிக மிக குறையும்.
அதைவிட மிக மிக முக்கியம் இப்போது நாளுக்கு நாள் இந்து மா
கடலில் சேது சமுத்திரப் பகுதியை காக்க வேண்டிய ஒரு
முக்கியமான ஒரு பகுதியாக அமைந்து இருக்கிறது என்பதை
நான் நன்றாக உணர்கிறேன். அந்த எண்ணத்தை வைத்து
செய்ய வேண்டும் என்று அண்மையில் நடைபெற்ற தேசிய
வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் கூட மாண்புமிகு பிரதமர் அவர்கள்
தலைமை தாங்கிய கூட்டத்தில் தமிழகத்தின் சார்பாக வலி
யுறுத்தப்பட்டு வந்து இருக்கிறது. இப்போது முக்கியமான
ஸ்டேட்டஜிக் போசிசனாக அது இருக்கிறது. ஏன் என்றால்
அமெரிக்கா இந்த இந்து மா கடலில் கப்பல் படை தளத்தை
அமைக்க வேண்டும் என்று பெரு முயற்சி எடுத்துக் கொண்டு
வருகிறது. அதற்கு இலங்கையைச் சேர்ந்த திரிகோணமலை
யில் இடம் தருகின்ற அளவுக்கு முயற்சி செய்வதும் அதற்கு
ஜெயவர்தனே ஆதரவாக இருக்கிறார் என்ற செய்தியும் வந்து
கொண்டு இருக்கின்றன. அப்படிப்பட்ட ஒரு தளத்தை அமைக்
கின்ற சூழ்நிலை அமெரிக்காவிற்கு ஏற்பட்டுவிடுமானால் அப்
போது இந்த கடலினுடைய இந்த பகுதிகளை எல்லாம் காக்க
வேண்டும் என்று வருகிறபோது இந்த சேது சமுத்திரத் திட்டத்
தினுடைய இன்றியமையாத சிறப்பு அப்போது தான் மிகமிக
உணர முடியும். ஆகவே, அந்தக்காரணத்தை வைத்து நாம்
மீண்டும் வலியுறுத்துகிறோம்.



சொல்லியதற்கு
மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்கள் எடுத்துச் சொல்லி
இணங்க மாண்புமிகு நாஞ்சிலார் அவர்கள் இணைந்து நின்று
யதற்கு இணங்க அந்த கருத்துக்களோடு
நானும் வலியுறுத்த விரும்புகிறேன்.

அது மட்டும் அல்லாமல், மத்திய அரசிடம் மசோதாக்கள்
பல காத்து கிடக்கின்றன என்பதற்கான காரணங்களை எடுத்துச்
சொன்னார்கள். இந்த காத்து கிடக்கின்ற நிலை இருக்கக்
கூடாது என்ற நிலையில்தான் மத்திய மாநில அரசுகள், உறவுகள்
மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்தை எடுத்துச்
சொல்லியிருக்கிறோம், அதையும் இங்கே வைக்கின்றபோது
தெளிவாக எடுத்துச் சொல்லலாம். அவர்கள் சொன்னது சரி
யான கருத்து.

சாதாரணமாக பினாமி நிலங்களை எல்லாம் நாம் எடுத்துக்
கொள்ளலாம் என்று இங்கே சட்ட மன்றத்திலே நிறைவேற்றப்
பட்ட சட்டம் இன்னும் அங்கே கையெழுத்து ஆகாமல் நமக்கு
வராமல் இருக்கிறது. ஏழை எளிய மக்களுக்கு, நலிந்த மக்
களுக்கு சில பல நன்மைகள் செய்ய வேண்டும் என்று நாம்
கருதினாலும் நல்ல நோக்கத்தின் அடிப்படையில் சில பல
திட்டங்களை நாம் நிறைவேற்றினாலும் அங்கிருந்து ஒப்புதல்
பெற வேண்டிய அவசியம் இருக்கிறது.

மக்களால் நேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற உறுப்பினர்கள்
அடங்கிய ஒரு அவை, இந்த மாநிலத்திற்குத் தேவை என்று
கருதுகிறபோது, அதற்காக மத்திய அரசிடத்திலே போய், குடி
யரசுத் தலைவரிடம் ஒவ்வொரு சட்டமும் நிறைவேற்றப்படுகிற
போது, கையெழுத்து ஆகி வர வேண்டும் என்று சொல்கிற
முறையினால் காலத் தாழ்வு ஏற்படுகிறது என்பது மட்டுமல்லா
மல், நாட்டுக்குச் செய்யப்பட வேண்டிய நலன்களை நிறை
வேற்றப்படாமல் போகின்றன.

ஆகவே, அங்கே போய் கையெழுத்து வாங்க வேண்டும்,
அனுமதி பெற வேண்டும் என்று இருக்க வேண்டிய அவசியம்
இல்லை. ஒரு கூட்டாட்சி அமைப்பு என்று வந்துவிட்ட உட
னேயே, மத்திய அரசால் நிறைவேற்றப்படுகின்ற சட்டம்
முழுமைக்கும் அது எப்படி பொறுப்பு எடுத்துக் கொண்டிருக்
கிறதோ , அது மாதிரி, மாநில அரசு, மக்கள் மன்றத்தினுடைய
அனுமதியோடு, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுடைய
அனுமதியோடு நிறைவேற்றுகிற சட்டங்களை, நிறைவேற்றுகிற
முழுப் பொறுப்பும் மாநிலத்திற்கு அமைய வேண்டும் என்ற
கருத்து வலியுறுத்தப்பட வேண்டிய ஒன்று.

அதனால் தான் மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள்
சொன்னார் "கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள்
திறக்கப்படும்" என்று சொன்னார். ஆகவே, தட்டிக்
கொண்டும் இருக்கிறோம், கேட்டுக் கொண்டும் இருக்கிறோம்.
இன்னமும் திறக்கப்படத்தான் இல்லை. அதற்கான முயற்சி
களிலே மற்றவர்களும் உதவி செய்ய வேண்டும், அப்படி செய்
தால் மிக மிக நம்பிக்கைக்குரியதாக ஆகும்.

மொழிப் பிரச்சினையைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். அதைப் பொறுத்த வரையில், அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்கள் அப்போதே எடுத்துச் சொல்லி இருக்கிறோம் என்றாலும்கூட, பேரறிஞர் அண்ணா அவர்கள் எந்தக் கொள்கையை வகுத்து விட்டுச் சென்றார்களோ, அந்த கொள்கைகளைத் தான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், இந்த ஆட்சியும் ஏற்றுக் கொண்டிருக்கிறது.

ஆகவே, சர்க்காரியாவுக்கு கொடுத்திருக்கிற அந்தகைய அறிக்கையில் கூட, அறிஞர் அண்ணா சொன்ன வாசகங்கள். மற்றவைகளை எல்லாம் எடுத்துப் போட்டு, அவர்கள் வலியுறுத்திய கருத்துக்களையும் எடுத்துச் சொல்லி, அந்தக் கருத்தின் அடிப்படையிலே தான் செய்யவேண்டுமென்றும், ஆங்கில மொழி நீடிக்க வேண்டும், நிலைத்து நிற்கும்படியாகச் செய்ய வேண்டும் என்றும், அறிஞர் அண்ணாவே சொல்லிய மாதிரி, 14 தேசிய மொழிகளுக்கும் உரிய உரிமை தரவேண்டும் என்றும், அந்தக் கருத்து வலியுறுத்தப்படவேண்டும் என்றும்தான் திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்லிக் கொண்டு வருகிறோம்.

அவர்கள் எடுத்துச் சொல்லிய மாதிரி, அதற்கு நல்ல ஆக்கமும், ஊக்கமும் பயக்கக்கூடிய தன்மைகள் செய்யவேண்டும். அவர்கள் சொல்லிய மாதிரி, இந்தி பேசாத மாநிலத்தில் வாழ்கிற மக்கள் விரும்புகிற வரையில் ஆங்கிலம் நீடிக்கும் என்று பண்டித நேரு அவர்களும், அவர்களுக்குப் பின்னால் வந்த இந்திரா காந்தி அம்மையார் அவர்களும், அதற்குப் பின்னாலே இப்போது வந்து இருக்கிற ராஜீவ் காந்தி அவர்களும், அதைக் காப்பாற்றுவோம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

காப்பாற்றுவோம் என்று சொல்லிவிட்டாலும் கூட, மறைமுகமான முறையில், அவர்கள் எடுத்துக் காட்டிய மாதிரி, பல்வேறு துறைகளில், இந்தி ஆக்கம் பெறுகின்ற அளவுக்கான முயற்சிகளை தொடர்ந்து செய்து கொண்டு வருகிறார்கள். 1-வது ஐந்தாண்டுத் திட்டத்திலேயிருந்து, 7-வது ஐந்தாண்டுத் திட்டம் வரையிலும், இந்தி மொழியை மட்டும் பரப்ப, இந்தி மொழியை மட்டும் வளர்படுத்த, இந்தி மொழியிலே கலைச் சொற்களை உருவாக்க, பல்வேறு துறைகளைப் பற்றிய நூல்களை எல்லாம் இந்தியில் உருவாக்க பல கோடிக்கணக்கான ரூபாய்கள் ஒதுக்குகிறார்கள்.

14 மொழிகள் தேசிய மொழி என்று அறிவித்து, இந்த ஒரு மொழிக்கு மட்டும் முழுச் சலுகைகளையும் தந்து, இந்த ஒரு 10, 15 ஆண்டுக் காலம் கழித்துப் பார்த்தால் எல்லா நூல்களும் இந்தியிலே தான் இருக்கின்றன. எல்லாம் அதிலே வந்து விட்டன. எல்லாக் கலைச் சொற்களும் உருவாகி விட்டன, எல்லா இடங்களிலும் பரப்பி ஆகிவிட்டது. ஆகவே,



அந்த மொழி தான் இருக்கவேண்டும் என்று வலியுறுத்துவதற்கு செய்யப்படுகின்ற மறைமுகமான திட்டங்கள் எல்லாம் மறுக்கப்படவேண்டும், எதிர்க்கப்பட வேண்டும், தடுத்து நிறுத்தப் படவேண்டும் என்பது தான் கொள்கை.

ஆனால், மற்றைய நாட்டோடு ஒப்பிட்டுப்பார்க்கும் போது, ரஷ்ய நாட்டிலே பெரிய மொழி ரஷ்ய மொழி. பெரும்பாலான மக்களால் பேசப்படுகிற மொழி ரஷ்ய மொழி. அங்கே கிட்டத் தட்ட 140 க்கும் மேற்பட்ட மொழிகள் இருக்கின்றன. அங்கே எந்த ஒரு நூல் பதிப்பிக்கப்பட்டாலும், 89, 90 மொழிகளிலே பதிப்பித்து வெளியிடுகிறார்கள். சோவியத் ரஷ்யாவை உருவாக்கிய மாவீரன் லெனின் அவர்கள் கூட, அந்த இனத்திற்கு முக்கியத்துவத்தைத் தந்து, அந்தந்தப் பகுதி வாழ் மக்களுடைய பண்பாடு, கலாச்சாரம், நாகரீகம், மொழிக்கு முழு முக்கியத்துவம் தந்து, அந்தந்த மாநிலங்கள் அதன் மொழியிலே 'ரிபப்ளிக்ஸ், தனி உரிமை பெற்ற குடியரசுகள் நடை பெறலாம் என்று வழிவகுத்து, ஆனால் எல்லா மக்களோடு தொடர்பு கொள்கிற அளவுக்கு, எல்லா மக்களோடு ஈடுபாடு கொள்கிற அளவுக்கு, கம்பல்ஷன் கூட கிடையாது. கட்டாயம் கிடையாது,—ரஷ்ய மொழி பயன்படுத்தப்படவேண்டும் என்று இருக்கிறதன் மூலம்—ஆணை இல்லை. கான்ஸ்டிடியூஷனில் ரஷ்ய மொழி தான் எல்லோரும் பயன்படுத்த வேண்டும் என்று கூட இல்லை—பயன் கருதி, நலன் கருதி எல்லோரும் ரஷ்ய மொழியை ஏற்றுக் கொள்கிறார்கள்.

அதற்குக் காரணம் என்னவென்றால், எல்லா மொழிகளையும் பார்க்கும்போது, ரஷ்ய மொழி தான் வழக்கு மிக்க மொழி, வளம் மிக்க மொழி என்பது மட்டும் அல்லாமல், கிட்டத்தட்ட 17, 18 கோடி மக்களால் பேசப்படுகிற மொழி. விஞ்ஞான வளர்ந்து இருக்கிற மொழி அந்த மொழி. கலைச் சொற்கள் வளர்ந்திருக்கிற மொழி அந்த மொழி. அந்த மொழி தலைமை தாங்குவதற்கு அங்கே இருக்கிற எந்த மொழிகளுக்கும் சங்கடம் இல்லை.

அந்த மொழியை துணை மொழியாக ஏற்றுக் கொள்வதற்கும் எந்த மொழிக்கும் அங்கே சங்கடம் இல்லை. ஆனால் இங்கேவந்திருக்கிற சங்கடம் என்னவென்றால், வளர்ந்த மொழி, வளம்பட்ட மொழிகள், வளராத ஒரு இந்தியை ஏற்றுக் கொள்ள வேண்டிய ஒரு கட்டத்தில் இருக்கின்றன. இங்கே 69 வகையான இந்திகள் இருக்கின்றன. இப்போது கொண்டு வரப்பட்டிருக்கின்ற 'இந்தி கெடிபோலியன் இந்தி' என்ற ஒரு இந்தி. அது டெல்லியைச் சுற்றி இருக்கிற 2 கோடி மக்களால் மட்டும் பேசப்படுகிற இந்தி. கெடிபோலியன் இந்திக்காரனுடைய மொழியை கன்னூல் இந்திக்காரன் புரிந்துகொள்ள மாட்டான்.

ஒருவன் 'கா கர்த்வா' என்பான். 'க்யா காத்தே ஹோ'
என்பான் ஒருவன். மற்றொருவன். 'தும் கிங் கரி' என்
கிறான். 'தூ சே க்யோ' என்கிறான் இன்னொருவன். எல்லாம்
இந்தி தான்.

ஒவ்வொரு இந்திசகும் மாறுபடுகிறபோது. வளம்
படாத, இலக்கணம் இல்லாத அந்த வகையிலே இருக்கிற
அந்த இந்தி, மற்றைய வளம் மிக்க மொழிகளைக் கட்டுப்படுத்த
முடியும் என்று சொல்கிற காரணத்தாலே தான் நாம் அந்த
எதிர்க்கவேண்டிய அவசியம் வருகிறது.

(பிற்பகல் 12.50)

ஆக, அதனுடைய தன்மைகளை பேரறிஞர் அண்ணா அவர்
களே சொன்னார்கள். பெரிய புத்தகங்களைப் பொறுத்த
வரையிலே, இரயில்வே கெய்டும், துளசிதாஸ் இராமாயணமும்
தான் இந்தியிலே இருக்கிறதே தவிர, மற்ற குறிப்பிட்டுச்
சொல்லக் கூடிய இலக்கியங்கள் இல்லை என்று கூட எடுத்துச்
சொன்னார்கள்.

ஆக, ரஷ்யாவிலே மொழியை அங்கே ஆள்வதற்கும், இங்கே
ஆள்வதற்கும் கருத்து வேறுபாடு இருக்கிறது. அந்தக் கருத்தை
நாஞ்சிலார் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அவர் சொன்ன
கருத்துக்கள் ஒப்ப முடிந்த கருத்துக்களே தவிர, மாறுபட்ட
கருத்துக்கள் அல்ல. அதிலே மும்மொழித் திட்டம் தான்
என்கிறார்கள். இரண்டு மொழித் திட்டம் தான் என்று நீங்கள்
சொல்கிறோம். ஆக அந்த வகையிலே.......... (குறுக்கீடு).

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : பேரவைத் தலைவர் அவர்
களே, நாவலர் அவர்கள் இந்தி மொழியிலே பல கிளைமொழிகள்
இருக்கின்றன. அந்த மொழி இந்தியத் தேசத்திற்கு உதவாது
என்று பேசுகிறார்கள். அது நாவலருடைய திறமை. அது
அவருடைய அறிவு, அவருடைய ஆற்றல். அதிலே எனக்கு
ஒன்றும் வியப்பில்லை. நான் மதிக்கிறேன். ஆக இந்தியா
விற்கு ஒரு பொது மொழி தேசிய மொழி வேண்டும். அது எந்த
மொழி என்று தாங்கள் கருதுகிறீர்கள் என்பதை அறிய விருப்பு
கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: : அதுபற்றி
பல சமயங்களில் தெளிவு படுத்தியிருக்கிறோம். ஆங்கிலம்
பிறந்தது இங்கிலாந்தில். ஆனால் கனடாவிலும் அந்த
ஆங்கிலம் தான். அமெரிக்காவிலும் அந்த ஆங்கிலம்தான். தென்
ஆப்பிரிக்காவிலும் அந்த ஆங்கிலம்தான் மொழி. ஆஸ்திரேலி
யாவிலும் அந்த ஆங்கிலம் தான் மொழி. அவர்களே எடுத்துச்
சொல்லியமாதிரி, இந்தியாவில் இருக்கிற ஆங்கிலோ இந்தியர்கள்,
இந்தியத் தேசத்தைச் சார்ந்தவர்கள், அவர்களுடைய



தாய் மொழி ஆங்கிலம்தான். இங்கே இருக்கிற பல மொழி
களில் ஆங்கிலமும் ஒரு மொழி. ஆக 15 மொழிகளாக, எட்டா
வது பிரிவில் ஆங்கிலத்தை ஒரு மொழியாக சேர்க்க வேண்டும்.
சேர்ப்பது மட்டுமல்லாமல், என்றென்றைக்கும் வலுவு பெற்று
மொழியாக, உலகம் முழுவதும் தொடர்பு கொள்வதற்கு பயன்
படுத்துகிற அதே ஆங்கிலத்தை இந்தியா முழுமைக்கும் பயன்
படுத்திக்கொள்ளலாம். இந்தியை நாம் கற்றுக்கொண்டாலும்
கூட, உலகத் தொடர்புக்கு, அறிவியல் தொடர்புக்கு, தொழில்
நுட்ப வளர்ச்சிக்கு, ஆங்கிலத்தை நாம் கற்றுத்தான் தீர
வேண்டும். ஆக உலகத் தொடர்பு கொள்வதற்குக் கற்றுக்
கொள்ள வேண்டிய அதே ஆங்கிலத்தை இந்தியாவோடு
தொடர்பு கொள்வதற்கும் பயன்படுத்த முடியும்.

அது மட்டுமல்ல பெரிய பூனை நுழைவதற்காக செய்யப்படு
கிற அதே துளையில் சிறிய பூனையும் நுழைந்து சென்றுவிட
முடியும். ஆகவே நியூட்டனைப் பற்றிச் சொல்கிறபோது
கூட, அவருடைய வேலைக்காரி, அவர் இரண்டு துளை போட்
டிருந்தார் என்றும் அந்தப் பேரறிஞரிடம் அந்த வேலைக்காரி
ஏன் இரண்டாவது துளை போட்டிருக்கிறீர்கள் என்று கேட்
டதற்கு அவர், நான் வளர்த்த பெரிய பூனை குட்டி போட்டு
விட்டது. அந்தக் குட்டி செல்வதற்கு இரண்டாவது துளை
போட்டதாக பதிலுக்குக் கூறினார் என்று வேலைக்காரி
சொன்னாளாம். இந்தப் பெரிய பூனை செலுகின்ற
துளையிலேயே சின்ன பூனை செல்லலாமே என்று
அவள் சொன்னாளாம். ஆக உலகத்திற்காக நாம் கற்றுக்
கொள்ளும் அதே ஆங்கிலத்தை இந்தியாவிற்காகவும் நாம்
கற்றுக்கொள்ளலாம். ஆக வட மாநிலங்களோடு, அல்லது
டெல்லியோடு தொடர்பு கொள்ளவேண்டியவர்கள் யார்,
வளர்ந்த பெருமக்கள், அறிஞர் பெருமக்கள், ஆராய்ச்சி பெரு
மக்கள், அரசியல்வாதிகள், மற்றும் அரசாங்கம் ஆகியோர்
தொடர்பு கொள்ளவேண்டுமே தவிர, கொத்தவால்சாவடியில்
இருக்கின்ற கத்திரிக்காய் விற்கிறவர்கள், டில்லியில் கத்திரிக்
காய் விற்கிறவர்கள்தானா டெலிபோனில் பேசப் போகிறார்
கள், தொடர்பு மொழி வேண்டுமென்பதற்காக? (சிரிப்பு)
யாருக்காக தொடர்பு மொழி வேண்டுமோ, அவர்கள் கட்டா
யம் ஆங்கிலம் கற்றுக்கொள்ளத்தான் போகிறார்கள். அது
இந்தி நாடாக இருந்தால், இந்தி ப்ளஸ் ஆங்கிலம் கற்றுக்
கொள்ளாமல் வாழமுடியாது. அது வங்காள நாடாக இருந்தால்
வங்காளம் ப்ளஸ் ஆங்கிலம் கற்றுக்கொள்ளாமல் வாழமுடியாது;
அது மகாராஷ்டிரமாக இருந்தால், மராட்டி ப்ளஸ் ஆங்கிலம்
கற்றுக்கொள்ளாமல் வாழமுடியாது. ஆக ஆங்கிலத்தை நாம்
எல்லோரும் பயன்படுத்தமுடியும். யார் தொடர்பு கொள்ள
முடியும் என்ற வகையைத்தான் நாம் எடுத்துச் சொல்கிறோம்.
அதற்கு காலம் சென்றால் நல்ல வலிவு ஏற்படும் என்ற

நம்பிக்கை நமக்குண்டு. ஆகவே தான் அவர்கள் கேளுங்கள்
கொடுக்கப்படும் என்று சொன்னதன் காரணமாகத்தான்
கேட்டுக்கொண்டேயிருக்கிறோம். கொடுக்கப்படும் ஒரு சூழ்
நிலை, நம்பிக்கை நமக்கிருக்கிறது.

அதுபோன்று நேருவினுடைய அந்த வாக்குறுதி, வாக்குறு
யாக இருக்கிறதே தவிர, அது சட்டமாக்கப்படவில்லை, அது
இயற்றப்படவில்லை என்பதைத் தான் நாம் மீண்டும் வலி
யுறுத்தி வருகிறோம். முதலில் சொன்னமாதிரி, சர்க்காரியா
கமிஷனிடத்திலே கொடுத்த அறிக்கைகளும், மற்றவைகளும் இந்த
அவையில் வைக்கப்படும். வைக்கப்பட்டதற்குப் பிறகு, அது
பற்றி பேச வேண்டிய அவசியம் ஏற்பட்டாலும் கூட, பேசு
வதற்கு வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்று இந்த வாய்ப்
பிலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லலாம்
என்றாலும்கூட, வெள்ள நிவாரணம் பற்றி எல்லாம் எடுத்துச்
சொன்னார்கள், வெள்ள நிவாரணத்தைப் பொறுத்தவரை
யிலே, இங்கே கடுமையான அளவிற்கு வெள்ளம் வந்தது.
வறட்சி, வெள்ளம் என்கின்ற தன்மைகள் வருகின்றபோது,
மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் குறிப்பிட்டார்கள்.
1981-1982, 1982-83-ல் ஏற்பட்ட அளவிற்கு வறட்சி வர
வில்லை. ஆனால் மழையைப் பொறுத்தவரையில் சில
பல இடங்களில் இருக்கிறது. வறட்சி என்பதற்குச் சில
இலக்கணங்கள் இருக்கின்றன. உழவர் பெருங்குடி மக்கள்
எந்த அளவிற்கு பாதிக்கப்பட்டால், எந்த அளவிற்கு அவர்
களிடத்திலே வரி விதிப்பு செய்யலாம், கால் பங்கு, அரை
பங்கு, முக்கால் பங்கு அல்லது முழு பங்கு என்று....
(குறுக்கீடு).

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்
1981-82ஆம் ஆண்டைச் சுட்டிக்காட்டி அந்த ஆண்டு இருந்த
பருவ மழை இந்த ஆண்டு பொய்க்கவில்லை. வறட்சியில்லை
என்று சொன்னார்கள். அவர்கள் இன்னும் கொஞ்சம் புள்ளி
விவரங்களை சேகரித்துக்கொள்ள வேண்டுமென்று நான்
உங்கள் சார்பிலே சொல்லிக் கொள்ளவிரும்புகிறேன். அதை
விட மோசமான வறட்சி நிலைமை இந்த ஆண்டு மாவட்டங்
களிலே வந்தது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, சிலபல இடங்களிலே இத்
தகைய நிலைமைகள் இருக்கின்றன. தஞ்சை மாவட்டத்திலே
ஒரு சில பகுதிகள் தண்ணீர் இல்லாமல் பாதிக்கப்பட்டு இருக்கு
கின்றன. இப்போது பெய்த மழையால் ஓரளவு நிலைமை
சரிப்பட்டு இருக்கிறது. வடஆற்காடு மாவட்டத்திலே



அவ்வளவு பாதிப்பு இல்லை. வேறு சில பல இடங்களிலே பாதிப்
பான நிலைமை இருக்கிறது. ஆகவே புள்ளி விவரங்களை
அங்கே இருக்கிறவர்கள்தான் தரவேண்டும். மாவட்ட
ஆட்சித் தலைவர்களைத்தான் நாம் கேட்டுப் பெறவேண்டும்.
அவர்களைக் கேட்காமல் திரு. சித்தன் அவர்களைக் கேட்டு
மட்டும் முடிவுக்கு வந்துவிட முடியாது.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத்
தலைவர் அவர்களே, மன்னிக்கவேண்டும் குறுக்கிடுவதற்காக.
மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாகத் தான் நாம் புள்ளி
விவரங்களைப் பெற வேண்டும் என்பதை நான் நன்கு அறிவேன்.
ஆனால் அவற்றைப் பெறவேண்டிய காலத்தில் பெறவேண்டும்,
காலந்தாழ்ந்து பெறக்கூடாது. அதிலே முனைப்பாக இருந்து
புள்ளி விவரங்களைப் பெற்றிருக்க வேண்டும் என்பதைத்தான்
நான் சொன்னேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சி நிலை ஆகட்டும், வெள்
ளப் பாதிப்பு ஆகட்டும், புள்ளி விவரங்கள் வருகிறபோது
நாம் தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.
தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரி
வித்துக் கொள்கிறேன்.

வெள்ளத்தினுடைய தன்மையைப் பொறுத்தமட்டில் ஏற்
பட்டிருக்கிற பல்வேறு சூழ்நிலைகளையெல்லாம் இங்கே எடுத்துச்
சொன்னார்கள். கிட்டத்தட்ட 187 கோடியே 33 லட்சம் ரூபாயை
மத்திய அரசு சீரமைப்பதற்காகவும் புதுப்பிப்பதற்காகவும்
கொடுத்தால் நல்லது. தேவைப்படும் அந்தத் தொகையை
மத்திய அரசிடம் நாம் கேட்டோம். மத்திய அரசு சிறப்
பான முறையிலே உடனடியாக நடவடிகை எடுத்தார்கள்.
இந்தியப் பிரதமர் அவர்கள் உடனடியாக இங்கே வந்து
பார்த்து தக்க நடவடிக்கை எடுக்கச் சொல்வதாகச் சொல்லி
விட்டுச் சென்றார்கள். வேளாண்மைத் துறை அதிகாரிகளை
அனுப்பி வைப்பதாகச் சொன்னார்கள். 2, 3 நாட்களிலே
அவர்களும் இங்கே வந்தார்கள், அவர்கள் உடனடியாக
இங்கே வந்து பார்த்தார்கள். அதற்குப் பிறகு இரண்டு
குழுக்கள் வந்தார்கள். அந்தக் குழுக்கள் இங்கே வந்து
பார்த்துப் போனார்கள். அதற்குப் பிறகு அவர்கள் உடனடி
யாகச் செய்யக்கூடிய வேலைகளுக்காகவும் உடனடியாகப்
பழுதுபார்க்கக்கூடிய வேலைகளைச் செய்வதற்காகவும்தான்
நாங்கள் பணம் தருவோம், புதுப்பிப்பதற்காகவும் சீர் அமை
பதற்காகவும் வேண்டுமானால் அதை மெள்ளத்தான் பார்க்க
வேண்டும், இப்போது அதற்குத்தான் தருவோம் என்று சொன்
னார்கள். அந்த வகையிலே அவர்கள் 66 கோடியே 81 லட்ச
ரூபாய் செலவு செய்யலாம் என்ற அளவுக்கு ஒதுக்கி இருக்
கிறார்கள். அந்தத் தொகையைத் தருவதற்கு அவர்கள்

ஒப்புக் கொண்டிருந்தாலும்கூட அதிலே நாலில் ஒரு பங்கை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் நாலிலே மூன்று பங்கை மத்திய அரசு மானியமாகத் தரும் என்றும் சொன் னார்கள். 66 கோடியே 81 லட்சத்தையும் நாம் செலவழித்து விட்டால் 1 பங்கை நாம் ஏற்றுக் கொள்ளவேண்டும், பாக்கி யுள்ள 3 பங்கை அவர்கள் தருவார்கள். அதிலேயும் குறைத் துச் செலவழித்தால் அவர்கள் அதிலே 3 பங்கையும் நாம் ஒரு பங்கையும் ஏற்றுக்கொள்ளவேண்டும். அந்த வகையிலே பல்வேறு பணிகளை பல்வேறு கட்டங்களிலே நாம் நிறை வேற்றிக் கொண்டு வருகிறோம்.

சென்னை, செங்கற்பட்டு, தென் ஆற்காடு, வட ஆற்காடு மாவட்டத்திலே ஒரு பகுதி, தஞ்சை மாவட்டம் ஆகிய பகுதிகள் பாதிக்கப்பட்டன. கடலூர் பகுதியிலே 150 மைல் நீளமும் 40, 30 மைல் அகலமும் உள்ள பகுதி பெரு மழையால் பாதிக்கப்பட்டு வெள்ளம் வந்தது. தொடர்ந்து மழைபெய்ததன் காரணத்தினால் அந்தப் பகுதியிலே வெள்ளம் இருந்தது. புயல் வரும் வரும் என்று சொன்னார்கள். ஆனால் புயல் அப்படி வந்திருந்தாலும் கூட அந்த மேகங்கள் எல்லாம் மற்றப் பகுதிக்குத் தள்ளப்பட்டு மழை கோயம்புத்தூர் போன்ற இடங்களில் பெய்திருக்கும். புயல் இல்லாமல் வெறும் மழை பெய்த காரணத்தினால் பெரு வெள்ளம் ஏற்பட்டது. அதனால் 44 லட்சத்து 13 ஆயிரம் பேர்கள் பாதிக்கப்பட்டார்கள். 245 நபர்கள் உயிரிழந்தார்கள். கணிசமான கால்நடைகள் உயிரிழந்தன. 24,446 குடிசைகள் பாதிக்கப்பட்டன. 4 லட்சத்து 20 ஆயிரத்து 258 பகுதிகள் சேதப்பட்டன. அந்த நேரத்திலே தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுத்துக் கொண்ட காரணத்தினாலே பாதிக்கப்பட்ட பகுதிகளிலே எல்லாம் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஒவ்வொரு துறையிலும் என்ன என்ன வகைகளிலே பணிகள் மேற்கொள்ளப் பட்டன என்பதைப்பற்றிய விவரங்கள் எல்லாம் இருக்கின்றன, விரிவான விளக்கங்களை எல்லாம் எடுத்துச் சொன்னால் நேரம் ஆகும். நெடுஞ்சாலைத் துறையிலும் நீர்ப்பாசனத் துறையிலும் பொதுச் சுகாதாரம் மருத்துவத் துறையிலும் விவசாயத் துறையிலும் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. சென்னை மாநகராட்சிக்கு 15 கோடியே 15 லட்ச ரூபாய் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். வெள்ள நிவா ரணத்திற்காக உதவித் தொகை கொடுப்பதற்காக 17 கோடியே 84 லட்ச ரூபாய் அவர்களுக்காக ஒதுக்கியிருக்கிறோம். இறந்த வர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் என்ற வகையிலே, 187 பேர்களுக்கு தலா 2 ஆயிரம் வீதமும், 172 பேர்களுடைய வாரிசுகளுக்கு 3 லட்சத்து 44 ஆயிரம் ரூபாயும் வழங்கப் பட்டிருக்கிறது.



மீதம் உள்ளவர்களுக்கு தக்க விசாரணைகளுக்குப் பின் உதவு கின்ற முயற்சியும் மேற்கொள்ளப்பட இருக்கிறது.

(பிற்பகல் 1.00).

அதேபோன்று, தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகப் பேருந்து விபத்தில் உயிரிழந்த 58 பேர்களில் 30 நபர்களின் வாரிசுதாரர்களுக்கு முதலமைச்சர் அவர்களது நிவாரண நிதியிலிருந்து 5,000 ரூபாய் வீதமும் வழங்கப்பட்டு வருகின்றது.

இதுவரை பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ரூபாய் ஐந்து இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களிலுள்ள குடும்பங்களுக்கு ஐந்து கிலோ அரிசியும், 65 இலட்சம் ரூபாய் மதிப்புக்கு அரிசியும் வழங்கப்பட்டி ருக்கிறது.

மின்சாரத் தட்டுப்பாட்டின் காரணமாகப் பாதிக்கப்பட்டவர் களுக்கு தலா ஒரு லிட்டர் மண்ணெண்ணெயும் வழங்கப்பட்டி ருக்கிறது.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் கரும்பு நிலைமையைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். கரும்பு விகிதத்தை மத்திய அரசினுடைய விகிதத்திற்கு மேலாக நாம் கூட்டிக் கொடுத்திருந் தாலும் இங்கேயிருக்கின்ற சூழ்நிலையின் அடிப்படையிலே அதைச் சற்று உயர்த்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியதற்கிணங்க 1985-86ஆம் ஆண்டு கரும்பு பருவத்திற்கு 8.5 சதவீத சர்க்கரைச் சத்துள்ள கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூபாய் 195 என்று விலை நிர்ணயிக்கலாம் என்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் முடிவெடுத்திருக் கிறார்கள். ஆகவே, அதற்குமேலே அதனுடைய சதவீத சத்து உயர உயர அதனுடைய விலையும் உயர்ந்து கொண்டிருக்கும். ஆனால் அடிப்படையாக 8.5 சதவீத சர்க்கரைக்கு ரூ. 185 என்று நிர்ணயித்தோம். இப்பொழுது ரூ. 195 என்று நிர்ணயிக்கப் படுகிறது என்பதை கூறிக்கொள்ள நான் விரும்புகிறேன்.

மதுராந்தகத்திலே ஏற்பட்டிருக்கின்ற ஒரு சூழ்நிலையை மாண்புமிகு உறுப்பினரவர்கள் இங்கே குறிப்பிட்டுக் காட்டி னார்கள். செங்கல்பட்டு மாவட்டத்திலே 1985 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் பெய்த கடும் மழையின் விளைவாக மாவட்ட ஆட்சித் தலைவரால் நிவாரணப் பணிகள் மேற் கொள்ளப்பட்டன. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படுவதற்கு 30–11–1985 இல் 1,90,000 ரூபாய் கருங்குழி வருவாய் ஆய்வாளர், மதுராந்தகம் வட்ட உதவி யாளர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் மூலம் அனுப்பப்

பட்டது. அதிலே அன்றைய தினம் 60,000 ரூபாய் விநியோகிக்கப்பட்டது. மீதமுள்ள தொகை அன்றிரவு பிராந்திய அதிகாரியிடம் திருப்பிக் கொடுக்கப்பட்டது. அதோடு கூடுதலாக 40,700-ஐயும் சேர்த்து 1,70,700 ரூபாய் இருசமநல்லூர் கிராமத்தில் வெள்ள நிவாரணப் பணிகளுக்காக 1–12–1985-இல் அனுப்பப்பட்டது. கிராம நிர்வாக அலுவலாளர் திரு. தருமன் தொகையை விநியோகிக்க மோட்டார் சைக்கிளில் சென்றார். சாலை பழுதாகியிருந்த காரணத்தினால் வருவாய் ஆய்வாளரும், உதவியாளரும், கிராமத்திற்குச் சென்று கிராம நிர்வாக அலுவலரைச் சந்திக்க இயலவில்லை. ஒப்படைக்கப்பட்ட தொகையில் ஒரு பகுதியை விநியோகித்த பின்னர் மீதமுள்ள தொகையை சோனல் ஆபீசரிடம் ஒப்படைக்காமல் அன்றிரவு 7–30 மணி அளவில் கிராமத்தை விட்டு கருங்குழியிலுள்ள தனது அறைக்கும், பின்னர் செங்கல்பட்டிலுள்ள தனது வீட்டுக்கும் கிராம நிர்வாக அலுவலர் திரும்பினார். அவ்வாறு திரும்பும் வழியில் விநியோகிக்கப்படாத தொகை அடங்கிய பை செங்கற்பட்டு அருகில் நெடுஞ்சாலையில் விழுந்துவிட்டது. திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக நடத்துநர் ஒருவரால் அது கண்டெடுக்கப்பட்டு, சென்னையில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்ினுடைய தலைமையகத்தில் ஒப்படைக்கப்பட்டது. வீடு திரும்பிய கிராம நிர்வாக அலுவலர் பணப்பெட்டியை இரவு முழுவதும் தேடி, மறுநாள் விடியற்காலை அதிகாரிக்குத் தெரிவித்தார். இதற்கிடையில் தகவல் தெரிந்து 2—12—1985-இல் மதுராந்தகம் வட்ட ஆட்சியர் சென்று, பணத்தைப் பெற்று வந்தார். விநியோக அத்தாட்சி ரசீதுடன் மேற்படி தொகை கணக்கு 2–12–1985 மற்றும் 3–12–1985 இல் சரி பார்க்கப்பட்டது. விநியோகிக்கப்படாத தொகையோடு கூடுதலாக 15,400 ரூபாய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

கிராம நிர்வாக அலுவலரின் சகோதரர் ஆதிகேசவன் என்பவர் செங்கற்பட்டிற்கு அருகில் செங்கல் சூளை வைத்திருப்பதாகவும், அச்சகோதரர் வங்கியில் செலுத்துவதற்காக 15,100-ஐ அச்சூளையில் காவலர் மூலம் 29–11–1985 இல் கொடுத்தனுப்பியதாகவும், வங்கியில் செலுத்த இயலாத காரணத்தினால் அத்தொகை கிராம நிர்வாக அலுவலரிடத்திலே இருந்ததாகவும் சொல்லப்படுகிறது. மீதமுள்ள ரூபாய் 300 கிராம ஊழியர் ஒருவருக்குச் சேர வேண்டிய வெள்ள நிவாரணத் தொகை என்றும் சொல்லப்படுகிறது. விநியோகிக்கப்படாத மீதமுள்ள வெள்ள நிவாரணத் தொகை பாதிக்கப்பட்டவர்களுக்குப் பின்னர் வழங்கப்பட்டுவிட்டது. எனவே, அரசுப் பணத்தில் இழப்பு எதுவுமில்லை. ஆனால், பணியில் கவனக்குறைவாக இருந்ததால் கிராம நிர்வாக அலுவலாளர், 3–12–1985-இல் தற்காலிகமாக பணி நீக்கம் செய்யப்பட்டார். அதுமட்டுமல்லாமல், விநியோகிக்கப்படாத தொகைக்கு மேல் கூடுதலாக 15,400 இருந்தது குறித்து கோட்டாட்சித் தலைவர் இப்பொழுது விசாரணை நடத்தி வருகிறார். ஆனால் அவர் சகோதரருடைய பணம் என்கிறார். அது எப்படி வந்தது என்பதை விசாரணை நடத்துகின்ற அள



விற்கு கோட்டாட்சித் தலைவர் விசாரணை நடத்தி வருகிறார். கருங்குழி சரக வருவாய் ஆய்வாளர் மீதும் தமிழ்நாடு குடிமைப் பணிகள் விதி 17(டி)-யின் கீழும் குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. தவறு செய்த மற்ற அலுவலர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை கூறிக்கொள்ள நான் விரும்புகிறேன்.

தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரையிலும் பல நண்பர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அதைப் பொறுத்த வரையிலும் அடிக்கடி நாம் இங்கே எடுத்துச் சொல்லி வருகின்றோம். இந்த அரசு தன்னுடைய சக்திக்கேற்ப, இங்கே இருக்கிற வசதி வாய்ப்புகளுக்கேற்ப, மூலப் பொருள் தன்மைக்கேற்ப, எந்த அளவுக்கு வளர்ச்சியைக் காட்ட இயலுமோ. அந்த அளவுக்கு நாம் காட்டிக் கொண்டு வருகிறோம் என்பதை அடிக்கடி எடுத்துச் சொல்கிறோம். மத்திய அரசிலிருந்து இங்கே வருகின்ற பல அமைச்சர்கள் கூட பாராட்டியிருக்கிறார்கள். இங்கே எடுத்துச் சொல்கின்றபொழுது, ஒரு வளர்ச்சியும் இல்லை. ஏதும் இல்லை என்று திருப்பி, திருப்பிச் சொல்வது பொருந்தி வராது. எதற்காகச் சொல்கிறேன் என்றால், ஒரு மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடும்போது கூட ஏற்கனவே காங்கிரஸ் ஆண்ட காலத்தில், கிட்டத்தட்ட ஒரு நாளைக்கு ஒரு தொழிற்சாலை வந்தது என்றும், இப்பொழுது எதுவும் வரவில்லை என்றும் எடுத்துச் சொன்னார்கள். ஆனால், இப்பொழுது இருக்கிற நிலைமைகளை ஒப்பிட்டுப் பார்ப்போமானால், 31–3–1978 வரையில், பதிவு செய்யப்பட்ட சிறு தொழில்கள் 18,789 இருந்தன. சென்ற ஆண்டு 1985, மார்ச் 1-ஆம் தேதி அளவில் கணக்கிட்டுப் பார்ப்போமானால், 64,313 சிறு தொழில்கள், பதிவு செய்யப்பட்ட தொழில்கள் வந்திருக்கின்றன. ஆக, அந்தக் கணக்குப்படி. பார்த்தால், ஒரு நாளைக்கு 12.47 தொழிற்சாலைகள் உருவாகி வருகின்றன ஒரு நாளைக்கு ஒரு தொழிற்சாலை உருவாகிய காலத்தைக் கண்டு மகிழ்கிறோம், நாம் பாராட்டுகிறோம். ஆனால் இப்பொழுது தமிழகத்தில் வளர்ந்துதான் வருகிறது. தற்போது தமிழகத்தில் ஒரு நாளைக்கு 12.5 தொழிற்சாலைகள் உருவாகின்றனவே தவிர, குறைந்துவிடவில்லை என்பதை மட்டும் நான் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன்.

கனி வளத்தைப் பொறுத்த மட்டிலும், 1977-ல் 105 புள்ளியாக இருந்தது. இப்பொழுது 172 புள்ளியாக உயர்ந்திருக்கிறது. 64.5 சதவீதத்தை கனி வளத்திலே நாம் பெற்றிருக்கிறோம், 8 ஆண்டு காலத்தில். பொருள் உற்பத்தியைப் பொறுத்து 63.8 சதவீதம் நாம் பெற்றிருக்கிறோம். மின்சார உற்பத்தியைப் பொறுத்த வரையிலும் 88.8 சதவீதம் கூடுதலாகப் பெற்றிருக்கிறோம். 143.32 ஆக இருந்தது 1977-ல். இப்பொழுது 270.6 ஆகியிருக்கிறது. ஆனால் தேவை அதிகமாயிருப்பதன் காரணத்தால், தமிழகத்தைப் பொறுத்தவரையில் பற்றாக்குறை இருந்து வருகிறது.

அதனால் தான் பக்கத்தில் இருக்கிற கேரளாவிலிருந்தும் சரி, ஆந்திராவிலிருந்தும் சரி, நாம் கூடுதலாக மின்சாரம் வாங்க வேண்டிய அவசியம் நமக்கு ஏற்படுகிறது. இங்கு அதிகமாக தொழிற்சாலைகள் வருகின்ற காரணத்தினாலும், அவர்களுக்கு மின்சாரம் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிற காரணத்தாலும், தேவை அதிகமாக ஏற்படுகிறது. நாம் எவ்வளவு அதிகம் உற்பத்தி செய்தாலும், தேவையை ஈடுகட்ட முடியாத சூழ்நிலை இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே குறிப்பிட்டுக் காட்டினார்கள்.

மொத்தம் தொழில் வளர்ச்சி, 1970-ல் ஏற்பட்ட நிலை 100 புள்ளி என வைத்துக்கொள்வோமானால், 1978-ல் மத்திய அரசினுடைய சராசரி வளர்ச்சி 6.8. ஆனால் தமிழகத்தினுடைய சராசரி வளர்ச்சி 14.7 ஆக இருந்தது. 1979-லே மத்திய அரசு தொழில் வளர்ச்சி 1.2 ஆக இருந்த நேரத்தில், நம்முடைய மாநிலத்தில் 5.22 ஆக இருந்தது. தொழில் வளர்ச்சி 1980-ல் 0.7 சதவீதம் தான், அகில இந்திய சராசரி. ஆனால், தமிழகத்தினுடைய வளர்ச்சி 5.7 சதவீதம். 1981-ல் 9.3 சதவீதம் வளர்ச்சி அகில இந்தியாவைப் பொறுத்தவரையிலும் சராசரி வளர்ச்சி; ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையில் 10.5 சதவிகிதம் இருந்தது. 1982இல் 4.8 சதவிகிதம்வளர்ச்சி அகில இந்திய சராசரி என்றால் தமிழகத்தில் 5.8 சதவிகிதம் இருந்தது. இதை எல்லாம் எதற்காகச் சொல்கிறேன் என்றால், குறிப்பாக, மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுக்கும் மற்றவர்களுக்கும் சொல்கிறேன், எல்லோரையும் சொல்லவில்லை, சில பேர் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, வளர்ச்சியைத்தான் நாம் காட்டியிருக்கிறோமே தவிர, எந்த வகையிலும் அகில இந்திய சராசரியைவிடக் குறைந்து போகவில்லை என்பதற்கான விளக்கங்களை பல தடவை நாம் சுட்டிக் காட்டியிருக்கிறோம்.

அது மட்டுமல்லாமல், வேறுபல மாநிலங்களை நாம் சுட்டிக் காட்டிச் சொல்கிறோம் என்றால், நம்முடைய மாநிலத்தினுடைய மக்கள் தொகை அடிப்படையிலே நாம் பார்த்தோமானால், மத்திய உதவி 7.4 சதவீதமாவது எல்லா வகையிலும் நமக்குக் கிடைக்க வேண்டும். 1982—83 ஆம் ஆண்டைய கணக்கை மட்டும் நாம் பார்ப்போமானால், அகில இந்தியாவிலும் மத்திய அரசு முதலீடு செய்திருக்கிற தொகை ரூ. 28,126 கோடியாகும். அதில் பீகாரில் மட்டும் மத்திய அரசு முதலீடு செய்திருப்பது ரூ. 4,692 கோடி ; மகாராஷ்டிராவில் ரூ. 3,993 கோடி ; மத்திய பிரதேசத்தில் ரூ. 3,861 கோடி ; உத்தரப் பிரதேசத்தில் ரூ. 2,490 கோடி ; மேற்கு வங்காளத்தில் ரூ. 2,396 கோடி ; ஆந்திரப் பிரதேசத்தில் ரூ. 2,118 கோடி ; அசாமில் ரூ. 1,556 கோடி ; ஒரிசாவில் ரூ. 1,522 கோடி ; அதற்குப் பிறகுதான் தமிழகம் வருகிறது. ரூ. 1,332 கோடி. எதற்குச்



சொல்கிறேன் என்றால், மக்கள் தொகைப்படி பார்த்தாலும், இங்கு தொழிற்சாலைகள் அமைக்க முதலீடு செய்வதற்கு வாய்ப்பு, சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. சில சமயங்களில் சொல்கிறார்கள். பீகார் போன்ற இடங்களிலே நிலக்கரி கிடைக்கிறது, இரும்பு கிடைக்கிறது. மூலப்பொருள் இருக்கிற இடங்களில்தானே, தொழிற்சாலைகள் வைத்திருக்க முடியும் என்று சொல்கிறார்கள். மூலப் பொருள் கிடைக்காமலேயே, தொழில் நுட்பத்தை வைத்துக் கொண்டு, தொழில் நுட்ப அறிவை வைத்துக் கொண்டு, எலெக்ட்ரானிக்ஸ்— மின்னணு போன்றபொருள்களைச் செய்ய வாய்ப்பு ஏராளமாக இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்வோமானால், ஊட்டியிலே இருக்கிற கிளைப்படச் சுருள் தொழிற்சாலையை விரிவாக்கம் செய்ய வேண்டுமென்று கேட்கிறோம். அதற்கு, மூலப் பொருள் இருக்க வேண்டிய இடத்தில் செய்ய வேண்டுமென்று அவசியம் இல்லை.

(பிற்பகல் 1.10)

இப்படிப்பட்ட தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கு ஏராளமான வசதி வாய்ப்பு இருக்கிறது. இன்னும் சொல்லப் போனால் அகில இந்தியாவிலே 'டெக்னிஷியன்ஸ்' என்று பார்த்தால், தொழில் நுட்ப அறிவு படைத்தவர்கள் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் பலர் இருக்கிறார்கள். இந்த வகையிலே நாம் முன்னணியில் இருக்கிறோம். ஆகவே, இப்படிப் பட்ட தொழில்களுக்கு முதலீடு செய்யலாம் என்று நாம் மீண்டும் மீண்டும் வற்புறுத்துகிறோம்.

அது மட்டுமல்ல. 1970 இல் மாநிலங்களில் செய்த மொத்த முதலீடு 3,885 கோடி ரூபாய். அதில் தமிழ் நாட்டிற்குக் கிடைத்த பங்கு 312 கோடி ரூபாய்தான். 1984 இல் செய்யப் பட்ட மொத்த முதலீடு 38,845 கோடி ரூபாய். அதிலே தமிழ் நாட்டிற்குக் கிடைத்தது 2,127 கோடி ரூபாய்தான். மொத்தத்தில் இது 5.5 சதவீதம்தான். ஆனால், தமிழ் நாட்டு மக்கள் தொகைக் கணக்கைப் பார்த்தால் 7.46 சதவீதம் வருகிறது. இப்படிப்பட்ட குறைபாடுகளை எடுத்துச் சொல்லி தொழில்கள் தொடங்க அல்லது அதிகமாக இங்கே முதலீடு செய்ய வாய்ப்பு வசதி இருக்கிறது, அதற்கான ஆக்கம் தரவேண்டுமென்று திரும்பத் திரும்ப வற்புறுத்திக் கொண்டு வருகிறோம்.

அடுத்து, இங்கே மீனவர் பிரச்சினையைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். அதுபற்றி விரிவாக எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. ஏனென்றால் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். துப்பாக்கிச் சூடு செய்தது அநியாயம் என்று சொல்லுகின்றபோது சாதாரணமாக துப்பாக்கி சூடு செய்கின்ற அவசியம் எந்த அரசுக்கும் ஏற்படாது. ஒரு அசாதாரண நிலை ஏற்பட்டதன் காரணமாக, மீனவர்கள்

கட்டுமரங்களை எல்லாம் வழியில் வைத்து மறியல் செய்து வன்முறையில் ஈடுபட்டதன் காரணமாகத்தான் இப்படிப்பட்ட ஒரு இக்கட்டான நிலைமை ஏற்பட்டது. இப்போது பார்த்தால் கூட தெரியும். குடிசைமாற்று வாரியக் கட்டிடங்கள் எந்த அளவுக்கு நொறுக்கப்பட்டிருக்கின்றன, எவ்வளவு சேதப்படுத்தப்பட்டிருக்கின்றன என்பது அங்கே போய்ப் பார்ப்பவர்களுக்குத் தெரியும். இப்படி வன்முறையில் ஈடுபட்ட காரணத்தால் தடியடிப் பிரயோகம் செய்து, கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்து, அவை எல்லாம் பயனளிக்காது போகவே, வேறு வழியில்லாமல் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. சிலபல நேரங்களில் நாம் விரும்பத்தகாத முறையில் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டு விடுகின்றன. இத்தகைய வன்முறைச் சம்பவங்களை, கொடுமையான செயல்களை யாரும் ஆதரிக்க மாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். அதுபற்றி நாம் கவலைப்படாமல் இருந்தால், அதனுடைய சேதம் மற்றவைகள் இன்னும் அதிகமாகியிருக்கும். மாநில அரசாக இருந்தாலும், மத்திய அரசாக இருந்தாலும், எந்த அரசாக இருந்தாலும் கட்டுக்கடங்காத கூட்டம் வந்து வன்முறையில் ஈடுபடுகின்றபோது நாம் சிலபல நடவடிக்கைகளை எடுத்துத் தீர வேண்டியிருக்கிறது. அப்படி நடவடிக்கை எடுக்கின்ற நேரத்தில் சிலர் பாதிக்கப்படுகிறார்கள். பாதிக்கப்பட்டவர்களுக்கு, இறந்தவர்கள் குடும்பங்களுக்கு அரசு சில உதவிகளைச் செய்கிறது. அந்த அடிப்படையிலே மீனவர் பிரச்சினையில் பாதிக்கப்பட்டவர் குடும்பத்திற்கு அதாவது இறந்து விட்டவர் குடும்பத்திற்கு 15,000 ரூபாய் வீதம் அரசின் சார்பில் நஷ்டஈடாக கொடுக்கப்பட்டிருக்கிறது. படுகாயம் அடைந்த ஐந்து பேர்களுக்கு தலா 5,000 ரூபாய் வீதம் வழங்கப்பட்டிருக்கிறது. சிறு காயங்கள் அடைந்த எட்டு பேர்களுக்கு தலா ஆயிரம் ரூபாய் வீதம் வழங்கப்பட்டிருக்கிறது.

மேலும் விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. அதிலே ஒரு முடிவு வந்ததற்குப் பிறகு அதன் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும். இந்தப் பிரச்சினையின் தன்மையைப் பொறுத்தவரையில் பல ஆண்டுகளுக்கு முன்னாலிருந்தே எப்படியாவது இந்த கடற்கரைப் பகுதியை தூய்மையாக வைக்க வேண்டும், அழகாக வைக்க வேண்டும் என்று முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டிருக்கின்றன. காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு, அது முடியவில்லை. அதற்குப் பின்னாலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த மீனவர்களுக்கு வலைகள் மற்றவைகள் வைக்க என்று கடற்கரை ஓரத்தில் கட்டிடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டன. ஆனால் மீனவர்கள் அவற்றைப் பயன்படுத்தவில்லை. இப்போதும் பயன்படுத்தாத சூழ்நிலையில் இருந்தார்கள். ஆக, முன்னேற்பாடாகச் சொன்னால் இப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படும் என்று மாண்புமிகு திரு. சித்தன்



அவர்களும் மற்றவர்களும் சொன்னார்கள். அதற்காக பொறுப் பேற்று நாம் வேண்டுமானால் மறுபடியும் தாக்கீது தரலாம், இரண்டு மாதம் தவணை வேண்டுமானாலும் தரலாம். திரு. சித்தன் அவர்களும் உடனிருந்து, ஒத்துழைப்புத் தந்து, கடற்கரையை தூய்மைப் படுத்துவதற்கு எல்லோரும் ஒத் துழைப்புத் தந்தால் நல்லது.

ஆனால் அவர்கள் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போன பிறகு, அங்கே சொல்லும்போது இடைக்கால உத்தரவு போட்டார்கள். முதல் நாள் மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் அவர் களும் மற்றவர்களும் உட்கார்ந்து பேசுகின்றபோது ஒரு குறிப் பிட்ட இடத்திலே கட்டுமரங்களை ஒதுக்கலாம், அந்த கடற் கரை முழுவதும் ஒதுக்காமல் ஒரு குறிப்பிட்ட இடத்தை ஒதுக் கலாம் என்று தெரிவித்தபோது, பேச்சு வார்த்தையின் மூலம் ஒப்புக் கொண்டார்கள். அந்த இடத்திலே ஒதுக்கலாம் என்று சுப்ரீம் கோர்ட் முதல் நாள் ஒப்புக் கொண்டது. கட்டு மரங் களையும், படகுகளையும் அவர்களிடம் திரும்பத் தந்து விட வேண்டுமென்றும் முதல் நாள் இடைக்கால ஆணை பிறப் பித்தது. மறுநாள் ஏற்கெனவே இருந்தது போல இருக்கட்டும் வழக்கை தனியாக ஆராயலாம் என்று வழக்கு முடிகிறவரையில், சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய நடவடிக்கை கள் முறைப்படி மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதை இந்த வாய்ப்பிலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

வேறு ஒன்றையும் இங்கே குறிப்பிட்டார்கள். அரசாங்க ஊழியர்கள் இங்கே வேலை நிறுத்தம் செய்து, ஆர்ப்பாட் டங்கள் நடத்தி, உண்ணாவிரதம் இருந்த தன்மைகளை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள்.

திரு. வி. பி. சித்தன் : தலைவர் அவர்களே, ஒரு விளக்கம். மீனவர்கள் பிரச்சினையில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடு பற்றி நீதி விசாரணை வேண்டுமென்று வலியுறுத்தினோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஏதாவது பதில் சொன் னால் மகிழ்ச்சியாக இருக்கும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நாம் அறிவித்திருப் பது உயர்மட்ட அதிகாரியின் மூலமாக விசாரிப்பதற்கு. ஆனால் மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும், எதிர்க்கட்சியைச் சேர்ந்த தலைவர்களும், மற்றவர்களும், மீனவர் சமுதாயத்தைச் சேர்ந் தவர்களும் எடுத்துச் சொல்லி வற்புறுத்தி வந்திருப்பதன் காரணத் தால் இந்தத் துப்பாக்கிச் சூட்டைப் பொறுத்தவரையில் துப்பாக்கிச் சூடு நடத்தவேண்டியது அவசியம்தானா, அதனால் ஏற்பட்ட விளைவு என்ன என்பதைப்பற்றி விசாரணை நடத்த, அதாவது ஒரு மாவட்ட நீதிபதி அளவில் நீதி விசாரணை நடத்த அரசு ஆயத்தமாக இருக்கின்றது என்பதை இந்த வாய்ப்பிலே கூறிக்கொள்ள விரும்புகிறேன். இதிலே ஒளிவு, மறைவு எதுவும் இல்லை.

உண்மை நிலைமை பற்றித் தெரியவருமானால் அது நாட்டுக்கு நல்லதுதான். அந்த வகையில் டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் அளவில் நீதி விசாரணை நடத்தி உண்மையைக் கண்டுபிடிக்க அரசு ஆயத்தமாக இருக்கின்றது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறோம். இருந்தாலும் கூட இருக்கின்ற சூழ்நிலையில், [illegible] சூழ்நிலை வந்தால் அதையொட்டி நடவடிக்கை எடுக்கலாம் என்றுதான் அரசு கருதி அந்த வகையிலே உயர்மட்ட அதிகாரியை வைத்து இதிலே தயவுதாட்சணியம் இல்லாத அளவுக்கு நீதி விசாரணை செய்யவேண்டும் என்று எடுத்துச் சொன்னோம். ஆனால் நீதிபதி அளவில்தான் இதை நடத்த வேண்டும் என்று பலரும் எடுத்துக் கூறியதன் காரணத்தால் மாவட்ட அளவில் ஒரு நீதிபதியை நியமித்து இந்தப் பிரச்சினை குறித்து ஆராய்ந்து அறிக்கை கொடுக்க உரிய முயற்சிகளை அரசு விரைவில் செய்யும் என்பதைக் கூறிக்கொள்ள நான் விரும்புகிறேன்.

அரசாங்க ஊழியர்களும், ஆசிரியர்களும், மற்றவர்களும் சங்கத்தை அமைத்துக்கொள்ள நாம் அனுமதி அளித்திருக்கிறோம். அவர்கள் கோரிக்கைகளை எடுத்து வைக்க இடம் தந்திருக்கிறோம். பல்வேறு பிரச்சினைகளைப் பேச்சுவார்த்தையின் மூலமாக நாம் முடித்துக் கொண்டு வருகிறோம். பேச்சுவார்த்தையின் மூலமாக அவர்கள் எவ்வளவு வேண்டுமானாலும் வாதாடி எடுத்துச் சொல்வதற்கு உரிமை இருக்கின்றது. அவற்றை எல்லாம் கேட்டு,கேட்டு எவ்வளவோ திருத்தங்களை நாம் செய்துகொண்டு வருகிறோம். மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது ஆசிரியர்களாகட்டும், அல்லது அரசு ஊழியர்களாகட்டும் பல்வேறு சலுகைகளை நாம் அவர்களுக்குச் செய்துகொண்டு இருக்கிறோம். அந்த வகையிலே பேச்சுவார்த்தையின் மூலமாகத்தான் நாம் சிலபல முடிவுகளை எடுக்கவேண்டும். அதுதான் முறையும்கூட.

அதுமட்டுமல்லாமல் இந்த நிலைமையைத்தான் நாம் மற்றவர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் எடுத்துச் சொல்லி வருகிறோம். முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படுகிறபோதுதான் அவர்கள் வேலை நிறுத்தம், மறியல் போன்றவற்றுக்குப் போகிறார்கள். பேச்சுவார்த்தை மூலமாக முடிவு காணவேண்டும் என்பதுதான் நம்முடைய நோக்கம். குறிப்பாக அரசு ஊழியர்களைப் பொறுத்த வரையில் 5 கோடி மக்களுக்கும் பொறுப்பேற்று நடக்க வேண்டியவர்கள் அவர்கள். அவர்கள் மற்றவர்களை விட கொஞ்சம் அதிகக் கட்டுப்பாட்டோடு இருந்து அந்தத் தன்மையைக் காப்பாற்ற வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் என்றென்றும் நிலைத்து நிற்கக்கூடியவர்கள். அதிகாரிகளும் மற்றவர்களும் நிலைத்து நின்று பணியாற்றக் கூடியவர்கள். ஆட்சி இருக்கும், மாறும், போகும், வரும். அரசில் கட்டுப்பாடு குறைந்துவிட்டால் எந்த ஒரு நிலைமையும் சிறப்பாகச் செய்ய இயலாது. ஆகவேதான் பேச்சுவார்த்தை மூலமாக எதையும் செய்யலாம் என்று சொல்கிறோம். பலபேர் உண்ணாவிரதம் இருக்கின்ற தன்மையில் நாம் நடவடிக்கை



எடுப்பதில்லை. ஆர்ப்பாட்டம் நடக்கிறபோதும் நாம் நடவடிக்கை எடுப்பதில்லை. ஊர்வலம் நடத்துகிறபோதும் அதற்கான அனுமதியைத் தந்து ஊர்வலம் எல்லாம் கூட நடத்துகிறார்கள். ஆனால் மறியல் என்று வருகிறபோதுதான் அதாவது வேலைக்கு வருகின்ற அரசு ஊழியர்களையும், மற்றவர்களையும் தடுப்போம் என்று வருகிறபோதுதான் சட்டப்படி நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியம் அரசுக்கு ஏற்பட்டுவிடுகிறது. அதேபோல் சட்டத்தை நிலைநாட்டவேண்டிய அளவுக்கு நாம் கட்டுப்படுத்தியாக வேண்டும். அதிலும் பல்வேறு பணிகளை நிறைவேற்றித் தரவேண்டிய நிலைமையில் உள்ள அரசு ஊழியர்கள், அதிலும் தலைமைச் செயலகத்தில் இருக்கின்ற ஊழியர்கள் பெருந்த வெள்ளச் சேதம் ஏற்பட்டு நிவாரணப் பணிகள் எல்லாம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற நேரத்தில் இங்கே விதிமுறைகளை மீறி நடக்கின்ற வகையில் ஒரு குறிப்பிட்ட பகுதியினர் போனதுதான் தவறு.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, இங்கே என். ஜி. ஓக்கள் 33 பேர் சஸ்பென்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். பல ஆசிரியர்கள் மீது வழக்குகள் போடப்பட்டு பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை எல்லாம் மறுபரிசீலனை செய்து அந்த வழக்குகளைத் திரும்பப் பெற்று அந்த என். ஜி. ஓ.க்களின் மீது இருக்கின்ற சஸ்பென்ட் உத்தரவையும் ரத்து செய்யவேண்டும் என்ற வகையில் அந்த நல்ல அறிவிப்பை நாவலர் அவர்கள் அறிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏற்கெனவே சென்னையிலே காவல் நிலையத்தைத் தாக்கிய நபர்கள் மீது இன்னும் சொல்லப்போனால் ஹார்மனி என்ற வகையிலே மக்கள் மத்தியிலே நல்லெண்ணம் ஏற்பட வேண்டும் என்பதற்காக 302, 307 என்ற பிரிவுகளின்படி இந்த அரசால் போடப்பட்ட வழக்குகள் கூட வாபஸ் பெறப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்ட வழக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் மீது போடப்பட்ட வழக்கு என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, தலைமைச் செயலகத்தைப் பொறுத்த வரையில் இங்கே இருப்பவர்கள் மிக முக்கியமான இடத்திலிருந்து கொண்டு பணியாற்றிக்கொண்டிருக்கிற போது மற்றவர்களை விட அதிகக் கட்டுப்பாட்டை நிலைநாட்ட வேண்டியவர்களாக இருக்கிறபோது, இவர்கள் தாங்களாகவே, சட்டத்தைத் தெரிந்திருந்தும் மீறுகிற நிலைமை ஏற்படுகிறபோது, மீறி நடக்கிற சூழ்நிலை ஏற்படுகிறபோது உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டிய இக்கட்டான கட்டத்திற்கு அரசு வந்து சேர்கிறது. அவர்களுக்கெல்லாம் மிகத் தெளிவாகச் சொன்னோம். சர்வீஸ் ரூலிலே உள்ள விதிகள் பற்றியும், அசோசியேஷன் தன்மைகள் பற்றி எல்லாம் என்னென்ன என்று நாம் தெளிவுபடுத்தி இருக்கிறோம். அவர்களும் அதைப் புரிந்துகொண்டு இருக்கிறார்கள். ஆனாலும் அவற்றை மீறுகிறார்கள் என்றால் என்ன பொருள்?

அதை மீறுகிறார்கள் என்றால் அதனுடைய விளைவுகளைத்
தாங்கிக் கொள்ளக்கூடிய அளவிற்கு அவர்கள் அதை மீறுகிறார்
கள் என்றுதான் பொருள் கொள்ள வேண்டியுள்ளது. ஆகவே
சர்வீஸ் அசோசியேஷன்களின் கன்டிஷன்களை எல்லாம் போடுகிற
போது அடிக்கடி வற்புறுத்திக் கொண்டே வந்திருக்கிறோம்.

(பிற்பகல் 1.20)

Tamil Nadu Government Servants' Conduct Rules-ல் மிகத்
தெளிவாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே
"A strike or the threat of a strike against the Government shall never be used as a means of achieving any of the purposes of the Association. The Association shall not adopt a go-slow or work-to rule policy or advise its members to apply mass causal leave. Any demonstration shall be peaceful, outside the office premises and not during office hours. An Association shall not encourage any unfair labour tactics like damage to Government property, interference with the normal work, insubordination. An Association can send representation only on common service matters of its members, first directed to the head of the department concerned, then to the Secretary of the respective department concerned and then to the Government. In respect of individual cases the affected individual can find remedies by following the statutory rules in existence. A strike shall be deemed to include any form of demonstration including hunger strike with the object of achieving something to be done by the superior officers. A Service Association shall not therefore indulge in hunger strike with the object of achieving something."

என்று தெளிவாகவே விதிகள் எல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது.
இதையெல்லாம் ஏற்றுக்கொண்டுதான் அவர்கள்
வந்திருக்கிறார்கள். தலைமைச் செயலகத்தின் அலுவலர் சங்கத்
தைப் பொறுத்தவரையில் ஏழு கோரிக்கைகளை வைத்திருக்கலாம்.
அதை முன்கூட்டியே அரசுக்கு அனுப்பவில்லை.
சொல்லவும் இல்லை. அதுபற்றி பேசவும் இல்லை. அதுபற்றி
கொடுக்கவும் இல்லை. அதுபற்றி ஒரு தடவையாவது பேசி முடி
வெடுத்திருக்கலாம். அதுவும் செய்யவில்லை. அவர்கள் எடுத்த
எடுப்பிலே முதல் நாள் 'ஹங்கர் ஸ்ட்ரைக்' என்றார்கள்.
கோட்டைக்குள்ளேயே உண்ணாவிரதம் என்று நடத்தியதனால்
சட்ட திட்டங்களின்படி அவர்களை கைது செய்ய வேண்டி
வந்தது. கைது செய்ததைக் கண்டித்து மற்றவர்களும் சேர்ந்து
வேலை நிறுத்தம் செய்தார்கள். வேலை நிறுத்தம் செய்ததோடு
மட்டுமல்லாமல், கையெழுத்து போட்டு விட்டு யாரும் எந்த
வேலையும் செய்யாமல் வெளியே வந்து நின்று கொண்டிருந்
தார்கள். இதற்கு ஆயிரத்து சில்லரை பேர்களுக்கு நோட்டீஸ்
கொடுக்கப்பட்டது. இதற்கு 35 பேர்கள் காரணமாக இருந்து
தூண்டப்பட்டார்கள் என்ற காரணத்தால் அவர்கள் சஸ்பெண்ட்



செய்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். மற்றவர்கள் அத்தனை
பேரும் தங்களுடைய நிலைமையையும் மற்றவைகளையும் அறிந்து
வருத்தம் தெரிவித்து மன்னிப்புத் தெரிவித்து கடிதம் எழுதி
யிருப்பதன் காரணமாக அவர்கள் மீது வழக்கோ மற்ற நடவடிக்
கையோ எடுக்காமல் பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்
கிறார்கள். 35 பேர்கள் பொறுத்தவரையில் அவர்கள்மீது
சட்டத்தின்படி குற்றச்சாட்டு சொல்லப்பட்டிருக்கிறது. அது
விசாரணையில் உள்ளது. விசாரணைக்குப் பிறகுதான் எந்த
முடிவிற்கு வருவது என்பது குறித்து அரசு தக்க முடிவெடுக்கும்.

திரு. அ. ரகுமான்கான் : **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கவர்ன்மெண்ட் சர்வெண்ட்
வேறு. பப்ளிக் சர்வெண்ட் வேறு. **

திரு. அ. ரகுமான்கான் : **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எந்தக் கான்டெக்ஸ்ட்டிலே
எந்தக் கேசிலே அப்படிச் சொன்னார்கள் என்பதையும்
யோசித்துப் பார்க்க வேண்டும். இதிலே கிடையாது. இதை
யெல்லாம் அவைக் குறிப்பிலே ஏற்ற முடியாது.

திரு. அ. ரகுமான்கான் : **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் நடவடிக்கை
களில் தேவையில்லாத வாதம் வருகிறது என்று நான் கருதினால்,
அதை நான் எக்ஸ்பென்ஞ் பண்ண எனக்கு உரிமை இருக்கிறது.

திரு. அ. ரகுமான்கான் : நான் சொல்வது என்னுடைய
கருத்து, அதைச் சொல்ல ஏன் தடை செய்கிறீர்கள் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர், உங்களுடைய கருத்துக்
களையெல்லாம் இங்கே சொல்லிவிட முடியாது.

திரு. அ. ரகுமான்கான் : **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : **

திரு. ரகுமான்கான் அவர் இந்த கான்டெக்ஸ்ட்டிலே சொல்வது
சரியல்ல. திரு. ரகுமான்கான் அவர்கள் பேசியதை எல்லாம்
நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்
றப்பெற்றது.

திரு. அ. ரகுமான்கான்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ் சொன்னது வேறு கான்டெக்ஸ்ட்டில். ** அதையும் இதையும் ஒப்பிட்டு பேசக்கூடாது. இங்கே உண்ணாவிரதம் இருந்தவர்கள் கவர்ன்மெண்ட் சர்வெண்ட்ஸ். அவர்கள் தங்களுடைய ஊதிய உயர்வு கருதி இருந்தார்கள். **

திரு அ. ரகுமான்கான் ; **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவற்றையெல்லாம் நான் அனுமதிக்க முடியாது. இதுவரையில் திரு. ரகுமான்கான் பேசியதை நீக்கிவிட ஆணையிடுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இந்த ஆட்சி பொறுப்பிலே இருக்கின்றவர்களுக்கு சில பல கட்டு திட்டங்கள் மற்றவைகள் உண்டு. இந்த அவையிலே இருக்கிற உறுப்பினர்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் சில பல கட்டு திட்டங்கள் உண்டு. ஆனால், அரசாங்க ஊழியர்கள் என்பதற்கு, தமிழ்நாடு கவர்ன்மெண்ட் சர்வெண்ட் கான்டாக்ட் ரூல்ஸ் என்று இருக்கிறது. அதை ஏற்றுக் கொண்டுதான் அவர்கள் வேலைக்கு வருகிறார்கள். அமைச்சர்களுக்கோ சட்டமன்ற மேலவை, பேரவை உறுப்பினர்களுக்கோ இப்படிப்பட்ட கான்டாக்ட் ரூல்ஸ் வைக்கவில்லை. வேறு வகையில் ரூல்ஸ் இருக்கலாம்.

ஆனால், அரசு ஊழியர்கள் உண்ணாவிரதம் இருக்கக்கூடாது என்று அந்த ரூல்ஸ்ஸிலேயே சொல்லப்பட்டிருக்கிறது. அதை ஏற்றுக் கொண்டுதான் அவர்கள் வேலைக்கு வந்திருக்கிறார்கள். ஸ்டிரைக் செய்யக்கூடாது என்று இருக்கிறது. அதை ஏற்றுக் கொண்டுதான் வந்திருக்கிறார்கள். அரசு ஊழியர்கள் உண்ணாவிரதம் இருக்கக்கூடாது. ஸ்டிரைக் செய்யக் கூடாது. மேடை மீது ஏறி அரசியல் பேசக்கூடாது. எலக்ஷனிலே நேரிடையாக ஈடுபடக்கூடாது என்று இருக்கிறது. ஆனால், அமைச்சர்கள் ஈடுபடலாம். சட்டமன்ற மேலவை, பேரவை உறுப்பினர்கள் ஈடுபடலாம். ஆகவே, பேரவைத் தலைவர் எடுத்துச் சொன்ன மாதிரி, அறவே அரசாங்கத்திற்கு எந்தவித தொடர்பும் இல்லை என்று சொல்லிவிட முடியாது. ஒரு குறிப்பிட்ட இடத்திலே குறிப்பிட்ட தன்மையிலே அரசுக்கு பொறுப்பு உண்டா இல்லையா என்றால், அரசாங்கத்திற்குப் பொறுப்பாக அவர் பணியாற்றுகிறாரா இல்லையா என்று கேட்டு ஜட்ஜ்மெண்ட் வருமானால், அப்போது அது மாறலாம். ஆனால், இந்த உண்ணாவிரதம் மற்றவைகளைப் பொறுத்தவரையில் அரசாங்க வேலை பார்ப்பவர்களைப் பொறுத்த வந்தது. இது ரூல்ஸ்க்கு மீறிய ஒன்று.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



ஆகவே, நாட்டிலே இருக்கிற 2½ இலட்சம், 3 இலட்சம் ஆசிரியர்களைக் கைது செய்ய வேண்டும் என்றா கைது செய்தோம். கைது செய்ய வேண்டிய அவசியம் அப்போது ஏற்பட்டது. அதுவும் எல்லா ஆசிரியர்களையும் அல்ல. இதே தலைமைச் செயலகத்திலே எல்லோரும் இருக்கிறார்கள். ஆகவே, இந்தச் சட்டத்தை மீறியவர்கள், விதிமுறைகளை மீறியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் வருகிறது. ஆகவே, இந்த அரசு மட்டுமல்ல. எந்த அரசும் இப்படிப்பட்ட நடவடிக்கையை எடுக்கத்தான் செய்யும். இப்போது இல்லை என்றாலும், இன்னொரு சந்தர்ப்பம் வருகின்றபோது, எந்தெந்தக் காலத்திலே யார் யார் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை நான் சொல்கிறேன்.

(பிற்பகல் 1.30)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆகவே, இருக்கிற நிலைமையைத்தான் நான் எடுத்துச் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் சமது அவர்களும் மற்றவர்களும் குறிப்பிட்டார்கள். "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். அது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றுதான்.

THIRU. K. MANOHARAN: Even now I am not tired.

Mr. SPEAKER: He is not tired என்று சொல்கிறார்கள். The Hon. Minister can take his own time.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்த பிரச்சனைகளை எல்லாம் நீங்கள் எழுப்பியதற்கு நான் பதில் சொல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது. வேறு வகையிலே இல்லை. ஆகவே, இந்தத் தன்மையைப் பொறுத்தவரையிலும், எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். ஆனால், எழுத்தறிவிக்கிற வரையில்தான் அவர்கள் இறைவர்கள். ஆர்ப்பாட்டத்திலே ஈடுபடுகிறபோது ஆர்ப்பாட்டக்காரர்கள். (கரவொலி). மறியலிலே ஈடுபடுகிறபோது மறியல்காரர்கள். குற்றம் செய்கிற போது, குற்றவாளிகள். ஆகவே, ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் யாரையும் முதலிலே கைது செய்யவில்லை. சிறையிலும் அடைக்கவில்லை. அவர்கள் சட்டத்தை மீறுகின்றபோது, ஊர்வலம் நடத்தும்போது அவர்களைக் கைது செய்யவில்லை. உண்ணாவிரதம் இருந்த போது கைது செய்ய வில்லை. ஆர்ப்பாட்டம் என்ற பெயரில், மறியல் என்று செய்கிறபோதுதான், கைது செய்ய வேண்டிய அவசியம் வருகிறது. அதற்குப் பிறகு அவர்களைக் கூப்பிட்டு வைத்து, பேசியதற்குப் பிறகு, சில பல முடிவுகள் எடுக்கப்பட்டதை நீங்கள் அறிவீர்கள். ஆகவே, அந்த வழக்கு அப்படியே

இருக்கிறது. ஆகவே, வேலைக்கு வராத நாட்களை எல்லாம் நாங்கள் காம்ப்பன்சேட் செய்துவிடுகிறோம் என்றும் மறுபடியும் வேலை செய்கிறோம் என்று அவர்கள் சொன்னதன் காரணமாக அவர்களுக்கு எல்லாம் சலுகைகள் தரப்பட்டன. போராட்டம் நடந்து கொண்டிருக்கிறபோது, எந்தக் காலத்திலும், அதற்குரியவர்களை அழைத்துவைத்துப் பேசுவது என்பதில்லை. ஆனால், போராட்டம் நீடித்துக் கொண்டே போகிறது என்பதைக் கருதித்தான், போராட்டம் ஒரு பக்கம் நடந்து கொண்டிருக்கிற போது, அதனுடைய பிரதிநிதிகளை ஒரு பக்கம் அழைத்து வைத்துப் பேசி ஒரு சுமூகமான முடிவு ஏற்பட வேண்டும் என்று கருதி செய்தோம். ஆசிரியர்களாகட்டும், அலுவலர்களாகட்டும், அத்தனை பேர்களுக்கும் உரிய முறையில், நியாயமான வழியில் கிடைக்க வேண்டிய வசதி வாய்ப்புக்களைத் தர வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் இந்த அரசு பல்வேறு பணிகளை ஆற்றி வருகிறது என்பதை இந்த வாய்ப்பிலே நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் வேணுகோபால் அவர்கள் ஒரு பிரச்சினையை எழுப்பினார்கள். அந்தப் பிரச்சனை என்னவென்னில், இந்த அரசாங்கத்தினுடைய சார்பாக அனுப்பப்பட்ட தனியார் அறிக்கை ஒன்று, அரசு செய்தித்தாளுக்கு அனுப்பிய செய்திகளோடு, அடங்கியதோடு சேர்த்து அனுப்பப்பட்டது என்ற ஒரு குற்றச்சாட்டை அவைர்கள் இங்கே எடுத்து வைத்தார்கள். இது பற்றி விசாரித்து நான் தகவல் சொல்கிறேன் என்றும், சொன்னேன். அவர்களிடத்திலே இதுபற்றி எழுதிக் கூட கேட்டேன். இதுபற்றி தங்களிடத்திலே ஏதாவது ஆதாரம் இருந்தால் என்னிடம் தாருங்கள், அல்லது தங்களிடத்திலே செய்தி சொன்னவர்கள் யாராவது இருந்தால், அவர்களிடமிருந்தாவது ஆதாரத்தை வாங்கித் தாருங்கள் என்று அவரிடம் கேட்டேன். அதே நேரத்தில் செய்தித் துறையினிடத்திலே கேட்டு, இப்படி ஒரு குற்றச்சாட்டு எழுப்பப்பட்டு இருக்கிறது, இது பற்றிய முழு விவரத்தையும் ஆராய்ந்து நீங்கள் எனக்குச் சொல்ல வேண்டும் என்று சொன்னேன். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. வேணுகோபால் அவர்கள் தகவல் கொடுக்கவில்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வேணுகோபால் அவர்களுக்கு, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் அனுப்பிய கடிதத்திற்கு நாளைக்கு அவர்கள் பதில் தருவார்கள். இன்றைக்குத்தான் லெட்டர் வந்திருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பதில் இப்போது வந்திருந்தால் எனக்கும் பெரிதும் உதவியாக இருந்திருக்கும். நாளை வருவதால் அதற்குப் பலன் இல்லை என்பதற்காகச் சொல்கிறேன். ஆகவே, 20–1–1986 அன்று காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. வேணுகோபால் அவர்கள் பேசும்போது



தனியாரின் அறிக்கை ஒன்று, அரசு செய்தித் தாள்களுக்கு அனுப்பிய செய்திகள் அடங்கிய அரசு முத்திரையிட்ட உறையில் வைத்து அனுப்பப்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டை எழுப்பினார்கள். இதுபற்றி விசாரித்து அறிந்து தக்க நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்று நிதி அமைச்சர் கூறினார். இக்குறிப்பிட்டுள்ள குற்றச்சாட்டு பற்றி விசாரித்து உண்மை நிலையை அறிந்து தெரிவிக்கலாம் என்று நான் கேட்டுக்கொண்டதற்கு இணங்க செய்தித்துறையைப் பொறுத்த வரையில், செய்தி வெளியீட்டுப் பிரிவிலே இருந்து பத்திரிகை அலுவலகங்களுக்கு வழங்கும் செய்தி வெளியீடுகளும், புகைப்படங்களும், அதற்காக என்று தயாரித்துள்ள உறைகளில் வைக்கப்படுகின்றன. அவ்வுறைகளில் அரசு இலச்சினை அச்சடிக்கப்படுவதில்லை. அதனுடைய மாதிரி உறை என்னிடத்திலே கொடுக்கப்பட்டு இருக்கிறது. இப்படிப்பட்ட உறையில் தான் (உறையை அவைக்கு காண்பித்தார்) அனுப்பப்படுகிறதே தவிர இதில் அரசு முத்திரை இடப்படவில்லை. Urgent press matter என்றும், On India Government Service என்றும், Information and Tourism Department என்றும் போடப்பட்டு இருக்கிற இந்த உறையில் தான் அனுப்பப்படுகிறது. இந்த உறையில் அரசின் இலச்சினை குறிக்கப்படுவது இல்லை. செய்தி வெளியீட்டு பிரிவிலிருந்து அனுப்பப்படும் செய்தி வெளியீடுகளோடு தனியாருடைய அறிக்கைகள் ஏதேனும் அனுப்பப்பட்டதா என்று இது குறித்து விசாரிக்கப்பட்டது. இதன் தொடர்பான பதிவேடுகளும், ஒப்புதல் ரசீதுகளும் பார்த்து பரிசீலனைச் செய்யப்பட்டது.

செய்தி வெளியீட்டுத் துறை தொடர்புடைய அலுவலர்களை விசாரித்ததிலும் அதன் தொடர்பான பதிவேடுகளைப் பரிசீலனைச் செய்ததிலும் தனியார் அறிக்கைகள் எதுவும் இந்தப் பிரிவிலிருந்து அனுப்பப்படவில்லை என்று தெரிகிறது. செய்தி வெளியீட்டுப் பிரிவிலிருந்து செய்தி வெளியீடுகளை பத்திரிகைகளுக்கு எடுத்துச் செல்லுகின்ற மோட்டார் சைக்கிள் ஓட்டுநரை விசாரிக்கப்பட்டது. அதிலிருந்தும் தனியார் அறிக்கைகள் எதுவும் எடுத்துச் செல்லப்படவில்லை என்பது தெரிய வந்தது. இந்தத் துறையிலிருந்து பத்திரிகை அலுவலகங்களுக்கு எடுத்துச் செல்லும் செய்தி வெளியீடுகளைப் பெற்றுக் கொண்டதற்கு அதற்குரிய பதிவேட்டில் கையொப்பம் பெறப்படுகின்றன. ஒவ்வொரு நாளும் இப்படி வரும்போது இதை ஒட்டிக் கொடுத்தால் கூட இந்தப் பத்திரிக்கையாளர்கள் வாங்குவது இல்லை. இதை ஓப்பன் கவராகத் தான் நாம் அனுப்புகிறோம். இதில் என்ன என்ன செய்திகள் வைக்கப் படுகின்றன என்பதற்கு அன்றாடம் எந்த பத்திரிகைகளுக்கு கொடுக்கப்படுகிறதோ அவரிடத்தில் கையெழுத்து வாங்கப் படுகிறது. அப்படி கையெழுத்து வாங்கப்படும் போது அந்த செய்தி வெளியீடுகளுக்கான எண்ணும் கொடுக்கப்படுகிறது. இது 21-வது எண் செய்தி, அதற்குள் அடங்கிய புகைப்படம் என்ன, செய்திகள் என்ன? போஸ்ட்டிங் என்ன? என்பதை சொல்லி அதை அவர் பிரித்துப் பார்த்துவிட்டு தான் அவர் கையெழுத்துப் போடுகிறார்.

அந்த வகையில் அந்த பத்திரிகை நிருபர்களிடம் விசாரித்த
போது இப்படி அரசு அனுப்பிய அந்த கவரோடு சேர்த்து ஏதேனும்
இப்படிப்பட்ட தனியார் கொடுத்த செய்தி வந்து இருக்கிறதா
என்று கேட்டபோது இதிலே கையெழுத்து போட்டவர்கள் அதுவும்
குறிப்பாக 16 ஆம் தேதி இந்த செய்தி வந்ததாக கூறப்படும்
அன்று கையெழுத்துப் போட்டவர்கள் இடத்தில் குறிப்பாக
இந்து, தினத்தந்தி, தினசரி, தினமலர், டி.வி. சென்டர்,
விடுதலை போன்ற பத்திரிகை நிருபர்களிடம் கேட்டபோது
இப்படிப்பட்ட ஒரு அறிக்கை வரவில்லை என்று அவர்கள்
சொல்லியிருக்கிறார்கள். செய்தி வெளியீடிலிருந்து அனுப்பப்
படும் செய்தியோடு தனியார் அறிக்கை ஏதேனும் அனுப்பப்
பட்டதா என்று அவர்களிடம் கேட்கப்பட்டது. குறிப்பாக
தனியார் அறிக்கை 16—1—86 ஆம் நாள் பத்திரிகை அலுவல
கத்திற்கு வழங்கப்பட்டு இருக்கலாம் என்ற கருத்தில் பரி
சிலனைச் செய்ததில் அன்றைய தினம் செய்தி வெளியீடு பிரிவி
லிருந்து 21 ஆம் எண் செய்தி வெளியீடு மட்டும் தான் அனுப்பப்
பட்டு இருக்கிறது. இது மட்டுமே அனுப்பப்பட்டு இருக்கிறது.
பத்திரிகை நிருபர்களும் இதை மட்டும் பெற்றுக்கொண்டதாக
தெரிவித்து இருக்கிறார்கள். இதில் தனியார் அறிக்கைகள்
எதுவும் வெளியிடப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டு இருக்
கிறது. செய்தி வெளியீடுகளைத் தவிர வேறு எதுவும் அறிக்கை
கள் பெறப்பட்டு இருந்தால் அந்த விவரத்தை பெற்றுக்
கொண்டமைக்கான குறிப்பைத் தெரிவித்து இருப்பார்கள்.
அப்படிப்பட்ட செய்தி வெளியீடுகளை பெற்றுக்கொண்டதாக
எவரும் தெரிவிக்கவில்லை. மேற்குறிப்பிட்ட பிரச்சினை
பேரவையில் தெரிவிக்கப்பட்ட பின்னர் இது குறித்து சில
பத்திரிகை நிருபர்களிடம் விசாரித்தபோது அவர்கள் இப்படிப்
பட்ட செய்திகள் வரவில்லை என்று சொன்னார்கள்.

இரண்டாவது இதை ஒப்பன் கவராகத்தான் ' 'அவர்
களிடத்தில் நாம் கொடுக்கிறோம். இதிலே அரசின் செய்தியை
கொடுக்கின்றபோது நிருபர்கள் எடுத்துக்கொண்டு போகி
றார்கள். அவர்கள் வேறு செய்திகளையும் வாங்கி அந்த
கவருக்குள்ளே பத்திரமாக வைத்துக்கொண்டு போய் ஆசிரி
யரிடம் கொடுத்தால் நாம் ஒன்றும் கேட்பதற்கு இல்லை.
இப்போது என்னிடத்தில் சில கவர்களையும், மனுக்களை
யும் கொடுக்கிறார்கள், நான் அவைகளை வாங்கி அரசு
கவருக்குள்ளே போட்டுக்கொண்டு போகிறேன். அப்படி
ஒன்று இரண்டு தவறிப் போயிருந்தாலும் போய் இருக்க
லாம். விசாரித்தாலும் யாரும் இல்லை என்று சொன்
னார்கள். அப்படி இருந்தால் ' |நாங்கள் எல்லோருக்கும்
அனுப்பியிருக்கவேண்டும். இந்த அரசு செய்தியோடு தனியார்
துறை செய்தியை அனுப்பவேண்டிய அவசியம் இல்லை.
தனியார்க்கு பரிந்து பேசவேண்டிய அவசியம் இல்லை.
அந்த தனியார் | |கொடுத்ததாக சொல்லப்படுகிற அந்த
அறிக்கைக்கும் அரசுக்கும் சம்பந்தம் இல்லை. இரண்டாவது



அதை எதிர்த்து அரசு வாதாடிக் கொண்டு இருக்கிறது.
ஆகவே நீங்கள் சொல்வது உண்மை இல்லை என்பதைத்
தான் சொல்கிறேன். ஆக உண்மை போல் எடுத்துச்
சொல்லியிருக்கிறார்கள் உங்களிடம். ஆக மாண்புமிகு உறுப்
பினர் அவர்கள் இங்கே அதை எடுத்துச் சொல்லியிருக்கி
றார்கள் என்று நான் கருதுகிறேன். அவர்களும் அப்படி
சொன்ன கருத்தை இங்கே சொல்வதற்கு முன்னால் கொஞ்சம்
ஆராய்ந்து பார்த்துச் சொல்லியிருக்கலாம். இருந்தாலும்
பரவாயில்லை. நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்த
இந்தச் சந்தர்ப்பம் பயன்பட்டது என்ற முறையில் இந்த
நிலையை மட்டும் நான் விளக்கி கூறினேன்.

திரு. எஸ். வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் என்
னுடைய கருத்தை ஆராய்ந்து அதன் பிறகு தான் முடிவு
சொல்லியிருக்கிறேன் என்று சொன்னார்கள். செய்தித் துறை
அலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்ட செய்தி சுற்றறிக்கையில்
வை. பாலசுப்பிரமணியத்தினுடைய சுற்றறிக்கையும் இணைக்கப்
பட்டு பல பத்திரிகைகளுக்குப் போய் இருக்கிறது. அப்படிப்
போனதற்குப் பின்னால் தான் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்
டிக்கு அவர்கள் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு
இப்படிப்பட்ட ஒரு அறிக்கை வந்து இருக்கிறது, என்ன நிலைமை
என்றும் என்ன பின்னணி என்றும் கேட்டார்கள். ஆகவே, இது
பற்றி எல்லா பத்திரிகைகளிலும் வந்து இருப்பதாக எங்களுக்குத்
தகவல். இல்லை, இதைப்பற்றி விசாரிப்பதற்கு ஏதாவது ஏற்பாடு
செய்தால் நான் அதற்கு ஆதாரபூர்வமாக தர தயாரக
இருக்கிறேன் என்று கூறிக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1.40)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையை விட வேறு
ஒரு குழு தேவையே இல்லை. ஆதாரங்களை என்னிடம்
தாருங்கள் என்று கேட்டேன் தரவில்லை. அதற்குப் பிறகு
நானாகவே, விசாரித்தேன். விசாரித்ததில், இல்லை என்று
சொல்கிறார்கள். ஏதாவது ஒரு பத்திரிகை நிருபரை அழைத்துக்
கொண்டு வந்து, [illegible] கொடுத்தார்கள் என்று
சொல்லச் சொல்லுங்கள். இன்னமும் விசாரிப்போம்.
ஆகவே சொன்ன அத்தனை பத்திரிகைகளும் இல்லை
என்று சொல்லிவிட்டார்கள். நானும் கிடைத்த தகவலை உண்மை
யான தகவலைச் சொல்கிறேன். எல்லோருக்கும் அனுப்பப்
பட்டு இருக்கிறது என்று மீண்டும் மீண்டும் உறுப்பினர் சொல்
வது சரி அல்ல. ஆகவே, அதிலே உண்மையே இல்லை. அர
சாங்கம் அனுப்பவே இல்லை. செய்தித் துறையின் மூலமாக
அனுப்பப்படவே இல்லை என்பதை அழுத்தந்திருத்தமாக, திட்ட
வட்டமாக, தெளிவாக, மீண்டும் எடுத்துச் சொல்கிறேன். இதிலே
உண்மை இல்லை, உண்மைக்குப் புறம்பான ஒன்று என்பதை
மட்டும் இந்த வாய்ப்பிலே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர், சேலம் விமான நிலையத்தைப்
பற்றிக் குறிப்பிட்டார்கள். அந்த விமான நிலையம் அமைக்கப்
பட வேண்டும் என்றால், அருகே உள்ள 200 ஏக்கர் நிலம்
வேண்டும் என்று மத்திய அரசினுடைய விமானத் துறையினர்
கேட்டுக் கொண்டார்கள். அதற்குப் பிறகு, சேலம் விமானம்
நிலையம் அமைக்க சேலத்திற்கு அருகிலுள்ள கமலாபுரம்
கிராமத்தில் 200 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தி, இலவச
மாகத் தர இயலுமா என்று மத்திய அரசின் சிவில் விமானப்
போக்குவரத்துத் துறை கேட்டது. ஆகவே, அந்த 200 ஏக்கர்
நிலத்தைக் கையகப்படுத்துவதற்கான முயற்சியிலே என்ன
செய்யலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவருடைய அறிக்கை
கோரப்பட்டது. அவர் மொத்தம் 200 ஏக்கர் நிலத்தில் 19
ஏக்கர் நிலம் மட்டுமே அரசுக்கு புறம்போக்கு நிலம் என்றும்,
மீதி தனியார் பட்டா நிலங்களாக இருக்கின்றன என்றும்,
அதைக் கையகப்படுத்தித் தான் தரவேண்டும்,
வரவேண்டுமென்றால் கிட்டத்தட்ட 125 இலட்சம் ரூபாய்
ஆகலாம் என்றும் அறிக்கைகள் வந்திருக்கின்றன. ஆகவே
அதை அரசு ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு, அந்த 200
ஏக்கர் நிலத்தையும் கையகப்படுத்துவதற்கான முயற்சியைச்
செய்து, பிறகு, மத்திய அரசுக்குத் தெரிவித்து, அவர்கள்
கையகப்படுத்தலாம் என்று ஆணையிட்டதற்குப் பிறகு
கையகப்படுத்துகிற முயற்சியில் அரசு ஈடுபடும். அரசு மெத்தன
மாக இல்லை. அதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து
நடைபெற்றுக் கொண்டு வருகின்றன, என்பதை இந்த வாய்ப்
பிலே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

10 இலட்சம் வீடுகள் இந்த ஆண்டு தொடங்கி கட்டப்
படுகிற பிரச்சினையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள்
பலரும் கேட்டார்கள். (குறுக்கீடு) என்ன | இதிலேயும்
சந்தேகமா ?

திரு. கே. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, சேலம் மாவட்ட மக்களின் நீண்ட கால கோரிக்கை
யான சேலம் விமான நிலையத்தை அமைக்க நம்முடைய
மதிப்பிற்குரிய நாவலர் அவர்கள் ஏற்றுக் கொண்டு, ஒரு
கோடியே 25 இலட்சம் ரூபாய் அரசு செலவு செய்து, நில
ஆர்ஜிதம் செய்வதற்கு உரிய உத்தரவினை இடுவதற்கு
ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று இந்த நேரத்தில்
கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாவட்ட
ஆட்சித் தலைவரிடமிருந்து அந்தக் குறிப்புகள் வந்திருக்
கின்றன. அந்தக் குறிப்பு, அரசாங்கத்தினுடைய செயற்
குறிப்பு, சுற்றாணையின் மூலம் பெற்று, பிறகு, மத்திய
அரசுக்கும் தெரிவித்து, அவர்கள் ஒப்புக் கொண்டதற்குப் பிறகு,
கையகப்படுத்த வேண்டி வரும். 19 ஏக்கர் தான்
அரசுக்குச் சொந்தம். மற்றவை தனியார் பட்டாக்களாக



இருப்பதன் காரணமாக சிறிது காலம் ஆகலாம். இருந்தாலும்
விரைவுபடுத்தி, அரசும் சேலம் விமான நிலையம் வரவேண்டும்
என்பதிலே அக்கறையோடு இருப்பதால்—செய்வதற்கான
முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைக் கூறிக் கொள்ள
விரும்புகிறேன்.

வீடுகளைக் கட்டுகின்ற இலட்சியம், எல்லோருக்கும் வீடுகள்
கட்டித் தரவேண்டும் என்று உயர்ந்த இலட்சியத்தை நிறை
வேற்ற வேண்டும் என்ற நோக்கத்தினுடைய அடிப்படையிலே
தான் ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. இது
எப்படியேனும் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற முனைப்
புள்ளத்தை நாம் கொண்டிருக்கிறோம்.

''உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்'' என்று வள்ளுவர்
சொல்லியிருப்பதற்கிணங்க, உயர்வாக நினைத்து எல்லோருக்கும்
வீட்டு வசதி, வீடுகள் ஏற்படுத்தித் தர வேண்டும் என்ற
நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு இருக்கிறோம். அத்தனையும்
நிறைவேற்றுவதற்கு போதுமான அளவுக்கு நிதிவசதி இருக்குமா
என்று மாண்புமிகு திரு. சித்தன் அவர்கள் கேட்டார்கள்.

இது அத்தனையும் நிறைவேற்றுவதற்கு அரசாங்கத்திடத்திலே
வரவு-செலவுத் திட்டத்திலே போடுகிற அளவுக்கு அவ்வளவு நிதி
இருக்காது. எந்த அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய முடியும்
என்பதை ஆராய்ந்து, அதோடு, எல்.ஐ.சி., ஹட்கோ ஆகியோ
ரிடத்திலேயும் பெறுகிற முயற்சி செய்து பெற்று, முக்கியமான
திட்டமாக இருப்பதால், நலிந்தோருக்கு நல்வாழ்வு தருகிற
தன்மையில் இருப்பதால், மத்திய அரசின் மூலமாக, உலக வங்கி
யிடம் எடுத்துச் சொல்லி, அவர்களுடைய ஒத்துழைப்போடு
செய்வதற்கான அளவுக்கு அந்த நோக்கத்தோடு சொல்லப்பட்டி
ருக்கிறது.

அந்த நோக்கம் நடைமுறைப்படுத்துவதற்கு எந்த
அளவாக இருந்தாலும், அது பற்றி வருகின்ற வரவு-செலவுத்
திட்டத்திலே, விரிவாக எடுத்துச் சொல்கிற வாய்ப்பு ஏற்படும்
என்பதால், அப்போது சொல்வேன் என்பதையும் கூறிக்கொள்ள
விரும்புகிறேன்.

மற்றொரு பிரச்சினையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்
கள் பலரும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அடிக்கடி எடுத்துச்
சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதுபற்றிய காரண, காரிய
விளக்கங்களையும் அடிக்கடி நாம் எடுத்துச் சொல்லி வரு
கிறோம். இப்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. சமது அவர்
களும் வற்புறுத்தினார்கள். மாண்புமிகு திரு. சித்தன் அவர்களும்
வற்புறுத்தினார்கள். மற்றவர்களும் எடுத்துச் சொன்னார்கள்.

மதுவிலக்குக் கொள்கையைப் பற்றி அவர்கள் சொன்னார்கள்.
இந்த அரசிலோ, அமைச்சரவையிலோ, மது வேண்டும்
என்று யாரும் கூறுபவர்கள் இல்லை. மதுவிலக்குக்

கொள்கை தான் எல்லோருக்கும் வேண்டும்.
கொள்கையை நடைமுறைப்படுத்துவதிலே எவ்வளவு சிக்கல்கள் மதுவிலக்குக்
ஏற்படுகின்றன என்பதை நாம் உணரவேண்டும்.
உறுப்பினர் திரு.சித்தன் அவர்கள் சொல்லியதைப் போன்று, மாண்புமிகு
அறிஞர் அண்ணா அவர்கள் மதுவிலக்குக் கொள்கையில் எவ்வளவு
அழுத்தந்திருத்தமாக இருந்தார்களோ, அவ்வளவு அழுத்தந்
திருத்தமாக காந்தியடிகளும் இருந்தார்கள். அதே போல்தான்
ஆட்சிகள் எங்கு பார்த்தாலும் அமைக்கப்பட்டன. அந்த
அடிப்படையிலே எல்லா மாநிலங்களும் கொண்டு வந்தார்கள்.
கொண்டு வந்த 10, 12 ஆண்டுக் காலத்தில் தாக்கு
பிடிக்க முடியாத நிலை ஏற்பட்டு, நோக்கமும் நிறைவேற
முடியாத நிலை ஏற்பட்டு, அரசுக்கு நஷ்டமும் ஏற்பட்ட காரணத்
தினால் காங்கிரஸ் முதலமைச்சர்கள் இருந்த காலத்தில் அதை
விடவேண்டிய கட்டாயத்திற்கு வந்தார்களே தவிர, அவர்கள்
மதுவை விரும்பினார்கள் என்ற கொள்கையால் ஆட்சி நடத்தி
யவர்கள் அல்ல. ஒவ்வொருவருடைய பேச்சையும் அப்போதே
நான் படித்துக் காண்பித்து விட்டேன். ஆந்திராவிலே ஏன்
இந்த முடிவிற்கு வந்தார்கள், குஜராத்திலே ஏன் இந்த முடிவிற்கு
வந்தார்கள், மகாராஷ்டிரத்திலே ஏன் இந்த முடிவிற்கு வந்
தார்கள் என்பதையெல்லாம் நான் எடுத்துச் சொன்னேன்.
ஆனால் தமிழகமும், குஜராத் மாநிலமும் தான் அதை கடைசி
வரை தாக்கு பிடிக்கிற அளவிற்கு, ஆக நஷ்டம் ஏற்பட்டாலும்
ஈடுகட்டிக் கொள்ளலாம் என்ற அளவிற்கு அதை நடத்திக்
கொண்டு வந்தார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையிலும் கூட,
மதுவிலக்கை கைவிடுகின்ற அளவிற்கு எங்கு பார்த்தாலும்
காய்ச்சுகிறார்கள். எங்கு பார்த்தாலும் கள்ளை இறக்கு
கிறார்கள் என்ற குற்றச்சாட்டுக்கள் இருந்தன. அதற்குப் பிறகு
கள்ளத்தனமாகக் காய்ச்சுபவர்களும் இருந்தார்கள். அரசுக்கு
வருகிற வருமானம் வராமல், தனிப்பட்டவர்களுக்குப் போய்ச்
சேருகின்ற அளவிற்குச் சிலபேர் கோடீஸ்வரர்களாகின்ற அள
விற்கு குற்றச்சாட்டுக்கள் இருந்தன. எவ்வளவு தான் நாம்
தடை விதித்தாலும்கூட, கண்காணிப்பு ஏற்படுத்தினாலும்கூட,
வேலியே பயிரை மேய்ந்துவிடும் முடிவிற்கிணங்க, சில பல
நடக்கத்தகாத நடவடிக்கைகள் எல்லாம் நடைபெற்றன
என்பதை எல்லோரும் நன்கு அறிவார்கள். இந்தக் காரணங்
களை யொட்டித்தான், கடைசியில் பார்க்கின்றபோது, இதைக்
கடுமையாக ஆக்கவேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்
கள் கருதினார்கள். கடுமையான சட்டத்தை விதிப்பதன் மூலம்,
கள்ளச் சாராயத்தைக் கண்ட தலத்திலே குடிக்காமல் இருப்
பார்கள் என்று கடுமையாக ஆக்கினார்கள். அதனுடைய விளைவு
என்னவாயிற்று என்றால் ஏழை எளிய, பாட்டாளி மக்கள், தொழி
லாளி மக்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டு, 6, 7 மாதங்கள்
சிறைக்குப் போனதற்குப் பிறகு அவர்களை நம்பி வாழ்கிற
குடும்பங்கள் அவதியுறுகின்ற சூழ்நிலை ஏற்பட்டு, வருமானமே
இல்லாமல் போய், வேலை செய்வதற்கும் ஆட்கள் இல்லாமல்
போய், இந்தக் கடுமையான சட்டம் அப்படிப்பட்ட விளைவுகளை



ஏற்படுத்திவிட்டன. அதற்குப்பிறகு இந்தக் கடுமையை நீக்க வேண்டுமென்ற கோரிக்கைகள் எல்லோரிடமிருந்தும் வந்தன. அதற்குப்பிறகு தான் அரசாங்கத்தினுடைய முடிவு, எல்லா மாநிலங்களுடைய சூழ்நிலைகளைப் பார்க்கின்றபோது, இங்கேயும் வருமானம் குறைவாக இருக்கிறதே என்ற நிலைமை ஏற்படுகிறபோது, திட்டக் குழுவும் கூட, இதை எப்படியாவது எடுத்து, வருமானத்தை பெருக்குகின்ற அளவிற்கு வாய்ப்பு ஏற்படுத்த வேண்டுமென்ற அளவிற்கு அவர்கள் எடுத்துச்சொன்னார்கள். என்னென்ன காரணங்களாலே மதுவிலக்கை நீக்கிவிட்டு, மறுபடியும் கொண்டு வரவேண்டிய அவசியம் ஏற்பட்டது என்று அன்றைக்கு எடுத்துச் சொன்னோமோ, அந்த காரணங்கள் எல்லாம் அப்படியே இருக்கின்றன. இருந்தாலும் அப்படிப்பட்ட சூழ்நிலையைக் காணுகின்றபோது நாம் மீண்டும் கொண்டு வந்தாலும்கூட, இவை அனைத்தையும் நாம் சமாளிக்க வேண்டும். அப்படி சமாளிக்கின்றபோது, கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், அதன் மூலம் கொள்ளை லாபம் அடிக்கிறவர்கள், கோடீஸ்வரர்களானவர்கள், அரசுக்கு கஷ்டம் ஏற்படும், இதற்கு கண்காணிப்பதற்கு தனியாக காவற்படையும் வைக்க வேண்டும். அந்த காவற் படையை வைப்பதற்கு வேண்டிய சூழ்நிலைகளையும் காணவேண்டும். அப்போது லஞ்சம், ஊழல் குற்றச் சாட்டுக்கள் எல்லாம் வரும் என்ற தன்மைகளை எடுத்துச் சொன்னர்கள். இவ்வளவு தன்மைகள் எல்லாவற்றையும் யோசித்துப் பார்த்துத்தான் கடைசியில் நாம் இதை தளர்த்த வேண்டிய கட்டாயமே வந்து இன்றைக்கு ஒரு தன்மையிலே கொண்டு வந்தோம். கூடுமானவரையில் கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள், மற்றவர்கள் எல்லாம் ஓரளவிற்கு ஒடுக்கப்பட்டு வந்திருக்கிறது. இதன்மூலம் 1984-85 ஆம் ஆண்டு ஆயத்தீர்வைத் துறையின் வருமானம் ரூ. 200 கோடியாக இருந்தது. இப்போது 1985-86 ஆம் ஆண்டில் 230 கோடியாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தக் கணக்கை வைத்துத் தான் நாம் இப்போது வரவு—செலவுத் திட்டத்தை எல்லாம் போட்டுக்கொண்டு வருகிறோம். இன்னும் ஒரு திங்களிலே வரவு-செலவுத் திட்டத்தை வைக்க வேண்டும். இந்த அடிப்படையிலே வைத்துத்தான் கிட்டத்தட்ட ரூ. 230 கோடி வருமானம் இதன் மூலம் வரும் என்று அந்த அடிப்படையிலே நாம் திட்டங்களை தீட்டுகிறோம். மதுவிலக்குச் சட்டம் கடந்த நான்கு ஆண்டுகளாக தளர்த்தப்பட்டு நடைமுறையில் உள்ளது. இந்த ஆண்டில் அரசினுடைய முயற்சிகளின் விளைவாக கள்ளச் சாராயம் காய்ச்சுவது ஓரளவிற்கு தடுத்து நிறுத்தி வைக்கப் பட்டிருக்கிறது. அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நோக்கமும் மதுவிலக்குச் சட்டத்தை தீவிரமாக அமல்படுத்த வேண்டுமென்பதுதான். அதை அமல் ஆக்குவதில் ஏற்படுகின்ற கஷ்டங்கள், இதனால் அரசுக்கு ஏற்படுகின்ற இழப்புகள், சமூகவிரோதிகள் பெறுகின்ற ஏராளமான லாபங்கள் ஆகியவற்றை மனத்திலே வைத்தும், அவை என்ன தான் சொன்னாலும், குடிப்பவர்களை திருத்தமுடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அகில உலகம் முழுவதும், இங்கும்

அப்படிப்பட்ட திருவள்ளுவரே சொன்னார்.—"களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க் குளித்தானைத் தீத்துரீ இயற்று" குடித்து பழக்கப்பட்டவனை திருத்துவது என்பது தீப் பந்தத்தை எடுத்துக்கொண்டு தண்ணீருக்குள்ளே போய், மூழ்கியிருக்கும் ஒருவனைத் தேடுவது எப்படியோ, அப்படித்தான் அவனை திருத்துவது என்ற உவமையைச் சொன்னார். ஆக தீப் பந்தத்தை எடுத்துக்கொண்டு தண்ணீருக்குள்ளே மூழ்கிய ஒருவனைத் தேடுவது எப்படி பொருத்தம் இல்லாமல் இருக்கிறதோ, அதைப் போல், அவரே முயன்று முயன்று பார்த்து, முடியில்லாமல் விட்டு விட்டார். எவ்வளவோ பெரியோர்கள், மகான்கள், ஆன்றோர்கள், சான்றோர்கள் எல்லாம் சொல்லியும் கேட்கவில்லை. காந்தியாரை விட, ராஜாஜியைவிட, பேரறிஞர் அண்ணாவை விட, காமராஜை விட, இன்னும் சொல்வதற்கு ஆட்கள் பிறக்கப்போவதில்லை. இவர்கள் சொல்லியும் நாடு கேட்கவில்லை, யாரும் கேட்கவில்லை. இப்படிப்பட்ட இக்கட்டான கட்டாயத்தில்தான் மறுபடியும் கொண்டுவருகின்ற அவசியம் நமக்கு ஏற்பட்டது. ஆனாலும்கூட, இதனால் ஏற்படக் கூடிய தன்மைகளை எல்லாம் எப்படியாவது கொண்டு வரலாம் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு சித்தன் அவர்கள் சொன்னார்கள், மற்றவர்களும் எடுத்துச் சொன்னார்கள். எப்படியாவது கொண்டுவரவேண்டும் என்றால் அந்த இழப்பை நாம் ஈடு செய்யவும் வேண்டும். (குறுக்கீடு) கொடுக்கிறேன் என்று யாரும் சொல்லவில்லை. வாங்கிக் கொடுத்தால் ரொம்ப நல்லதுதான்.

(பிற்பகல் 1–50.)

திரு. என். எஸ். வி. சித்தன் : மதுக்கடைகளை மூடுவதால் ஏற்படும் வருமான இழப்பை ஈடுகட்டுவதற்கு மத்திய அரசு முன்வரும் என்று சொல்லி இருக்கிறார்கள். ஆகவே மூடிவிட்டு வாங்கலாமே ?

திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம் : ஆளுநர் உரையிலே நான் பேசியதுபோது குறிப்பிட்டதைப்போல தமிழ்நாடு முழுவதும் சட்டம் ஒழுங்கு நிலைமையை காவலர்களுக்கு ஏற்படுத்திய மதுக்கடைகளை மூடவேண்டும். அப்படி மூடும் வரையிலே அந்தக் கடைகளை ஊருக்கு வெளியே வைக்க வேண்டும். இல்லாவிட்டால் கொள்ளை, வழிப்பறி, ரௌடித்தனம் எல்லாம் நடக்கிறது, நடக்கும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சாராயக் கடைகளை மதுக்கடைகளைத் திறந்ததன் காரணமாக இளைஞர்கள் மற்றவர்கள் கெட்டுப் போகவில்லை என்று சொல்ல நான் முன்வரவில்லை. சாதாரண குடிசைவாழ் மக்கள் அதன் காரணமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை



நான் மறுக்கவில்லை. வேறு வழியில்லாமல் இந்தச் சூழ்நிலையைக் கொண்டுவர வேண்டியிருக்கிறது. அவர்களிலே பலபேர்கள் அதிக விலைகொடுத்து கள்ளத்தனமாக சாப்பிடுவார்கள் என்ற சூழ்நிலையையும் எண்ணிப் பார்க்க வேண்டும். ஏற்படுகிற விளைவுகளை எண்ணிப் பார்த்துக் கொண்டு வரவேண்டும். மத்திய அரசு இழப்புகளை சமாளிக்கின்ற சூழ்நிலையை ஏற்படுத்தினால் நமக்கு மகிழ்ச்சிதான். குஜராத் மாநிலத்திலிருந்து வந்த அமைச்சர்களோடு பேசும்போது அந்த மாநிலத்திலே மதுவிலக்கு வெற்றிபெறுகிறதா என்று கேட்டால் வெற்றிபெறவில்லை என்றும் காந்தியார் பிறந்த மாநிலமாயிற்றே என்று பல்லைக் கடித்துக் கொண்டு கடைப்பிடித்து வருகிறோம் என்றும்தான் சொல்கிறார்கள். அதை நடைமுறைப்படுத்துவதிலே பல சங்கடங்கள் இருக்கின்றன, வெற்றிபெறவில்லை என்ற அளவுக்குத்தான் அங்கே முதலமைச்சர், அமைச்சர்களும் சொல்கிறார்கள்.

இழப்புகளை ஈடுகட்டுகிற அளவுக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் நான் கேட்கும் உதவியைச் செய்வார்கள் என்ற நோக்கத்தின் அடிப்படையில் மத்திய அரசும் உதவி செய்யும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய எண்ணத்திற்கிணங்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நோக்கத்திற்கிணங்க தமிழ்நாட்டில் 1987 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் தேதியிலிருந்து சாராயம் மொத்த சில்லரை விற்பனையும் கள் விற்பனையும் அறவே நிறுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (உறுப்பினர்கள் மேசையைத் தட்டும் ஒலி). இதனால் அரசுக்கு சுமார் 200 கோடி ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு இழப்பு ஏற்படும். ஆனால் இது அடுத்த ஆண்டுக்குத் தள்ளப்படுவதற்குக் காரணம் இப்போது இருக்கிற வருமானத்தை அடிப்படையாக வைத்து வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருவதாலும் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பே அது எல்லாம் முடிவாகிவிட்டது இதை நம்பி சிலபல திட்டங்களை நாம் கொண்டுவர வேண்டியிருக்கிற காரணத்தினாலும் அடுத்த ஆண்டிலிருந்து கொண்டுவருகிறோம். எனவே 1987 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் தேதியிலிருந்து சாராயக் கடைகளிலும் கள்ளுக் கடைகளிலும் விற்பனை அறவே நிறுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் ஏற்படுகிற இழப்பு 200 கோடி ரூபாய், அவர்கள் சொல்கிற மாதிரி மத்திய அரசாங்கத்திடமிருந்து அதைப் பெறுவோம், அப்படிப் பெறமுடியாத சூழ்நிலையில் வேறு எந்த வகையிலே பெறலாம் என்பதையும் அரசு யோசிக்கும். அப்படி யோசிக்கும் போது இந்த அவையிலே உள்ள அனைவரும் முழு ஒத்துழைப்புத் தரவேண்டுமென்பது மட்டுமல்லாமல் இந்தச் சட்டத்தை நிறைவேற்றுகின்ற காலத்திலும் கூட இந்தியாவிலே எப்படி காந்தியார் பிறந்த மாநிலம் என்ற காரணத்தினாலே குஜராத் மாநிலத்திலே அதை நடைமுறைப்படுத்துவதிலே முனைப்புள்ளத்தோடு அவர்கள் இருக்கிறார்களோ, அதைப் போல இங்கேயும் ராஜாஜி, காமராஜர், அறிஞர் அண்ணா போன்றவர்கள் பிறநத மாநிலத்திலே அதைக் காப்பாற்ற

வேண்டுமென்று கொள்கையின் அடிப்படையில் காப்பாற்றுகின்ற நோக்கத்தை நிறைவேற்றவும் அதைக் தாருங்கள் என்று கேட்டுக்கொண்டு இந்த அளவுக்குள் என் ஒத்துழைப்புத் னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. சு. பாலன்: அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவரு டைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்பெற்றது.

திரு. கோ. வீரய்யன் அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்றது தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி; '' ஆளுநர் அவர்களுக்கு கீழ்க்கண்ட நன்றியுரை அளிக்கப்பெற வேண்டும்:

''1986 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 8 ஆம் தேதியன்று இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்றக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற் றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன் றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (24-1-86) காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-55 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

## 9. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

110. தமிழ்நாடு மாநில கட்டுமானக் கழகத்தின் 1984-85 ஆம் ஆண்டிற்கான ஐந்தாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

111. தமிழ்நாடு, பொதுப்பணி பொறியியற் கழகத்தின் இறுதிக் கணக்குகள் [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட் டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

36. 1985-86 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழு வின் முதலாவது அறிக்கை (எட்டாவது சட்டமன்றப் பேரவை) (தமிழ்).





37. 1986 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 3/1986) இணைப்புடன்.

38. 1986 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 4/1986) இணைப்புடன்.

39. 1986 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/1986) இணைப்புடன்.

40. தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (சட்ட தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு எண் 6/1986) இணைப்புடன். மன்றப் பேரவை சட்டமுன்வடிவு

41. தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்டமுன் எண் 7/1986) வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு இணைப்புடன்.

42. தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி (சட்ட அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு எண் 8/1986) இணைப்புடன். மன்றப் பேரவை சட்டமுன்வடிவு

43. தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (இரண் பேரவை டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் எண் 9/1986) இணைப்புடன். சட்டமுன்வடிவு

44. 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/1986) இணைப்புடன்.

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelvali) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore 1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalevam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-17.

© Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Madras.

Issued: 18-9-1986    வெளியீடு: 18-9-1986

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
### செயலக வெளியீடு

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, ஜனவரி 24, 1986-தொகுதி XVI எண். 4
**Friday the January 24, 1986,—Volume XVI No.4**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.
Legislative Assembly, Secretariat, Fort St. George,
Madras-6000 009

விலை ரூ 3.00 காசுகள்]    [Price Rs. 3.00 Paise

## உள்ளடக்கம்.

24— 1— 1986


பக்கங்கள்.

1. வினாக்கள்—விடைகள் :

உடுக்குறியிட்ட வினாக்கள். 453—491

2. தகவல் கோரல் :

(அ) ஊராட்சிமன்ற, ஒன்றியத் தேர்தல் தேதியை ஒத்தி வைப்பது குறித்து .. 492—493

(ஆ) மேலவை உறுப்பினர் வெளியில் பேசியிருப்பது குறித்து .. .. 493—494

(இ) நீதிமன்றங்களில் காலியாக உள்ள நீதிபதிகள் பதவிகளை நிரப்புவது குறித்து .. 494—495

(ஈ) பல்கலைக் கழக ஆட்சிமன்றக் குழுவில் சட்டமன்ற உறுப்பினர்களுக்காகவுள்ள இடங்களை நிரப்புவது குறித்து .. .. 495—496

3. கவன ஈர்ப்புகள் :

(அ) பவானிசாகர் அணையிலிருந்து எள் பயிருக்குத் தண்ணீர் விடுவது குறித்து .. .. 497—499

(ஆ) வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள தஞ்சை மாவட்ட விவசாயிகளிடம் கூட்டுறவுக் கடன் வசூலிப்பது குறித்து .. 500—505

4. முதல் துணை நிதி நிலை அறிக்கை 1985-86 அளித்தல் ... .. ... 505—506

5. அறிவிப்புகள் :

(அ) துணை மானியக் கோரிக்கைகளுக்கு வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்தல் 506

(ஆ) சென்னை குதிரைப் பந்தயச் சங்கம் (நிறுவனத்தை கையகப்படுத்தீதலும் உரிமை மாற்றம் செய்தலும்) சட்ட முன்வடிவு, 1986 (ஆ.செ.) ... ... ... 510

பக்கங்கள்.

6. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் 1979-80 அளித்தல் .. .. .. 508—510

7. அரசினர் சட்ட முன்வடிவுகள் :

(அ) சென்னை குதிரைப் பந்தயச் சங்கம் (நிறுவனத்தை கையகப்படுத்துதலும் மாற்றம் செய்தலும்) சட்ட முன்வடிவு 1986 .. .. .. 511—549

(ஆ) சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு, 1986 .. .. .. 549—568

8. அறிக்கை அளித்தல் : 570—574

ஊராட்சி மன்ற, ஒன்றியத் தேர்தல்களுக்கான வேட்புமனுக்கள் பெறும் நாள் நீட்டிக்கப் பெற்றுள்ளது குறித்த உள்ளாட்சித் துறை அமைச்சரின் அறிக்கை .. .. .. 569—570

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 574—575

2890

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1986, சனவரி 24, வெள்ளிக்கிழமை

தை 11, குரோதன, திருவள்ளுவர் ஆண்டு 2017

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு.''

பொருள் வரும் வழிகளை மேன்மேலும் இயற்றலும், வந்த பொருள்களைச் சேர்த்தலும், காத்தலும், காத்தவற்றை வகுத்துச் செலவு செய்தலும் வல்லவன் அரசன்.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### குடகனாற்றில் இலட்சுமணப்பட்டியருகே வெள்ளத் தடுப்பு அணை.

18—(*வினா எண். 2480) மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடகனாற்றில் வெள்ளச் சேதத்தையும், அப்பகுதி குளங்களுக்குத் தண்ணீர் கொடுக்க வேண்டியதையும் கருத்தில் கொண்டு குடகனாற்றில் இலட்சுமணப்பட்டி அருகில் ''வெள்ளத் தணிப்பு அணை'' (Flood Moderator) அமைக்க அரசுக்கு 1985 மார்ச்சில் கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு அதன்மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. யா. எச். மு. யூசுப் : (அ) 1985-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் அரசுக்குக் கோரிக்கை வந்தது.

(ஆ) நில அமைப்பின்படி இலட்சுமணப்பட்டி அருகில் வெள்ளத் தடுப்பு அணை கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்றாலும், இலட்சுமணப்பட்டி அணைக்கட்டை மேம்

பாடு செய்து பாசன வசதியை அதிகரிக்கக்கூடிய சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்யும்படி தல அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த லட்சுமணப்பட்டியில் வெள்ளச் சிரமைப்பு அணை அமைப்பதற்கு, நில ஆக்கிரமிப்பு காரணமாக முடியவில்லையென்று அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். மீண்டும் ஆய்வு செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். 1950-ஆம் ஆண்டிலிருந்தேகூட இந்த அணை அங்கேதான் கட்டப்பட வேண்டுமென்ற கோரிக்கை அந்தப் பகுதி மக்களால் வற்புறுத்தப்பட்டது. பல்வேறு தவறான காரணங்களால் தான் இடம் மாற்றப்பட்டது. இடம் ஆர்ஜிதம் செய்யப்பட்டதால், உடைந்த அணையை மீண்டும் அதே இடத்திலேதான் கட்ட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த இடத்திலே கட்ட முடியாமல் இருப்பதற்கு பக்கத்திலே ஒரு தேசிய நெடுஞ்சாலை போகிறது என்ற ஒரே ஒரு காரணத்தைத்தான் பொறியாளர்கள் 1950-ஆம் ஆண்டிலேயிருந்து சொல்லி வருகிறார்கள். ஆகவே, அதை மாற்றி அந்த இடத்திலே அமைத்து, நீர்ப்பாசன குளங்களுக்கு நீர் போவதற்கான ஏற்பாடு செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதிமொழி அளிப்பார்களா என்கிற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, இந்த அணையை அமைப்பதைப் பொறுத்தமட்டிலும் தேசிய நெடுஞ்சாலை நிச்சயமாகக் குறுக்கே வரவில்லை. ஏனென்றால் இந்த வெள்ளத் தடுப்பு அணை ஒரு பெரிய நீர்த் தேக்கமாக அமைக்கப்பட வேண்டும். ஆனால், லட்சுமணப்பட்டி அருகில் உள்ள அந்த இட அமைப்பு, ஒரு நீர்த் தேக்கம் அமைப்பதற்கு உகந்ததாக இல்லை என்றும் நீர்த் தேக்கம் அமைப்பதாக இருந்தால், பல வளர்ச்சி அடைந்த கிராமங்களில் பெரும் பகுதி நீரில் மூழ்க வேண்டியிருக்கும் என்றும் அதன் காரணமாக, வெள்ளத் தடுப்பு அணை கட்டுவதற்கான சாத்தியக்கூறு இல்லையென்றும் தலைமைப் பொறியாளர் அவர்கள் அறிக்கை ஒன்றினை அரசுக்கு அளித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில்தான் அரசு தற்போதைய இடத்திலேயே அந்த அணையை மறுபடியும் கட்டுவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறது. இருப்பினும் கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிகவும் பொறுப்பான பதவியிலே இருப்பவர்கள். அவர் தவறான ஒரு கருத்தைச் சொல்லியிருக்க மாட்டார்கள். எனவே, அதைத் தகுந்த முறையிலே ஆய்வு செய்ய வேண்டுமென்று அரசு உத்தரவு போட்டதன் காரணமாக மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவருடைய இந்தக் கோரிக்கை செயல்படுவதற்கு வாய்ப்பு இருக்கின்றதா என்ற பரிசீலனையில் துறை ஈடுபடுகிறது.





மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அணை கட்டுவதாலே சில கிராமங்களைக் காலி செய்ய வேண்டியிருக்கும் என்று அதிகாரிகள் குறிப்பு கொடுத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தப் பகுதியில் 2, 3 கிலோ மீட்டர் ரேடியஸில் இருப்பது ஒரே ஒரு ஊர்—லட்சுமணப்பட்டிதான். அங்கே அணை கட்டுவது என்றால், ஊரை காலி செய்வதற்கு அந்தப் பகுதி மக்கள் தயாராக இருக்கிறார்கள். அதற்கும் மேலே 1977-ம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தில், அந்தக் குடகனாறு அணை கொள்ளளவை விட 6 மடங்கு தண்ணீர் வந்ததாக அதிகாரிகளுடைய புள்ளி விவரமே சொல்கிறது. சாதாரண காலங்களில் கூட, வேடசந்தூர் பகுதியிலிருந்து மட்டுமல்லாமல், மற்ற பகுதிகளிலிருந்து வருகிற காட்டாற்று வெள்ளம், அந்த அணையின் கொள்ளளவைவிட இரண்டு மடங்கு, மூன்று மடங்கு, கூடுதலாக வருகிற சூழ்நிலையில் அந்த இடத்திலே ஒரு ஃப்ளட் மாடரேட்டர் அமைக்கப்படுமானால் வேடசந்தூர் பகுதியிலே உள்ள 200க்கு மேற்பட்ட வறட்சியான நீர்ப்பாசன குளங்களை நிரப்புகிற அரிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அந்த வகையிலே, அந்தக் கருத்தை முன் வைத்து, ஆய்வுகளை மேற்கொள்ளச் செய்ய அரசு முயற்சிகளை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே, நான் முன்பே குறிப்பிட்டதைப்போல தற்போதுள்ள லட்சுமணப்பட்டி அணைக்கட்டை மேம்பாடு செய்து, மேலும் பாசன வசதி செய்து தருவதைப் பற்றிய சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்யும்படி தல அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்க தலைமைப் பொறியாளர் ஆணையிடப்படுவார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தள்ளி வைக்கப்பட்ட வினாக்கள் கடைசியில் எடுத்துக் கொள்ளப்படும்.

கிராமப்புற ஏழைகளுக்கு வீட்டுமனைகள் வழங்கல்.

118—(*வினா எண். 2209) திரு. சோ. வீரய்யன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியிருப்பு சட்டத்தின்கீழ் பட்டா பெறாமலும், சொந்த மனை இல்லாமலும் இருக்கும் கிராமப்புற ஏழைகளுக்குக் குடிமனை வழங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எவ்வளவு காலத்தில் நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மற்றும் (ஆ):
ஒரு குடும்பத்தின் மொத்த வருட வருமானம் ரூ. 3500-க்கும்
குறைவாக இருந்தால் அத்தகைய குடும்பங்கள் வறுமைக்
கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களாகக் கருதப்பட்டு, அவர்கள்
அனைவருக்கும் வீட்டுமனைப் பட்டா வழங்கவேண்டும் என்ற
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைககுட்பட்டு,
30–6–1984 வரையிலுள்ள ஆட்சேபனையற்ற ஆக்கிரமணங்
களை முறைப்படுத்து விதிமுறைகளின்படி வீட்டுமனை ஒப்படை
செய்யப்பட்டு வருகிறது. இந்தச் சிறப்புத் திட்டத்தினை
ஐந்தாண்டுக் கால வரையறைககுள் முடிக்கவேண்டும் என்னும்
கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது.

திரு. கோ. வீரய்யன் : பேரவைத் தலைவர் அவர்களே,
இன்று குடிமனை சொந்தம் இல்லாமல் சாதாரண ஏழை மக்க
ளாக இருப்பவர்கள் பல்வேறு முறைகளில் உள்ள நிலங்களில்
அதாவது கோயில் மனைகள், அரசுப் புறம்போக்கு நிலங்கள்,
தனியார் நிலங்கள் போன்றவற்றில் குடியிருப்பதால் அவர்
களுக்குக் குடிமனை சொந்தம் இல்லாத நிலைமையில் பல்வேறு
சலுகைகளை அவர்கள் பெற முடியாமல் இருக்கிறார்கள்
என்பதை அரசு அறியுமா? எனவே அதைக் கணக்கில் எடுத்துக்
கொண்டு அரசாங்கம் அவர்களுக்குப் பட்டா வழங்க நடவடிக்கை
எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத்
தலைவர் அவர்களே, அவர்களுக்குச் சொந்தமான பட்டா வழங்
கப்படாமல் இருப்பதன் காரணத்தால் சலுகைகள் பலவற்றைப்
பெறுவது என்பது கடினமாகத்தான் இருக்கும். அந்த நோக்கத்தின்
அடிப்படையில்தான், அவர்கள் பல்வேறு வசதிகளைப் பெற
வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் தான் அவர்களுக்கு
வீட்டுமனைப்பட்டா கொடுக்கப்பட்டு வருகிறது. இதிலே சில பல
வரைமுறைகள் வகுக்கப்பட்டு இருக்கின்றன. வீட்டுமனை ஒதுக்கு
வதைப் பொறுத்தவரையில் நத்தம் மற்றும் ஏனைய புறம்போக்கு
களில் ஆட்சேபனையற்ற முறையில் ஆக்கிரமணம் இருந்தால்
அவை கவனிக்கப்படுகின்றன. வேறு பொது காரியங்களுக்கோ
அல்லது அரசு பணிகளுக்கோ அல்லது அரசின் சார்பாக சிலபல
பணிகளுக்குத் தேவைப்பட்டால் அப்படிப்பட்ட நிலங்களைக்
கொடுக்க இயலாத நிலைமை ஏற்படும். எனவே, அவற்றை வழங்
குகிற முறையில் சிலபல வரைமுறைகள் வைக்கப்பட்டு இருக்கின்
றன. முன்னுரிமை அடிப்படையில் அவை வழங்கப்படுகின்றன.
போரில் வீரமரணம் அடைந்த அல்லது இயலாமையை அடைந்
துள்ள ராணுவ வீரர்கள் ஆகியோரின் குடும்பங்கள் எல்லைப் பாது
காப்புப் படையினர், பிரந்திய ராணுவப் படையினர் ஆகியோரும்
இதில் அடங்குவார்கள். சுதந்திரப் போராட்ட வீரர்கள் அவர்
களில் சட்டபூர்வமான வாரிசுதாரர்கள் ஆகியோருக்கு வழங்கப்
படுகிறது. அதற்குப் பிறகு நிலமற்ற ஏழை ஆதி திரா
விடர்கள், பழங்குடியினர், 1976-ஆம் ஆண்டில் கொத்தடிமை
முறை ஒழிக்கப்பட்டபோது விடுவிக்கப்பட்ட கொத்தடிமை



கள், போர் முனைகளில் பணிபுரிந்த முன்னாள் ராணுவ வீரர்கள்
இவர்களில் அஸ்ஸாம் துப்பாக்கிப் படையினரும் அடங்குவார்கள்
பர்மா, இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து தாயகம் திரும்பியோர்,
தங்கக் கட்டுப்பாட்டின் காரணமாக வேலையிழந்த பொற்
கொல்லர்கள், நிலமற்ற பிற ஏழைகள் என்ற வகையில் அந்த
நில ஒப்படை செய்யப்படுகின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.
இந்த அடிப்படையில்தான் ஆங்காங்கு இருக்கின்ற நிலங்களைப்
பிரித்துக் கொடுக்கின்ற முயற்சிகள் தொடர்ந்து தீவிரமாக
நடைபெற்று வருகின்றன.

திரு. கோ. வீரய்யன் : பேரவைத் தலைவர் அவர்களே,
குடிமனை இல்லாத ஏழைகள் அந்தக் குடிமனை தங்களுக்குச்
சொந்தமாக வேண்டும் என்று கோரி பல்லாயிரக்கணக்கான மனுக்
கள் அரசுக்கு தந்து இருப்பதை அரசு அறியுமா? ரெகுலர் தாசில்
தார்கள் இந்த வேலைகளையும் சேர்த்து கவனிப்பதால்தான் இந்த
மனுக்கள் பைசல் செய்யப்படாமல் தேங்கி இருப்பதை அரசு
அறியுமா? இந்த நிலைமையைக் கணக்கில் எடுத்துக் கொண்டு
இந்தக் குறிப்பிட்ட பணிக்கென்று தனித் தாசில்தார்களை
நியமித்து பட்டா வழங்குகின்ற நடவடிக்கையை எடுக்க அரசு
முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத்
தலைவர், அவர்களே, மனைப்பட்டா, ஏழை எளிய மக்களுக்கு
வழங்கப்பட வேண்டும் என்பதிலே எந்தவகையான இடையூறும்
ஏற்படாத வகையில், இருக்கின்ற நிலங்களை வழங்குவதில்
ஆட்சேபனை இல்லை. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆங்காங்கு
இருக்கின்ற நிலமைகளைக் கவனித்து தீவிரமான முயற்சிகளை
மேற்கொண்டு இருக்கிறார்கள். ஆங்காங்கு இருக்கின்ற வட்டா
சியர் மற்றும் துணை வட்டாட்சியர் ஆகியோரைக் கொண்டு
இதனைத் தீவிரப்படுத்துகின்ற முயற்சிகளில் அவர்கள் ஈடுபட்
டிருக்கிறார்கள். இரண்டு வார காலத்திற்கு அவர்கள் தீவிரமாகப்
பணியாற்றி அந்த வகையில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஈடு
பட்டு அதன் காரணமாகப் பல்லாயிரக்கணக்கான மக்களுக்குப்
பட்டா வழங்கப்பட்டிருக்கின்றது. அந்த வகையில் சென்ற ஆண்டு
மட்டும் 1-4-1984 முதல் 30–11–1985 வரையில் 2,98,357 பேர்
களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.
ஓராண்டு எட்டு திங்கள்களில் கிட்டத்தட்ட 3 இலட்சம் பேருக்கு
வீட்டுமனை வழங்கப்பட்டு இருக்கின்றது. இந்த அடிப்படையில்
வழங்கப்பட்டு வருகிறது. ஆகவே எவ்வளவுக்கு எவ்வளவு வேக
மாக வழங்கவேண்டுமோ அவ்வளவுக்கு அவ்வளவு வேகமாக
வழங்கவேண்டும். 1984 ஆம் ஆண்டிலிருந்து ஐந்தாண்டுக் காலத்
திற்குள்ளாக இந்தப் பணிகள் நிறைவேற்றப்படவேண்டும்
என்ற அடிப்படையில்தான் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரு
கின்றன.

(முற்பகல் 9–10)

திரு. சே. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்தக் கேள்வி குடியிருப்புச் சட்டத்திற்கு சம்பந்தப்
பட்ட கேள்வி என்று கருதுகிறேன். தனியாருக்குச் சொந்தமான

பட்டா நிலத்தில் குடியிருக்கிற விவசாயக் கூலிகளுக்குப் பட்டா கொடுப்பதற்கான வரைமுறைகள் குறித்து அந்தச் சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டப்படி பட்டாக்களை வழங்க முடியாததற்குக் காரணம் அந்தச் சட்டம் உச்ச நீதி மன்றத்திலே தடை படுத்தப்பட்டிருப்பதாக சொல்லப்படுவது உண்மையா? அப்படி இருக்குமானால் அந்தத் தடையை நீக்கி தனியார்களுக்குச் சொந்தமான நிலத்தில் குடியிருக்கும் விவசாயக் கூலிகளுக்கு, அந்த நிலத்தையே, பட்டா கொடுத்து, சொந்தமாக்க அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது போன்று உச்ச நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறதா என்கிற விவரக் குறிப்புகள் என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போட்டால் அதுபற்றிய விவரக் குறிப்புகளைச் சேகரித்துக் கொடுக்கலாம். ஆனால் குடியிருப்புகளை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பவர்கள் ஆட்சேபணையற்ற பகுதியில் இருந்தால், அரசு அதை பட்டா செய்து கொடுக்கும். ஆட்சேபணை இருக்கிற இடத்தில் குடியிருப்புகள் இருந்தால், அவைகளைப் பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்றால், அதுவும் தனியாரிடத்தில் இருக்கிறபோது அந்த மனைகளைக் கையகப்படுத்தித்தான் தரவேண்டுமே தவிர, நேரிடையாகத் தருகிற சூழ்நிலை இல்லை.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குடியிருப்புப் பட்டா என்பது இதுவரையில் இருந்தவர்களுக்கும் கூட பட்டா கொடுப்பதில் தடங்கல் இருப்பதாக அறிகிறேன். குடிமனை இல்லாதவர்களுக்கு லட்சக்கணக்கான பேர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று, ஆதிதிராவிடர் நலத்துறை மூலமாக அல்லது ரெவின்யூ துறை மூலமாக கொடுக்கிறபோது, இன்றைக்கு இருக்கிற சட்டப்படி தடை வாங்கி விடுகிறார்கள். அதுவும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அரசைக் கேட்டு அனுமதி வாங்கி பட்டாக்களை வழங்க ஏற்பாடு செய்வதற்குள் நீதிமன்றத்திற்குச் சென்று தடை பெற்று விடுவதாக கேள்விப்படுகிறேன். ஆகவே நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், பட்டா மனுக்களை, அரசு விரும்பக்கூடிய அளவுக்கு உடனடியாக வழங்கும் வகையில், தற்போதைய சட்டத்தில் இருக்கக்கூடிய ஓட்டைகளைத் திருத்தி, அந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு நேரிடையாக வழங்கக் கூடிய அதிகாரத்தை வழங்குவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களாஎன்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டத்தில் திருத்தப்பட வேண்டிய குறைபாடுகள் இருக்கின்றனவா என்கிற விவரக் குறிப்புகள் என்னிடத்தில் இல்லை. ஆனால் அது திருத்தப்படுமானால், உறுப்பினர் அவர்கள் கூறுவது போல், செம்மைப் படுத்தப்பட்டு அந்த நோக்கம் நிறைவேறுகிற நிலை இருக்குமானால் அதைப் பற்றி அரசு பரிசீலிக்கலாம். ஆனால் சென்னை மாநகரத்தைப் பொறுத்தும், சென்னை மாநகராட்சியை சுற்றியுள்ள 20 மைல் அளவுக்குள்ள பகுதிகளுக்கும், மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி போன்ற பெருநகரங்கள் மற்றும் அவற்றைச் சுற்றியுள்ள பகுதியிலே உள்ள மனைகளுக்கும் பட்டாக்களை வழங்குகிற முயற்சிகளிலேதான் அரசினுடைய அனுமதி பெற்று பிறகு வழங்க வேண்டும் என்றும், மற்ற இடங்களில் அளிக்கிறபோது, மாவட்ட ஆட்சித் தலைவர்களே வழங்கலாம் என்ற முறையில்தான் தற்போது அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.



தேர்தல் செலவுக்கான உச்ச வரம்பு.

119—(*வினா எண். 2915) திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பொதுத் தேர்தலில் வேட்பாளர்களுக்கு ஆகும் செலவுத் தொகையின் உச்சவரம்பினை அதிகரிப்பது பற்றி தேர்தல் கமிஷன் இந்த மாநிலத்தின் கருத்தினைக் கேட்டுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இல்லை.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தலுக்கான செலவுத் தொகைக்கு உச்ச வரம்பை அதிகரிப்பதற்கில்லை என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இருந்தாலும் ஒவ்வொரு வேட்பாளருக்கும் எல்லா செலவையும் ஒதுக்கி கொள்வதை விட, ஊர்திகள், மற்றும் விளம்பரத்திற்காகும் செலவை மட்டுமாவது அரசு ஏற்றுக் கொள்வதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5—9—1984-க்கு முன்னால் வேட்பாளர்களுக்கு தேர்தலில் எவ்வளவு செலவு செய்யலாம் என்று உச்ச வரம்பு வகுக்கப்பட்டிருந்தது. 5—9—1984-க்கு முன்னால் சட்டமன்ற பேரவைக்கு நிற்பவர்கள் 12 ஆயிரம் ரூபாய் வரையில் செலவு செய்து கொள்ளலாம் என்றும், நாடாளுமன்றத்திற்கு நிற்பவர்கள் 35 ஆயிரம் வரையில் செலவு செய்து கொள்ளலாம் என்றும் இருந்தது.

மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று உச்ச வரம்பின் அளவு குறைவாக இருக்கிறது. அதைக் கூட்ட வேண்டும் என்று எல்லா மாநிலத்தவரும் கேட்டார்கள். எல்லோரும் கேட்டதற்குப் பிறகு 5—9—1984-க்கு பிறகு, நாடாளுமன்றத் தொகுதிக்கு 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வரையில் செலவு செய்யலாம் என்றும், சட்டமன்றப் பேரவைத் தொகுதிக்கு 50 ஆயிரம் ரூபாய் வரையில் செலவு செய்யலாம் என்றும், 35 ஆயிரத்தை 1 லட்சத்து 50 ஆயிரமாகவும், 12 ஆயிரத்தைத் 50 ஆயிரமாகவும் அண்மையில்தான் உயர்த்தியிருக்கிறார்கள். ஆக, மறுபடியும் இந்த உச்ச வரம்பை உயர்த்துகின்ற சூழ்நிலை ஏற்படுமானால் அது அருந்

வருகின்ற பொதுத்தேர்தலுக்கு முன்னால் அப்போது இருக்கிற நிலவரங்களைப் பொறுத்து, விலைவாசிகளைப் பொறுத்து, மற்ற தன்மைகளைப் பொறுத்து ஏற்படலாம். மேலும், இந்த உச்ச வரம்பை உயர்த்த வேண்டுமானால், இதை உயர்த்தி வரை யறை செய்ய வேண்டுமென்றால் தேர்தல் குழு (எலெக்ஷன் கமிஷன்) கட்டளையிட வேண்டும். ஆக வேட்பாளர்களுடைய செலவை எல்லாம் அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பது இயலாது, அரசு ஏற்காது. ஆனால் தேர்தல்களுக்கான மற்ற ஏற்பாடுகளைச் செய்கிறபோது அதற்காக, நம்முடைய மாநிலத்தை மட்டும் எடுத்துக்கொண்டால் கிட்டத்தட்ட 10 கோடி ரூபாய் செலவு ஏற்பட்டது. இதிலே பாதியை இந்த மாநில அரசு ஏற்கிறது, பாதியை மத்திய அரசு ஏற்றுக் கொள்கிறது ஆக, அரசு தேர்தல்களுக்கான ஏற்பாடு களை, வசதிகளைச் செய்கிறதே தவிர, வேட்பாளர்களுடைய செலவுகளை ஏற்பது என்பது இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி பா. வளர்மதி : தலைவரவர்களே, வேட்பாளர் களுக்கு ஏற்படுகின்ற செலவுகளைக் குறைப்பதற்கு அரசு நட மாடுகின்ற வாக்குச் சாவடிகளை ஏற்படுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர வர்களே, சிலபல இடங்களில்—நம்முடைய மாநிலத்தில் அல்ல —நிலைத்து இருக்கிற வாக்குச் சாவடிகளையே தூக்கிக் கொண்டு போகின்ற நிலைமை இருக்கிறபோது நடமாடும் வாக்குச் சாவடி களின் கதி என்னவாகும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அப்படி எண்ணிப்பார்க்கின்றபோது நிலைத்து இருக்கிற சாவடியை இன்னும் வலுப்படுத்தி, உறுதிப்படுத்த வேண்டியிருக்கிறது.

திரு. சைதை சா. துரைசாமி : தலைவரவர்களே, தேர்தல் களில் அதிகமான பணம் விரயம் ஆவதைத் தடுக்கவும் வேட் பாளர்களுக்கு ஒதுக்கப்படுகிற நிதி அளவுக்கு குறைவாகவே அவர் கள் பணத்தை செலவு செய்யவும் வீணான ஆடம்பரமான விளம் பரங்கள், சுவரொட்டிகள் ஒட்டுவது, கவர்ச்சிகரமான வளைவுகள் அமைப்பது, சுவற்றிலே எழுதுவது போன்றவைகளுக் காக தேர்தலிலே நிற்கிற வேட்பாளர்கள் செலவு செய்யாமல் இருக்கவும் நியாயமான பரிந்துரைகளை மாநில அரசு மத்திய அரசினுடைய தேர்தல் கமிஷனுக்குத் தெரிவிக்குமா? அப்படிச் செய்தால் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் பணக் காரர்களின் கைக்கூலிகளாக ஆகிவிடுகிறார்கள் என்று சொல்லு கின்ற குற்றச்சாட்டுக்கு இடமில்லாமல் போக வழிவகை ஏற்படும். ஆகவே மாநில அரசு தேர்தல் கமிஷனுக்கு இந்தப் பரிந்துரை யைச் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர் களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற கருத்துக் களை எல்லாம் உள்ளத்திலே வைத்துக்கொண்டுதான் தேர்தல்



குழு நாடாளுமன்றத் தொகுதிக்கு 1,50,000 ரூபாய்க்கு மேலும், சட்டமன்றத் தொகுதிக்கு 50,000 ரூபாய்க்கு மேலும் போகக் கூடாது என்ற நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதைச் சட்டத்தின் மூலம் ஏற்படுத்த முடியாது. தேர்தலில் போட்டி யிடுகின்றவர்கள் போட்டா போட்டி போட்டுக்கொண்டு போஸ் டர்களை ஒட்டுகிறார்கள். ஒரு போஸ்டர் ஒட்டினால்கூட போதும். இருந்தாலும் 20, 25 விதமான போஸ்டர்களை வித விதமான போஸ்டர்களை, வண்ண வண்ண போஸ்டர்களை, போட்டா போட்டிப் போட்டுக்கொண்டு ஒட்டுகிறார்கள். இந்த போட்டா போட்டிகள் தேர்தல் நேரத்தில் பரவலாக ஆங்காங்கே நடைபெறுகின்றன. இந்தப் போட்டா போட்டியை, வேட்பாளர் களும் மற்றவர்களும் எல்லா அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர் களும் இணைந்து, தடுக்கின்ற நடவடிக்கையை எடுக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்கு ஒரு எடுத்துக்காட்டாக இருந்தால் மற்றவர்களும் அதைப் பின்பற்ற வாய்ப்பாக இருக் கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : தலைவரவர்களே, தேர்தல் காலத்தில் வேட்பாளர்களுடைய செலவிலே ஒரு பகுதியை சில வெளிநாடுகளில் அரசே ஏற்றுக்கொள்கிறது. அதைப் போன்ற கருத்து இந்தியாவிலும் தற்போது வலுப்பெற்று வரு கிறது. அதற்கு முன் உதாரணமாக தமிழ்நாட்டில் பஞ்சாயத்து, நகராட்சித் தேர்தல்களில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் செலவில் ஒரு பகுதியை தமிழக அரசே ஏற்றுக்கொள்ள முன் வருமா? * * * (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் குற்றச் சாட்டு கூடாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வி யில் குற்றச்சாட்டாக அமைந்த பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர் களே, நான் ஆரம்பத்திலேயே சொன்னேன். வேட்பாளர்களுக்கு ஏற்படுகின்ற செலவுகளை அரசு ஏற்றுக்கொள்ள வழிவகை இல்லை. நடைபெறவிருக்கின்ற உள்ளாட்சிகள் தேர்தல்களிலும் வேட்பாளர் செலவுகளை அரசு ஏற்றுக்கொள்ளும் நிலைமை இல்லை. மேலும் இதுபற்றிய முடிவினை எடுக்க வேண்டியது மத்திய அரசிலே இருக்கிற தேர்தல் கமிஷன்தான். மேலை நாடு களில், சிலபல இடங்களில் அரசு ஏற்றுக்கொள்கின்ற நிலைமை இருக்கிறது. இங்கிலாந்தில் நடைபெறுகின்ற தேர்தலில், ஒவ் வொரு வாக்காளருக்கும் இன்ன தொகுதியில் இந்த நாளில் தேர் தல் நடக்கிறது; இன்ன வாக்குச் சாவடியில் உங்களுடைய வாக்கு எண்ணப்படுகிறது என்பன போன்ற தகவல்களை கார்டு மூலம் அரசாங்கச் செலவிலேயே அனுப்பிவிடுகிறார்கள். ஆகவே

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1986 சனவரி 24

ஸ்லிப் எழுதி வீட்டிற்கு வீடு கொடுக்கிற நிலைமை இங்கிலாந்து
நாட்டிலே இல்லை. தேர்தலைப் பொறுத்தவரையில் சுற்றறிக்
கைகள், சுவரொட்டிகள் போன்றவற்றை இலவசமாகவே அஞ்
சலில் அனுப்பலாம். அஞ்சல் துறையினர் கொண்டு போய் விநி
யோகிப்பார்கள் என்ற முறை இங்கிலாந்திலே இருக்கிறது. அந்த
முறை வேறு சில நாடுகளிலும் இருக்கின்றது. ஆகவே இது
குறித்த முடிவை மத்திய அரசு தான் எடுக்க வேண்டும்.

(முற்பகல் 9—20.)

திரு. வே. இரா. ஜெயராமன் : தலைவர் அவர்களே, தேர்தல்
செலவைக் குறைக்கிற வகையில் தேர்தல் அறிவிப்பு வெளியிட்ட
நாளிலிருந்து தேர்தல் வரையிலான இடைப்பட்ட காலத்தைக்
குறைக்கலாம். இப்போது 30 நாட்கள் என்று இருப்பதை
15 நாட்களாகக் குறைக்கிற வகையில் தமிழக அரசு மத்திய
அரசிற்கு சிபாரிசு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர்
அவர்களே, சிபாரிசு செய்வதிலும் கஷ்டம் இல்லை. மத்திய
அரசு ஏற்றுகொள்வதிலும் கஷ்டம் இருக்காது. ஆனால் தேர்
தலில் நின்று போட்டியிடுகின்ற வேட்பாளர்களுக்குத்தான்
கஷ்டம் ஏற்படும். ஒரு திங்கள் என்பதே பாதாது என்ற
நிலைமை—ஒருசில நிலைமைகளை பொறுத்து— சிலபல இடங்
களிலும் ஏற்படுகின்றது. வாக்குச் சீட்டுகளைத் தயாரிப்பற்
கும், மற்ற ஏற்பாடுகளைச் செய்வதற்கும் அந்த 15 நாட்கள்
என்பது போதாது என்ற நிலைமை அரசுக்கே கூட ஏற்படும்.
ஆகவே இதனையொட்டி அந்தக் காலவரையை மேலும் குறைக்க
முயற்சி செய்தால் வாக்குச் சீட்டுகள் அச்சிடுவதிலும், விநியோ
கிப்பதிலும் மற்ற ஏற்பாடுகளைச் செய்வதிலும் இடர்ப்பாடுகள்
ஏற்படும்.

தென்னாற்காடு மாவட்டத்தைப் பிரித்தமைத்தல்.

120—(*வினா எண். 4662) திரு. சு. சிவராஜ் : மாண்புமிகு
நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்
கும் திட்டத்தின் பூர்வாங்க வேலைகள் தொடங்கப்பட்டு
விட்டனவா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது முதல் செயல்படத் துவங்
கும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :—(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.



1986 சனவரி 24]

திரு. சு. சிவராஜ் : தலைவர் அவர்களே, ஏற்கனவே தென்னாற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரிப்பது என்று முடிவு செய்யப்பட்டு அறிவிப்பு எல்லாம் வெளியிடப்பட்டிருக்கிறது. அப்படித் தென்னாற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் போது விழுப்புரத்தைத் தலைமையகமாகக் கொண்டு வள்ளலார் மாவட்டம் அமையுமென்று அறிவிப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. விழுப்புரம் நகரம் தென்னாற்காடு மாவட்டங்களில் உள்ள நகரங்களில் முன்னேறிய நகரமாகும். தென்னாற்காடு மாவட்டத்தில் திருக்கோவிலூர் மிகவும் பின்தங்கிய பகுதியாக இருப்பதாலும் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே கடையேழு வள்ளல்களில் ஒருவரான மலையமான் திருமுடிக்காரி ஆட்சி செய்த இடமாக இருப்பதாலும், திருக்கோவிலூரை தலைமையகமாகக் கொண்டு புதிய மாவட்டத்தை அமைச்சர் அவர்கள் அமைக்க முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் ஏழு பெரிய மாவட்டங்களை அதனுடைய அளவைக் கருதி இரண்டாக, மூன்றாக பிரிக்கலாம் என்று கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு, படிப்படியாக நிறைவேற்றப்படுமென்ற அளவிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதையொட்டிதான் சென்ற ஆண்டிற்கு முதல் ஆண்டு இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம், காமராஜர் மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கம் என்று மூன்று மாவட்டங்களாக பிரிக்கப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு மதுரை மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு அண்ணா மாவட்டம் உருவாக்கப்பட்டது. இந்த ஆண்டு திருநெல்வேலி மாவட்டமும், வட ஆற்காடு மாவட்டமும் இரண்டாகப் பிரிக்கப்படும் என்று சொல்லப்பட்டது. அந்த அடிப்படையில் தேவை, மற்ற சூழ்நிலைகளைக் கருதி அடுத்தடுத்து மாவட்டப் பிரிவினைகள் மேற்கொள்ளப்படும். அதைப்போல தென்னாற்காடு மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்படும்போது கடலூரைத் தலைமையகமாகக் கொண்டு ஒரு மாவட்டமும், விழுப்புரத்தைத் தலைமையகமாகக் கொண்டு ஒரு மாவட்டமும் அமையுமென்று இந்த அவையிலே ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இருக்கிற சூழ்நிலைகள், அதைச் சுற்றியிருக்கிற பகுதிகள், வளர்ந்த தன்மை ஆகியவற்றை வைத்து தலைநகர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அதிகாரிகள் அடங்கிய குழுவினர் மாவட்டங்களை எப்படிப் பிரிக்கலாம், எந்தெந்த கோட்டத்தை எதனுடன் சேர்ப்பது, எந்தெந்த வட்டத்தை எதனுடன் சேர்ப்பது என்பனதையெல்லாம் ஆராய்ந்து அவர்களின் அறிக்கை வந்ததற்குப்பிறகு திட்டவட்டமாக, தெளிவாக உரை முடியும். ஒரு மாவட்டத்தை பிரிப்பதென்றால், புதியதாக அமைகிற மாவட்டத்திற்கு தொடரினச் செலவுகள் மட்டும் 3½ கோடி ரூபாய் ஆகும். தொடரா இனச் செலவுகள் 11 கோடி ரூபாய் அளவிற்கு ஆகும். அதை வைத்தால் தான் புதியதாக மாவட்டத்தை

ஏற்படுத்த முடியும். அதைப்போல புதியதாக மாவட்டம் உருவாக்கப்படுமானால் 35, 36 துறைகளுடைய மாவட்டத் தலைமையகங்களை அங்கே கொண்டு வந்து சேர்க்க வேண்டியிருக்கிறது. ஆகவே அப்படிப்பட்ட பெரும் செலவுகளை செய்ய வேண்டியிருப்பதன் காரணமாக படிப்படியாக அந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

திரு. சு. சிவராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதி ஆண்டிலே வட ஆற்காடு மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம் ஆகிய மாவட்டங்களைப் பிரிப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே வருகிற நிதி ஆண்டிலேயாவது தென் ஆற்காடு மாவட்டத்தைப் பிரிப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா? மேலும் வள்ளலார் பிறந்த இடமாக வடலூர் இருப்பதால் கடலூரை தலைமையிடமாகக் கொண்ட மாநிலத்திற்கு வள்ளலார் பெயரால் வள்ளலார் மாவட்டம் என்றும் புதிதாக அமைய இருக்கிற மாவட்டத்திற்கு மறைந்த அன்னை இந்திரா காந்தி அவர்களின் பெயரைச் சூட்டுவதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் முறைப்படி பார்த்து ஆய்வு செய்து எதெதற்கு முக்கியத்துவம் தரவேண்டும் என்ற அளவிற்கு ஒரு கணக்கின் அடிப்படையில் வருகிறோம். ஆகவே அடுத்து தென் ஆற்காடு மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்படும். அது எந்த ஆண்டில் என்பதை இப்போது நான் கூறுவதற்கில்லை. அது, ஆய்வு நடத்தி வந்த பிறகு, பிற மாவட்டங்களின் சூழ்நிலையைப் பொறுத்தும் அமையும். அமைந்ததற்குப் பிறகு எப்படி மாவட்டங்கள் அமைகிறதோ, அதற்குப் பெயரை எப்படியிடுவது— வள்ளலார் மாவட்டம் உருவாக்குவது என்ற முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. மற்றவை குறித்து அதுபற்றிய விவரக் குறிப்புகள் எல்லாம் வந்ததற்குப் பிறகுதான் முடிவு செய்ய வேண்டும். இப்போது மற்ற பெயர்களை வைக்கிற சூழ்நிலைகள் இல்லை. அது பின்னால் வருகிற சூழ்நிலை. வரும்போது ஏற்பாடு செய்ய வேண்டும். தென் ஆற்காடு மாவட்டம், வட ஆற்காடு மாவட்டம் என்ற ஒரு பொதுப் பெயர் வட, தென் என்று ஆற்காடு என்ற பெயரில் அமைத்திருப்பதால்—ஏற்கனவே பழமையாக இருக்கிற தஞ்சை மாவட்டம், திருச்சி மாவட்டம், மதுரை மாவட்டம், கோவை மாவட்டம் என அந்த ஊர்களைப் பொறுத்து ஏற்கனவே அமைந்து விட்டது. ஆனால் வட ஆற்காடு மாவட்டம், தென் ஆற்காடு மாவட்டம் என்பது சம்பந்தமில்லாமல் ஆற்காடு என்பதை வைத்து வந்ததுதான். அந்தப் பெயரை எடுத்துவிடுவதா வேண்டாமா என்பது ஆலோசிக்கப்படவேண்டிய ஒன்று. பிறகும் வட ஆற்காடு, தென் ஆற்காடு என்றிருப்பது பொருந்துமா பொருந்தாதா, வேறு பெயரை வைக்கலாமா என்பதை எல்லாம்



யோசிக்க வேண்டும். அப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிற அதுபோன்ற கருத்துக்கள் அடிப்படையில் எதைச் செய்யலாம் என்பதை யோசிக்கலாம்.

திருச்சியில் புதிய காய்கறி அங்காடி.

121—(*வினா எண். 2966) திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருச்சி நகரில் சுமார் 15 இலட்சம் ரூபாய் செலவில் புதிய காய்கறி மற்றும் பழ வகைகள் விற்பனை அங்காடி அமைக்கும் கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்பொழுது அமைக்கப்பெறும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(ஆ) மத்திய அரசின் நிதி உதவி கிடைத்தவுடன் பணி துவங்கப்பட்டு விரைவில் முடிக்கப்படும்.

திரு. எஸ். இராசாராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் காய்கறி அங்காடியைக் கட்ட எந்த இடத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள் ? அதன் முதலீடு எவ்வளவு தொகை என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அங்காடியை அமைப்பதற்குக் காந்தி மார்க்கெட் அருகில் சப்-ஜெயில் இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறது. கட்டிட மதிப்பீடு ரூ. 15 இலட்சம்; 1983–84-ல் அதற்கான எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது திருச்சி நகரத்தினுடைய மையத்தில் இருக்கிற காரணத்தினால் வாகனங்கள் போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக இருக்கிறது. ஆதலால் உடனடியாக இந்த வேலையை எடுத்துச் செய்ய அரசாங்கம் முன் வருமா ? அது அல்லாமல் அந்தப் பகுதியில் கடைகள் வைத்திருக்கிற வியாபாரிகளிடத்திலே அரசாங்கத்திற்கு நிதி குறைவாக இருந்தாலும் முன் பணம் வாங்கிக் கட்டுவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே வியாபாரிகளிடத்தில் பணம் வாங்கி அரசாங்கம் கட்டுவதற்கு இயலாது. மத்திய அரசிடம் கோரி இருக்கிறோம். மத்திய அரசிடமிருந்து பணம் கிடைத்தவுடன் விரைவில் வேலைகள் துவங்கப்படும்.

## அம்மாப்பேட்டை பேரூராட்சியின் நிதி நிலை.

122—(*வினா எண். 3998) திரு. யு. பி. மாதையன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி வட்டம், அம்மாப்பேட்டை பேரூராட்சிக்கு வருமானம் மிகக் குறைவாக இருப்பதால் சம்பளம் வழங்க முடியாமல் இருப்பதும் மக்களுக்குச் செய்ய வேண்டிய பணிகள் செய்ய முடியாமல் இருப்பதும் அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) மற்றும் (ஆ): அம்மாப்பேட்டை பேரூராட்சி தனது சொந்த முயற்சியால் விதிக்கப்படும் வரி வசூல்களைக் கொண்டு தன் பணியாளர்களுக்கு சம்பளம் வழங்கி வருவதுடன், மக்களுக்குச் செய்ய வேண்டிய அனைத்துக் கடப்பாடு பணிகளையும் நிறைவேற்றி வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 123, 124 மற்றும் 125 மாண்புமிகு கல்வி அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்பெறுகின்றன.

## நெடுஞ்சாலைகளில் மோட்டல்கள் அமைத்தல்.

126—(*வினா எண். 4008) டாக்டர் அ. பொன்னுசாமி, திரு. ச. பலாகிருஷ்ணன், திரு. அ. பெரியசாமி, திரு. யு. பி. மாதையன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போக்குவரத்துத் துறையின் மூலமாக நெடுஞ் சாலைகளில் ''மோட்டல்கள்'' அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) அதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா?

திரு. சு. முத்துசாமி: (அ) ஆம்.

(ஆ) அந்தந்த போக்குவரத்துக் கழகங்கள் தேவையான நிதி ஒதுக்கீடு செய்து கொள்கிறது.

(முற்பகல் 9-30)

டாக்டர் அ. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த நிதி ஆண்டில் எத்தனை மோட்டல்கள் கட்டப்பட இருக்கின்றன என்பதையும், அங்கு வரக்கூடிய பயணிகளுக்கு என்னென்ன வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதையும் அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, கடந்த 3 மாத காலத்திலிருந்து 6 மாத காலத்திற்குள்ளாக மொத்தம் 60 மோட்டல்களை தமிழகம் முழுவதிலும் கட்ட வேண்டுமென்று திட்டம் போட்டு, பல இடங்களிலே அந்த வேலைகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. பல இடங்களில் இடம் கிடைக்காத காரணத்தினால், காலதாமதம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, நாம் நினைக்கின்ற வேகத்திலே அந்தந்த இடங்களிலே இடம் கிடைக்குமானால், நாம் எல்லா இடங்களிலும் கொஞ்சம் கொஞ்சமாக மோட்டல்களைக் கட்டலாம். 100 கிலோ மீட்டருக்கு ஒரு மோட்டல் கட்ட வேண்டுமென்று முதலிலே முடிவெடுத்தோம். பின்னர், படிப்படியாக 50 கிலோ மீட்டருக்கு ஒரு மோட்டல் வீதம் கால கட்டத்திலே கட்ட வேண்டுமென்று அரசு திட்டமிட்டிருக்கிறது. ஒவ்வொரு மோட்டலிலும் அங்கே வருகின்ற பயணிகளுக்கு என்னென்ன அடிப்படைத் தேவைகளோ, அதாவது கழிவறைகள், உணவு அருந்துவதற்கான இடம், ஓய்வு எடுத்துக் கொள்ள இடம் போன்ற வசதிகளை வருகின்ற பயணிகளின் எண்ணிக்கைக்குத் தக்க அளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசு அவ்வாறு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

## திருக்கோயிலூர் அணைக்கட்டு சாலையிலுள்ள பாலம்.

127—(*வினா எண். 4024) திரு. தி. நா. கோ. அ. மனோகரன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநாவலூர் தொகுதி திருவெண்ணைநல்லூர் ஒன்றியத்தில் அரசூர்—ஆனத்தூர் இடையே திருக்கோயிலூர் அணைக்கட்டுச் சாலையில் உள்ள பாலம் பழுதடைந்திருப்பதால் அங்கே புதியதாக பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது துவங்கும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) பழுதடைந்திருந்த இப்பாலம் பழுது பார்க்கப்பட்டு, மீண்டும் போக்குவரத்து நல்ல முறையில் நடைபெற தற்பொழுது ஏதுவாக உள்ளது. எனவே புதிய பாலம் கட்டும் செயற் குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்.

128—(*வினா எண். 3908) திரு. ப. ந. இராமச்சந்திரன்:
மாண்புமிகு சத்துணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்
களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்
திற்கு ஒன்றியத்தில் உள்ள குழுக்கள் மூலம் காய்கறிகள் கொடுப்
பதில் தவறுகள் நடப்பது அரசு அறியுமா?

(ஆ) இதை மாற்றி அந்தந்தக் கிராம மையங்களுக்கு
அந்தந்த கிராம மக்கள் கொண்ட குழு அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : (அ) முதலமைச்சர்
குழந்தைகள் சத்துணவு திட்டத்திற்குக் கூட்டுறவு காய்கறி உற்
பத்தியாளர்கள் சங்கங்கள் மூலம் காய்கறி விநியோகம் செய்
யப்பட்டு வருகிறது. இவ்வாறு விநியோகம் செய்யப்படும் காய்
கறிகளின் தரம், விலை முதலியவற்றை ஒழுங்குபடுத்தவும்,
நடைமுறையில் ஏற்படும் சிக்கல்களை அவ்வப்போது தீர்க்கவும்
ஒன்றிய அளவில் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் மற்றும்
காய்கறி உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்க பிரதிநிதிகள் முதலி
யோரைக் கொண்ட குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

(ஆ) கிராம மையங்கள் அளவில் இத்தகைய குழுக்கள்
அமைக்கும் எண்ணம் தற்போது இல்லை.

மாண்புமிகு திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கு
வதற்குக் காய்கறிகள் கொடுப்பதற்குக் கூட்டுறவுச் சங்கங்கள்
அமைக்கப்பட்டு, அவை செயல்பட்டு வருவதாக மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் கூட்டுறவு
சங்கங்களில் இருப்பவர்கள் முதலமைச்சர் அவர்களின்
எண்ணம் ஈடேறாத வகையில் கிராம சத்துணவு மையங்களிலே
நல்ல காய்கறிகளை வழங்குவதில்லை. அதன் காரணமாக
உண்மையான இலட்சியமான குழந்தைகளுக்குச் சத்துணவு
போட வேண்டுமென்ற திட்டம் ஈடேறாத நிலை ஏற்படுகிறது.
ஆகவே, இதைக் களைவதற்கு வேறு என்ன மாதிரியான நடை
முறைகளை அரசு கொண்டிருக்கிறது என்பதை அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல எண்ணத்தின் அடிப்
படையில்தான் இந்தக் கூட்டுறவு காய்கறி உற்பத்தியாளர் சங்
கங்களின் மூலமாக வழங்க வேண்டுமென்ற திட்டத்தைக்
கொண்டு வந்தோம். பச்சையான காய்கறிகள், குறைந்த
விலையில் கிடைக்கும் என்பது அதன் நோக்கமாகும். ஆனால்,





'கறையான் புற்றெடுக்க, கருநாகம் குடி புகுந்ததுபோல்' என்ற
பழமொழிக்கு ஏற்ப, பயிரிடுவோர் சங்கம் துவக்கப்பட்டாலும்,
விற்பனையாளர்கள் என்று சில பேர் அதிலே நுழைந்துவிட்ட
காரணத்தினால், தரமான காய்கறிகளைத் தராமல், விலை
உயர்ந்த காய்கறிகளைத் தந்து கொண்டிருக்கிறார்கள் என்ற
செய்தி அரசுக்கு வந்து கொண்டிருக்கின்றது. அதன் மீது நட
வடிக்கை எடுக்க, உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவர்
அவர்களுக்குச் சொல்லி, அப்படிப்பட்ட இடங்களில், கூடியவரை
யிலே அத்தகைய வியாபார சங்கம் கையில் வந்துவிடாமல்
நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. அந்த மாதிரியான
சூழ்நிலை அதிகம் இருக்குமானால், அந்த இடங்களில் அவர்
களே காய்கறிகள் வாங்கிக் கொள்வதற்கும் வாய்ப்பு உரு
வாக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, இன்றைய நிலையில் இப்படிப்பட்ட தவறுகள்
நடைபெறாமல் தடுத்திட, இப்போது ஒவ்வொரு கிராமத்திலும்
இருக்கின்ற சத்துணவு மையங்களுக்கு அந்தந்த கிராமத்திலே
இருக்கின்ற அல்லது அந்தந்தப் பள்ளியிலே இருக்கின்ற ஆசிரி
யர்களை இணைத்து, அந்தக் கிராமத்தில் இருக்கின்ற மகளிர்
மற்றும் பெரியவர்களை வைத்து குழு அமைத்திட அரசு முன்
வருமா என்று அறிய விரும்புகிறன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, முறையாக குழந்தைகளுக்கு
உணவு வழங்கப்படுகிறதா, பாடம் நடத்தப்படுகிறதா என்பதைப்
பார்ப்பதற்கு, அந்தந்தக் கிராமத்தில் மகளிர் உள்ளடக்கிய குழு
போட தற்போது அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.
ஆனால், காய்கறிகள் வாங்குவதற்காகப் போடுவது என்பது,
வேறு ஏதாவது பிரச்னையைத் தூண்டி விடுவதற்கு அது வாய்ப்
பாக அமையும். இப்படிப்பட்ட குழுக்கள் போடப்பட்டால்,
தங்களுக்குப் பிரியப்பட்ட காய்கறிகளைப் போடும் நிலை வரு
மானால், அது சில இடங்களில் புதிய சிக்கல்களை உரு
வாக்க வாய்ப்பாக அமையும். ஆகவே இதையெல்லாம்
சிந்தித்துப் பார்த்துத்தான், கிராமங்களில் அப்படிப்பட்ட குழு
அமைப்பது என்பது அவ்வளவு சுலபமல்ல என்று தெரிய வந்
தது. எனவே ஒன்றிய வாரியாக இருக்கின்ற, அலுவல் சார்,
மற்றும் அலுவல் சார்பற்றவர்களை வைத்து, குழுக்கள் அமைக்
கப்பட்டு இருக்கின்றன. அந்தக் குழுக்களை அமைத்து, அந்தக்
குழுக்களின் மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டு
மென மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஆலோசனைகள்
வழங்கப்பட்டு இருக்கின்றன. சில மாவட்டங்களில் அந்தக்
குழுக்கள் அமைக்கப்பட்டு விட்டன. இன்னும் சில மாவட்டங்
களில் அமைக்கப்படவில்லை என்று தெரிய வருகிறது. எனவே
அவைகளையும் விரைவில் அமைத்த பிறகு, எங்களுக்குத்
தாக்கீது அனுப்பவேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்

களுக்கு நாங்கள் சொல்லியிருக்கிறோம்.
மாவட்டத்திலே இருந்து முழுமையாக நாங்கள் தாக்கீது பெற்
றிருக்கிறோம். மற்ற மாவட்டங்களில் இருந்து வந்து கொண்டு
இருக்கின்றன.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்
களே, சத்துணவுத் திட்டம் நல்ல நோக்கத்தோடு, லட்சியத்
தோடு ஆரம்பிக்கப்பட்ட திட்டம். ஆனால் இந்தக் காய்கறி
வாங்குகின்ற சங்கங்கள் இருக்கின்ற காரணத்தாலே இந்தத்
திட்டத்திற்குக் கூட அவப்பெயர் ஏற்படுகிறது என்பதை
உணர்ந்த காரணத்தால்—குற்றச்சாட்டு அல்ல, உணர்ந்த
காரணத்தால் என்று சொல்கிறேன்—கூட்டுறவு காய்கறி உற்பத்தி
யாளர் சங்கத்திலேயிருந்து பெரும்பாலும் காய்கறி வாங்கப்
படுவதில்லை. வியாபாரிகள் உள்ளே புகுந்துவிடுகிறார்கள். இடைத்
தரகர்கள் உள்ளே புகுந்து விடுகிறார்கள். இது போதாமைக்கு.
அந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் செயலாளர், போன்ற மற்ற
வர்கள் எல்லாம் சைக்கிளிலே கொண்டுபோய் போடுவதற்கு
ஆட்களைப் போடுகின்ற காரணத்தால் கொஞ்சம் கொஞ்ச
மாக அந்தக் காய்கறிகளுடைய விலை ஏறிவிடுகின்றது.
சாதாரண மார்க்கெட்டிலே வாங்குவதற்கும், இதற்கும்
விலையில் மிக அதிகமாக வித்தியாசம் இருக்கின்றது,
தவறுகளும் அதிகமாக நடைபெறுகின்றன. எனவே இதை
உடனடியாக கலைப்பதற்கு அரசாங்கத்திற்கு எந்தவிதமான
யோசனையும் வேண்டாம். அந்தந்த ஊரிலே நிறைய காய்
கறிகள் கிடைக்கின்றன. அவர்கள் அதை வாங்கிக் கொள்
வார்கள். எனவே இதைக் கலைப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : பேரவைத்
தலைவர் அவர்களே, ஏற்கனவே அப்படித்தான் அவர்கள்
காய்கறிகளை வாங்கவேண்டும் என்று சொல்லியிருந்தோம்.
அப்படிக் காய்கறிகளை அவர்கள் வாங்கியதிலே சில தவறுகள்
இருப்பதாக அந்தந்த ஊரிலேயிருந்து சிலர் நமக்கு
அவ்வப்போது தாக்கீதுகள் அனுப்பிக்கொண்டு இருந்த காரணத்
தாலே, அதன் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அரசு
ஆங்காங்கு ஆய்வு செய்து பார்த்ததில், சில தவறுகள் நடை
பெறுவதற்கு அது வாய்ப்பை உருவாக்குகிறது என்பது
தெரிந்ததற்குப் பின்னாலே, இந்தக் காய்கறி உற்பத்தியாளர்
கூட்டுறவுச் சங்கத்தை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்
தாலே, அரசு நல்ல எண்ணத்தோடு செயல்பட்டது. மேலும்
கூட்டுறவுத் துறைக்கு ஒரு வலிவை வழங்க வேண்டும் என்றும்,
கூட்டுறவுத் துறையின் மூலமாக வருகின்ற காய்கறிகள் விலை
யிலே குறைவாக இருக்கும், தரமாகவும் சிறப்பாகவும் இருக்கும்
என்ற வகையில்தான் அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்
பட்டது.



ஆனால் சில இடங்களில் கூட்டுறவு காய்கறி சங்கங்கள் நல்ல முறையில் நடைபெறுகின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், மதுரை மாவட்டத்தில், சோழவந்தான் பகுதியில் இருக்கிற காய்கறி உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தை நானே நேரிலே பார்த்து இருக்கிறேன். அங்கே குறைந்த விலையிலே மட்டுமல்ல, பச்சைப் பசேல் ஆக இருக்கிற காய்கறிகளை வழங்கிக் கொண்டு இருக்கிறார்கள். அது போல் திருச்சி மாவட்டத்திலே அங்கநல்லூரில் உள்ள காய்கறி கூட்டுறவு உற்பத்தியாளர் சங்கம் மிகச் செம்மையாகச் செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது. அவர்களும் வழங்கிக் கொண்டு இருக்கிறார்கள். அதுபோலவே நாகப்பட்டினம் போகின்றபோது, அங்கேயும் பார்த்தேன். எனவே சில இடங்களில் அந்தக் கூட்டுறவு காய்கறி உற்பத்தியாளர் சங்கங்கள் நல்ல முறையில் செயல்படுகின்றன. ஆனால் பல இடங்களில் அவ்வளவு சிறப்பாக நடைபெறவில்லை. உதாரணத்திற்கு மூன்றை மட்டும் நான் சொல்கிற போது, அம்மையார் அவர்கள் விரல்களைக் காட்டுகிறார்கள். விளக்கமாக அம்மையார் அவர்கள் தனிக் கேள்வி போட்டால், எந்தெந்த இடங்களில் நல்ல காய்கறிகள் தரப்படுகின்றன என்ற விவரங்களைச் சொல்ல முடியும். எனவே எல்லா இடத்திலேயும் குற்றம் நடைபெறுகிறது என்று சொல்வதற்கு இல்லை. ஆங்காங்கே சில குற்றங்கள் நடைபெறுவது எல்லோரும் குற்றம் செய்வதைப் போன்ற ஒரு உணர்வை ஏற்படுத்துகிறது. ஒரு பானை சோற்றிலே மூன்று கருப்பு அரிசி இருந்தால் எப்படி அது தெளிவான வெள்ளைச் சாதத்தை கருப்பாகக் காட்டிவிடுகிறதோ, அதைப்போல, சிலர் செய்கிற தவறுகள் பெரிதாக நமக்குத் தெரிகிறது. ஆகவே அதைக் களைவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. அதைக் களைய முடியவில்லை என்ற சூழ்நிலை வருகின்றபோது, அதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

திரு. அ. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, சென்னை போன்ற பெரு நகரங்களில் நடத்தப்படுகிற இந்த உணவு மையங்களுக்கு, அதனுடைய அமைப்பாளர்களே, தினந்தோறும் காய்கறிகளை மார்க்கெட்டிலே வாங்குகிறார்கள். அதிலே நல்ல தரமான காய்கறிகளைப் பயன்படுத்த முடியாமல் கூட போய்விடுகிறது. தற்போது அரசு ஆங்காங்கே காய்கறி விற்பதற்கான கடைகளைத் திறந்திருப்பதாகத் தெரிகிறது. அங்கே அவர்கள் தரமான காய்கறிகளை விற்பதால், இந்த அமைப்பாளர்கள் நேரடியாக அங்கே சென்று காய்கறிகளை வாங்கி, பிள்ளைகளுக்குச் சமைத்துப் போட அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, கிராமங்களில் காய்கறி உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களை ஆரம்பித்து விட்டு காய்கறி விற்பனையாளர்கள் உள்ளே புகுந்துவிட்டார்கள். சென்னை போன்ற நகரங்களில்

காய்கறி உற்பத்தியாளர்கள் சங்கம் துவங்குவது என்பது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல. ஆகவே வெளியிலே இருந்து வருகிற காய்கறிகளை வாங்க ஏற்பாடு செய்தால், அவர்கள் வாங்கி விற்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். வாங்கி விற்கின்ற நிலை வருமானால் வெளியிலே இருப்பவர்கள் விற்பதைவிட சில நேரங்களில் நிறைய பேர்கள் வேலை செய்வ தால், அதையெல்லாம் இதிலே வைத்து, அதிக விலைக்கு விற்க வேண்டிய காலக்கட்டாயம் ஏற்படும். அந்தக் குழந்தைகளுக்கு வழங்கப்படுகிற காய்கறிகளுடைய அளவும் குறைவதற்கு வாய்ப்பு ஏற்படும்,

(முற்பகல் 9–40)

திருமதி டி. யசோதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டத்திற்கு காய்கறிகளை கூட்டுறவுத் துறை மூலம்வாங்குவது குறித்து அமைச்சருடைய விளக்கம் பலயிடங்களில் நிறைவேற்றப்பட்டதாக இருந்தாலும் சிலயிடங்களில் நிறைவேற்றப்பெறவில்லை என்பதைச் சுட்டிக் காட்டினார்கள். ஒரு பானை சோற்றுக்கு 3 கருப்பரிசி என்று சொன்னார்கள். அப்படி சொல்வதைக் காட்டிலும் ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி விஷம் சேர்ந்தாற்போல் என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும், ஏன் என்று சொன் னால் என்னுடைய தொகுதியில் 2 ரூபாய்க்கு வெளி மார்க் கெட்டில் வாங்குகிற காய்கறியை 6 ரூபாய் கொடுத்து கூட்டுறவுத் துறை மூலம் வாங்குவதாக எனக்குப் புகார் கொடுத்து இருக் கிறார்கள். இந்தக் கூட்டுறவு துறை மூலமாக பலயிடங்களில் சிறப்பாக நடைபெறுகிறது. சிலயிடங்களில் சிறப்பாக நடை பெறவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பறக்கும் படை போல் ஒரு குழுவை அமைத்து அவர்கள் இது போன்ற குற்றம் நடைபெறாமல் தடுக்க வழி வகை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குடம் பாலில் ஒரு துளி விஷம் சேர்ந்தால் அந்தப் பால் முழுவதையும் நாம் அருந்தவே முடியாது. ஒரு பானை சோற்றில் 3 கருப்பரிசி இருந்தால் அந்த 3 கருப்பரிசியை எடுத்துப் போட்டுவிட்டு இந்தச் சத் துணவை நாம் சாப்பிடலாம். ஆக அது சரியாக வராது. அம்மையார் சொன்ன கருத்திலேயே விளக்கம் இருக்கிறது. ஆகவே தவறுகள் எங்கேயோ சிலயிடங்களில் நடைபெறுகின்றன என்பதற்காக எல்லோரையும் நாம் நசுக்குவது முறை அல்ல. தவறுகள் நடைபெறுகின்ற இடங்களில் அத்தவறுகளை களை வதற்கு நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.



மதுரை இராமநாதபுரம் மாவட்டங்களில் சத்துணவுக் கூடங்களில் திருட்டு.

129—(*வினா எண். 658) திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு சத்துணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் விருது நகர், வத்திராயிருப்பு, திருவில்லிபுத்தூர், மேலூர், திருநகர், திருப்பரங்குன்றம் மற்றும் பல இடங்களில் உள்ள சத்துணவு கூடங்களில் பூட்டுகளை உடைத்து சுமார் 2 இலட்சம் பெறு மான பொருட்களைத் திருடி சென்றதாக 1985 ஜனவரியில் அரசுக்குத் தகவல் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:
(அ) 1985 ஆம் ஆண்டில் ஜனவரி மாதத்தில் பூட்டை உடைத்து இரண்டு இலட்சம் பெறுமானமுள்ள பொருட்கள் திருடிச் சென்றதாக தகவல் ஒன்றும் இல்லை.

1985 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில், மதுரை மாவட்டத்தில் மேலூர், திருநகர், திருப்பரங்குன்றம் ஆகிய ஊர்களில் உள்ள சத்துணவுக் கூடங்களில் ரூ. 1,391 பெருமான முள்ள உணவுப் பொருட்களும், காமராஜர் மாவட்டத்தில் பந்தல்குடி, சத்திரரெட்டியபட்டி, சஞ்சீவிநாதபுரம், ஸ்ரீவில்லி புத்தூர், முகவூர் ஆகிய ஊர்களில் உள்ள சத்துணவுக் கூடங் களில் ரூ. 2,237.20 பெறுமானமுள்ள உணவுப் பொருள்கள் திருடிச் சென்றதாகவும் தகவல் வந்தள்ளது.

(ஆ) மதுரை மாவட்டத்தில் நடைபெற்ற மூன்று திருட்டுக் களிலும் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணையில் உள்ளன. காமராஜர் மாவட்டத்தில் நடைபெற்ற திருட்டுக்கள் மீது காவல் துறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு ரூ. 770 பெறுமானமுள்ள பொருட்கள் மீட்கப்பட்டன.

திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் வாசுதேவநல்லூர் தொகுதியில் உள்ள பல்வேறு சத்துணவுக் கூடங்களில் அரிசி, பருப்பு, எண்ணெய் போன்றவைகள் திருடு போய் இருக்கின்றன. பல வழக்குகள் தொடரப்பட்டு இருக்கின்றன. முழுமையாக 60 சதவீதம் சத்துணவுக் கூடங்களில் தவறுகள் நடை பெறுகின்றன. ஆகவே, தமிழகம் முழுவதும் ஒட்டுமொத்தமாக ஆங்காங்கு இருக்கக்கூடிய வட்டாட்சியாளர்கள்' ஆணையாளர் களுக்கு அப்படி தவறு செய்பவர்களைப் பற்றி பரிசீலித்து அவர்களை சஸ்பெண்டு செய்யக்கூடிய அதிகாரத்தை வழங்குவீர் களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, ராமநாதபுரம் மாவட்டத்தில் நடைபெற்ற குற்றங்களைப் பற்றிய கேள்வி இது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருநெல்வேலி மாவட்டத்தைப் பற்றி சொல்கிறார்கள். தனியாக கேள்வி போட்டால் பதில் சொல்வதற்கு இயலும். தவறுகளை களை வதற்கு ஆங்காங்கு இருக்கின்ற வட்டாட்சியாளர்களுக்கு, அரசு அதிகாரிகளுக்கு தற்போது அதிகாரம் இருக்கிறது. அப்படிப் பணியில் இருப்பவர்கள் தவறு செய்தால் அவர்களை தற்காலிகமாக பணி நீக்கம் செய்யலாம் என்று முன்பு இருந்தது. தற்போது சஸ்பெண்டே வேண்டாம், தவறு செய் தார்கள் என்றால் உடனடியாக வேலையிலிருந்து எடுத்துவிட லாம் என்று இன்றைக்கு நாங்கள் அவர்களுக்கு இங்கிருந்து ஆணை வழங்கியிருக்கிறோம்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிச் சத்துணவு மையங்களில் திருடுகள் போகிற விஷயங்களில் உண்மையில் சில நடைமுறைகளில் அந்த அமைப்பாளர்களுக்குக் குறைபாடுகள் ஏற்படுகின்றன. அரிசி, எண்ணெய் குறைந்து இருக்கிற போது அதை சரி கட்டுவதற்காக போலீஸில் போய் புகார் கொடுப்பது உண்மையில் நிதர்சன மாக இருந்துவருகிறது. அதேபோல் முந்தைய கேள்வியில் குற்றச்சாட்டுகளை குறிப்பிட்டதைப் போல இவைகளை எல் லாம் ஒட்டு மொத்தமாக நீக்குவதற்கு இப்போது இருக்கிற அமைப்பாளர்கள் குழந்தைகளுக்குச் சத்துணவு கொடுப்ப தற்கும், அவர்களைப் பராமரிப்பதற்கும் வைத்துக் கொண்டு ஊராட்சி ஒன்றிய அளவில் ஒரு இடத்தில் மொத்தமாக சமையல் செய்து அதை அந்த ஊராட்சி மன்றத்தில் இருக்கின்ற மையங்களுக்கு விநியோகிப்பது பற்றி அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லி இருக்கிற யோசனையை நடைமுறையிலே நாம் செயல்படுத்துவதற்கு முடியாது என்று கருதுகிறேன். காரணம், ஆங்காங்கு சத்துணவுக் கூடங்களில் எவ்வளவு குழந்தைகள் வருகிறார்கள் என்பதைப் பார்த்து, 10.30 மணிக்கு மேல் அவர்களுக்கென்று, அரிசி, தேவைப்படுகிற பருப்பு, காய்கறி வழங்கி, சமைத்து, 12 மணிக்கு அவர்களுக்கு உணவு பரிமாற வேண்டியிருக்கிறது. ஆனால் ஒரே இடத்தில் சமைத்து, அவர்களுக்குக் கொண்டுபோவது என்று சொல்கிற போது, நாம் எல்லா இடத்திலேயும் வந்திருக்கிற குழந்தை களினுடைய அளவு எவ்வளவு என்பதைத் தெரிந்து கொண்ட தற்குப் பிறகு சமைத்து எடுத்துச் செல்வது என்பது முடியாத



காரியம். எனவே, இதிலே நடைமுறையில் சிக்கல்கள் ஏற் படும் என்பதனால், இத்தகைய வழிமுறையைப் பின்பற்றுவது சுலபமாக இருக்காது. தவறுகள் நடைபெறுகிறது என்று சுட் டிக்காட்டி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். மூட்டைப் பூச்சிக்குப் பயந்து வீட்டைக் கொளுத்தி விட முடியாது. ஆகவே, ஏதோ ஒரு சில இடங் களிலே தவறு நடைபெறுகிறது என்பதற்காக, அந்தத் திட்டத் தையே வேறு விதமாக மாற்றி அமைப்பது என்பது முடியாத காரியம்

வீட்டு வசதி வாரியப் பணிகள்.

130—(*வினா எண் 2775) திரு. அ. பாலுசாமி : மாண்பு மிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை வீட்டுவசதி வாரியம் மூலம் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள், அந்தத் திட்டமே இல்லை என்று சொல்கிறார்கள். 1980–81 ஆம் ஆண்டிலே 100, 100 ரூபாய் பணம் கட்டி, 1,000 நபர்கள், பேங்கிலே கட்டி, டிராஃப்ட் வாங்கி, கன்சர்ன்ட் டிபார்ட் மென்டுக்கு அனுப்பி, பிறகு அது சாங்ஷன் செய்யப்பட்டு, அங்கே நிலங்கள் கூட, 78 ஏக்கர் கையகப்படுத்தக்கூடிய நிலைமை இருக்கிறதே, அதுவும் கூட பாஸ் ஆகிவிட்டது என்று கருதுகிறேன். இப்படி இருக்கும்போது, இல்லை என்று சொல்கிறார்களே, இது நியாயமா ? எனவே, அதை மறு பரிசீலனை செய்து, விரைவிலே இந்தத் திட்டத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, வீடு உடனடியாகக் கட்டுகின்ற திட்டம் இல்லை என்று தான் குறிப்பிலே இருக்கிறது. பொது வாக, நில எடுப்பு நடவடிக்கைகள் இப்போது துவங்கி இருக் கின்றன. அதற்காக 78.44 ஏக்கர் நிலம், 4 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் அளவில் வாங்கி இருக்கிறது. இடையிலே எதிர்த்து யாரும் நீதிமன்றம் செல்லா விட்டால், இரண்டு ஆண்டுக் காலத்தில் விரைவாகத் திட்டம் துவங்கப்பட அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. கூடலூர் இ. வி. வேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக, நகர்ப்புறங்களிலேதான் வீடு கட்டிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, ஒன்றியத் தலைநகரங்களிலே கட்டுகிற திட்டங்கள் அரசினுடைய பரிசீலனையில் உள்ளதா? அப்படி இல்லையெனில், கிராமப்புறங்களிலே ரூரல் ஹவுசிங் சொசைட்டி என்று சொல்கிறார்களே, அந்த வகையில், புதியதாக கூட்டுறவு மூலம் வீடு கட்டுகிற திட்டங்களை இந்த அரசு உருவாக்கித் தர விரும்புகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுவசதி வாரியத்தைப் பொறுத்தவரையில், நகரங்கள், வட்டத் தலைநகரங்கள், சில இடங்களிலே பெரிய நகரத்திற்குப் பக்கத்திலே இருக்கிற ஊராட்சி மன்ற அளவில் வீடு கட்டுகின்ற திட்டங்கள் உள்ளன. மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தினுடைய அடிப்படையில், கிராமத்தைப் பொறுத்தவரையில் கிராமக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தின் மூலமாக இன்றைக்கும் வீடு கட்டுகின்ற திட்டங்கள் உள்ளன.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியம் ஆரம்பித்து, இதுவரையிலும் தமிழகத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ள வீடுகள் எத்தனை? அதற்காக செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்ற விவரத்தை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1961-ஆம் ஆண்டு நம்முடைய வீட்டு வசதி வாரியம் துவங்கப்பட்டு, 30—9—1985 முடிய, கிட்டத்தட்ட 1 இலட்சத்து 19 ஆயிரத்து 920 வீடுகள் கட்டி இருக்கிறோம். இதுவரை செலவிடப்பட்டுள்ள தொகை ரூ. 320 கோடியே 16 இலட்சம் ரூபாய் ஆகும்.

திரு. வி. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியம் என்னுடைய தொகுதியான வால்பாறை—மலைப்பாங்கான பகுதி—அதில் வீடுகள் கட்டித் தர முன்வருமா? அதிலும் குறிப்பாக நரிக் குறவர்களுக்கு வீடுகள் கட்டித் தருவதற்கு முன்வருமா என்று அறிய ஆவலாக இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிற அனைவருக்கும் வீடு கட்டிக் கொடுக்கின்ற திட்டத்தை மாண்புமிகு புரட்சித் தலைவர் தலைமையில்



தமிழக அரசு நிறைவேற்ற இருக்கின்றது என்று ஏற்கனவே சொல்லி இருக்கிறோம். வால்பாறை மலைப் பாங்கான பகுதியாக இருப்பதால், நில எடுப்பு நடவடிக்கைகள் துவங்கப்பட்ட பிறகு, வீட்டு வசதி வாரியம் வீடு கட்டுவது பற்றி பரிசீலனை செய்யும்.

திரு. வி. பி. சிந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கொள்கைப் பிரச்சினையை கிளப்ப நான் விரும்புகிறேன். அதற்கு அமைச்சர் அவர்களிடமிருந்து நான் பதில் எதிர்பார்க்கிறேன். வீட்டு வசதி வாரியம் வீடு கட்டுகிற வேலையை மட்டும் செய்து, குடிதண்ணீர், டிரெயினேஜ், முதலியவற்றை எல்லாம் அதற்கு போதுமான அமைப்புகள், அதற்குப் போதுமான கருவிகள், போதுமான தொழிலாளர்கள், அல்லது ஊழியர்களை வைத்து இருக்கக் கூடிய இலாக்காக்களுக்கு விட்டு விட்டு, வீடுகட்டும் திட்டத்தை மட்டும் அமலாக்க அரசுக்கு ஏதேனும் ஆலோசனை உள்ளதா? அப்படி செய்யாத காரணத்தினால், மிகப் பெரிய சிக்கல் ஏற்படுகிறது. குடிதண்ணீர் கிடைக்கவில்லை. அங்கே விளக்கு எரியவில்லை. அங்கே மற்ற எந்த வசதியும் செய்யவில்லை. அதை ஒப்படைக்க வேண்டும் என்று சொல்கிறபோது, சென்னை நகரிலே நகராட்சி அதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. எங்களுடைய ஸ்டேண்டர்டுக்கு அந்த ரேட் இல்லை. எங்களுடைய ஸ்டேண்டர்டுக்கு அந்த டிரெயினேஜ் இல்லை என்று சொல்லி மறுத்து விடுகிறார்கள். மாதக்கணக்கிலே, ஆண்டுக் கணக்கிலே அவர்கள் அவதியுற்ற நிலையிலேகஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதைத் தவிர்ப்பதற்கு வீடு கட்டுவதை மட்டும் தனியாக வீட்டுவசதி வாரியம் ஏற்று, மற்ற பொறுப்புகளை, பிற இலாக்காக்களிடம் ஒப்படைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9—50)

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவர் அவர்களே, இந்த யோசனையை ஏற்கனவே ஒரு மாதத்திற்கு முன்னால் நாங்கள் அதிகாரிகள் மத்தியிலே பேசியிருக்கிறோம். அதற்கு பிறகு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரிடம் பேசியிருக்கிறோம். இது நல்ல யோசனை. ஏற்கனவே அரசு இதைப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திரு. கூடலூர் இ. வி. வேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவருடைய அரசு திட்டங்களைக் கொண்டுவருவதிலே, என்றைக்குமே கிராமப்புற மக்களுக்காகக் கொண்டு வருவதிலே, மிகவும் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள் என்பது மாண்புமிகு அமைச்சர்

அவர்களுக்குத் தெரியும். இந்தத் திட்டம் ஒன்றியங்களின் தலைநகரங்களிலே விஸ்தரிக்கப்படுமா என்று கேட்டதற்கு, இது வட்டங்களுக்கும், நகரங்களுக்கும் உண்டு என்று சொன்னார்கள். ஒன்றியங்களிலே கிராமப்புற ஹவுசிங் சொசைட்டி கட்டுகிறது என்று சொன்னார்கள். நான் சார்ந்திருக்கிற செங்கம் வட்டத்திலே, இரண்டே இரண்டு ஹவுசிங் சொசைட்டிதான் இருக்கிறது. இப்போது புதிய தாக துவங்கப்படும் என்று சொல்கிறார்கள். அப்படிப் புதியதாக துவக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவர் அவர்களே, பொதுவாக துவக்குகிறபோது, பொதுமக்கள் அதிகமாக எங்கு இருக்கிறார்களோ, அந்த அடிப்படையில்தான் துவக்குகிறோம். அதைப் பார்த்து, நகரங்களிலும், வட்டங் களிலும்தான் அதிகமாக துவக்கவேண்டியிருக்கிறது. படிப்படி யாக மற்ற இடங்களுக்கும் விஸ்தரிக்கப்படும் என்று தான் சொன்னேன்.

வீட்டுவசதி சொசைட்டியைப் பொறுத்தவரையில், தமிழகத் திலுள்ள கிராமங்களில் ஒரு இடம் இல்லாமல், ஒவ்வொரு வட்டத்திலும் ஏற்படுத்தினால், அந்த வட்டத்தைச் சார்ந்த எல்லா ஊர்களுக்கும் பொருந்துமாறு அது அமைகிறது. ஆகவே, எல்லா கிராமங்களுக்கும் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வாய்ப்பு இருக்கிறது.

131—(* வினா எண் 3917) திரு. மா. கதிர்வேலு : மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாலாஜா பேட்டையில் ஐ. யூ. டி. பி. திட்டத்தில் வீடுகள் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணி எப்பொழுது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. என். நல்லுச்சாமி : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. மா. கதிர்வேலு : தலைவர் அவர்களே, வாலாஜா பேட்டையில் 35 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது அரசின் குறிப்பில் உள்ளதா? அதில் வீடு கட்டுகின்ற திட்டம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஐ.யு.டி.பி.-ல் வீடுகள் கட்டும் திட்டத்தில் வீடுகள் கட்டப்படவில்லை என்று சொன்னார்கள். ஏற்கனவே ஐ.யு.டி.பி. திட்டத்தின் மூலம் 7 இலட்சம் செலவில் நிலம் வாங்கப்பட்டு, 1.21 இலட்சமாக அதிகரித்து, பிறகு 8.21 இலட்சத்திற்கு வந்திருக்கிற காரணத்தால், நிதி அதிகமான காரணத்தினால், 15-12-1984 அன்று நகராட்சி வீட்டுவசதி வாரியத்திடம் ஒப்படைத் திருக்கிறது. அதற்குப் பிறகு வீட்டுவசதி வாரியம் பரிசீலனை செய்து, 11.63 ஹெக்டேர் நிலம் வாங்கி அதற்குப் பிறகு 284.44 இலட்சம் செலவில் வீடுகளைக் கட்டுகின்ற திட்டத்தை உருவாக்கி, அதை விரைவாக செயல்படுத்த இருக்கிறோம். திட்டம் அந்த அளவில் தயாராக இருக்கிறது. 1986 ஏப்ரலில் துவங்கப்பட முடிவெடுத்திருக்கிறோம்.

திரு. மா. கதிர்வேலு : தலைவர் அவர்களே, வீடுகள் கட்டுவதற்கான திட்டத்தை அரசு எடுத்துக் கொண்டதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய ராணிப்பேட்டைத் தொகுதியில் ஏறத்தாழ 20,000 தொழிலாளர்கள் சிப்காட் தொழிற்பேட்டையில் பணியாற்றுகிறார்கள். அவர்கள் ரூ. 200 முதல் ரூ. 1,000 வரை வாடகை கொடுத்து அவதிப்படுகிறார்கள். ஆகவே அந்தத் தொழிலாளர்கள் நலன் குறித்து, அந்தப் பகுதியில் வீடு கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவர் அவர்களே, நிதிநிலையை அனுசரித்து, அரசு பரிசீலனை செய்யும்.

திரு. ஆர். ஈஸ்வரன் : தலைவர் அவர்களே, கிராமப் புறங்களில் வீடு கட்டிக் கொடுப்பதற்கு முன்பிருந்த ரூ. 4,000-ஐ இப்போது ரூ. 10,000 ஆக உயர்த்துவதற்கு அரசிடம் எண்ணம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : அரசு அதைப் பரிசீலனை செய்வதற்கு இருக்கிறது.

132—(*வினா எண் 4078) திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்காசி நகரில் 200 ஏக்கர் நிலப்பரப்பில் புதிய காலனி அமைக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : (அ) ஆம்.

(ஆ) தென்காசியில் 231.17 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம்
செய்யும் திட்ட ஏற்பாடு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம்
உள்ளது. நில ஆர்ஜிதப் பணி முடிந்தபின் வாரியத்தின் மூலம்
வீடுகள் கட்டி முடிக்கப்படும்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : தலைவர் அவர்களே,
தென்காசி நகரம் எனக்குத் தெரிந்த வரையிலே கடந்த 30,35
ஆண்டுகளாகவே எந்தவித முன்னேற்றமும் இல்லாமல் இருந்து
பல தொழில்கள் வந்து இன்றைக்கு அங்கே வீட்டுவசதி இல்லாமல்
வாடகை அதிகமாகக் கொடுக்க வேண்டிய நிலை இருக்கிறது.
இந்த 200 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்ய வேண்டுமென்ற
புரப்போசல் 10 வருடமாகவே இருந்து வருகிறது. அதை
எடுத்து வீடுகளைக் கட்டுவதற்கு அரசு டைம்டேபிள் மாதிரி
ஏதாவது போட்டு குறிப்பிட்ட கால வரையறைக்குள் அந்த
வீடுகளைக் கட்டி முடிப்பார்களா ?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவர் அவர்களே,
தென்காசியைப் பொறுத்தவரையில் ஏற்கனவே 34 குடி
யிருப்புகள் 4 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டி
யிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் சொன்ன இந்த
நிலத்தைப் பொறுத்த வரையில் 18.50 ரூபாய் செலவில் 231
ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்வதற்காக நடவடிக்கை எடுக்க
மாவட்ட வருவாய் அதிகாரியிடம் அது இருக்கிறது. விரைவாக
வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : தலைவர் அவர்களே,
அரசு இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும்போது என்ன
அடிப்படையில் யாருக்கு அந்த வீடுகள் ஒதுக்கப்படும் ? அரசு
ஊழியர்களுக்கு ஒதுக்கப்படுமா அல்லது பொது விற்பனை மூல
மாக அனைவருக்கும் கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவர் அவர்களே,
நில ஆர்ஜிதம் முடிந்ததற்குப் பிறகு பொருளாதாரத்தில்
நலிந்த பிரிவினருக்காக 1,350 குடியிருப்புகளும், குறைந்த
வருவாய் உள்ளவர்களுக்கு 1,125 குடியிருப்புகளும், நடுத்தர
மற்றும் உயர் வருவாய் உள்ளவர்களுக்கு 2,025 குடியிருப்பு
களும் ஆக மொத்தம் 4,500 குடியிருப்புகள் 1,650 இலட்ச
ரூபாய் செலவில் கட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பது பற்றி
குறிப்பில் உள்ளது.

THIRU T. VENKATA REDDY : Hon'ble Speaker Sir, while constructing houses for the people, we find that shopping complex and school facilities are not being provided for in all the colonies which are now being constructed. I want to know whether the Hon'ble Minister will come forward to provide shopping complex and school facilities in the colonies constructed and to be constructed by them?

THE HON. THIRU N. NALLUSAMY : Sir, we will consider this recommendation.



ஆறு, ஏரி, குளங்களில் மீன் வளர்ப்பு.

133—(*வினா எண் 3188) திரு. எஸ்ல. இராசமாணிக்கம் :
மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆறு, ஏரி, குளங்களில் மீன் வளர்ப்புத் திட்டம்
அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : (அ) ஆம்.

(ஆ) (i) தமிழ்நாட்டில் மீன் வளர்ப்பை அதிகரிக்கும்
பொருட்டு, 11 மாவட்டங்களில் மீன் வளர்ப்போர் மேம்
பாட்டு முகமைகள் மூலம் குறைந்த நீர்ப்பரப்பு கொண்ட
குளங்கள் மற்றும் குட்டைகளில் விஞ்ஞான ரீதியிலான கலப்பின
மீன்வளம் பெருக்கும் திட்டம் செயல்பட்டு வருகிறது.

(ii) ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ், நான்கு மாவட்
டங்களில் விவசாயம் மற்றும் கால்நடை மானியத்தின் கீழ்,
ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியக் குளங்களில் மீன்
வளர்ப்பு திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

(iii) இதைத் தவிர, மதுரை மற்றும் தென்னாற்காடு
மாவட்டங்களில் நீர்ப்பரப்பில் தீவிர உள்நாட்டு மீன் உற்பத்தி
மற்றும் விற்பனைத் திட்டம் ஒன்று முன்னோடித் திட்டமாக
செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி, மீன் இருப்பு மற்
றும் மீன் பிடிப்பு ஆகியவற்றை மீன்துறையே மேற் கொள்ளும்.
மீன் பிடிப்பு மட்டும் மீனவர் கூட்டுறவு சங்கங்களின் உறுப்
பினர்களான மீனவர்களைக் கொண்டு, பங்கீட்டு முறையில்
நடத்தப்படுகிறது.

திரு. தி. அன்பழகன் : தலைவர் அவர்களே, மீன் வளர்ப்பு
மேம்பாட்டுத் திட்டத்திலே ஏரி, குளங்களிலே 10 ஆண்டுகளுக்கு
என்று தரப்படுகிற குத்தகை முறையை 2 அல்லது 3 ஆண்டு
களுக்குக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : தலைவர்
அவர்களே, தமிழகத்திலே மிக ஆழமாக உள்ள குளங்கள்
பல்லாயிரக்கணக்கில் இருக்கின்றன. மீன் வளர்ப்போர் மேம்
பாட்டு முகமைகள் மூலம் 3,300 குளங்கள் தேவைப்படுகின்றன.
மத்திய அரசு 10 ஆண்டுகள் மீன் வளர்க்க வேண்டுமென்று
சொல்கிறார்கள். ஆழமாக உள்ள குளங்கள் பொதுப்பணித்
துறையிலும் உள்ளாட்சி நிறுவனக் குளங்களிலும் வருவாய்த்
துறை குளங்களிலும் இருக்கிற காரணத்தினால் கடன் வாங்கி
பழுது பார்க்க வேண்டிய அவசியம் இல்லை என்பதால் 3

ஆண்டுகளுக்கு அதைக் குறைத்தால் 3,300 பேர்
குளங்களில் 9,900 பேர்கள் பயன் பயனடையும்
உருவாகும் என்றுமத்திய அரசைக் கேட்கலாம் என்ற சூழ்நிலை அடையும்
அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. யோசனை

(முற்பகல் 10—00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதி
யுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

பூம்புகார் பகுதி மீனவர்களுக்கு தேசிய கூட்டுறவு
வளர்ச்சிக் கடன்.

134—(*வினா எண் 3814) திரு. என். விஜயபாலன் :
மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்கண்ட
வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கடன் கேட்டு பூம்புகார்
மற்றும் சந்திரபாடி பகுதி மீனவர்களிடமிருந்து அரசுக்கு விண்
ணப்பங்கள் வரப் பெற்றுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது இக்கடன் வழங்கப்படும் ?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : (அ) ஆம்.

(ஆ) பரிசீலனையில் உள்ளது.

திரு. என். விஜயபாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, பூம்புகார் பகுதி மீனவர்களிடமிருந்து 6—8—1983
ஆம் தேதியன்று ரூபாய் 4 இலட்சம் கடன் வழங்க வேண்டு
மென்றும், அதைப் போன்று சந்திரபாடி பகுதி மீனவர்களிட
மிருந்து 3,45,000 ரூபாய் கடன் வழங்க வேண்டுமென்றும்
கேட்டு விண்ணப்பம் அனுப்பப்பட்டிருக்கிறது. ஆனால் இது
வரையில் வழங்கப்படாததற்குக் காரணம் என்ன என்பதையும்
இந்தக் காலதாமதத்திற்குக் காரணம் என்னவென்பதையும்
அமைச்சரவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு
பேரவைத் தலைவரவர்களே, பூம்புகார் கிராமத்தைச் சேர்ந்த
காவிரிப்பூம்பட்டினம் கடல் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின்
100 உறுப்பினர்களுக்கு தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம்
நிறுவனத் திட்டத்தின் கீழ் வலைகள் வாங்குவதற்கு ரூ. 4.00
இலட்சம் நிதியுதவி கோரும் விண்ணப்பத்தை 1983—84 இல்
மீன்துறை இயக்குநர் அரசுக்குப் பரிந்துரை செய்தார். இந்த
விண்ணப்பத்தை அரசு பரிசீலனை செய்து பிப்ரவரி 1984 இல்



தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்திற்கு நிதியுதவி | கோரி
அனுப்பியது. தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் இந்த நிதி
யுதவிக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இக்கருத்துரு அரசின் பரி
சீலனையில் உள்ளது. இதற்கான ஆணை விரைவில் வெளியிடப்
படும்.

சந்திரபாடி கடல் மீனவர் கூட்டுறவு சங்கத்தின் 149
உறுப்பினர்களுக்கு தேசியக் கூட்டுறவு வளர்ச்சி நிறுவன திட்டத்
தின் கீழ் வலைகள் வாங்குவதற்கு ரூ. 3.45 இலட்சம் நிதியுதவி
கோரும் மேற்காணும் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் விண்ணப்
பத்தை மீன் துறை இயக்குநர் 1983—84-ல் அரசிற்கு பரிந்துரை
செய்தார். இந்த விண்ணப்பத்தை அரசு பரிசீலனை செய்து
மே 1985 இல் தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்தில் நிதி
யுதவி அளிக்க பரிந்துரைத்து அனுப்பியுள்ளது. தேசிய கூட்
டுறவு வளர்ச்சி நிறுவனத்தின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.
ஒப்புதல் பெற்றவுடன் அரசு ஆணை விரைவில் வெளியிடப்படும்.

திரு. என். விஜயபாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தரங்கம்பாடி தாலுக்காவில் தேசிய கூட்டுறவு
வளர்ச்சிக் கடன் சில பகுதிகளில் வழங்கப்பட்டிருப்பதாகச்
சொல்கிறார்களே, அப்படி அங்கே எந்தெந்த இடங்களுக்கு
எவ்வளவு ரூபாய் அளவிற்கு வழங்கப்பட்டிருக்கிறது என்பதைச்
சொல்ல இயலுமா ? அதே நேரத்தில், இந்தப் பரிசீலனை என்
பது எவ்வளவு விரைவில் முடிந்து வழங்கப்படும் என்பதையும்
அமைச்சரவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு
பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள்
கேட்ட மற்ற இடங்களைப் பற்றிய குறிப்புகள் என்னிடத்தில்
இல்லை. தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் நிதி உதவி
அளிக்க எவ்வளவு சீக்கிரம் அங்கிருந்து உத்தரவு பிறப்பிக்கிறார்
களோ அதைப் பொறுத்துத்தான் இங்கே நாம் அவசரமாகக்
கடன் வசதி செய்ய வாய்ப்பிருக்கிறது. பூம்புகாரைப் பொறுத்த
வரையில் விரைவில் ஆணையிடப்படும். சந்திரபாடியைப்
பொறுத்தவரையில் தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்தி
னுடைய பதிலை எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம்.

கன்னியாகுமரி இளைக் கால்வாய்க்கு நீர் வரத்து.

135—(*வினா எண் 5587) திரு. மா. சுந்தரதாஸ் : மாண்பு
மிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு
விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் விளவங்கோடு தாலு
காவில் நெய்யாறு இடதுகரைக் கால்வாயில் எத்தனை கன அடி
தண்ணீர் ஆண்டொன்றுக்குத் தர வேண்டும் என கேரள, தமிழ்
நாடு அரசுகள் ஒப்பந்தம் செய்துள்ளது ?

(ஆ) இப்பொழுது எத்தனை கன அடி தண்ணீர் பெறப்படுகிறது?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: (அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் விளவங்கோடு தாலுகாவில் உள்ள கன்னியாகுமரி இளைக் கால்வாயில் வினாடிக்கு 152 கன அடி தண்ணீர் விடப்பட வேண்டும்.

(ஆ) இப்பொழுது வினாடிக்கு 53 முதல் 93 கன அடி வரை பெறப்படுகிறது.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசும் கேரள அரசும் செய்துள்ள ஒப்பந்தத்தின்படி நமக்கு விடப்பட வேண்டிய முழு அளவுத் தண்ணீரையும் விடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவரவர்களே, ஏற்கெனவே பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன. கேரள அரசுடன் தொடர்பு கொண்டு பல முறை கடிதப்போக்குவரத்து உள்பட அத்தனை நடவடிக்கைகளையும் மேற்கொண்டும், தகுந்த அளவிற்கு கேரளத்திலிருந்து நீண்ட காலமாகப் பதிலுரைகள் சரியாக வராமல் இருந்து வந்தது. இறுதியாக இருக்கின்ற சூழ்நிலைகளின்படி கேரள பொதுப் பணித்துறையைச் சார்ந்த பாசனத் தலைமைப் பொறியாளர் அவர்களுடைய அறிக்கையின்படி, அங்கேயிருக்கும் அந்தக் கால்வாயின் வாயிலாக—நெய்யாறு இடதுகரைக் கால்வாயின் வாயிலாக 107 கன அடி தண்ணீர்தான் விட முடியும் என்ற அளவிற்கு அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். 107 கன அடி தண்ணீரை மட்டும் அனுப்பாமல், தகுந்த மாறுதலை மேற்கொண்டு 150 கன அடி வரை அனுப்ப வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்ற அறிவுரையைத் தமிழக அரசு வழங்கியிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது சரியான அளவு தண்ணீர் விடாத காரணத்தினால் 75 சதவீதம் நிலங்கள் இன்று பாசன வசதியில்லாமல் இருக்கின்றன என்பது அரசுக்குத் தெரியுமா? அந்த இடங்களுக்குப் பாசன வசதிக் கட்டணையும், டாக்சையும் வாங்குகிறார்கள். அது அரசுக்குத் தெரியுமா? மேலும் 50 அடி தண்ணீர் கூட, சரியான முறையிலே, பாசனத்திற்கு விநியோகம் செய்ய முடியாத அளவுக்கு, சாலைகள் பழுதடைந்திருப்பது அரசுக்குத் தெரியுமா? ஆம் எனில், அந்த இடங்களைப் பழுது பார்க்க, கூடுதலாக நிதி ஒதுக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே ஏற்கெனவே, 150 கன அடி வரவேண்டியஇடத்தில் 107 கன அடி தண்ணீர் விடுகின்றோம் என்று சொல்லி, அவர்களாலே ஏற்றுக்கொள்ளப்பட்டு, இன்று 53 முதல் 93 கன அடி வரை தான் தண்ணீர் வருகிறது என்றால் நிச்சயமாக, எதிர்பார்த்த பாசன நிலங்கள் பாசனம் பெறாது என்பது அத்தனை பேர்களும் அறிந்த உண்மையாகும். ஆனால், மேற்கொண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற விளக்கங்களுக்கு விவரங்கள் தற்போது என்னிடத்திலே இல்லை. ஆகவே, அவர்கள் தனிக் கேள்வி போட்டால் பதில் வழங்க முடியும்.

திரு. எஸ். எம். இராசரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடதுகரை கால்வாய் ஒப்பந்தம் இத்தனை ஆண்டுகள் என்கிற வரைமுறைகள் ஏதேனும் உண்டா? அதே போல், மேற்கு தொடர்ச்சி மலைகளில் உற்பத்தியாகி, வீணாக அரபிக் கடலில் விழும் தண்ணீரை எல்லாம் தமிழ்நாட்டுக்கு, விவசாயத் தேவைகளுக்குப் பயன்படுத்த, கேரள அரசோடு ஒப்பந்தங்கள் செய்யும் எண்ணங்கள் ஏதேனும் உண்டா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டங்களைப் பொறுத்த மட்டிலும் ஒப்பந்தத்திற்குக் காலவரையறை கிடையாது. கேரள அரசு ஏற்கெனவே தமிழ்நாட்டு ஆயக்கட்டுகளுக்கு 150 கன அடி நீர் அளிக்க ஒப்புக்கொண்டு, அந்த அடிப்படையில் திட்டத்தின் செலவுத் தொகையையும் பங்கீட்டுத் தொகையையும் பங்கீடு செய்துள்ளதை தமிழக அரசு ஏற்கனவே கேரள அரசுக்கு எடுத்துக் காட்டியுள்ளது. இது நீங்கலாக, இதர ஒப்பந்தங்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்துள்ளார்கள். ஒப்பந்தம் என்பது இரண்டு பகுதிகளிலும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும் என்பதை இங்கே சொல்லிக் கொண்டு, தமிழகம் தயாராக இருக்கிறது, கேரளம் தயாராக இருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நெய்யார் கால்வாயிலே தண்ணீர் விடுவது சம்பந்தமாக, கேரளத்திற்கும் தமிழகத்திற்கும் ஏற்பட்ட ஒப்பந்தங்கள் காலம் முடிந்து விட்டது என்று சொல்லப்படுகிறது. அது உண்மை தானா? அப்படியென்றால், புது ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? அதே போன்று இப்பொழுது கீழே போகிற தண்ணீர் கூட, கால்வாய் நல்லமுறையிலே பராமரிக்கப்படாததன் காரணமாகத்தான். அந்த இலாகாவிலே உள்ளவர்கள் சொல்வது, அந்த நெய்யார் கால்வாய் மிக மோசமான முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது என்பது. ஆகவே, அந்தக் கால்வாயை நல்ல முறையில் பராமரித்து, கீழே போகிற தண்ணீர் விவசாயிகளுக்குக் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே
ஏறக்னவே, நான் முன்பே சொன்னதைப் போல், கேரளாவிலே
யிருந்து, நெய்யார் நீர்த் தேக்கத்திலிருந்து வரும் நெய்யார்
இடதுகரை கால்வாயும், 24 ஆவது மைலில் எடுக்கப்படுகின்ற,
கன்னியாகுமரியிலிருந்து கிளைக் கால்வாயில் உருவாகி, அதன்
வாயிலாக, 9,000 ஏக்கர்கள் பாசன வசதி பெறக் கூடிய அள
வுக்குத் திட்டங்கள் தீட்டப்பட்டு, 5,500 ஏக்கர்கள் தேர்ந்தெடுக்
கப்பட்ட நிலங்களாக அறிவிக்கப்பட்டு, அதிலும் இன்று 3,405
ஏக்கர்கள் பாசனப் பயனைப் பெறுகின்றன. இந்த நெய்யார்
இடதுகரைக் கால்வாயில் தலைப் பகுதியில் வடிவமைக்கப்பட்ட
கொள்ளளவு வினாடிக்கு 300 கன அடி என்பது. இதில் இயற்
கையின்படியும், கேரள அரசால் தயாரிக்கப்பட்ட நீர் வழங்கு
விதிகளின்படியும், தமிழ்நாட்டினுடைய கிளைக் கால்வாயில்
கொல்லங்கோடு தலைப் பகுதியில், விநாடிக்கு 152 கன அடி
வழங்க வேண்டுமென்பதுதான் விதியாகும். அதிலே 2 கன அடி
அந்தக் கால்வாயைச் சேர்ந்த கேரளப் பகுதிக்குச் சொந்தமான
பாசன நிலங்களுக்குச் சொந்தமான தண்ணீராகும். எஞ்சிய 150
கன அடி, தமிழகப் பாசனப் பகுதிகளுக்குச் சொந்தமான தண்
ணீராகும். என்றாலும் கூட அந்த அளவுக்கு நான் ஏற்கெனவே
சொன்னபடி, இன்று 300 கன அடி கொள்ளளவிலே அந்தக்
கால்வாய் கட்டப்படவில்லை. 280 கன அடி கொள்ளளவிலே
தான் அந்தக் கால்வாய் கட்டப்பட்டிருக்கிறது என்பதுதான்
கேரள அரசின் நிலையாகும். என்றாலும் 280 கன அடி தனைக்
கொண்டு, தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய தண்ணீர்
127 கன அடியாகும். அதைத் தர வேண்டும் என்பது நமது
நிலை.

(முற்பகல் 10–10)

'' சிப்பேஜ் லாஸ் '' என்று சொல்லக்கூடிய நீர் இழப்பின் வாயி
லாக கேரளத்திற்கு தமிழக அரசாங்கம் 20 கன அடி தண்ணீர்
விட வேண்டும். அப்படி விடுகின்றபோது 127 கன அடியில்
20 கன அடி போக 107 கன அடிதான் கன்னியாகுமரி மாவட்டத்
திற்கு அந்தக் கிளை வாய்க்கால் மூலமாக அனுப்பப்படுகிறது.
1975 ஒப்பந்தத்தில் இந்த அடிப்படையில் செய்ய வழிவகை
இருக்கிறது. அந்த அடிப்படையிலே 107 கன அடி தண்ணீரா
வது தந்தாக வேண்டும். இருந்தாலும் பழைய முறைப்படி 300
கன அடி கொள்ளளவு உடைய கால்வாயாக அந்த கால்வாய்
மாற்றியமைக்கப்பட்டு, அதன் வாயிலாக 52 கன அடி தண்ணீர்
அனுப்பப்பட வேண்டும். அப்படி கால்வாய் மாற்றியமைக்கப்
பட்டு, அதன் பிறகு தமிழ்நாட்டுக்கு இவ்வளவு தண்ணீர் விட
வேண்டுமென்று தமிழக அரசு கேரள அரசை திரும்பத் திரும்ப
வலியுறுத்தி வருகிறது. இதிலே கேரள அரசின் வேகம் சற்று
குறைவாக இருக்கிறது. என்றாலும் குறைந்தபட்சம் 107 கன
அடி தண்ணீராவது தரவேண்டுமென்று தமிழக அரசு வற்புறுத்
தும்.



ஈழம் ஏரிக்கு கடவரபள்ளி அணையிலிருந்து நீர் விடல்.

136—(*வினா எண் 3946) திரு. க. இரா. சின்னராசு :
மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்
களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை வட்டப்
கெலமங்கலம் ஒன்றியத்தில் இருக்கும் ஈழம் ஏரிக்கு தென்
பெண்ணை ஆற்றில் கடவரபள்ளி அணை கட்டிலிருந்து தண்ணீர்
வராமல் இருப்பது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், தண்ணீர் வரும் கால்வாயினை சீரமைத்து
நிரந்தரமாக தண்ணீர் வர அரசு எடுத்துள்ள நடவடிக்கை
யாவை ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) ஆம்.

(ஆ) விரிவான ஆய்வுக்குப்பின் சீரமைப்புக்கான நட
வடிக்கை எடுக்கப்படும்.

திரு. க. இரா. சின்னராசு : தலைவரவர்களே, இந்த ஈழம்
ஏரிக்கு தென்பெண்ணை ஆற்றிலிருந்து தண்ணீர் வருகிற கால்
வாய் மிகவும் சிரபுந்த நிலையில் இருக்கிறது. சில இடங்களில்
காட்டாறுகள இந்தக் கால்வாயில் '' கிராஸ் '' செய்வதன் காரண
மாக மணல் மேடிட்டு, தண்ணீர் ஏரிக்கு வரமுடியாமலிருக்கிறது.
இதை சீர் செய்யும் பணி அரசின் பரிசீலனையில் இருப்பதாக
அமைச்சரவர்கள் சொன்னார்கள். இந்த ஏரி வறண்டு கிடக்
கின்ற சூழ்நிலையில், அதற்காகக் கட்டப்பட்டிருக்கிற அணையி
லிருந்து தண்ணீர் வரமுடியாமல் வாய்க்காலில் மணல் மேடிட்
டிருப்பதால் மக்களுக்கு அது பயன்படாமல் இருக்கிறது. எனவே
அந்தக் காட்டாறுகள் இந்தக் வாய்க்காலின் இடையே செல்லு
கின்ற வகையில் தகுந்த ஏற்பாடு செய்யப்படுமா ? அதற்கு
எஸ்டிமேட் ஏதாவது போடப்பட்டிருக்கிறதா ? அப்படியானால்
போடப்பட்ட எஸ்டிமேட்டின் அளவு என்ன என்பதை அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவரவர்களே,
அந்தக் கால்வாய் மிகவும் மோசமான நிலையில் பழுதடைந்
துள்ளது. மணல் போக்கி இல்லை. வெள்ளக் காலத்தில் மணல்
சேர்ந்து, அந்தக் கால்வாய் சுமார் 80 கிலோ மீட்டர் நீளத்திற்கு
தூர்ந்துவிடுகிறது. இது ஒரு '' காண்டூர் '' வாய்க்கால் ஆகும்.
ஆகவே, மழைக் காலங்களில் காட்டாறு பாய்ந்து, மணல் அரிப்பு
ஏற்பட்டு, ஆங்காங்கே மணல் மேடிட்டு, தூர்ந்துவிடுகின்ற
நிலைமை இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய
விவரங்கள் உண்மையானவைதான். இதை மாற்றியமைக்க
மணல் போக்கி ஒன்று அமைத்திட அரசு ஆய்வு செய்து வரு

கிறது. தூர் எடுக்கவும், மணல் போக்கி அமைக்கவும் சூப்பர் பாசேஜ் அமைக்கவும் சுமார் 8 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று தோராயமாக கணக்கிடப்பட்டிருக்கிறது. இதற்குமேல், செய்ய வேண்டிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, தேவையான பணிகளை விரைவில் மேற்கொள்ள உரிய நடவடிக்கையில் அரசு கவனம் செலுத்தும்.

திரு. க. இரா. சின்னராசு : தலைவரவர்களே, சுமார் 8 இலட்சம் ரூபாய் செலவில் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள விருப்பதாகச் சொன்னார்கள். அதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் கால்வாயை நேரடியாக நான் பார்த்திருக்கிறேன். இரண்டு இடங்களில் காட்டாறு பாய்வதன் மூலம் அடிக்கடி பழுதுபட்டு, ஏரிக்கு சரியாக தண்ணீர் வர வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. அதையும் இந்த மதிப்பீட்டில் சேர்த்து, சீர் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவரவர்களே, தேவைப்பட்டால் நிச்சயமாக அதையும் சேர்த்து ஆய்வு செய்ய அரசு ஆணையிடும்.

### சேத்துப்பட்டு பேரூராட்சியில் பயணியர் விடுதி.

137—(*வினா எண். 4854) திரு. இரா. அரிக்குமார் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரணமல்லூர் தொகுதி சேத்துப்பட்டு பேரூராட்சியில் பொதுப்பணித்துறையின் மூலம் ஒரு பயணியர் விடுதி கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

திரு. இரா. அரிக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேத்துப்பட்டு பேரூராட்சி தேர்வுநிலை பேரூராட்சியாக தரம் உயர்த்தப்படுகிற காரணத்தால் நடத்தப்படுகிற அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள அமைச்சர்கள் வருகிறபோது தங்குவதற்கு இடவசதி இல்லாத காரணத்தால் சேத்துப்பட்டிலிருந்து 30 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஆரணி, வந்தவாசி, போளூர் போன்ற நகரங்களுக்குச் சென்று தங்குவதற்குரிய ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, இது குறித்து அமைச்சர் அவர்கள் சற்று அக்கறை வைத்து அங்கே பயணியர் விடுதி கட்ட அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர்கள் பயணம் மேற்கொள்வதற்கும் அவர்கள் உல்லாசமாக வந்து அமர்வதற்கும் என்று இந்தப் பயணியர் விடுதிகள் கட்டப்படுவதில்லை. தேவையான பணிகளை மேற்கொள்ள, அதிகாரிகளும் பொதுத் தொண்டிலே ஈடுபட்டிருப்பவர்களும் மற்றவர்களும் வருகிற நேரத்தில் அவர்கள் தங்குவதற்குத் தேவையான வசதி இல்லாத இடத்தில் வசதி செய்யப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் தான் இந்தப் பயணியர் விடுதிகள் எல்லாம் கட்டப்படுகின்றன.

சேத்துப்பட்டு பேரூராட்சியைப் பொறுத்த வரையில் அங்கே இருந்து சுமார் 4 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கக்கூடிய நெடுங்குளம் என்னும் இடத்தில் பொதுப் பணித்துறையைச் சேர்ந்த ஆய்வு மாளிகை ஒன்று இருக்கிறது. இந்த மாளிகையை நவீனப்படுத்தி சீரமைத்துக் கொண்டால் தேவையான அளவுக்கு அந்தப் பகுதியிலே தங்க வசதியை ஏற்படுத்த முடியும் என்று அரசு கருதுகிறது. ஆகவே, அந்த வகையில் நடவடிக்கை மேற்கொள்ள தலைமைப் பொறியாளர் அறிவுறுத்தப்படுவார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. அரிக்குமார் : பேரவைத் தலைவர் அவர்களே, நெடுங்குளம் கிராமத்தில் இருக்கக்கூடிய பயணியர் விடுதி மிகவும் பழமை வாய்ந்தது. அது மிகவும் மோசமான நிலைமையில் இருக்கின்றது. அதைச் சீர் செய்ய முடியாத நிலைமை இருக்கின்றது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சேத்துப்பட்டு பேரூராட்சியிலேயே புதிய பயணியர் விடுதியினை அமைக்க முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, சீர்படுத்த முடியாத நிலைமை என்று எதுவும் கிடையாது. மேலும் ஓல்ட் ஈஸ் கோல்ட் என்று சொல்வார்கள். எனவே, அந்தப் பழமையான கட்டிடம் புதுமைப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### இருதமால் நதித் திட்டம்.

19—(*வினா எண். 3465) திரு. அ. பிரணவநாதன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை வைகை ஆற்றிலிருந்து பிரிந்து செல்லுகின்ற இருதமால் நதித் திட்டம் வேலை நடைபெறுகிறதா ?

(ஆ) ஆம் எனில், திட்டப் பணிகள் எப்பொழுது முடியும் ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) ஆம்.

(ஆ) திட்டப் பணிகள் இவ்வாண்டு இறுதிக்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## விளாத்துறை நீரேற்றுத் திட்டம்.

20—

(*வினா எண். 3660) டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம் விளவங்கோடு தாலுக்காவில் விளாத்துறை நீரேற்றுத் திட்டம் கைவிடப்பட்டதற்கான காரணம் யாது?

(ஆ) மறு பரிசீலனை செய்து இத்திட்டத்தை நிறைவேற்ற அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: (அ) குமரி மாவட்டம் விளவங்கோடு தாலுக்காவில் விளாத்துறை நீரேற்றுத் திட்டத்தால் பயன்பெற்ற நிலங்கள் சித்தார் பட்டணங்கால் திட்டத்தால் பாசன வசதி பெற்றதால், நீரேற்று திட்டம் கைவிடப்பட்டது.

(ஆ) ஆம்.

திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரணியன்வாய்க்கால் நீரேற்றுத் திட்டம், வள்ளியார்த் திட்டம், இராஜாக்கமங்கலம் திட்டம் போன்ற விவசாய வளர்ச்சித் திட்டங்கள் எந்த நிலையில் உள்ளன என்பதைக் கூற முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லாத காரணத்தால் இக்கேள்விக்கான விடை தற்போது இல்லை. எனவே தனியாகக் கேள்வி போட்டால் விடை கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளாத்துறை நீரேற்றுத் திட்டத்தால் பயன் பெற்ற நிலங்கள் சித்தார்-பட்டணங்கால் திட்டத்தால் பாசன வசதி பெற்றதால் நீரேற்றுத் திட்டம் கைவிடப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அந்த ஏரியாவில் 600 ஏக்கர் நிலத்திற்கு லிஃப்ட் இரிகேஷன் மூலம் பயன் ஏற்பட்டு வருகின்றது. ஆனால் மழை குறைவு காரணமாக அந்த இடத்தில் தண்ணீர் வருவதில்லை. ஆகவே லிஃப்ட் இரிகேஷன் திட்டத்தைச் செம்மைப்படுத்த 5 இலட்சம் ரூபாய் தான்செலவாகும், அந்த வகையில் 5 இலட்சம் ரூபாய் ஒதுக்கி அதைச் செம்மையாக்கிச் சீர்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே சொன்னது போல இந்தத் திட்டம் 1961 ஆம் ஆண்டு மேற்கொள்ளப் பட்ட திட்டமாகும். அந்தத் திட்டத்தின் வாயிலாக 710 ஏக்கர் நிலம் பாசன வசதி பெற்று வந்தது. அந்த 710 ஏக்கரும் நஞ்சை நிலம். அதற்குப் பிறகு சித்தார்-பட்டணங் கால் திட்டம் அமல்படுத்தப்பட்டதற்குப் பிறகு இந்த சித்தார்-பட்டணங்கால் கால்வாய் மூலம் விளாத்துறை நீரேற்று திட்டத்தின் மூலம் பாசன வசதி பெறுகின்ற அந்தப் பாசன நிலங்கள் பயனடையும் என்ற காரணத்தால்தான் இந்தத் திட்டம் கைவிடப்பட்டு சித்தார்-பட்டணங்கால் திட்டத்தின் வாயிலாக பாசனவசதி பெறுகின்ற வாய்ப்பு தரப்பட்டுக்கொண்டு வந்தது. 1978 ஆம் ஆண்டு அந்தப் பகுதியில் ஆய்வு மேற்கொண்டு தலைமைப் பொறியாளர் அவர்கள் பழையபடி இந்த நீரேற்றுத் திட்டத்தைக் கொண்டுவந்தால் அந்தத் திட்டத்திற்காகத் தருகிற தண்ணீரை நாம் சேமித்து, அந்த பேச்சிப்பாறை அணையிலிருந்து வருகிற தண்ணீரைச் சேமித்து வேறு பணிகளுக்குப் பயன்படுத்தலாம் என்ற யோசனையை அரசுக்குத் தந்தார்கள். அந்த யோசனையின் அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு ஆய்வு நடத்தியபோது இந்த நீரேற்றுத் திட்டத்திற்காக 45 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று கணக்கிடப்பட்டது. 5 இலட்சம் ரூபாய் அல்ல.

[முற்பகல் 10-20]

அந்த 45 இலட்சம் ரூபாய் செலவோடு மட்டுமல்லாமல், ஏக்கர் ஒன்றுக்கு ஆண்டு ஒன்றுக்கு 210 ரூபாய் வேறு, பராமரிப்பு செலவாக ஆகும் என்பதையும் கணக்கிட்டிருக்கிறோம். ஆகவே, மறுபடியும் அந்தத் திட்டத்தை கொண்டு வருவதற்காக அரசு முயன்றுஇருக்கிறது. அந்தக் கோதையாறு நவீனப் படுத்தும் திட்டத்தின் வாயிலாக பல்வேறு பணிகள் கன்னியாகுமரி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. அதுவும் 34 கோடியே 56 இலட்சம் செலவில் அத்தகைய திட்டங்கள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. அவற்றில் இந்த திட்டமும் அடங்கும் என்பதையும், அதற்காக 45 இலட்சம் ரூபாய் மதிப்பிடப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### (அ) ஊராட்சி மன்ற, ஒன்றியத் தேர்தல் தேதியை ஒத்தி வைப்பது குறித்து.

திரு. வி. பி. சிந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக ஒரு சிறு விளக்கத்தை கேட்டு பெறலாம் என்று நினைக்கிறேன். சின்னக் கேள்விதான். நேற்றையதினம் சென்னை உயர்நீதி மன்றத்திலே பஞ்சாயத்து, நகரசபை தேர்தல்களை ஒத்திவைப்பது சம்பந்தமாக வழக்குகள் நடந்த போது, அந்த மனுவை தள்ளுபடி செய்து, திங்கள்கிழமை முழு தீர்ப்பு வரும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் அதே நீதிமன்றத்தில் அரசு தரப்பில் உள்ள வழக்கறிஞர்கள், தேதியை ஒத்திவைக்க வேண்டுமானால், அதை நீதிபதியிடம் விட்டு விடுகிறோம் என்று சொன்னதாக பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. அது சம்பந்தமாக, தேர்தலை எப்போது நடத்துவது என்று அரசு ஏதாவது பேசியிருக்கிறதா? அது அரசினுடைய அறிவுரை தானா அல்லது கொள்கைதானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி ஒரு கொள்கையை அரசு வைத்திருக்கும் என்று தவறாகச் சொல்லக்கூடாது. இன்று காலையிலே நான் பத்திரிகையில் பார்த்தேன். ஒரு கட்சியினுடைய தலைவர் அறிக்கை கூட விட்டு கண்டித்திருக்கிறார்கள். நான் இந்த விஷயத்தை பின்னால் அவையில் ஊராட்சிமன்ற பில்கள் வரும்போது விளக்கிச் சொல்லலாம் என்றுதான் இருந்தேன். ஆனால் இப்போதே வெளிப்படுத்தி விட்டார்கள். அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

அப்படி தேதிகளை மாற்றி அமைக்க வேண்டும் என்று அரசு தரப்பிலேயிருந்து எந்தவித யோசனையும் சொல்லப் படவில்லை. தேர்தலை ஒத்திவைக்க வேண்டும் என்று மனு கொடுத்த ஆதிதிராவிடர்கள் தடை விதிக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அரசுத் தரப்பிலே எந்தக் காரணத்தைக் கொண்டும் தடை விதிக்கக்கூடாது, நடத்தித்தான் ஆக வேண்டும் என்று வாதாடப்பட்டது. நீதிபதி தடை விதிப்பதற்கு இல்லை என்று சொன்னதற்குப் பிறகு, நேற்றைய தினம் 23 ஆம் தேதி வேட்பு மனுக்களை தாக்கல் செய்கின்ற நாளாக இருப்பதால், வேட்புமனுக்களை தாக்கல் செய்ய வேண்டிய எங்கள் கட்சிக்காரர்கள்—அந்த ஆதிதிராவிட மக்கள்—தாக்கல் செய்வதற்கு நாட்கள் போதவில்லை குறைவாக இருக்கிறது, ஆகவே, அந்த நாட்களை நீட்டித்துக் கொடுக்க வேண்டும். அதை மாற்றி அமைக்க வேண்டும் என்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள். இதுதான் நடந்ததே தவிர,



வேறு எதுவும் இல்லை. அரசுத் தரப்பில் அதற்கு எந்தவித ஆலோசனையும் தரப்படவில்லை. நீதிபதி அவர்கள்.. ..........(குறுக்கீடு).

பேசும்போது தவறான தகவல் தருகிறார்கள் என்று சொல்வது அதுவும் உட்கார்ந்துக் கொண்டே சொல்வது சரியானதகவல் அல்ல. நான் உட்கார்ந்து விடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் வேண்டுமானால் பேசட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை நீங்கள் பேசி முடித்து விடுங்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நாங்கள் சொல்வதில் எதையும் மூடி மறைக்க வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை. தேர்தலை தள்ளி வைக்க எந்தக் காலத்திலும் அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறது. அதற்காக இந்த அரசாங்கம் நீதிபதியிடமோ அல்லது வேறு யாரிடமோ செல்ல வேண்டிய அவசியம் இல்லை. அந்த அடிப்படை உரிமை அரசாங்கத்திற்கு கிடையாதா? உண்டு. அரசாங்கத்திற்கு அந்த உரிமை உண்டு. அதற்காக வேறு இடத்திற்குப் போய் வாதாட வேண்டிய அவசியம் இல்லை என்பதை முதலிலே மாண்புமிகு உறுப்பினருக்குத் தெளிவாக தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆதிதிராவிட மக்களின் சார்பாக, தடை வேண்டும் என்று கேட்ட அவர்களின் சார்பாக வழக்காடிய வழக்கறிஞர் தேர்தலுக்கு வேட்பு மனுக்களை தாக்கல் செய்யும் வேலை நேற்றைய தினமே துவங்கி விட்டதால், எங்கள் கட்சிக்காரருக்கு ஆதிதிராவிட மக்களின் சார்பாக வேட்பு மனு தாக்கல் செய்வதற்கு நாட்கள் போதவில்லை. அதனால் அந்தத் தேதியை தள்ளி வைக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். இதுதான் நடந்ததே தவிர வேறு ஒன்றும் இல்லை. அதற்கு மேல் நீதிபதி தீர்ப்பு வழங்கும்போது அரசாங்கம் விரும்பினால் தேதியை மாற்றி வைக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். இது தான் நடந்திருக்கிறதே தவிர, அரசாங்கமே போய் நீதிபதியிடம் தேதியை தள்ளி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளவேயில்லை.

### (ஆ) மேலவை உறுப்பினர் வெளியில் பேசியிருப்பது குறித்து

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான பிரச்சினையை எழுப்ப விரும்புகிறேன். இந்த மன்றத்தின் உறுப்பினராக இருந்தாலும் சரி, மேலவை உறுப்பினராக இருந்தாலும் சரி, அவர் பதவி ஏற்கும்போது சட்ட முறைப்படி நிறுவப்பட்டுள்ள இந்திய அரசியலமைப்பில் உண்மையான நம்பிக்கையும், பற்று உறவையும் கொண்டிருப்பேன் என்று உறுதி செய்கிறார்கள். ஆனால்

அதை மீறி செயல்படும்போது அது தேசத் துரோகக் குற்றமாகும். அப்படி இருக்கிறபோது, இந்திய அரசியல் அமைப்பில் ஒரு அங்கமாக விளங்குகின்ற பஞ்சாயத்துக்கள், நகராட்சிகளுக்குப் போட்டி மன்றங்களை வைத்து தாங்களே வரி வசூலைச் செய்வோமென்று சொல்வது அரசியல் அமைப்பை மீறுகின்ற செயலாகும். அது ஒரு தேசத் துரோகக் குற்றமாகும். அப்படிப்பட்ட அதிகாரம் தனியார்களுக்கு இருக்கிறதா என்பதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிப்பட்ட தேசத் துரோகச் செயலைத் தூண்டிவிட்டவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறோம்? (குறுக்கீடுகள்) 22–1–1986 ஆம் தேதியன்று தேன்கனிக்கோட்டையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் கருணாநிதி அவர்கள் ஏதோ நன்கொடை, வசூல் செய்வதைப் போல வரி வசூலை தானே முன் நின்று நடத்துவேன் என்று சொல்லி இருக்கிறார்கள். தமிழக அரசு தனியார்கள் அப்படி செய்ய ஏற்பாடு செய்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. மு. இராமநாதன் : தலைவர் அவர்களே, இந்த அவையிலே இல்லாதவர்களைப் பற்றி விமர்சனம் செய்ய கூடாது என்பது மரபு.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த அவையில் இல்லாதவர்களைப் பற்றியும், மேலவை உறுப்பினர்களைப் பற்றியும் விமர்சனம் செய்யக் கூடாது என்பது மரபு. அந்த மரபை கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(இ) நீதிமன்றங்களில் காலியாக உள்ள நீதிபதிகள் பதவிகளை நிரப்புவது குறித்து

திரு. பொன் முத்துராமலிங்கம் : தலைவர் அவர்களே, தமிழக வழக்கறிஞர்கள் சங்கம் சனவரி மாதம் 31 ஆம் தேதியன்று வேலை நிறுத்தத்தில் ஈடுபடப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். தமிழகத்தின் பல்வேறு நீதிமன்றங்களில் நீதிபதிகள் இல்லாத குறைகளை முன்னிட்டு அவர்கள் இப்படிச் சொல்லி இருக்கிறார்கள். அதோடு உச்ச நீதிமன்றத்திற்கு அவர்கள் அனுப்பிய கடிதங்களையே ஒரு மனுவாக ஏற்றுக்கொண்டு இன்றைக்கு தமிழக அரசிற்கு நோட்டீஸ் அனுப்பியிருக்கிறார்கள். நீதிமன்றங்கள் செயல்படாத நிலைமையில், வழக்கறிஞர்கள் சங்கம் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகின்ற நிலைமையில் நீதிமன்றங்களே ஸ்தம்பிக்கக்கூடிய நிலைமை இருப்பதால், அரசு இந்த இக்கட்டான சூழ்நிலையை களைவதற்கும், நீதிமன்றங்கள் முறையே செயல்படுவதற்கும் ஏதாவது நடவடிக்கைகளை எடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, 1965 ஆம் ஆண்டிலிருந்து சபார்டினேட் ஜுடிஷியரிக்கு குறிப்பாக சப்-மாஜிஸ்ட்ரேட்ஸ், ஜுடிஷியல் செகண்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்ஸ் பதவிகளைப் பொறுத்த வரையிலும், தற்காலிகமாக உயர்நீதிமன்றம் ஒரு தேர்வினை நடத்தி, நீதிபதிகளைத் தேர்ந்தெடுத்து, நியமித்ததை அவை அறியும். ஆனால் அவர்கள் எல்லாம் 10, 15 ஆண்டுகளாக தொடர்ந்து பணியில் இருந்து விட்டதால் தங்களை நிரந்தரம் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை எழுப்பி, அவர்கள் அந்தப் பணியில் நிரந்தரமாகச் செய்யப்பட வேண்டுமென்ற ஆணையை இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் அரசு வெளியிட்டது. அதை எதிர்த்து வழக்கறிஞர்கள் சார்பிலே உயர் நீதிமன்றத்தில் தடையாணைப் பெற்ற காரணத்தால் அவர்கள் தற்காலிக நீதிபதிகளாகவே தொடர்ந்து இருக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. உயர்நீதிமன்றத்தாலே தேர்ந்தெடுக்கப்பட்டும் 15 ஆண்டுகள், 20 ஆண்டுகளாக தற்காலிகமாக அந்தப் பதவியில் இருக்கிறவர்கள் நிரந்தரமாகாத நிலையில் இன்னும் இருந்து வருகிறார்கள். இந்தச் சூழ்நிலையில்தான் சர்வீஸ் கமிஷன் மூலமாக 60 டிஸ்ட்ரிக்ட் முன்சீப் பதவிகளை நிரப்புவதற்கு உயர் நீதிமன்றத்தினுடைய பரிந்துரையை ஏற்று, அரசு அதற்கான ஆணையை இட்டு சர்வீஸ் கமிஷன் மூலமாக அந்தத் தேர்வு முடிந்திருக்கிறது. அந்தத் தேர்வினுடைய முடிவு இன்னும் சில தினங்களுக்குள் வெளியிடப்பட்டு, காலியாக இருக்கிற இடங்களை புதியதாக தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் மூலமாக நிரப்பப்பட இருக்கிறது. இதற்கிடையில் அப்படி சர்வீஸ் கமிஷன் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அந்த இடங்களை நிரப்புகிற போது, தற்காலிகமாக 15, 20 ஆண்டுக் காலமாக பணியிலே இருக்கின்றவர்கள் அந்தப் பதவிக்குச் செல்லக்கூடிய வாய்ப்பு இல்லையென்ற முறையிலே அவர்கள் உச்ச நீதிமன்றத்திலும், உயர் நீதிமன்றத்திலும் வழக்கினைத் தொடர்ந்து இருக்கிறார்கள். உயர்நீதிமன்றத்தினுடைய தலைமை நீதிபதி ஸ்கிரீனிங் கமிட்டி என்ற ஒன்றின் மூலமாக, inefficient or people not above board என்ற முறையிலே இருக்கிறவர்களை மட்டும் தாய்த் துறைக்கு திருப்பியனுப்பி விட்டு, மீதமானவர்களை அந்தப் பதவியிலே நிரந்தரம் செய்யுமா என்று சங்கம் கேட்ட வேண்டுகோளை ஆய்ந்து வருகிறார்கள். இன்னும் சில தினங்களிலே இதற்கு தக்க தீர்வு ஏற்பட்டு விடுமென்று அரசு நம்புகிறது. உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

(முற்பகல் 10–30)

(ஈ) பல்கலைக் கழக ஆட்சிமன்றக் குழுவில் சட்டமன்ற உறுப்பினர்களுக்காகவுள்ள இடங்களை நிரப்புவது குறித்து

திரு. டி. ஆர். வெங்கடராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு நீங்கள், இந்த அவையில் வெளியிட்ட ஒரு அறிவிப்பிலே, கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக் கழகத்தினுடைய ஆட்சி மன்றக் குழுவிலே உறுப்

[திரு. டி. ஆர். வேங்கடரமணன்] [1986 சனவரி 24

பி ராக இருந்த சட்டமன்ற உறுப்பினர்கள் மாண்புமிகு க லன் உட்பட, 3 பேர்கள், ஏழாவது சட்டமன்றக் குழு க ஸக்கப்பட்டதன் காரணமாக, பதவி இழந்து, பல்கலைக் க கத்தினுடைய ஆட்சி மன்றக் குழுவிற்கு புதிய உறுப்பினர் தே ர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று தாங்கள் அறிவிப்பை வெளி யி ட்டீர்கள். ஏழாவது சட்டமன்றம் கலைக்கப்பட்டு, கிட்டத் த ட்ட 15 மாதங்கள் கழிந்து, இந்த சட்டமன்றம் கூடி கிட்டத் த ட்ட 1 ஆண்டுக் காலத்திற்குப் பிறகு, 1 ஆண்டுக் காலத்திற்கு ச ட்டமன்ற உறுப்பினர்கள் அந்த ஆட்சி மன்றக் குழுவிலே உள்ள அந்தப் பதவியிலே இருக்கக்கூடிய அந்த உரிமையை பறித்து, மி வும் குறைவான காலக் கெடுவிற்குப் பிறகு, இந்த அறிவிப்பை இ ந்த மன்றத்திற்கு அனுப்பி, இந்த மன்ற உறுப்பினர்கள் அ ந்தப் பதவியை வகிப்பதிலே காலதாமதம் செய்வதைத் த டுத்து, உறுப்பினர்களுடைய உரிமைகளைக் காக்க நீங்கள் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறீர்கள் என்பதை நான் அறிய வி ரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதைப் பற்றி மாண்பு மி கு கல்வி அமைச்சரைக் கேட்க வேண்டும். இனி இந்த மாதிரி தே ர்தல் வருவதற்கு முன்னாலே, ஒரு 6 மாதத்திற்கு முன்னாலே நா முடைய செயலகத்திற்குத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள் கி றேன்.

## 3. கவன ஈர்ப்புகள்.

(அ) பவானிசாகர் அணையிலிருந்து என் பயிருக்கு தண்ணீர் விடுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் கு. அ. செங்கோட்டையன், பு. கோ. நாராயணன், வி. கே. சின்னசாமி, ச பாலகிருஷ்ணன், கு. சுப்பராயன், மற்றும் பொ. உத்திராபதி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வரு வார்.

திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''பவானிசாகர் அணையிலிருந்து (எல்.பி. பி.) என்னுக்கு நான்கு முறை தண்ணீர் திறந்து விடுவதாக அறிவித்து, தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதெனினும், தஞ் சையில் விளையும் நெல்லுக்குத் தண்ணீர் திறந்து விடப்பட்டுள் ளதன் காரணமாக அணையில் தண்ணீர் குறைந்துள்ளதால், ஏற்கனவே அறிவித்தபடி என்னுக்கு நான்கு முறை தண்ணீர் விடு வது தடைப்பட்டு விடுமோ என்கின்ற நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சரின் கவனத்திற்க்கு கொண்டு வருகிறேன்.



1986 சனவரி 24]

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

மாண்புமிகு திரு. ம. சை. மு. யூசுப் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு பவானி கால்வாயில், இரண்டாம் முறை பாசன நிலங்களுக்கு என்னு பயிரிடு வதற்காக 20–12–1985 முதல் தண்ணீர் திறந்து விடப்பட்டது. முதல் முறை தண்ணீர் 8–1–1986 வரை கொடுக்கப்பட்டது.

காவேரி டெல்டா பகுதியில் மிகக் கடுமையான வறட்சி நிலை இருந்ததால், பயிரிடப்பட்ட பயிர்களை வாடவிடாமல் காப்பாற்றும் பொருட்டு, தண்ணீர் தேவையாக இருந்தது. பவானிசாகரில் இருக்கும் நீரின் அளவையும், மின் நீர்த் தேக்கங்களிலிருந்து வரும் நீர்வரத்தை எதிர்பார்த்தும், பவானி பழைய பாசனத்திற்கும், பவானிக் கால்வாயின் கீழ் அனுமதிக்கப்பட்ட என்னுப் பயிருக்கும் தேவையான தண்ணீரை வைத்துக் கொண்டு, காவிரி டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் விட முடியும் என்று கருதப்பட்டது. ஆகவே காவிரி டெல்டா பாசனத்திற்கு குறைந்த அளவு தண்ணீர் விடப்பட்டது.

என்னுக்கும் பயிருக்கும் இரண்டாம் முறை தண்ணீர் 25–1–1986 முதல் 12–2–1986 வரையிலும், மூன்றாம் முறை தண்ணீர் 25–2–1986 முதல் 15–3–1986 வரை அனுப்பப்படும். பவானி பழைய பாசனத்திற்குத் தேவையான தண்ணீரும் அனுப்பப்படும். மின் தேக்கங்களை பாசனத்திற்குத் தேவைப் படும் தண்ணீரை அனுப்பும் வகையில் இயக்குமாறு மின்வாரியம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

திரு. கு. அ. செங்கோட்டையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு பெரியார் மாவட்டத்திலே நஞ்சைப் பயிர்களுக்கு எல்.பி.பி.யிலே தண்ணீர் விடாத கார ணத்தால், பெரிதும் பாதிக்கப்பட்டு இருக்கிற விவசாயிகள், என் னுக்குத் தண்ணீர் விடுகின்ற நேரத்திலே கூட, தஞ்சைக்குத் தண்ணீர் திறந்துவிடுகிறார்களே என்ற கவலையில், எந்த விதிமுறை அடிப்படையில் தஞ்சைக்கு தண்ணீர் விடப்படுகிறது என்பதையும், அதேபோல் அரக்கன்கோட்டை, காளிங்கராயன் மற்றும் தடப்பள்ளிச் சாலை போன்ற 3 வாய்க்கால்களுக்கும் தண்ணீர் விடப்படுகிறது. என்பதையும் மீதி இருக்கின்ற காலக் கட்டங்களில் மட்டும் தண்ணீரை, பவானிசாகரிலிருந்து என்னுக்கும், எல். பி. பி. யிலிருந்து நஞ்சைப் பயிருக்கும் எந்த விதிமுறையின் அடிப்படையில் தண்ணீர் விடப்படுகிறது, என்பதையும் அதேபோல், விடப்படுகின்ற தண்ணீரின் அளவு குறைவாக ஏற்படுகின்ற காலக்கட்டங்களில், இதுபோன்ற நிகழ்ச்சிகளைக் குறைத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பெரியார் மாவட்டத்திலே ஒரு கருத்தரங்கு உரு வாக்கி, அங்கேயிருக்கின்ற, விவசாயிகளுடைய கருத்தை ஏற்று,

பெரிதும் பாதிக்கப்பட்டு இருக்கிற விவசாயிகளுடைய கவலையைக்
கருதி, தண்ணீரை எந்தெந்த முறையிலே திறந்து விடலாம் என்று
விதிமுறைகளை வகுப்பதற்கு அரசு ஏதேனும் நடவடிக்கை எடுக்
குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: துணைத் தலைவர்
அவர்களே, பொதுவாக நடைமுறையிலே இருக்கக்கூடிய அனுகு
முறைகளை வைத்துத்தான் இத்தகைய முறைகள் கடைப்பிடிக்கப்
பட்டு வருகின்றன. இருந்தபோதிலும் பவானிசாகரிலிருந்து
தஞ்சை மாவட்டத்திற்கு காவிரி டெல்டா பாசனத்திற்கு 5
டி.எம்.சி. தண்ணீர் விடவேண்டும் என்று ஒப்புக்கொள்ளப்பட்ட
விதியாகும்.

இது நீங்கலாக எஞ்சிய தண்ணீரை எப்படி பயன்படுத்துவது
என்பதை தற்போதைய புதிய அமைப்புகளின்படி இப்போது
இருக்கக்கூடிய புதிய ஆயக்கட்டு மாறுதல்களின்படி எந்த வகை
யிலே இந்த நீர் தேக்கத் திட்டத்திலிருந்து தண்ணீரை விட
வேண்டும் என்ற ஆய்வை மேற்கொள்ளுவதற்கு அல்லது புதிய
நடவடிக்கையை மேற்கொள்ளுவதற்கு அல்லது புதிய விதிகளை
மேற்கொள்ளுவதற்கு பெரியார் மாவட்டத்தைச் சேர்ந்த இந்த
பாசன பகுதியைச் சேர்ந்த பாசன விவசாயிகள் மற்றும் தேர்ந்
தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுத்
தொண்டில் இருக்கக்கூடியவர்கள் ஒன்றாக கலந்து பேசி அத்
தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கு அரசு முன்வரும்
என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. கோ. நாராயணன்: மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, நீர் பிடிப்புப் பகுதியில் இருந்து
பவானி சாகர் அணைக்கு தண்ணீர் வருவதற்கு முன்பு இடையில்
10 எச்.பி., 20 எச்.பி., போன்ற சக்தி வாய்ந்த மோட்டார்களை
வைத்து தண்ணீரின் பெரும்பகுதியை எடுத்து விடுவதால்
அணைக்கு தண்ணீர் வருவது பெரும் பாதிப்புக்கு உள்ளாகி விடு
கிறது. அந்த சட்ட விரோதச் செயலை தடைச் செய்ய அரசு
முயற்சிக்குமா என்பதை பற்றியும், தஞ்சைக்கு தண்ணீர் விடு
வதால் பாதிக்கப்படுகிற எல்.பி.பி. ஆயக்கட்டு விவசாயிகளுக்கு,
அவர்கள் பாதிப்பைத் தடுக்க ஏதாவது ஒரு நடவடிக்கை எடுத்து
எல்.பி.பி. ஆயக்கட்டு விவசாயிகளை காப்பாற்ற அரசு முயற்
சிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு பேர
வைத் துணைத் தலைவர் அவர்களே, எல்.பி.பி. ஆயக்கட்டுத்
தாரர்கள் தங்களை பாதுகாத்துக்கொள்ளுவது எப்படி என்பதை
அவர்களே முடிவு செய்யட்டும் என்றுதான் நான் முன்பு சொன்
னது போல் ஒரு கருத்தரங்கை ஏற்பாடு செய்ய அரசு முன்
வந்திருக்கிறது.





இந்த பம்புசெட்டுகளை ஆங்காங்கே நிறுவி தண்ணீரை சட்ட
விரோதமாக எடுத்து பயன்படுத்துகிறார்கள் என்ற ஒரு குற்றச்
சாட்டை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள்.
முன்பு, இதுபோன்ற குற்றச்சாட்டுகளை சுட்டிக்காட்டிய
போது அரசு நடவடிக்கை மேற்கொண்டு இருக்கிறது. அந்த
முறையில் இந்த சட்ட விரோத செயலில் யார் எல்லாம் ஈடு
படுகிறார்கள் என்ற பட்டியலை மாண்புமிகு உறுப்பினரவர்கள்
தருவார்களானால் உரிய நடவடிக்கையை அரசு மேற்
கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, காவேரிப் பிரச்சினை இன்னும் முடிவு
பெறாத நிலையில் இருக்கிற இந்த சூழ்நிலையில் தொடர்ந்து
எல்.பி.பி.யிலிருந்து காவேரி பாசன பகுதிக்கு தண்ணீர் விடு
வதன் மூலம் எல்.பி.பி. விவசாயிகள் எதிர்காலத்தில் கடுமை
யான பாதிப்புக்கு ஆளாவோம் என்று அஞ்சுகிறார்கள்
என்பதை அரசு அறியுமா? எல். பி. பி. பாசன
திலிருந்து காவேரிக்குத் தண்ணீர் விடுவதால் எல்.பி.பி. விவ
சாயிகளுக்கு ஏற்படும் ஆபத்தைத் தடுப்பதற்கான உத்தரவாதத்
திற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பதை
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு பேர
வைத் துணைத் தலைவர் அவர்களே, எல்.பி.பி. பாசன பகுதிக்கு
எப்படிப்பட்ட மாறுதல் கொண்டு வந்தால் விளைவுகள் சீராக
இருக்கும் என்பதையும் ஏற்கனவே இந்த திட்டத்தின் வாயிலாக
பயன் அடைகின்ற ஆயக்கட்டுத்தாரர்களின் உரிமைகள் எப்படி
எல்லாம் பாதுகாக்க முடியும் என்பதைப் பற்றியும் அவர்களாக
அமர்ந்து பேசுவதற்கும் நான் முன்பு சொன்ன யோசனையை
கடைப்பிடிக்கவும் அரசு முன் வந்திருக்கிறது. ஒரே ஒரு வேண்டு
கோளை நான் இங்கே வைக்க விரும்புகிறேன். இத்தகைய நட
வடிக்கைகளை அரசு மேற்கொள்ளுகின்ற நேரத்தில் அந்தத் திட்
டத்தை செவ்வனே நடைமுறைப்படுத்த சட்டவிரோதமான காரி
யங்களில் சிலர் ஈடுபடுகிறார்கள் என்று சொன்னால் அந்தச்சட்ட
விரோத காரியத்தில் ஈடுபடுபவர்களை அகற்றுவதற்கு அரசு நட
வடிக்கை மேற்கொள்ளுகின்ற நேரத்தில் நண்பர் சுப்பராயன்
உட்பட அனைத்து எதிர்க்கட்சி உறுப்பினர்களும் ஒத்துழைப்புத்
தரவேண்டும் என்ற வேண்டுகோளை இந்த மாமன்றத்தின் மூலம்
கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

(முற்பகல் 10-40)

(ஆ) வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள தஞ்சை மாவட்ட விவசாயிகளிடம் கூட்டுறவுக் கடன் வசூலிப்பது குறித்து

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள தஞ்சை விவசாயிகளிடையே கூட்டுறவுக் கடன் வசூலிப்பதில் கடும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் [illegible] அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களில், உயர்ந்து வரும் தவணை தவறிய கடன் நிலுவையை குறைக்க வேண்டி அரசு சில குறிப்பிட்ட பிரிவினர் மீது மட்டும் 1985 மார்ச்சு திங்களில் சட்டபூர்வ நடவடிக்கை எடுப்பதற்கு அனுமதித்துள்ளது. அதன் விவரம் கீழே அளிக்கப்பட்டுள்ளது :—

(அ) சட்டபூர்வ நடவடிக்கைக்கு பயந்து தமது சொத்துக்களை தூண்டுபோடும் உறுப்பினர்கள் ;

(ஆ) கறவை மாடுகள் வாங்குதல், ஆடு வளர்த்தல், கோழி வளர்த்தல் போன்ற உப தொழில்களை மேற்கொள்ள விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து மத்திய கால கடன் பெற்று, வாங்கிய காரியத்திற்கு பயன்படுத்தாதவர்கள் மற்றும் கடன் தொகையை திருப்பிச் செலுத்து முன்னர் ஆடுகள், மாடுகள் மற்றும் கோழி போன்றவற்றை விற்க முயல்பவர்கள்/விற்றவர்கள்.

(இ) 15-3-1985 ஆம் தேதியில் பத்து ஆண்டுகளுக்கு மேலாக நிலுவையிலிருக்கும் நிறைவேற்று மனுவுக்குரிய உறுப்பினர்கள்.

மேற்கூறிய இனங்களின் கீழ் வரும் உறுப்பினர்களுக்கு அவர்கள் பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்த தக்க அறிவிப்பு அளித்து, கடன் திருப்பிச் செலுத்தாதவர்கள்மீது மட்டும் சட்ட ரீதியாக நடவடிக்கை தொடரப்படுகிறது. அதிலும் எந்த ஒரு கிராமத்திலும் அப்பகுதியில் உள்ள வசதி படைத்த உறுப்பினர்கள் மீது முதலில் நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. சிறு



நடவடிக்கை தொடரப் மற்றும் குறு விவசாயிகள் மீது சட்டபூர்வ நடவடிக்கை கடைசி படுவது இல்லை. மேலும் சட்ட ரீதியான நடவடிக்கை கடைசி கட்ட நடவடிக்கையாகவே மேற்கொள்ளப்படுகிறது.

தஞ்சை மாவட்டத்தில் உள்ள கும்பகோணம் மற்றும் தஞ்சை மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் தவணை தவறிய கடன்கள் மிக அதிகமாக உள்ளன. 31-12-1985-ல் முடிந்த காலத்திற்கு இவ் வங்கிகளில் தவணை தவறிய கடன்களின் விவரம் கீழே அளிக்கப் பட்டுள்ளது.

(ரூபாய் இலட்சத்தில்.)

| (1) | கேட்பு. (2) | வசூல். (3) | நிலுவை. (4) | கேட்புக்கு நிலுவையில் சதவீதம். (5) |
|---|---|---|---|---|
| கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி .. | 1,476.41 | 118.87 | 1,357.54 | 91.95 |
| தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கி .. | 1,369.05 | 75.19 | 1,293.86 | 94.51 |

தஞ்சை மத்திய கூட்டுறவு வங்கியைப் பொறுத்தவரை இவ்வங்கி கடந்த மூன்று ஆண்டுகளாக தொடர்ந்து தவணை தவறிய கடனை குறிப்பிட்ட அளவு வசூல் செய்யாததால் தேசிய வங்கியிடமிருந்து (நாபார்டு) பயிர்க்கடன் வழங்குவதற்கான கடன் அளவுகளை பெற முடியாமல் உள்ளது. மேலும், இவ் வங்கி நலிவுற்ற வங்கியாக தேசிய வங்கியால் வகைப்படுத்தப்பட்டு புனரமைப்புத் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. கும்பகோணம் மத்தியக் கூட்டுறவு வங்கி, தேசிய வங்கியிட மிருந்து கடன் அளவுகளைப் பெற தேவையான அளவுக்கு 30-6-1985 அன்றைய தேதியில் (கூட்டுறவு ஆண்டு இறுதியில்) தவணை தவறிய கடன்களை தேசிய வங்கி நிர்ணயம் செய்துள்ள அளவிற்கு வசூலித்ததால் இவ்வாண்டுக்கான கடன் அளவுகளை பெற வாய்ப்பு ஏற்படும். எனினும் 31-12-1985-ல் முடிந்த காலத்தில் இவ்வங்கியின் தவணை தவறிய கடன்களின் நிலுவை 94.95 சதவீதம் ஆகும். இந்நிலையில் தவணை தவறிய கடன் களை இரு வங்கிகளும் தேசிய வங்கி நிர்ணயித்துள்ள அளவு வசூலிப்பது அவசியமாகிறது. தவணை தவறிய கடன்களை வசூ லிக்காவிடில் இவ்வங்கிகள் அடுத்த ஆண்டிலும் பயிர்க்கடன்கள் வழங்குவதற்கு வேண்டிய கடன் அளவுகளை தேசிய வங்கிகளிட மிருந்து பெற முடியாத சூழ்நிலை உண்டாகும்.

எனினும் இவ்விரு வங்கிகளிலும் நவம்பர் 1985/டிசம்பர் 1985 திங்களில் வெள்ளம்/பெருமழையினால் இம்மாவட்டம் பாதிக்கப் பட்டபின் கடன் வசூலில் தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்பட

வில்லை. இவ்விரு திங்கள்களில் இம்மைய கூட்டுறவு வங்கி
களால் வசூலிக்கப்பட்ட தவணை தவறிய கடன்களின் விவரம்
கீழே அளிக்கப்பட்டுள்ளது.

| (1) | நவம்பர் 1985. (2) | டிசம்பர் 1985. (3) |
| --- | --- | --- |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி .. .. .. | 14.80 | 10.79 |
| தஞ்சை மத்திய கூட்டுறவு வங்கி | 34.45 | 30.76 |

இவ்விரு திங்களில் இவ்வங்கிகளால் வசூலிக்கப்பட்ட கடன்கள்
மிகவும் குறைந்த அளவில்தான் உள்ளன. இக்கடன்கள் வசூலும்,
அணுகுமுறையில் மூலமே வசூலிக்கப்பட்டுள்ளது. கடன் வசூ
லில் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக சட்டமன்ற
உறுப்பினர் பொதுவாக தெரிவித்துள்ளார். இது குறித்து குறிப்
பாக ஏதேனும் சுட்டிக் காட்டப்பட்டால் அதனை விசாரணை
செய்து, தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மா. மணிமாறன் : பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில்,
1977 ஆம் ஆண்டிலிருந்து இது வரை, வெள்ளத்தாலும்,
வறட்சியாலும் தொடர்ந்து பாதிக்கப்பட்டதன் காரணமாக,
விவசாயிகளுடைய உற்பத்தியில் அதிகமான பாதிப்பு ஏற்
பட்டு, அவர்களால் வாங்கிய கடனைக் கட்டமுடியாத
இக்கட்டான சூழ்நிலைக்கு அவர்கள் ஆட்பட்டு இருக்கிறார்கள்.
இந்த நிலையில், பல சந்தர்ப்பங்களில் கடனை ஒத்தி வைத்த
தன் காரணமாக, ஒட்டுமொத்தமாக கடன் சுமை அவர்கள்
தலையிலே அதிகமாக ஏறி இருக்கிறது. கடன்கள் அதிகமாகி
விட்ட காரணத்தால்—சிறு விவசாயிகளுக்கு மட்டும் நாம்
உதவி செய்திருக்கிறோமே தவிர, பெரிய விவசாயிகளுக்கு
அதிகமான இழப்பு ஏற்பட்டாலும் சலுகை இல்லாமல்,
அப்படி நிலையில் இன்றைய தினம் வாங்கிய கடனை கட்டாத
வர்கள் என்ற குற்றச்சாட்டுக்கு அவர்கள் ஆளாகியிருக்கிறார்
கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான்
கேட்டுக்கொள்வது— தொடர்ந்து, ஏறத்தாழ 9 ஆண்டுக்
காலமாக வறட்சி, வெள்ளத்தைச் சந்தித்துக் கொண்டு
இருக்கிற தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்
கும் வகையில், சிறு விவசாயிகள் தவிர, எஞ்சியிருக்கிற
விவசாயிகளுடைய கடன்களிலே இருக்கிற அனைத்து வட்டி
களையும் தள்ளுபடி செய்து ஒட்டுமொத்தமாக மொத்த
கடனையும் வசூலிக்காமல், குறிப்பிட்ட ஆண்டு தவணைகளில்
வசூலிக்க அரசு முன் வருமா? அதே நேரத்தில், இந்த



ஆண்டில் ஏற்பட்ட வெள்ளத்தாலும் அதிகமாகப் பாதிக்கப்
பட்டு இருக்கிறார்கள். அப்படி பாதிக்கப்பட்டிருக்கிற
விவசாயிகள் கடனை திருப்பிக் கொடுக்க முடியாத இக்கட்
டான சூழ்நிலையில் இருக்கிறார்கள். இந்த ஆண்டு பாதிக்
கப்பட்ட அந்த விவசாயிகளுக்கு இந்த ஆண்டு வாங்கிய
கடனை ஒத்தி வைத்து வசூலித்திட அரசு முன் வருமா என்று
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் தஞ்சை விவசாயிகளுடைய நிலையைப்
பற்றிச் சொன்னார்கள். தஞ்சாவூரைப் பொறுத்த அளவிற்கு
கடந்த 6, 7 வருஷ காலமாகவே வசூல் நடவடிக்கை சரியாக
இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய
கவனத்திற்கு சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். தஞ்சாவூர்
மத்திய வங்கியைப் பொறுத்தவரையில், கடந்த மூன்று
ஆண்டுக் காலமாக வசூல் இல்லாத காரணத்தினால்,
'நாபார்ட்'—இடமிருந்து கடன் வாங்குகிற தகுதியை இன்
றைக்கு நாம் இழந்து இருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோடிட்டுக் காட்டிய
படி, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் எல்லாம் கடன்
வசூலை தாமதப்படுத்தச் சொல்லி அதிகாரிகளுக்குச் சொல்லி
இருக்கிறோம். கும்பகோணம் பகுதியில் தான் கொஞ்சம்
அதிகமாகப் பாதிக்கப்பட்டு இருப்பதாக அதிகாரிகள்
சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அந்தந்தப் பகுதி
களில் வசூல் நடவடிக்கைகளை குறைந்த அளவுக்குச் செய்யச்
சொல்லி, நாங்கள் அரசினுடைய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தி
இருக்கிறோம். அதுவும் போக, வெள்ளத்தால் பாதிக்கப்
பட்டது என்று சொல்லி, வருவாய்த்துறை சான்றிதழ்
வழங்கும்போது, குறுகியகாலக் கடனை, மத்திய காலக்
கடனாக நீட்டித்துக் கொடுக்கவும் வழிவகை செய்துகொண்
டிருக்கிறோம். ஆனால், உறுப்பினர் அவர்கள், மொத்தமாக
வட்டி வசூலை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும், அசலை
மட்டும், ஒரு குறிப்பிட்ட காலக் கெடு கொடுத்து வசூலிக்க
வேண்டும் என்ற கோரிக்கையைச் சொல்லி இருக்கிறார்கள்.
இதுபற்றி உயர் மட்டக் குழுவிலிருந்து அரசாங்கத்திற்குப்
பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் உள்ள
அனைத்து மாவட்டங்களிலும் இதுபற்றி செய்ய முடியுமா
என்று ஆய்வில் இருக்கிறது. அரசாங்கத்திற்கு இதனால்
எவ்வளவு தொகை இழப்பு ஆகும் என்பதைப் பற்றி ஆய்ந்து
கொண்டிருக்கிறோம். அதன் அடிப்படையில் முடிவுகள்
எடுக்கப்படமுடியும்.

ஆனால், மாண்புமிகு உறுப்பினருக்கு சொல்லிக்கொள்
வது எல்லாம், கும்பகோணம் மத்திய வங்கியிலே இந்த ஆண்டு,
13 கோடியே 69 இலட்சம் ரூபாயை நாம் வசூல் செய்யக்
கூடிய நிலைமையில் இருக்கிறது. ஆனால் இதுவரைக்கும்

75 இலட்சம் ரூபாயினைத்தான், 31-12-1985 வரைக்கும் வசூல் செய்து இருக்கிறோம். அதேபோன்று, தஞ்சாவூர் மத்திய வங்கிக்கு 14 கோடியே 76 இலட்சம் ரூபாய் இந்த ஆண்டு டிமாண்டு இருக்கிறது. 1 கோடியே 18 இலட்சம் அளவுக்குத் தான் வசூல் செய்து இருக்கிறோம். இது ஏறத்தாழ 90 சதவிகிதம் அளவுக்கு மேலாக, கடன் வசூல் நிலுவை இருக்கிறது என்பதை உறுப்பினர் அவர்களுக்கு சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆகவே, தஞ்சை விவசாயிகள் மீது மாண்புமிகு உறுப்பினருக்கு இருக்கின்ற அதே பாசம், அரசாங்கத்திற்கும் இருக்கின்றது. எந்த அளவுக்கு விவசாயிகளுக்கு உதவி செய்ய முடியுமோ, அந்த அளவுக்கு கடன் வசூலிலே உதவி செய்ய இருக்கிறோம். தள்ளுபடி என்ற பிரச்சினை அரசாங்கத்தினுடைய கவனத்திலே தற்போது இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நாங்கள் தள்ளுபடி என்று சொல்கிற போது, வாங்கிய கடன்கள் அத்தனையையும் தள்ளுபடி செய்யக் கேட்கவில்லை. கேட்பதெல்லாம், ஒட்டுமொத்தமாக, அதிகமாக, 6, 7 ஆண்டுக் காலமாக வாங்கிய கடன்களை திருப்பிக் கொடுக்க சக்தி அற்ற காரணத்தினால், கடன் சுமை அதிகமாகி இருப்பதால், அந்தக் கடன் சுமைக்கு உள்ள வட்டியைத் தள்ளுபடி செய்து, அதை நீண்ட காலக் கடனாக மாற்றி 5 அல்லது 7, 8 ஆண்டுக் காலத்திற்குள்ளாக வசூலிக்க அரசு முன்வருமா என்பதோடு, அப்படி வசூலிக்கின்ற நேரத்தில் 6 ஆண்டுக் காலம் இடைவெளியில் வசூலிக்கும் போது ஒரு ஆண்டு தவறிவிட்டால், அந்த ஒரு ஆண்டுக்குரிய வட்டியை மட்டும் வசூலிப்பதிலே எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. அப்படி வசூலிக்க அரசு முன் வருமா? அதோடு, மேலும் இந்த மாவட்டத்தை பொறுத்தவரையில், தொடர்ந்து நெல் உற்பத்தி செய்கின்ற விவசாயிகள், இந்த ஆண்டும், கடந்த ஆண்டும், களம் வசதி, சாலை வசதி, பல வசதிகள் குறைவின் காரணமாக, உற்பத்தி செய்த நெல்லுக்கு நியாயமான விலை கிடைக்காததன் காரணமாக, தொடர்ந்து தொல்லைகளை அனுபவித்து வருகிறார்கள். ஆகவே, தஞ்சை மாவட்ட விவசாயிகள் மீது அதிக அக்கறை இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், அதை நான் வரவேற்று. அப்படிப்பட்ட அக்கறை காட்டுவதனால், அந்தக் கடன்களை? நீண்டகாலக் கடனாக மாற்றுவதற்கு அரசு முன்வருமா இந்த இடைவெளி காலத்தில் வெள்ளம் வந்த காலத்திலே கூட, இந்தச் சிரமமான காலத்திலே கூட, வசூலிக்கச் சொல்லும்போது, அதற்காகிற செலவுகளான அஞ்சல் செலவு, தந்தி செலவு, பயணப்படிச் செலவு இப்படி பல்வேறு செலவினங்களை வசூலிப்பது என்ற பெயரால் விவசாயிகளின் தலையிலே சுமத்துகிறார்கள். அப்படிப்பட்ட செலவினங்களைத் தவிர்ப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்பு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,
மிகு உறுப்பினர் அவர்கள் மறுபடியும் அந்தக் கேள்வியை
எழுப்பியிருக்கிறார்கள். இதை விவசாய உயர்மட்டக் குழு
விலிருந்து அரசாங்கத்திற்கு பரிந்துரை செய்து அனுப்பி
யிருக்கிறார்கள். இது தஞ்சாவூர் மாவட்டத்திற்கு மட்டு
மல்லாமல், தமிழகத்திலுள்ள அத்தனை மாவட்டங்களிலுள்ள
விவசாயிகளுக்கும் 'ரிலீஃப்' என்ற முறையிலே கேட்
டிருக்கிறார்கள். அதற்காக ரூ. 400 கோடிக்கு மேலாகும்
என்று மதிப்பிடப்பட்டிருக்கிற காரணத்தால், அதில் சரியான
இழப்பீடு எவ்வளவு வரும் என்பதை ஆராய்ந்து பார்த்துக்
கொண்டிருக்கிறோம். அந்தத் தகவல் வந்தவுடன், அந்
தத் தகவலின் அடிப்படையில், தகுந்த முடிவு எடுக்கப்படும்
என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்
கிறேன்.

எங்களைப் பொறுத்தவரையில், அரசாங்க அதிகாரி
களிடத்திலே சொல்லியிருக்கிறோம். வெள்ளத்தால் பாதிக்
கப்பட்ட பகுதிகளில் கடன் வசூலை நிறுத்தி வைக்கும்படி
அதிகாரிகளிடத்தில் சொல்லியிருக்கிறோம். பாதிக்கப்படாத
பகுதிகளில் கடனை வசூலித்தே ஆகவேண்டும். காரணம் 40
சதவீதம் வசூலைச் செய்யவில்லை என்று சொன்னால்,
அதனால் 'நபார்டிலிருந்து' கடன் வாங்குகிற அந்தத் தகுதியை
நாம் இழந்து விடுவோம் என்ற காரணத்தால், அந்தக் கடன்
வசூலை பாதிக்கப்படாத பகுதிகளில் ஓரளவிற்கு அனுகு
முறையில் நாங்கள் செய்து வருகிறோம் என்பதை மாண்பு
மிகு உறுப்பினருக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

4. முதல் துணை நிதி நிலை அறிக்கை 1985-86 அளித்தல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 1985-86
ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை
அறிக்கையை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அவைக்கு
அளிப்பார்கள்.

[முற்பகல் 10-50]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1985-86 ஆம் ஆண்
டிற்குரிய முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தில் வைக்க
முன் வந்துள்ளேன். இத் துணை மதிப்பீடு மொத்தம் ரூ. 76.13
கோடி நிதி ஒதுக்கத்திற்கு வகை செய்கிறது. இப்போது வைக்
கப்பட்டுள்ள இந்தத் துணை மதிப்பீடு, வருவாய்க் கணக்கின்
கீழ் ரூ. 60.21 கோடி நிதி ஒதுக்கத்திற்கும், மூலதன, கடன்
கணக்கின் கீழ் ரூ. 15.92 கோடி நிதி ஒதுக்கத்திற்கும் வகை
செய்கிறது.

2. 1985–86 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளைத் தயாரிக்கையில் எதிர்பார்க்கப்பட்ட செலவினங்கள் அனைத்துக்கும் போதிய நிதி ஒதுக்கம் செய்வதில் மிகுந்த கவனம் செலுத்தப்பட்டது. எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சித் திட்டங்கள் அனைத்திற்கும் நிதி ஒதுக்கம் செய்ய போதிய எச்சரிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டதால், ஒரு சில வளர்ச்சித் திட்டங்களே இத் துணை மதிப்பீடுகளில் இடம் பெறுகின்றன. எனினும் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள ஒரு சில முக்கியமான செலவினங்களை நான் இங்கு குறிப்பிடுகிறேன்.

3. தமிழ்நாடு அரசு, தனது பணியாளர்களின் ஊதிய விதங்களைத் திருத்தியமைப்பது பற்றி ஆராய, தமிழ்நாடு நான்காவது ஊதியக் குழுவை நியமித்தது. நான்காவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், அரசு பணியாளர்களின் ஊதிய விதங்களையும் ஏனைய படிகளையும் திருத்தியமைத்து அரசு ஆணைகள் பிறப்பித்தது. இவ்வகையில் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ஏற்பட்ட மொத்தச் செலவு ரூ. 90 கோடியாகும். இந்த ஆணைகளின் காரணமாக அரசுப் பணியாளர்களுக்குக் கொடுக்க வேண்டியிருந்த ஊதிய நிலுவைகளைக் கொடுப்பதற்காக எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூ. 34 கோடி முன்பணம் அனுமதிக்கப்பட்டது. 'பல்வகை' என்ற மானியக் கோரிக்கையின் கீழ் ஒட்டு மொத்த நிதி ஒதுக்கம் ஏற்கெனவே செய்யப்பட்டுள்ளதால், அடையாள நிதி ஒதுக்கம் இத் துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

4. மதுரை மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இவ்வாறு பிரிப்பதற்காக, பல்வேறு துறைகளில் கூடுதல் பதவிகளை ஏற்படுத்தவும் அலுவலகக் கட்டிடங்கள் முதலியனவற்றைக் கட்டவும் அனுமதியளித்து பல்வேறு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இவ்வகையிலான செலவு ரூ. 1.16 கோடி இத் துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

5. கூட்டுறவுத் தலைமைச் சங்கங்கள், மற்றும் இணைப்புச் சங்கங்கள் ஆகியவை தங்களுடைய பங்கு மூலதனத்தை வலுப்படுத்திக் கொள்ள அவற்றின் தொடக்க உதவித் தொகைக்காக எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூ. 3.63 கோடி முன்பணத்தை அரசு அனுமதித்துள்ளது. இத் தொகை இத் துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

6. அரசால் எடுத்துக் கொள்ளப்பட்ட மதுரை சர்க்கரை ஆலை உற்பத்தி செய்து வரும் சர்க்கரையின் மதிப்பு, இருப்பு மதிப்பு, நிலையான இருப்புகளின் மதிப்பு ஆகியவை தொடர்பாக, மதுரை சர்க்கரை ஆலைக்கு தமிழ்நாடு சர்க்கரை உற்பத்திக் கழகம் தொகை கொடுப்பதற்கு ஏதுவாக அரசு, தமிழ்நாடு சர்க்கரை உற்பத்திக் கழகத்தில் ரூ. 1.68 கோடி பங்கு மூலதன முதலீடு செய்ய அனுமதி வழங்கியுள்ளது.



7. அரசு மானியம் பெறும் கல்லூரிகளில், ஆசிரியர், ஆசிரியரல்லாத பணியாளர்களுக்குப் பண்டிகை முன்பணம் அரசு வழங்கியுள்ளது. முதற்கண் இச் செலவுக்காக, எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூ. 54.30 இலட்சம் முன்பணம் வழங்கப்பட்டுள்ளது. இத் தொகை இத்துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

8. அரசு புதிதாக, 85 உயர்நிலைப் பள்ளிகளைத் தொடங்கியுள்ளது. மேலும், 1985-86 ஆம் ஆண்டிலிருந்து 38 உயர்நிலைப் பள்ளிகளை மேல் நிலைப் பள்ளிகளாக உயர்த்தியுள்ளது. இவ்வகையிலான செலவு ரூ. 89.97 இலட்சம் இத்துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

9. பொது விநியோக முறையின் கீழ் பங்கீட்டு அட்டைகளின் பேரில் உயரளவு 20 கிலோ அரிசி வாங்குகிறவர்களுக்கு இலவசமாக ஒரு கிலோ அரிசி வழங்கும் திட்டத்தை 15-9-1984-லிருந்து செயற்படுத்த, அரிசி விலையில் 90 சதவீதமாக, எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூ. 70 இலட்சம் முன்பணம் வழங்கியுள்ளது.

10. சட்டம்-ஒழுங்கை மேலும் சிறந்த முறையில் நிலைநிறுத்த சென்னை, ஆவடியில் ஒன்றும், திருநெல்வேலி மாவட்டம், மணிமுத்தாற்றில் மற்றொன்றுமாக இரண்டு காவல் அணிகளைக் கூடுதலாக தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் ஏற்படுத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதற்கான செலவு மதிப்பீடு ரூ. 2,87,80,000. இது தொடர்பாக முதற்கண் செலவு செய்ய எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூ. 1,27,95,000 முன்பணம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத் தொகை இத்துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

11. 1985 நவம்பர் திங்களில் சென்னை மாநகர், செங்கற்பட்டு, தஞ்சாவூர், தென் ஆர்க்காடு மாவட்டங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டன. அப்பகுதி மக்களுக்குச் சொல்லொணாத் துயரமும், கடும் சேதமும் ஏற்பட்டன. அம்மக்களின் துயர் தணிக்கவும் சேதங்களைச் செப்பனிட்டு செம்மையுறச் சீர்திருத்தியமைக்கவும், பல்வேறு நிவாரண, மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக ரூ. 66.81 கோடி செலவிட அரசு அனுமதி வழங்கியுள்ளது. சாலைகள், மழை நீர் வடிந்தோடும் குழாய்கள் ஆகியவற்றைச் செப்பனிட சென்னை மாநகராட்சிக்கு வழங்கப்பட்ட ரூ. 15.16 கோடியும், பாசன வாயில்களைப் பழுதுபார்க்க அனுமதிக்கப்பட்ட ரூ. 8.00 கோடியும், அரசுச் சாலைகளைச் சீரமைத்திட அனுமதிக்கப்பட்ட ரூ. 8.98 கோடியும், துயர் தணிப்பு வகையில் அனுமதிக்கப்பட்ட கருணைக் கொடை ரூ. 17.42 கோடியும் இத் தொகையில் அடங்கும். துணை மதிப்பீட்டில் இவ்வகையில் மொத்தம் ரூ. 47.28 கோடி சேர்க்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகை அந்தந்த மானியக் கோரிக்கைகளின் கீழ் ஏற்படும் மீதங்களை மறு நிதி ஒதுக்கம் செய்வதன் மூலம் செலவிடப்படும்.

12. 1985 நவம்பரில் இதுவரை காணாத அளவுக்குப் பெய்த மழையால் பாதிக்கப்பட்ட உள்ளாட்சி மன்றங்களின் பணியாளர்கள், மானியம் பெறும் பள்ளிகளின் ஆசிரியர்கள், ஆசிரியரல்லாத பணியாளர்கள் ஆகியோர் உட்பட பி.சி.டி. நிலை அரசுப் பணியாளர்களுக்கு வெள்ளத் துயர் தணிப்பு முன்பணமாக அரசு அனுமதித்துள்ளது. இத் தொகையும் இத்துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

13. அரசுப் பணியாளர்களில் பல்வேறு பிரிவினருக்கு, அவர்களின் ஊதிய வீதங்களைப் பொறுத்து மொத்தத்தொகை ஒன்றை அரசு அண்மையில் வழங்கியுள்ளது. இதனால் மொத்தம் ரூ. 22 கோடி செலவு ஏற்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. அடையாள நிதி ஒதுக்கம் இத்துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

14. எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சித் திட்டங்கள் அனைத்துக்கும் முழுநிதி ஒதுக்கம் 1985–86 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டிருந்தது என்பதை நான் முன்னரே குறிப்பிட்டிருந்தேன். எனினும், சில செலவினங்கள் முற்றிலும் எதிர்பாரா வகையில் ஏற்பட்டன. இவற்றுக்கான அனுமதி பின்னரே வழங்கப்பட்டது. இவை இத்துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளன. இத் திட்டங்களை அரசு செவ்வையான முறையில் செயற்படுத்திட, இத்துணை மதிப்பீடுகளுக்கும், தேவையான நிதி ஒதுக்கீட்டிற்கும் ஒப்புதல் அளிக்குமாறு இப் பேரவையை வேண்டி அமர்கிறேன். வணக்கம்.

## 5. அறிவிப்புகள்.

### (அ) துணை மானியக் கோரிக்கைகளுக்கு வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்தல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1985–86 ஆம் ஆண்டு செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கையில் கண்டுள்ள மானியக் கோரிக்கைகள் மீது வெட்டுத் தீர்மானங்களைக் கொடுக்க விரும்பும் உறுப்பினர்கள் அவைகளை பேரவையின் 216-வது விதிக்கிணங்க 27–1–1986 ஆம் தேதி திங்கள்கிழமை மாலை 3 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும்.

## 6. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் 1979–80 அளித்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

1979–80 ஆம் ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளில் இறுதியாக அனுமதிக்கப்பட்ட நிதியொதுக்கத்தைவிட மிகையாகச் செலவாகியுள்ள சில இனங்களுக்கான மானியக் கோரிக்கைகளை இம் மன்றத்தில் வைக்க முன்வந்துள்ளேன்



2. 1984–85 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழு
1979–80 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கக் கணக்குகளை ஆய்வு
செய்து, சில மானியங்களின் கீழ் அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்
கத்தைவிட அதிகச் செலவாகியிருக்கிறது என்பதைச் சுட்டிக்
காட்டியுள்ளது. மிகைச் செலவு ஆனதற்கான காரணங்களை
ஆய்வு செய்த பிறகு ஒவ்வொரு மானியத்தின் கீழும் இறுதியாக
அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தைவிட மிகையாக ஆகியுள்ள
செலவுக்குரிய இந்த மானியக் கோரிக்கைகளைச் சட்டப் பேர
வையில் வைத்து ஒப்புதல் பெறுமாறு பொதுக் கணக்குக் குழு
பரிந்துரை செய்துள்ளது. அதன்படி, 1979–80 ஆம் ஆண்டிற்
கான மிகைச் செலவுக்குரிய இந்த மானியக் கோரிக்கைகள் இப்
பொழுது அவையில் வைக்கப்படுகின்றன. '' வீட்டு வசதி '',
'' சாலைப் போக்குவரத்துப் பணிகள்—கப்பல் போக்குவரத்து '',
'' ஓய்வூதியங்கள்— ஏனைய ஓய்வுக் கால நன்மைகள் '', '' மாநில
அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும் '' ஆகிய தலைப்
புகளின் கீழ் 1979–80 ஆம் ஆண்டில் மொத்தத்தில் ஆன மிகைச்
செலவு ரூ. 11.69 கோடியாகும்.

3. நிதியாண்டு முடிவடையும் நாளன்று '' குடிசைப்பகுதி
மேம்பாட்டு விரைவுத் திட்டங்களைச் '' செயல்படுத்துவதற்காக
குடிசைமாற்று வாரியத்திற்கு ரூ. 1.00 கோடி தொகை
அனுமதிக்கப்பட்டதாலும், '' 38— பொதுப் பணிகள்— பணியாள
ரமைப்பு, கருவிகள்— தளவாடங்கள் '' என்ற மானியத்தின் கீழ்
ஆன சில செலவுகள் மறு வகைப்பாடு செய்யப்பட்டதாலும்,
'' வீட்டு வசதி '' என்பதன் கீழ் தவிர்க்க முடியாத நிலையில்
மிகைச் செலவு ஏற்பட்டது.

4. பங்கு மூலதன முதலீட்டுத் தலைப்பின் கீழ் பல்வேறு
போக்குவரத்துக் கழகங்களுக்கு உதவித் தொகையாக ரூ. 3,83
இலட்சம் வழங்க தவறாக நிதி ஒதுக்கம் செய்யப்பட்டதால்,
இந்த மானியத்தின் கீழ் தொகை மிகையாக இருந்த காரணத்
தால் '' சாலைப் போக்குவரத்துப் பணிகள்— கப்பல் போக்கு
வரத்து '' என்பதன் கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது.

5. ஓய்வூதியம் பெறுபவர்கள் காலதாமதமாகத் தொகை
களைக் கோரியதாலும், மாநிலங்கள் சீரமைப்புச் சட்டத்தின் கீழ்
பிற மாநிலங்களிலிருந்து அதிக அளவில் கோரிக்கைகள் வந்த
தாலும் '' ஓய்வூதியங்கள்— ஏனைய ஓய்வு கால நன்மைகள் ''
என்பதன் கீழ் மிகைச் செலவு ஏற்பட்டது.

6. அரசுப் பணியாளர்களுக்கு வெள்ள நிவாரண முன்பணம்
வழங்கியதாலும், வீடு கட்டுவதற்கான முன் பணம் வழங்கும்
திட்டத்தின் கீழான அதிகாரங்களைப் பரவலாக்கியதாலும் ஏற்
படக்கூடிய செலவுகளை முன்னதாகவே மதிப்பிட முடியாததா

ஆம் '' மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும் ''
என்பதன் கீழ் மிகைச் செலவு பெருமளவு ஏற்பட்டது.
கழிவு நீரகற்றுத் திட்டங்களுக்காக 1979 ஆம் ஆண்டு செப்டம்பர்
திங்களில் சென்னைப் பெருநகர் குடிநீர்—கழிவு நீரகற்று வாரியத்
திற்கு வழங்கப்பட்ட ரூ. 15 இலட்சம் முறையான கணக்குத்
தலைப்பின் கீழ் கணக்கெழுதப்படவில்லை. இவற்றால், இந்த
மானியத்தின் கீழ் மொத்தத்தில் மிகைச் செலவு ஏற்பட்டது. மேலும்,

7. 1979–80 ஆம் ஆண்டிற்குரிய மிகைச் செலவிற்கான இம்
மானியக் கோரிக்கைகளுக்கு இம்மன்றம் இசைவளிக்க வேண்டு
கிறேன்.

## 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஆ) சென்னை குதிரைப் பந்தயச் சங்கம் (நிறுவனத்தை கை
யகப்படுத்துதலும் உரிமை மாற்றம் செய்தலும்) சட்டமுன்
வடிவு 1986 (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு
ஓர் அறிவிப்பு :—

1986 ஆம் ஆண்டு சென்னை குதிரைப் பந்தயச் சங்கம்
(நிறுவனத்தை கையகப்படுத்துதலும் உரிமை மாற்றம் செய்த
லும்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு
எண். 16/1986)-ஐ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் தமது
இசைவைத் தெரிவித்துள்ளார்.

திரு. ப. பொன்னுரங்கம் : On a point of order, Mr. Deputy
Speaker, 'Notice of a proposed amendment shall be sent to the
Secretary atleast three clear days before the sitting of the Assembly
at which the Bill is to be considered. Rule 136 (1) தெளி
வாகச் சொல்லுகிறது. மூன்று நாட்கள் அவகாசம் இருந்
தால்தான் அமென்மென்ட் கொடுக்க முடியும். நேற்று அறி
முகம் செய்துவிட்டு இன்றைக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொண்டால்
எங்களுடைய உரிமை பறிக்கப்படுகிறது என்பது ஒன்று. இரண்
டாவதாக, இந்த பில் பாஸ் ஆகி சட்டமாக வெளியே போனால்
குதிரைப் பந்தயச் சங்கத்தில் இருப்பவர்கள் கோர்ட்டுக்குப்போ
னால் அவர்கள் இதைச் சொல்லுவதற்கு வாய்ப்பு உண்டு. சட்ட
மன்ற விதிகளுக்கு மாறாக இந்தச் சட்டம் பாஸ் செய்யப்பட்டு
விட்டதாக இதையொட்டிக்கூடச் சொல்லலாம். ஆகவே, இந்
தச் சூழ்நிலையில் இந்தச் சட்டத்தை விவாதத்திற்கு எடுத்துக்
கொள்வது முறையல்ல, சரியல்ல.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஸ்பீக்கர்
வெய்வ் செய்யலாம். அப்படி வெய்வ் செய்து வருகிறது.
It is also stated in the Rule ''. . . . Unless the Speaker allows
a motion to be made....''. The Speaker can waive.

திரு. ப. பொன்னுரங்கம் : எங்கள் உரிமை பறிபோகிறது.
ரூல் பிரகாரம்தான், சட்டப்படிதான் நடக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ரூலை முழு
வதும் படியுங்கள். The Speaker can waive.

## 7. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) சென்னை குதிரைப் பந்தயச் சங்கம் (நிறுவனத்தை கை
யகப்படுத்துதலும் உரிமை மாற்றம் செய்தலும்) சட்ட முன்
வடிவு 1986.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேர
வைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்
மானத்தை மொழிகிறேன் —

'' 1986-ஆம் ஆண்டு சென்னை குதிரைப் பந்தயச் சங்கம்
(நிறுவனத்தை கையகப்படுத்துதலும் உரிமை மாற்றம் செய்த
லும்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு
எண். 16/1986)* ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.''

(முற்பகல் 11-00)

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, 1986 ஆம் ஆண்டு சென்னை குதிரைப்
பந்தயச் சங்கம் (நிறுவனத்தை கையகப்படுத்துதலும் உரிமை
மாற்றம் செய்தலும்) சட்ட முன்வடிவை ஆதரித்து, என் கருத்
துக்கள் சிலவற்றை எடுத்து வைக்க நான் விரும்புகிறேன். அரசு
இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வருவதற்கான விளக்கத்தை
அமைச்சர் தன்னுடைய விளக்க உரையிலேயே மிகவும் தெளி
வாகக் குறிப்பிட்டிருக்கிறார். 1930 ஆம் ஆண்டு அரம்பிக்கப்
பட்ட இந்தச் சங்கத்தை 1949 ஆம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சிக்
காலத்தில் ஒழிப்பதற்காக முயற்சிகளை மேற்கொண்டு, 1974 ஆம்
ஆண்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு குதி
ரைப் பந்தயத்தை ஒழிப்பதற்காகச் சட்டத்தைக் கொண்டு
வந்து, உச்ச நீதிமன்றம் அந்தச் சட்டத்திற்குத் தடை விதித்தது.
அந்தத் தடை விதித்து, பல ஆண்டுகளாகியும், இன்னும் வழக்கு
முற்றுப் பெறாத நிலையிலே, முடிவு ஆகாத நிலையில் இருப்
பதை, இந்த மன்றத்தில் இருக்கிற உறுப்பினர்கள் மட்டும் அல்ல,
நாட்டிலே இருப்பவர்கள் நன்றாக அறிவார்கள்.

*1986 ஆம் ஆண்டு சனவரி 23 ஆம் தேதிய தமிழ்நாடு
சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[திருமதி பா. வளர்மதி] [1986 சனவரி 24

சில காரியங்களை ஒழிக்க வேண்டும் : ஆனால் சில காரியங்
களை மக்களின் நலம் கருதி சீர்படுத்த செம்மையாகச் செயல்
படுத்த வேண்டுமென்ற அடிப்படையிலே, இந்த அரசு சென்னை
குதிரைப் பந்தயச் சங்கத்தைக் கையகப்படுத்த முடிவு எடுத்
திருக்கிறது. இந்த நல்லெண்ணத்தை, இந்த நல்ல நோக்கத்தை,
நாட்டிலே இருக்கிற நல்லவர்கள், விவரம் தெரிந்தவர்கள், நன்
றாகத் தெரிந்து, இந்த அரசினுடைய நோக்கத்தைப் பாராட்ட
வும் செய்து கொண்டிருக்கிறார்கள். பல்வேறு முடிவுகளை ஆத
ரித்துக்கொண்டிருக்கிற பொது மக்களும் சரி, அரசாங்கம் எடுத்து
வருகின்ற இந்தச் சட்ட முன் வடிவை இன்றைக்கு ஏற்றுக் கொண்
டிருக்கிறார்கள். ஆண்டு ஒன்றுக்கு ஏறத்தாழ ரூ. 7 கோடி
வருமானம் சம்பாதிக்கின்ற இந்தச் சங்கம் பெரும் அளவில்,
இன்றைக்கு ஊழல் காரியங்களிலே ஈடுபட்டிருக்கிறது. மக்கள்
பந்தயத்தில் கட்டுகின்ற பணம், பல தவறான வழிகளில் செல
வழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆனாலும் ஒரு சில செல்
வந்தர்களின் கையிலே சிக்கி, அவர்கள் வைத்ததே சட்டம் என்று
சொல்லக்கூடிய சூழ்நிலை இன்றைக்கு உருவாக்கப்பட்டிருக்கிறது.

பல வருஷங்களுக்கு முன்னாலே, மேல்நாடுகளில் ஸ்போர்டில்
ஆக எடுத்துக் கொள்ளப்பட்ட இந்தக் குதிரைப் பந்தயம், இன்
றைக்குப் பல ரூபங்களில் மாறி, சிலர் மட்டுமே கொள்ளை
அடிக்கக்கூடிய வாய்ப்புகள், இந்தச் சங்கத்தில் இன்றைக்கு உரு
வாக்கப்பட்ட ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அதையெல்
லாம் பார்த்ததற்குப் பிறகுதான் இந்த அரசு, அந்தக் கொள்ளை
அடிக்கக்கூடிய நிலை தொடர்ந்து போகக்கூடாது என்பதற்
காகவே, இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகின்ற நிலை இன்
றைக்கு உருவாகியிருக்கிறது.

ஸ்டூவர்ட்ஸ் என்ற குழுவும் அதனுடைய தலைவர்களும்தான்
இன்றைக்கு அந்தச் சங்கத்தை நிர்வகித்து வரக்கூடிய நிலை
இருக்கிறது. அவர்களுக்குள்ளே ஒற்றுமை இல்லாமல், அவர்க
ளுக்குள்ளேயே ஒன்றுபட்டு செயல்படக்கூடிய ஒரு சூழ்நிலை இல்
லாத காரணத்தால், இன்று பூசல்கள் மலிந்து, நிர்வாகமே இன்
றைக்குச் சீர்குலைந்து போகக்கூடிய ஒரு சூழ்நிலை குதிரைப்
பந்தயச் சங்கத்தில் உருவாக்கப்பட்டிருக்கிறது.

இலட்சக்கணக்கான பணத்தை, குதிரைக் குட்டிகள் வாங்கி
வளர்ப்பதற்கு, இந்தச் சங்கம் பல குதிரைச் சொந்தக்காரர்
களுக்குக் கடன்களாக வழங்கி, கொடுத்த கடனைத் திரும்ப
வசூலிப்பதற்கு முடியாமல், செல்வந்தர்கள் கடனைத் திரும்பத்
தரக்கூடிய சூழ்நிலை உருவாகாமல், கடனை வசூலிப்பதற்குக்
கூட முடியாத நிலை இன்றைக்குக் குதிரைப் பந்தயச் சங்கத்தில்
ஏற்பட்டிருக்கிறது. இந்த ஊழல்களைத் தவிர்ப்பதற்கு. இந்த
ஊழல்களை ஒழிப்பதற்காகத்தான் அரசு இந்தச் சட்ட முன்
வடிவைக் கொண்டு வந்திருக்கிறது என்பதை இந்த மன்றத்திலே
இருக்கிற பலர் தெரிந்துகொண்டாக வேண்டும்.



1986 சனவரி 24] [திருமதி பா. வளர்மதி]

குறிப்பாக, பாமர மக்கள் சென்னை வாழ் மக்கள், இன்
றைக்கு இதன் வாயிலாகப் பெரிதும் ஏமாற்றப்படுகிறார்கள்.
தெனாலிராமன் குதிரை முன்னாலும் ஓடும், பின்னாலும் ஓடும்
என்று சொல்வதைப் போல, அங்கு நடக்கின்ற பந்தயங்களில்,
அந்த நிர்வாகத்தினர் எந்தக் குதிரை முன்னால் வர வேண்டு
மென்று நினைக்கிறார்களோ, அந்தக் குதிரை வெற்றி பெற
வேண்டும் ; பணம் கட்டிய எந்தக் குதிரை, தங்களுக்கு லாபம்
தருமென்று நினைக்கிறார்களோ, அந்தக் குதிரை வெற்றி பெறக்
கூடிய அவல நிலை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. இதையெல்
லாம் எடுத்துக் காட்டுவதற்காகத்தான், இன்றைக்கு மக்கள் மத்
தியிலே, தவறான, பரவலான கருத்துக்கள் பேசப்படுகிற கார
ணத்தால், இன்றைக்கு அரசாங்கம் நல்ல முடிவை, பொது மக்
கள் பயன்படுகின்ற சூழ்நிலையை உருவாக்கவேண்டு மென்பதற்
காக இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்து, செயல்படுத்த
இருக்கிறது.

இன்றைக்கு பந்தயத்தில் பணயத் தொகையாக வைத்
திருப்பவர்கள், குதிரைச் சொந்தக்காரர்கள், குதிரையைப்
பழக்குகிறவர்கள், குதிரையில் சவாரி செய்பவர்கள் ஆகிய
வர்கள் கூட்டு சேர்ந்து சதி செய்து, பணம் கட்டிய பொது
மக்களை ஏமாற்றி பெருமளவுக்கு சம்பாதிக்கக்கூடிய சூழ்
நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். இந்த நிலையை மாற்றி
யமைக்க முன்வர வேண்டுமென்று இந்தச சந்தர்ப்பத்தில்
கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் குதிரைப் பந்தயம் நடக்கின்ற மைதானம்
அரசாங்கத்திற்குச் சொந்தமானது. 100 வருடங்களுக்கு
இந்தச் சங்கம் அரசாங்க நிலத்தை மிகக் குறைந்த பணத்
திற்கு குத்தகைக்கு எடுத்திருக்கிறது. இருந்தாலும்
அரசுக்கு மிகுந்த இழப்பு ஏற்படுகிறது. மிகக் குறைந்த
தொகைக்கு அரசாங்கத்திடமிருந்து குத்தகைக்கு நிலத்தைப்
பெற்றுக்கொண்டு அதன் மூலம் நிறைய வருமானம் பெற்றுக்
கொண்டிருக்கிற காரணத்தால் அரசுக்கு அதிகமான இழப்பு
ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையிலே ஏழை மக்கள்
வளம் எல்லாம் ஒரு சில முதலாளிகளுக்கு மட்டுமே போய்ச்
சேரக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. இதை
கருத்திற்கொண்டுதான், இதை ஒழிப்பதற்கு இன்றைக்கு
அரசு முன்வந்திருக்கிறது என்பதை இந்த மாமன்றத்திலே
இருக்கிற உறுப்பினர்கள் எல்லாம் தெரிந்த ஒன்றுதான்.

அதுமட்டுமல்லாமல் குதிரைப்பந்தயத்திற்கு டிக்கட் விற்று,
விற்ற டிக்கட்டில் விழுந்திருக்கிற பணத்தை சரியாக வழங்கா
மல், அரசுக்கு விற்பனை வரி இழப்பும் ஏற்படுகிறது
என்பதை எண்ணிப்பார்த்து அரசு இந்தச சங்கத்தை கையகப்
படுத்த சட்டம் கொண்டு வந்திருக்கிறது. உதாரணத்
திற்கு ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால் இந்தச் சங்கம்

[திருமதி பா. வளர்மதி] [1986 சனவரி 24

நடத்துகின்ற 'கான்டீனில்' மட்டும் வருடத்திற்கு 10 இலட்சம் ரூபாய் வருமானம் வருகிறது. இந்த அளவுக்கு அங்கே வருமானம் வருகிறது என்பது அங்கே செல்லக்கூடிய வர்களுக்கு தாராளமாகத் தெரிந்த ஒன்றுதான். ஆனால் ஆண்டுக்கணக்கிலே அந்த கான்டீன் நஷ்டத்தில் ஓடிக் கொண்டிருக்கிறது என்று கணக்கு காட்டிக் கொண்டிருக் கிறார்கள். இப்படிப்பட்ட பல தவறான வழிகளிலே இந்தச் சங்கத்தின் நடவடிக்கைகள் இருக்கின்ற காரணத்தால்தான் இன்றைக்கு கையகப்படுத்தக்கூடிய சட்டத்தை அரசு கொண்டுவந்திருக்கிறது. ஒரே வார்த்தையில் சொல்லப் போனால், இந்தச சங்கம் குதிரைப் பந்தயத்திற்கு பணம் கட்டிச் செல்கிறவர்கள் உடைய நலனை, ஆர்வத்தை சரியாக தங்களுடைய கவனத்தில் கொள்வதில்லை. தங்களுக்கு வேண்டியவர்கள் நிர்வாகத்தில் இடம் பெற்றிருப்பதற்காக அந்த நிர்வாகத்தில் இருப்பவர்களை தலைசிறந்த நிர்வாகி களாகக் கருதிக்கொண்டு சுயநலவாதிகளாக மாறக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

இந்தியாவிலேயே தலைசிறந்த நிர்வாகமாக விளங்கி வந்த இந்தக் குதிரைப் பந்தய சங்கம் ஒரு சில சுயநலவாதி களிடம், குறிப்பிட்ட சில பணக்காரர்களிடம் சிக்கி சீரழி கின்ற காரணத்தால், அதிலும் பொதுவாக பொதுமக்கள் ஆர்வத்தை குறைக்கின்ற வழிவகைகளில் ஈடுபட்டிருக்கின்ற காரணத்தால் அரசு இந்த நிர்வாகத்தை இன்றைக்கு ஏற்று நடத்த முன்வந்திருக்கிறது. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலர் இதை மறுத்தாலும் கூட, நான் குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் மறுத்துப் பேசினாலும்கூட, இப்படி மறுத்துப் பேசக்கூடிய சூழ்நிலை ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் பொறுப்பில் இருக்கும் போதே ஏற்பட்டிருக்கிறது: அவர்கள் ஆட்சியிலே அண்ணா மேம்பாலத்திற்குதிற்குக் கீழே, குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதற்கு அடையாளமாக இரண்டு குதிரை களை நட்டு வைத்தவர்கள்தான் இன்றைக்கு எதிர்க்கக்கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது. இது எனக்கு வேடிக்கையாக இருக்கிறது. வியப்பாக இருக்கிறது. அப்படியே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சொல்வதைப் போல இந்தச் சங்கத்தை அரசாங்கம் எடுத்துக்கொள்ளாமல் நிறுத்திவிட்டால் அண்டை மாநிலங்களான கர்நாடகத்திற்கும் ஆந்திர மாநிலத்திற்கும் நம்முடைய தமிழ்நாட்டில் இருக்கின்ற பணம் செல்லக்கூடிய சூழ்நிலை நிச்சயமாக ஏற்படும் நம்முடைய பணம் அங்கே போகும். அதை இந்த அரசு விரும்பவில்லை. தமிழ்நாட்டில் இருக்கிற பணம் அண்டை மாநிலங்களுக்குப் போகக்கூடிய இழப்பை ஈடுசெய்ய இந்த அரசு தயாராக இல்லை. ஆகவேதான் இந்தச் சட்ட முன்வடிவினை இன்றைக்கு என்னைப் போன்றவர்கள் ஆதரிக்கக்கூடிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். அரசுக்கு இந்தக் கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது.



1986 சனவரி 24] [திருமதி பா. வளர்மதி]

1974 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக அரசு இந்தக் குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதற்கு சொன்ன காரணங் கள் இரண்டு. ஒன்று, இந்தச் சங்கத்தில் ஊழல் மலிந்து விட்டது என்று சொன்னார்கள். இன்னொன்று, நிர்வாகச் சீர்கேடு என்று சொன்னார்கள். அவர்கள் சொன்ன அதே காரணங்களை வைத்துதான், இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் அரசு அந்த இரு காரணங்களைச் சுட்டிக்காட்டித்தான் இந்த நிர்வாகத்தை முறைப்படுத்து வதற்கு, சீர்படுத்துவதற்கு, கையகப்படுத்த வேண்டிய கட்டாய நிலையில் இருக்கிறது என்பதை நான் எடுத்துக்கூறி இந்தச் சட்ட முன்வடிவினை ஆதரித்து, விடை பெறு கிறேன். வணக்கம்.

[முற்பகல் 11-10]

**திரு. ப. பொன்னுரங்கம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் நேற்றையதினம் குறிப்பிட்டது போல் நாங்கள் எந்த தேசியமயமாக்கும் திட்டத்தையும் எதிர்ப் பவர்கள் அல்ல. ஆனால் தேசியமயமாக்குகின்ற சட்டம் நல்ல பயனை விளைவிக்கக்கூடியதாக இருக்க வேண்டும். பொது மக்களிலே ஒரு பிரிவினர், நடுத்தர வர்க்கத்தினர்—நான் பணக் காரர்களைப் பற்றியோ, சினிமா நடிகர்களைப் பற்றியோ குறிப் பிடவில்லை, நடுத்தர வர்க்கத்தினரைப்பற்றித்தான் குறிப்பிடு கிறேன்—இன்றைக்கு பிச்சைக்காரர்களாக, ஓட்டாண்டிகளாக, ஓடு எடுப்பவர்களாக, நாடோடிகளாக இந்தக் குதிரைப்பந்தயம் காரணமாகத் திரிகின்ற காட்சியினை நாம் பார்க்கிறோம். ஆனால் அரசாங்கம் அந்த குதிரைப் பந்தயத்தை எடுத்துக்கொள் கின்ற வகையில் கொண்டுவந்திருக்கின்ற சட்ட முன்வடிவிற்குச் சொல்லப்படுகின்ற காரணங்கள் இர்ரெகுலாரிட்டீஸ், மால் பிராக்டீஸ், கரப்ஷன் போன்றவைதான். இதுபோன்ற பல்வேறு முறைகேடுகள் நடந்திருக்கின்ற காரணத்தினாலும், அரசுக்கு வரவேண்டிய வருவாய் சீராக, முறையாக ஒழுங்காக வராத காரணத்தாலும் இதனை அரசு எடுத்துக்கொள்கிறது என்று சொல்லப்படுகிறது.

இவ்வாறு ஏன் இதை எடுத்துக்கொள்கிறீர்கள் என்று கேட் டால் அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது ஒரு பத்து கோடி ரூபாய் அரசுக்கு ஆதாயம் வருமே, அதை இழந்துவிட பொன்னுரங்கம் விரும்புகிறாரா என்று சொல்லக்கூடும். ஆனால், 10 கோடி ரூபாய் ஆதாயத்தை எதிர்பார்த்தால் கிட்டத்தட்ட ஒரு இலட்சம் பேர் அதாவது குறைந்தபட்சம் ஒரு ஆண்டுக்கு 10 ஆயிரம் பேர் பிச்சைக்காரர்களாகவும், கடன்காரர்களாகவும் ஆகின்ற காட்சியை நாம் பார்க்கிறோம். எனவே நேற்றைய தினம் நம்முடைய நாவலர் அவர்கள் ஒரு அருமையான திட்டத்தை, ஒரு அறிவிப்பை அறிவித்தார்கள். அவ்வாறு அறி வித்துவிட்டு என்ன சொன்னார்கள்? அதாவது அடுத்த ஜனவரியி லிருந்து கள்ளுக்கடைகளும், சாராயக்கடைகளும் ஒழிக்கப்

பட்டுவிடும் ஒன்றாம் தேதியிலிருந்து என்று சொன்னார்கள்.
அதனால் 200 கோடி ரூபாய் நஷ்டமானாலும் சரி பார் நி
பெனிபிட் ஆப்தி பப்ளிக் என்ற வகையில் மக்களின் நலனுக்
காக இதை நாங்கள் ஒழிக்கிறோம் என்று அவர்கள் நேற்று
அறிவித்தார்கள். அதே முறையில் ஒரு 10 கோடி அல்லது 20
கோடியே வையுங்கள்—1974-லே 3 கோடி, 2 கோடி என்ற
அளவுக்குத்தான் அரசுக்கு வருவாய் வந்ததாகச் சொல்லப்படு
கிறது—இந்த பத்து, பதினைந்து கோடி ரூபாய் வருகிறது என்ப
தற்காக பாமர மக்களும், படித்தவர்களும், விவரம் தெரிந்தவர்
களும் கூட இன்றைக்கு நசுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற
நிலைமையைத் தடுக்க வேண்டாமா? எனவே அதற்காகவா
வது இந்தக் குதிரைப்பந்தயத்தை ஒழிக்கின்ற சட்டத்தை—
தேசிய மயமாக்குகின்ற சட்டத்தை அல்ல— இந்த அரசு கொண்டு
வந்தால் அதை ஆதரிக்கின்ற முதல் இயக்கம் திராவிட முன்னேற்
றக் கழகமாகத்தான் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்
கிறேன்.

இன்னொரு கருத்தையும் நான் தெரிவித்து கொள்ள விரும்பு
கிறேன். இந்த மால் பிராக்டீஸ், இர்ரெகுலாரிட்டீஸ் போன்ற
வற்றால் அரசுக்கு வருகின்ற வருமானம் கம்மி என்றெல்லாம்
எதை வைத்துக் கண்டுபிடித்தீர்கள் என்று நான் தெரிந்து கொள்ள
விரும்புகிறேன். இதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தங்க
ளுடைய பதிலிலே விளக்கம் தருவார்கள் என்று நான் கருது
கிறேன். என்னுடைய சந்தேகம் என்னவென்றால் 1983-ல்
ஒரு இன்வெஸ்டிகேஷன் போடப்பட்டது. அந்த இன்
வெஸ்டிகேஷன் நடந்ததா? அப்படி நடந்திருந்தால் அதிலே
யார், யார் சம்பந்தப்பட்டு இருக்கிறார்கள்? இதற்கெல்லாம்
காரணமானவர்கள் இருப்பார்கள் அல்லவா? அவர்கள்
யார், யார்? அவர்கள் மீது என்ன நடவடிக்கை 1986 ஆம்
ஆண்டு வரையில் எடுக்கப்பட்டது? இந்த விவரங்களை எல்லாம்
நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

ஒரு நல்ல திட்டமாக இருந்தாலும், அது என்னவென்று தெரி
யாமல், திராவிட முன்னேற்றக் கழக அரசு எதைச் செய்திருந்
தாலும் அதை எதிர்த்தே ஆகவேண்டும் என்ற எண்ணம் வளர்ந்து
விட்டது. இவ்வாறு வளர்ந்திருப்பது உண்மையிலேயே வேத
னைக்குரியது. திராவிட முன்னேற்றக் கழகம் 1974 ஆம்
ஆண்டிலே இந்த குதிரைப்பந்தயத்தைஒழிப்பதற்கான சட்டத்தைக்
கொண்டு வந்தது. அப்போது குதிரைப்பந்தயத்தை ஒழித்
தவர்கள் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். இதுநாள்வரை
யில் இந்த சர்க்கார் இது சம்பந்தமாக ஏதாவது நடவடிக்கை
எடுத்திருக்கின்றதா? அந்த முயற்சியையாவது செய்திருக்
கின்றதா? நானே நேரடியாகப் பாதிக்கப்பட்டேன். அதனால்
தான் இந்தச் சட்டத்தின் மீது இவ்வளவு வேகமாகப் பேசுகிறேன்.
என்னுடைய நெருக்கமான நண்பர்கள் இருவர் அதாவது
என்னுடைய உயிர்க்கு உயிரான நண்பர்கள் சென்னை துறை
முகத்திலே நான் பணியாற்றிக்கொண்டிருந்தபோது என்னுடன்



பணியாற்றினார்கள். அதாவது விஸ்வநாதன், மகேஸ்வர
மூர்த்தி என்ற இரண்டுபேரும் கிளார்க்காகப் பணியாற்றினார்
கள். அவர்கள் இருவரும் எனக்குத் தெரியாமல் கிசு, கிசு
என்று பேசுவார்கள். என்னவென்று தெரியாது. கொஞ்சநாள்
கழித்துப் பார்த்தால் அவர்கள் இன்சால்வன்சி பெட்டிஷன் ஃபைல்
பண்ணினார்கள். ஏனென்றால் அவர்கள் இருவரும் ரேஸ்
ஆடினார்கள். அவர்களிலே ஒருவர் ரேசுக்காகப் பட்ட
கடனை அடைக்க முடியாமல் சென்னை துறைமுகத்தில் கிளார்க்
காக இருந்த அந்தப் பதவியை ராஜினாமா செய்துவிட்டார்.
அவர் பெயர் மகேஸ்வரமூர்த்தி. ராஜினாமா செய்த அவர்
இப்போது துபாய் சென்றிருக்கிறார். அதுவும் கஷ்டப்பட்டு
இங்கிருந்து சென்றிருக்கிறார். ஆக, அப்படி நாட்டை விட்டே
ஓட்டுகின்ற காரியத்தைச் செய்வது இந்தக் குதிரைப் பந்தயம்
என்பதை என்னால் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.
அம்மையார் அவர்கள் பேசும்போது ஒன்றைச் சொன்னார்கள்.
குதிரைப் பந்தயத்திற்கான சிலையை வைத்திருப்பதைப் பற்றிச்
சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி நான் சொல்வதாக
இல்லை. அவர்களே சொல்லிவிட்டதால் சொல்கிறேன். ஒரு
நினைவுச் சின்னமாகத்தான் அது வைக்கப்பட்டிருக்கிறது.

அத்தோடு அம்மையார் அவர்கள் இன்னொரு கருத்தையும்
சொன்னார்கள். நம் மாநிலத்தில் ரேசை எடுத்துவிட்டால்,
பக்கத்திலே இருக்கின்ற மாநிலங்களில்-ஆந்திரா, பெங்களூர்
மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில்—ரேஸ் நடக்கும் போது,
நம்முடைய பணம் அங்கே போய் வீணாகாதா என்று கேட்டார்கள்.
அதை ஒரு காரணமாக அமைச்சரும் சொல்லக் கூடும் என்பதால்
நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். பணம் நமக்கு வர
வில்லை என்பதற்காக, அண்டை மாநிலங்கள் செய்கின்ற காரியங்
களை எல்லாம் நாம் செய்து விட முடியாது. நான் ஒன்றை குறிப்
பிட விரும்புகிறேன். மன்னிக்க வேண்டும். யாரும் தவறாக எடுத்
துக் கொள்ளக் கூடாது. மகாராஷ்டிரா மாநிலத்தில்
பம்பாயில் ரெட் லைட் ஏரியா இருக்கிறது. அதை அந்த
அரசாங்கம் அங்கே அனுமதித்திருக்கிறது. அதனால் அதற்கு
வருவாய் வருகிறது. அதைக் காரணம் காட்டி தமிழ்நாட்டிலும்
வைத்துக்கொள்ளலாம் என்று நீங்களும் சொல்ல மாட்டீர்கள்.
நாங்களும் சொல்லமாட்டோம்.

ஏன் சொல்கிறேன் என்றால், ஒரு மாநிலத்திலே இருக்கிறது
என்பதற்காக எல்லாவற்றையும் நம் | மாநிலத்திலும்
கொண்டு வரவேண்டும் என்பது நியதி அல்ல. ஆகவே, நான்
மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன், திராவிட முன்னேற்
றக் கழகம் கொண்டு வந்தது என்பதற்காக, அந்தச் சட்டத்தை
நாம் கொண்டுவரக்கூடாது என்று நீங்கள் நினைப்பீர்களே
யானால் அது நல்ல உணர்வு அல்ல என்பதைப் பணிவோடு
தெரிவித்துக்கொண்டு, ஒரு பானை சோற்றுக்கு ஒரு
சோறு பதம் என்பது போல, என்னுடைய நண்பர்களே இதில்

பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற விவரத்தை எடுத்துச் சொன்
னேன். அப்பிரண்டிஸ்ஸாக இருந்தவர்கள்.
ஆனால் அவர்கள் இதிலே ஈடுபட்டு படித்தவர்கள்.
கள். அதிலே இன்னும் ஒருவர் ஓட்டாண்டியாகிவிட்டார்
கொண்டு பணியாற்றி வருகிறார். அங்கேயேதான் கஷ்டப்பட்டுக்
பாமர வர்க்கமும் பாதிக்கப்படக்கூடிய இப்படி நடுத்தர வர்க்கமும்,
விளையாட்டை, ஒழிப்பதற்குரிய நிலையில் உள்ள இந்த
கொண்டு வரவேண்டும் என்ற முறையில்தான் சட்டம்
சட்டத்தை நான் எதிர்க்கிறேன். காரணத்தைச் சொல்லி, இந்தச்

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, இந்த குதிரைப் பந்தயக் கம்
பெனியை தமிழக அரசு ஏற்கவேண்டும் என்று கொண்டு வரப்
பட்டிருக்கிற சட்டமுன்வடிவிலே காங்கிரஸ் கட்சியின் சார்பாக
என்னுடைய கருத்துக்களை இந்த மன்றத்திலே வைக்க நான்
முன் வருகிறேன்.

இந்தச் சட்டத்தைக் கொண்டுவருவதற்காக சொல்லப்பட்
டிருக்கிற காரணங்களைப் படித்துப் பார்த்தபோது எனக்கு
எங்களுடைய பகுதியில் சிறுவர்கள் விளையாடுகின்ற ஒரு விளை
யாட்டுத் தான் நினைவுக்கு வருகிறது. நான் கேட்கின்ற கேள்விக்கு
எல்லாம் 'ஆமாம்' அல்லது 'இல்லை' என்று சொல்ல
வேண்டும் என்று சொல்லிவிட்டு அவர்கள் விளையாட்டை ஆரம்
பிப்பார்கள். கேட்டுக் கொண்டே வந்து நடுவில் நீ உன் தாயை
அடிப்பதை நிறுத்திவிட்டாயா என்று கேட்பார்கள். ஆமாம்
என்று சொன்னால், தாயை நேற்று வரை அடித்தவன் என்று
பொருள். இல்லை என்று சொன்னால் இன்னமும் அடித்துக்
கொண்டிருக்கிறான் என்பது பொருள். அது போல தமிழக
அரசின் சார்பாக குதிரைப் பந்தயத்தை எடுத்துக் கொள்ளப்
போகிறார்கள் என்பதற்கு நாங்கள் ஆமாம் போட்டால், தமிழக
அரசு குதிரைப் பந்தயத்தை ஏற்று நடத்துவதை நாங்கள்
ஒத்துக் கொள்கிறோம் என்பது கருத்தாகும். இல்லை என்று
சொன்னால், குதிரைப் பந்தயங்களில் நடக்கின்ற தப்புகளை
எல்லாம் நாங்கள் ஏற்றுக்கொள்வது போல் பொருளாகும். அப்
படி ஒரு வித்தியாசமான சூழ்நிலையில் இந்தச் சட்டத்தை
இங்கே வைத்திருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால்
இந்தச் சட்டமுன்வடிவு வந்தவுடனேயே இந்த அவையில் எத்த
னையோ படங்களை வைத்திருக்கிறார்கள். அவற்றில் திரு
வள்ளுவரின் திருவுருவப்படமும் ஒன்று—திருவள்ளுவரின் படத்
தைப்பார்த்து, அவர் என்ன இந்த சூதைப் பற்றி
சொல்லியிருக்கிறார் என்ற கருத்தைப் பார்த்தேன்.

" வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம்
தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று "



என்று கூறியிருக்கிறார். வெற்றியே பெறுவதானாலும் சூதாட்
டத்தை விரும்பக் கூடாது. ஏனென்றால் வென்ற வெற்றியும்
தூண்டில் இரும்பை இரை என்று மயங்கி மீன் விழுங்கினாற்
போன்றது என்று கூறி சூதைப்பற்றி அந்த அதிகாரம் முழுவதும்
சொல்ல ஆரம்பித்து, 939-வது குறளில்

" உடைசெல்வம் ஊண்ஒளி கல்விஎன்று ஐந்தும்
அடையாவாம் ஆயம் கொளின் "

என்று சொல்லி அதில் சூதாடுதலை ஒருவன் மேற்கொண்டால்
புகழ், கல்வி, செல்வம், உணவு, உடை ஆகிய ஐந்தும் அவனைச்
சேராமல் ஒதுங்கும் என்று அதன் தீய அம்சங்களை எடுத்துச்
சொல்லியிருக்கிறார்கள்.

அத்தகைய மோசமான சூதாட்டம் ஒழிக்கப்பட வேண்டும்
என்ற கருத்தைத்தான் காங்கிரஸ் பேரியக்கக் கட்சியினர் வலி
யுறுத்துகிறோமே தவிர, அதை அரசு ஏற்று நடத்துவது என்பதில்
எந்தவிதமான வகையிலும், கொஞ்சம் கூட ஒத்த கருத்து
எங்களுக்குக் கிடையாது. ஆகவே அந்த சூதாட்டத்தை ஒழிக்க
வேண்டும் என்ற கருத்தை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

நான் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். உங்களு
டைய பிள்ளைகளிலேயே நல்லவன் யார் என்று கேட்டதற்கு
அதோ வீட்டு மாடியில் கூரையில் தீ வைக்கிறானே அவன் தான்
நல்லவன் என்று சொன்னது போல, இந்தக் குதிரைப் பந்தய
சூதாட்டத்தை ஒழிக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய
எண்ணமாக இருந்தாலும், ஒழிக்காவிட்டாலும் கூட அதில் உள்ள
தவறுகளையாவது இந்த அரசாங்கம் ஒழிக்க வேண்டும் என்ற
எண்ணத்தில் இந்தச் சட்டத்தினுடைய கருத்துக்களுக்குள் நான்
வர விரும்புகிறேன்.

(முற்பகல் 11–20)

இந்தச் சட்டத்தை உற்று நோக்குகின்றபோது, It has
been written in the Objects and Reasons that instances of irregulari-
ties and malpractices in the conduct of horse races have been
brought to the notice of the Government. என்றெல்லாம்
சொல்லப்பட்டிருக்கிறது பின்னாலே சொல்லப்பட்டிருக்கிற
கருத்தைப் பார்க்கிறபோது, 'AND WHEREAS' with reference to
clauses (b) and (c) of Article 39 of the Constitution— Directive
Principles of the consitution என்று ஒத்துழைப்பிற்கு எடுத்துக்
கொண்டு, நாங்கள் Directive Principles of Constitution படி
தேசிய உடமைக்கு வருகிறோம் என்பது ஏதோ சாத்தான்
வேதம் ஓதுவதைப் போல இருக்கிறது. நீங்கள் குதிரைப் பந்
தயத்தை ஒழிக்க வேண்டும். அது தான் இந்த அரசினுடைய
நோக்கமாக இருக்க வேண்டுமே தவிர, குதிரைப் பந்தயத்தை
அரசு எடுத்துக் கொள்கிறது என்று சொல்கிற கருத்து ஏற்
புடையதாக இல்லை என்பதை மீண்டும் ஒருமுறை வலியுறுத்த
விரும்புகிறேன்.

[திரு. டி. ஆர். வேங்கடரமணன்] [1986 சனவரி 24

இன்றைக்கு குதிரைப் பந்தயத்தைப் பற்றி இந்தச் சட்டம் வந்த பிறகு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூட குறிப்பிட் டார்கள். இதுபற்றி விசாரிக்க எங்களுக்கு கால அவகாசம் சரியாகத் தரப்படவில்லை என்ற கருத்தைச் சொன்னார்கள். இந்தக் குறுகிய கால அவகாசத்தில் சென்னை ரேஸ் கோர்ஸைப் பற்றி நான் விசாரித்த போது இதிலே இரண்டு வகையான குதிரைகளை வைத்திருப்பதாகச் சொன்னார்கள். Spirtal horses and stayal horses——என்ற இரண்டு வகையான குதிரைகளை வைத்திருக்கிறார்கள். குறைந்த தூரம் ஓடுவதற்கான குதிரை, அதாவது 400, 500மீட்டர்கள் ஓடுகிற குதிரை என்றும், 1,000, 2,000 மீட்டர் ஓடுகிற குதிரை என்றும் வைத்து இருக்கிறார்கள். இதில் குறைந்த தூரம் ஓடுகிற குதிரையை அதிக தூரம் ஓட வைத்து ஜெயிக்க வைப்பதும், அதிக தூரம் ஓடுகிற குதிரையை குறைந்த தூரம் ஓட வைத்து ஜெயிக்க வைப்பதும் போன்ற தில்லுமுல்லுகள் இருப்பதாகச் சொன்னார்கள்.

அடுத்தபடியாக இங்கே 'அன்போன்சி வின்' 1985 ஜூலை வரையிலும், இந்தக் குதிரை ஜெயிக்கவே ஜெயிக்காது, இது குதிரையா அல்லது கழுதையா என்று நாங்கள் சந்தேகப்படு கின்ற குதிரைகள் எல்லாம் கூட வெற்றி பெற்றுக் கொண் டிருந்த சூழ்நிலைகள் அங்கே இருந்தன என்றும் சொன்னார்கள்.

அடுத்தபடியாக சில முக்கியமான பத்திரிகைகள் குதிரைப் பந்தயத்தைப் பற்றி ஸ்போர்ட்ஸ் என்ற எண்ணத்திலே எழுதி வந்தன. குறிப்பாக சென்னையிலிருந்து வருகிற இந்துப் பத் திரிகை ஒவ்வொரு சனிக்கிழமையும் 'ஸ்போர்ட்ஸ் சவண்ட்' என்று குதிரைப் பந்தயம் பற்றி எழுதி வந்தார்கள். ஆனால் அங்கே பந்தயம் நடக்காமல், தனிநபர் ஆளுகையில் குதிரைப் பந்தயம் சென்றதன் காரணமாக குதிரைப் பந்தயம் பற்றி எழுதுவதை நிறுத்துகிற அளவிற்கு குதிரைப் பந்தயத்திலே தில்லுமுல்லுகள் அதிகமாக வளர்ந்து கொண்டிருந்ததென்று அறிகிறேன். அந்தத் தில்லுமுல்லுகளை அறிந்து கொள்ள அரசு நான்கு உறுப்பினர்கள் கொண்ட ஒரு கமிட்டியை அமைத்து, அதிலே கமிஷனர் ஆப் போலீஸ், நம்முடைய ஹோம் செகரட்டரி, சையது யூசுப், சுப்பையா என்ற நான்கு பேர்களைக் கொண்டு செயல்படச் செய்தார்கள் என்று அறி கிறேன். இந்த நான்கு பேர்களும் எத்தனை முறைகள் அந்த ரேஸ் கிளப்பிற்குச் சென்றிருக்கிறார்கள், எத்தனை முறை அங்கே பங்கு கொண்டிருக்கிறார்கள் என்று விசாரித்த போது, நம்முடைய கமிஷனர் ஆப் போலீஸ் அவர்களும், ஹோம் செகரட்டரி அவர்களும் தங்களின் அலுவல் காரணமாக அதிகமாக அங்கே செல்வதில்லையென்று அறிகிறேன்.

மெஜாரிட்டி ஸ்டூவர்ட்ஸ் கமிட்டியிலே இருந்தவர்கள் கூட அரசு நியமனம் பெற்ற பிறகும் கூட அங்கே பணி புரிபவர்கள் காரணமாக அங்கே அரசுக்குத் தெரிந்தே, சட்டத்திற்கு விரோதமான பட்டே முல்கள் நடந்து கொண்டிருந்தன என்று நான் அறிகிறேன்.



1986 சனவரி 24] [திரு. டி. ஆர். வேங்கடரமணன்]

அடுத்து 'பெட்டிங் டாக்ஸ் எவேஷன்' என்று சொல்லி இருக் கிறார்கள். பெட்டிங் டாக்ஸ் பொறுத்தவரையில், ஆயிரம், இரண்டாயிரம் கட்டுகிறவர்கள் கூட 100 ரூபாய், 200 ரூபாய் என்று கணக்கு எழுதி வைத்துக் கொண்டு அரசுக்கு மிகப் பெரிய இழப்பை ஏற்படுத்தி மோசடிகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்றும் அறிகிறேன். இந்த அரசு குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதை தன்னுடைய இலட்சியமாக வைத்துக் கொள்ள வேண்டுமே தவிர, அதனை ஏற்று நடத்தி அதன் மூலமாக ஆதாயம் பெறுவோம் என்ற கருத்தை அரசு வலியுறுத்தக் கூடாது.

இந்தச் சட்டத்திலே இருக்கிற குறையைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். செக்ஷன் 18-இல் 'பிரையாரிட்டி ஆப் கிளெய்ம்ஸ்' என்று போட்டிருக்கிறார்கள். இதில் ஒன்றைக் குறிப்பிட விரும்பு கிறேன். இந்த மெட்ராஸ் ரேஸ் கிளப் என்பது இந்தியக் கம் பெனிச் சட்டங்களின் கீழே ஒரு வரையறுக்கப்பட்ட கம்பெனி யாக நாளது தேதி வரையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்தக் கம்பெனியை அரசு ஏற்றுக் கொள்வதன் மூலமாக இந்தக் கம்பெனியினுடைய மூலதனங்களை, 'அசெட்ஸ் அன்ட் லையபிலிட்டீஸ்' எவ்வாறு பிரிக்க வேண்டுமென்றெல்லாம், அதிலே சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் கம்பெனியினுடைய லையபிலிட்டியை எவ்வாறு பிறருக்குச் செலுத்த வேண்டுமென்று சொல்லுகிறபோது செக்ஷன் 18 கீழ்க்கண்டவாறு விவரிக்கிறது.

Section 18—Priority of claims: The claims made under section 17 shall have priorities in accordance with the following principles, namely:—

(a) Cotegory I shall have precedence over all other categories and Category II shall have precedence over Category III and so on என்று சொல்லப்பட்டு இருக்கிறது. ஆனால் செட்யூல் இரண்டை எடுத்துப் பார்க்கிற போது, கேட்டகரி 1 என்று பார்க்கிற போது. See sections 17, 18, 19, 20, 22 and 25 (1), order of priorities for the discharge of liabilities of the Club:

Category I—

(a) Wages, salaries and other dues payable to the employees of the Club.

Category II—Principal amount of secured loans advanced by various institutions availed by the Government.

Category III—Principal amount of unsecured loans advanced by institutions.

Category IV—(a) Any credit availed of by the Club for the purpose of Horse race operations

Category I— Wages, salaries and other dues payable to the employees of the Club.

Category II—Principal amount of secured loans advanced by institutions என்றும், கேட்டகரி IV, இதைத்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைக்குறித்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கேட்டகரி IV என்று கடைசியாக, இந்த பழைய கம்பெனியிலிருந்து எதற்கெல்லாம் நாங்கள் பணத்தை திருப்பிச் செலுத்துகிறோம் என்று நீங்கள் 18-வது பிரிவிலே உத்தரவாதத்தைக் கொடுக்கிறீர்களோ, அந்த 1, 2, 3, 4 என்று போட்டு, கேட்டகரி V என்று சொல்லி

(a) Revenue, taxes, cesses, rates of other dues to Central Government, State Government and local authorities என்று போட்டிருக்கிறார்கள். இதை தமிழக அரசு கொண்டு வந்திருப்பதை அறிந்து நான் மிகவும் ஆச்சரியப்பட்டேன். எந்தப் பணம் பாக்கியாக இருந்தாலும், அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய தொகைதான் முதலிலே செலுத்தப்பட வேண்டும். அதுதான் பர்ஸ்ட் பிரியாரிட்டி என்று உலகத்திலே ஏற்றுக் கொள்ளப்பட்ட மிகவும் அடிப்படையான ஒரு அரசுக் கொள்கை. எந்த ஒரு சட்டம் போட்டாலும், அரசுக்குச் செலுத்தப்பட வேண்டிய வரிகளையும், தொகைகளையும் முதலிலே செலுத்தப் படவேண்டும். இதை வைத்துப் பார்க்கின்றபோது, இந்தியன் கம்பெனிஸ் ஆக்டைப் பார்க்கின்ற போது, வைண்டிங் ஆப் புரவிசன்ஸ் என்பதை எடுத்துப் பார்த்தால், பிரிவு 530-லே, பிரபரன்ஸியல் கிளெயிம்ஸ் என்று போட்டிருக்கிறார்கள். பிரிவு 18-லே யார் யாருக்கெல்லாம் கொடுக்க வேண்டும் என்று போட்டிருக்கிறார்கள். அதைப் போன்று இந்தியன் கம்பெனிஸ் சட்டம் செக்சன் 530-லே சொல்லப்பட்டு இருக்கிறது.

Section 530—Preferential payments : (1) In a winding up there shall (b) paid in priority to all others debts—

'(a) all revenues, taxes, cesses and rates due from Company to the Central or State Government or to a local authority at the relevant date as defined in clause (c) of sub-section (8), and having become due and payable within the twelve months next before that date.' என்று சொல்லியிருக்கிறார்கள், யார் யாருக்கெல்லாம் கொடுக்க வேண்டும் என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். பிரிவு 530-லே கிட்டத் தட்ட 9 பிரிவுகளாக, யார் யாருக்கு என்னென்ன பணங்கள் கொடுக்கப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொல்லப்பட்ட பணங்களில், முதலாவதாகக் கொடுக்கப்பட வேண்டியது, அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய வரி பாக்கிதான். எற்கனவே நான் சொல்லி இருக்கிறேன். பொதுத் துறையிலே, ஏகப்பட்ட கோளாறுகளும், ஏகப்பட்ட மோசடிகளும், ஏகப்பட்ட அநியாயங்களும் நடந்து.





அரசுக்குச் செலுத்தப்பட வேண்டிய கோடிக்கணக்கான ரூபாய் இன்றைக்கு சென்னை குதிரைப் பந்தயச் சங்கத்திலேயிருந்து தமிழக அரசுக்கு வர வேண்டியதாக இருக்கிறது. அந்தப் பணத்தைப் பெறுவதுதான் அரசினுடைய முதல் நோக்கமாக இருக்க வேண்டும். அதை விடுத்து, பிரியாரிட்டி ஆப் கிளெயிம்ஸ் என்று சொல்லி, 5 வது ஆகப் போட்டு, தமிழக அரசு தனக்கு வரவேண்டிய பணத்தை தாரை வார்க்கின்ற ஒரு அவல நிலைமை ஏற்பட்டு இருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இது எப்படி ஏற்பட்டது, எதனால் ஏற்பட்டது?

அதுமட்டுமல்லாமல், மத்திய அரசு போட்டு இருக்கிற ஒரு சட்டத்திலே, மைய அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு சாரத்து ஏற்றுக் கொள்ளப்பட்டு இருக்கிறது. அதன் அடிப்படையிலே எந்தப் பணமாக இருந்தாலும், அந்தப் பாக்கியை முதலிலே அரசுக்கு செலுத்த வேண்டும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. அதை விடுத்து, அரசு ஏதோ, தானாவதிப் பிள்ளை தனக்கு வந்ததை பிறருக்குக் கொடுத்ததைப் போல, உலகத்திலே இருக்கிற அனைவருக்கும் கொடுத்துவிட்டு, கடைசியாக எங்களுக்கு வரவேண்டியதைக் கொடுங்கள் என்று சொன்னால், அந்த எப்படி செண்ட்ரல் கவர்ன்மெண்ட் ஏற்றுக் கொள்ளும் என்று தெரியவில்லை.

இன்றைக்கு இந்தச் சட்டத்தை நாம் பாஸ் செய்தாலும், தமிழக அரசு தனக்கு வரவேண்டிய பணத்தை வேண்டாம் என்று சொல்லி விட்டாலும், இன்கம் டாக்ஸ் டிபார்ட்மெண்ட் எப்படி தங்களுக்கு வரவேண்டிய பணத்தை வேண்டாம் என்று சொல்வார்கள். இந்த செக்சன் மத்திய அரசினுடைய அதிகாரத்திலே உள்ள இன்கம் டாக்ஸ் டிபார்ட்மெண்ட் போன்று உள்ள வேறு துறைகளை எப்படிக் கட்டுப்படுத்தும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும். (மணியடிக்கப்பட்டது.) Sir, I am on a legal point. போதிய அவகாசம் இல்லாததால், the right to discuss in the Assembly has been denied. ஆகவே இந்தச் சட்டப் பிரச்சினையை வைத்து, எவ்வாறு இது இயற்றப்பட்டு இருக்கிறது என்பதை நீங்கள் கொடுத்த அந்த 24 மணி இடைவெளியில் படித்துத் தெரிந்துக் கொண்ட ஒட்டை இது என்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினர் பொன்னுரங்கம் அவர்கள் சொல்லியது போன்று, குறைந்த பட்சம் 3 நாட்களாவது கொடுத்தால் தான், இதைப் போன்ற சட்டங்களைப் படித்து, நிறைய விஷயங்களைப் பற்றி இங்கே பேச முடியும். அந்த வாய்ப்பையும் நீங்கள் மறுக்கிறீர்கள்.

(முற்பகல் 11-30)

A right to discuss in the Assembly has been denied. ஆகவே இதுபோன்ற தவறுகள் நடக்காமல் இது போன்ற சட்டங்களை இயற்றுகின்ற போது பந்நோக்கு முனைப்போடு ஆராய்ந்து நீங்கள் சட்டங்களை இயற்ற வேண்டும். கண்டிப்பாக

கேட்டகிரி V மத்திய அரசைக் கட்டுப்படுத்தாது. தமிழக அரசையும் கட்டுப்படுத்தக் கூடாது என்ற கருத்தை வலியுறுத்திக் கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்களால் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு இருக்கிற இந்த குதிரைச் சங்கத்தை கையகப்படுத்துகிற இந்த சட்ட முன்வடிவின் மீது இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்ட முன் வடிவை வரவேற்று அதே நேரத்தில் மேலும் இதை வலுவூட்டு வதற்குரிய சில பிரச்சினைகளை நான் முன் வைக்க விரும்பு கிறேன். எதற்காக கையகப்படுத்துகிறது என்று சொல்லப் படுகிறதோ அந்தத் தவறுகள் அரசு கையகப்படுத்தியதற்குப் பின்னால் நிகழாத ஒரு நடைமுறை உத்திரவாதத்தை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் ஒரு நோக்க காரண காரிய விளக்கம் என்ற முறையில் சொல்லப்பட்டு இருக்கிற விஷயத்தில் எந்தக் காரணத் தாலே இந்த சட்ட முன்வடிவு பேரவையில் முன் மொழியப் பட்டு இருக்கிறது என்பது பற்றிக் குறிப்பிடுகிறபோது அங்கே பெரும்பகுதியாக நடைபெற்று இருக்கிற முறைகேடுகளையும் ஊழல்களைப் பற்றியும் எடுத்துச் சொல்லப்பட்டு இருக்கிறது. அதேபோல் செல்வமும், உற்பத்திக்கான வழிவகையும் ஒரு சிலரிடத்தில் சென்று குவிவதற்கு இருக்கிற வாய்ப்பு பற்றியும் எடுத்துச் சொல்லப்பட்டு இருக்கிறது. இத்தகைய குதிரைப் பந்தயம் போன்ற சூதாட்டப் பகுதியை அரசு மேற்கொள்ளு கின்ற அதே நேரத்தில் இது போன்று இன்றும் மேற்கொள்ள வேண்டிய பல்வேறு விஷயங்களில் உண்மையிலேயே சூதாட்டம் நடைபெறுகிற இடங்களை இந்த அரசு இன்றும் கண்டுகொள் ளாமல் இருக்கிற ஒரு விஷயத்தை நான் குறிப்பாக சுட்டிக் காட்ட வேண்டி இருக்கிறது. மக்களின் நலனைப் பாதுகாப்ப தற்காக மாநில அரசு கொண்டுள்ள அந்த அக்கறையில் நான் உண்மையிலே மகிழ்ச்சி அடைகிறேன். அந்த அக்கறை அந்த ரங்க சுத்தியாக இருக்க வேண்டும் என்று வற்புறுத்த நல்ல எண்ண விழைவோடு நான் ஒரு சில கருத்துக்களைக் குறிப்பிட விரும்புவது, இன்றைக்கு பொது மக்களைப் பாதிக்கின்ற ஒரு விஷயம் வர்த்தக சூதாட்டம் தான். மக்களின் மிக அத்தியாவசிய தேவையான உணவுப் பண்டங்களை பதுக்கி, செயற்கையாக ஒரு பஞ்சத்தை சிருஷ்டித்து, நல்ல விலையில் விற்பதற்கு விரோதமாக ஒரு கள்ள விலையில் விற்று கொள்ளை அடிக்கிற ஒரு வாய்ப்பாக ஒரு சூதாட்டமாக மக்களுக்கு மிகப் பெரிய இடையூறாக அமைந்து இருக்கிற விஷயம் இது ஆகும். உணவு தானிய வியாபாரத்தை அரசாங்கம் மேற் கொள்ளுவது குறித்து அவசர அவசியமாக பரிசீலிக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறேன்.





அதேபோல் இன்னொரு விஷயத்தை நான் குறிப்பிட விரும்பு வது. இந்தக் குதிரை பந்தய நிறுவனத்தை நாம் கையகப்படுத்து கிற அதே நேரத்தில் தமிழ்நாட்டில் கையகப்படுத்த வேண்டிய மிக முக்கியமானது தமிழ்நாட்டு திரையரங்குகள். தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய திரையரங்குகள் இன்றைக்கு கறுப்புப் பணத்தை மூடி மறைத்துக் கொள்ள உதவுகிற ஒரு படுதாவாக இருந்து கொண்டு இருக்கின்றன. ஆகவே, தமிழ்நாட்டில் இருக்கிற திரையரங்கங்களை லாபகரமாக நல்ல நோக்கோடு பயன்படுத்து வதற்கு ஏன் நீங்கள் அவைகளை கையகப்படுத்தக் கூடாது என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் இங்கே எவ்வளவு தொழிலாளர்கள் பணி யாற்றுகிறார்கள் என்ற விவரம் சொல்லப்படவில்லை. ஏறத் தாழ அநேகமாக 4 ஆயிரம் பேர் பணியாற்றக் கூடும் என்று நான் நம்புகிறேன். இந்தத் தொழிலாளர்களுடைய சர்வீஸ், அவர்கள் பணி எந்த அளவுக்கு பாதுகாக்கப்படுகிறது என்பது பற்றிய முழுமையான விவரம் இதில் இல்லை. அவர்களை அரசு ஊழியர்களாக அங்கீகரிப்பதோடு அந்த ஊழியர்களின் பணிப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதோடு அவர்களின நியாயமான கோரிக்கையையும் பாதுகாக்க வேண்டும்.

இந்த அரசு கையகப்படுத்தியதற்குப் பின்னர், அங்கே இருக்கக் கூடிய அந்தத் தொழிலாளர்களுக்கு வேலை பாதுகாப்பற்ற ஒரு நிலைமை அல்லது வேறு சிக்கலான நிலைமை ஏற்படாமல் இருப்பதற்கு, முழுமையான உத்தரவாதம் செய் யப்படவில்லை என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். எனவே, இங்கே முன் மொழியப்பட்டு இருக்கிற சட்ட முன் வடிவை நான் வரவேற்பதோடு, நான் சொன்ன இந்தக் கருத்துக் களையும் மனதிலே கொண்டு அரசு எதிர்காலத்தில் நடவடிக்கை களை மேற்கொள்ள வேண்டும் என்பதனையும் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்பாக உரையாற்றி அமர்ந்திருக்கிற பொன்னுரங்கம் அவர்களும், சுப்பராயன் அவர் களும் இந்த மசோதாவை எதிர்ப்பதாகச் சொல்லிவிட்டு, சில கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். (குறுக்கீடு) வேங் கடரமணன் அவர்களும், பொன்னுரங்கம் அவர்களும். (குறுக் கீடு) அன்புக்குரிய பொன்னுரங்கம் அவர்கள் புரிந்து கொள் ளாமல் அந்தக் கருத்தைச் சொன்னார் என்று நினைக்கிறேன். அவர் சொல்லுகிறபோது ஒன்றைச் சொல்லி இருக்கிறார் இந்தக் குதிரைப் பந்தயத்தினால் விளைவாக ஏற்படுகின்ற கொடுமைகளை எல்லாம் சொல்லி, நண்பர்களை எல்லாம் உதாரணம் காட்டி ......(குறுக்கீடு).

Thiru T. R. VENKATARAMANAN : I never said, I oppose the Bill. He cannot misquote me.

திரு. சைதை சா. துரைசாமி : நன்றி, அவர் நண்பர்களை எல்லாம் உதாரணம் காட்டி இந்தக் குதிரைப் பந்தயத்தினுடைய கொடுமைகளைச் சொன்னார். நாங்கள் அதை ஏற்றுக் கொள்கிறோம். அதிலே எங்களுக்கு மாறுபாடு இல்லை. ஆனால் இன்றைக்கு இந்தக் குதிரைப் பந்தயம் நடைபெறுவது— திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே கொண்டு வந்த அந்த ஓட்டை ஓடிசலான, சந்து பொந்து வைத்துக் கொண்டு வந்த சட்டத்தினால் உச்சநீதி மன்றத்தின் தடையை வாங்கி, குதிரைப் பந்தயம் நடந்து கொண்டிருக்கிறது.

ஆகவே, அங்கே இயங்கிக் கொண்டிருக்கிற ஒரு அமைப்பு பல தவறுகளைச் செய்து கொண்டிருக்கிறது என்ற காரணத்தினாலேதான், உச்சநீதி மன்றத்தினுடைய தீர்ப்பு கிடைக்கும் வரையில், முடிவு தெரியும் வரையில், இன்றைக்கு அந்த அமைப்பை கையகப்படுத்தி, அரசே நேரடியாக நிர்வாகத்தினை நடத்த வேண்டும் என்கிற அடிப்படையிலே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதே தவிர, குதிரைப் பந்தயத்தினுடைய கொடுமைகளை, அதனால் ஏற்படுகிற விளைவுகளை அறியாதவர்கள் அல்ல நாங்கள். பொன்னுரங்கம் அவர்கள் சொன்ன அந்தக் கருத்து, அதாவது இன்றைக்கு பல பேர்கள் அதிலே பொருளை இழந்தாலும், இன்றைக்கு இங்கே மூடினாலும், பெங்களூர், ஆந்திரா, கல்கத்தா என சில இடங்களுக்குச் செல்கிறார்கள். அதற்கு ஒரு உதாரணத்தை அவர்கள் சொன்னார்கள். மற்ற மாநிலங்களை நீங்கள் ஒப்பிடுவது எந்த வகையில் பொருந்தும் என்று சொல்லி, மகாராஷ்டிரத்திலே இருக்கிற ரெட்லைட் பகுதியைப் பற்றிச் சொன்னார். நான் அவரது கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்தபோது, மதுவிலக்கை அவர்கள் ரத்து செய்யும் போது சொன்னார்கள் — அண்டை மாநிலங்களில் எல்லாம் மதுவிலக்கு இல்லை. தீப்பிழம்பாக உள்ள வட்டத்திலே நடுவில் கற்பூரம் போல் தமிழகம் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, எந்த நேரத்திலே பற்றிவிடுமோ என்ற ஐயப்பாட்டின் காரணமாக, மதுவிலக்கை ரத்து செய்கிறோம் என்று சொல்லிய உங்கள் தலைவர், மற்ற மாநிலங்களை உதாரணம் காட்டி இருக்கிறார். அதிலே மாத்திரம் மற்ற மாநிலங்களை அவர்கள் உதாரணம் காட்டலாம். மற்றவர்கள் மற்ற மாநிலங்களை உதாரணம் காட்டுவது பொருத்தம் இல்லை என்ற வாதத்தை வைப்பது பொன்னுரங்கம் அவர்களுக்கே சரியா என்ற கேள்வியை நான் கேட்க விரும்புகிறேன்.

அதேபோல், இந்தக் குதிரைப்பந்தயத்தை அரசே ஏற்றுக் கொள்ளவேண்டும் என்கின்ற அந்தக் கொள்கை முடிவினை திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தோழமைக் கட்சியினுடைய தலைவராக, விடுதலைப்புலிகளுக்குத் தலைவராக விளங்கிக் கொண்டிருக்கிற நெடுமாறன் இந்த அவையிலே எடுத்து வைத்த அந்த வாதத்தையும்; இந்த சட்டமன்றத்திலே அவர் பணியாற்றியபோது சொன்ன விரிவான விளக்கத்தை, இந்தக்



குதிரைப் பந்தயத்தை நீதி மன்றத் தடை இருந்தாலும், அரசே ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பதற்கு பல காரணங்களைச் சொல்லி இருக்கிறார். அருமை நண்பர் பொன்னுரங்கம் அவர்கள் அந்தக் குறிப்புகளை எடுத்துப் படித்துப் பார்ப்பாரேயானால் இதனுடைய நியாயம் புரியும்.

ஆகவே, நெடுமாறன் அவர்கள் எடுத்து வைத்து அந்தக் கருத்துக்களை நான் மீண்டும் நினைவுப்படுத்தி, இந்த மசோதா கொண்டு வருவதன் வாயிலாக, சென்னை மாநகரத்தில், இதயம் போன்று விளங்கும் பகுதியாக இருக்கின்ற, அதிலும் குறிப்பாக என்னுடைய தொகுதியில், கிண்டியின் அருகாமையில் 200 ஏக்கர் பரப்பளவில், ரேஸ் கோர்ஸ் இயங்கிக் கொண்டிருக்கிற அந்தப் பகுதியை இன்றைக்கு அரசு கையகப்படுத்துவதன் வாயிலாக, சொன்னார்களே, 'ஏழை எல்லாம் பொருள்களை இழக்கிறார்கள் என்று'

(முற்பகல் 11–40)

அந்த இழப்பின் வாயிலாக ஏற்பட்டிருக்கிற மூலதனம் இன்றைக்கு 200 ஏக்கர் பரப்பளவில் இருந்துகொண்டிருக்கிறது. மக்களால் கொடுக்கப்பட்ட அந்த சொத்து மீண்டும் மக்களுக்குச் சேரவேண்டுமென்ற அந்த அடிப்படையில் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் வளர்மதி அவர்கள் இதிலே உள்ள குறைபாடுகளையெல்லாம் சொன்னார்கள். இவ்வளவு பெரிய நிறுவனத்தில் வேலைக்கு ஆட்களை எடுக்கும்போது வேலைவாய்ப்பு நிறுவனத்தைக் கேட்டு அவர்களிடமிருந்து பெற்ற பட்டியலிலிருந்து எடுப்பதில்லை. வேலைக்குச் சேர்க்கும்போது விண்ணப்பம் கூட கொடுப்பது இல்லை. நினைத்தவர்களை வைத்துக் கொள்கிறார்கள். நினைத்தால் வைத்துக் கொள்கிறார்கள். நினைத்தால் அவர்களை எடுத்துவிடுகிறார்கள், அது மட்டுமல்ல, முறைகேடாக நினைத்தவர்களுக்கு வேலை வாய்ப்பில் பதவிஉயர்வு கொடுக்கக்கூடிய நிலைமையும் உள்ளது, இப்படி பல முறைகேடுகள் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கின்றன. கான்ட்ராக்ட் விடுகிற முறைகளில் பல தவறான காரியங்கள் நடைபெறுகின்றன. உதாரணமாக அங்கே உள்ள கேண்டினை 3 இலட்சம் ரூபாயில் நடத்த ஒரு நபர் கேட்டிருக்கிறார், அவருக்குக் கொடுக்காமல் அதைவிடக் குறைவாக 84 ஆயிரம் ரூபாய்க்குக் கேட்ட நபருக்கு அது விடப்பட்டிருக்கிறது. அந்த நபர் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே என்னிடம் வந்து சொன்னார். அதையெல்லாம் விவரமாக பேச வேண்டிய நேரத்திலே பேசிக்கொள்ளலாம் என்று சொன்னேன். அந்த முறையிலே தான் அதைப் பேசுவதற்காக இந்த நல்ல மசோதா வந்திருக்கிறது. இதைப்போன்று பல முறைகேடுகள் நடைபெற்றிருக்கின்றன. திரு. வேங்கடரமணன் அவர்கள் பேசியபோது அங்கே நடக்கிற முறைகேடுகளைப் பார்க்கவில்லை என்று சொன்னார்கள், அப்படிப்பார்த்த காரணத்தினால்தான் இன்றைக்கு இந்த மசோதா வந்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்த முறைகேடுகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டும், மக்களுக்குத் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். குதிரைப் பந்தயத்தால் ஏற்படுகிற தொல்லைகளிலிருந்து மக்களை விடுவிக்க வேண்டும் என்பதிலே எங்களுக்கு எந்தவிதமான மாற்றுக் கருத்தும் கிடையாது. ஆனால் அதுவரையிலே பணக்காரர்களுக்குப் போய்ச் சேருகின்ற அந்தப் பணம் அரசுக்கு வந்து சேரவேண்டும் என்ற அடிப்படையிலும், முறைகேடுகள் நடைபெறக்கூடாது என்ற அடிப்படையிலும் இந்தச் சட்டம் வந்திருக்கிறது என்று சொல்லி இதை ஆதரித்து விடைபெறுகிறேன், நன்றி வணக்கம்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, குதிரைப் பந்தயம் ஒழிக்கப்பட வேண்டும் என்ற கருத்துடையவர்கள் நாங்கள் குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதற்கான ஒரு சட்டத்தைக் கொண்டுவரவில்லை. ஆனால் நேசவுடைமையாக்கக் கூடிய முறையிலே அந்தக் கொள்கையை ஓரளவுக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையிலே இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் முழுமையாக ஆதரிக்க வேண்டுமென்ற எண்ணம் எங்களுக்கு இருந்தாலும் நேற்றைய தினம் நான் சொன்னதைப் போன்று இதிலே இருக்கிற ஷரத்துக்கள் முழுமையாக நாங்கள் ஆதரவு கொடுப்பதற்கு எங்களை அனுமதிக்கவில்லை என்ற அந்த துரதிருஷ்டமான நிலைமை ஏற்பட்டு இருக்கிறதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த நேரத்திலே அந்த சட்டத்தினுடைய நோக்கங்களைப் பொறுத்த வரையில் ஒன்று சொல்லப்படுகிறது.'............ ........in the conduct of the ffai:s of the Madr s R ce Cl'b h've resulted in the concent tion of wealth nd me ns of productior in a few h nds to the commen detimept....." இந்த நோக்கத்தோடு சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று சொல்வது இந்த உலகத்தையும் மக்களையும் ஏமாற்றுவதாகும். Concen tion of we lh ஒழிக்கப்பட வேண்டும் என்பதும் Me ns of p oduction மாற்றப்பட வேண்டும் என்பதும் ஏற்றுக்கொள்ளக்கூடியவையாக இருந்தாலும் அதற்கு இன்றைக்கு மிகப் பெரிய அரங்குகள் இருந்து கொண்டிருக்கின்றன. இதையெல்லாம் விட மக்கள் வாழ்வோடு ஒன்றியிருக்கக்கூடிய பல தொழில்களில் இந்தக் கொள்கையை அமல்படுத்துவதற்கு தயங்கக்கூடிய நேரத்திலே அந்த நோக்கத்தோடு செய்திருக்கிறோம் என்று இதிலே சொல்வது எந்த அளவுக்கு ஏற்றுக்கொள்ளப்படக்கூடியது என்பது சந்தேகத்திற்குரியதாகும். இதைப் பற்றிய ஒரு விவாதத்திற்குள் செல்லவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே விரும்பவில்லை. இவ்வளவு அவசரம் அவசரமாக இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கக்கூடிய நோக்கத்தைப் பார்க்கக்கூடிய நேரத்திலே அரசுக்கு ஏதோ சில காரணங்கள் இருக்கலாம். ஆனால் அந்தச் சட்டத்தை கொஞ்சம் முறையாகக் கொண்டுவருவதில் அரசு போதுமான அளவிற்குக் கவனம் செலுத்தவில்லை என்றுதான் நான் எண்ணுகிறேன். இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் இன்றைக்கு





எந்த நோக்கத்தோடு இது கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படும் அந்த நோக்கம் எந்த அளவிற்கு நிறைவேறும் என்பதைப் பார்க்க வேண்டும். அதாவது, irregularities, malpractices இன்று இந்த ரேஸ் கிளப்பில் நடக்கவில்லை என்று யாரும் சொல்ல மாட்டார்கள். அத்தனை கரெப்ஷன்களும் நடக்கும் இடமாக இந்த ரேஸ் கிளப் இருக்கிறது என்பதை நாடு அறியும். அங்கே வேலை செய்யும் பணியாளர்கள் மிகவும் கஷ்டப்படுத்தப்படுகிறார்கள் என்பதை நாடு அறியும். அந்த முறையிலே, ரேஸ் கிளப்பை அரசு எடுத்து, அரசினுடைய நிறுவனம் கம்பெனி பர்வியூவின் கீழ் கொண்டு வரும் இப்படிப்பட்ட நேரத்தில், அந்த நிறுவனத்தில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு உதவி செய்யும் வகையில் பாதுகாக்கும் முறையில் அரசுக்கு நோக்கம் இருக்கலாம். இந்தச் சட்டத்தின் 12-வது ஷரத்து 1-வது உப ஷரத்திலே அவர்களை அரசினுடைய ஊழியர்களாக எடுக்கிறார்கள். ஆனால், அரசினுடைய ஊழியர்களாக எடுத்துக்கொண்டு, அவர்களுக்கு என்ன பாதுகாப்பு அளிக்கப்படுகிறதோ அந்தப் பாதுகாப்பு முழுவதையும் எடுத்து விடுகின்ற முறையில் அந்த ஷரத்தில் பின் பகுதி அமைந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏனென்றால் இந்த ஷரத்திலே என்ன சொல்லப்படுகிறது என்றால், '12 (1) ....... .... as the case may be, is te min ted by giving him notice of not less than one month in writing, or one month's pay and llowances in lieu of such notice, or until his remuneration and other conditions of service are ltered by the Government or the Government Company, s the c se may be." etc. etc ........ இந்த நாளிலே அரசு நிறுவனங்களைப் பொறுத்தவரையில் கட்டுப்படுத்தும் முறையிலே உள்ள ஏராளமான சட்டங்கள் இருக்கின்றன. தொழில் தகராறு சட்டம் போன்ற சட்டங்கள் பல இருக்கின்றன. இது ஒரு அரசினுடைய நிறுவனமாக மாற்றப்பட்ட பிறகு, அந்தச் சட்டங்களின்படி என்ன இருக்கிறதோ அப்படி அவர்களை கவர் செய்ய வேண்டுமே தவிர, அதைப் போலத்தான் அவர்கள் நடத்தப்பட வேண்டுமே தவிர, இந்த நிறுவனத்தை அரசு எடுத்துக் கொண்ட பிறகும்கூட, அதன் அதிகாரிகளுக்கு அந்தத் தொழிலாளர்கள், அந்தப் பணியாளர்களை ஒரு மாத நோட்டீஸ் அல்லது அதற்கான ஊதியத்தைக் கொடுத்து விட்டு விடலாம் என்றால் அது தொழிலாளர்களின் அல்லது பணியாளர்களின் சர்வீஸ் கண்டிஷனை எப்படிப் பாதுகாக்கும் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

ஆகவே, இன்றைக்கு நீங்கள் இந்த ரேஸ் கிளப்பை அரசினுடைய கம்பெனியாக மாற்றிய பிறகும், ஏற்கனவே இந்த ரேஸ்கிளப்பின் அதிகாரிகள் எந்த முறையிலே பணியாளர்களை நடத்தி வந்தார்களோ அதேமுறையில் நடத்திச் செல்வதற்கான ஒரு அன்குவாலிஃபைட் ரைட்டை அரசு அதிகாரிகளுக்குக் கொடுக்கும் முறையில் இந்தச் சட்டம் அமைந்திருக்கிறது. அது சரியல்ல. அது தொழிலாளர்களின், பணியாளர்களின் நலன்களைப் பாதுகாக்காது. ஆகவே, அந்தச் சட்டத்தைத் தொடர்ந்து என்ன வருகிறது என்றால், பணியாளர்

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1986 சனவரி 24

களைப் பொறுத்தவரையில், அந்தப் பணியாளர்கள் அரசு
ஊழியர்களாக ஆகும் முன் ஏதேனும் விபத்து, ஏதேனும் விஷயத்
திலே ஒர்க்மென் காம்பென் சேஷன் ஆக்டிலே ஏதேனும் வழக்கு
போடப்பட்டிருந்தால் கூட, இரண்டாவது ஷரத்துப்படி அந்த
காம்பன்சேஷன் கேட்கும் உரிமை பறிமுதலாகிறது. ஆகவே,
இன்றைக்கு, நாட்டிலே தொழிலாளர்களைப் பொறுத்த வரை
யில் நடத்திச் செல்வதற்காக இயற்றப்பட்டு, அமல் நடத்தப்
படுவதற்கு உள்ள, தொழிலாளர் இலாகா இன்றைக்குப் பரா
மரித்து வரும் சட்டம் இந்த நிறுவனத்திற்கும் பொருந்தும் வகை
யில் அமைய வேண்டுமே தவிர, அன்குவாலிபைட் ரைட்டை
அந்த நிறுவனத்தினுடைய அதிகாரிகளுக்குக் கொடுக்கும் முறை
யிலே இருந்தால் அந்தத் தொழிலாளர்களுக்குப் பொதுவாக
அளிக்கப்பட்டிருக்கின்ற உரிமைகள் கூட, செல்லாது அந்த
உரிமைகள் கூட இருக்காது என்ற முறையிலேதான் இருக்கிறது.
இந்த ஷரத்து தொழிலாளர்களைக் கடுமையாகப் பாதிக்கும்
முறையிலேதான் அமையும் என்று இந்த நேரத்திலே நான்
சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். ஆகவே, இந்த முறையிலே
நீங்கள் சட்டம் கொண்டு வருவது சரியல்ல. மேலும், அரசைப்
பொறுத்தவரையில் தொழிலாளர்களின் நலன்களைப் பாது
காப்பதில் காட்டப்பட வேண்டிய அக்கறை காட்டப்படவில்லை
என்ற எண்ணத்தைத் தொழிலாளர்களுக்கு ஏற்படுத்தும்
வகையிலேதான் இருக்கும்.

(முற்பகல் 11-50).

ஆகவே, அந்த எண்ணத்தைப் போக்கக் கூடிய முறையில், இந்தச்
சட்டத்தை மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டு, இந்தச்
சட்டத்தினுடைய நோக்கத்தையும் எண்ணத்தையும் நாங்கள்
ஆதரிக்கக் கூடிய நேரத்தில், வரவேற்கக் கூடிய நேரத்தில்,
துரதிருஷ்டவசமாக, ஊழியர்களையும் பணியாளர்களையும்
கடுமையான முறையில் பாதிக்கக் கூடிய ஷரத்துக்கள் இருப்பதன்
காரணமாக, இந்தச் சட்டத்தை முழுமையாக ஆதரிக்க
முடியவில்லை என்று சுட்டிக் காட்டி, அமர்கிறேன்.

திரு. வை. பாலசந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, சென்னை குதிரைப் பந்தய நிறுவனத்தைக்
கையகப்படுத்தவும், உரிமை மாற்றம் செய்யவும் கொண்டு வரப்
பட்டுள்ள சட்ட முன் வடிவில் ஒரே ஒரு கருத்தை மட்டும்
நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

இன்றைய தமிழகத்தைப் பொறுத்த வரையில், மாண்புமிகு
முதல்வர் புரட்சித் தலைவர் ஆட்சியை, ஏழை, எளிய மக்க
ளுடைய வாழ்க்கையைப் பாதுகாக்கின்ற ஆட்சியாக இன்றைக்கு
நாட்டு மக்கள் கருதிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நாட்டு
மக்களுடைய நம்பிக்கையை பலப்படுத்துகிற வகையில், நேற்று
கூட இந்தப் பேரவையில், சாராயக் கடைகளையும், கள்ளுக்
கடைகளையும் 1-1-1987—லிருந்து மூடுகிற அறிவிப்பை



1986 சனவரி 24] [திரு. வை. பாலச்சந்திரன்.]

நம்முடைய அரசு வெளியிட்டது. அந்த அறிவிப்பைக் கேட்டு
தமிழக மக்கள் மகிழ்வில் ஆழ்ந்திருக்கிறபொழுது, அவர்
களுடைய மகிழ்வைக் குறைக்கிற வகையில், நேற்றைக்குச்
சொல்லப்பட்டு, இன்றைக்குச் சட்ட முன் வடிவாக வந்திருக்
கிறது. ஆகவே, பல இலட்சக்கணக்கான மக்களுடைய
வாழ்வோடு சூதாடுகிற குதிரைப் பந்தயத்தைத் தமிழக அரசு,
புரட்சித் தலைவர் அரசு ஒழித்து, அந்தப் பெருமையையும்
பெற்றுக் கொள்ள வேண்டும். அப்படிப் பெற்றுக் கொண்டு,
நாட்டு மக்களுடைய வாழ்க்கையைப் பாதுகாக்க இந்த அரசு
எப்பொழுதும் தயங்காது, பின் வாங்காது என்பதை நாட்டு
மக்களுக்குக் காட்ட வேண்டுமென்று நான் சார்ந்திருக்கிற இந்து
முன்னணி சங்கத்தின் சார்பாகக்கேட்டு, அமர்கிறேன், வணக்கம்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, இன்றைய தினம் கொண்டு வந்திருக்கக் கூடிய
இந்தக் குதிரைப் பந்தயச் சங்கம் உரிமை மாற்றம் மசோதா
மீது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின்
சார்பாக, நான் ஒரு சில கருத்துக்களை இந்த மன்றத்திலே
வைக்க முன் வருகின்றேன். இந்த மசோதாவின் மீது பேசிய
பல நண்பர்கள் ஆதரித்தும், எதிர்த்தும், குற்றங்களைச் சுட்டிக்
காட்டியும் திருத்தங்கள் கொடுத்தும், பல்வேறு உணர்வுகளை
இந்த இடத்திலே பேசியிருக்கிறார்கள். நான் இந்த உணர்வை
முழுமையாகவே மதிக்கின்றேன். அந்தக் குதிரைப் பந்தயம்,
வேண்டுமா, வேண்டாமா என்று ஒரு சொல்லில் பதில் சொல்ல
வேண்டுமானால், நண்பர் வெங்கடரமணன் அவர்கள் சொன்
னதைப் போல, வேண்டாம் என்று சொல்லி விடலாம்.
ஆனால், வேண்டாம் என்று சொல்லிவிட்ட பிறகு, நடை
பெறுகிறதே அதை முறைப்படுத்துவதற்காக, அதிலே தவறு
இல்லாமல் இருப்பதற்கு எப்படி என்று வருகின்றபொழுதுதான்,
ஆட்சி தன் கடமையைச் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படு
கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

குதிரைப் பந்தயத்திலே சிலர் குபேரர்களாகிறார்கள், பலர்
குசேலர்கள் ஆகிறார்கள். அது மாத்திரமல்ல, பூனை திருடி
வந்த ஆப்பத்தை, குரங்கு பங்கு போட்ட கதையைப் போல,
நிலைமைகள் தொடர்ந்து விட்டன ; அது தொடரக் கூடாது
என்பதற்காகத்தான் இந்த மசோதாவை, இன்றைய தினம்
இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது என்பதையும் நீங்கள் அறி
வீர்கள்.

அது மட்டுமல்ல, அரசுக்குக் கொடுக்கக் கூடிய கணக்கு
களிலே ஏற்படக் கூடிய மோசடிகளைத் தடுக்கக் கூடிய வகை
யில், பல்வேறு வகையிலே, வரக்கூடிய வருமானத்தை, அரசுக்
கும் கொடுக்காமல், யார் பயன் பெற வேண்டுமோ, அவர்களும்
அதை அனுபவிக்காமல், அதிலே இருக்கக் கூடிய தொழிலாளர்
களும் முழு பலன் பெறாமல், சிலர் மோசடி எண்ணத்தோடு
நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்ற எண்ணம் அரசுக்கு ஏற்
பட்ட காரணத்தினால் கூட இந்த மசோதா கொண்டு வரப்
பட்டிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

இங்கே பேசும்பொழுது பல்வேறு கருத்துக்களைச் சொன் னார்கள். ஏற்கனவே, இந்த அரசு அதை நிறுத்தி விட்டிருக்கக் கூடாதா ? ஏற்கனவே, நாங்கள் நிறுத்திவிட சட்டம் போட் டோம் என்று கூடச் சொன்னார்கள். நான் ஒன்றை மட்டும் வெளிப்படையாகச் சொல்ல விரும்புகிறேன். ஏற்கனவே போட்ட அரசு திட்டம் வெற்றி பெற்றிருந்தால், பணக்காரர்கள் அந்தச் சொத்துக்களை அபகரித்துக் கொள்ளுற வகையிலேயும், அந்தத் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்கள் கோவிந்தா போட்டுக் கொண்டு போக வேண்டிய நிலையிலேயும், அவர்கள் அண்ணாவுக்கு அரோகரா என்று சொல்லி, முடுக்கிவிடக் கூடிய சந்து பொந்து சட்டங்களைக் கொண்டு வந்த காரணத்தால்தான், அவர்கள் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியாமல் போய்விட்டது என் பதை ஏற்கனவே ஆண்டவர்கள் தெளிவாக உணர்வார்கள் என்ற எண்ணத்தில்தான், இன்றைக்கிருக்கிற சூழ்நிலையில், இந்த மசோதா, இருக்கிற ஏராளமான சொத்துக்களைக் கையகப் படுத்திக் கொள்ள, விலையுயர்ந்த மதிப்புமிக்க பொருள்களை அரசு எடுத்துக் கொள்ள, அதிலே பணியாற்றக் கூடிய தொழி லாளர்கள் நிம்மதிப் பெருமூச்சு விடக்கூடிய வகையில், இதைக் கொண்டு வந்திருக்கிறோம். இதிலே என்ன கொள்கை குழப் பம் இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை.

நான் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். ஒரு கட்சியினுடைய கொள்கை முற்றிலுமாக ஆட்சிக்கு வந்த பிறகு நிறைவேற்றப்பட வேண்டுமென்றால், இங்கே நாம் கொடுக்கின்ற பல்வேறு மசோதாக்கள் எல்லாம், திட்டங்கள் எல்லாம் முற்றிலும் வெற்றி பெற வேண்டுமென்றால், அத் தனையும் வெற்றி பெற்றதாக இந்தியத் துணைக் கண்டத்தின் சரித்திரத்திலேயே இல்லை. மாநில அரசாக இருந்தாலும் மத்திய அரசாக இருந்தாலும் சரி முழுமையாக வெற்றி பெற முடியவில்லை. போடுகின்ற திட்டங்கள் வழக்கு மன்றங்களுக்குச் சென்று மாறுபடுகின்றன ; மத்திய அரசின் நடவடிக்கைகள் வேறுபடுகின்றன ; மக்கள் உணர்விலே அது மங்கிப் போய் விடுகிறது. ஆகவே, ஆட்சிக் கட்சி என்ற அந்தஸ்தை பெற்ற பிறகு கொள்கையினுடைய முழு வெற்றி வாய்ப்பு என்பது எல்லாக் கட்சிகளுக்கும் எற்றதாக இருக்கிறது. இதுதான் நமது வரலாறு. அந்த வகையில் ஒரு சட்டத்தை வைக்கிற நேரத்தில், வைத்திருப்பதை எப்படி பாதுகாப்பது. நன்மை களைத் தேடுவது என்ற அடிப்படையில்தான் இந்த மசோதாவை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள் என்று துணிந்து சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே ஒருவர் பேசும்போது சொன்னார். இது நச்சுப் பொருள், நாட்டுடைமையாக்கலாமா என்று கேட்டார்கள். நான் அவர்களைப் பார்த்துக் கேட்கிறேன். நச்சுப் பொருளை நாட்டு மக்களிடம் விட்டு விடலாமா ? பாய்சன் என்று தெரி கிறது. அதை பாதுகாப்பான இடத்திலே வைக்க வேண்டுமா அல்லது எல்லோரிடத்திலும் கொடுத்துவிட வேண்டுமா ? அது மட்டுமல்ல. அபாயகரமானதை அரசு மட்டும்தான் வைத்துக் கொள்வதா அல்லது மற்றவர்களிடம் கொடுத்து விடுவதா ? இதை நன்றாக எண்ணிப் பார்க்க வேண்டும்.



இன்னொன்றையும் சொன்னார்கள் அறிமுக நிலையிலேயே. கொஞ்சம் கொஞ்சமாக அண்ணாவின் வழியிலிருந்து இந்த அரசு விலகிக் கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். லாட்டரிச் சீட்டு மூலம் வருகின்ற பணம், மது விற்பனையின் மூலம் வருகின்ற பணம், குதிரைப் பந்தயத்தின் மூலம் வருகின்ற பணம் எல்லாவற்றையும் இந்த அரசாங்கம் எடுத்துக் கொள் கிறது என்று சொன்னார்கள். அண்ணா இதை எல்லாம் எதிர்த் தார் என்றார்கள். அண்ணா அவர்கள் இருக்கிற போதுதான் லாட்டரிச் சீட்டு கொண்டு வந்தோம் ; வருவாய் எடுத்தோம். அதே நேரத்தில் அண்ணா அவர்கள் ''வரவு எவ்விதம் என்பதை விட செலவு இப்படித்தான் இருக்க வேண்டும் '' என்று திட்ட வட்டமாகச் சொன்னார்கள். குதிரைப் பந்தயத்தில் இருந்து வருகிற பணமாக இருந்தாலும், மது விற்பனையிலிருந்து வரக் கூடிய பணமாக இருந்தாலும் நாட்டு நலப் பணித் திட்டங் களுக்கு , ஏழை எளிய மக்களுக்குக் கொடுக்கக் கூடிய வகையிலே திட்டங்களை வகுத்து, பணத்தைத் திரட்டுகின்ற நிலையில் அமைந்திருக்கிறது என்ற நிலையில் ஆளும் கட்சி இருக்கிறது என்பதை தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டும்.

அது மட்டுமல்ல. இங்கே பேசும்போது ஒருவர் சொன்னார். ஏதோ பாதிக்கப்பட்டவர் துபாய்க்கும் போய் விட்டார் என்று சொன்னார்கள். ''திரைகடலோடியும் திரவியம் தேடுபவர்கள் எல்லாம் குதிரைப் பந்தயத்தில் பாதிக்கப்பட்டு ஓடியவர்கள் அல்ல'' என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த உலகத் தில் வாழ்கிறவர்கள் எப்படி வாழ வேண்டும், எப்படி வாழ முடியும், எங்கு சென்று பொருள் தேட முடியும் என்று பல்வேறு சிந்தனை உடையவர்கள். அதற்கும் இந்த அரசுக்கும் இந்தத் திட்டத்திற்கும் சம்பந்தம் அல்ல.

அதுமட்டுமல்ல. இன்னொன்றையும் இங்கே சொல்ல விரும்பு கிறேன். இந்தத் துறையிலே இருக்கிற பல்வேறு ஒழுங்கீனங்களை குறைக்கவும், ஏமாற்றுகின்றவர்களைத் தடுக்கவும், மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுகின்ற வகையில் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இன்னும் சொல்லப் போனால் குதிரைப் பந்தயத்தை நாங்கள் ஒழித்துவிட்டோம். அதற்கு அடையாள மாக அண்ணா மேம்பாலத்தின் கீழே சிலை வைத்திருக்கிறோம். என்று சொன்னார்கள். அது குதிரைப் பந்தயத்தை ஒழித்த சிலை யாக இருக்கிறதா அல்லது அந்த ஆட்சியின் அவமானச் சின்னமாக இருக்கிறதா ? இதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். காரணம், ஒரு குழந்தையைப் பெற்றெடுப்பதற்கு முன்பாகவே தத்தெடுத்துக் கொண்டார்கள். தத்தெடுத்த அந்தக் குழந்தையும் செத்துப் பிறந்ததால் இன்று தத்தளிக்கிறார்கள். ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து அதை அமுலாக்குவதற்கு முன்பாக, நடைமுறைப் படுத்தி வெற்றி பெறுவதற்கு முன்பாக சிலை வைத்துவிட்ட காரணத்தால் அது ஆட்சியின் அவமானச் சின்னமாக காட்சியளிக்கிறதே தவிர சாதனைச் சின்னமாக மாறவில்லை என்று அனுபவம் சொல்கிறது. அந்த அடிப்படையில்

தான் இன்றைக்கு இந்த மசோதா கொண்டுவரக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறதேதவிர வேறெல்ல.இதைத் தவிர்க்க முடியுமா, முடியாதா என்றால்,முடியவில்லை என்று சொல்கிறபோது இதற்கு எப்படி வரையறை செய்வது என்ற அடிப்படையிலே இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறோம்.

அதுமட்டுமல்ல. இங்கே இன்னும் சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். திரு. வேங்கடரமணன் அவர்கள் இங்கே பேசும்போது சில திருக்குறள்களை எல்லாம் சொன்னார் கள். உலகத்தோடு ஒட்ட ஒழுகாதவன் பல கற்றும் கல்லாதவன் தான் என்று சொன்னார்கள். ஒரு நாட்டிலே நடைபெறுகின்ற ஆட்சி எப்படி நடைபெற வேண்டும், என்னென்ன வரைமுறை இருக்க வேண்டும் என்று பல்வேறு இடங்களிலே வகுத்துரைத்த இலக்கணங்களை எல்லாம், பல்வேறு இடங்களிலே சொல்லக் கூடியவற்றை எல்லாம் ஒரே இடத்தில் கொண்டுவந்து கையாள வேண்டும் என்பது அல்லது கையாளுவது சரியான முறையல்ல.

(நண்பகல் 12–00)

நிதானமாகப் போகவேண்டுமென்றால எப்போது என்று பார்க்க வேண்டும். எக்ஸ்ப்ரஸ் ட்ரெயின் வேகமாக வந்து கொண்டிருக்கின்ற அந்த நேரத்தில் தானத்தில் சிறந்தது நிதானம் என்று எண்ணி மெதுவாகச் செல்லுங்கள் என்று சொன்னால் ஆளே இல்லாமல் போய்விடுவான். ஆகவே ஒவ் வொரு நிலையிலேயும் எடுத்துச் சொல்கிறபோது இந்தப் பிரச்சினைகளிலே இருந்து பார்க்கிறபோது எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறோம், எந்த அடிப்படையிலே இருந்து இதைக்கொண்டுவர வேண்டிய அவசியம் இருக்கின்றது என்பதை எல்லாம் எண்ணிப்பார்த்து நாம் கொண்டு வந்திருக்கிறோம். அந்த அடிப்படையில் 'கல்லா ஒருவன் குலநலம் பேசுதல் நெல்லி னுட் பிறந்த பதராகுமே' என்ற நிலையில் சில கருத்துக் களை நாம் விட்டுவிடலாம்.

நான் இன்னொன்றையும் இங்கே சொல்ல விரும்புகிறேன், கொஞ்சம் கொஞ்சமாக அண்ணாவின் வழியிலே இருந்து நீங்கள் விலகிக் கொண்டு போகிறீர்கள் என்று சொல்கிறார்கள். நாங்கள் எப்போதும் எந்தப் பிரச்சினையிலும் அண்ணாவின் வழியிலிருந்து விலகிப் போகவில்லை. போகவும் மாட்டோம். போகவும் முடியாது. அண்ணா வழியிலிருந்து விலகிப் போனவர்கள் எங்களைப் பார்த்து அவ்வாறு சொல்கிறார்கள். ஒன்றை மட்டும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அண்ணாவின் கொள்கையில் உள்ள 10 அம்சத் திட்டம் மற்றும் பல்வேறு விஷயங்களைப் பார்க்கின்றபோது மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்பதும் அண்ணா அவர்கள் சொன்னது- அதை அப்படியே ஒரு கட்சி ஏற்றுக்கொண்டது. ஆனால் மத்தியிலே சுயாட்சிக்கு உறுதுணையாக இருந்துவிட்டு மாநிலத்தில் கூட்டாட்சி அமைத்துக் கொள்கின்ற வகையில் 50, 50 என்ற நிலையினை உருவாக்கிக்



கொண்டவர்கள் இன்னொரு கட்சியைப் பற்றி, இன்னொரு நிலையைப் பற்றிப் பேசுவது எந்த வகையில் பொருத்தமாக இருக்கும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

தயவுசெய்து எண்ணிப்பார்க்க வேண்டும். இன்றைய சூழ் நிலையில் இந்தத் தீர்மானம் மிக, மிகத் தேவையானது. ஒழுங்கீனங்களைக் குறைக்க நம்பிக்கை ஏற்பட வரவு பல்வேறு வகைகளில் போகாமல் இருக்க, வருகிற வரவை வைத்து பொதுமக்களுக்கும், ஏழை எளியவர்களுக்கும் செலவுசெய்ய இந்த குதிரைப் பந்தயத்தை அரசு எடுத்துக் கொள்கிற நிலைமைக்கு வந்து இருக்கிறது. இந்தக் குதிரைப் பந்தயத்திலே, இல்லாத வனும், ஒட்டாண்டியாக இருப்பவனும், பஞ்சைப் பராரிகளும் தலையிடுவதில்லை. எனவே இங்கே நாம் குதிரைப் பந்தயத்தை ஒழித்துவிட்டால் அவர்கள் வேறு மாநிலங்களுக்குப் போகிறார்கள். இன்றையதினம் ட்ரான்ஸ்போர்ட் வெகு ஜோராக இருக்கிறது. ப்ளைட் வசதி மிக அருமையாக இருக் கிறது. எனவே இங்கே இருந்து ப்ளைட் மூலம் போகக்கூடியவன் அன்றாடம் கூலிச்சியா? இங்கே இருந்து வேறு மாநிலங்களுக்குப் போய் ரேஸில் ஈடுபடக்கூடியவர்கள் ஏழையா? அவர்கள் எல்லாம் பஞ்சைப் பராரிகளா? எனவே இங்கே இருந்து சென்று அங்கே செலவழிக்கக்கூடிய நிலையில், அரசு உரிய நடவடிக்கை எடுத்து இங்கேயுள்ள ஏழை எளியவர்களுக்கும் அந்தப் பணம் பயன்படக்கூடிய வகையில் ஏற்பாடு செய்து பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று சொல்வதில் என்ன கொள்கைக் குறைவு இருக்கிறது என்பதை நண்பர்கள் எடுத்துச் சொல்ல வேண்டும்.

இந்த அடிப்படையில் நம்முடைய நாட்டிலே இருக்கின்ற பல்வேறு பிரச்சினைகளை எல்லாம் எண்ணிப் பார்த்து, அவர் களுடைய உணர்வுக்கும் மதிப்பளித்து,அரசுக்கு வருகின்ற வரவு பல்வேறு வகைகளில் போய்விடாமல் அவை பொதுமக்களுக்குத் தேவை என்ற முறையில் இந்த மசோதா தேவை என்று சொல்லி முடிக்கிறேன். நன்றி வணக்கம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரையில் மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய பல்வேறு கருத்துக்கள் ஏற்கனவே அரசினுடைய ஆழ்ந்த பரிசிலனைக்கு உட்படுத்தப்பட்டன.

1888 ஆம் ஆண்டில் உள்ள போலீஸ் சட்டத்தில் gaming includes other than wagening on Horse race' என்று இருந்ததை பின்னர், 1949 ஆம் ஆண்டு 7 –வது சட்டத்தின் அடிப்படையில் அதை மாற்றி 'gaming includes wagering andsetting on Horse races' என்பதை மட்டும் கொண்டு வந்து ஹார்ஸ் ரேஸை அதிலே உள்ளடக்கிப் போடக்கூடாது என்பதற்காகக் கொண்டுவரப் பட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் அவர்கள் சொன்னது போல் 1974 ஆம் ஆண்டில் 44–வது சட்டத்தின்படி

மீண்டும் அந்த 'wagering and setting on Horse races.' என்று இருக்கக்கூடாது என்று அதை நீக்கிவிட்டு குதிரைப் பந்தய ஒழிப்புச் சட்டத்தை அப்போது கொண்டு வந்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் இந்த அவைக்கும் இது நன்கு தெரிந்த ஒன்றுதான். அது பின்னர் நீதிமன்றத்திற்குச் சென்று தடையாணை பெறப்பட்டது. சட்ட நுணுக்கங்களின் அடிப்படையில் உச்ச நீதிமன்றத்திற்கு அது உட்படுத்தப்பட்டு அது இன்னும் முடிவுறாத நிலையில் இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் அவர்கள் இங்கே பேசுகிறபோது உச்சநீதிமன்றத்திலே விரைவிலே ஒரு தீர்ப்பினைப் பெற இந்த அரசு விரைவு நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்று சொன்னார்கள். அது தவறு. இந்த அரசு அதில் தீவிரமாகஇருக்கின்றது. அதை ஒட்டி உச்சநீதி மன்றத்தின் வழக்கு விரைவில் முடிய வேண்டும். அதனுடைய இறுதி முடிவும் குதிரைப் பந்தயம் அறவே நிரந்தரமாக ஒழிக்கப்பட உறுதுணையாக இருக்க வேண்டும் என்ற ஆர்வத்தோடு தான் அரசு செயல்பட்டு வருகிறது. ஆனால், அரசினுடைய முயற்சிக்கும் அப்பாற்பட்டு உச்சநீதி மன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கின்ற காரணத்தால் ஒரு புறமும், மற்றொரு புறம் அதனுடைய முக்கிய காரணத்தின் அடிப்படையில் அந்த வழக்கு இன்னும் தீர்வு பெறாத நிலையில் இருக்கிறது. இதற்கு இடையில் தான் ஏற்கெனவே பேசிய இங்கே பல அவை உறுப்பினர்களே எடுத்துக் காட்டியதைப்போல இந்தக் குதிரைப் பந்தயச் சங்கம் மேற்கொண்டுள்ள பணிமுறைகளைப் பொறுத்த வரைக்கும் பல்வேறு குறைபாடுகள், பல்வேறு காலக் கட்டங்களில் நிகழ்ந்த காரணத்தால் அதை சீரமைக்க அரசு பெரும் நடவடிக்கைகளை எடுத்தது.

மாண்புமிகு உறுப்பினர் பொன்னுரங்கம் அவர்கள் சொன்னதைப் போல அரசின் சார்பிலே இருக்கிற உறுப்பினர்கள் அடிக்கடி சொல்லவில்லை, நடவடிக்கை எடுக்கவில்லை என்பது அல்ல. அதற்கு எந்தவித ஆதாரமும் இல்லை. முதன் முறையாக திரு. வி. ஜே. சரவண தயானந்தம் என்பவர் அதைக் குறித்து, ஆர். எம். சாஸ்திரி என்பவர் அதை குறித்து, திரு. சிவராமன் என்பவர் அதை குறித்து திரு. உமாபதி என்பவர் அதை குறித்து, அதைப்போலவே குதிரைப் பந்தயத்திலே பங்கேற்பவர்களின் சங்கத்தின் சார்பாக திரு. எஸ். கிருஷ்ணன் என்பவர், ஆகியவர்கள் பல்வேறு கட்டங்களில் எல்லாம் குதிரைப் பந்தயத்திலே நடைபெறுகிற முறைகேடுகள் அங்கு மக்களுடைய நலனுக்கு புறம்பாகவும், அவர்கள் மேற்கொண்டிருக்கிற விதிமுறைகளை மீறிய நடவடிக்கைகளையெல்லாம் எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

அதை ஒட்டி, சிட்டி போலீஸ் கமிஷனர் அவர்கள் முழுமையான ஆய்வினை மேற்கொண்டார்கள். அவர்களும் அந்த ஆய்வினை மேற்கொண்ட பிறகுதான், இதற்கு முடிவு அளிக்க உச்ச நீதிமன்றத்திலே இருக்கிற அந்தத் தடை ஆணையை





பயன்படுத்தி தொடர்ந்து நடைபெற்று வருகிற அந்த குதிரைப் பந்தய நிகழ்ச்சியைப் பொறுத்த வரைக்கும் அது பல்வேறு தவறுகளுக்கு காரணமாக இருக்கிறது. அரசுக்கு வருகிற வருவாயை தொடர்ந்து வர முடியாத அளவுக்கு தவறான முறையில் அவர்கள் செய்கிறார்கள், பொது மக்கள் இதிலே பெரிதும் ஏமாற்றப்படுகிறார்கள் என்று பல உண்மைகளைக் கண்டு அறிந்த பிறகுதான் அரசு தற்போது இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது.

இதிலே மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் அவைக்கும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு குதிரைப் பந்தயம் அறவே ஒழிக்கப்பட வேண்டும் என்ற தீர்ப்பு சாதகமாக வந்தவுடன் குதிரைப் பந்தயம் தமிழகத்தில் ஒழிக்கப்படும் என்பதுதான் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசின் கொள்கை. அது அண்ணாவின் கொள்கை, என்பதை தெள்ளத் தெளிவாக அவைக்கு நான் கூற விரும்புகிறேன். ஆனால் இன்னும் ஒன்று, ஏற்கெனவே கொண்டு வந்த குதிரைப் பந்தய ஒழிப்புச் சட்டத்தைப் பொறுத்த வரைக்கும் 'Betting and gambling.' என்ற பகுதியிலேயிருந்து மட்டும்தான் ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து, அந்த குதிரைப் பந்தய ஒழிப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டது.

ஆனால் அந்தக் குதிரைப் பந்தயச் சங்கத்தைப் பொறுத்த வரைக்கும் அது அரசுக்குச் சொந்தமான நிலம். மற்ற விலை மதிப்பு அதிகமாக உள்ள நிலம் மற்ற இனங்கள் என்ற முறையிலே மிக அதிகப்படியான மதிப்புள்ள சொத்துக்களையும் அவர்கள் வைத்திருக்கின்ற காரணத்தால், அதையும் கையகப்படுத்த வேண்டும். அரசுக்கு அப்போதுதான் பயன் உள்ளதாக அமையும் என்ற நினைப்போடுதான், இந்தக் குதிரைப் பந்தயத்தை ஒழிப்பதோடு மட்டுமல்லாமல், அதை நாட்டுடைமையாக்க வேண்டும் என்ற நோக்கோடு அது கொண்டு வரப்பட்டிருக்கிறது.

அதிலும் குறிப்பாக, மாண்புமிகு உறுப்பினர் வெங்கடரமணன் அவர்கள் பேசுகிறபோது சொன்னார், அது இந்தியன் கம்பெனிஸ் ஆக்ட்டின் கீழ் இருக்கிறது என்பதை எடுத்துச் சொன்னார்கள். இந்தியன் கம்பெனிகளின் சட்டத்தின் கீழ் இருக்கின்ற ஒன்றை, நிர்வாகத்தை மட்டும் எடுத்து அரசு அதை மேற்கொண்டிருக்கலாம். ஆனால், நிர்வாகத்தை மட்டும் அரசு மேற்கொண்டிருக்குமானால் அதற்கு மாநில சட்டமன்றத்தின் மூலமாக நடவடிக்கைகளை நாம் எடுக்க முடியாது. அவைக்குத் தெரியும்.

Parliament is the competent authority to legislate on that topic.

ஆனால் நாட்டுடைமை என்பதைப் பொறுத்தவரைக்கும் சட்ட மன்றத்திற்கும் அக்கியூசிஷனிங் அண்டு ரிக்கியூசிஷனிங் என்ற முறையிலே என்ட்டிரி 42-ல் கன்கரன்ட் லிஸ்டிலே அதிகாரம் இருக்கிற காரணத்தினாலேதான் அதை நாட்டுடைமையாக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்து அரசு அதை கொண்டு வந்திருக்

(பிற்பகல் 12-10)

இறது. மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள்
பேசுகின்றபோது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். இந்தச் சட்டம்
அறிமுகப்படுத்துகிற போது அதை எடுத்துச் சொன்னார்கள்.
செக்ஷன் 12-ஆவது பிரிவை பொறுத்தவரைக்கும் ஊழியர்களுக்கு,
தொழிலாளர்களுக்கு இந்தச் சட்டத்திலே தக்க பாதுகாப்பு
இல்லையென்று எடுத்துச் சொன்னார்கள். அதிலும் குறிப்பாக
12(2) பொறுத்தவரைக்கும்

'It is my view. It is wrongly interpreted by Hon. Member, Thiru J. Hemachandran.' இதைத் தெளிவுபடுத்துவது என்னுடைய
கடமையென்று கருதுகிறேன். 12-வது பிரிவைப் பொறுத்த
வரைக்கும் தெளிவாக இருக்கிறது.

12 (1) Every employee of the club employed in connection with the undertaking shall become, on and from the appointed day, an employee of the Government and where such undertaking is vested in a Government company under this Act, become on and from the date of such vesting in such Government company, an employee thereof and shall hold office or service under the Government or the Government company, as the case may be, with the same rights and privileges as pension, gratuity and other matters....
இது தெளிவாக்கப்பட்டிருக்கின்றது. as to pension, gratuity and other matters as would have been admissible to him if there had been no such vesting....
இதுவும் தெளிவாக்கப்பட்டிருக்கின்றது.
ஆனால் இரண்டாவது பிரிவிலே ஒரு மாற்றம் இருப்பதை
அவர்கள் ஒரு மாறுபட்ட இன்ட்டர்பிரிட்டேஷனை தந்திருக்கி
றார்கள் என்று கருதுகிறேன். இரண்டாவது பிரிவைப் பொறுத்த
வரைக்கும்,

(2) Notwithstanding anything contained in the Industrial Disputes Act 1947 (Central Act XIV of 1947), or in any other law for the time being in force, the transfer of the services of any officer or other person employed in the undertaking of the club to the Government or the Government company shall not entitle such officer or other employee to any compensation under this Act.."
என்று இருப்பதை உழைக்கும் வர்க்கத்தை, தொழிலாளர்
களுடைய உரிமையை பறித்து விடாதா, அத்தகைய பொருளை
தந்து விடாதா என்று கேட்டு இருக்கிறார்கள். காரணம்,

'not entitled to compensation under this Act'

என்று இருக்கிறதே என்று நேற்றும் சொன்னார்கள். தற்போதும்
விளக்கினார்கள். இங்கே நான் தெளிவாகச் சொல்ல விரும்புவ
தெல்லாம், இந்தப் பிரிவைப் பொறுத்தவரைக்கும்,



His contention is totally different.

Protection for the employees is totally ensured under Section 12 (2).
இதை நான் ஏற்கனவே படித்து விட்டேன். 12(2) பொறுத்த
வரைக்கும், consequent to the transfer of services. Just because of
transfer if any compensation is sought for this position had been
made very clear. அந்தப் பதவியில் இருக்கிறார். ஏற்கெனவே
ிளப்பிலிருந்து அரசினுடைய பொறுப்பிறகு வருகிறார். 'Transfer
of service.' இதைப் பொறுத்தவரைக்கும் மிகத் தெளிவாக்கப்
பட்டிருக்கிறது. ஊழியர்களைப் பொறுத்தவரைக்கும் சர்வீஸ்
ட்ரான்ஸ்பர் காரணமாக ஏதேனும் பிரச்சினை எழுமானால்,
இந்தப் பதவியிலே இருக்கிறேன். இங்கே மாற்றம் செய்திருக்
கிறீர்கள். நான் சங்கத்திலே தனியார் துறையிலே இருந்திருப்பே
னானால் அதிகப்படியான சலுகைகள் கிட்டியிருக்கும். ஊதியம்
அதிகமாக கிட்டியிருக்கும். அரசுக்கு வந்தால் எனக்கு பாதிப்பு
உண்டாகும். நான் அரசு ஊழியனாக இருக்க விரும்ப
வில்லையென்று 'Just because of the transfer.' அவருக்கு
ஏதேனும் இழப்பு ஏற்படுமென்று கூறுவார்களானால்,
அதற்கு மட்டும் பாதுகாப்பு இல்லையென்று தெளிவாக்கப்
பட்டிருக்கிறதே தவிர, மற்றபடி அந்த ஊழியர்களுக்கு என்
னென்ன உரிமைகள், சலுகைகள், இருந்ததோ அவையனைத்தும்
முழுக்க முழுக்க பாதுகாக்கப்பட வேண்டுமென்பதுதான்
12(2)-ல் தெளிவாக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல நாட்டுட
மையாக்கப்பட்ட பல்வேறு சட்டங்களில் ஏற்கெனவே மத்திய
அரசால் இது " அக்செப்ட்டட் ட்ராப்டிங் ". அது மத்திய
அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகும். நீங்கள் சர்வீஸ்
ட்ரான்ஸ்பர் என்றுதான் எடுத்துக் கொள்ள வேண்டும். ஊழியர்
களுடைய ஏனைய உரிமைகளைப் பறித்துவிடும் என்பதல்ல.
நடைமுறையில் பல்வேறு நாட்டுடமைச் சட்டங்களில் கொண்டு
வரப்பட்டு, இது நீதிமன்றங்களின் சோதனைக்கும் உட்படுத்தப்
பட்டு உழைக்கும் வர்க்கத்தினர் எள்ளளவும் பாதிக்காத சட்ட
மென்று ஏற்கெனவே நிருபிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால்
இதிலே மாற்றம் தேவையில்லை. உழைக்கும் வர்க்கத்தினருக்கு
எந்தவிதத்திலும், பாதிப்பை தராது என்பதை நான் மாண்புமிகு
உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்களுக்கும், இந்த அவைக்கும்
தெளிவாக்க விரும்புகிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே,
இந்த 12-வது செக்ஷன், சப்-செக்ஷன் (1)-ஐ படித்து ஓர்க்கர்
ஸிற்கு புரட்டக்ஷன் கொடுக்க வேண்டும். ஆகவே, இந்தச்
சட்டம் .தொழிலாளர்களுக்கு விரோதமானது அல்ல என்று
சொன்னார்கள். நான் கேட்டுக் கொள்ள விரும்புவது இன்
றைக்கு நாட்டிலே மத்திய, மாநில அரசுகளால் இயற்றப்பட்ட
லேபர் சட்டங்கள் இருக்கின்றன. அப்படி இருக்கிறபோது ஒரு

தொழிலாளிக்கு இந்தச் சட்டப்படி அரசு ஊழியனாக, அல்லது
கம்பெனி ஊழியனாக மாறியதற்குப் பிறகு அதிலே தகுந்த
அளவிலே என்ன பாதுகாப்பு கொடுக்கப்பட வேண்டுமோ, அந்தப்
பாதுகாப்பு கொடுக்கப்பட்ட பிறகு, ஏன் 'is terminated by
giving him notice of not less than one month in writing.
என்ற ஒரு பிரத்யேகமான ஒரு ஷரத் இதிலே சேர்க்கப்பட
வேண்டும். ஏன் என்றால், இன்றைக்கு ஒரு தொழிலாளி வேலைக்கு
சேர்க்கப்பட்டதற்கு பிறகு, அவர் ஒரு அடிசனல் ஆள் என்று
தெரிய வந்தால், ரெட்ரன்ச்மென்ட் பண்ணுவதற்கு தொழிற்
சாலைச் சட்டத்திலே புரவிசன் இருக்கிறது. அந்தத் தொழிலாளி
ஏதாவது டிசிப்ளினரி ஆக்சனுக்கு ஆளாக்கப்பட்டால், அதற்கு
நடவடிக்கை எடுப்பதற்கு சட்டம் இருக்கிறது. அப்படி எல்லாச்
சட்டங்களும் இருக்கக்கூடிய நேரத்தில், அந்தத் தொழிலாளியை,
கம்பெனி தொழிலாளியாக ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு, ஒரு
பிரத்யேகமான ஆர்ப்பிட்ரரி கிளாஸ் என்ற முறையில், ஒரு மாதம்
நோட்டீஸ் கொடுத்து நீக்கலாம் என்று சட்டம் தேவையில்லை.
ஏற்கனவே உள்ள சட்டங்களை அந்தத் தொழிலாளர்களையும்
அரசையும் கம்பெனியும் புரட்டக்ட் பண்ணுவதற்குப் போதுமான
தாக இருப்பதன் காரணமாக, இந்த ஷரத்து தேவையில்லை. இந்த
புரவிசன் வரக்கூடிய நேரத்தில், அதனுடைய சப்ஜெக்ட்
ஆக்சன் என்ற முறையிலேதான் இப்படி ஒரு மாத காலம்
நோட்டீஸ் கொடுத்து, வெளியேற்றக்கூடிய தொழிலாளர்களுக்கு
இரண்டாவது ஷரத்திலே கிடைக்க வேண்டிய வாய்ப்பு கிடைக்
காமல் போய்விடுகிறது. அதைத்தான் நான் சுட்டிக் காட்ட
விரும்புகிறேன். (குறுக்கீடு). The existing provision of law is
enough to protect the workers, the company and the Goverdment.

* மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு மாத காலம்
நோட்டீஸ் என்பதைப் பொறுத்த வரைக்கும்,

I want to make it abundantly clear that it can only be subjected to the existing law in force that cannot be arbitrary.

மாண்புமிகு உறுப்பினர் வேங்கடரமணன் அவர்கள் பேச
கின்றபோது, வேறு ஒரு சட்டப் பிரச்சினையை எழுப்பினார்கள்.
18-வது பிரிவைச் சுட்டிக்காட்டி, அதிலே நஷ்ட ஈடு தருகின்ற
போது, பிரியாரிட்டி ஆப் கிளெயிம்ஸ் என்று அவர்களுக்கு அந்தத்
தொகையை வழங்குகிறபோதே Priority ought to have been
re-scheduled in accordance with what has been contemplated
under the Indian Companies Act. என்று சொன்னார்கள்
இது மத்திய அரசினுடைய அனுமதிக்காக செல்ல
இருக்கிற சட்டம் என்ற காரணத்தால், இங்கு நிறைவேற்றப்
பட்டாலும் மத்திய அரசு ஒருவேளை இதை அனுமதிக்காது
என்ற அச்ச உணர்வைக் கூட அவர்கள் வெளியிட்டார்கள். அது
தவறான இன்டர்பிரடேசன் அடிப்படையிலான கருத்து என்பதை



நான் முதற்கண் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டத்தைப்
பொறுத்தவரைக்கும், நாட்டுடமை சட்டம். நாட்டுடமைச்
சட்டம், நஷ்ட ஈட்டை எப்படி மேற்கொள்ள வேண்டும் என்பது
குறித்து, 44-வது அமென்ட்மென்டுக்குப் பிறகு பல்வேறு உச்ச
நீதிமன்றத் தீர்ப்புகள், அதைத் தெளிவாக ஏற்கனவே வரை
யறுத்துவிட்டன என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத்
தெரியும் என நான் கருதுகிறேன். அந்த அடிப்படையில் ஒரு
தொழிற்சாலையை, ஒரு தொழிலை, அரசு நாட்டுடமையாக்கு
கின்றபோது, முன்னுரிமை, அந்தத் தனியாருடைய பங்குக்கு,
பிரைவேட் பிராப்பர்ட்டிக்கு முன்னுரிமை தந்தாக வேண்டும்
என்று ஏற்கனவே உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புகளால் தெள்ளத்
தெளிவாக தெரிவிக்கப்பட்டு இருக்கிற காரணத்தால், இந்த ஒரு
சட்டத்திற்காக மட்டும் அல்ல, There are so many Central Acts
இந்த சென்ட்ரல் ஆக்டைப் பொறுத்த வரைக்கும், பல்வேறு
சட்டங்கள் இருக்கின்றன. அனைத்து மத்திய அரசினுடைய
சட்டங்களும், தொழிற்சாலையை, அது நாட்டுடமையாக்குகிற
சட்டமாக இருந்தாலும் சரி, அல்லது வேறு எந்தத் தொழிலை
நாட்டுடமையாக்குகிற சட்டமாக இருந்தாலும் சரி, மத்திய
அரசாலே, மாநில அரசுகளாலே, இதுகாறும் கொண்டு வரப்
பட்ட சட்டங்கள் எதுவாக இருந்தாலும் சரி, அத்துணைச் சட்டங்
களிலும் இத்தகைய நஷ்ட ஈட்டை முறைப்படிதான்,
Priority of claims should be in this order. என்ற முறையில்தான்,
மத்திய அரசே வரையறுத்து, மத்திய அரசே அதைச் கடைபிடித்து
மாநில அரசுகளும் அதைக் கடைபிடிக்கக்கூடிய முறைகளைக்
கூறியிருக்கின்ற காரணத்தால், அதை ஒட்டித்தான், இந்தச்
சட்டம் வகுக்கப்பட்டு இருக்கிறது. வேறு முறையில் அல்ல.
அதற்குக் காரணம், An Acquisition Law is a law of
deprivation of property. என்பதை மாண்புமிகு உறுப்பினர்
வேங்கடரமணன் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.
பிரைவேட் பெர்சனுடைய பிராப்பர்டி ரைட்ஸ் டெப்ரைவ்
ஆகிறபோதே, - ஏற்கனவே இருந்த 30-வது விதி உங்களுக்குத்
தெரியும் - இந்த அரசியல் சட்டத்திலே உள்ள 31-வது பிரிவிலே,
டியு காம்பன்சேசன் தேவை என்று ஏற்கனவே உச்ச நீதி மன்றத்
திற்கு எல்லாம் எடுத்துச் செல்லப்பட்டு, அரசியல் சட்டத் திருத்
தம் வந்தபிறகு, அவர்கள் மீண்டும் நாட்டுடமையாக்குகின்ற
போது, இந்த அடிக்குவேட் காம்பன்சேசன் வேண்டும் என்பதற்கு
300-ஏ என்ற அரசியல் சட்டப் பிரிவின்படி அணுகுமுறை மேற்
கொண்டபோது, உச்ச நீதிமன்றம் அதற்கு தெளிவான வரை
முறைகள் வைத்து இருக்கின்றது.

(பிற்பகல் 12-20)

Unfairness & arbitrariness என்ற முறையிலே நஷ்ட
ஈடு வழங்குகிறபோது இருக்கக் கூடாது. அது தனியார் சொத்தைப்
பொறுத்த வரையில் அவர்களுக்கு 'அடிக்குவேட் காம்பன்சேஷன்'
கொடுக்க வேண்டும் என்ற முறையே இருந்தது. நாங்கள் இப்
போது 'அடிக்குவேட் காம்பன்சேஷன்' என்ற முறைக்குக்கூட

செல்லவில்லை. இறுதியில் வந்த உச்ச நீதிமன்ற தீர்ப்பு ஒன்று
'அடிக்குவேட் காம்பன்சேஷன்' இருக்க வேண்டும் என்ற தேவை
இல்லை என்ற காரணத்தையும் கூறியிருக்கின்ற காரணத்தால்
In case such legisla.ion is being p.otected by 39 (b) & (c) re'd with
31 (c) என்று வருகிறபோது அந்த முழுமையான நஷ்டஈட்டை தர
வேண்டியது இல்லை என்ற காரணத்தின் அடிப்படையில் தான்
இந்த சட்டத்தையும் நாம் 31 (b)&(c) of the Constitution re d with
31 (c) என்றமுறையிலே அதற்கும் உட்பட்டு இந்தச் சட்டத்தைக்
கொண்டு வந்து இருக்கிறோம். அப்படியே இந்தச் சட்டம்
வருகிறபோது அந்த நஷ்ட ஈடு அவரவர்களுக்கு கொடுக்கிற
போது கேட்டகிரி ஒன்றைப் பொறுத்த வரையில் உழைக்கும்
தொழிலாளர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு இருக்கிறது.
இது மத்திய அரசு ஏற்கனவே ஏற்றுக்கொண்ட ஒன்று. நீதி
மன்றங்களும், உச்ச நீதி மன்றமும் ஏற்றுக்கொண்ட ஒன்று.

கேட்டகிரி இரண்டைப் பொறுத்தவரையில் நாம் தனியாருக்கோ
மற்றவர்களுக்கோ சலுகை தந்து விடவில்லை. The princip l
amount of secured lo ns dv nced by (i) Cent l Government,(ii) St te
Government,(iii)Banks, (iv)Public Fin ncil Institutions nd then others
என்ற முறையிலே அது தெளிவுப்படுத்தப்பட்டு இருக்கிறது. அதில்
கூட 'அதர்ஸ்' என்பதற்கு நாங்கள் ஒரு 'அபிஷியல் அமென்
மெண்டு' ஐ கொண்டு வந்து இருக்கிறோம்.

அதைப் போலவே கேட்டகிரி III-ஐ நீங்கள் எடுத்துக் கொண்
டாலும்கூட அங்கும் பாதுகாப்பு III (i), (ii), (iii) and(iv) Centr l
Government, St te Goverment B nks and Public Financi l Institutions
என அரசு அமைப்புகள் அல்லது மைய, மாநில அரசுகளுக்குத்
தான் பாதுகாப்பு தரப்பட்டு இருக்கிறதே ஒழிய வேறு அல்ல;
மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்ட வேண்டியது கேட்டகிரி
IV-ஐ சுட்டிக் காட்டலாம். அப்படி கேட்டகிரி IV-ஐ பார்க்கிற
போது I' is a alre dy settled L w by the Superme Court in
accord nce with sever l judgements of the Supreme
Court. This procedure h s already been drawn and is pr ctised
by all the St te -Govenrment and the Central Court. என்ற
முறையிலே இறுதியாகத் தான் அரசு அதை நாட்டுடைமைச்
செய்கிறது. அரசு ஒரு சொத்தை நாட்டுடைமை ஆக்குகின்ற
போது அரசுக்கு வருகின்ற டாக்ஸைப் பொறுத்த வரைக்கும்
அதை இறுதியாகத்தான் வைக்க வேண்டும் என்றநடைமுறையைத்
தான் மத்திய அரசு கடைப்பிடித்து வருகிறது. தனியாருக்கு
முன்னுரிமைத் தரவில்லை என்றால் இந்த சட்டமே, நாட்டு
டைமைச் சட்டமே செல்லாது என்ற முறையில்
Article 300-A will be viewed. என்ற முறையிலே தான் இதை
மத்திய அரசு கடைப்பிடித்து வருகிறது. It is not a
Tax L w, It is not a L w to collect revenue. என்ற
முறையிலே தான் இது இருக்கிறது என்பதை சட்டப்படி
யாக இது செல்லும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இதை
மாற்றி மாண்புமிகு உறுப்பினர் சொல்லுவதைப் போல் ஸ்டேட்



டாக்ஸ்க்கு பிரையாரிட்டிக் கொடுத்து அரசியல் சட்டத்திலே
ஏற்கனவே உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பிற்கு மாறாக மற்ற
வைகளை பின்னுக்குத் தள்ளினால் மத்திய அரசு இந்தச் சட்டத்
திற்கு அனுமதி தராது, நீதி மன்றமும் இந்தச் சட்டம் செல்லும்
என்று சொல்லாது என்று நான் சட்ட நிலையை தெளிவாக்க
கடமைப்பட்டு இருக்கிறேன்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : ஒரு கிளாரிபிகேஷன் சார்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர்
அவர்கள் முழுமையாக பேசி முடித்த பிறகு நீங்கள் கிளாரிபி
கேஷன் கேளுங்கள் இடை இடையே கேட்கவேண்டாம்.

The Hon Thiru C. PONNAIYAN: Mr. Deputy Speaker Sirr, you m y ple se permit him to r ise his question.

Thiru T.R.VENKATARAMANAN: Mr. Deputy Spe ker Sir, with great respectto the Hon. L w Minister, I submit th t his answer s totally v gue-

அதாவது அவர்கள் பதில் சொல்லுகின்றபோது நான் எது
தவறு என்று சொன்னேனோ அந்தச் சட்டத்தை திரும்பவும்
ஒரு தடவை அவர்கள் படித்தார்களே தவிர செக்ஷன் 530-லே
முன்னுரிமையாக அரசுக்கு செலுத்த வேண்டிய வரிக்குத் தான்
முன்னுரிமை செலுத்தப்பட்டு இருக்கிறது என்று நான் வலி
யுறுத்திச் சொல்லி இந்தியன் கம்பெனிச் சட்டத்தினுடைய
பிரிவு 530ஐயும் நான் வாசித்துக் காண்பித்தேன். ஆனால்
அவர்கள் சொல்கிறார்கள் இதைப் போன்று பல மத்திய
அரசு சட்டங்களில் இப்படித்தான் போடப்பட்டு இருக்
கிறது. ஆகவே, நாங்கள் போட்டு இருக்கிறோம் என்று
சொன்னாலும்கூட இந்த அவைக்கு அப்படி எந்த சட்டங்கள்
போடப்பட்டன என்ற விளக்கங்களைச் சொல்லவில்லை. 2, 3
சட்டங்களையாவது சொல்லி இந்தச் சட்டங்களில் இப்படித்
தான் போடப்பட்டு இருக்கிறது. ஆகவே நாங்கள் இப்படிப்
போட்டது சரி தான் என்று சொன்னால் அது ஏற்றுக்கொள்ளக்
கூடிய கருத்தாக இருக்கும். அதாவது வழக்கறிஞர்கள் கூட
கோர்ட்டிலே வாதம் செய்கிறபோது, The c re so
m ny Judgements of the Supreme Court m y f vour
என்று சொல்வார்கள். ஆனால் ஒன்று கூட இருக்காது
என்று தெரிந்தவர்களுக்குத் தெரியும். வேறு ஒன்றும்
நன்றாகத் சொல்ல முடியாமல், இப்படிச் சொல்லி இருந்தார்களோ
என்ற ஐயப்பாட்டைத் தான் எனக்கு எழுப்புகிறதே தவிர....

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் வழக்கறிஞர். எனவே, 'கேஸ் லாஸ்' என்று சொல்லி
உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு இருக்கிறது என்று சொன்
னால்.. அவர் வழக்கறிஞர், படித்திருப்பார் என்ற நம்பிக்
கையிலே நான் சொன்னேன். அவர் படிக்கவில்லை என்றால்

நான் சொல்கிறேன். மைய அரசினுடைய சட்டத்தைப்
பொறுத்தவரையில், இது 'செட்டில்ட் லா—ஆக—இன்னும்
சொல்லவேண்டுமென்றால், இதுபோன்ற எத்தகைய அணுகு
முறைகள் என்பது மைய அரசும், மாநில அரசும்—இந்த அரசுக்கு
மட்டும் அல்ல, காங்கிரஸ் ஆளுகிற மாநிலமாக இருந்தாலும்
தனியாக தாக்கீது இருக்கிறது. அந்த அடிப்படையிலே
ஏற்கனவே சொன்னேன். நாட்டுடைமைச் சட்டம்
என்பது வேறு. இதை நாட்டுடைமை ஆக்குகிறோம்.
The Indi n Comp nies Act it is tot lly a different Act.
இந்தியன் கம்பெனீஸ் ஆக்டின் 530-வது பிரிவிலே, ரெவின்யூ
கவர்ன்மென்டுக்கு வரவேண்டிய ஒன்று. முன்னுரிமை கொடுக்க
வேண்டும் என்று இருக்கிறது. அதற்கு மாற்றுக் கருத்து
என்பதே இல்லை.

ஆனால் ஒரு தனியார் சொத்தை நாட்டுடைமையாக்குகிற
போது இதுபோன்ற எச்சரிக்கைகளைக் கடைப்பிடிக்க
வேண்டும், அவர்களுக்கு எத்தகைய இழப்பும் ஏற்படக்
கூடாது என்பதை உச்சநீதிமன்றம் வலியுறுத்தி இருக்கிறது.
'ட்யூ காம்பன்சேஷன்'-ஐக் கொடுக்கவேண்டாம் என்ற முறை
யிலே 31-ஆர்ட்டிகிளையே மாற்றினார்கள். அப்படி
மாற்றிய பிறகு கூட, after 44th mendments உச்ச
நீதிமன்றத்திற்கு பல தீர்ப்புகள் சென்று, நாட்டுடைமை
யாக்கப்பட்ட பல சட்டங்கள், வங்கிச் சட்டங்கள் எல்லாம்
எதிர்க்கப்பட்டு என்ன நடந்திருக்கிறது என்பது மாண்புமிகு
உறுப்பினருக்குத் தெரியாதது அல்ல.

உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்புகளிலே வந்த தீர்ப்பு
தான், அரசு நாட்டுடைமையாக்குகிறபோது, தனக்கு வருகின்ற
ஒரு வருவாயை, தனக்கு வருகின்ற 'டாக்ஸ் ரெவின்யூ'
It i nat a Tax Law: it is not a Law to collect revenu

இங்கே நாட்டுடைமை என்கிறபோது, தனியாருடைய
ஃபண்டமென்டல் ரைட்ஸ் எந்த அளவுக்குப் பாதிக்கப்படுகிறது.
அது பாதிக்கப்படாத அளவுக்கு இருக்கவேண்டும் என்ற,
வரையறை பற்றிய அந்த உச்சநீதிமன்றத் தீர்ப்புகளை
ஜட்ஜ்மென்டுகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு
காண்பிக்கின்றேன். அவர்கள் அதைப் படித்து விட்டு, அதற்கு
பிறகு அவர்களுடைய கருத்தினைச் சொல்லலாம்.

இரண்டு சட்டங்களை மட்டும் சொல்கிறேன்.
Transformer & Switch Gears Limited (Acquisition and Transfer
of Undertaking) Act of 1983 (Central Act 41/1983) அதை
நீங்கள் படித்துப் பாருங்கள்.



அதைப் போலவே, G rnest Flour Mills Comp ny (Acquisition and Transfer of Undertaking) Act of 1984 அதையும் படித்துப் பாருங்கள். இன்னும், The Comp ny (Acquisition and Transfer of Sick Tea Unit) Ac 1985, இன்னும் எல்லா மைய அரசுச் சட்டங் களையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இன்று மாலை தருகிறேன். அவர்கள் படித்துப் பார்த்துக் கொள்ளலாம்.

திரு. ப. பொனுன்ரங்கம் : துணைத் தலைவர் அவர்களே, குதிரைப் பந்தயம் ஒழிப்பது அண்ணாவின் கொள்கை. அதுவே எங்கள் கொள்கை என்று அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். ரொம்ப மகிழ்ச்சி. அந்த 'ஸ்டே' வெக்கேட் ஆகிற வரைக்கும் தான் இந்த முறையைக் கையாளுகிறோம், இந்த ஆக்ட்டைக் கொண்டு வருகிறோம் என்றார்கள். நான் தெரிந்து கொள்ள விரும்புவது, 1974-ல் வழக்குமன்றத்திற்குப் போனார்கள். 8, 9 ஆண்டுகளாக நீங்கள் அமைச்சர்களாக இருக்கிறீர்கள், ஆட்சியிலே இருக்கிறீர்கள். ஆனால் அந்த 9 ஆண்டுகளில் எந்த எந்த முறையிலே, எத்தனை முறை அந்த ஸ்டே-யை வெக்கேட் பண்ணுவதற்கு இந்த அரசு முயற்சி செய்ததுஎன்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேர வைத் துணைத் தலைவர் அவர்களே, 1974-ஆம் ஆண்டு குதிரைப் பந்தயத்தை ஒழிக்கச் சட்டம் கொண்டு வந்தீர்கள். இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் அந்தச் சட்டம் தடை ஆணைக்கு அப்போதே உட்படுத்தப்பட்டது என்பது நீங்கள் அறியாதது அல்ல. அந்த தடை ஆணையை உடைத் ததே இந்த அரசு தான். அந்த தடை ஆணையை உடைத்து, வழக்குமன்றத்தில் குதிரைப் பந்தய ஒழிப்புச் சட்டம் செல்லும் என்று தீர்ப்பை வாங்கியதும் இந்த அரசு தான். அதற்குப் பிறகு தான் அவர்கள் உச்சநீதிமன்றம் சென்று இருக்கிறார்கள். உயர்நீதிமன்றத்திற்கு வரும்போதே,

Before a single Judge at the first stage,

Before the Bench at the second stage

இந்த இரண்டு கட்டங்களிலேயும் தடை ஆணையை உடைத்து, வழக்கினை நடத்தி, வழக்கில் வெற்றி பெற்று, குதிரைப் பந்தய ஒழிப்புச் சட்டம்—திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் கொண்டு வந்த சட்டம் செல்லும் என்ற தீர்ப்பினை வாங்கியதும் இந்த அரசுதான். அதற்குப் பிறகு உச்ச நீதிமன்றத்திற்கு அந்த வழக்கு சென்று இருக்கிறது. தடை ஆணை பெற்று இருக்கிறார்கள். எந்தவிதத் தங்குதடையு மின்றி, எந்தவிதத் தயக்க உணர்வுமின்றி, அந்த வழக்கை நடத்தி, இந்தச் சட்டம் செல்லுபடியான சட்டம் என்ற ஆணையைப் பெறவேண்டும் என்ற ஆர்வத்தோடு நாங்கள் செயல்பட்டு வருகிறோம்.

மாண்புமி பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய விளக்கத்தை ஏற்று சட்டத்தை நிறைவேற்றித் தரும்படி வேண்டுகிறேன்.

THIRU V. R. JAYARAMAN: Mr. Deputy Speaker Sir, On a point of clarifications As per Madras Race Club Act 12 (1) you have given safe guards to Race club worker. But at the same time, rationalisation of wage structure-இலே, சில நிர்வாகஸ்தர்கள் ரூ. 10,000 5,000, என்ற சம்பளம் வாங்கிக் கொண்டு இருக்கிறார்கள். கடந்த முறை இருந்திருக்கக்கூடிய ரேஸ் கிளப் நிர்வாகஸ்தர்கள், all of a sudden 2,500 ரூபாய், 3,500 ரூபாய் என்று இன்கிரிமென்ட் கொடுத்து இருக்கிறார்கள். அந்த மாதிரி கொடுத்து இருக்கக்கூடிய அதிகாரிகளுக்கு சம்பளம் குறைக்கப்படுமா அவர்களுக்கு அந்த மாதிரியான சம்பள விகிதங்களை மாற்றி அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-30).

மாண்புமிகு திரு. சி பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்களின் உரிமைகள் முழுமையாகப் பாதுகாக்கப்படும். அதிகாரிகளுக்கு not based on some scientific principle irrational-ஆக இருக்குமானால், அது குறித்து, தக்க நடவடிக்கை எடுக்க அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

"1986 ஆம் ஆண்டு சென்னை குதிரைப் பந்தயச் சங்கம் (நிறுவனத்தைகையகப்படுத்துதலும் உரிமை மாற்றம் செய்தலும்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 16/1986) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 11 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 12.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி,

"பிரிவு 12 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்".

THIRU J. HEMACHANDRAN : Mr. Deputy Speaker Sir I move the following amendment standing in my name :



"In clause 12, in sub-clause (1), omit the words 'and shall continue to do so unless and until his employment under the Government or the Government company, as the case may be, is terminated by giving him notice of not less than one month in writing, or one month's pay and allowances in lieu of such notice, or until his remuneration and other conditions of service are altered by the Government or the Government company, as the case may be'".

Omit sub-clause (2) of clause 12.

திரு. எம். செல்லமுத்து : திருத்தத்தை நான் வழிமொழிகிறேன்.

திரு. ஜே. ஹேம்ச்சந்திரன் : சார், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் கூறிய நேரத்தில், இந்த ஷரத்து எக்ஸிஸ்டிங் சட்டத்திற்கு (லாசிற்கு) உட்பட்டுத்தான் அமல்படுத்தப்படும் என்று சொன்னார். அப்படியென்றால், இந்தப் பகுதி அந்தச் சட்டத்திலே இருக்கவேண்டிய தேவையில்லை. ஏற்கனவே உள்ள எக்ஸிஸ்டிங் லாஸ் will protect the Government, the Company and the workers என்ற காரணத்தால் இந்தப் பகுதியை சட்டத்திலேயிருந்து விலக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"பிரிவு 12 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, பிரிவு 12 நிறைவேற்றப்பெற்றது.

பிரிவுகள் 13 முதல் 24 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 25.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி :

"பிரிவு 25 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்".

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

"In clause 25, in sub-clause (1). for "Category I", substitute "Category I or items (a) and (b) of Category II".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 25, இருத்தப் பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவுகள் 26 முதல் 32 வரை, மற்றும் அட்டவணை-1, ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

அட்டவணை 2.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

'In the Second Schedule, —

(i) for Category II and entries, *substitute* the following :—

"Category II—

(a) Principal amount of secured loans advanced by —

(i) Central Government ;

(ii) State Government ;

(iii) Banks,

(iv) Public Financial institutions.

(b) Interest on the principal amount of secured loans referred to in item (a).

(c) Principal amount of secured loans advanced by any person not falling under item (a) and interest on such principal amount.

*Explanation* :– To determine the extent of security available for the purpose of item (a), the market value of the security as on the appointed day shall be taken into account."

(ii) In category IV, *for* item (c) and entries, *substitute* the following :—

(c) "Interest on loans and advances other than interest specified in items (b) and (c) of Category II".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

அட்டவணை-2, திருத்தப் பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.





பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1986 ஆம் ஆண்டு சென்னை குதிரைப் பந்தயச் சங்கம் (நிறுவனத்தை கையகப்படுத்துதலும் உரிமை மாற்றம் செய்தலும்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 16/1986), திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

(ஆ) சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு 1986.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் ப. பொன்னுரங்கம், அ. ரகுமான்கான், கு. சுப்பராயன் ஆகியோர் "ஆளுநர் அவர்களால் 23-11-1985 ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பெற்ற 1985 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 8/1985) இப்பேரவை நிராகரிக்கிறது" என்ற தீர்மானத்தைக் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் அதை மொழிவார்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"ஆளுநர் அவர்களால் 23-11-1985 ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பெற்ற 1985 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 8/1985) இப்பேரவை நிராகரிக்கிறது".

தீர்மானம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1986 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 3/1986)* ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

* 1986 ஆம் ஆண்டு சனவரி 11 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்தச் சட்ட
முன்வடிவினைப் போலவே மற்றும் மாநகராட்சிகள், நகராட்சி
மன்றங்கள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள், ஊராட்சிகள் குறித்த
சட்டமுன்வடிவுகள் ஆறு இருக்கின்றன. இந்தச் சட்டமுன்
வடிவின்மீது உறுப்பினர்கள் பேசும்போதே மற்ற அந்தச் சட்ட
முன்வடிவுகளின்மீதும் தங்கள் தங்கள் கருத்துக்களைத் தெரி
வித்துவிடலாம். பின்னர் அவற்றை எடுத்துக்கொள்ளும்போது
தனித்தனியாக விவாதமின்றி எடுத்து நிறைவேற்றலாம் என்று
தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, தனித்தனியாக அவற்றின்மீது விவாதம்
நடைபெறலாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தேவை
யில்லை. எல்லாம் ஒரே நோக்கத்திற்காகக் கொண்டு வரப்
பட்டுள்ளதால் இந்தச் சட்டமுன்வடிவின்மீது பேசும்போதே
அந்தச் சட்டமுன்வடிவுகள் பற்றியும் உறுப்பினர்கள் பேசிவிட
லாம்.

திரு. அ. ரகுமான்கான் : இதிலே எங்களுக்கு இருக்கிற
சிரமத்தை சொல்ல விரும்புகிறேன். இதிலே 3 மாநகராட்சி
கள் பற்றி வருவதால் தனித்தனியாகவே சென்னைபற்றி, மதுரை
பற்றி, கோவை பற்றி பேசக்கூடிய வாய்ப்புக் கிடைக்கும்.
ஒன்று, சென்னையைப் பற்றியும் மதுரையைப் பற்றியும்
கோவையைப் பற்றியும் தனித்தனியாகப் பேசும்போது அந்த
அந்த நிலைமைகளை எடுத்துச் சொல்லமுடியும். இரண்டாவ
தாக, தனித்தனியாகப் பேசும்போது கட்சி உறுப்பினர்களுக்கு
மாறி மாறிப் பேச வாய்ப்புக் கிடைக்கும். மூறாமையாக
எல்லாவற்றிலுமாகப் பேசினால் 5 அல்லது 10 நிமிடத்தில் முடித்
துக் கொள்ள வேண்டும். தனித்தனியாகப் பேசுகிறபோது
உறுப்பினர்களுக்கு பேசுவதற்கு நேரம் கிடைக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பெயர் கொடுத்
துள்ள எல்லா உறுப்பினர்களுக்கும் பேச சந்தர்ப்பம் கொடுக்கப்
படும்.

திரு. அ. ரகுமான்கான் : ரீசனபிள் சபிஷியன்ட் டைம்
மே பி கிராண்டட்,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டெபனட்லி.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தின் துணைத் தலைவர்
அவர்களே, கடந்த 8 ஆண்டுகாலமாக இதுபோன்ற சட்டங்
களைக் கொண்டுவருவதும் எங்களைப் போன்று எதிர்க்கட்சி
வரிசையிலே இருக்கிறவர்கள் அது கூடாது, சென்னை மாநக
ராட்சிக்கு தேர்தல் வையுங்கள், கோவை மாநகராட்சிக்கு
தேர்தல் வையுங்கள், மதுரை மாநகராட்சிக்குத் தேர்தல் வையுங்





கள் என்று வழக்காடுவதும் உங்களுக்கு கிடைத்திருக்கக்கூடிய
மெஜாரிட்டியின் காரணமாக அவைகள் சட்டமாக்கப்பட்டு எங்
களுடைய கோரிக்கைகள் எல்லாம் காற்றிலே கலந்த கீதமாக
போய்விட்ட சோகச் சம்பவங்கள் தொடர்ந்து இந்த சட்ட
சபையிலே அடிக்கடி நடந்துகொண்டிருக்கின்றது. தேர்தலிலே
வாக்குறுதி கொடுக்கிற அரசியல் கட்சி அது ஆட்சிக்கு வந்த
பிறகு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதும்தான் பிற
மாநிலங்களிலே உள்ள முறையாக இருக்கிறது. ஆனால் இங்கே
தேர்தலிலே கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுவதில்லை.
கர்நாடக மாநிலத்திலே தேர்தலின்போது நாங்கள் ஆட்சிக்கு
வந்தால் உள்ளாட்சிகளின் தேர்தலை நடத்துவோம் என்று
ஹெக்டே சொன்னார், தேர்தலிலே வெற்றி பெற்று ஆட்சிக்கு
வந்ததற்குப் பிறகு—சென்னை மாநகராட்சிக்கு இன்னும்
தேர்தல் நடத்தப்படவில்லை—கர்நாடகத்திலே பெங்களூர்
மாநகராட்சிக்கு தேர்தல் நடத்தப்பட்டுவிட்டது. அதைப்
போலவே மேற்கு வங்கத்திலே தேர்தலின்போது ஜோதிபாசு
நாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தால் நிச்சயமாக ஸ்தல
ஸ்தாபனங்களுக்கு தேர்தல் நடத்துவோம் என்று சொன்னார்.
பிறகு ஆட்சிக்கு வந்தார்கள், தேர்தலை நடத்தியிருக்கிறார்கள்.
நீங்களும் தேர்தலை நடத்தக் கூடியவர்களைப் போல வாக்
குறுதிகளைக் கொடுத்தீர்களே, தேர்தலை நடத்துவோம்
என்று சொன்னீர்களே, ஆனால் என்ன நடந்தது? சென்னை
நகரத்தில் பிரதிநிதித்துவம் வகிக்கின்றவன் என்ற முறையில்
நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். சென்னை மாநக
ராட்சிக்குத் தேர்தல் நடத்தப்படுமா என்று கேட்டால்
தொடர்ந்து ஒத்தி வைக்கப்படும் என்ற சூழ்நிலைதான்
இருந்துகொண்டிருக்கிறது என்பதை வருத்தத்தோடு தெரி
வித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 12—40.)

துணைத் தலைவரவர்களே, உங்கள் மூலமாக அரசினுடைய
கவனத்திற்கு இன்னொன்றையும் நான் கொண்டு வர விரும்பு
கிறேன். இந்தத் தேர்தல் தள்ளி வைக்கப்படுவதற்கு என்ன
காரணம்? அதிலே என்ன சிரமம் இருக்கிறது, என்ன சிக்கல்
இருக்கிறது என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.
பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள், நகராட்சிகள்
ஆகியவைகளுக்குத் தேர்தல் நடத்தாததற்குக் காரணம்,
சுப்ரீம் கோர்ட்டிலே வழக்கு இருக்கிறது, சிலர் நீதிமன்றத்
திற்குப் போயிருக்கிறார்கள், எனவேதான் காலதாமதம்
ஆகிறது என்ற பிரதான காரணத்தைச் சொல்லிக்கொண்டு
இருந்தார்கள். ஆனால் இந்த மாநகராட்சிகளுக்கு—சென்னை
மாநகராட்சிக்கும், மதுரை மாநகராட்சிக்கும், கோவை மாநக
ராட்சிக்கும் தேர்தல் நடைபெறக் கூடாது என்று நீதிமன்றத்தில்
வழக்கு இருக்கிறது? எந்த வழக்கும் எந்த நீதிமன்றத்திலேயும்
இது சம்பந்தமாக இல்லை. அப்படியானால் ஏன் தேர்தலை

மாநகராட்சிகளுக்கு நடத்தக்கூடாது? இதற்கு என்ன கார
ணத்தைத் தொடர்ந்து எட்டாண்டுகளாகச் சொல்லிக்கொண்டு
வருகிறீர்கள் என்று சொன்னால், தேர்தல் நடத்தக்கூடாது
என்பது எங்கள் நோக்கம் அல்ல, தேர்தல் நடைபெற்றாலும்
வெற்றி பெறுகின்றவர்கள் நாங்கள்தான் ஓட்டுகளை எப்
படிப்பெற வேண்டுமென்பதில், ஆஹா, அந்த இராஜாங்க
தந்திரத்தைப் புரிந்தவர்கள் நாங்கள்தான் என்றெல்லாம்
சொல்லுகிறீர்கள். மகிழ்ச்சி, அதைப்பற்றி எனக்குக் கவலை
யில்லை. தேர்தல் களத்திலே வெற்றியும், பெறலாம், தோல்வி
யும் பெறலாம், பாண்டிச்சேரியிலே ஒருமுறை ஒரு இடம்கூட
கிடைக்கவில்லை. பார்லிமெண்டிலே ஒரேயொரு சீட்டுதான்
கிடைத்தது. அண்ணா நகரிலே தோல்வி, மயிலாடுதுறையிலே
தோல்வி ; அண்ணாவே ஒருமுறை தோற்றுப்போனார். இவை
களெல்லாம் தேர்தல் களத்திலே சகஜம்தான். ஆனால்
மக்கள் பிரதிநிதிகள் இருக்க வேண்டுமென்ற சூழ்நிலை
இருக்கிறது. அப்படியிருக்கின்ற நேரத்தில் இந்தத் தேர்
தலை நடத்தாததற்குக் காரணம் என்ன? வேடிக்கையான
ஒரு காரணத்தைச் சொல்லுகிறீர்கள். மிக முக்கியமாக
நீங்கள் கடைசியாகச் சொல்லியிருக்கின்ற ஒரு
காரணத்தை துணைத் தலைவரவர்களின் மூலமாக இந்த அவை
யின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். இப்
பொழுது சொல்லியிருப்பது, பஞ்சாயத்து, நகராட்சிகளுக்குத்
தேர்தல் முடிந்தவுடன் நிச்சயமாக மாநகராட்சித் தேர்தலை
நடத்துவோம் என்பது. நான் கேட்கிறேன், பஞ்சாயத்துத்
தேர்தல், நகராட்சித் தேர்தல் ஆகியவற்றோடு இந்த மாநக
ராட்சித் தேர்தலையும் நடத்தக்கூடாதா? அதிலே என்ன
சிரமம்? பாரதப் பிரதமராக இருந்த இந்திரா காந்தி
அம்மையார் அவர்கள் எதிர்பாராதவிதமாக சுட்டுக் கொல்லப்
பட்டார்கள். அது மிகமிக வருத்தத்திற்குரிய விஷயம். ஆனால்
பார்லிமெண்ட் தேர்தல் உடனே வந்தது. அப்பொழுது நம்
முடைய சட்டசபைக்கு பதவிக் காலம் ஓராண்டு இருந்தது.
அப்படியிருந்தும், பார்லிமெண்ட் தேர்தலை ஒட்டி, சட்ட
சபைத் தேர்தலையும் நடத்தியிருக்கிறீர்களே. அப்படி அந்த
நேரத்திலே இரண்டு தேர்தல்களையும் நடத்துகின்றபொழுது
உமக்குச் சிக்கல் வந்ததா? சிரமம் வந்ததா? இல்லை.
அப்பொழுது உங்களுக்கு சௌகரியமாக இருந்தது. ஆனால்
இப்பொழுது மட்டும் என்ன சிக்கல்? பஞ்சாயத்து, நகராட்சித்
தேர்தலோடு சேர்த்து இந்த மாநகராட்சிகளுக்கும் தேர்தலை
நடத்தக்கூடாதா? அதற்கு என்ன ஏற்பாட்டைச் செய்ய
வேண்டியிருக்கிறது? தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை
ஏன் நீட்டிக்கிறோம் என்று சொன்னால் மாநகராட்சித்
தேர்தலுக்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியிருக்கிறது
என்று சொல்கிறார்கள். இந்த எட்டாண்டுக் காலமாக
அந்தத் தனி அதிகாரி என்ன செய்து கொண்டிருந்தார்? இதை
ஏன் அவர் இதுவரையில் செய்திருக்கக்கூடாது? தேர்தலைக்
கொண்டு வந்தால் அவருக்கு என்ன சிரமம்? தனி அதி
காரி தேர்தல் ஏற்பாடுகளைச் செய்ய மறுத்து விட்டாரா?
இல்லை. பிறகு என்ன காரணம்?





நீங்கள் சொல்லக்கூடிய காரணம் என்ன? ஏற்கனவே
இதே போன்ற ஒரு மசோதாவில் ஒரு காரணம் சொல்
லப்பட்டிருக்கிறது. வாக்காளர்கள் பட்டியல் தயாரிக்கப்படு
கிறது என்று சொல்லப்பட்டது. அப்பொழுது திரு குழந்தைவேலு
அவர்கள் அமைச்சராக இருந்தார். வாக்காளர் பட்டியல்
தயாரிப்பதை ஒரு காரணமாகச் சொல்லாதீர்கள், விரைவிலே
அது அரசாங்கத்தால் செய்யப்படக்கூடிய விஷயம்தான்
என்று சொன்னேன். நான்கூட நடந்த சம்பவம் ஒன்றைச்
சொல்லி அது சபைக்குறிப்பில் ரிக்கார்டாகியிருக்கிறது.
வாக்காளர் பட்டியலை அரசாங்க அதிகாரிகள் தப்பாக வைத்தி
ருக்கிறார்கள். சேப்பாக்கம் தொகுதியில் ஒரு வாக்காளரு
டைய பெயர் சுல்தான் இப்ராகிம் என்பது. இதை சைத்தான்
இப்ராகிம் என்று எழுதியிருந்தார்கள். இதைக்கூட நான்
சுட்டிக்காட்டினேன். இதைக்கூட அதிகாரிகள் சரியாகச் செய்யா
விட்டால். அந்த வாக்காளர் வாக்குச் சாவடிக்குப் போய்,
என்னுடைய பெயர் சுல்தான் இப்ராகிம் என்று சொல்ல,
உடனே அதிகாரி அது தப்பு, உன்னுடைய பெயர் சைத்தான்
இப்ராகிம் என்று சொன்னால் அவர் எங்கே போவது? இதைப்
போன்ற தவறுகள் நடந்தன. இதையெல்லாம் சபையின்
கவனத்திற்கு, அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு
வந்தோம். சரி, வாக்காளர் பட்டியல் தயாராகிவிட்டது.

அடுத்து சொன்னார்கள், 18 வயதுடையவர்களுக்கு வாக்
குரிமை கொடுக்கப் போகிறோம் என்று. 18 வயது என்ன,
இனிக்கும் இளமை 16 வயதுக்குக் கூட வாக்குரிமை கொடுக்
கலாம், வேண்டாமென்று சொல்லவில்லை. ஜனாப்
ஜின்னா சாகிப் அவர்கள் ஒருமுறை சொன்னதைப்போல,
" Give me some youths I will make Heaven on the Earth ".
சில இளைஞர்களை என்னிடத்திலே தாருங்கள், இப்பொழுது
பூலோகத்திலேயே ஒரு சுவர்க்கத்தை உருவாக்கிக் காட்டு
கிறேன் என்று சொன்னார்கள். ஆக, 18 வயது என்ன,
16-க்கே ஓட்டுரிமை கொடுப்பது குறித்துக்கூட நாங்கள் ஒன்றும்
வருத்தப்படவில்லை. இளைஞர்தான் இன்றைக்குப் பிரத
மராக இருக்கிறார். ஆகவே, அரசியல் தெளிவுபெற,
அறிவு பெற வயது பிரச்சினைக்கே இடமில்லை. அந்தக் கார
ணத்தைச் சொல்லி அந்த மசோதாவை நிறைவேற்றினீர்கள்.

அடுத்து சொன்னீர்கள். என்ன சொன்னீர்கள்? அண்ணா
நகரிலே ஒரு தேர்தல் நடைபெற்றது. அந்தத் தேர்தலில்
திராவிட முன்னேற்றக் கழகம் ஜெயித்து விட்டது. உடனே
நீங்கள் என்ன சொன்னீர்கள் என்றால், திருட்டு ஓட்டுப்
போட்டு ஜெயித்து விட்டார்கள் என்று சொன்னீர்கள்.
பரவாயில்லை, நாங்கள் ஜெயித்தால் கள்ள ஓட்டு ; நீங்கள்
ஜெயித்தால் நல்ல ஓட்டு. இருக்கட்டும், ஜனநாயகம், வாழ்க.
ஆனால், நான் கேட்க விரும்புகிறேன். அப்பொழுது ஒரு புதிய
அறிவிப்பைச் செய்தீர்கள். என்ன அறிவிப்பு தெரியுமா? அது
வேறொன்றும் இல்லை, திருட்டு ஓட்டுகளைத் தவிர்ப்பதற்காக,

அடையாளக் கார்டுகள் கொடுக்கப் போகிறோம்,
எடுக்கப் போகிறோம், என்று. நம்முடைய முதல் அமைச்சர்
சிவகங்கையில் பேசும்பொழுது சொன்னார்கள், ஆண் வாக்கா
ளர்களை ஆண் போட்டோ கிராபர் படம் எடுப்பார்; பெண்
வாக்காளர்களை, பெண் போட்டோ கிராபர் படம் எடுப்
பார். இப்பொழுது, எப்படி, 1987 ஜனவரியிலே, கள்ளுக் கடை-
சாராயக் கடை மூடப்படும் என்று அறிவிப்பு செய்தோமோ,
அதுமாதிரியான அறிவிப்பு. அடையாள கார்டு கொடுக்கப்
படும், புகைபபடம் ஒட்டப்படும் என்று. நான் கேட்கிறேன்
அடையாள கார்டு கொடுததார்களா? புகைப்படம் எடுத்தார்
களா? ஒரு புகைப் படக்காரர், பாவம், தெரியாமல்,
டென்டருக்குப் போய், ரூ. 10,000 கார்ப்பரேஷனுக்குக்
கொடுத்துவிட்டு, அந்த ரூபாயைத் திருப்பி வாங்க பட்ட பாடு
சாதாரண பாடு அல்ல. அந்த அளவிற்கு அந்தப் பிரச்சினை
யைக் கொண்டு வந்து அந்த மசோதாவை நிறைவேற்றினீர்
கள்.

அடுத்து, ஒரு வேடிக்கையான காரணம். மஸ்டர் ரோல்
வழக்கு இருக்கிறது என்று சொன்னார்கள். அந்த மஸ்டர்
ரோல்—ஒரு சர்வ கட்சி நிலையில் நடைபெற்றது. எல்லா
கட்சியைச் சேர்ந்தவர்களும் அதில் சம்பந்தப்பட்டு இருந்தார்
கள். நடவடிக்கை எடுக்கப்பட்டது. (குறுக்கீடு) நம்முடைய
மதிப்பிற்குரிய முஸ்லீம்லீக் கட்சியைச் சேர்ந்த சாத்
சாகேப் அவர்கள், அவரது கட்சி இல்லை என்று சொல்கிறார்,
மெத்த நன்றி. நான் நினைவுபடுத்த விரும்புகிறேன், அந்த
மஸ்டர் ரோல் வழக்கு இருக்கிறது. எனவே தேர்தல் நடத்த
முடியவில்லை என்று சொல்கிறார்கள்.

நான் யாரையும் புண்படுத்துவதற்காகச் சொல்வதாக,
தயவு செய்து கருதக் கூடாது. உள்ளாட்சித் துறை அமைச்சர்
அவர்களை அந்த நோக்கத்தோடு சொல்ல வில்லை. தயவு
செய்து அவ்வாறு எடுத்துக் கொள்ளக் கூடாது. வாதம் என்ற
அடிப்படையில்தான் வைக்கிறேன். கிரிமினல் வழக்கு இருக்கி
றது என்ற காரணத்தாலே தேர்தல் நடக்கக்கூடாது என்று
இருக்கிறதா? உதாரணத்திற்குச் சொல்கிறேன், மறைந்து
போன இந்திரா அம்மா அவர்கள், உயிரோடு இருந்தபொழுது,
அவரைக் கொலை செய்ய முயன்றதாக, நானும் ஒரு அக்யூஸ்ட்
ஆக்கப்பட்டிருக்கிறேன், நம்முடைய அமைச்சர் அவர்களும்
ஒரு அக்யூஸ்ட் ஆக்கப்பட்டிருக்கிறார். என்னுடைய. துர
திருஷ்டம் எதிர்க்கட்சி வரிசையிலே உள்ள அக்யூஸ்ட்;
ஆளுங்கட்சி வரிசையிலே அவர் அக்யூஸ்ட். இப்பொழுது
அமைச்சராவதற்குத் தடையாக அந்த வழக்கு இருக்கிறதா?
அவர் தேர்தலில் நிற்பதற்கு அந்த வழக்குத் தடையாக
இருக்கிறதா? ஆக, கிரிமினல் கேசஸ் தடையாக இருக்கிறது
என்று சொல்வதிலே வாதம் இருக்கிறதா? கிடையாது. அந்த
வழக்கு என்று சொன்னீர்கள்.





இப்பொழுது கடைசியாக, நிச்சயமாக அடுத்து நடத்துகி
றோம் என்று சொல்கிறார்கள். அதிலே ஒரு வேடிக்கை என்ன
வென்று கேட்டால், மாண்புமிகு அவைத் துணைத் தலைவர்
அவர்களே, உங்கள் மூலமாக அமைச்சருடைய கவனத்திற்குக்
கொண்டு வருகிறேன். அமைச்சர் அவர்கள் அது குறித்து
விசாரிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.
சென்னை மாநகராட்சியிலே, மின் துறையிலே, பல
பேர்கள் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள். எவ்வளவு
பெரிய தப்பு நடந்திருக்கிறது என்பதை அமைச்சர் கவனத்
திற்கு உங்கள் மூலம் கொண்டு வருகிறேன்.

திடீரென்று 19 பேர்களை, காரியங்களைப் பூர்த்தி செய்ய
வேண்டுமென்று சொல்லி, அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டு
மென்று எம்ப்ளாய்மெண்ட் ஆபீசுக்குக் கடிதம் எழுதினார்கள்.
எம்ப்ளாய்மெண்ட் ஆபீஸிலே என்ன செய்திருக்கிறார்கள்
என்றால், இரண்டு பட்டியல் அனுப்பியிருக்கிறார்கள். எம்ப்ளாய்
மெண்ட் ஆபீசர் கையெழுத்துப்போட்டு பட்டியல் அனுப்புகிறார்.
ஆனால், தனி அதிகாரிகள் தர்பார் நடக்கக்கூடிய கார்ப்ப
ரேஷனில் என்ன நடைபெற்றிருக்கிறது என்றால், எந்தப் பட்டி
யல், எம்ப்ளாய்மெண்ட் ஆபீசர் கையெழுத்து போட்டு
வேலைக்கு வைத்துக் கொள்ளுங்கள், வேலையில் நியமியுங்கள்
என்று சொல்லி அனுப்பப்பட்டதோ, அந்தப் பட்டியலை அப்
படியே திருப்பி விட்டு, பட்டியலுக்குச் சம்பந்தம் இல்லாத,
வேறு நபர்களைப் போட்டு, மாவட்ட அதிகாரியினுடைய
கையெழுத்தைத் திருட்டுத்தனமாக, அவர்கள் போட்டு,
வேலையில் வைக்கப்பட்டு, அது குறித்து, புகார் செய்யப்
பட்டு, சம்பந்தப்பட்ட அதிகாரி, சென்னை மாநகராட்சி
மின் துறைக்கு 4/5—12—1985, எண் ஏ-4—11300/82—
அதிலே சொல்கிறார், அதை நான் வாசித்துக் காட்டுகிறேன்—
மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர், சென்னை-20— அவர்
களின் கையொப்பம் போலியாகக் கையெழுத்திடப்பட்டுள்ளது
என்றும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள 19 தற்காலிகத் தொழி
லாளர்களையும் உடனடியாக வேலையிலிருந்து நிரந்தரமாக
நீக்க வேண்டுமென்றும் தெரிவிக்கப்படுகிறது. நான் கேட்க
விரும்புகிறேன், இதில் சொல்லியிருப்பது. வேலை வாய்ப்பு
மற்றும் பயிற்சித் துறை, சேப்பாக்கம், சென்னை-5— அவர்
கடிதத்திலேயே இதைச் சொல்லியிருக்கிறார். போலிப்
பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கிறது, தவறான நபர்களுக்கு,
மாவட்ட அலுவலகம் சொல்லாத நபர்களுக்கு, வேலை
வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட அதிகாரி
கையெழுத்து தவறாக இடப்பட்டிருக்கிறது. இவ்வளவு
பெரிய மஸ்டர் ரோல் மீண்டும் அங்கே தொடர்ந்திருக்கி
றது. ஆகவே, தனி அதிகாரி கவனத்திற்கு வந்திருந்தும்
அங்கே கமிஷனர் இருந்தும், விஜிலன்ஸ் இருந்தும், ஒரு வழக்கு
இல்லை, புகார் செய்யப்பட்டிருக்கிறது; நான் உதாரணத்திற்
காக ஒன்றைக் காட்டுகிறேன். இதுபோல், கோடிக்கணக்கில்
இலட்சக்கணக்கில், இன்றைக்குக் கொள்ளை அடிக்கக்கூடிய
கூடமாக சென்னை மாநகராட்சி தனி அதிகாரி காட்டு தர்பார்
இருக்கிறது.

(பிற்பகல் 12–50)

வேண்டுமானால் இன்னும் பல ஆதாரங்களைத் தர தயாராக இருக்கிறேன். நேரம் இல்லாத காரணத்தால் இந்த அளவில் நிறுத்தி, அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விசாரணை வைத்தால் இன்னும் பல தஸ்தாவேஜ்களைத் தர தயாராக இருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் சொல்லப்போனால் இதைப்போன்ற பல தொடர்கதைகள் இருக்கின்றன. ஆக, மக்கள் பிரதிநிதிகள் இல்லாத காரணத்நால் எற்படுகின்ற விளைவுகள் இவை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய மரியாதைக்குரிய துணைத் தலைவர் அவர்களே, சேப்பாக்கம் தொகுதியிலே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியாக, உங்களைப்போல் மூன்றாவது முறையாக வந்து சேரக்கூடிய வாய்ப்பு எனக்கு கிடைத்திருக்கிறது. புயலுக்குத் தப்பிய மரமாக வந்திருக்கிறேன். மரியாதைக்குரிய அமைச்சர் அவர்கள் சேப்பாக்கம் பகுதியிலே வந்து பேசுகின்றபோது ரகுமான்கானுக்கு ஓட்டுப் போட்டீர்களே, கொசு இருக்கிறதைப் பார்த்தீர்களா என்று பொதுக்கூட்டத்திலே பேசியிருக்கிறார்கள் (குறுக்கீடு) கொசுவை ஒழிப்பதும் மாநகராட்சி சம்பந்தப்பட்டதுதான். அமைச்சர் வந்து பொதுக்கூட்டத்திலே இப்படிப் பேசியிருக்கிறார். நான் 'பேப்பர்' எடுத்து வைத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பொதுக் கூட்டத்தில் பேசியதை எல்லாம் இங்கே பேசுவதற்கு நேரம் இல்லை ; அதை ரெஃபர் செய்ய வேண்டாம். பத்திரிகையில் வந்த செய்தியாக இருந்தாலாவது முன் அனுமதி பெற்றுச் சொல்லலாம்.

திரு. அ. ரகுமான்கான் : அமைச்சர் சேப்பாக்கம் பொதுக் கூட்டத்தில் பேசியதைக் குறிப்பிட்டேன். கொசு உற்பத்தி செய்த பெருமை எனக்கு அல்ல ; சென்னை மாநகராட்சிதான் அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்னும் சொல்லப் போனால் இதற்கெல்லாம் பொறுப்பிலே இருக்கிற அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். உதாரணத்திற்குச்





சொல்ல வேண்டுமென்றால் எனது தொகுதியில் லாக் நகர், மாநிலக் கல்லூரிக்குப் பின்பக்கமாக உள்ள இடம், எல்லீஸ் நகர், பார்டர் தோட்டம், சிந்தாதிரிப்பேட்டை, மன்னார்சாமி கோவில் தெரு, ஜோதிமா நகர் காக்ஸ் காலனி, பரியல் கிரவுண்டு, நாவலர் நகர், போன்ற பல்வேறு பகுதிகள் இருக்கின்றன. நாவலர் நகர் என்று பெயர் வைத்திருக்கிறார்கள். காரணம் அது அவருடைய பழைய தொகுதி. அதனால் அவர் பெயரை அங்கே வைத்திருக்கிறார்கள். உயிரோடு இருக்கிறவர்களுடைய பெயரை வைக்கக்கூடாது என்ற உன்னதமான இலட்சியத்தை உடையவர்கள் என்று முழங்கியிருக்கிறார்கள். இதை எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்றால் இன்றைக்கு அந்தப் பகுதியிலே பார்த்தால் குப்பைகள் குன்றுகளாக இருந்து கொண்டிருக்கின்றன. ஆனால் நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர், மாநகராட்சி கமிஷனர், அதிகாரிகள் எல்லாம் அங்கே வந்து ஒரு அற்புதமான ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். பத்திரிகையிலே கூட அந்தச் செய்தி வந்தது. குப்பையிலிருந்து மின்சாரம் தயாரிப்பது எப்படி என்ற ஆராய்ச்சி நடைபெற்றிருக்கிறது. குப்பையிலிருந்து மின்சாரத்தைத் தயாரிக்கட்டும், வேண்டாம் என்று சொல்லவில்லை. அல்லது கழிவுப் பொருளில் இருந்து தயாரிக்கட்டும். அல்லது கழிவு நீரிலிருந்து மின்சாரத்தைத் தயாரிக்கட்டும். அப்படி தயாரிக்கும் முறையைக் கண்டுபிடிக்கின்றவர்களுக்கு நோபல் பரிசு கொடுக்கக்கூடிய நிலைமை கூட வரலாம். இதை நான் கிண்டலாகச் சொல்லவில்லை, ஆனால் எங்களுக்கு இருக்கிற பிரச்சினை அங்கே இருக்கிற குப்பையை அகற்ற வேண்டும், கொசுத் தொல்லையை ஒழிக்க வேண்டும் என்பது தான். பல இடங்களில் குடிநீர் வசதி இல்லை ; குழாயே இல்லை சில இடங்களில்.

திரு. சைதை சா. துரைசாமி : அது மாநகராட்சி வேலை இல்லை ; அதற்காக 'மெட்ரோ' என்று தனியாக இருக்கிறது.

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவரர்களே, இன்றைக்கு இதிலே எங்களுக்கு மிகப் பெரிய சிக்கல் இருக்கிறது. நீங்கள், திண்டுக்கல்லில் இருந்து வருகிறீர்கள். இதைப்பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள வாய்ப்பு இல்லை. எங்களுக்கு இருக்கிற சிக்கல், விளக்கு எரியவில்லை என்றால் யாரிடம் சொல்வது ? குப்பை அகற்றப்படவில்லை என்றால் யாரைக் கேட்பது ? குழாய் நீர் தரவில்லை என்றால் எங்கே முறையிடுவது ? கழிவு நீர் போகவில்லை என்றால் எங்கே சொல்வது? சட்டமன்ற உறுப்பினர்களைச் சந்திக்க வருகின்றவர்கள் இதை எல்லாம் யோசித்துக்கொண்டா வருகிறார்கள் ? இந்த இலாகா என்றால், என்ன, அந்த இலாகா என்றால்,

என்ன ? அமைச்சர் இருக்கிறார், அதிகாரிகள் இருக்கிறார்கள் பிரச்சினையைத் தீர்த்துவைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டாமா? விளக்கு எரியவில்லை என்றால், கழிவுநீர் போகவில்லை என்றால், தண்ணீர் வரவில்லை என்றால் முறையிடுவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியாக சட்ட மன்ற உறுப்பினர் ஒருவர்தான் இருக்கிறார். ஒருவேளை நண்பர் துரைசாமி அவர்களுடைய தொகுதியில் இந்தப் பிரச்சினைகள் இல்லை என்று கருதுகிறாரோ என்னவோ எனக்குத் தெரியாது. அவர்களுடைய தொகுதியில்தான் எங் குமே இல்லாத அளவுக்கு கொசுத் தொல்லை ; யானைக்கால் வியாதி அதிகமாக இருப்பது அங்கேதான். இப்போதுதான் கொஞ்சம் குறைந்துகொண்டு வருகிறது. இங்கே கொசுக்கள் குடும்பம் நடத்துகின்ற கொடுமையைப் பார்க்கிறோம். நான் வேடிக்கையாகச் சொல்லவில்லை. உண்மையிலேயே சொல் றேன். இன்றைக்கு கொசுக்கள்தான் இரத்தத்தின் இரத்த மாக இருந்து கொண்டிருக்கின்றன ; படாதபாடு படுத்திக் கொண்டிருக்கின்றன. இதுதான் யதார்த்தமான உண்மை.

நான் இன்னொன்றையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். குடிநீர் வசதி சரியாக இல்லை. எங்களுடைய அண்ணா நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.சோ. மா. இராமச்சந்திரன் அவர்கள் என்னைத் தன்னுடைய தொகுதிக்குக் கூட்டிக்கொண்டு போய் ஒரு கூட்டம் போட்டு பேசச் சொன்னார்கள். அண்ணா நகர்த் தொகுதியிலே சென்னை மாநகராட்சியின் பல குழாய்களில் தண்ணீரே வரவில்லை என்று சொன்னார்கள். நான் அப்போது அவர்களிடத்திலே சொன்னேன், உங்களைக் காட்டிலும் சேப் பாக்கம் தொகுதியிலே இருக்கின்ற நிலைமையைப் பார்த்தால் அவர்கள் கொடுத்து வைத்தவர்கள். இங்கே குழாயிலே தண் ணீர் வரவில்லை என்று சொல்கிறீர்கள். ஆனால் அங்கே குழாயே கிடையாது. எனவே உங்களைக் காட்டிலும் நாங்கள் பொறாமைக் குரியவர்கள் என்று நான் சொன்னேன். அந்த அளவுக்கு நிலைமை இருக்கிறது. எனவே குடிநீர்ப்பிரச்சினை தீர்க்கப்பட வில்லை.

கிருஷ்ணா நதி சென்னைக்கு வருகிறது என்று சொன்னார்கள். பகீரதன் கங்கையைக் கொண்டு வந்ததுபோல் கொண்டுவரப் போவதாகச் சொன்னார்கள். அப்போது ஆந்திராவின் முதல மைச்சர் திரு. என். டி. ஆர். அவர்கள் வந்தார்கள். எல்லா முதல்வர்களும் வந்தார்கள். ஹரே கிருஷ்ணா ஹரே ராமா என்ற நிலையில் கிருஷ்ணா வருவது மாதிரியான சூழ்நிலையில் ........(மணியடிக்கப்பெற்றது) நான் சொல்வது எந்தவித மான உள்நோக்கத்தோடும் சொல்லவில்லை. எனக்கு இன்னும் 5 நிமிடங்கள் பேசுவதற்குக் கொடுக்க வேண்டும்.

சாலை வசதி சரியாக இல்லை. குறிப்பாக என்னுடைய தொகுதிக்கு அமைச்சர் பெருமக்கள் வருகிறார்களா என்று கேட்டால் வருவதில்லை. நம்முடைய அமைச்சர் திரு. கிருஷ்ண சாமி அவர்கள் சட்டமன்ற உறுப்பினராகவும் அமைச்சராகவும்



இருக்கிறார். நம்முடைய நாவலர் அவர்கள் பாணியிலே சொல்ல வேண்டும் என்றால் இங்கே வருகிறபோது அவர் அமைச்சர், அங்கே போனவுடனே அவர் சட்ட மன்ற உறுப்பினராகி விடுகிறார்.

நம்முடைய அமைச்சர் திரு. காளிமுத்து அவர்கள் அங்கே போய் பார்வையிட்டார்களா ? என்னுடைய தொகுதிக்கு 8 வருஷமாகப் பல முறை திரு. காளிமுத்து அவர்களை அழைத்து இருக்கிறேன். வருகிறேன் என்று சொன்னார். வந்திருக்கி றாரா ? எனவே சம்பந்தப்பட்ட உள்ளாட்சித் துறை அமைச்சரா வது வருவார் என்று நான் நம்புகிறேன். அவர் வந்து குறை களைப் பார்க்கவேண்டும். அதிகாரிகள் வருகிறேன் என்று சொல்லுகிறார்களே தவிர அவர்களும் வருவது கிடையாது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி வந்து 8 ஆண்டுக்காலம் ஆகிவிட்டது. முன்பு சில அமைச் சர்கள் மாறுவேடம் போட்டெல்லாம் போய்ப் பார்ப்பார்கள், பகலிலே வந்தால் சிரமம் என்று. ஆனால் இப்போது மாறு வேடத்திற்கு அவசியம் கிடையாது. ஆகவே பகலிலேயே வந்து தாராளமாகப் பாருங்கள். ஒரு முக்கியமான பிரச்சினையை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவர நான் விரும்புகிறேன். இதனை மனிதாபிமான அடிப்படையில் நீங்கள் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குடிசைகள் பல அகற்றப்படுகின்றன. 1985 ஆம் ஆண்டு வரைக்கும் குடிசைகள் அகற்றப்படக்கூடாது என்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு வழங்கி இருக்கிறது. 1977 ஆம் ஆண்டு வரைக் கும் குடிசைகள் அகற்றப்படக்கூடாது என்று முன்பு முதலமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். ஆனால் பல தொகுதி களில் குடிசைகள் பிய்த்து எறியப்பட்டிருக்கின்றன. என்னு டைய தொகுதியில் லாக்நகர், சத்தியவாணிமுத்து நகர் போன்ற பகுதிகளில் இதுபோன்ற காரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த சட்ட விரோதமான காரியங்கள் சரியில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் அதிக நேரம் பேசியாகி விட்டது. எனவே சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு இன்னும் 5 நிமிடங்கள் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். ஏன் என்றால் எங்கள் கட்சியிலே ஒரு பில்லிலே ஒருவர்தான் பேசுகிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சீக்கிரம் பேசி முடித்துவிடுங்கள்.

திரு. அ. ரகுமான்கான்: உங்களைப் போன்று வள்ளுவராக
இருந்தால் சீக்கிரம் சுருக்கமாகச் சொல்லி முடித்துவிடலாம்.
ஆனால் நான் கம்பன். ஆகவே இப்படித்தான் சொல்ல முடியும்
எனவே அனுமதி வேண்டும்.

ஊனமுற்றோருக்கு பெட்டிக்கடை வைக்க அனுமதி கொடுக்கப்
பட்டு இருக்கின்றது.

* * * * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் இப்போது குறிப்பிட்ட அந்தவா சகங்களை
அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு உத்தரவிடுகிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, ஊனமுற்றோர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ்
களுடைய கடைகள் எல்லாம் தகர்த்து எறியப்படுகின்றன.
செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்
விளம்பரப் பலகை என்று சொல்லி மாநகராட்சி அதிகாரிகள்
செய்கின்ற கொடுமை கொஞ்சநஞ்சமல்ல. இவற்றை எல்லாம்
சர்க்கார் கவனிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்
கிறேன்.

கடைசியாக ஒரு விஷயத்தை மட்டும் சொல்லி நான் முடித்துக்
கொள்ள விரும்புகிறேன். ஆளுகின்ற கட்சியைப் பொறுத்த
மட்டில், அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில் கட்சி வேறுபாடு
என்ற சூழ்நிலை இருக்கக்கூடாது. சென்னை நகர மேம்பாட்
டுக் குழுவினுடைய தலைவர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்
சர் அவர்கள். திரு. சு. பாலன் அவர்கள் அதிலே உறுப்பினர்.
சென்னை நகரத்தை மேம்படுத்துவதற்கோ அல்லது
அழகுபடுத்துவதற்கோ எந்தவிதமான கருத்து வேறுபாடும்
இடையாது. ஆனால் வேண்டியவர்களுக்கு ஒன்று,
வேண்டாதவர்களுக்கு ஒன்று என்ற நிலைமை இருக்கக்
கூடாது. நீங்கள் கேட்டால் ஆதாரத்தைத் தருவதற்கு
நான் தயாராக இருக்கிறேன். குறிப்பாக சென்னையிலே
நடைபாதையில் இருக்கக்கூடிய கடைகளை எல்லாம் அகற்று
வோம் என்று சொல்லிவிட்டு சென்னை மாநகராட்சிக்குச் சொந்த
மான நடைபாதையில் கான்க்ரீட் கட்டைகள் ஒரு பகுதியில்
இருக்கின்றன. அந்த இடம் உங்களுக்குத் தெரியும். நம்முடைய
முதலமைச்சர் அவர்களின் பெயராலே உள்ள இடல். சென்னை.
கோடம்பாக்கம். அந்தக் கட்டைகள் தகர்த்து எறியப்பட்டிருக்
கின்றதா? மற்றவர்களுக்கு ஒரு நீதி, முதலமைச்சருக்கு ஒரு
நீதியா? எனவே சட்டம் தன்னுடைய வேலையைச் செய்ய
வில்லை என்றால் இது எந்தவிதத்தில் நியாயம்? "கிங் கேன்
டு நோ ராங்" அதாவது மன்னன் தப்பு செய்யமாட்டான் என்று
இங்கிலாந்து நாட்டிலே சொல்வார்கள். இங்கே மன்னன்
அல்ல; மன்னாதி மன்னனே தப்புச் செய்தாலும் கேட்கின்ற
கடமை எதிர்க்கட்சிக்கு உண்டு. ஆகவேதான் நாங்கள் கேட்
கிறோம் இது என்ன நியாயம் என்று?

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்
இணங்க அகற்றப்பெற்றது.



அதேபோல் கொடிக்கம்பங்கள் அகற்றப்படுகின்றன. என்னு
டைய தொகுதியிலே இந்திரா காந்தி அம்மையார் அவர்களு
டைய சிலை அகற்றப்பட்டது. அண்ணா அவர்களின் சிலை
அகற்றப்பட்டது. பெரியவர் காமராஜர் அவர்களின் சிலை
அகற்றப்பட்டது. தடையாக இருக்கின்ற காரணத்தால். சரி
இருக்கட்டும். கொடிக்கம்பங்கள் தடையாக இருந்ததால்
அகற்றுவது கூடச் சரிதான் என்று திரு. பாலன் அவர்களும்
சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எங்கள் கட்சிக் கொடிக்
கம்பங்கள் சில இடங்களில் அகற்றப்பட்டு இருக்கின்றன.
முதலமைச்சருடைய முன்னாள் இல்லம் லாயிட்ஸ் ரோட்டிலே
இருக்கின்றது. அதற்கு முன்னாலே கொடி பறக்கிறது.

(பிற்பகல் 1-00.)

கொடிக் கம்பம் இருக்கிறது. ஏன் அகற்றப்படவில்லை?
அதைப் போலவே அண்ணாசிலை உள்ள இடத்திலும், வள்ளுவர்
கோட்ட பகுதியிலும் நடைபாதைக் கடைகள் இருக்கின்றன. அந்த
நடை பாதைகளின் ஆக்கிரமிப்பை அகற்றுகிறோம் என்று சொன்
னீர்களே, ஏன் அகற்றவில்லை? மனு கொடுத்து பல நாட்கள்
ஆகிறது. அண்ணா சிலையை சுற்றியும், வள்ளுவர் கோட்டத்
திற்கு முன்னாலேயும் இருக்கக் கூடிய அந்த நடை பாதைக்
கடைகளை அகற்றுவதற்கு முயற்சிகள் உண்டா? ஆகவே இப்படி
இரு வேறு நடவடிக்கைகள் இருப்பதை மாற்றுவதற்காவது விரை
விலே தேர்தலை நடத்த வேண்டும் என்று கேட்டு, விரைவாகப்
பேசி முடிப்பதற்கு ஒரு வாய்ப்பை உருவாக்கித் தந்தமைக்கு
நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன்.

திரு. மா. சின்னராஜ்: மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்
களால் முன் மொழியப்பட்டிருக்கின்ற சட்ட முன் வடிவுகளை
வரவேற்று என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல முன்
வருகிறேன். சென்னை மாநகராட்சிக்கும், கோவை மாநக
ராட்சிக்கும், மதுரை மாநகராட்சிக்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட
உறுப்பினர்கள் இல்லை என்ற காரணத்தினால், புரட்சித் தலைவர்
அவர்கள், மக்களுக்குத் தேவையான எந்தக் காரியங்களைக் செய்
வதிலும் குறை ஏற்படுத்தவில்லை என்கிற அளவுக்கு பல நல்ல
திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதை நான்
முதலில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குறிப்பாக கோவை
மாநகராட்சி, மாநகராட்சியாக ஆக்கப்பட்ட 1980-க்குப் பின்னால்
இன்று மிகப் பெரிய அளவில் நல்ல மாறுதல்களைப் பெற்று
இருக்கிறது என்பதையும், மாநகராட்சிக்கு முதலில் இருந்த 15
சதுர கிலோ மீட்டர் அளவு இன்று 40 சதுர கிலோ மீட்டர்
அளவாக மாறிவிட்ட பின்னாலும், பல கிராமப்பகுதிகள் இணைக்
கப்பட்டு, அத்துணை இணைக்கப்பட்ட பகுதிகளிலும் முழு
அளவுக்கு அதனுடைய தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளுகிற
அளவுக்கு அரசினுடைய நிதியையும், வசதிகளையும் பெற்று
சிறப்பாக அந்தத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருப்பதை நான்
சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கோவை மாநகராட்சியோடு இணைக்கப்பட்ட பகுதி சிறு
வாணி குடிநீர்த் திட்டத்தினால் பயன் பெறுவதற்கும் அந்தப்
பகுதியில் பல டிரையினேஜ் வசதிகளைச் செய்து கொடுப்பதற்கும்,
உரிய அளவுக்கு சாலைகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும்
கோடிக்கணக்கில் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு
நிதியைத் தந்து அங்கே எல்லா வசதிகளையும் தருகிற வாய்ப்பை
ஏற்படுத்தியமைக்காக அந்த மாநகராட்சி மக்களின் சார்பிலே
நன்றிச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்று மாநகராட்சியிலே இயங்கும் மின்சார இலாக்கா
பொறுத்த அளவிலே, மாநகராட்சியின் பொறுப்பிலே உள்ள சில
பகுதிகளை, அந்த மின்சார இலாகா எடுத்து செய்துக் கொண்டு
வருகிறது. ஆனால் மாநகராட்சியோடு இணைக்கப்பட்ட பகுதி
களுக்கு இன்னும் மின்சார வாரியத்தின் பொறுப்பிலேயே இருந்து
வருகிறது. அதிலும் பெரும்பாலான பகுதி மின்சார வாரியத்தின்
ஊழியர்கள் நிறைவேற்றுகின்ற மின்சார வாரியத்தின்
பொறுப்பிலேயே இருக்கிற காரணத்தால், நெருக்கடி ஏற்பட்டிருக்
கிறது. மின்சாரத் தடங்கல் ஏற்பட்டு பொது மக்கள் சென்று
கேட்கிறபோது அதை மின்சார வாரியத்தினர் செய்வதா அல்லது,
மாநகராட்சியின் மின்சார இலாகாவினர் மேற்கொள்ளுவதா என்ற
பிரச்சினை எழுகிறது. ஆகவே அவைகளையும் மாநகராட்சியே
ஏற்றுக் கொண்டு நிறைவேற்றித் தர வேண்டும். அந்தப்
பணி ஒரு இலாகாவின் பொறுப்பிலேயே வர வேண்டும் என்று
நான் ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு
கொண்டு வந்தேன். அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்
என்றும் அவர் தெரிவித்திருக்கிறார். ஆகவே அவற்றை ஒரே
இலாகாவின் கீழ் கொண்டுவந்தால், ஊழியர்களுடைய பணி
களிலும் ஒருமுறை ஏற்படும். அதுபோல மின்சார இணைப்புகளை
பராமரிப்பது போன்ற வேலைகளும் ஒரு சீராக நடத்துவதற்கும்
அது ஏதுவாகும். ஆகவே அந்தக் கோரிக்கையை நிறைவேற்றித்
தர வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல கோவை மாநகராட்சியிலே இன்று பல உயர்
நிலைப் பள்ளிகள் மக்களுடைய வசதிகளுக்காக,
துவக்கப்பட்டு கூடுதலாகி, ஏழை எளிய மாணவர்கள் அரசு
உயர்நிலைப் பள்ளிகளிலேயே சிரமம் இல்லாமல் சேர்ந்து படிப்ப
தற்கான வகையில் வாய்ப்பை ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள்.
இந்த ஆண்டு மட்டும் 3 நடுநிலைப் பள்ளிகளை அரசு உயர்நிலைப்
பள்ளிகளாக ஆக்கியிருக்கிறார்கள். மாண்புமிகு நிதியமைச்சர்
அவர்கள் துணை மானியத்திலே குறிப்பிட்டதைப் போல
புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு பல இடங்
களிலும் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக
மாற்றியதனால் பல கோடி செலவிடுவதற்குக் காரண
மாக இருந்தாலும் கூட, நல்லது செய்ய வேண்டும் அது ஏழை
எளிய மக்களுக்கு பயன்பட வேண்டும் என்பதற்காக அவைகள்



செய்யப்பட்டிருக்கின்றன. அந்த வகையில், கோவை மாநக
ராட்சியிலே 3 உயர்நிலைப் பள்ளிகளை துவக்கியிருக்கிறார்கள்.
துவக்கப்பட்டவை மட்டுமல்லாமல், ஏற்கெனவே இருக்கிற உயர்
நிலைப் பள்ளிக்கும் கூடுதலாக கட்டிட வசதிகள் நிரம்ப அளவு
தேவைப்படுகிறது. ஆகவே சிறப்பான நிதியினை ஒதுக்கித்தந்து
ஏற்கெனவே இருக்கிற பள்ளிகளும் நல்ல முறையில் நடப்பதற்கு
அங்கே விஞ்ஞான கூடம் அமைப்பதற்கு, தேவையான கூடுதல்
கட்டிடங்களைக் கட்டித் தருவதற்கு மாநகராட்சிக்கு நிதி உதவி
தர வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல ஆரம்பப் பள்ளிகளை எடுத்துக் கொண்டால்,
உதாரணத்திற்குச் சொல்கிறேன், கணபதி என்ற இடத்தில் இருக்
கிற ஆரம்பப் பள்ளியில் கிட்டத்தட்ட 2,000 மாணவர்கள் படிக்
கிறார்கள். அங்கே 600, 700 மாணவர்கள்தான் உட்கார்ந்து
படிக்க இடமிருக்கிறது இன்னும் 1,300 குழந்தைகளுக்கு உட்
காருவதற்கு கட்டிடங்கள் தேவைப்படுகிறது. பல ஆண்டுக்
காலம் கிராமப் பஞ்சாயத்திலே இருந்ததால் கூடுதலான பள்ளிக்
கட்டிடங்கள் அங்கே கட்டப்படாமல், பராமரிப்பு இல்லாமல்
இருக்கிறது. ஆகவே அவை வேகமாக பராமரிக்கப்பட்டும்,
தேவையான கட்டிடங்கள் கட்டப்பட்டும் நடவடிக்கைகள்
மேற்கொள்ளப்பட வேண்டும். மாநகராட்சியினால் நடத்தப்படு
கின்ற பள்ளிகள் அனைத்துத் தேவைகளையும் பெற வேண்டும்.
அதற்கான முயற்சிகளை மாநகராட்சி மூலம் எடுக்க வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல துவங்கப்படவிருக்கிற ரத்தினபுரி, கும்பகோணம்,
புதூர் உயர்நிலைப் பள்ளிகளில் விரைவில் அதற்கான கட்டிடங்கள்
கட்டப்படவேண்டும். ரத்தினபுரி என்ற இடத்தில்உயர்நிலைப்
பள்ளி ஏற்படுத்துவதற்கு நில ஆர்ஜிதம் செய்வதற்கு நான் அங்கே
சட்டமன்ற உறுப்பினராக இருந்த காலத்திலிருந்து முயற்சிகள்
மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1980-ல் ஆரம்பிக்கப்
பட்டு இன்று 1986 ஆம் ஆண்டு வரையில் முடிவுறாமல் இருக்
கிறது. நிலத்திற்கான கிரயத்தை மாநகராட்சி ரெவின்யு இலாகா
விற்கு கட்டியிருக்கிறது. இருந்தும் கூட அந்த நிலத்தை ஆர்
ஜிதம் செய்வதில் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. இந்தக் கால
தாமதத்தைத் தவிர்த்து, சம்பந்தப்பட்ட ரெவின்யு இலாகாவை
கேட்டு வற்புறுத்தி விரைவில் நிலத்தை ஆர்ஜிதம் செய்வதற்கு
முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மாநகராட்சியினுடைய சுகாதாரப் பிரிவுகள், மருத்
துவமனைகள் பரவலாக நிறைய இடங்களில் இருக்கின்றன. இருந்
தாலும் 'ஆடட் ஏரியா' என்று சொல்லப்படுகிற மாநகராட்சி
யோடு இணைக்கப்பட்ட பகுதிகளில் கூடுதலாக மருத்துவமனைகள்
துவங்கப்பட வேண்டும். அதிலும் குறிப்பாக சந்தனூர் பகுதியில்
துவங்க வேண்டும். தொழிலாளர்கள் நிரம்பிய பகுதிகள்
என்பதால் அந்த சந்தனூர் பகுதியிலும், கணபதி போன்ற பகுதி
யிலும் மருத்துவமனைகள் துவங்கப்பட வேண்டும். அங்கே

மாநகராட்சிக்கு, அரசுக்குச் சொந்தமான மருத்துவமனைகள் இல்லாமல் இருக்கிறது. ஆகவே அந்தப் பகுதியில் மாநகராட்சி பள்ளிகளை ஆரம்பிப்பதைப் போல, மற்ற வசதிகளைச் செய்து கொடுப்பதைப் போல, முழு அளவிற்கு வசதி பெற்ற மருத்துவ மனைகளை, டிஸ்பென்சரிகளை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக நம்முடைய நீடிக்கப்பட்ட தனி அதிகாரிகள் நிறைவேற்றப் பட வேண்டிய முக்கியமான பணிகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். மாநராட்சிக்கு கூடுதலான செலவுகள் ஏற்படுகிற காரணத்தால், மாநகராட்சியினுடைய திட்டங்களை நிறைவேற்றுவதற்கு உலக வங்கியினுடைய உதவியை நம்முடைய அரசு நாடியிருக்கிறது. உலக வங்கி நிபுணர்கள் மூன்று மாதங்களுக்கு முன்பாக வந்து மாநகராட்சியினுடைய பல பகுதிகளை பார்த்து விட்டு கூடுதலாக பஸ் நிலையங்கள் கட்டுவதற்கும், பல மேம்பாலங்களைக் கட்டுவதற்கும், ரெயில்வே பாலம் வடவாயில் கட்டுவதற்கும் திட்டங்களுக்கு அங்கீகாரம் அளித்திருக்கிறார்கள். அந்த உலக வங்கியினுடைய உதவியை பெற்றாகிவிட்டதா? என்று அறிய விரும்புகிறேன். அந்த நடவடிக்கையை விரைவுப்படுத்தி 100 கோடி ரூபாய் உலக வங்கியின் உதவியை நம்முடைய மாநகராட்சிக்கு பெற்றுத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

*திரு. வி. பி. சிந்தன்: துணைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியினுடைய தேர்தல் காலத்தை நிர்ணயிக்காமலும், ஸ்பெஷல் ஆபீசர்களின் காலத்தை நீட்டித்துக் கொண்டே போகிற இந்தச் சட்டத்தை நான் வன்மையாக ஆட்சேபிக்கிறேன். பெரும்பான்மை பலம் உங்களுக்கு இருக்கிறது என்ற காரணத்தாலே, இந்தத் தவறான சட்டத்திற்கு நீங்கள் அங்கீகாரம் அளிப்பது ஜனநாயகத்திற்குச் செய்யக் கூடிய ஒரு கேடாக விளையும் என்று எச்சரிக்கையாக நான் சொல்ல விரும்புகிறேன்.

நாங்கள் சிறுபான்மையினர். எங்களுடைய கருத்துக்களுக்கு நீங்கள் மதிப்பு கொடுக்க வேண்டுமென்று வலியுறுத்துகிற அதே நேரத்தில் ஏதோ நாடாளுமன்றத்திற்கு முறையாக நடத்துகிற தேர்தலும், சட்டமன்றங்களுக்கு முறையாக நடத்தப்படுகிற தேர்தலும் மட்டும் ஜனநாயகத்தை பாதுகாத்து விட முடியாது. என்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன். இந்தியா போன்ற பன்மொழிப் பேசப்படுகிற ஒரு நாட்டிலே, பலவிதமான மத இனங்களைச் சேர்ந்த மக்கள் வாழ்கிற நாட்டிலே, நாடாளுமன்றத்திற்கும், சட்டமன்றத்திற்கும் மட்டும் முறையாக தேர்தல் நடந்து, கீழே ஆயிரக்கணக்கான பஞ்சாயத்துக்களிலே பஞ்சாயத்து யூனியன்களிலே, நகர சபைகளிலே முறையாக தேர்தல் நடத்தவில்லையென்றால் அந்த ஜனநாயகம் உயிரற்ற ஜனநாயகமாகத்தான் இருக்குமென்று நான் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன்.



உண்மையிலேயே இன்றையதினம் ஜனநாயகத்திற்கு ஆபத்து ஏற்படுவது கீழேயிருந்துதான், கீழே உள்ள போலீஸ்காரர்கள் இஷ்டம்போல் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அரசு அதிகாரிகள் இஷ்டம் போல் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதைக் கட்டுப்படுத்துவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அவ்வப்போது தலையிடுவதற்கு உள்ள வாய்ப்பை வழங்க மறுப்பது' ஜனநாயகத்திற்கு பேரபாயத்தை ஏற்படுத்தும் என்பதை நான் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன்.

(பிற்பகல் 1–10)

10 ஆண்டுகளுக்கு மேலாக நகரசபைகளுக்குத் தேர்தல் இல்லை. இதை எப்படி நீங்கள் நியாயப்படுத்துவீர்கள்? இந்த மாநகராட்சிகளுக்கு தேர்தல் நடத்தாத காரணத்தாலே ஏற்பட்ட விளைவுகளைப் பற்றி நான் பேசவில்லை. என்னுடைய தொகுதியைப் பற்றியும் நான் பேசவில்லை. இந்தச் சட்டத்தின் மூலமாக இன்னும் தேர்தலை நீங்கள் ஒத்திப்போடுகிறீர்கள். நவம்பருக்குப் பிறகு, ஸ்பெஷல் ஆபீசர்களுடைய நியமனத்தை நியாயப்படுத்துவதற்கு இப்படி ஒரு சட்டம் கொண்டுவரவில்லை என்று சொன்னால், ஆபத்து உண்டு என்று அமைச்சர் அவர்கள் ஏற்கனவே குறிப்பிட்டார்கள். அப்படியானால், இதை ஒத்திப் போடுவதற்கு சட்டத்தைக் கொண்டு வந்து, தேர்தல் தேதியை நிர்ணயிப்பதிலே உங்களுக்கு இவ்வளவு தயக்கம் ஏற்படுவதற்கு காரணம் என்ன ? தேர்தல் தேதியைக் குறிப்பிட்டுவிட்டு, மாநகராட்சிக்கு இந்தத் தேதியிலே தேர்தலை நடத்துவோம் என்று சொன்னால், என்னைப் போன்றவர்கள் மகிழ்ச்சியடைவார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

உண்மையிலேயே தேர்தல் நடத்தாத காரணத்தால் என்னென்ன ஆபத்துகள் ஏற்படுகின்றன என்பதை நான் சற்று விளக்கமாக சொல்லாவிட்டாலும் சில விஷயங்களைப் பற்றி மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். சென்னை மாநகராட்சிக்கு பல தொழிற்சாலைகள் இருந்தன. அந்தத் தொழில் நிறுவனங்களில் தொழிலாளர்கள் பலர் வேலை செய்து கொண்டிருந்தார்கள். உதாரணமாக கல் உடைக்கும் தொழிற்சாலை, சென்னை நகரத்திலே உள்ள தெருக்களுக்குத் தேவையான, தெருக்களைச் செப்பனிடுவதற்குத் தேவையான கற்களை, பல்லாவரத்திலே உடைத்துக் கொண்டிருந்தார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருந்திருந்தால், நிச்சயமாக அதை அனுமதித்து இருக்கமாட்டார்கள். ஆனால் இப்போது அந்தக் கல் உடைக்கும் தொழிற்சாலையைக் கலைத்து, அந்தத் தொழிற்சாலையில் உள்ள தொழிலாளர்களை வீட்டுக்கு அனுப்பிவிட்டு, அந்தத் தொழிலை ஒரு கான்ட்ராக்ட்சாரருக்கு கொடுத்து இருக்கிறார்கள்.

இதே முறையிலேதான், ஒரு மிகச் சிறந்த பட்டறை
சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமாக இருந்து கொண்
டிருக்கிறது. பல்வேறு வேலைகளைச் செய்வதற்கு வாய்ப்பு
உண்டு. திறமையான தொழிலாளர்கள், இயந்திரங்கள் எல்லாம்
உண்டு. ஆனால் இப்போது எந்த வேலையும் அங்கே நடைபெற
வில்லை. விரைவிலே அதை கான்ட்ராக்டுக்கு விட்டுவிடுவார்
கள் என்று நான் கருதுகிறேன்.

அதுமட்டுமல்ல, இப்போது குப்பைகளை எல்லாம் அள்ளு
வதற்கு தனியார் கம்பெனி ஒன்றிடம் ஒப்படைக்க அதிகாரிகள்
பேரம் நடத்திக்கொண்டிருப்பதாகவும் சொல்கிறார்கள். குப்பை
களை எல்லாம் அவர்களுக்கு ஒப்படைத்து, அந்தக் குப்பைகளி
லேயிருந்து, உரத்தைச் செய்வதற்கு, இன்னும் மற்ற சில
பொருள்களைத் தயாரிப்பதற்கு, ஒரு கான்ட்ராக்டரிடம்
விலை பேசிக்கொண்டு இருக்கிறார்கள். இதைப்பற்றி
எல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருந்திருந்தால்
அந்த மன்றத்திலே விவாதித்து இருக்கலாமே. நகரசபைகளு
டைய குறைகளைப் பற்றி பேசியிருக்கலாமே?
வரியை எடுத்துக்கொள்ளுங்கள். நான் இருக்கிற வீட்டு
வரி. அதே அளவிலே உள்ள பக்கத்து வீட்டுக்கு ஒரு
சென்னை நகரத்திலே பெருந்தனக்காரர்கள் மற்றொரு வரி.
பகுதிகளிலே லட்சக்கணக்கான ரூபாய்களை இருக்கக்கூடிய
வேண்டியவர்கள் வரியைச் செலுத்துவதில்லை. வரியாகக் கட்ட
படுத்துவது யார்? அந்த அதிகாரிகள் எல்லாம் இதைக் கட்டுப்
தனக்காரர்களிடம் உறவு வைத்துக்கொண்டு, இந்தப் பெருந்
மானாலும் செய்து கொண்டிருக்கிற காட்சியை நாம் எதை வேண்டு
மாநகராட்சியில் பார்க்கிறோம். சென்னை

லட்சக்கணக்கான மக்கள் வாழ்கிற இந்த நகரத்திலே
இந்தக் குறைகளைப் போக்குவதற்கு, இந்தக் குறைகளைப்
பற்றி எடுத்துரைப்பதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்
இருப்பதுதானே ஜனநாயகம்? குறைகளை நாங்கள் சொல்
வோம். அதை நீங்கள் ஏற்றுக்கொள்ளலாம், அல்லது ஏற்றுக்
கொள்ளாமலும் இருக்கலாம். ஆனாலும் மெஜாரிட்டியினு
டைய முடிவுக்கு நாங்கள் கட்டுப்படவேண்டும். நான் ஒத்துக்
கொள்கிறேன். ஆனால் இப்படிப் பேசுகிற வாய்ப்பு நகரசபை
யில் உண்டா?

குடிநீரைப்பற்றி இங்கே குறிப்பிட்டார்களே, குடிநீர்
கிடைக்காத தெருக்கள் எவ்வளவு இருக்கின்றன தெரியுமா?
குடிசைகளிலே வாழக்கூடிய லட்சக்கணக்கான மக்களுக்கு
ஒரு குழாய்கூட கிடையாது. ஒரு விளக்கு கூட கிடையாது.
அமைச்சர் அவர்களுடைய படத்தை நான் ஒரு பத்திரிகையிலே
பார்த்தேன். ஒரு பகுதிக்கு அமைச்சர் அவர்கள் செல்லும்போது
மூக்கைப் பிடித்துக்கொண்டு செல்கிற அந்தக் காட்சியை
நான் ஒரு தமிழ்ப் பத்திரிகையிலே பார்த்தேன். நான் இங்கே



அதைக் கொண்டு வரவில்லை. இப்படி லட்சக்கணக்கான மக்கள்
வாழ்கின்ற பகுதிகள் உண்டு. அந்தப் பகுதியிலேயிருந்து ஒருவர்
தேர்ந்தெடுக்கப்பட்டு இருந்தால், இந்த நகராட்சியினுடைய
கூட்டத்திலே அதைப் பற்றி பேசியிருப்பார் அல்லவா? பதி
னோறு ஆண்டுக் காலமாக அப்படி பேசுகிற வாய்ப்பு மறுக்கப்
பட்டதால், யார் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். சாதாரண
மக்கள் தானே, அவர்கள் போய் பேச முடியுமா? ஒருவேளை—
நான் இதை விரும்புகிறேன்—அவர்கள் பேசாவிட்டாலும், அந்த
லட்சக்கணக்கான மக்கள், ஆர்த்தெழுந்து அந்த நகரசபைக்
கட்டிடத்தை தரைமட்டமாக்கி இருந்தால், நான் மகிழ்ச்சி
அடைந்திருப்பேன். ஊழலினுடைய உறைவிடமாக, அநியாயத்
தினுடைய எடுத்துக் காட்டாக அந்த நகரசபையின்
அதிகாரிகளும், அந்தக் கட்டிடமும் செயல்பட்டுக் கொண்டு
இருக்கிறது. யாருக்கு நன்மை ஏற்படுகிறது? யாருக்கு வசதி
ஏற்படுகிறது? மின்சார விளக்கு எரியாத தெருக்கள் எவ்வளவு?
மின்சாரம் கிடைக்கவில்லை. குடிநீர் கிடைக்கவில்லை, ரோடு
வசதி உண்டா? அதிகாரிகளை யார் தட்டிக் கேட்பது?
நான் பல சந்தர்ப்பங்களில் அதிகாரிகளைப் பார்ப்பது உண்டு.
எனக்கு இதில் ஒரு குறிப்பிட்ட கவலை, நான் சார்ந்து இருக்கிற
நான் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கக்கூடிய தொகுதியில்
3 வட்டங்கள் சென்னை நகரத்தைச் சேர்ந்தவை. அவை
32-வது வட்டம், 33-வது வட்டம், 76-வது வட்டம். 12 ஆண்டு
களுக்கு முன்பு சென்னை நகரத்தோடு சேர்க்கப்பட்ட கிராமப்
பகுதிகள் அவை. அந்தக் கிராமப் பகுதிகளில் விளக்குகள்
இல்லை. அமைச்சருக்கு சந்தேகம் இருந்தால் என்னோடு
வாருங்கள். நான் அதை காண்பிக்கத் தயார். அந்தப் பகுதிகள்
சென்னை மாநகராட்சியோடு இணைக்கப்பட்டது. ஆனால்
அந்தப் பகுதியின் போலீஸ் இலாக்கா இன்றும் செங்கற்பட்டு
மாவட்டத்தைச் சேர்ந்தது. அதனுடைய நீதித் துறை
செங்கற்பட்டு மாவட்ட நீதித் துறையுடன் சேர்ந்தது. ஆகவே
அவர்கள் திரிசங்கு சொர்க்கத்தில் இருந்து கொண்டு இருக்கிறார்
கள். அதை இங்கே ஒரு நிமிடம் நான் பேசலாம். ஆனால்
அந்த நகரசபைக்கு அந்தப் பகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்
பட்ட உறுப்பினர் இருந்திருப்பார்களானால் அதை எல்லாம்
அவர்கள் அங்கே பேசுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டு இருக்காதா?
இப்படி நாள் ஒரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக
பெருகி வரக்கூடிய அநீதிக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு அந்த
தேர்தலை உடனடியாக நடத்தவேண்டும் என்பதை நான்
வலியுறுத்துகிறேன்.

மீண்டும் நான் ஒரு பிரச்சனையை குறிப்பிடுகிறேன். நக
ரத்தை அழகுபடுத்துவதற்கு முதலமைச்சர் அவர்கள் தலைமையில்
ஒரு குழு இருக்கிறது. அந்தக் குழுவில் நான் ஒரு உறுப்பினர்.
ஒரு தடவை கூட்டம் நடந்தது. அமைச்சர் அவர்களும் கலந்து
கொண்டார்கள். மகிழ்ச்சி, அங்கே நான் ஒரு பிரச்சினையை
வலியுறுத்திச் சொன்னேன். ஆண்டுதோறும் தனியார் பகுதி
என்று சொல்லி அப்பகுதிகளுக்கு ரோடு இல்லை, விளக்குகள்

இல்லை. தெருக்களை சுத்தம் செய்வது இல்லை, சாக்கடை வசதிஇல்லைஎன்று இதை எல்லாம் சொன்னபோது முதலமைச்சர் அவர்கள் கையை இப்படி அசைத்து காட்டி அமைச்சர் அவர்களிடம் சொல்லி, அமைச்சர் அவர்கள் அங்கே கூட்டத்தில் அறிவித்தார்கள். முதலமைச்சர் அறிவிப்பதாகச் சொன்னார் கள், அவர் என்ன சொன்னார் தெரியுமா? 10 ஆண்டுகளுக்கு மேலாக குடியிருப்பவர்களுக்கு இந்த வசதி எல்லாம் செய்து கொடுப்பதற்கு முதலமைச்சர் அவர்கள் ஒத்துக் கொண்டார்கள் என்றார்கள். ஆனால் இன்றைய தினம் வரை அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. அந்த வாக்குறுதி என் நிறைவேற்றப் படவில்லை என்று சட்டமன்றத்தில் ஒரு தடவை நான் கேட்பதை விட அங்கே நகரசபை தேர்தல் நடந்து இருந்தால் அதை பல முறை கேட்கும்வாய்ப்பு அவர்களுக்கு கிடைத்திருக்குமே. நகரத்தை அழகுபடுத்துவதற்கு என்று ஒரு அருமையான தீர்மானத்தை நிறைவேற்றி அந்த தீர்மானத்திற்கு நாங்கள் எல்லாம் ஆதரவு கொடுத்தோம். நகரத்தை அழகு படுத்த வேண்டும் என்று சொன்னால் யார் அதை மறுக்க முடியும்? நகரத்தை அழகு படுத்துகிற தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றிய பிறகு நீங்கள் நகரத்தை அழகுப் படுத்தினீர்களா? அதற்கு பதிலாக கடைகளுக்கு மேலே உள்ள 'சன்ஷேடு' களை எல்லாம் உடைத்தீர்கள். பலர் என்னை வந்து கேட்டார்கள். நான் என்ன செய்வது, அந்தக் குழு வேலை செய்யவில்லை. எந்தக் குழு தான் இன்றைக்கு வேலை செய்து கொண்டு இருக்கிறது. எந்த இடத்தில் நியாயம் வழங்குகிற நிலைமை ஏற்பட்டு இருக்கிறது? அதனால் இந்த தேர்தல் தேதியை நிர்ணயிக்க வேண்டும். நாங்கள் சிறுபான்மை யினர் என்ற காரணத்திற்காக நீங்கள் இந்த நியாயத்தை மறுத்துவிடாதீர்கள். தேதியை நிர்ணயுங்கள். (மணியடிக்கப் பெற்றது)

ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லி முடித்து விடுகிறேன். அம்பத்தூர் நகரியம் என்னுடைய தொகுதியைச் சேர்ந்தது. நகரியத்திற்கு தேர்தல் இல்லை. பஞ்சாயத்துக்கு உண்டு. பஞ்சாயத்து யூனியனுக்கு உண்டு. நகரசபைக்கு உண்டு. ஆனால் 1 லட்சத்து 30 ஆயிரம் வாக்காளர்கள் கொண்ட அந்த நகரியத்திற்கு தமிழகத்திலுடைய பல்வேறு நகரசபைகளை விட அதிகப்படியான வருமானம் வருகின்ற அந்த நகரியத்திற்கு 'அம்பத்தூர் டவுன்சிப்'-க்கு தேர்தல் இல்லை. அவர்கள் என்ன பாவம் செய்தார்கள் என்று எனக்கு தெரியவில்லை. அவர்கள் என்ன இரண்டாம் தர குடிமக்களா? அதே நிலைமை யில் இந்த தேர்தலை ஒட்டி வரக்கூடிய பல்வேறு பிரச்சினை கள் ஜனநாயகத்தின் பெயரால், ஜனநாயகத்தை பாதுகாக்க வேண்டும் என்ற பெயரால் நான் உங்களை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் என்ன சட்டத்தை வேண்டு மானாலும் கொண்டு வாருங்கள். இன்ன தேதியில் தேர்தல் நடக்கும் என்ற அறிவிப்போடு ஒரு சட்டம் என்று சொன்னால் அதற்கு முழு ஆதரவு கொடுக்க மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சி தயாராக இருக்கிறது என்று கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.





## 8. அறிக்கை அளித்தல்.

ஊராட்சிமன்ற, ஒன்றியத் தேர்தல்களுக்கான வேட்பு மனுக்கள் பெறும் நாள் நீட்டிக்கப் பெற்றுள்ளது குறித்த உள்ளாட்சித் துறை அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: III-வது விதியின்கீழ் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அவைக்கு ஒரு அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்கள் நலன் கருதி வேட்பு மனு பெறும் இறுதி நாள் 27–1–1986 என்று இருந்தது. அதை 30–1–1986 ஆக இப்போது நீட்டிக்கப் பெறுகிறது. தேர்தல் நடக்கும் நாளில் அதாவது 'போலிங் நாளில்' மாற்றம் இல்லை. இவற்றிற்கான கால அட்டவணையை அவையின் முன் படிக்கிறேன்.

(பிற்பகல் 1–20)

தேர்தல் அறிவிக்கை ஏற்கனவே வெளியிடப்பட்டு விட்டது. 17 ஆம் தேதி. வேட்பு மனு தாக்கல் செய்கின்ற நாள் 23 ஆம் தேதியும், 24 ஆம் தேதியும், அதாவது நேற்றும் தாக்கல் செய்து இருக்கிறார்கள், இன்றும் தாக்கல் செய்யலாம். 25 ஆம் தேதி யும், 26 ஆம் தேதியும் விடுமுறை நாட்களாகப் போய்விட்டன. வேட்பு மனு தாக்கல் செய்ய முடியாது. 27 ஆம் தேதி வரையில் வேட்பு மனு தாக்கல் செய்யலாம் என்று இருப்பதால், இருப்பது ஒரு நாள் தான். எனவே, 27 ஆம் தேதியிலிருந்து, 28, 29, 30 அதாவது 30–1–1986 வரையில் வேட்பு மனு தாக்கல் செய் கின்ற நாளாக நீட்டிக்கப்படுகிறது.

வேட்பு மனுக்களை ஆய்வு செய்வது, ஸ்குருட்டினி செய்வது 31–1–1986 ஆம் தேதி. வேட்பு மனுக்கள் திரும்பப் பெறுதல் 3–2–1986. வேட்பாளர்கள் இறுதிப் பட்டியல் வெளியிடுதல், 3–2–1986. வாக்குப் பதிவு—23–2–1986 தான். அதில் எந்த மாற்றமும் இல்லை. செய்யப்படுகின்ற சிறிய மாற்றம், வேட்பு மனு தாக்கல் செய்கின்ற நாளில் தான் செய்யப்படு கிறதே தவிர, தேர்தல் நாளில் எந்த மாற்றமும் இல்லை என் பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1986 சனவரி 24

திரு. அ. ரகுமான்கான் : ஒரு முக்கியமான .. ..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ரூல் 111-ன் படி அமைச்சர் ஸ்டேட்மென்ட் வைத்த பிறகு, அதில் டிபேட் அனுமதிக்க முடியாது. ரூலே தெளிவாகச் சொல்கிறது. (குறுக்கிடு) ரூலைப் படிக்கிறேன். "Rule 111(2)-There shall be no debate on such statement at the time it is made".

திரு. அ. ரகுமான்கான் : மினிஸ்டர் பேசுகிறபோது கேட்கலாமா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அப்போது வேண்டுமானால் கேட்கலாம்.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஆ) சென்னை மாநகராட்சி திருத்த சட்ட முன்வடிவு, 1986—தொடர்ச்சி.

திரு. எஸ். வேணுகோபால் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் சென்னை மாநகராட்சியினுடைய தேர்தலை ஒத்தி வைப்பதைப் பற்றி இங்கே தீர்மானம் கொண்டு வரப்பட்டு இருக்கிறது. தனி அதிகாரி பதவிக் காலத்தை நீடிப்பதைப் பற்றி இங்கே சட்ட முன்வடிவு கொடுக்கப்பட்டிருக்கிறது.

1974 ஆம் ஆண்டில் சென்னை மாநகராட்சி கலைக்கப்பட்டு, இதுவரையில், 12 ஆண்டுகள் ஆகியிருக்கிறது. ஆனால் ஒவ்வொரு ஆண்டும், இன்றைக்கு, நாளைக்கு என்று சொல்லி, மாதங்களைக் கழிக்கிறோமே தவிர, சென்னை மாநகரத்திலே தேர்தல் நடந்ததாகத் தெரியவில்லை. இப்படி தனி அதிகாரிகளுடைய பதவிக் கால நீடிப்பு இருக்கிற காரணத்தினாலே சென்னை நகரம் எவ்வளவு சீரழிந்து இருக்கிறது என்பதை நான் பலமுறை இந்த சட்டமன்றத்திலே எடுத்துச் சொன்னாலும், இப்போது, இந்தச் சட்ட முன்வடிவின் மீதும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1986 சனவரி 24] [திரு. எஸ். வேணுகோபால்]

ஏனென்று சொன்னால், சென்னை நகரத்தில் விளக்குகள் எரிவது என்பதே இல்லை என்ற கால கட்டத்தில் நின்று கொண்டிருக்கிறோம். சென்னை நகரத்தில் விளக்குகள் எந்த இடத்திலும் எரிவதில்லை. ஏனென்று கேட்டால், 'கேபிள் பால்ட்' என்று சொல்கிறார்கள்.

அடுத்தாற்போல், குப்பைகள், கூளங்கள், மலை, மலையாக இருக்கிறது. பள்ளிக்கூடங்கள்—நகரமன்றத்தில் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. அதிலே சென்னை நகரத்தில் இருக்கின்ற பிள்ளைகள் படிக்கிறார்களா என்று கேட்டால் அங்கே படிப்பதற்கான இடவசதி இல்லை. அங்கே இருக்கின்ற பள்ளிக்கூடங்களில் இருக்கின்ற சொல்லிக் கொடுக்கின்ற வாத்தியாராக இருக்கிறவர்கள், ஆசிரியர்கள் திறமைசாலிகளாக சொல்லித் தருகிறார்களா என்றால் அதுவும் இல்லை.

ஏன் இந்த அவலநிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். சாதாரண ஏழைகளாக இருக்கிறவர்கள்கூட, அதிலே தங்கள் குழந்தைகளைச் சேர்ப்பதற்கு அஞ்சுகிறார்கள். மேலும், ரோடுகள் பற்றிச் சொல்லும்போது, உங்களுக்குத் தெரியும். சாலைகள் 3 மாதங்களுக்கு ஒரு தடவை பழுதுபட்டு விடுகின்றன. என்ன காரணம் என்றால், அங்கே அதிகாரிகள் தனக்கு வேண்டிய கான்ட்ராக்ட்காரர்களிடம் அந்த வேலையைக் கொடுக்கிறார்கள். அந்தக் கான்டிராக்ட்காரர்கள், 3 மாதத்திற்கு ஒரு முறை இருப்பது போல் போட்டு, மறுபடியும், அடுத்த 3 மாதங்களுக்கு கான்டிராக்ட் கேட்டு இந்த நாட்டினுடைய, மக்களுடைய வரிப் பணத்தை வீணாக்குவது மட்டுமல்ல, சாலைகளும் சரியாகப் போடப்படுவதில்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, சென்னையில் கொசுக்கடி அதிகமாக இருக்கிறது. கொசுக்கள் சாம்ராஜ்யமே சென்னையில் தான் நடக்கிறது. கூவம் ஆறு வேறு பக்கத்தில் இருக்கிறது. அதிலே உற்பத்தியாகின்ற கொசு, ஆங்காங்கு தண்ணீர் தேங்கி இருக்கிறதே, அந்த நேரத்திலே கொசு உற்பத்தியாகி சென்னை நகரத்திலே இருக்கிற எல்லோரையும் சேர்த்துக் கடிக்கிறது என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

இப்படி இருக்கும்போது, மேலும் ஒன்றைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தொழில் வரி என்று சென்னையில் கார்ப்பரேஷன் வசூலிக்கிறது. அந்தத் தொழில் வரி, தமிழகத்திலே பெரும் பகுதி தொழிலே இல்லாமல்

திண்டாடிக் கொண்டிருக்கும்போது, ஆங்காங்கு கம்பெனி களிலே வேலை செய்கிறவர்கள், அதிகாரிகளாக இருந்தாலும், சாதாரணமாக இருந்தாலும் சரி, அவர்களிடம் கார்ப்பரேஷன் வசூல் செய்கிறார்கள். தொழில் கொடுக்க முடியாதவர்கள் தொழில் வரி வசூலிக்கிறார்கள். இது என்ன முறை? எப்படி வசூலிக்கிறார்கள்? இப்படி எத்தனையோ மூல காரணமாக வசூலிக்க அரசுக்கு அதிகாரம் இருந்தும் கூட, சாதாரணமாக வேலை செய்கிறவர்களுக்கு ஆறு மாதத்திற்கு ஒரு முறை வரி வசூல் செய்யப்படுகிறது என்பதைநீங்கள் மறந்துவிடக் கூடாது.

ஆனால், சென்னை நகரிலே உள்ள நடைபாதைகளிலே இருக் கிற சாலைகளில் யாரும் கடை வைப்பதில்லை என்று அரசு கடந்த கூட்டத்தில் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், நான் சொல்வது எல்லாம் மற்றவர்கள் கடை வைத்திருக்கிறார்களா என்று பார்க்கிற போது சென்னை நகரிலே மேம்பாட்டிற்கு என்று ஒரு குழுவை அமைத்து, அதிலே முதலமைச்சரை தலைமை தாங்க முடிவு செய்தது என்றாலும்கூட, அந்தக் குழு கூடி என்ன செய்தது என்று சொன்னால், ஒன்றும் செய்யவில்லை. ஆங்காங்கே இருக்கிற சன்ஷேட்களை இடித்தார்கள். கொடிக் கம்பங்களை எடுத்தார்கள். சிலைகளை எடுத்தார்களே தவிர, சென்னை நகரத்தை நல்ல முறையாக, வளர்ச்சியாக, சிங்காரச் சென்னையாக, சிறப்பான சென்னையாக, அழகுமிக்க சென்னை யாக ஆக்கினார்களா என்றால், அது இல்லவே இல்லை. அவர்களுக்கு எந்தெந்த சிலைகள் எல்லாம் இருக்கக் கூடாதோ, அந்தச் சிலைகளை எல்லாம் எடுத்தார்கள். எந்தெந்த கொடிக் கம்பங்கள் இருக்கக் கூடாதோ, அந்தக் கொடிக் கம்பங்கள் எடுக்கப்பட்டதே தவிர, அரசியல் மாச்சரியங்களுக்கு அப்பாலே காரியம் நடைபெறவில்லை. அரசியல் எண்ணங்களுக்கு உட்பட் டுத்தான் காரியங்கள் எல்லாம் நடைபெற்றன. நடைபாதை யில் இருக்கின்ற கடைகள் நகர மேம்பாட்டிற்காக எடுக்கப்படும் என்று சொன்னார்கள். கடந்த கூட்டத் தொடரிலே கடைகள் எங்கேயும் இல்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். எங்கு பார்த்தாலும் கடைகளிலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழக மூத்த தலைவர்களின் பெயரைப் போட்டால், அந்தக் கடைகள் அங்கே இருக்கும். அங்கே போலீஸ் அதிகாரிகள் யாரும் செல்வதில்லை, சப்-இன்ஸ்பெக்டர்கள் யாரும் செல்வ தில்லை, அசிஸ்டண்ட் கமிஷனர் யாரும் செல்வதில்லை. அதி காரம் தவிடு பொடி ஆக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் சுட் டிக்காட்ட விரும்புகிறேன். ஏனென்று சொன்னால், இப்படிப் பட்ட நிலைமை இருக்குமானால், சென்னை நகரம் எப்படியிருக் கும்?



இன்னொன்றையும் சொல்லவிரும்புகிறேன். இந்த சென்னை மாநகராட்சிக்கு வருகின்ற அதிகாரிகள் எல்லாம் எத்தனை நாட் களுக்கு அங்கே இருக்கிறார்கள் என்று பார்த்தால், அதை முறை யாகச் சொல்ல முடியவில்லை. மூன்று மாதத்திற்குள்ளோ, அல்லது ஆறு மாதத்திற்குள்ளோ எப்படியும் மாற்றப் போகிறார் கள் என்று சொல்கிறார்கள். ஏனென்று சொன்னால், மலைச் சாமி என்ற ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி இருந்தார். சிறப்பாக செயலாற்றினார் என்ற பெயர் எடுத்தார். அதற்குப் பிறகு மாதவ சர்மா வந்தார்கள். திடீர் திடீரென்று ஒரு ஆண்டுக்கு ஒரு முறை கூட இல்லை. ஆறு மாதத்திற்கு ஒரு முறை அந்த அதிகாரி மாற்றப்பட்டால், எப்படி செயலாற்ற முடியும்? கோப் புகளை எப்படி பார்க்க முடியும்? திட்டங்களை எப்படி தீட்ட முடியும்? மக்களை எப்படி சந்திக்க முடியும் இப்படி இருக் கின்ற நிலையில் சென்னை நகரம் எப்படி அழகாக இருக்க முடியும், எப்படி சீராக இருக்க முடியும்? என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

இன்னொன்றையும் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். மாம் பலத்தில் ரெங்கனாதன் தெரு என்ற ஒரு தெரு இருக்கிறது. இதற்கு முன்னாலே இருந்த மலைச்சாமி என்ற அதிகாரி எடுத்த நடவடிக்கையின்போது அங்கிருந்த கடைகளையெல்லாம் எடுத்து விட்டு சுத்தமாக வைத்திருந்தார்கள். அதற்குப் பின்னாலே தனி யாரிடம் என்று வந்தது. அதற்குப் பிறகு கார்ப்பரேஷனிடம் சென்று, மறுபடியும் இன்றைக்கு கடைகள் வைக்கப்பட்டிருக் கின்றன. என்ன காரணம்? அங்கே அன்னை சத்தியா வியா பாரிகள் சங்கம் என்ற பெயர் போடப்பட்டிருக்கிறது. அதற்கு என்ன காரணம்? அன்னை சத்தியா தோற்றம் ஆக்கப்பட்டிருக் கிறார்கள். எப்படி சரியாக இருக்குமென்பதை நீங்கள் எண் ணிப்பார்க்க வேண்டும்.

என்னுடைய தொகுதியில் அதிகமான அளவில் குடிசைகள் இருக்கின்றன. குடிசைகள் மட்டுமா? குப்பைக் கூளங்கள், சாணங்கள் மலைபோல் இருக்கும். அவைகளை எடுப்பதற்கு ஆட்கள் இல்லை. தெருக்களிலே குப்பை வண்டிகள் வருவது இல்லை. இரண்டு நாளைக்கு ஒரு முறை குப்பை வருகிறது, மூன்று நாளைக்கு ஒரு முறை குப்பை வருகிறது என்று சொன் னால், அந்தக் குப்பையை எடுப்பது யார்? எடுப்பதற்கு வண்டி இல்லை; வண்டி வருகிறது என்று சொன்னால், குப்பையை அள்ளுவதற்கு கூடைகள் இல்லை என்று சொல்லுகிறார்கள். இது முறை தானா? அங்கே நகரமன்றங்கள் வேலை செய்யவில்லை, நகராட்சி வேலை செய்யவில்லை. அங்கே இருக்கின்ற தண்ணீர் பஞ்சம், அதேநேரத்தில் சாக்கடைகளின் துர்நாற்றம், மனிதர்கள் வாழமுடியாத பகுதிகள், இடங்கள் சென்னையிலே இன்றைக்கு ஏராளமான அளவில் இருக்கின்றன. எவ்வளவோ தடவை மேம்பாட்டுக் குழுவிலே நல்ல கருத்துக்களைச் சொன்னோம்.

கடந்த ஆண்டு மேம்பாட்டுக்குழு ஒரே ஒருமுறை கூட்டப்பட்டது. அந்தக் கூட்டத்திலே குப்பையை எடுப்பதா அல்லது எரிப்பதா? என்ற கருத்தைச் சொன்னோம். பக்கெட் கொடுக்கப்போகிறோம் என்று முதலமைச்சரவர்கள் கடந்த ஆண்டு சொன்னார்கள். ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு பக்கெட் கொடுக்கப்போகிறோம் என்று சொன்னார்கள் வண்டி மணி யோசையோடு வரும், குப்பையை எடுத்து, அந்த வண்டியிலே போட்டு விடலாம் என்று சொன்னார்கள். அன்றைக்கு நடைமுறைக்கு வரும் என்று பார்த்தோம். இன்றைய தினம் வரை நடைமுறைக்கு வரவில்லை. ஆக, காரியங்கள் நடைபெறுவது இந்த அரசிடத்திலே நல்ல முறையிலே இல்லாத காரணத்தால் சொல்கிறேன். இப்படிப்பட்ட தேர்தலை உடனடியாக நடத்துங்கள் என்றும், மக்களுடைய பிரதிநிதிகள் இருந்தால்தான் மக்களுடைய பிரச்சினைகளையும், மக்களுடைய சுகாதார நிலையையும், நகரத்தினுடைய நிலைமையையும் பற்றி அவர்களிடம் எடுத்துச் சொல்ல முடியும்.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். சென்னையில் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த நகர மன்றத்தில் இருக்கின்ற அதிகாரிகளைச் சந்தித்து, வாரத்திற்கு ஒரு முறையாவது அதிகாரிகள் கூடி, பேசி நகரத்தின் வளத்தையும், நகரத்தின் சுகாதாரத்தையும் பற்றியும் பேச வேண்டுமென்றும், ஒரு அறிக்கையைக் கொடுக்க வேண்டுமென்றும் இந்த மாமன்றத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

உடனடியாக சென்னை நகரத்திற்கு எல்லா வசதிகளையும் செய்து தருகிறோம் என்று சொன்னார்கள். சென்னையிலே படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள், வேலை செய்கிறவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, தயவு செய்து எல்லா வசதிகளையும் செய்துகொடுக்கும் பொருட்டு, நீங்கள் உடனடியாகத் தேர்தலுக்கு தேதியிடுங்கள் என்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன். வணக்கம்!

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விவாதம் மீண்டும் ஞாயிற்றுக்கிழமை தொடரும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று 27–1–1986 காலை 9–00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1–30 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

112. தமிழ்நாடு அரசு கட்டுமானக் கழகத்தின் 1980–81-ஆம் ஆண்டிற்கான முதலாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].



113. தமிழ்நாடு அரசு கட்டுமானக் கழகத்தின் 1981–82 ஆம் ஆண்டிற்கான இரண்டாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

114. தமிழ்நாடு அரசு கட்டுமானக் கழகத்தின் 1982–83-ஆம் ஆண்டிற்கான மூன்றாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

115. தமிழ்நாடு அரசு கட்டுமானக் கழகத்தின் 1983–84-ஆம் ஆண்டிற்கான நான்காவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

—எதுவுமில்லை.—

V2ll,51 N86
N86·16·3
சென்னை-600 008.